
வந்துவிட்டார்! திகம்பர சாமியார்
மாயா விநோதப்
பரதேசி
2
வடுவூர் கே.துரைசாமி ஐயங்கார்

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✱✱✱

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✱✱✱

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# மாயா விநோதப் பரதேசி

இரண்டாம் பாகம்

வடுவூர் K. துரைசாமி ஐயங்கார்

ஜெனரல் பப்ளிஷர்ஸ்
244, (ப. எண்.) ராமகிருஷ்ணா மடம் சாலை,
மயிலாப்பூர், சென்னை – 600 004.

உரிமை பதிவு
ஜெனரல் பப்ளிஷர்ஸ்
முதற் பதிப்பு - 2004

© பதிப்பகத்தார்

மொத்தப் பக்கங்கள் : 320

**விலை: ரூ. 120.00**

Laser Typeset by - **Print Point Graphics**, Chennai - 20.
Printed at - Jai Ganesh Offset Printers, Chennai - 600 004

இரண்டாம் பாகம்

# மாயா விநோதப் பரதேசி

★ ★ ★

**6-வது அதிகாரம் தொடர்ச்சி...**

உடனே வடிவாம்பாள் மிருதுவான குரலில் பேசத் தொடங்கி, "என்ன கண்ணம்மா! இங்கே யாரோ படுத்திருக்கிறார்களே! நம்மை எதற்காக சுவாமியார் ஐயா இங்கே அனுப்பினார்கள் என்பது தெரியவில்லையே!" என்றாள்.

அதைக் கேட்ட கண்ணப்பா நிரம்பவும் ஆழ்ந்து யோசனை செய்தவனாய்ச் சிறிது நேரம் மௌனமாக நின்ற பிறகு, "எனக்கும் அதுதான் விளங்கவில்லை. ஆனால் நம்முடைய சுவாமியார் எதையும் மூடத்தனமாகச் செய்கிறவர் அல்ல. ஏதோ முக்கியமான கருத்தோடு தான் அவர் நம்மை இங்கே அனுப்பி இருப்பார். எல்லாவற்றிற்கும் இதோ படுத்திருக்கும் மனிதரை நான் கூப்பிட்டுப் பார்க்கிறேன்" என்று கூறிய வண்ணம், "யார் ஐயா கட்டிலில் படித்திருக்கிறது?" என்று தணிவான குரலில் வினவினான். அதற்கு எவ்விதமான மறுமொழியும் கிடைக்க வில்லை. படுத்திருந்த மனிதர் அசைவதாகவும் தோன்றவில்லை. உடனே கண்ணப்பா "இருக்கட்டும். நான் கட்டிலண்டை நெருங்கிப் போய், படுத்திருப்பது யார் என்று பார்த்துவிட்டு வருகிறேன்" என்று கூறிய வண்ணம் வடிவாம்பாளை விட்டுப் பிரிந்து தனியாகக் கட்டிலண்டை போய்த் தலைப் பக்கத்தில் நெருங்கி நின்று, படுத்திருந்த மனிதருக்குப் பக்கத்தில் தனது முகத்தைக் கொண்டு போய் வைத்துக் கொண்டு உற்றுக் கவனித்தான். அவ்வாறு அவன் சிறிது நேரம் இருந்தபின் நிமிர்ந்து வடிவாம்பாளை நோக்கி, "மனிதர் மூச்சு விடும் சப்தம் உண்டாகவில்லையே! இது நிரம்பவும் விநோதமாக இருக்கிறதே! எவ்வளவுதான் மனிதர் கடுமையாகத் தூங்கினாலும், முகத்தை மூடிக் கொண்டு இருந்தாலும், மூச்சுவிடும் ஓசை கொஞ்சமாவது

உண்டாகாமலா போய்விடும். இருக்கட்டும். நான் மறுபடியும் கூப்பிட்டுப் பார்க்கிறேன்" என்று கூறிவிட்டு, "யார் கட்டிலில் படுத்திருக்கிறது?" என்று சாதாரணமான குரலில் கூப்பிட்டுப் பார்த்தான். அதற்கும் மறுமொழி கிடைக்கவில்லை. அங்கே இருந்த மனிதர் அசைவதாகவும் தோன்றவில்லை. கண்ணப்பா வின் மனம் நிரம்பவும் குழம்பித் தவிக்கத் தொடங்கியது. அந்தக் கட்டிலின் மேல் படுத்திருப்பது யார், அவர் அவ்வாறு முகத்தையும் மூடிக்கொண்டு பேச்சு மூச்சின்றி ஏன் படுத்திருக் கிறார், சாமியார் தங்களை அங்கு ஏன் அனுப்பினார் என்ற பல கேள்விகளை அவனது மனதே கேட்டுக் கொண்டது. சாமியார் தங்களை ஏதோ கருத்தோடு அந்த அறைக்கு அனுப்பி இருக்கையில், தாம் எதையும் தெரிந்து கொள்ளாமல் அவ்விடத்தை விட்டுத் திரும்பிப் போய் அவருக்கு முன் ஒன்றும் தெரியாமல் விழிப்பது சரியல்ல என்று நினைத்த கண்ணப்பா ஒருவாறு துணிவடைந்து கட்டிலில் படுத்திருந்த மனிதரது முகத்தைத் திறந்தான். திறக்கவே, அவன் அப்படியே பிரமித்துத் திகைத்து ஸ்தம்பித்து திகில் கொண்டு நடுநடுங்கிப் போய் விட்டான். துப்பட்டி விலக்கப்பட்ட இடத்தில் காணப்பட்ட முகம் தத்ரூபம் திகம்பரசாமியாரது முகம் போலவே காணப்பட்டது. அதன் நிறம் சாமியாரது உடம்பின் நிறம்போலக் காணப்பட்டது. கண்கள் இரண்டும் துயில்வது போல மூடப்பட்டிருந்தன. மூக்கு, கன்னங்கள், நெற்றி, புருவவில்கள், வாய், காதுகள் முதலிய எல்லா உறுப்புகளும் சாமியாருடைய முகத்தின் உறுப்புகள் போலவே இருந்தன. தாங்கள் மெத்தைப் படியின் வழியாக மேலே ஏறி அங்கே வருவதற்கு முன் சாமியார் வேறே குறுக்கு வழியாக தங்களுக்கு முன் அங்கே வந்து படுத்துக் கொண்டிருப் பாரோ என்ற சந்தேகம் தோன்றியது; அவன் உடனே பின் பக்கம் திரும்பி "வடிவூ! இப்படி ஓடி வா! இந்த விநோதத்தைப் பார். நம்முடைய சுவாமியார் ஐயா கீழே அல்லவா படுத்துக் கொண்டிருந்தார்கள். இப்போது அவர்கள் எப்படியோ மாயமாக நமக்கு முன்னால் இங்கே வந்து கட்டிலில் படுத்துக் கொண்டிருக் கிறார்கள்" என்றான்.

அதைக் கேட்ட வடிவாம்பாளும் முற்றிலும் திகைப்பும் கலக்கமும் அடைந்து தத்தளித்துப் போயினள். கண்ணப்பா துப்பட்டியை விலக்கின போதே அவளும் அந்த முகத்தை நோக்கினாள். தூரப்பார்வையிலேயே, அது சாமியாரது முகம் போல இருந்ததை அவளும் கவனித்தாள். ஆனாலும் தான் காண்பது மெய்யோ பொய்யோ என்று அவள் சந்தேகித்துக் கலங்கியிருந்த தருணத்தில் கண்ணப்பாவும் அதே விதமான செய்தியைக் கூறவே, அவளது அறிவு கலங்கவும் சிரம் சுழலவும் ஆரம்பித்தன. தாம் திகம்பரசாமியாரை விட்டு நேராகப் படியின் வழியாய் அந்த அறைக்குள் வந்திருக்க, தங்களுக்கு முன் சாமியார் எப்படி அங்கே வந்து கட்டிலில் படுத்திருக்க முடியும் என்ற சந்தேகம் தோன்றி அவளது மனதைக் குழப்பிவிட்டது. அவள் நிரம்பவும் ஆவலோடு விசையாக நடந்து கண்ணப்பா இருந்த இடத்தை அணுகி, கட்டிலில் காணப்பட்ட முகத்தை உற்று நோக்கினாள். அந்த முகத்திற்கும் சாமியாரது முகத்திற்கும் எள்ளளவும் பேதமே காணப்படவில்லை. அந்த முகத்தின் தோற்றம் அவர் தூங்கிக் கொண்டிருக்கும் போது எப்படி இருக்குமோ அப்படியே காணப்பட்டது. கண்ணப்பா, வடிவாம்பாள் ஆகிய இருவரும் தாம் அதற்குமேல் என்ன செய்வது என்பதையும், படுத்திருப்பது உண்மையில் யார் என்பதையும் நிச்சயிக்க மாட்டாதவர்களாய்ச் சிறிது நேரம் அப்படியே ஓய்ந்து நின்றனர். மறுபடியும் கண்ணப்பா தணிவான குரலில், "சுவாமீ! சுவாமீ!!" என்று இரண்டு தரம் கூப்பிட்டுப் பார்த்தான். மறுமொழி கிடைக்கவில்லை. அவன் உடனே கட்டிலண்டை நெருங்கித் தனது கையை மெதுவாக அந்த முகத்தண்டை கொண்டுபோய்க் கன்னத்தின் மேல் வைத்தான். வைக்கவே, அங்கே இருந்தது உயிரற்ற ஒரு பதுமை என்பது உடனே தெரிந்து போயிற்று. கன்னம் தொடுவதற்கு மிருதுவாக இருந்தது ஆனாலும், அது உயிரற்ற வஸ்து என்பது சந்தேகமறத் தெரிந்தது. அவன் உடனே திடுக்கிட்டுப் பெரிதும் வியப்பும் களிப்பும் அடைந்து, "ஆகா! நாம் ஏமாறிப் போனோமே! இது உயிரற்ற பொம்மை அல்லவா! இதைக் கண்டு நாம் உண்மை யாகவே சுவாமியார் படுத்திருப்பதாக அல்லவா நினைத்து விட்டோம். ஆகா! என்ன நம்முடைய மதியீனம்!" என்றான்.

அதைக் கேட்ட வடிவாம்பாளும் திடுக்கிட்டு பிரமிப்படைந்து, "என்ன ஆச்சரியம்! இது உயிரில்லாத பொம்மையா! முகத்தைப் பார்த்தால், உயிரோடு மனிதர் தூங்குவது போல் அல்லவா இருக்கிறது" என்று கூறிய வண்ணம், அந்த முகத்தைத் தனது கையால் தடவிப்பார்த்து அது உண்மையிலேயே ஒரு பதுமை என்பதை நிச்சயித்துக் கொண்டாள்.

அடுத்த நிமிஷத்தில், அவர்கள் இருவரும் அவ்விடத்தை விட்டுத் திரும்பிப்போய்ப் படிக்கட்டின் வழியாகக் கீழே இறங்கி சாமியார் படுத்திருந்த அறையை அடைந்தனர். அவர் முன் போலவே சயனத்தில் சாய்ந்து கொண்டிருந்தார். இவர்களைக் கண்டவுடனே அவர் மகிழ்ச்சியோடு புன்னகை செய்து, "என்ன சங்கதி! மேலே போய்ப் பார்த்தீர்களா? உங்களுடைய சந்தேகம் எல்லாம் நிவர்த்தியானதா?" என்றார்.

உடனே கண்ணப்பா வியப்போடு பேசத் தொடங்கி, "சுவாமிகளே! என்ன ஆச்சரியம் இது? இன்றைய தினம் காலையில் தானே தங்களுக்குக் கடிதம் வந்தது! வந்து இப்போது ஒரு சுமார் ஆறுமணி நேரம் இருக்கலாம். இதற்குள் தாங்கள் இத்தனை யோசனைகளையும் செய்ததன்றி, அதற்கு அனுகூலமாக இப்படிப்பட்ட பெரிய பொம்மையையும் செய்து வைத்திருக்க எப்படி சாத்தியப்பட்டது? இப்படிப்பட்ட பதுமையை ஒருவன் செய்து முடித்துக் காயவைத்து உருப் படுத்துவதென்றால், அதற்குக் குறைந்தது பத்து தினங்களாவது பிடிக்குமே. தாங்கள் இவ்வளவு சீக்கிரத்தில் இதை எப்படிச் செய்து முடித்தீர்கள்?" என்றான்.

அதைக் கேட்ட சாமியார் புன்னகை செய்து, "இந்த உருவத்தை நான் இதற்காக இன்றைய தினம் தயாரித்தேன் என்றா நினைக்கிறீர்கள்? அது எப்படி சாத்தியமாகும். நான் என்ன பிரம்மாவா? பிரம்மாவினால் கூட மனிதனை உடனே சிருஷ்டிக்க முடிகிறதில்லையே! மனிதனுடைய கரு பத்துமாசகாலம் தாய் வயிற்றிலிருந்து, பிறகு வெளிப்பட்டு சிசுவாகவும், பாலனாகவும் சுமார் இருபது வருஷம் வளர்ந்த பிறகல்லவா ஆகிறது" என்றார்.

*கண்ணப்பா:-* அப்படியானால், இந்த உருவத்தை இதற்கு முன்னாகவே தயாரித்து வைத்திருக்கிறீர்களா? இப்படிப்பட்ட சந்தர்ப்பம் ஏதாவது நேரும் என்று எதிர்பார்த்து இப்படி முன் ஜாக்கிரதையாக இருக்கிறீர்கள் போலிருக்கிறது.

*சாமியார்:-* இவர்கள் என்னைக் கொல்வதற்கு இப்படிப் பாம்பை அனுப்பப் போகிறார்கள் என்றும், நான் இறந்து போவது போலப் பாசாங்கு பண்ண வேண்டியிருக்கும் என்றும் எதிர்பார்த்து நான் இந்த உருவத்தைச் செய்யவில்லை. முக்கியமாக அது சிவகாமியின் ஏற்பாடென்றே சொல்ல வேண்டும். நான் இந்தப் போலீஸ் உத்தியோகம் வகித்த பிறகு எத்தனையோ துஷ்டர்களை அடக்கி தண்டனை செய்து வைத்திருக்கிறேன் அல்லவா. அதனால் என்னிடம் அநேகர் பகை வைத்திருக்கி றார்கள். என்னை இரவில் கொன்றுவிடுவதாகப் பயமுறுத்திப் பலர் பல கடிதங்கள் அனுப்பினார்கள்; அதைப்பற்றி நான் அவ்வளவாகக் கவலையடையவில்லை. ஆனால், சிவகாமி அதைத் தெரிந்து கொண்டு அதைப்பற்றி நிரம்பவும் கவலைப் பட்டு, அது விஷயத்தில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று அவள் அடிக்கடி என்னைத் தூண்டியதோடு என்னைப் போல ஒரு பொம்மை தயாரித்து, இப்போது நீங்கள் பார்த்து விட்டு வந்தபடி படுக்க வைத்திருக்கச் சொன்னாள். அவளுடைய உபத்திரவத்திற்காக நான் அதுபோலவே செய்து வைத்திருக்கிறேன். இரவில் நான் யாரும் காணமுடியாத பரம ரகசியமான ஓரிடத்தில் படுத்துக் கொள்ளுகிறது வழக்கம். என்னை வெட்டிக் கொன்று விடுவதாகக் கடிதம் அனுப்பிய விரோதிகள் யாராவது உண்மையிலேயே இரவில் வந்து பலவந்தமாக பங்களாவிற்குள் நுழைந்து என்னைத் தேடும் பட்சத்தில், கட்டிலில் படுத்திருக்கும் அந்த உருவத்தைக் கண்டு, நான் தான் அப்படிப் படுத்திருப்ப தாக எண்ணி, எனக்குச் செய்ய உத்தேசிக்கும் மரியாதைகளை அதற்கு நடத்திவிட்டுப் போகட்டும் என்று அதை எப்போதும் இப்போது இருக்கும் நிலைமையிலேயே வைத்திருக்கிறோம். அந்த உத்தேசத்தோடு செய்து வைக்கப்பட்டிருக்கும் பதுமை இப்போது இந்த நல்ல சமயத்தில் உபயோகப்படப் போகிறது.

***வடிவாம்பாள்:-*** இந்தப் பதுமை தங்களைப் போலவே இருப்பதோடு, உயிரோடிருக்கும் மனிதர் மாதிரியே இருக்கிறதே! நாங்கள் அதைப் பார்த்தவுடனே, தாங்கள் தான் வேறே குறுக்கு வழியாகப் போய் அங்கே படுத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்றல்லவா எண்ணிவிட்டோம்.

***கண்ணப்பா:-*** அது மரத்தினால் தானே செய்யப்பட்டிருக்கிறது?

***சாமியார்:-*** இல்லை, ஆட்டுத்தோலை மனித உருவம் போலத் தைத்து, உள்ளே பஞ்சை அடைத்துத் தைத்திருக்கிறான். என்னென்ன வர்ணங்கள் கலந்தால் என்னுடைய உடம்பின் நிறம் உண்டாகும் என்பதைக் கண்டுபிடித்து, அந்த வர்ணங்களை எல்லாம் சேர்த்துக் குழைத்துத் தேன் மெழுகில் கலந்து பிசைந்து அந்த மெழுகை உபயோகப்படுத்தி முகத்தில் உள்ள கண்கள் மூக்கு வாய் முதலிய உறுப்புகளை எல்லாம் செய்திருக்கிறான். உடம்பு முழுதும், அந்த வர்ணங் கலந்த மெழுகு தடவப் பட்டிருக்கிறது. தொட்டுப் பார்த்தால், மனிதனுடைய உடம்பு போலே மிருதுவாக இருக்கும்.

***கண்ணப்பா:-*** ஓகோ! அப்படியா? பொம்மை நிரம்பவும் சாமர்த்தியமாகச் செய்யப்பட்டிருக்கிறது. அதை வைத்துப் பகலில் நாம் தூக்கிக்கொண்டு போனால் கூட ஜனங்கள் உண்மையில் தாங்களே போகிறீர்கள் என்று தான் எண்ணிக் கொள்ளுவார்கள். ஆனால் அதன் முகத்தை உற்றுப்பார்க்கிற வர்கள், தாங்கள் உயிரோடு படுத்திருக்கிறீர்கள் என்று நினைத்துக் கொள்ளுவார் களேயன்றி, இறந்து போய்விட்டதாகச் சொல்வதைக் கொஞ்சமும் நம்பமாட்டார்கள். அதுவுமன்றி பாடையிலிருந்து அதை எடுத்து ஜதையில் வைக்கும் போது அது பொம்மை என்பது உடனே தெரிந்து போகும். எல்லாவற்றையும் யோசிக்க, தாங்கள் முடிவு செய்தது போல, இரவில் மற்ற யாரும் வராதபடி செய்து நாம் காரியத்தை முடிப்பதே நல்லது.

***வடிவாம்பாள்:-*** இந்தத் தந்திரம் எல்லாம் நன்றாகத்தான் இருக்கிறது. ஆனாலும் சுவாமியார் இறந்து போய்விட்டார்கள் என்ற அசுபமான வார்த்தை சொல்வதும், அப்படிப்பட்ட

எண்ணத்தை ஜனங்களுடைய மனசில் உண்டாக்குவதும் உசிதமாகத் தோன்றவில்லை. உயிரோடிருக்கும் மனிதரை இறந்து போய்விட்டதாகச் சொல்வது பெருத்த பாவச்செய்கை. இதற்கு முன்னாகவே ஒருதரம் அப்படிப்பட்ட இழுக்கு ஏற்பட்டது எங்கள் மனசுக்கெல்லாம் சகிக்க முடியாத துன்பமாக இருந்தது. ஒரு சுமங்கலியை அமங்கலி என்று சொல்வதைப் போன்ற மகா பாதகமான காரியம் வேறொன்றும் இல்லை. முன்னொரு தடவை அந்த அம்மாள் விதவை என்ற இழிவையும் அசுபமான பெயரையும் அடைந்தது போதாதா? மறுபடியும் அவர்களுக்கு அப்படிப்பட்ட இழுக்கையும் அவமானத்தையும் உண்டாக்குவது மகா பாவமான காரியம். நம்முடைய எதிரிகளை வெல்வதற்கு இது ஒன்றுதானா தந்திரம். எவ்வளவோ சாமர்த்தியமும் தந்திரமும் அறிந்த சுவாமிகளுக்கு இதைத்தவிர வேறே மார்க்கம் எதுவும் தோன்றாமலா போய்விட்டது. என் மனசுக்கு இந்த யோசனை பிடிக்கவே இல்லை. சுவாமிகளுடைய பத்நியாருக்கும் இது சம்மதமானதாக இராதென்பது நிச்சயம்.

***சாமியார்:-*** குழந்தாய் வடிவூ! நான் இறந்து போய்விட்டேன் என்ற எண்ணம் ஏற்பட்டாலன்றி, நம்முடைய எதிரிகள் சும்மா இருக்க மாட்டார்கள். அவர்கள் எப்படியும் தந்திரம் செய்து ஏதாவது தீங்கு செய்யப் பிரயத்தனப் படுவார்கள். யானைக்கும் அடி சறுக்கும் என்பார்கள். அதுபோல, பகைவர்கள் தந்திரமாக வேலை செய்தால், நாம் அவர்களை வெல்வது அரிது. நான் உண்மையிலேயே இறந்து போவது நல்லதா? அல்லது, இறந்து போய்விட்டதாகக் கொஞ்ச காலம் வரையில் பொய்யான வதந்தியை உண்டாக்கிவிட்டு எதிரிகளை அடக்கிய பிறகு வெளிப்படுவது நல்லதா! நீயே யோசித்துப் பார். இப்படிச் செய்ய வேண்டும் என்று நான் தீர்மானித்ததற்கு முன், இதை என் சம்சாரத்தினிடம் சொன்னேன். இது நல்ல யோசனைதான் என்று அவள் ஒப்புக்கொண்டு, இதைச் செய்ய அனுமதி கொடுத்த பிறகே, நான் இதைத் தொடங்கினேன். முக்கியமாக நான் என்னுடைய உயிரைப்பற்றி அவ்வளவாகக் கவலைப்பட வில்லை. அவர்கள் உங்கள் எல்லோருக்கும் கெடுதல் செய்ய முயற்சிப்பது திண்ணமான விஷயம். அதை நான் தடுத்தே

தீரவேண்டும். அதற்கு முன் அவர்கள் என்னைச் சுத்தமாக மறந்து போகும்படி செய்து கொண்டால், என் வேலை எளிதில் பலிதமடையும். இத்தனை பேருடைய க்ஷேமம் பெரியதே அன்றி, என் சம்சாரம் விதவையாய் விட்டாள் என்ற இழிவைக் கொஞ்ச காலம் வகிப்பது ஒரு பொருட்டாகாது. முடிவில் நான் மறுபடியும் உயிரோடு திரும்பி வரும்போது ஜனங்கள் என் மனைவியின் சாமர்த்தியத்தையும், வீரத்தனத்தையும், தியாக புத்தியையும் மெச்சிப் புகழுவார்கள் அல்லவா? இப்போது உண்டாகும் இழிவெல்லாம் அப்போது தானாகப் பறந்து போய் விடும். இதைப்பற்றி ஏன் கவலைப்பட வேண்டும்? உண்மை அல்லாத ஓர் இகழ்ச்சியை நாம் இலட்சியம் செய்வதே கூடாது.

**கண்ணப்பா:-** வாஸ்தவமான விஷயம். பெண் பிள்ளைகள் சுபாசுபம் ஒன்றையே கவனிப்பார்களன்றி, உசிதாவுசிதத்தை எண்ண மாட்டார்கள். என் மனசுக்கு சுவாமிகளுடைய யோசனை நிரம்பவும் சிலாக்கியமானதாகவே தோன்றுகிறது. அப்படியே செய்து விடலாம் என்று நினைக்கிறேன். ஆனால் எனக்கு இன்னொரு சந்தேகம் உண்டாகிறது. இப்போது தாங்கள் இறந்து போய் விட்டதாக நாம் பிரஸ்தாபப்படுத்தி விடுகிறதாக வைத்துக் கொள்வோம். இந்தச் சங்கதி நம்முடைய எதிரிகளுக்கு எட்டுவதோடு, நம்முடைய துரைத்தனத்தாருக்கும், போலீஸ் சூபரின்டெண்டெண்டு முதலிய உத்தியோகஸ்தகர்ளுக்கும் எட்டுமே. அவர்களும் இதை உண்மை என்று தானே நம்புவார்கள். தங்களுடைய உத்தியோகம் போய்விட்டதாக அவர்கள் உத்தரவு பிறப்பித்து விடுவார்கள். மறுபடி தாங்கள் வெளிப்படும் போது, இந்த உத்தியோகத்தைப் பெறுவதற்கு முயற்சி செய்ய நேரும். அதுவுமன்றி தாங்கள் கச்சேரி நடத்துவதற்காக சர்க்காரார் ஏற்படுத்திக் கொடுத்திருக்கும் இந்த பங்களாவையும் தங்களுடைய சம்சாரம் காலி செய்து கொடுத்து விட நேரும். அதன்பிறகு அந்த அம்மாளை எங்கே வைக்கத் தீர்மானித்திருக்கிறீர்கள்?

**வடிவாம்பாள்:-** அவர்கள் நம்முடைய ஜாகைக்கு வந்து விடட்டும். அவர்களுக்கு ஒரு குறைவும் இல்லாமல் நான் பார்த்துக் கொள்ளுகிறேன்.

*சாமியார்:-* இந்தப் போலீஸ் இலாகாவில் நான் உத்தியோகம் வகிப்பது, ஜீவனோபாயத்தின் பொருட்டல்ல என்பது உங்களுக்குத் தெரிந்த விஷயம். ஆனாலும் நான் எதற்காக இதை வகிக்கிறேன் என்றால், போலீஸ் இலாகா உத்தியோகஸ்தர்கள் சிப்பந்திகள் முதலியோருடைய உதவி நமக்கிருந்தால், அதனால், நான் பலருக்கு நன்மை செய்வதற்குத் தக்க வசதி ஏற்படும் என்பது என்னுடைய முக்கியமான கருத்து. அதுவுமன்றி, போலீசார் தப்பான வழியில் போகாமல் ஒழுங்கான வழியில் போய் ஜனங்களுக்கு உண்மையிலேயே உதவியாய் இருக்கும்படி நான் அவர்களை நல்ல வழியில் நடத்த வேண்டும் என்பது என்னுடைய இன்னொரு நோக்கம் ஆகையால், நான் இந்த உத்தியோகத்தை இன்னம் கொஞ்சகாலம் வகிக்க வேண்டும் என்று நினைத்திருக்கிறேன். நான் நம்முடைய ராஜதானியின் கவர்னருக்கும், போலீஸ் இலாகாத் தலைவருக்கும் ரகசியமான கடிதங்கள் இரண்டு எழுதித் தயாராக வைத்திருக்கிறேன். என் சம்சாரத்துக்கு நான் இங்கிலீஷ் பாஷை கற்றுக் கொடுத்து டைப் இயந்திரம் அடிக்கவும் பழக்கிக் கொடுத்திருக்கிறேன். அது எதற்காக என்றால், பரம ரகசியமான சில கடிதங்கள் எழுதி கவர்னர் முதலியவர்களுக்கு அனுப்ப வேண்டுமானால், அதற்காக என் சம்சாரத்தையே கொஞ்சம் பழக்கி வைத்திருக் கிறேன். நானே டைப் அடிப்பதென்றால், என் விரல்கள் கொஞ்சம் நடுங்குகின்றன. அதனால் அவளை அதில் பழக்கி இருக்கிறேன். இப்போது அவள் பக்கத்து அறையில் இருந்து கொண்டு என்னுடைய கடிதங்களை டைப் அடித்துத் தயாரித்துக் கொண்டிருக்கிறாள். அது சீக்கிரம் ஆக வேண்டும் என்று நான் சொன்னேன் ஆகையால், அந்த அவசரத்தில், அவள் உங்களோடு பேசாமல் உள்ளே போய்விட்டாள் போலிருக்கிறது. அதுவுமன்றி, அவள் உங்களோடு பேசினால், என்னைப் பாம்புகள் கடித்த வரலாற்றை நீங்கள் கேட்பீர்கள் அல்லவா. அப்போது அவள் உங்களிடம் பொய்யான வரலாற்றைச் சொல்ல இஷ்டப்படவில்லை. உண்மையான வரலாற்றை நானே உங்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என்ற நினைவோடும், தன் அவசர வேலையைக் கருதியும், அவள் உடனே அப்பால்

போய்விட்டாள். நீங்கள் வந்தபோது நான் உண்மையிலேயே அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தேன். அவள் என்னை எழுப்பி, நீங்கள் வந்திருப்பதாகச் சொன்னாள். கதவைத் திறந்து விடும்படி நான் சொன்னேன். எனக்குச் சொற்ப உணர்ச்சி மாத்திரம் இருந்ததேயன்றி, உடம்பு அலுத்துப் போய் எழுந்திருக்க முடியாத நிலைமையில் இருந்தது. நான் முயன்று முயன்று பார்த்துக் கடைசியில் எழுந்தேன். இப்போது அவள் தயாரித்துக் கொண்டிருக்கும் இரண்டு கடிதங்களையும் சரிபார்த்து அடியில் என்னுடைய கையெழுத்தை வைத்து உறைக்குள் போட்டு ஒட்டி அரக்கு முத்திரை முகர் முதலியவைகளை வைத்து உங்களிடம் கொடுக்கிறேன். அவைகளை நாளைய தபாலிலேயே ரிஜிஸ்டர் செய்து அனுப்பி விடுங்கள். இரண்டு கடிதங்களில் ஒன்று கவர்னருக்கு, மற்றது போலீஸ் இலாகா தலைவருக்கு. அவைகளில் நான் உண்மையான விவரங்களை எழுதி இருக்கிறேன். எதிரிகள் என்னைக் கொல்லும் பொருட்டு, நான்கு நாகப்பாம்புகளை வைத்து, சூபரின்டெண்டெண்டு துரை அனுப்பியது போலப் பொய்க் கடிதம் தயாரித்து அனுப்பியதை யும், நான் இந்த அபாயத்தில் இருந்து தப்பிய வரலாற்றையும் எழுதி இருப்பதோடு எதிரிகளை ஏமாற்றும் பொருட்டு, நான் இறந்து போய்விட்டதாகத் தந்திரம் செய்யப் போகிறதாகவும், அதன் பிறகு நான் கொஞ்ச காலம் மறைந்திருந்து சட்டைநாத பிள்ளை முதலியோரைப் பிடித்துச் சிறைச்சாலைக்கு அனுப்பி விட்டு, மறுபடி வந்து என்னுடைய உத்தியோகத்தை ஏற்றுக் கொள்ளப் போகிறேன் என்றும், என் மனைவி இரண்டு தினங்கள் இங்கே இருந்து என் தகனம் சஞ்சயனம் முதலிய காரியங்களை நடத்திவிட்டு, குத்தாலத்தில் இருக்கும் தன் தமையனுடைய வீட்டுக்குப் போய் விடுவாள் ஆகையால், மூன்றாவது நாளே இந்த பங்களாவை சர்க்காரார் வசப்படுத்திக் கொள்வதோடு நான் பார்த்து வந்த போலீஸ் உத்தியோகம் காலியாய் இருப்பதாகவும், சாமியாருக்குச் சமதையான திறமையும் பரோபகாரச் சிந்தையும், மற்ற சகல யோக்கிய தாம்சங்களும் வாய்ந்தவர் யாராவது அகப்படுவாரானால், அவர்களுக்கு இந்த உத்தியோகம் கொடுக்கப்படும் என்றும் ஒரு விளம்பரம் தயாரித்து

பத்திரிகைகளின் மூலமாகவும், துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும் பகிரங்கப்படுத்த வேண்டும் என்றும், நான் கவர்னரைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். துண்டுப் பிரசுரங்களை, கும்பகோணத்தில் சட்டைநாத பிள்ளை இருக்கும் தெருவில் அதிகமாய்க் கொடுக்க ஏற்பாடு செய்யும்படியும் எழுதி இருக்கிறேன் ஆகையால், மேலதிகாரிகள் முதலில் நான் இறந்து போனது உண்மை என்று நம்பினாலும் என் கடிதங்களைப் பார்த்த பிறகு, உண்மையை அறிந்து கொள்வார்கள். இந்த பங்களாவையும் என் வரவை எதிர்பார்த்துக் காலியாகவே வைத்திருப்பதோடு, இந்த உத்தியோகத்தையும் நான் வந்தவுடன் வகிக்க அனுமதி கொடுப்பார்கள் ஆகையால், அதைப்பற்றி நான் அதிகமாய் விசனப்படப் போகிறதில்லை. என்னுடைய முக்கியமான கொள்கை பரோபகாரம் செய்வது. அதை நான் இந்த உத்தியோகம் இல்லாமல் போனாலும் என்னால் இயன்ற அளவில் செய்தே தீருவேன். என் சம்சாரம் குத்தாலத்தில் இருப்பதைவிட, உங்கள் ஜாகையில் இருப்பதையே சிலாக்கியமாக மதிக்கிறேன். ஆனாலும், எதிராளிகள் சந்தேகங் கொள்ள இடம் கொடாமல் நாம் செய்வதை எல்லாம் திருந்தச் செய்ய வேண்டும். அதை உத்தேசித்தே, நான் அவளை அவளுடைய தாயார் வீட்டுக்கு அனுப்பிவிடப் போகிறேன். அவள் கொஞ்ச காலம் அங்கே இருந்து என்னை நினைத்து அழுது கொண்டிருக்கட்டும்.

***கண்ணப்பா:-*** அவர்களுக்குத்தான் நிரம்பவும் கஷ்டமான வேலை. வந்து கேட்கும் ஜனங்கள் எல்லோரும் நம்பும்படியாக துக்கங் கொண்டாடி அழுது பாசாங்கு செய்வதென்றால், அது சுலபமான காரியமா?

***சாமியார்:-*** அதற்கு ஏதாவது தந்திரம் செய்யலாம். நான் இறந்து போன பிறகு, அவள் அந்த துக்கத்தைத் தாங்க மாட்டாமல், கடுமையான நோய் கொண்டு படுத்திருப்பதாகவும், எவரும் அவளிடம் வந்து தொந்திரவு கொடுக்கக் கூடாதென்று வைத்தியர்கள் கண்டித்துச் சொல்லி இருப்பதாகவும் அவளுடைய தமயனும், தாயாரும் சொல்லிக் கொண்டிருந்தால், எவரும்

உள்ளே வர மாட்டார்கள். அவள் வீட்டுக்குள் மறைவான இடத்தில் இருக்கட்டுமே. தப்பித் தவறி, யாராவது உள்ளே வந்து விட்டால், இதற்கு முன் இறந்து போன அவளுடைய தகப்பனார் பாட்டனார் முதலிய யாரையாவது நினைத்துக் கொண்டு ஒரு குரல் அழுதால், அதோடு வந்தவர் போய்விடுகிறார்கள்.

***வடிவாம்பாள்:-*** இதெல்லாம் சரிதான்; தாங்கள் இனி எங்கே இருப்பதாக உத்தேசித்திருக்கிறீர்கள்? இவ்வளவு தூரம் காரியங்கள் நடந்த பிறகு, தாங்கள் உயிரோடிருப்பது தெரியவே கூடாதே. தங்களை யாரும் காணாதபடி மறைந்து கொண்டிருக்க வேண்டுமே.

***சாமியார்:-*** (புன்னகை செய்து) நான் தான் இறந்து போனவனாயிற்றே. என்னுடைய ஸ்தூல சரீரத்தைக் கண்டுபிடிக்கக் கூடிய சக்தி வாய்ந்தவர்கள் யார் இருக்கிறார்கள்? என்னுடைய ஜீவாத்மா மாத்திரம் ஆங்காங்கு போய்வந்து கொண்டிருக்கும். நான் இன்ன இடத்தில் தான் இருப்பேன் என்று இப்போது சொல்ல முடியாது. இனி ஏற்படப்போகும் சந்தர்ப்பங்களுக்குத் தகுந்தபடி நான் எங்கும் இருப்பேன். என்னைப்பற்றி நீங்கள் கொஞ்சமும் கவலைப் படவே வேண்டாம். இன்றைய தினம் இரவில் என்னுடைய தகனம் வரையில் ஒழுங்காக நடத்திவிட்டு, அதன் பிறகு உடனே புறப்பட்டு நான் கும்பகோணம் போகப் போகிறேன்.

***கண்ணப்பா:-*** நாங்கள் ஏதாவது அவசர நிமித்தம் தங்களைப் பார்க்க வேண்டுமானால், எங்கே பார்க்கிறது?

***சாமியார்:-*** என்னைப் பார்க்க வேண்டும் என்றால், அநேகமாய்க் கும்பகோணத்தில் பார்க்கலாம். அல்லது, எனக்குத் தெரிவித்தால், நானே தங்களுடைய ஜாகைக்கு ரகசியமாக வந்து விட்டுப் போகிறேன்.

***கண்ணப்பா:-*** கும்பகோணத்தில் எந்த இடத்தில் ஜாகை வைத்துக்கொள்ளப் போகிறீர்கள்? **மல்லகஜெட்டித் தெருவில்** உள்ள என் அம்மான் வீட்டில் தாங்கள் இருப்பது செளகரியமாக இருக்குமே.

***சாமியார்:-*** அதெல்லாம் சரிப்பட்டு வராது. நீங்கள் ஒரு காரியம் செய்யும். கும்பகோணத்துக்குத் தெற்கில் ஆறு இருக்கிறதல்லவா. அந்த ஆற்றுப் பாலத்தின் கண்வாய்கள் இருக்கின்றனவே. அவைகளில், வடக்கில் இருந்து இரண்டாவது கண்வாய்க் கட்டிடத்தில் ஒரு பக்கத்தில் எனக்குத் தெரிவிக்க வேண்டிய செய்திகளை பென்சிலால் சுருக்கமாக எழுதித் தேதி போட்டு வையுங்கள். ஆனால் என்னுடைய பெயராவது, உங்களுடைய பெயராவது அங்கே இருக்கக்கூடாது. நீங்கள் கிருஷ்ணன் என்று அடியில் கையெழுத்துப் போட்டால், அதை நான் அறிந்து கொள்ளுகிறேன். தாங்கள் எழுதும் சங்கதிகள் எனக்கு மாத்திரம் அர்த்தம் ஆகவேண்டும், மற்றவருக்கு அர்த்தமே ஆகக்கூடாது. அம்மாதிரி சுருக்கமாகவும் பூடகமாகவும் இருக்க வேண்டும். நான் காலை மாலை அடிக்கடி அங்கே போய்ப் பார்த்து அதற்குத் தகுந்தபடி நடந்து கொள்ளுகிறேன். நீங்கள் எழுதுவதை நான் படித்த பிறகு அதைக் கலைத்து விட்டு அதற்கு எதிர்ப்பக்கக் கட்டிடத்தில் **தி. சா.** என்ற எழுத்துக்களையும் தேதியையும் போட்டுவிட்டுப் போகிறேன். அதைக் கொண்டு, நான் அந்தச் செய்தியைப் படித்து விட்டதாக எண்ணிக் கொள்ளுங்கள். அல்லது, உங்களுக்கு ஏதாவது செய்தி சொல்ல வேண்டுமானால், **தி. சா.** என்பதற்கு மேல் சுருக்கமாக மறுமொழி எழுதி வைக்கிறேன். அதை நீங்கள் படித்துவிட்டு உங்களுடைய் பக்கத்தில் கிருஷ்ணன் என்று வெறுங் கையெழுத்தும் தேதியும் போட்டு வையுங்கள். இப்படி நாம் அடிக்கடி ஒருவருக்கொருவர் சங்கதி சொல்லிக் கொள்ளுவோம். அதுவுமன்றி, அவசியமானால் நான் தபால் மூலமாகவோ, அல்லது, ஆள் மூலமாகவோ தங்களுக்குக் கடிதமும் அனுப்புவேன். அல்லது, சந்தர்ப்பம் ஏற்படும் பட்சத்தில், நானே நேரில் தங்களுடைய ஜாகைக்கே வந்தாலும் வருவேன். இதைத் தவிர, நான் கும்பகோணத்தில் இன்ன இடத்தில் தான் இருப்பேன் என்று குறிப்பாகச் சொல்ல முடியாது.

***கண்ணப்பா:-*** சரி; தங்களுடைய பிரியப்படியே செய்கிறேன். இன்னொரு சங்கதி. வருகிற வெள்ளிக்கிழமை அன்று பட்டணத்தில் என் தம்பிக்கு நிச்சயதார்த்தம் நடத்த உத்தேசித்

திருக்கிறோமே? அதை நிறுத்தி வைக்க வேண்டியது தானே? தாங்கள் இருவரும் இல்லாமல், நாங்கள் மங்களகரமான காரியம் எதையும் செய்ய எங்கள் மனம் சம்மதிக்காது. தாங்கள் மறுபடி வெளிப்பட்டுத் தங்களுடைய சம்சாரத்தை அழைத்துக் கொண்ட பிற்பாடுதான் எல்லோருமாகப் போய், நிச்சயதார்த்தத்தை நடத்த வேண்டும்.

*சாமியார்:-* என்னைப்பற்றி நீங்கள் நிச்சயதார்த்தத்தை நிறுத்த வேண்டாம். நம்முடைய ஏற்பாட்டின்படி அதை நீங்கள் நடத்துங்கள். சௌகரியப்படும் பட்சத்தில் நான் அன்றைய தினம் பட்டணத்துக்கு வருகிறேன். முடிவாக நாம் கலியாணம் நடத்துவதற்குள், நான் என்னுடைய உத்தேசத்தை நிறைவேற்றி விட்டு வெளிப்படுகிறேன். பிறகு கலியாணத்தை நடத்துவோம். அதுவரையில் நீங்கள் எல்லோரும் நிரம்பவும் ஜாக்கிரதையாக இருங்கள். யாரும் தனியாக எங்கும் போகவேண்டாம். இரவிலும், பகலிலும் எப்போதும் பத்து இருபது ஆட்களைக் கூடவே வைத்துக் கொண்டிருங்கள். அன்னியரிடம் இருந்து சாமான் வாங்குவதை நன்றாகக் கவனித்து வாங்குங்கள். எதிரிகள் பெருத்த சதியாலோசனை செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகையால் நீங்கள் யாரும் அசட்டையாக இருக்கக்கூடாது. ஜாக்கிரதை" என்று மேலும் ஏதோ கூற முயல்கையில் அவர் இருந்த அறைக்கு வெளியில் அழுகைக் குரல்கள் உண்டாயின. அவர் உடனே படுக்கையில் பழையபடி படுத்துக் கொண்டு, வந்திருப்பது யார் என்று விசாரிக்கும்படி கண்ணப்பாவிற்கு சைகை செய்ய, அவன் கதவின் தாழ்ப்பாளை விலக்கி மெதுவாகக் கதவை திறந்து வெளியில் பார்க்க, முற்றிலும் கலங்கி அழுத வண்ணம் தலைவிரி கோலமாக வந்திருந்த வேலாயுதம் பிள்ளை, அவரது மனைவி, சுந்தரம் பிள்ளை, அவரது மனைவி ஆகியவரும் கட்டிலடங்காப் பதைப்பும் ஆவலும் கொண்டு உள்ளே நுழைந்தனர்.

7-வது அதிகாரம்

## அவசரக் கலியாணம் - அபூர்வ மணப்பெண்

நமது கந்தசாமி தனக்கு மனையாட்டியாக வரிக்கப்பட்டிருந்த மனோன்மணியம்மாளினது குணாதிசயங்களை நேரில் கண்டு அறியும் பொருட்டு பெண் வேஷந் தரித்து அவளது பங்களாவிற்குச் சென்றது சனிக்கிழமை தினம் என்பது முன்னரே சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு முந்திய நாளாகிய வெள்ளிக் கிழமை காலையிலேதான் இடும்பன் சேர்வைகாரன் போலீஸ் உடை தரித்து நாகப்பாம்புகள் வைத்த பெட்டியையும் பொய்க் கடிதத்தையும் மன்னார்குடியில் திகம்பரசாமியாரது பங்களாவில் கொடுத்துவிட்டு, உடனே கும்பகோணம் சென்று, அந்த வரலாற்றை மாசிலாமணியிடம் தெரிவித்து, அன்றைய தினமே மோட்டார் வண்டியிலும் ரயிலிலுமாகப் பல ஆள்களை சென்னைக்கு அனுப்பிவிட்டுத் தானும் அவர்களோடு வந்து சேர்ந்தான். ஆதலால், எல்லோரும் சனிக்கிழமை காலையில் சென்னையை அடைந்ததன்றி, அன்றைய தினம் இரவில் அவர்கள் பட்டாபிராம பிள்ளையினது பங்களாவிற்குள் புகுந்த காலத்தில் அவர்கள் கந்தசாமியை மனோன்மணி என்று ஆள்மாறாட்டமாக எண்ணவும் நேர்ந்தது. கந்தசாமி அன்றைய தினம் நடுப்பகல் முதல் மிகுந்த மன வேதனையினால் உலப்பப்பட்டிருந்து முடிவில் உண்டான அவமானத்தினாலும், விசனத்தினாலும் நிரம்பவும் குன்றி அயர்ந்து போய் இராப்போஜனமும் உண்ணாமல் தூக்கத்தில் ஆழ்ந்திருந்தவன் ஆதலால், இடும்பன் சேர்வைகாரன் முதலிய முரட்டு மனிதர்கள் வந்த காலத்தில் அவன் ஒருவாறு தனது உணர்வைப் பெற்றவனாய் இருந்தான். ஆனாலும், சரியான சுறுசுறுப்பும் ஊக்கமும் தெளிவும் அடைந்து உடனே எழுந்து உட்கார வல்லமையற்றவனாக இருந்தான். அதுவுமன்றி, அந்த முரட்டு மனிதர்கள் அவனிருந்த விடுதிக்குள் நுழைந்து அவனைக் கண்டு, அவன் தான் மனோன்மணியம்மாள் என்றும் கருதிய உடனே சிறிதும் தாமதம் இன்றி அவன் மீது பாய்ந்து இறுகப் பிடித்து மயக்க மருந்தை மூக்கில் பிடித்துவிட்டார்கள். ஆதலால், அவன்

உடனே தனது உணர்வை இழந்து செயலற்றவனாய் மாறிவிட்டான். அந்த முரடர்கள் அவனை எடுத்துப் போய் மோட்டார் வண்டியில் வைத்த பின்னரும் மயக்க மருந்தை அவனது மூக்கிற்கருகிலேயே பிடித்துக் கொண்டிருந்தனர் ஆதலால், அன்றைய தினம் விடியற்காலம் அவர்கள் கும்பகோணம் போய்ச்சேரும் வரையில் அவன் உயிரற்றவன் போலவே அலங்கோலமாக வீழ்ந்து கிடந்தான். இடும்பன் சேர்வைகாரன் முதலிய முரட்டு மனிதர்கள் பங்களாவில் இருந்து அவனைத் தூக்கிக் கொண்டு போய் மோட்டாரில் வைத்த காலத்தில், யாராவது மனிதர்கள் தோன்றி, தங்களைத் தடுத்து எதிர்த்தால், தாம் கருதி வந்த காரியம் பலிதமடையாமல் போய் விடுமே என்ற கவலையும் பெரும் பீதியுமே குடிகொண்ட மனத்தினராய் இருந்தனர் ஆதலால், தாம் தூக்கிக் கொண்டு போவது ஒரு வேஷதாரி என்பதை அவர்கள் சிறிதும் சந்தேகிக்க அவகாசம் நேரவில்லை. அதன்பிறகு, அவனை அவர்கள் மோட்டாரில் கோஷா ஸ்திரீகளுக்கான அறை போலவே அமைக்கப்படும் மறைவிற்குள் படுக்கவைத்திருந்தனர் ஆதலால், அதற்குள் இருளே மயமாக நிறைந்திருந்தது பற்றி, அப்போதும், அவனை அவர்கள் உற்றுநோக்க சந்தர்ப்பம் ஏற்படவில்லை. அது நிற்க, மனோன்மணியை மாசிலாமணி மணம் புரிந்து கொள்ளப் போகிறான் என்ற எண்ணம் அவர்களது மனதில் இருந்தது ஆதலால், தங்களது எஜமானனுக்காக உத்தேசிக்கப் பட்டிருந்த பெண்ணின் தேக அமைப்பைத் தாங்கள் விஷமப் பார்வையாகப் பார்ப்பது ஒழுங்கல்ல என்ற நினைவையும் அவர்கள் கொண்டிருந்தார்கள் ஆதலால், அவனுக்கு எதிரில் இருந்து மயக்க மருந்தைப் பிடித்துக் கொண்டிருந்த இடும்பன் சேர்வைகாரனைத் தவிர மற்றவர்கள் தூரத்தில் இருந்தனர். அவ்வாறே, அவர்கள் விடியற்காலம் கும்பகோணத்திலிருந்த மாசிலாமணியின் மாளிகை வாசலை அடைந்த காலத்தில், யாராவது போலீசார் தங்களைக் கண்டுகொள்ளப் போகிறார்களோ என்ற திகிலையும், பொழுது விடிந்து போய்விடுமோ என்ற கவலையையும் கொண்டு முற்றிலும் பதறிய வண்ணம் அவனைத் தூக்கி எடுத்து அவனுக்காக மூன்றாவது மாடத்தில்

ஏற்படுத்தப்பட்டிருந்த ஒரு மஞ்சத்தில் படுக்க வைத்துவிட்டு வந்த காலத்திலும் அவர்களது கவனம் அவன்மீது செல்லவில்லை. ஆகவே, இடும்பன் சேர்வை காரனும் மற்ற ஆட்களும் தாங்கள் மனோன்மணியையே அதிக பிரயாசை இன்றி எளிதில் கொண்டு வந்துவிட்டோம் என்ற எண்ணத்தோடு சென்றதன்றி, தூங்கிக் கொண்டிருந்த மாசிலாமணியையும் இடும்பன் சேர்வைக்காரன் எழுப்பி அந்த சந்தோஷச் செய்தியை அவனிடம் தெரிவித்து, மனோன்மணியின் அழகையும் அபாரமாக வர்ணிக்கவே மாசிலாமணியினது மனதில் அளவற்ற மன எழுச்சியும், களிப்பும், குதூகலமும், பதைப்பும் தோன்றி வதைக்க ஆரம்பித்தன. தான் உடனே சென்று அவளது அற்புதமான அழகைக் கண்டு ஆனந்தம் அடைய வேண்டும் என்றும், அவளோடு சம்பாஷிக்க வேண்டும் என்றும் விலக்க முடியாத ஓர் அவா அவனது மனதில் எழுந்து தூண்டியது. ஆயினும் இடும்பன் சேர்வைகாரன், "எஜமானே! நீங்கள் ஆத்திரப்பட்டு இப்போது அந்த அம்மாளிடம் போவது உசிதமாகத் தோன்றவில்லை. நான் அந்த அம்மாளை மெத்தையில் படுக்க வைத்து, ஈரத்துணியால் முகத்தைத் துடைத்து, கட்டிலின் மேல் இருக்கும் மின்சார விசிறியை மெதுவாகச் சுழற்றிவிட்டு வந்திருக்கிறேன். அதுவுமன்றி இந்த இடம் பின்புறத் தோட்டத்தை அடுத்தாற் போல இருப்பதால், பின் பக்கத்து ஜன்னலின் கதவுகளையும் திறந்து வைத்துவிட்டு வந்திருக்கிறேன். தோட்டத்தில் இருந்தும், மின்சார விசிறி சுழலுவதில் இருந்தும் ஜிலுஜிலுப்பான காற்று உண்டாகி முகத்தில் தாக்கும் ஆகையால், அந்த அம்மாளுடைய மயக்கம் இந்நேரம் தெளிய ஆரம்பித்திருக்கும் என்று நினைக்கின்றேன். நேற்று இரவில் அந்த அம்மாள் தூங்கிக் கொண்டிருக்கும் போது நாங்கள் திடீரென்று போய் மயக்க மருந்தை மூக்கில் பிடித்து, உணர்வை விலக்கி எடுத்துக் கொண்டு வந்திருக்கிறோம் ஆகையால், இப்போது விழித்துக் கொள்ளும் போது, மனோன்மணியம்மாள் தான் பட்டணத்தில் தன்னுடைய சொந்த ஜாகையில் இருப்பதாகவே எண்ணிக் கொள்வாள். அந்த நிலைமையில், இன்னார் என்பது தெரியாத அன்னியரான நீங்கள் போய் எதிரில் நின்றால், அந்த அம்மாள் பயந்து நடுங்கிச்

கூச்சலிட்டாலும் இடலாம். இந்த அசந்தர்ப்ப வேளையில், உங்களோடு அந்த அம்மாள் சந்தோஷமாகவாவது சிநேகபாவ மாகவாவது பேசுவாள் என்று நீங்கள் எதிர்பார்ப்பது சரியல்ல. இப்போது நீங்கள் போய் அந்த அம்மாளுக்குத் தொந்திரவு கொடுத்து, உங்களுடைய மனதையும் புண்படுத்திக் கொள்வதை விட நீங்கள் உங்களுடைய மனதைக் கொஞ்சம் கட்டுப்படுத்தி அடக்கிக் கொண்டு இப்போது போகாமல் இருங்கள். அந்த அம்மாள் மயக்கந் தெளிந்து எழுந்து இன்றைய தினம் பகல் எல்லாம் இருந்து, நாம் அனுப்பப் போகும் நம்முடைய வேலைக்காரியின் மூலமாய் உண்மையைச் சிறுகச் சிறுகத் தெரிந்து கொள்ளட்டும். தன்னை நாம் இங்கே என்ன கருத்தோடு கொண்டு வந்திருக்கிறோம் என்பதை அந்த அம்மாள் வேலைக்காரியிடம் அவசியம் கேட்பாள். அப்போது வேலைக் காரி, இந்த ஊர் இன்னதென்பதையும், நீங்கள் இன்னார் என்பதையும் சொல்லாமல், பூடகமாக நீங்கள் ஒரு கோடீசுவரர் என்றும், அழகும், யௌவனப் பருவமும் வாய்ந்தவர் என்றும், நீங்கள் அந்த அம்மாளைப் பட்டணத்தில் கண்டு மோகித்துக் கலியாணம் செய்துகொள்ள வேண்டும் என்ற உத்தேசத்தோடு கொண்டு வந்திருப்பதாகவும், நாளைய தினம் காலையில் கலியாணம் நடக்கப் போகிறது என்றும், அந்த அம்மாள் எப்படியும் அதற்கு இணங்கியே தீரவேண்டும் என்றும், இணங்காவிட்டால் நாம் விடப்போகிறதில்லை என்றும் சொல்லி, அந்த அம்மாளுடைய மனப்போக்கு எப்படி இருக்கிற தென்பதைத் தெரிந்து கொண்டு வந்து நம்மிடம் சொல்லட்டும். அதற்கு மேல் ஏற்படும் நிலைமைக்குத் தகுந்தபடி நாம் யோசனை செய்து தந்திரமாக நடந்து கொள்வோம். ஸ்திரீகளின் விஷயத்தில் நாம் நிரம்பவும் ஜாக்கிரதையாகவும் ஸாவதானமாகவும் நடந்து கொள்ள வேண்டும் அன்றிக் கசக்கி மோரக் கூடாது. கொஞ்சம் பொறுத்து நயமான வழியில் நாம் நம்முடைய கோரிக்கையை நிறைவேற்றுவதில், நமக்கு நஷ்டமாவது ஏற்படப்போகிறதில்லை. கிணற்று நீரை வெள்ளம் கொண்டு போகப் போகிறதில்லை. நம்முடைய வசத்தில் மாட்டிக்கொண்ட பிறகு நாம் இந்த அம்மாளை விடப் போகிறதில்லை. இப்படிப்பட்ட விஷயங்களில்

எல்லாம் தடிகொண்டு அடித்துப் பழுக்க வைப்பதைவிடத் தானே பழுக்கும்படி செய்வதே, நம்முடைய மனசுக்கு உகந்த காரியம் என்பது உங்களுக்குத் தெரியாததல்ல. ஆகையால் தயை செய்து நீங்கள் பேசாமல் படுத்துக் கொள்ளுங்கள்; பொழுது விடிந்த பிறகு நாம் வேலைக்காரியை அனுப்புவோம்" என்றான்.

அதைக் கேட்ட மாசிலாமணி சிறிது நேரம் சிந்தனை செய்த பிறகு, "ஆம்; சேர்வைக்காரரே! நீர் சொல்வது நல்ல யோசனை யாகத்தான் படுகிறது. ஆனாலும், நீர் அந்தப் பெண்ணின் அழகைப் பற்றிச் சொன்ன வார்த்தைகளைக் கேட்ட முதல் என் மனசில் என்னவோ ஒருவிதமான விகாரம் ஏற்பட்டு நிரம்பவும் சஞ்சலப்படுத்துகிறதன்றி, அவளை உடனே பார்த்து அவளோடு ஒரு வார்த்தையாவது பேச வேண்டும் என்ற ஆவல் என்னை வதைக்கிறது. இருந்தாலும், பாதகமில்லை. நீர் சொல்லுகிறபடி நான் கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுகிறேன். நீர் வேலைக் காரியின் மூலமாகவே அவளைச் சரிபடுத்தும். ஆனால் நீர் சொன்ன யுக்தியில் ஒருவிதமான கேள்விக்கு இடம் இருக்கிறது. அவளை நான் பட்டணத்தில் கண்டு அவள் மேல் ஆசை கொண்டு, அவளைக் கலியாணம் செய்து கொள்ள வேண்டும் என்ற கருத்தோடு இங்கே கொண்டு வந்திருப்பதாக நம்முடைய வேலைக்காரி சொல்வதை அவள் கேட்டு, 'அப்படியானால், நேரில் என் தகப்பனாரிடம் வந்து ஏன் கலியாணப் பிரஸ்தாபம் செய்யக்கூடாது, இப்படி பலவந்தமாக என்னைத் தூக்கி வரவேண்டிய காரணம் என்ன, இவர் தன்னுடைய பெயர் முதலிய விவரங்களை எல்லாம் மறைக்க வேண்டிய காரணம் என்ன' என்று கேள்வி கேட்பாளானால், அதற்கு வேலைக்காரி என்ன சொல்லுகிறது? அதை எல்லாம் நீர் நன்றாக யோசனை செய்து அவளுடைய மனம் திருப்தியடையத் தக்கபடி சமாதானம் சொல்லும்படி வேலைக்காரிக்கு யுக்தி சொல்லிக் கொடுக்க வேண்டும்" என்றான்.

இடும்பன் சேர்வைகாரன், "அதுதானா ஒரு பெரிய காரியம்; அதற்குத் தக்க சமாதானம் சொல்லும்படி நான் செய்கிறேன். அதைப்பற்றி நீங்கள் கொஞ்சமும் கவலைப்படவே தேவை

இல்லை. ஆகாயத்தில் பறக்கிற பட்சியைப் பிடிக்கிறதுதான் கடினமான காரியம்; பிடித்த பிறகு, அதை எப்படிப் பக்குவப் படுத்தி என்னவிதமாக உபயோகப்படுத்துகிறதென்பது ஓர் அரிய காரியமா. அது நம்முடைய இஷ்டத்தைப் பொறுத்ததான அற்ப விஷயம். அதைப்பற்றி இனி நீங்கள் கொஞ்சமும் யோசனை செய்ய வேண்டாம். இந்த அம்மாளை இவ்வளவு எளிதில் கொண்டு வர முடியும் என்று நான் நினைக்கவே இல்லை. இவர்களுடைய பங்களாவில் அசாத்தியமான காவலும் பாராவும் இருக்குமோ என்றும், நாம் நம்முடைய சொற்ப ஆள்களை வைத்துக் கொண்டே அத்தனை பேரையும் வென்று எப்படி உள்ளே நுழையப் போகிறோம் என்றும், இந்த அம்மாள் ஒரு வேளை விழித்துக் கொண்டு கத்தப் போகிறாளே என்றும், மோட்டாரில் வைத்துக் கொண்டு வரும் போது வழியில் யாராவது தடுத்து நிற்க வைத்து விடுவார்களோ என்றும், இந்த அம்மாளை நாங்கள் இங்கே கொண்டு வந்து சேர்க்கும் முன் ஒருவேளை மயக்கம் தெளிந்து போய்விடுமோ என்றும் நாங்கள் கவலைப் பட்டது இவ்வளவென்று சொல்லி முடியாது; நல்ல வேளையாக, எவ்வித இடைஞ்சலும் நேராமல் நம்முடைய உத்தேசம் வெகு சுலபத்தில் கைகூடி விட்டது. இதுபோலவே இனி பாக்கி உள்ள காரியங்களும் நிர்விக்கினமாகவே முடிந்து விடும் என்பதில் தடை இல்லை. இப்போது நமக்கு நல்ல காலம் பிறந்திருக்கிறது என்பது பரிஷ்காரமாகத் தெரிகிறது. நாம் இருவரும் சிநேகம் செய்து கொண்ட பிறகு நாம் செய்த யோசனைகளில் இதுவரையில் அபஜெயம் ஏற்படவே இல்லை. நமக்கு ஏற்பட்ட பெரிய ஜெயத்தில் இது இரண்டாவது ஜெயமல்லவா?" என்றான்.

அதைக் கேட்ட மாசிலாமணி நிரம்பவும் பூரிப்படைந்து, "ஏன் இதை இரண்டாவது ஜெயம் என்று சொல்லுகிறீர்? இதை மூன்றாவது ஜெயம் என்றல்லவா சொல்ல வேண்டும்" என்றான்.

இடும்பன் சேர்வைகாரன் சிறிது யோசனை செய்து, "இது எப்படி மூன்றாவது ஜெயம்? உங்கள் தமையனார் விஷயம் முதலாவது. இது இரண்டாவது தானே" என்றான்.

*மாசிலாமணி:* ஏன் அந்தப் பரதேசி நாயை நீர் மறந்தே போய் விட்டீர் போலிருக்கிறதே! வெள்ளிக்கிழமை நீர் அவனுடைய தலைக்குச் சீட்டு அனுப்பிவிட்டுப் போனதை நீர் அடியோடு மறந்துவிட்டீர் போலிருக்கிறதே!

*இடும்பன் சேர்வைகாரன்:* (திடுக்கிட்டு மிகுந்த ஆவலோடு) ஆம், ஆம். அந்த விஷயம் எப்படி முடிந்தது என்பதைப்பற்றி ஏதாவது தகவல் தெரிந்ததா? அவன் பெட்டியைத் திறந்து பார்த்தானா? பாம்புகள் அவனைக் கடித்தனவா? அப்படி நாம் தாம் செய்தோம் என்ற சந்தேகம் ஏதாவது ஏற்பட்டதா? வந்தவுடன் நானே அதைப்பற்றிக் கேட்க வேண்டும் என்று ஆவல் கொண்டு வந்தேன். இந்த அம்மாளைப் பற்றிய கவனத்தில் அதை நான் கேட்கவே மறந்து விட்டேன்.

*மாசிலாமணி:* (அளவற்ற குதூகலமும் பூரிப்பும் தோற்று வித்தவனாய்) சேர்வைகாரரே! உம்முடைய யுக்தி அற்ப சொற்ப மானதா? அது பலிக்குமா பலிக்காதா என்று கூட நீர் சந்தேகப்பட வேண்டுமா? அந்தப் பரதேசி நாய் ஒழிந்து போய், போன இடத்தில் புல்கூட முளைத்துவிட்டது. அவன் கடிதத்தைப் பிரித்துப் பார்த்த உடனே அதை உண்மை என்று நம்பித் தனியாக இருந்தபடி பெட்டியைத் திறந்து பார்த்தான் போலிருக்கிறது. உடனே பாம்புகள் குபீரென்று வெளிக்கிளம்பி அவனைக் கடித்து விட்டு ஓடிப்போய்விட்டன. அவன் உடனே ஸ்மரணை தப்பி மயங்கிக் கீழே விழுந்திருக்கிறான். அவனுடைய சம்சாரம் முதலிய ஜனங்கள் அவன் உணர்வில்லாமல் கிடந்ததைக் கண்டு, சந்தேகம் கொண்டு அவனுடைய உடம்பை ஆராய்ந்து பார்த்திருக்கிறார்கள். உடம்பில் இருந்த பல் குறிகளைக் கண்டும், அவனுடைய கைநாடியைப் பார்த்தும், அவனைப் பாம்புகள் தான் கடித்திருக்க வேண்டும் என்று தீர்மானித்திருக்கிறார்கள். தன்னைப் பாம்பு கடித்து விட்டதென்ற விவரத்தைக்கூட அவன் வெளியிட மாட்டாமல், அந்த உத்தரக்ஷணத்திலேயே மயங்கிக் கீழே வீழ்ந்திருக்கிறான். அவனுக்கு எத்தனையோ கடிதங்கள் வருகின்றன ஆகையால், நாம் அனுப்பிய கடிதத்தையும், பெட்டியையும் யாரும் கவனித்திருக்கவாவது சந்தேகப்

பட்டிருக்கவாவது மாட்டார்கள் என்று நான் நினைக்கிறேன். ஏனென்றால், அவனைப் பாம்பு கடித்துவிட்டது என்று மாத்திரம் ஜனங்கள் எல்லோரும் சொல்லிக் கொள்ளுகிறார்களே அன்றி, பாம்பு எங்கே இருந்து அவனைக் கடித்ததென்ற விவரமே எவருக்கும் தெரியவில்லை. நாம் அனுப்பிய கடிதம், பெட்டி முதலியவற்றைப் பற்றிய பிரஸ்தாபமும் உண்டாகவே இல்லை. யார் யாரோ வைத்தியர்களும் மந்திரவாதிகளும் வந்து குட்டிக் கரணம் போட்டுப் பார்த்தார்கள். எதுவும் பலிக்கவில்லை. கடைசியில் வெள்ளிக்கிழமை இரவில் அந்த நாய் வாயைப் பிளந்து விட்டது. பொழுது விடிகிற வரையில் கூட, அவனுடைய பிணத்தை வைக்காமல், வேலாயுதம் பிள்ளை வீட்டாரும் போலீசாரும் சேர்ந்து இரவோடு இரவாகக் கொண்டு போய்க் கொளுத்தி விட்டார்களாம். நேற்று அவனுடைய பெண்ஜாதி அவனுடைய சாம்பலைக் கரைத்துவிட்டு உடனே புறப்பட்டு குத்தாலம் போய்ச் சேர்ந்துவிட்டாளாம். நம்மை எல்லாம் பிடித்த பெரிய சனியன் தொலைந்தது. இனி நமக்கு எவரைப் பற்றியும் பயமே இல்லை. இனி நாம் ஏகசக்கராதிபதிகள்தான். அண்ணனைக் கொண்டு வந்ததைப் பற்றியும் மனோன்மணியைக் கொண்டு வந்ததைப் பற்றியும் கூட, எனக்கு அவ்வளவு அதிக சந்தோஷம் உண்டாகவில்லை. இந்தப் பண்டாரம் தொலைந்து போன சங்கதிதான் எனக்கு இந்த உலகத்தையே பட்டங்கட்டி வைத்தால் அது எப்படி இருக்குமோ அப்படிப்பட்ட அபாரமான பேரானந்தத்தை உண்டாக்கி விட்டது.

**இடும்பன் சேர்வைகாரன்:-** *சரி; ஒழிந்தானா சாமியார்! சந்தோஷ*மாயிற்று. அந்த யோசனையை நான் உங்களிடம் சொன்ன போது நீங்கள் என்னைப் பரிகாசம் செய்தீர்கள். அப்போது நான் உங்கள் மனம் திருப்தி அடையும்படி மாத்திரம் எல்லா விவரங்களையும் சொன்னேனே அன்றி என் மனசில் மாத்திரம் ஒருவித சந்தேகம் இருந்தே வந்தது. 'நாம் இவ்வளவு பாடுபட்டு என்னென்னவோ பைத்தியகாரத் தந்திரங்களை எல்லாம் செய்கிறோமே, அவன் மகா மேதாவி ஆயிற்றே; நம்முடைய எண்ணம் எங்கே பலிக்கப் போகிறது' என்று என் மனம்

உள்ளுக்குள்ளாகவே கவலைப்பட்டுக் கொண்டுதான் இருந்தது. அதன் முடிவு எப்படி ஆயிற்று என்று, உங்களிடம் கேட்டால், நீங்கள் ஒரு வேளை அது பலிக்காமல் போய்விட்டதென்று சொல்லி விடுவீர்களோ என்று நினைத்து நான் அதைப்பற்றி விசாரிக்க மனம் இல்லாதவனாய் இருந்தேன். சாமியார் விஷயத்தில் நம்முடைய யோசனை சுலபத்தில் பலித்தது உண்மையிலேயே நமக்கு நல்ல காலம் பிறந்து விட்டதென்பதைப் பரிஷ்காரமாகக் காட்டுகிறது. இனி நமக்கு மற்ற எவரும் நிகருமில்லை, ஒரு பொருட்டுமில்லை. இனி மிகுதியுள்ள நம்முடைய பகைவர்களை எல்லாம் ஒரு கொசுவை அடிப்பது போல வெகு சுலபத்தில் நாம் நாசப்படுத்தி விடலாம். அதிருக்கட்டும். சாமியார் மாண்டுபோன விஷயம் உங்களுடைய தமயனாருக்குத் தெரியுமா?

***மாசிலாமணி:-*** ஆகா! தெரியும். மன்னார்குடியில் இருந்து நம்முடைய ஆள் நேற்று சாயுங்காலம் தான் வந்து சாமியாருடைய தகனம், சஞ்சயனம் முதலியவை நடந்த வரலாற்றைத் தெரிவித்தான். நான் உடனே அண்ணனிடம் போய் எல்லா வற்றையும் சொன்னேன்.

***இடும்பன் சேர்வைகாரன்:-*** (வியப்போடு) நேற்று சாயுங்காலம் தானா நம்முடைய ஆள் அங்கே இருந்து வந்தான்?

***மாசிலாமணி:-*** வெள்ளிக்கிழமை முழுதும், அவன் திகம்பர சாமியாருடைய பங்களாவின் வாசலில் கூடியிருந்த ஜனக் கும்பலில் மறைந்திருந்தானாம். அன்றைய தினம் சாயுங்காலம் வரையில் முடிவான சங்கதி ஒன்றும் தெரியவில்லையாம். சாமியாரைப் பாம்பு கடித்துவிட்டதென்றும், அவன் ஸ்மரணை இல்லாமல் கிடக்கிறான் என்றும், அவன் பிழைப்பது புனர் ஜென்மம் என்றும் போலீசார் சொல்லிக் கொண்டிருந்தார்களாம். அப்படிப்பட்ட சந்தேககரமான நிலைமையில் அவ்விடத்தை விட்டு வருவதைவிட, மேலும் கொஞ்ச நேரமிருந்து, அவன் இறந்து போகிறானா அல்லது பிழைத்துக் கொள்ளுகிறானா என்ற முடிவை நிச்சயமாகத் தெரிந்து கொண்டு ஒரேயடியாக வந்து விடலாம் என்று நம்முடைய ஆள் அன்றைய இரவு வரையில்

இருந்து பார்த்தானாம். அப்போதும் முடிவு தெரியவில்லையாம். ஆகையால் அவன் அன்றைய தினம் இரவில் அங்கேயே தங்கி நேற்று காலையில் எழுந்து பங்களாவண்டை போய் விசாரித்தானாம். முதல் நாளைய இரவிலேயே சாமியார் இறந்து போய் விட்டான் என்றும், வேலாயுதம் பிள்ளை வீட்டாரும், சுந்தரம் பிள்ளை வீட்டாரும், போலீசாரும் பிணத்தை எடுத்துக் கொண்டு போய்க் கொளுத்தி விட்டார்கள் என்றும் ஜனங்கள் சொல்லிக் கொண்டார்களாம். அவன் நேற்று மத்தியானம் வரையில் மன்னார் குடியிலேயே இருந்து, வேலாயுதம் பிள்ளை வீட்டார் என்ன பேசிக் கொண்டார்கள் என்பதையும் தெரிந்து கொண்டு வந்தானாம்.

**இடும்பன் சேர்வைகாரன்:-** ஓகோ! அப்படியா சங்கதி! வேலாயுதம் பிள்ளை வீட்டார் இனி பேசிக் கொள்வதற்கு என்ன இருக்கிறது?

**மாசிலாமணி:-** அவர்கள் அடுத்த வெள்ளிக்கிழமை நடத்துவதாக உத்தேசித்திருந்த நிச்சயதார்த்தத்தை நிறுத்தக் கூடாதென்றும், அதை நடத்திவிட வேண்டும் என்றும் முடிவு செய்திருப்பதாக அவர்களுடைய வேலைக்காரன் சொல்ல, நம்முடைய ஆள் அதைத் தெரிந்துகொண்டு உடனே புறப்பட்டு என்னிடம் வந்து எல்லா விவரங்களையும் சொன்னான்.

**இடும்பன் சேர்வைகாரன்:** (ஏளனமாக நகைத்து) ஓகோ! அவர்கள் நிச்சயதார்த்தத்தை அடுத்த வெள்ளிக்கிழமை நடத்தப் போகிறார்களோ! நடத்தட்டும். அதற்குள் அந்தப் பெண்ணுக்கு இங்கே நீங்கள் கலியாணம் லாலி ஊஞ்சல் எல்லாம் நடத்தி மங்களமும் பாடி விடுவீர்கள். அவர்கள் பட்டணம் போய் முகத்தில் கரியைப் பூசிக்கொண்டு திரும்பி வரட்டும்.

**மாசிலாமணி:** அவர்கள் பட்டணத்துக்கு ஏன் போவார்கள்? நேற்று இரவில் பெண் காணாமல் போய்விட்ட தென்று பட்டாபிராம பிள்ளை இன்றைய தினமே தந்தியோ, அல்லது, கடிதமோ இவர்களுக்கு அனுப்பிவிட மாட்டானா? அதைப் பார்த்தால், இவர்கள் தங்களுடைய பிரயாணத்தை நிறுத்திக் கொள்ளப் போகிறார்கள்.

**இடும்பன் சேர்வைகாரன்:** ஆம். வாஸ்தவம் தான். அதிருக் கட்டும். நாம் இந்தப் பெண்ணை இங்கே கொண்டு வந்து மூன்றாவது உப்பரிகையில் வைத்திருக்கிறோமே. பட்டாபிராம பிள்ளையோ, அல்லது, வேலாயுதம் பிள்ளை வீட்டாரோ, இந்தப் பெண்ணை நாம் தான் கொண்டு வந்திருப்போம் என்று சந்தேகப் பட்டுப் போலீசாரிடம் தெரிவித்தால், போலீசார் வந்து வீட்டை சோதனைப் போட்டுப் பார்த்தாலும் பார்க்கலாமே. அந்த விஷயத்தில் நாம் ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டாமா?

**மாசிலாமணி:-** அதைப்பற்றி எனக்குக் கொஞ்சம்கூட பயமில்லை. போலீசார் வரும் பட்சத்தில் பெண்ணை நான் ஒரு நொடியில் மறைத்து விடுவேன். ஈசுவரன் வந்தால்கூட பெண் இருக்கும் இடத்தைக் கண்டுபிடிக்க முடியாது. அதுவுமல்லாமல், அவர்கள் நம்மேல் சந்தேகப்படவே நியாயமில்லை. பட்டணத்தில் பெண் காணாமல் போனால், கும்பகோணத்தில் உள்ள நாம்தான் அவளை அபகரித்துக் கொண்டு போயிருப்போம் என்ற சந்தேகம் ஏற்படும் எனத் தோன்றவில்லை.

**இடும்பன் சேர்வைகாரன்:-** சரி; அதிருக்கட்டும். நீங்கள் உங்களுடைய தமயனாரிடம் போய் இந்த விவரங்களை எல்லாம் சொன்னீர்களே. அப்போது இந்தப் பெண்ணை நாம் கொண்டு வரப் போகிறோம் என்ற விஷயத்தையும் சொன்னீர்களா? சாமியார் இறந்து போன விஷயத்தில் அவர்கள் என்ன சொன்னார்கள்.

**மாசிலாமணி :-** நான் எல்லா சந்தேகங்களையும் அண்ணனிடம் சொன்னேன். திகம்பரசாமியார் இறந்து போய் விட்டான் என்ற செய்தியைக் கேட்டவுடன் அவருக்குண்டான ஆனந்தத்துக்கு அளவே சொல்ல முடியாது. தாம் பிறந்த பிறகு நேற்றுதான் உண்மையான பேரின்பம் எப்படி இருக்கும் என்பதை அவர் உணர்ந்ததாகச் சொன்னதன்றி, எவராலும் வெல்ல முடியாத மகா தந்திரசாலியான சாமியாரை நீர் வெகு சுலபத்தில் கொன்று விட்டதைப் பற்றி அவர் உம்மை ஸ்தோத்திரம் செய்தது இவ்வளவு அவ்வளவல்ல; உமக்குப் பதினாயிரம் ரூபாயும், உம்முடைய ஆள்களுக்குத் தலைக்கு ஐந்நூறு ஐந்நூறு ரூபாயும்

சன்மானம் செய்யச் சொன்னார்; அது மாத்திரம் அல்ல, இன்னம் மிகுதி இருக்கும் காரியத்தையும் நீர் திருப்திகரமாக முடித்து வைத்தால், நம்முடைய **சுக்காம்பாளையத் தெருவில்** உள்ள வீட்டையும், இரண்டு வேலி நிலத்தையும் உமக்கு எழுதி வைத்து விடும்படி என்னிடம் சொன்னார். இப்போது அவர் உமக்குக் கொடுக்கச் சொன்ன பதினாயிரம் ரூபாயை நான் உமக்கு எப்போது கொடுக்கப் போகிறேன் தெரியுமா? நாளைய தினம் எனக்கும் இந்த மனோன்மணிக்கும் கலியாணம் நடக்கும் காலத்தில், அவளை எனக்கு நீர்தான் கன்னிகாதானம் செய்கிறவர் என்று சொல்லி அந்தச் சமயத்தில் பணத்தை, வஸ்திரம் முதலிய மற்ற மரியாதைகளோடு, உமக்கு வழங்கப் போகிறேன்.

***இடும்பன் சேர்வைகாரன்:-*** (நிரம்பவும் மகிழ்ச்சி அடைந்தவனாய்) அடேயப்பா! எனக்கு எவ்வளவு பெரிய மரியாதை! உங்களிடம் பொருளையாவது வேறு எவ்விதமான சன்மானத்தையாவது நாடி நான் உங்களுக்கு இந்தக் காரியங்களைச் செய்யவில்லை. உங்களைப் போன்ற தக்க பெரிய மனிதர்களுடைய சிநேகம் ஒன்றையே நான் முக்கியமாக நாடியது. ஆனால், நாம் காலால் இடும் வேலையைத் தலையால் செய்து, உயிருக்குத் துணிந்து நின்று, நம்முடைய இஷ்டம் போல நடந்து கொள்ளும் நம்முடைய ஆள்களை மாத்திரம் நீங்கள் மறந்துவிடக் கூடாது. அவர்களுடைய உதவிதான் ஒப்பற்றது. அவர்கள் இல்லா விட்டால், நம்மால் மாத்திரம் எந்தக் காரியமும் முடிந்திராது; இனியும் முடியாது. நாளைய தினம் நீங்கள் உங்களுடைய தமயனார் சொன்னபடி அவர்கள் எல்லோருக்கும் சன்மானம் வழங்குவது நிரம்பவும் முக்கியமான விஷயம். அதை மாத்திரம் நீங்கள் மறந்து விடக்கூடாது. என் விஷயம் எப்படியானாலும், அதைப்பற்றி நான் நினைக்கவே போகிறதில்லை.

***மாசிலாமணி:-*** எங்களுக்கு ஒருவர் ஓர் அற்ப உதவி செய்தால் கூட அதை நாங்கள் ஒரு நாளும் மறக்கவே மாட்டோம். ஒன்றுக்குப் பத்தாக நாங்கள் அவருக்கு எப்படியும் சன்மானம் நடத்திவிடுவோம். அப்படி இருக்க, இப்படிப்பட்ட அரிய பெரிய காரியங்களில் நமக்குத் துணை இருக்கும் நம்முடைய ஆள்களை நாங்கள் மறந்து விடுவோமா? அல்லது உம்மைத்தான் நாங்கள்

மறக்க முடியுமா? ஒருநாளும் இல்லை. எல்லோருக்கும் தவறாமல், நாளைய தினம் கலியாணப் பந்தலில் அவரவர்களுக்குத் தக்கபடி மரியாதை நடத்திவிடுகிறேன். அதைப்பற்றி நீர் சிந்தனையே செய்ய வேண்டாம். நாங்கள் எங்களுடைய எதிரியான திகம்பர சாமியாருக்குக் கூட மரியாதை நடத்தப் போகிறோம். ஏனென்றால், அவரும் எங்களுக்கு ஓர் உதவி செய்திருக்கிறார். அவர் இந்த உலகத்தில் இருப்பதைவிட இறந்து போவது மற்ற எல்லா வற்றையும்விட அவர் எங்களுக்குச் செய்யக்கூடிய பெருத்த உதவி ஆகையால், அதற்காக அவர் விஷயத்திலும் சில மரியாதைகள் நடத்தும்படி அண்ணன் சொல்லி இருக்கிறார்.

***இடும்பன் சேர்வைகாரன்:-*** (ஆச்சரியமடைந்து) சாமியாருக்கு மரியாதைகளா? என்ன மரியாதைகள்?

***மாசிலாமணி:-*** அவனுடைய கருமாதி வரப் போகிறதல்லவா? அன்றைய தினம் அவன் பொருட்டு இருபத்தையாயிரம் ரூபாய் செலவு செய்யும்படி அண்ணன் என்னிடம் சொல்லி இருக்கிறார்.

***இடும்பன் சேர்வைகாரன்:-*** நீங்கள் சொல்வது எனக்கு நன்றாக விளங்கவில்லை.

***மாசிலாமணி:-*** அவனுடைய கருமாதி தினத்தன்று இந்த ஊர், மன்னார்குடி ஆகிய இரண்டு இடங்களிலும் உள்ள கோவில்களில் எல்லாம் சுவாமிக்கு அபிஷேகம், அர்ச்சனை, பலவகைப்பட்ட நிவேதனம் முதலியவைகளை நடத்தி வைக்க வேண்டும். அதோடு இந்த இரண்டு ஊர்களிலும் உள்ள ஏழைகள், நொண்டிகள், முடவர்கள், குருடர்கள், வயோதிகர்கள் முதலிய சகலமான ஜனங்களுக்கும் சாப்பாடு போட்டு வஸ்திரதானம் செய்ய வேண்டும். அதற்கு இருபத்தைந்து ஆயிரத்துக்கு அதிகமாகவே பணச்செலவு பிடிக்கும்.

***இடும்பன் சேர்வைகாரன்:-*** (சந்தோஷத்தோடு நகைத்து) பேஷ். நல்ல ஏற்பாடு! முக்கியமாக கடவுளின் அநுக்கிரகத்தினாலேயே நமக்கு இப்படிப்பட்ட அனுகூலங்கள் ஏற்பட்டிருக்கின்றன ஆகையால் நீங்கள் சொன்ன பூஜை தான தர்மங்களை எல்லாம்

செய்ய தமயனாருடைய யோசனைகள் நன்றாகவே இருக்கின்றன.

*மாசிலாமணி:-* அண்ணன் இன்னம் சில யோசனைகளையும் சொல்லி இருக்கிறார். அவைகளையும் நீர் தெரிந்து கொள்ள வேண்டும்.

*இடும்பன் சேர்வைகாரன்:-* அவர்கள் எந்த விஷயத்தில் யோசனைகள் சொல்லி இருக்கிறார்கள்?

*மாசிலாமணி:-* இன்னமும் நாம் செய்ய வேண்டிய மூன்றாவது காரியம் ஒன்று பாக்கி இருக்கிறதல்லவா. கடவுள் செயலாலும் முக்கியமாக உம்முடைய திறமையினாலும் சாமியார் காரியமும் மனோன்மணியின் காரியமும் நமக்கு அனுகூலமாக முடிந்து விட்டன. இனி மற்றவர்கள் இருக்கிறார்கள் அல்லவா. அவர்கள் விஷயத்தில் எப்படிப் பழி தீர்த்துக் கொள்ளுகிறது என்பதைப் பற்றித்தான் அண்ணன் சில யோசனைகள் சொன்னார்.

*இடும்பன் சேர்வைகாரன்:-* அவர்கள் எல்லோரும் நிச்சயதார்த் தத்துக்காக ஒன்றாகச் சேர்ந்து பட்டணம் போகும் போது, ஏதாவது உபாயம் தேடி அவர்கள் எல்லோரையும் ஒரேயடியாகத் தொலைத்துவிட வேண்டும் என்று நீங்கள் முன் தடவையில் சொன்னீர்களே! ரயில் தண்டவாளத்தைப் பெயர்க்கும் யோசனையைப் பற்றி நீங்கள் உங்கள் தமயனாரோடு கலந்து பேசினீர்களா?

*மாசிலாமணி:-* ஆம்; சொன்னேன். நம்முடைய யோசனை களை அவர் ஒப்புக் கொள்ளவில்லை. கண்ணப்பா, வடிவாம்பாள் முதலிய எல்லோரையும் கொன்று விடுவது அவருக்கு அவ்வளவு உசிதமான காரியமாய்த் தோன்றவில்லை. ஒருவரை நாம் தண்டிக்க எண்ணினால் அவரை நாம் கொல்வது தண்டனையே அல்ல. இன்ன குற்றத்திற்காகத் தாம் உயிரை இழக்கிறோம் என்பது அவருக்குத் தெரியவே போகிறதில்லை. ஒருவரை நாம் திடீரென்று கொன்று விட்டால், அதனால் அவர் யாதொரு துன்பமும் அனுபவிக்கப் போகிறதில்லை ஆகையால், மனிதரை உயிரோடு வைத்து, அவர்கள் பலவிதமான துன்பங்களை

அனுபவிக்கும்படி செய்ய வேண்டும். அது தான் உண்மையான தண்டனை.

***இடும்பன் சேர்வைகாரன்:-*** நீங்கள் பொதுவாகப் பேசுகிறீர்கள்! நாம் இன்னின்னாரை இன்னவிதம் நடத்த வேண்டும் என்று ஒவ்வொருவருடைய விஷயத்தைப் பற்றியும் குறிப்பாகச் சொன்னால் அந்த மாதிரியே நான் நிறைவேற்றி வைக்கத் தடை இல்லை. ஆனால், நாம் தண்டிக்க வேண்டிய மனிதர்கள் பலர் இருக்கிறார்கள். எல்லோரையும் ஒரே காலத்தில் தண்டிப்பது தான் கொஞ்சம் சிரமமாக இருக்கும்.

***மாசிலாமணி:-*** எல்லோரையும் ஒரே காலத்தில் தண்டிக்க வேண்டும் என்ற அவசியம் ஒன்றும் இல்லை. ஒரு காலத்தில் எத்தனை பேரை சுலபத்தில் தண்டிக்கக் கிடைக்கிறதோ, அதற்குத் தகுந்தபடி நடந்து கொள்ளுங்களேன்.

***இடும்பன் சேர்வைகாரன்:-*** தண்டிப்பதென்றால், நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்பது தான் என் மனசுக்கு இன்னமும் விளங்கவில்லை.

***மாசிலாமணி:-*** என்னுடைய அண்ணன் என்ன சொன்னார் தெரியுமா? வடிவாம்பாள் இருக்கிறாள் அல்லவா. அவளுடைய கருவத்தை அடக்குவதற்கு, அவளுடைய மூக்கை அடியோடு அறுத்துப் போட்டு, அவளுடைய முகம் பயங்கரமாக மாறிப் போகும்படி செய்துவிட வேண்டும்.

***இடும்பன் சேர்வைகாரன்:-*** பேஷ்! நல்ல யோசனை! அதற்கு சவரன் கத்தி ஒன்று இருந்தால், அதுவே போதுமானது. நாலைந்து ஆள்கள் அவளுடைய வாயில் துணியை அடைத்துக் கீழே போட்டு அமுக்கிக் கைகளையும் கால்களையும் பிடித்து அழுத்திக் கொண்டால், சவரன் கத்தியால் மூக்கை ஒரே நிமிஷத்தில் அறுத்துப் போட்டு விடலாம். இது சுலபமான காரியம்தான். மூக்கை அறுத்த பிறகு அவளை அவர்களுடைய வீட்டிலேயே விட்டுவிட வேண்டியதுதானே! யாரையும் இங்கே கொண்டுவர வேண்டியதில்லையே.

*மாசிலாமணி:-* எவரையும் இங்கே கொண்டு வரவேண்டிய தில்லை. எல்லோரும் ஒருவருடைய அழகை இன்னொருவர் பார்த்துக் கொண்டு சந்தோஷமாக அவர்களுடைய வீட்டிலேயே இருக்கட்டும்.

*இடும்பன் சேர்வைகாரன்:-* சரி; வடிவாம்பாளுடைய மூக்கு அறுபட்டுப் போனதென்றே வைத்துக் கொள்ளுங்கள். அதன் பிறகு கண்ணப்பாவை என்ன செய்கிறது?

*மாசிலாமணி:-* அவர்களுடைய குடும்பத்திற்குக் கண்ணப்பாவே முக்கியஸ்தன் அல்லவா. எந்த விஷயத்திற்கும் அவனே ஓடியாடி எல்லா நிர்வாகத்தையும் நடத்தித் தனக்கு நிகரானவர் யாரும் இல்லை என்று நினைத்து மிகுந்த இறுமாப்பு அடைந்திருக்கிறான். ஆகையால் அவனுடைய கண்கள் இரண்டையும் கத்தியால் குத்திப் பெயர்த்து அவனைக் குருடனாக்கி வீட்டிலேயே உட்கார வைத்து விடவேண்டும். அப்படிச் செய்தால் அவன் வீட்டை விட்டு வெளியில் போகவே முடியாமல் போய்விடும். அது அவன் இறந்ததைவிட மகா கேவலமான நிலைமையாக இருக்கும். ஆனால் ஒரு விஷயம் அவனுடைய கண்கள் போய்விட்டால், மூக்கில்லாமல் கொண கொண வென்று பேசும் தன் பெண்ஜாதியான வடிவாம்பாளின் முகத்தழகை அவன் கண்டு ஆனந்தம் அடைய முடியாமல் போய்விடும். அப்படிப் போனாலும் பாதகம் இல்லை. வடிவாம்பாள் உத்தம பத்தினியல்லவா? அவள் அவனை எப்போதும் விடாமல், கோல் கொண்டு நடத்தி அவனுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்யட்டும்.

*இடும்பன் சேர்வைகாரன்:-* இதையும் அந்த சவரன் கத்தியைக் கொண்டே சுலபத்தில் முடித்து விடலாம். அப்புறம் வேலாயுதம் பிள்ளை இருக்கிறாரே. அவருக்கு ஏதாவது மரியாதை நடத்த வேண்டாமா?

*மாசிலாமணி:-* அவர் அந்த வீட்டுக்கே பெரியவர் அல்லவா. அவருக்கு மரியாதை செய்யாமல் இருக்கக்கூடாது. ஆனால் அவர் வயதான மனிதர். பெருத்த அங்கஹீனம் ஏதாவது

செய்தால், அவர் தாங்க மாட்டாமல் இறந்து போனாலும் போய்விடுவார். அவரும் அவருடைய சம்சாரமும் இறந்து போய்விட்டால், அவர்களுடைய பிள்ளைகள் நாட்டுப்பெண் முதலியோரின் அழகைக் கண்டு அவர்கள் ஆனந்தம் அடையாமல் அல்லவா போய்விடுவார்கள். ஆகையால், அவர்கள் இருவரும் இறந்து போகாதபடி சொற்பமான அங்கஹீனம் செய்ய வேண்டும். ஆனால் அது பார்ப்பவருக்கு வேடிக்கையாகவும் இருக்க வேண்டும். வேலாயுதம் பிள்ளையின் வலது காதையும், அவருடைய சம்சாரத்தின் இடது காதையும் அடியோடு அறுத்துப் போட்டுவிட வேண்டும். அதுவே போதுமானது. அதனால் அவர்கள் இறந்து போக மாட்டார்கள் என்று நினைக்கிறேன். இறக்காவிட்டாலும், அந்தக் காதறுந்த நாய்கள் வீட்டை விட்டு வெளியில் போக வெட்கப்படுவார்கள் ஆகையால், இறந்தவர்கள் போலவே வீட்டுக்குள் இருப்பார்கள். அவர்கள் நால்வரும் ஒருவரை ஒருவர் பார்த்துப் பார்த்து வயிறெரிந்து நரக வேதனை அனுபவிப்பதைவிட மேலான தண்டனை ஏதாவதிருக்குமா?

***இடும்பன் சேர்வைகாரன்:-*** போதும். இந்தத் தண்டனையே எதேஷ்டமானது. ஆனால் எனக்கு ஒரு விஷயம் மாத்திரம் சந்தோஷமாக இருக்கிறது. இந்த நால்வரை தண்டிப்பதற்கும் ஒரே ஓர் அம்பட்டன் கத்தியே போதுமானதாகத் தாங்கள் யோசனை சொன்னீர்களே அதுதான் சந்தோஷம். இந்த வேலையை எல்லாம் நான் வெகு சுலபத்தில் முடிக்கிறேன். இவ்வளவு தூரம் சொன்னீர்களே, பட்டணத்தில் வேலாயுதம் பிள்ளையின் இளையமகன் கந்தசாமி இருக்கிறானே. அவனுக்கு மரியாதை ஒன்றும் செய்கிறதில்லையா? அவனுடைய பெண்ஜாதியைக் கொண்டு வந்ததே அவனுக்குப் போதுமான தண்டனை என்று விட்டுவிடப் போகிறீர்களா?

***மாசிலாமணி:-*** இல்லை இல்லை. அவனைத்தான் மற்ற எல்லோரையும்விட அதிகமாக நாம் கௌரவப்படுத்த வேண்டும். தான் அதிகப் பணக்காரன் என்றும், படிப்பாளி என்றும், மேதாவி

என்றும், மன்மதன் என்றும் நினைத்து அவன் கொண்டிருக்கும் இறுமாப்பிற்கு அளவே இல்லை. தான் ஒரு பெரிய மகாராஜ னுடைய பெண்ணைக் கட்டிக்கொள்ள வேண்டும் என்று அவன் உத்தேசித்திருப்பதாக நான் கேள்வியுற்றேன். அவனுக்கு நாம் அதிகமாக வேறொன்றும் செய்ய வேண்டுவதில்லை. இங்கிலீஷ் மருந்துக் கடைகளில் அக்கினித் திராவகம் என்று ஒரு மருந்து இருக்கிறது. அந்தத் திராவகத்தை ஒரு பெரிய சீசா நிறைய வாங்கிக் கொண்டு போய், அதை அப்படியே அவனுடைய முகத்தில் கொட்டி விட்டால், அதுவே போதுமானது. நாம் வேறே ஒன்றும் செய்ய வேண்டாம். அந்தத் திராவகம் மனிதருடைய உடம்பில் பட்டால், அந்த இடம் அப்படியே வெந்து புண்ணாகி அழுகிப் போய்விடும். ஆகையால் அவனுடைய முகம் முழுவதும் பொசுங்கிப் போய் வேகவைத்துத் தோலுரித்த கருணைக் கிழங்கு போல ஆகிவிடும். கண்களும் அநேகமாய் அவிந்து போம். முகம் பார்ப்பதற்கு மகா பயங்கரமாக மாறிப் போகும். அவன் மருந்துகள் போட்டு சொஸ்தப்படுத்திக் கொள்ள அறுமாச காலம் ஆகும். புண் ஆறிப்போனாலும், முகம் வெண்குஷ்டம் கொண்டவனுடைய முகத்தைவிடப் பன்மடங்கு அதிக விகாரமாகவும் அருவருக்கத்தக்கதாகவும் ஆகிவிடும். அதுவே அவனுக்குப் போதுமானது. அதன் பிறகு அவன் தன்னுடைய முகத்தழகை நிலைக் கண்ணாடியில் பார்த்துப் பார்த்து எப்போதும் ஆனந்தம் அடைந்து கொண்டே இருக்கட்டும்.

**இடும்பன் சேர்வைகாரன்:-** அக்கினித் திராவகத்தை முகத்தில் கொட்டுவது நிரம்பவும் சுலபமான வேலை ஆயிற்றே. இதை நீங்கள் அன்றைய தினமே சொல்லி இருந்தால், இந்நேரம் காரியம் முடிந்திருக்குமே. அதற்காக நான் இரண்டொரு ஆள்களை விட்டிருப்பேனே. இப்போது நம்முடைய ஆள்களுள் சிலர் என்னோடு பட்டணத்தில் இருந்து வந்து விட்டார்கள். மற்றவர்கள் இன்றைய தினம் ரயிலில் ஏறி நாளைய தினம் இங்கே வந்து விடுவார்களே.

*மாசிலாமணி:-* அதனால் பாதகமில்லை. ஆள்கள் மறுபடியுந் தான் போகட்டுமே. இரண்டொரு நாள்கள் தானே தாமதப்படும். அதற்குள் குடிமுழுகிப் போய்விடப் போகிறதில்லை.

*இடும்பன் சேர்வைகாரன்:-* சரி; அப்படியே செய்து விடுவோம். நாளைய தினம் காலையில் நாங்கள் எல்லோரும் இருந்து இந்தக் கலியாணத்தை முடித்து வைக்கிறோம். உடனே நான் பட்டணத் துக்கு இரண்டு ஆள்களை அனுப்பி வைக்கிறேன். நாளைய தினம் சாயுங்காலம் நானே மன்னார்குடிக்குப் போய் சந்தர்ப்பத்திற்குத் தகுந்தபடி நடந்து முதலில் கண்ணப்பாவின் காரியத்தை நிறைவேற்றுகிறேன். அதன் பிறகு வடிவாம்பாள் முதலிய மற்றவரைக் கவனிப்போம்.

*மாசிலாமணி:-* சரி; அப்படியே செய்யும். ஆனால், இந்த வேலையை எல்லாம் நாம் செய்திருக்கிறோம் என்ற சந்தேகமாவது குறிப்பாவது ஏற்படாதபடி அவ்வளவு தந்திரமாக நீர் எந்தக் காரியத்தையும் நடத்த வேண்டும்; ஜாக்கிரதை.

*இடும்பன் சேர்வைகாரன்:-* அதைக்கூடவா நீங்கள் எனக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும். பிறர் கண்டு கொள்ளும்படி நான் எதையும் செய்துவிடப் போகிறேன் என்ற கவலையே உங்களுக்கு வேண்டியதில்லை.

*மாசிலாமணி:-* சரி; நீர் இரண்டு நாளாக நிரம்பவும் பாடுபட்டு இருக்கிறீர். இரவில் தூங்கியே இருக்கமாட்டீர்; நீர் போய் வேலைக்காரிக்குச் சொல்ல வேண்டியதைச் சொல்லி, அவளை மனோன் மணி அம்மாளிடம் அனுப்பிவிட்டுப் போய்க் கொஞ்சம் படுத்துத் தூங்கும். நானும் படுத்துக் கொள்ளுகிறேன் -- என்றான்.

அவ்வளவோடு அவர்களது சம்பாஷணை முடிவுற்றது. இடும்பன் சேர்வைகாரன் மாசிலாமணியிடம் செலவு பெற்றுக் கொண்டு அவ்விடத்தை விடுத்துச் சென்றான்.

இனி நாம் மாசிலாமணியை விடுத்துக் கந்தசாமியைக் கவனிப்போம். மூன்றாவது உப்பரிகையில் நிரம்பவும் ரகசியமாக

அமைக்கப் பட்டிருந்த தனியான விடுதிக்குள் பஞ்சணையின் மீது படுக்க வைக்கப்பட்டிருந்த கந்தசாமி காலை எட்டு மணி சுமாருக்கு மயக்கம் தெளிந்தவனாய், எழுந்து உட்கார்ந்து தனது கண்களைத் துடைத்துக் கொண்டு நாற்புறங்களிலும் திரும்பிப் பார்த்தான். நடு இரவில் இடும்பன் சேர்வைகாரன் முதலியோர் திடீரென்று நுழைந்து அவனைப் பிடித்துக் கொண்ட பிறகு அவன் மயக்கத்தில் ஆழ்ந்து விட்டான் ஆதலால், அதற்குப் பிறகு என்ன நடந்தென்பது அவனுக்குச் சிறிதளவும் தெரியாதென்ற விஷயத்தை நாம் கூறுவது மிகையாகும். அவ்வாறு தோன்றிய மனிதர்கள் அவனது உணர்விற்குத் தெரிந்து வேறே எதுவும் செய்ததாக அவனுக்குத் தோன்றாது இருந்தமையால், அது கனவின் காட்சி என்றே கந்தசாமி நினைத்துக் கொண்டதன்றி, தான் அப்போதும், சென்னையில் பட்டாபிராம பிள்ளையினது பங்களாவிலேயே இருப்பதாக அவன் எண்ணியிருந்தான். ஆனால், அவன் விழித்துக் கொண்டு நன்றாகத் தெளிவடைந்து கட்டிலை விட்டு இறங்கி அந்த விடுதியை உற்றுப் பார்க்கப் பார்க்க, அது தான் மனோன்மணியோடு சம்பாஷித்துக் கொண்டிருந்து சிறை வைக்கப்பட்ட விடுதியல்ல என்ற நிச்சயம் ஏற்பட்டது. ஒருகால், தான் நித்திரையில் ஆழ்ந்திருந்த காலத்தில், பட்டாபிராம பிள்ளை ஏதோ கருத்தோடு ஆள்களை விட்டுத் தன்னைத் தூக்கிக் கொண்டு போய் வேறொரு விடுதியில் படுக்க வைத்திருப்பாரோ என்ற நினைவுண்டாயிற்று. முதல் நாள் இரவில், தான் ஒரு சோபாவின் மேல் உட்கார்ந்திருந்தபடி தூங்கிப் போய்விட்டது அவனுக்கு நன்றாக நினைவிருந்தது. பட்டாபிராம பிள்ளை தன்னை வேறொரு விடுதியில் கொண்டு போய்ப் படுக்க வைக்கச் செய்திருந்தாலும், அப்படிப்பட்ட மகா அற்புதமான பஞ்சணை மீது படுக்க வைத்தது ஆச்சரியத்தை விளைவித்தது. அந்தப் பஞ்சணை ஒரு மகாராஜாவின் அந்தப்புரத்தில் இருக்கத் தக்க சிறப்பு வாய்ந்த மகா உன்னதமான பஞ்சணையாக இருந்ததன்றி, அந்த விடுதியில் செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளும், அங்கு காணப்பட்ட விலை உயர்ந்த அழகிய வஸ்துக்களும் பிரமிக்கத்தக்கவையாக இருந்தன. தான் முதல் நாள் படுத்திருந்தது, மனோன்மணியின் சயன அறை. ஆதலால், அவளது சயன

மாளிகையை விட அயிரம் மடங்கு சிரேஷ்டமான அறையில் அவர் தன்னைக் கொண்டு போய்ப் படுக்க வைத்ததன் முகாந்திரம் என்னவாக இருக்கும் என்று கந்தசாமி சிந்திக்கலானான். பட்டாபிராம பிள்ளை மனைவியற்ற விதுரர் ஆகையால், அவர் தனது அழகைக் கண்டு தன்மீது மோகங்கொண்டு, தன்னிடம் தனிமையில் வந்து தமது கருத்தை வெளியிடலாம் என்ற நினைவோடு அந்த மஞ்சத்தில் தன்னைப் படுக்கச் செய்திருப்பாரோ என்ற சந்தேகம் அவனது மனதில் உதித்தது ஆனாலும், அவர் அந்த இரவு முழுதும் தன்னிடம் வராதிருந்ததில் இருந்து, அந்தச் சந்தேகம் உண்மையாக இராதென்றே அவன் ஒருவாறு நிச்சயித்துக் கொண்டான். தனது நண்பனான கோபாலசாமி தாம் வேஷம் போட்டுக் கொண்டு வந்த வரலாற்றை ஒருவேளை வெளியிட்டிருப்பானோ என்றும், தான் கந்தசாமி என்று பட்டாபிராம பிள்ளை அறிந்து கொண்டமையால், தன்னை அவ்வளவு சிறப்பான அந்த இடத்தில் சயனிக்கச் செய்திருப்பாரோ என்றும் இன்னொரு சந்தேகம் கந்தசாமியினது மனதில் தோன்றியது. அவன் மேன்மேலும் சிந்தித்துப் பார்க்கப் பார்க்க, அந்த சந்தேகமே உண்மையாக இருக்க வேண்டும் என்று அவன் ஊர்ஜிதம் செய்து கொண்டவனாய் எழுந்து, அந்த விடுதியில் அங்கும் இங்கும் உலாவத் தொடங்கினான். அவனது மனதில் பலவிதமான எண்ணங்கள் எழுந்து வதைக்கலாயின. தான் கந்தசாமி என்பதைப் பட்டாபிராம பிள்ளை தெரிந்து கொண்டதால், தான் போலீசார் முதலிய அன்னியருக்குச் சமாதானம் கூறவேண்டிய நிலைமையில் இருந்து தப்பியது, மனதிற்கு ஒருவித ஆறுதலைக் கொடுத்தது ஆனாலும், பட்டாபிராம பிள்ளையின் முகத்தில் தான் எப்படி விழிப்பது என்ற கவலையும் மனக்கிலேசமும் தோன்றி அவனை வதைக்கலாயின. தான் ஆண் மகனாய் இருந்தும் பெண் உடை தரித்து வெட்கம் இன்றி வெளியில் வந்து பெண்ணைப் போல நடந்தது, தனது கண்ணியத்திற்கு நிரம்பவும் குறைவான செய்கையாதலால், அவரைக் கண்டு அவரிடம் தான் எப்படி வார்த்தையாடுவது என்ற யோசனையே பெரிதாக எழுந்து மனதைப் புண்படுத்தலாயிற்று. அது நிற்க, முதல் நாளை பகலில்,

மனோன்மணியோடு சம்பாஷித்த காலத்தில் அவளது நடையுடை பாவனைகளைப் பற்றி நேருக்கு நேர் அவளைத் தூஷித்ததன்றி இங்கிலீஷ்காரருடைய நாகரிகத்தைப் பின்பற்றி நடக்கும் அந்தப் பெண்ணைக் கந்தசாமியும் அவனது வீட்டாரும் விரும்பமாட்டார்கள் என்று கூறி, அவளது மனதைப் புண்படுத்தினான் ஆதலால், அவள் பட்டாபி ராம பிள்ளையினிடத்தில் அந்த சம்பாஷணையின் விவரம் முழுதையும் வெளியிட்டிருக்கலாம் என்று நினைத்தான். அவள் அந்த வரலாற்றை வெளியிட்டு இருப்பின் பட்டாபிராம பிள்ளை தன்னையும் அவமரியாதைப்படுத்தி அனுப்ப நினைத்தாலும் நினைப்பார் என்ற கவலையும் தோன்றி வருத்தியது ஆனாலும், அவர் தன்னை அத்தகைய உன்னதமான சயனத்தில் படுக்க வைத்திருந்ததில் இருந்து, அவர் தன்னை அவ்வளவாக அவமானப்படுத்த எண்ணவில்லையோ என்ற சந்தேகமும் உண்டாயிற்று.

அவ்வாறு அவன் பலவித எண்ணங்களில் ஆழ்ந்தவனாய்த் தான் இருந்த விடுதி முழுதிலும் சென்று அதன் அமைப்பை ஆராய்ச்சி செய்து பார்க்கத் தொடங்கினான். அந்த விடுதி ஒரு மகாராணியின் அந்தப்புரம் போல சகலமான அலங்காரங்களும் நிறைந்து மனோகரமாகவும் வசீகரமாகவும் இருந்தது ஆனாலும், அதிக விஸ்தாரமாக இராமல் சிறியதாக இருந்தது. அந்த விடுதி "ட" என்ற எழுத்தைப் போல அமைக்கப்பட்டிருந்தமையால், அவன் பஞ்சணை இருந்த பாகத்தைவிட்டு, முடக்கில் திரும்பி அப்பால் இருந்த பாகம் எப்படி இருக்கிறதென்று பார்த்தான். அவ்விடத்தில் ஸ்நான அறை முதலிய சகலமான வசதிகளும் காணப்பட்டன. போஜனம் ஒன்று மாத்திரம் வந்துவிடுமானால், மனிதர் எத்தனை நாட்களுக்கு வேண்டுமானாலும் அந்த இடத்திலேயே யாதொரு குறைவும் இன்றி இருப்பதற்குத் தேவையான ஏற்பாடுகள் எல்லாம் அவ்விடத்தில் அமைந்திருக்கவே, அதைக் கண்ட கந்தசாமி அவ்விடத்திற்குப் போய்த் தனது காலைக் கடமைகளை முடித்துக் கொண்டு கட்டில் இருந்த இடத்திற்கு மறுபடியும் வந்து சேர்ந்தான். தண்ணீர்க் குழாய் முதலிய வசதிகள் இருந்த பாகத்தின் நாற்புறங்களிலும் உயரமான சுவர்கள் சூழ்ந்து

கொண்டிருந்தமையால், அவற்றிற்கு அப்பால் என்ன இருந்த தென்பதே தெரியாமல் இருந்தது. ஆனால் அவன் படுக்க வைக்கப்பட்டிருந்த பஞ்சணைக்குப் பக்கத்தில் சுவரின் மேல் பாகத்தில் ஒன்றரை ஆள் உயரத்தில் இரண்டு ஜன்னல்கள் காணப்பட்டன. அந்த ஜன்னல்கள் கட்டிலின் மட்டத்தில் வைக்கப்படாமல் அவ்வளவு உச்சியில் பொருத்தப்பட்டிருந்தது அவனுக்கு ஆச்சரியமாகத் தோன்றியது. அவ்வளவு அழகாகவும் நாகரிகமாகவும் கட்டப்பட்டிருந்த அந்த சிரேஷ்டமான மாளிகையில் ஜன்னல்கள் அம்மாதிரி அநாகரிகமாக வைக்கப் பட்டிருந்தது அவனுக்கு வியப்பாகத் தோன்றியது ஆனாலும், அந்தப் பஞ்சணையின் மேல் பாகத்தில் மின்சார விசிறி ஒன்று சுழன்று மனோரம்மியமான தென்றல் காற்றை எழுப்பிக் கொண்டிருந்தமையால், காற்றின் தேவையை அவன் அவ்வளவாக உணராமல் உற்சாகத்துடன் கட்டிலின் மேல் சிறிது நேரம் உட்கார்ந்திருந்தான். பொழுது நன்றாக விடிந்து சூரிய வெளிச்சமும் உட்புறத்தில் பளிச்சென்று வீசத் தொடங்கியது ஆகையால், அவ்வளவு நேரமாயும், தன்னிடம் யாரும் வரவில்லையே என்று அவன் வியப்புற்றவனாய் எழுந்து சிறிது தூரத்திற்கப்பால் இருந்த கதவைப் பிடித்து இழுத்தான். அது வெளிப்புரத்தில் தாளிடப்பட்டோ பூட்டப்பட்டோ இருந்ததாகத் தோன்றியது. அதைக் காண அவனது மனத்தில் பெருத்த சஞ்சலம் தோன்றி வதைக்கத் தொடங்கியது. தான் கந்தசாமி என்பதைப் பட்டாபிராம பிள்ளை தெரிந்து கொண்டிருந்தால், அவர் அவ்வாறு கதவை வெளியில் பத்திரப்படுத்தித் தன்னைச் சிறை வைத்திருப்பாரா என்ற சந்தேகமும் தோன்றியது. ஒருகால், கதவைத் திறந்து வைத்திருந்தால், தான் அவரது முகத்தில் விழிக்க வெட்கி, அவருக்குத் தெரியாதபடி வெளியில் போய்விட்டால், தன்னோடு பேச சந்தர்ப்பம் கிடைக்காமல் போய்விடும் என்ற நினைவினால் தூண்டப்பட்டு, அவர் அந்தக் கதவை அவ்வாறு பத்திரப்படுத்தி இருக்கலாம் என்ற யோசனையும் தோன்றியது. ஆகவே, அவன் அவ்விடத்தை விட்டு மறுபடியும் பஞ்சணையை அடைந்து அதன் மேல் முன்போல உட்கார்ந்து கொண்டான். அவனது மனத்தில் மனோன்மணியின் வடிவமும், அவளுடன்

சம்பாஷித்த சொற்களின் நினைவும் தோன்றித் தோன்றி மறைந்து கொண்டிருந்தன. ஸ்திரீ புருஷர் மணந்து இல்லறம் நடத்தும் புதிய அனுபவம் எப்படி இருக்கும் என்பதை அறியாத யௌவனப் பருவத்துச் சிறுவர் சிறுமியர், உலகத்தினர் புருஷர் பெண்ஜாதியாக இருந்து வாழ்வதைக் கண்டு, இன்னதென்று விவரிக்க முடியாத ஒருவித பிரமைகொண்டு, தாமும் மற்றவரைப் போல மணம் புரிந்து கொண்டு இன்பம் அனுபவிக்க வேண்டும் என்ற ஒரு பெருத்த ஆவலை மனதிற்குள் பெருக்கிக் கொண்டிருப்பது பெரும்பாலும் இயற்கை ஆகையால், அதற்கு விலக்காகாத நமது கந்தசாமியினது மனம் தாமரை இலையின் மேல் உள்ள நீர்த்துளி போலத் தத்தளித்துக் கொண்டிருந்தது. மனோன்மணியம்மாள் இயற்கையில் நற்குணமும் கூர்மையான புத்தியும், அழகும் உடையவளாக இருந்தாள் ஆனாலும், இங்கிலீஷ் கற்க வேண்டும் என்ற ஆசையினாலும், அதனால் ஏற்பட்ட மூளை உழைப்பி னாலும் பலவீனம் அடைந்து, நடை நொடி பாவனைகளிலும் வெள்ளைக்காரரைப் பின்பற்றி இந்தியர்களின் மனப்போக்குக்கு மாறான செய்கைகளையும் கொள்கைகளையும் கூசாமல் வெளிப் படுத்தியதைக் கண்டும், இந்திய ஸ்திரீகள் இழுக்கென்று மதிக்கும் பற்பல குற்றம் குறைபாடுகள் அவளிடம் இருக்கின்றன என்பதை நேருக்கு நேர் உணர்ந்தும், கந்தசாமி அவளது விஷயத்தில் ஒருவிதமான மன இளக்கமும் தயாளமான அபிப்பிராயமும் கொள்ளத் தொடங்கி, அடியில் வருமாறு தனக்குள் எண்ணமிட லானான். "ஆகா! இந்த இங்கிலீஷ் படிப்பு நம்முடைய தேசத்தில் எப்படிப்பட்ட அநர்த்தத்தை விளைவித்துவிட்டது! அடாடா! இந்தப் படிப்பு நம்முடைய ஆண் பிள்ளைகளை எல்லாம் கெடுத்ததோடு நிற்காமல் பெண்மக்களையும் சீர்குலைக்க ஆரம்பித்து விட்டதே! நம்முடைய பெண்பிள்ளைகள் கற்றுக் கொள்வதற்கு இங்கிலீஷ் பாஷையில் துன்மார்க்கங்களையும் துர் ஆசாரங்களையும் தவிர வேறு என்ன இருக்கிறது! ஆண் பிள்ளைகள் வயிற்றுப் பிழைப்புக்காக அந்தப் பாஷையைக் கட்டிக் கொண்டு அழும்படி கடவுள் விதித்து விட்டார். அந்த பாஷை நம்மை ஆளும் இராஜாங்கத்தாருடைய பாஷை ஆகையால், அதைக் கற்பவருக்குப் பெரிய பெரிய உத்தியோகங்

களும் ஏராளமாக திரவியமும் சம்பாதிக்கத் தக்க ஜீவனோபாயங் களும் ஏற்படுகின்றன. ஆதலால், நம்மவரில் பெரும்பாலோர் அந்த பாஷைக்கே அடிமையாய், நமது சுயபாஷையில் மத சம்பந்தமாகவும் ஆசார ஒழுக்க சம்பந்தமாகவும் எழுதப்பட்டுள்ள தெய்விகமான நூல்களை எல்லாம் குப்பையென மதித்துத் தள்ளி, முற்றிலும் இம்மை சம்பந்தமாகவே எழுதப்பட்டுள்ள இங்கிலீஷ் புஸ்தகங்களைப் படித்து, நாஸ்திகர்களாய் மாறி, ஏராளமாகப் பணந்தேடி இம்மையின் சுகத்தை அபிவிருத்தி செய்வதையே புருஷார்த்தமாக மதித்து, மறுமையை நினையாது, கடவுளைப் பற்றிச் சிந்தியாது கண்டது காட்சி கொண்டது கோலமாகத் திரியும் மிருகங்களின் நிலைமையை அடைந்து கெட்டுப் போகிறார்களே! சகலமான விஷயங்களிலும் தெய்விகத் தன்மை அடைந்துள்ள நமது தேசம் இப்படித்தானா நாசமடைய வேண்டும்! இராஜாங்க சம்பந்தமாகவும், யந்திரசக்திகள் சம்பந்தமாகவும் பிற தேசத்தார் எழுதியுள்ள நூல்களைப் படித்து அவர்களுக்குச் சமமாக நாமும் ஆக வேண்டியதும், நம்முடைய தேசத்தில் நாம் உத்தியோகம் வகிப்பதும் அவசியமான விஷயங்களானாலும், நம்முடைய ஆசார ஒழுக்கங்கள், மதக் கொள்கைகள் முதலியவற்றிலாவது நாம் நமது முன்னோர்கள் எழுதி வைத்துள்ள நூல்களைக் கற்று அவற்றின்படி நடந்து கொள்ளக் கூடாதா? மனிதனுடைய ஆசை களையும் சுகங்களையும் பெருக்கப் பெருக்க, அவனுடைய துன்பங்களும், மன வேதனையும் ஒன்றுக்குப் பத்தாகப் பெருகிக் கொண்டே போகும் என்பதையும், அவன் தனது ஆசைகளையும் தேவைகளையும் எவ்வளவுக்கு எவ்வளவு சுருக்கிக் கொள்கிறானோ, அவ்வளவுக்கு அவ்வளவு அவன் மன நிம்மதி அடைந்து, தான் பூமியில் சிருஷ்டிக்கப்பட்டிருப்பதன் காரணம் என்ன என்பதை அவன் சிந்தித்துப் பார்க்கவும் நிரம்ப அவகாசம் உடையவனாக இருப்பான் என்பதையும் நம்மவர் எத்தனையோ நூல்களில் எழுதி வைத்து இருக்கிறார்களே! அதை எல்லாம், இங்கிலீஷ் படித்த நம்மவர் கனவிலும் எண்ணுகிறார்களா! தாம் இங்கிலீஷ் படித்து நம்முடைய தேசத்தின் அக்ஞான இருளில் இருந்து விலகி மேதாவியாய் உத்தியோகம் வகித்துத் தேடும் பொருளைக் கொண்டு திருப்தி அடையாமல், நமது பெண்

மக்களும் இங்கிலீஷ் படித்து அதே துறையில் செல்ல வேண்டும் என்று நினைத்து அவர்களையும் கெடுக்க முயல்கிறார்களே! அந்தோ! என்ன கொடுமை இது! வெள்ளைக்காரர்கள் நம்மை ஆள்வதால், நமக்கு முக்கியமான சில விஷயங்களில் நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன என்பது உண்மை ஆனாலும், அவர்களது சம்பந்தத்தாலும், அவர்களது பாஷையைக் கற்பதாலும், ஏற்பட்டிருக்கும் தீமைகள் அநந்தமாகவும் விபரீதமாகவும் இருக்கின்றனவே! மனிதன் நற்குண நல்லொழுக்கங்களைக் கற்கவும், கடவுளின் பெருமை, குணாதிசயங்கள், உலக சிருஷ்டியின் அந்தரங்கள், மனிதனுக்கும் அவைகளுக்கும் உள்ள சம்பந்தம் முதலியவற்றைச் சரியானபடி உணர்ந்து தன்னுடைய தர்மத்தை ஒழுங்காக நடத்தவும், உலக விவகாரங்களை நன்றாகத் தெரிந்து கொண்டு தனது புத்தியை விசாலிக்கச் செய்து, அதை நல்லவழியில் சூட்சுமமாக உபயோகித்து உலகத் துன்பங்களை விலக்கி இன்பங்களைப் பெருக்கித் தன்னால் இயன்றவரையில் பிறருக்கு உபகாரம் செய்து சந்துஷ்டியாக இல்லறம் நடத்தவும் முக்கியமான சாதனமாக அமைந்ததே கல்வி என்ற அரிய பொருள். கல்வி என்பது அதைக் கற்பவனுக்கு நன்மை ஒன்றையே செய்யத் தக்கதாய் இருக்க வேண்டுமன்றி, தீமை செய்வதாய் இருப்பதே கூடாது. மனிதன் கல்வி கற்பதால், அவனுக்காவது, பிறருக்காவது தீமை உண்டாகுமானால், அப்படிப்பட்ட கல்வி மனிதனால் மதிக்கப்படுவதற்கே அருகமற்றது. அப்படிப்பட்ட கல்விக்காக மனிதன் தனது ஆயுசையும் பணத்தையும் செலவழிப்பதே சிறிதும் பொருந்தாத காரியம். இங்கிலீஷ்காரரால் ஏற்படுத்தப்பட்டுள்ள கல்வியும், அவர்களுடைய புஸ்தகங்களில் காணப்படும் விஷயங்களும் லௌகீக விவகார ஞானங்களை மாத்திரம் பிரதானமாகப் போதிப் பவைகளாய் இருக்கின்றனவே அன்றி, கடவுள், மறுமை முதலியவைகளைப் பற்றிய ஆராய்ச்சிகளே இல்லாத மனிதன் நல்ல யூகஸ்தனாகவும், புத்திசாலியாகவும், அதிக பணம் சம்பாதிக்கக் கூடியவனாகவும், வாக்கு வன்மையோடு பேசுகிற வனாகவும், அல்லது, திறமையாக எழுதுகிறவனாகவும், சாமர்த்தியமாக உலக விவகாரங்களை நடத்துகிறவனாகவும்

ஆவதற்கு அனுகூலமாகவே அவர்களுடைய கல்வி அமைந்திருக்கிறது. மனிதர் வெளிப்பார்வைக்கு நாகரிகம் வாய்ந்தவன் போலத் தோன்றிப் பிறரிடம் மரியாதையாக நடந்து கொள்ள வேண்டும் என்பதையே அந்த நூல்களைப் படிப்போர் தெரிந்து கொள்கிறார்களே அன்றி, மனிதர் திரிகரண சுத்தியாய்ப் பரிசுத்தமான நடத்தை உடையவராய் நடந்து கொள்ள வேண்டும் என்பதையாவது, இன்னும் மனிதர் ஒவ்வொரு நிலைமையிலும் இன்னின்ன தர்மங்களைக் கடைப்பிடித்து ஒழுக வேண்டும் என்பதையாவது அவர்களுடைய கல்வி குறிப்பாகவும் முதன்மையாகவும் போதிக்கிறதில்லை. அவர்களுடைய நற்குண நல்லொழுக்கம் வெளிப்பகட்டும், லௌகீக தந்திரமானதுமேயன்றி, உள்ளும் புறமும் ஒத்த தூய்மையை உள்ளடக்கியதல்ல. இப்படி அவர்களுடைய கல்வியும், கொள்கைகளும், நம்முடைய கல்விக்கும், கொள்கைகளுக்கும் மாறாக இருப்பதற்கு அவர்களுடைய வேதாந்த தத்துவமும், நம்முடைய வேதாந்த தத்துவமும் நேர்விரோதமாக இருப்பதே அடிப்படையான காரணம். இந்த உலகமும், இதன் செல்வமும், சுகங்களும் அநித்தியமானவை என்றும் நீடித்து நிற்கக்கூடியவை அல்ல என்றும், மனிதன் நிரந்தரமாக நாடக்கூடிய பேரின்பம் வேறே இடத்தில் இருக்கிறது என்றும் நாம் உறுதியாக எண்ணுகிறோம். இந்த உலகத்தில் நாம் நற்குண நல்லொழுக்கத்தோடு நடந்து, பஞ்சேந்திரியங்களின் மோகங்களை அடக்கி, ஆசாபாசங்களை எல்லாம் குறைத்து, இந்த உலக சிருஷ்டி முழுதும் கடவுளின் சாயல் என்றும், ஒன்றுக்கொன்று சம்பந்தம் உடையது என்றும் நினைத்து, தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்ந்து, தனது தாயைப் பிரிந்த ஒரு குழந்தை அவளை எப்போது அடைவோம் என்று கதறி அழுது எப்படி ஆவலே வடிவாக இருக்குமோ, அதுபோல நாம் கடவுளை எப்போது அடைவோம் என்ற ஆவல் தீயினால் தகிக்கப்பட்டு, நமது ஆசாபாசங்களை எல்லாம் கடவுளின் மீது திருப்பி ஒருமுகப்படுத்தி, அதே சிந்தனையாக இருக்க வேண்டும் என்பது நம்முடைய கொள்கை. அதற்கு அனுகூலமாக இம்மையில் நாம் திரிகரண சுத்தியாக சன்மார்க்கத்தில் நடந்து புண்ணியச் செய்கைகளைப் புரிய வேண்டும் என்பதும்

நமது கொள்கை. சுருங்கச் சொல்லும் இடத்து, நாம் அழிந்து போகக்கூடிய இம்மையை நாடாது நிரந்தரமான மறுமையை நாடுகிறவர்கள். வெள்ளைக்காரர்களோ இம்மையின் சுகத்தையும் மேம்பாட்டையும் விட சிரேஷ்டமான பதவி ஒன்று இருக்கிறது என்பதையே உணராதவர்கள். மோக்ஷ லோகத்தில் கடவுள் ஒருவர் இருக்கிறார் என்றும், அவர் சர்வ ஜனங்களுக்கும் பிதாவென்றும், மனிதர் ஒருவருக்கொருவர் சகோதரர் போன்றவர்கள் என்றும், கடவுள் எல்லோரையும் காப்பாற்றுகிறார் என்றும் வெள்ளைக்காரர்களும் சொல்லிக் கொள்ளுகிறார்கள். ஆனாலும், மனிதர் இந்த உலகத்தில் உள்ள சகலமான தந்திரங்களை எல்லாம் தெரிந்து கொண்டு, இதன் செல்வங்களை யும் சுகங்களையும் தாம் எவ்வளவு அதிகமாகப் பெருக்கிக் கொள்ள முடியுமோ அவ்வளவையும் சாதித்துக் கொண்டு, இரவு பகல் இதே நாட்டமாக இருந்து சந்தோஷமாயும் க்ஷேமமாகவும் அமோகமான செல்வத்தோடும் இம்மைச் சுகத்தைப் பூர்த்தியாக அனுபவிக்க வேண்டும் என்பதும், கூடுமானால், ஒவ்வொரு வெள்ளைக்காரனும் ஒவ்வொரு ராஜ்யம் சம்பாதித்துக் கொண்டு அதற்குச் சக்கரவர்த்தியாக இருக்க வேண்டும் என்பதையுமே அவர்கள் மோக்ஷத்தைவிட மேலான பதவியாகக் கருதுகிறார்கள். அவர்களுடைய ஆசைகளை எல்லாம் பூர்த்தி செய்து கடவுள் ஆசீர்வதித்து எப்போதும் அவர்களுடைய இம்மைச் சுகமும் மேம்பாடும் நீடித்திருக்கும்படி செய்து கொண்டு மோக்ஷ லோகத்தில் இருக்கிறார் என்பதைத் தவிர, அவர்களுக்கும், மோக்ஷலோகத்திற்கும் வேறு எவ்வித சம்பந்தமும் இல்லை என்று அவர்கள் எண்ணுவதாகத் தோன்றுகிறது. இப்படிப்பட்ட அவர்களுடைய வேதாந்த தத்துவமும் கொள்கைகளும் பூர்த்தியாவதற்கு அனுகூலமாக அவர்கள் பற்பல யந்திர தந்திர விவகார சாஸ்திரங்களையும் லௌகீகமான இலக்கிய நூல்களையும் உற்பத்தி செய்திருக்கிறார்கள். நம்மவர்கள் உலகப்பற்றை விலக்கி, ஏழ்மையையும், மனத் திருப்தியையும் ஒப்பற்ற திரவியமாகக் கொண்டு, தான் என்பதை மறந்து, கடவுளின் சிருஷ்டியில் இரண்டறக் கலந்து, அவரை அடைய வேண்டும் என்ற பக்திப் பெருக்காகிய அமிர்த ஊற்றைச் சொரிந்து, பரிசுத்த மூர்த்திகளாய்

விளங்கும் மகாத்மா காந்தியைப் போல ஆக வேண்டும் என்பதையே புருஷார்த்தமாகக் கொண்டவர்கள். வெள்ளைக் காரர்களோ உலகத்தில் உள்ள செல்வத்தையும், பூமியின் கீழுள்ள வைரம், தங்கம், முதலிய நவரத்னங்களையும், மருந்துக்கற்கள், மண்கள், எண்ணெய்கள் முதலிய பொருட்களையும், கடலிலுள்ள மீன்கள், முத்துக்கள், பவழங்கள் முதலிய அரிய பொருட் களையும், ஆகாயத்தில் உள்ள மின்சாரம் முதலிய அரியபெரிய சக்திகளையும், காட்டில் உள்ள மரங்களையும், விலங்குகளையும், மலையில் உள்ள கற்களையும், வானத்தில் உள்ள நட்சத்திரங்களையும், நிலம், நீர், ஆகாயம் ஆகிய எல்லாவற்றிலும் செல்லும் உரிமையையும், இன்னும் இவ்வுலகத்தில் உள்ள இது போன்ற அநந்தமான சம்பத்தையும் அடைந்து, தாமும், தமது சந்ததியாரும் என்றும் சிரஞ்சீவியாக இருந்து ஆண்டு அனுபவித்துக் கொண்டு, **ராக்பெல்லர்** முதலியவர்களைப் போல குபேரசம்பத்துடையவராய் இருப்பதே அவர்கள் புருஷார்த்தமாகக் கொண்டவர்கள். அவர்கள் இப்போது இந்த பூலோகம் முழுதையும் கைப்பற்றி அவற்றை உருண்டை யாகச் செய்து ஒரு காகிதத்தில் எழுதித் தங்களுடைய சட்டைப் பைக்குள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். நினைத்துக் கொண்டால், அவர்கள், புறக்கடைக்குப் போவதுபோல, உலகத் தின் இன்னொரு புறத்துக்குப் போய் விடுகிறார்கள்; ஆயிரக் கணக்கான மைல் தூரத்தில் இருக்கும் தேசங்களை அடக்கி சுயேச்சையாக அடக்கி ஆண்டு வருகிறார்கள். இது போதா தென்று, அவர்கள் இன்னும் ஆகாயத்தில் உள்ள நவக்கிரகங்களை எல்லாம் தூர திருஷ்டிக் கண்ணாடியால் பார்த்து, அங்கே மனிதர்களும், தரிசு நிலங்களும், மலைப்பிரதேசங்களும் இருப்பது தெரிவதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய ஆகாய விமானங்கள் இன்னும் அதிக திறமை யாக மேலே பறந்து போகும் காலத்தை அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். யாராவது ஓர் **இஞ்சிநீர்** தோன்றி, புதிய மாதிரியான ஆகாய விமானம் ஒன்று கண்டு பிடித்து விட்டால், அவர்கள் அதன் மூலமாகப் பறந்து போய் நவக்கிரகங்களை அடைந்து அங்கே உள்ள அநாகரிகர்களான சுதேசிகளை அப்புறப்படுத்தி விட்டு,

அங்கேயும் தமது ராஜ்யத்தை நிலை நாட்டுவார்கள் என்பது நிச்சயம். மனிதன் தனக்கு ஏற்பட்டுள்ள நிலைமையோடும், தனக்குக் கிடைக்கும் செல்வம், சுகம் முதலிய வற்றோடும் திருப்தி அடைந்து சந்தோஷமாக வாழ வேண்டும் என்ற கொள்கைக்கும் வெள்ளைக்காரர்களுக்கும் வெகு தூரம்.

"தம்மினும் மிக்காரை நோக்கித் தமதுடைமை, அம்மா! பெரிதென்று அகமகிழ" வேண்டும் என்ற கொள்கையை நாம் கடைப்பிடித்து, அடக்கம், பணிவு, சாந்தம், மனத்திருப்தி முதலிய அரிய குணங்களை அப்பியசிப்பவர்கள். வெள்ளைக்காரர்களோ,

*"மின்னனைய பொய்யுடலை நிலையென்றும், மை இலகு*
*விழிகொண்டு மயல் மூட்டும்*
*மன்னார்கள் இன்பமே மெய்யென்றும், வளர் மாட*
*மேல்வீடு சொர்க்க மென்றும்,*
*பொன்னை அழியாது வளர்பொருளென்றும் போற்றி இப்*
*பொய் வேஷம் மிகுதி காட்டிப்*
*பொறை, அறிவு, துறவு, ஈதல் ஆதி நற்குணமெலாம்*
*போக்கிலே போக விட்டு,"*

இம்மை வாழ்க்கையிலேயே தமது முழுமனதையும் ஆயுளையும் செலுத்தும் குணமுடையவர்கள். நம்மவர்களோ இம்மைச்சுகத்தை நாடுகிறவர்களாக இருந்தாலும், சிறிது காலத்தில் அதனிடத்தில் விரக்தியும், வெறுப்பும் அடைந்து,

*"தந்தை தாய் தமர் தாரம் மகவு எனும் இவையெலாம்*
*சந்தையில் கூட்டம்; இதிலோ*
*சந்தேகமில்லை; மணிமாட மாளிகை மேடை*
*சதுரங்க சேனையுடனே*
*வந்ததோர் வாழ்வும் ஓர் இந்திரஜாலக் கோலம்;*
*வஞ்சனை பொறாமை லோபம்*
*வைத்த மனமாம் கிருமி சேர்ந்த மலபாண்டமோ*
*வஞ்சனையிலாத கனவே."*

என்ற உண்மையை சதாகாலமும் மனதில் வைத்து,

*"இப்பிறவி என்னும் ஓர் இருள்கடலில் மூழ்கி, "நான்"*
*என்னும் ஒரு மகர வாய்ப்பாட்டு*
*இருவினை யெனும் திரையில் எற்றுண்டு புற்புத*
*மெனக் கொங்கை வரிசை காட்டும்*
*துப்பிதழ் மடந்தையர் மயற் சண்டமாருதச்*
*சுழல்வந்து வந்தடிப்பச்*
*சேராத ஆசையாம் கான் ஆறு வான் நதி*
*சுரந்த தென மேலும் ஆர்ப்பக்*
*கைப்பரிசு காரர்போல் அறிவான வங்கமும்*
*கைவிட்டு மதிமயங்கிக்*
*கள்ளவங்கக் காலர் வருவரென்றஞ்சியே*
*கண்ணருவி காட்டுமெளியேன்*
*செப்பரிய முத்தியாங் கரை சேரவுங் கருணை*
*செய்வையோ! ஸத்தாகி என்*
*சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே!*
*தேஜோ மயாநந்தமே"*

என்று மறுமைப் பேரின்பத்தைத் தேடுகிறவர்கள். இத்தகைய மனப்பான்மையுடைய நம்மவர் நமது நூல்களைப் படித்து உலக வாழ்க்கையின் உண்மையான யோக்கியதை இவ்வளவுதான் என்று கண்டு, மெய்யறிவு பெற்று, ஆசையே துக்கம், நிராசையே சுகம் என்ற உண்மையை அனுபவத்தில் கடைப்பிடித்து வருவதைக் கெடுத்து, இங்கிலீஷ்காரர் தமது கொள்கைகளையும் மனப்போக்கையும் தமது கல்வியின் மூலமாக நம்மவர் மனத்தில் தொற்றவைத்து, நம்மை எப்படிப்பட்ட துன்பங்களில் ஆழ்த்து கின்றனர்! ஆண்மக்கள் தான் இப்படிப்பட்ட விலக்க முடியாத பெருத்த தொற்றுவியாதியில் அகப்பட்டுக்கொண்டு விடுபட வழி இன்றித் தவிக்கிறார்கள் என்றால், நம்முடைய ஸ்திரீகளும் அவர் களுடைய கல்வியைக் கற்று வெகு சீக்கிரத்தில் அதே நிலைமைக்கு வந்துவிடுகிறார்கள் போலத் தோன்றுகிறதே! ஆண்பிள்ளைகள் உலக விவகாரங்களைக் கற்று வீட்டைவிட்டு வெளியேறி ஏதாகிலும் ஒரு ஜீவனோபாயத்தை நாடிப் பொருள் தேடித் தமது குடும்பத்தை சவரக்ஷிப்பது இயற்கையே! ஸ்திரீகளும் வெளியேறி ஆண்பிள்ளைகளோடு இரண்டறக்

கலந்து, ஜீவனோபாயப் போரில் ஈடுபட்டு உழல்வதென்றால், அதைக் காட்டிலும் வெட்கக் கேடான செய்கை வேறு உண்டா? அவ்வாறு தமது பெண்டீரையும் பொருள்தேட அனுப்பும் புருஷரை நாம் என்ன வென்று சொல்வது! ஸ்திரீகள் இயற்கையிலேயே புருஷரைக் காட்டிலும் மிக்க மிருதுத்தன்மை உடைவர்களாய் இருப்பதில் இருந்தே, இருவரும் வெவ்வேறு வேலைகளைச் செய்வதற்காக இருவிதமாக அமைக்கப் பட்டிருக்கின்றனர் என்பது பிரத்தியக்ஷமாகத் தெரிகிறதல்லவா? மனிதர் இல்லறம் நடத்துவதில் பொருள் தேடுவதொன்றுதான் முக்கியமான காரியமா? ஆண்பிள்ளைகள் திறமையோடு பொருள் தேடுவதற்கு அவர்களது தேகம், பசி, நோய், முதலிய இடையூறுகள் இன்றி ஆரோக்கியமான நிலைமையில் இருப்பது அத்தியாவசியமான முதல் காரியம் அல்லவா? அது போலவே அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் செழுமையாகவும் ஆரோக்கியமாகவும் வளர்ந்து பிற்காலத்தில் தமது தந்தையாரது பொறுப்பை ஏற்றுக் கொள்வது அவசியமான காரியமல்லவா? சுவரை வைத்துக் கொண்டு தானே சித்திரம் எழுத வேண்டும்? மனிதர் தமது உடம்பை போஷிப்பதற்காகத்தானே திரைக் கடலோடியும் திரவியம் தேடுகிறார்கள். அப்படித் தேடும் பணத்தை ஆகாரமாகவும், சுக சௌகரியங்களாகவும் மாற்றி உதவுதற்கு ஒருவர் வேண்டாமா? ஆண்மக்கள் பணம் தேடுவது துணைக்கருவியேயன்றி, ஆகாரம் முதலியன தயாரித்து ஊட்டுவது முதல் கருவியல்லவா? அப்படிப்பட்ட ஜீவாதாரமான பொறுப்பை நம்முடைய ஸ்திரீகள் ஏற்று நடத்திவருவதற்கு இழுக்கென்றால், அதைவிட மடமையான எண்ணம் வேறு என்ன இருக்கிறது? வீட்டில் நிழலில் இருந்து தனது பர்த்தா, தனது அருமைக் குழந்தைகள் ஆகிய தனது அரிய பந்துக்களுடைய தேக போஷணைக்குரிய காரியங்களைச் செய்து அன்பாகிய தேவாமிருதத்தால் அவர்களை இன்புறுத்தி, அவரவர் தத்தம் கடமைகளை இடையூறின்றி நடத்தும்படி செய்வது இழிவான செய்கையா? அதைவிட்டு, அவள் தனது புருஷருக்கும், குழந்தைகளுக்கும் தேக ஆரோக்கியம் கெடும்படி விட்டு, வெளியில் சென்று பல துறைகளில் ஓடியாடி உழன்று

அன்னிய புருஷருக்கு அடிமையாய்ப் பொருள் தேடிவருவது இழுக்கல்லவா? இங்கிலீஷ் கற்று வெளியில் சென்று அன்னிய புருஷர்களோடு ஊடாடிப் பொருள் தேடும் ஸ்திரீகளையும் எடுத்துக் கொள்வோம். வீட்டிற்குள் இருந்து வீட்டுக் காரியங் களைச் செய்து புருஷருக்கு அடங்கி இருக்கும் ஸ்திரீகளையும் எடுத்துக் கொள்வோம். பெண்பாலாருடைய கற்பின் உறுதி கெடுவதற்கு இந்த இரண்டு நிலைமையில் எது அனுகூலமானதாக இருக்கிறதென்பது தானாகவே விளங்கிவிடும். ஆண்மக்களோ மூர்க்கமான ஆசாபாசங்களை உடையவர்கள். ஸ்திரீகளோ மெல்லிய தன்மை உடையவர்கள். காம விகாரம் என்பதோ கட்டில் அடங்காதது. ஸ்திரீகளுடைய கற்பிற்கு பங்கம் ஏற்படும் பட்சத்தில் உலகம் கலகத்திற்கே இருப்பிடமாய், மனிதர் ஒருவருக்கொருவர் கொலை செய்து மடிந்து போவது நிச்சயம் ஆதலால், உலகில் ஒழுங்காகவும், சச்சரவின்றியும் நடைபெறுவதற்கு, ஸ்திரீ புருஷர் ஒருவரை ஒருவர் நேரான வழியில் மணந்து கொண்டு வரம்பை மீறாமல் நடப்பதும், ஸ்திரீகள் தமது கற்பைக் காப்பாற்றிக் கொள்ளுவதும் அத்தியாவசியமான விஷயங்கள். அப்படி ஸ்திரீகள் தம்முடைய கற்பைக் காப்பாற்றிக் கொள்வதற்கு அவர்களது புருஷர்களும் அவர்களுக்கு உதவி புரிவது நிரம்பவும் முக்கியமான காரியம். அவர்கள் ஜீவனோபாயத்தைத் தேடி வெளியில் சென்று அன்னிய புருஷருக்கிடையில் உழன்று பலவிதக் கவர்ச்சி களுக்கும் வஞ்சகங்களுக்கும் இலக்காகாமல் அவர்களை வீட்டிலேயே வைத்து அவர்களைப் பாதுகாப்பது ஆண்மக்களின் கடமை அல்லவா? நமது ஸ்திரீகளுக்கு வெளி உலகத்து விவரங்கள் எல்லாம் தெரியாமல் போனால், அதனால் பெரிய தீங்கு ஏதாவது நேர்ந்து விடுமா? ஆழ்ந்து யோசித்துப் பார்க்கப் போனால், நாம் வெளி உலகத்து விஷயங்களை எல்லாம் நமது ஸ்திரீகளின் மனதில் புகுத்தி, அவர்களைத் துன்புறுத்தாது இருப்போமானால், அவர்கள் தங்களுடைய காரியங்களை அதிக திறமையோடும் நடத்துவார்கள் என்பது நிச்சயம். இங்கிலீஷ் காரரும் அவர்க ளுடைய ஸ்திரீகளும் இங்கிலீஷ் கற்காத நம்முடைய பெண்மக்கள் அடிமை நிலைமையில் இருப்பதாகவும்,

இவர்கள் பிள்ளை பெறுவதற்கும் சமையல் செய்வதற்கும் உபயோகப்படும் உயிரற்ற யந்திரங்கள் என்றும் சொல்லி இழிவாகக் கூறுகின்றார்கள். அவர்கள் அவ்வாறு கூறுவது அறியாமையே அன்றி வேறல்ல. அவர்களுடைய ஸ்திரீகளோ புஸ்தகங்களைப் படித்தும் உண்மையான அறிவைப் பெறாமல், உலக தந்திரங்களைக் கற்று, பணம் பணம் என்று பேயாய்ப் பறந்து, சதாகாலமும் பட்சிபோல இரை தேடித் திரிந்து கொண்டே இருப்பதையே அபாரமான பெருமையாக மதித்துப் பேசுகிறார் கள். குழந்தைகளைப் பெறுவதும், அவைகளை வளர்ப்பது, ஆகாரங்கள் தயாரித்துத் தமது குழந்தைகளையும் புருஷரையும் போஷித்துக் காப்பாற்று வதும் அவர்களுக்கு இழிவான செய்கையாகத் தோன்றுகிறது என்றால், அவர்களை நாம் மெல்லிய தன்மையுடைய ஸ்திரீகள் என்று கருதுவதை விட்டு, சேலைகட்டிய புருஷர்கள் என்றுதான் மதிக்க வேண்டும். அநேகமாய் நமது ஸ்திரீகள் ஒவ்வொருவரும் முதல்தரமான போஜனம் தயாரிக்கும் திறமையை இயற்கையி லேயே சம்பாதித்துக் கொள்வதோடு, குழந்தையைப் பெற்று வளர்ப்பதற்கான மருத்துவங்களையும் சிகிச்சைகளையும் கற்று வீட்டில் ஆகவேண்டிய பொறுப்புகள் யாவற்றையும் தாமே நிறைவேற்றும் ஆற்றலுடைய அபார சாமர்த்தியசாலிகளாக இருக்கின்றனர். வெள்ளைக்கார ஸ்திரீகளின் வீட்டிலோ அவர்களால் எந்தக் காரியமும் ஆகிறதில்லை. அவர்களுக்கு வேண்டிய ரொட்டி முதலிய ஆகாரங்கள் கடையில் இருந்தும், போஜன சாலைகளில் இருந்தும் வரவேண்டும். தலைவலி என்றாலும், பிள்ளைப் பேறென்றாலும், டாக்டர் வரவேண்டும். குழந்தைகளுக்குப் பால் ஊட்ட செவிலித்தாய் வேண்டும். உடைகள் தோய்க்க, வண்ணான் வேண்டும். உடுப்புகள் அணிந்து விடத் தாதி வேண்டும். அவர்களுடைய வீடுகளில் விருந்தாளிகள் வந்துவிட்டால், விருந்து ஹோட்டல்களில்தான் நடக்க வேண்டும். வெளியில் சென்று உத்தியோகம் பார்த்துப் பொருள் தேடிக்கொண்டு வரும் புருஷர்கள் வீட்டில் எந்தக் காரியமும் செய்யாமல் உதவி அற்றவராய் இருப்பது போல, இங்கிலீஷ்கார ஸ்திரீகளும் வீட்டில் உபயோகம் அற்றவராய்

உட்கார்ந்து கொண்டிருப்பதற்கே யோக்கியதை உடையவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்குப் பள்ளிக்கூடத்தில் கற்றுக் கொடுக்கப்படும் படிப்பு, தாமும் புருஷர்களுக்கு சமதையாக வெளியில் சென்று பொருள் தேடி வந்து சுயேச்சையாக நடந்து கொள்ள வேண்டும் என்ற மனப்பான்மையை உண்டாக்கும் படிப்பாக இருக்கிறதோடு புருஷருக்கு அடங்கி, வீட்டின் பொறுப்பை ஏற்று சகலமான காரியங்களையும் செய்ய வேண்டும் என்பதையே இழிவாகவும் கேவலத் தொழிலாகவும் மதிக்கத் தக்கதாக இருக்கிறது. ஸ்திரீகளும் புருஷரைப் போலக் கல்வி கற்று வெளியில் உத்தியோகம் பார்க்கப் போவதில், வீட்டில் ஒருவர் ஏற்றுச் செய்து வரும் பொறுப்பை ஒன்பது பேர் பங்கிட்டுக் கொள்ள நேருவதன்றி, குடும்ப ஒற்றுமை, குடும்ப வாஞ்சை, புருஷன் பெண்ஜாதி குழந்தைகள் முதலியோருடைய தேக போஷணை, தேக ஆரோக்கியம் முதலிய ஜீவாதாரமான அம்சங்கள் எல்லாம் நாஸ்தியாய்ப் போய்விடுகின்றன என்பது எளிதில் தெரியக்கூடிய விஷயம். உலகில் மிருகங்கள் பட்சிகள் பூச்சி புழுக்கள் மரம் செடிகொடிகள் முதலிய சகலமான சிருஷ்டியிலும் ஆண் பெண் சிருஷ்டிகள் இருக்கின்றன. நாம் அவைகளுள் எதைக் கவனித்துப் பார்த்தாலும், ஸ்திரீஜாதி நுட்ப மானதாகவும், புருஷஜாதி தாட்டியானதாகவும் இருக்கின்றன. ஸ்திரீஜாதி புருஷஜாதிக்கு அடங்கி இன்பங் கொடுப்பதாகவும், குழந்தைகளை வளர்ப்பதாகவும் இருக்கின்றன. புலி, கரடி முதலிய துஷ்ட விலங்குகளைக் கவனித்தாலும் சரி, பெண் விலங்குகளை இரை தேடவிடாமல் தமது இருப்பிடத்திலேயே விட்டு, ஆண் விலங்குகள் வெளியில் சென்று இரைதேடி வருகின்றன. அல்லது, ஆண் பெண் ஆகிய இரண்டும் வெளியில் சென்றாலும், ஆண் விலங்கே முன்னால் சென்று வேட்டையாடுகின்றது. பெண் விலங்கு பின்னால் நிற்கிறது. இதுவே இயற்கையான சிருஷ்டி நிலைமை. கடவுளின் சிருஷ்டியில் ஒவ்வொரு வேலையை ஒவ்வொரு வகுப்பினர் செய்ய வேண்டும் என்ற ஒரு முறைமையும் நியதியும் ஏற்பட்டிருக்கின்றன. முதலில் மனிதனுடைய உடம்பை எடுத்துக் கொள்வோம். அதில் கை ஒரு வேலையைச் செய்கிறது. நாம்

கண்ணால் வாசனை பிடிக்க முடியாது. மூக்கால் பார்க்க முடியாது. இப்படி ஒவ்வொன்றுக்கும் பிரத்தியேகமான ஒவ்வொரு சக்தியும் கடமையும் அமைந்திருக்கின்றன. எல்லாவற்றையும் எல்லாம் செய்ய முடியுமா? எல்லோரும் அரசனாக முடியுமா?

இந்த இயற்கைப் பாகுபாட்டைக் கண்டே நம்மவர் ஸ்திரீகளுக்கு வேலை ஏற்படுத்தி இருக்கிறார்கள். வெள்ளைக்காரர்களோ எல்லோரும் சமம் என்றும், எல்லோரும் எல்லா வேலைகளையும் செய்யலாம் என்றும் எண்ணிக் குடும்ப வாழ்க்கையைப் பாழாக்குகின்றார்கள். அவர்களுடைய நாட்டில் அவர்கள் இத்தகைய கெடுதல்களால் அனுபவிக்கும் சங்கடங்களை நன்றாக உணர்ந்து இருந்தும், தங்களது கொள்கைகளை நமது நாட்டிலும் பரப்பி நம்முடைய ஸ்திரீகளையும், நமது குடும்ப வாழ்க்கையையும் சீர்குலைக்க முயலுகிறார்கள். அவர்களுடைய நாட்டில் மனிதன் எத்தகைய இழிவான ஜீவனோபாயத்தைச் செய்தாலும், அவனுக்கு இழிவு கிடையாது என்று மதிக்கிறார்கள். மனிதன் எந்தத் தொழிலைச் செய்தாவது ஏராளமான பணத்தைத் தேடித் தக்க முதலாளி ஆய்விட்டால், அவன் எல்லோராலும் நன்கு மதிக்கப்படும் கண்ணியவானாகி விடலாம். சகலமான மனிதரிலும் கேவலமான தொழிலைச் செய்யும் ஒரு தோட்டி, ஆயிரக் கணக்கான ஆள்களைத் தனக்குக் கீழ் அமர்த்திக் கொண்டு அந்தத் தொழிலை நிரம்பவும் திறமையாகச் செய்து ஏராளமாகப் பொருள் சம்பாதித்துப் பணக்காரனாகி விடுவானாகில், அவன் பார்லிமெண்டு மெம்பராய், பிரதான மந்திரி வேலைக்கு வந்து, சுயேச்சையாக அந்தத் தேச இராஜாங்க நிர்வாகத்தை நடத்தலாம். மேலான குடும்பத்தைச் சேர்ந்த சீமான்களுடைய பெண்ணை அவன் கலியாணம் செய்து கொள்ளலாம். அவர்களுடைய தேசத்தில் பணம் ஒன்று இருந்தால், அதனாலேயே ஒருவன் உயர்ந்த ஜாதியான் ஆகிவிடலாம். அவன் செய்யும் தொழில் எவ்வளவு ஈனத்தொழிலாக இருந்தாலும், அது அவனைப் பாதிக்காது. அவனால் அந்த ஈனத் தொழிலுக்கே ஒரு பெரிய மதிப்பு ஏற்பட்டுவிடும். செருப்புத் தைக்கும் சக்கிலியன், துணி தோய்க்கும் வண்ணான், பிணங்களைக் கல்லறைகளுக்கு எடுத்துக் கொண்டு போகும்

தொழிலைக் குத்தகையாக ஏற்றுக்கொண்டு செய்கிறவர்கள் முதலிய எவருக்கும் இழிவென்பதே கிடையாது. அப்படிப்பட்ட கொள்கையை வைத்துள்ள இங்கிலீஷ்காரர்கள் நம்முடைய ஸ்திரீகள் தங்கள் தங்கள் புருஷர்கள், குழந்தைகள் முதலியோருடைய தேக போஷணைக்குரிய அலுவல்களை வகித்துப் பார்ப்பதை ஏளனமான காரியமாய் மதித்து ஏன் தூற்றுகி றார்களோ தெரியவில்லை. எல்லோரும் தம்மால் இயன்ற வரையில் பணம் தேட வேண்டும் என்பது அவர்களுடைய முக்கியமான நோக்கம் அல்லவா? சக்கிலியன், வண்ணான் முதலியோர் ஏராளமாக பணம் சம்பாதிக்கிறார்கள் ஆகையால், அவர்களுடைய தொழில் இழிவானதல்ல. நம்முடைய ஸ்திரீகள் வீட்டில் இருந்து சமையல் செய்து சாப்பாடு போட்டுக் கொண்டிருப்பதில், அவர்களுக்கு யாதொரு வரும்படியும் இல்லையல்லவா? அதனால் அவர்கள் செய்யும் தொழிலை இழிவான தொழில் என்று கருதுகிறார்கள் போலும்! நம்முடைய ஸ்திரீகளுள் இங்கிலீஷ் படித்து உத்தியோகம் வகித்து மாசம் நூறு, இரு நூறு சம்பாதித்து வந்தால், அந்தத் தொகையில் 15, 20 சம்பளம் கொடுத்து ஒரு வேலைக்காரியை வைத்துக் கொண்டால் அவள் வீட்டுக் காரியங்களை எல்லாம் பார்த்துக் கொள்வாள். நம்முடைய ஸ்திரீகளின் வருமானத்தில் பெரும் பாகத்தை மிச்சப்படுத்தி விடலாம் என்பதே வெள்ளைக்காரருடைய யோசனை. ஆனால் அவர்கள் ஒரு விஷயத்தை மாத்திரம் எண்ணுவதில்லை. ஒவ்வொரு மனிதரும் படிக்க வைத்து உத்தியோகத்துக்கு அனுப்பிவிட்டால், பிறகு வேலைக்காரிக்கு எங்கே போவது என்பதை அவர்கள் எண்ணுகிறதில்லை. அது நிற்க, ஒரு வீட்டில், ஒருவனுடைய மனைவியே அந்த வீட்டின் காரியங்களைப் பார்த்து, தத்தம் புருஷர் குழந்தைகளின் தேவைகளைக் கவனித்து வேளாவேளைக்கு அவர்களுக்குரிய காரியங்களைச் செய்வதைப் போல வேலைக்காரிகள் அவ்வளவு அக்கறையோடும், உண்மையான கனிகரத்தோடும், அந்தரங்க மான பிரியத்தோடும் செய்வார்களா? வீட்டில் உள்ள புருஷன், மனைவி, பிள்ளைகள் ஆகிய மூன்று வகுப்பாரும் சத்திரத்தில் சாப்பிடுவது போல வேலைக்காரியிடம் சாப்பிட்டு ஒருவருக்

கொருவர் உண்மையான பற்றும் சம்பந்தமும் இல்லாமல், அவரவர்கள் ஒவ்வொரு தொழிலைச் செய்து நினைத்த இடத்திற்குப் போய் வந்து கொண்டிருப்பது தான் குடும்பத்திற்குக் கண்ணியமாகுமா? குடும்பத்தில் உள்ள எல்லோரையும் ஒன்றுபடுத்தி, ஒருவருக்கொருவர் பந்தத்தையும் பாசத்தையும் வளர்ப்பது குடும்பத்தின் தலைவியான தாயல்லவா. அவள் தனது காரியத்தை மாத்திரம் பார்த்துக் கொண்டு வெளியில் போய் வந்து கொண்டிருந்தால், அவளிடம் குழந்தைகளுக்குத் தமது தாய் என்ற மதிப்பாவது வாஞ்சையாவது ஏற்படுமா? அல்லது, அன்னிய புருஷர்களின் இடையில் சென்று உத்தியோகம் பார்த்துவிட்டு வரும் மனைவி வீட்டிற்கு வந்தாலும், அவள் தனது உத்தியோகத் தொல்லையையும் கவலையையும் கொண்டிருக்கமாட்டாளா? அவள் தனது கணவன், குழந்தைகள் முதலியோருடன் அன்பாக வார்த்தையாடி அவர்களை சந்தோஷிப்பிக்கத்தான், அவளுக்கு அவகாசமாவது, பொறுமை யாவது இருக்குமா? மனிதன் ஜீவனோபாயத்தின் பொருட்டு வெளியில் அலைந்து பகல் முழுவதும் உழைத்துவிட்டு வீட்டிற்கு வந்தால், வாஞ்சையான மனைவி அவனை உள்ளார்ந்த அன்போடு உபசரித்து உவப்போடு அன்னம் அளித்து அவனுக்குப் பல வகையில் இன்பங் கொடுப்பதால், அவன் தனது அன்றைய உழைப்பை மறந்து, மறுநாளைய உழைப்பையும் ஊக்கத்தோடும் சந்தோஷத்தோடும் செய் வதற்குத்தக்க சக்தியும் அடைகிறான் என்பது ஒவ்வொருவரும் அனுபவத்தில் கண்ட விஷயம் அல்லவா. மனிதன் தனது ஆயிசு காலபரியந்தம் உழைத்துப் பணம் தேடுவது எதற்காக? அவன் தனது உயிர்க்குயிரான மனைவியை நிழலில் வைத்து அவள் மனக் கவலையும் தேகத் துன்பமும் அனுபவியாமல் அவளை சவரக்ஷித்து, அவளால் தானும் தமது குழந்தைகளும் பலவகையில் சுகப்பட்டு, ஆனந்தமாகக் காலங்கழிப்பது மனிதன் உழைத்துப் பணந்தேடுவதன் ஒரு முக்கிய நோக்கம் அல்லவா. அப்படிச் செய்யாமல் எல்லோரும் பகல் முழுதும் மூலைக்கு ஒருவராய்ச் சென்று பணத்தைத் தேடி வந்து உண்மையான குடும்ப வாழ்க்கையும் பரஸ்பர வாஞ்சையும் இன்னதென்பதைத்

தெரிந்து கொள்ளாமல், விலங்குகளைப் போல ஒருவருக்கொருவர் தேவையான போது ஒருவரை ஒருவர் உபயோகித்துக் கொண்டு மற்ற வேளைகளில் ஒருவருக்கொருவர் எவ்வித சம்பந்தமும் இல்லாமல் அவரவர் சுயேச்சையாகப் பிறருடன் சம்பந்தம் வைத்துக் கொண்டு திரிவதே வெள்ளைக்காரருடைய நாட்டில் பெரும்பாலும் நடந்து வரும் குடும்ப வாழ்க்கை. ஒருவனுடைய மனைவி இன்னொரு புருஷனோடு கைகோர்த்துக் கொண்டு தனிமையில் எங்கு வேண்டுமானாலும் செல்லலாம். அவளுக்குத் தனது நண்பரிடம் இருந்து வரும் கடிதங்களை அவளுடைய புருஷன் பிரித்து பார்ப்பது கூடாது.

அது போலவே, வயது வந்த ஒரு பெண் பல யௌவனப் புருஷர்களோடும் பழக்கம் வைத்துக் கொண்டு அவர்களோடு தனிமையில் எங்கு வேண்டுமானாலும் செல்லலாம் என்ற ஓர் ஆதிக்கமும் பெண்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இதற்கு ஒரு வரம்பு இருக்கிறது. ஒரு ஸ்திரீயும் அன்னிய புருஷன் ஒருவனும் ஒன்றாகச் சென்று பழகுவதில், பார்ப்பவருக்கு சம்சயம் உண்டாகாதபடி ஒருவரிடத்து ஒருவர் மரியாதையாகவும் அன்னியோன்னிய சம்பந்தம் இல்லாதவர் போலவும் நடந்து கொள்ள வேண்டும். அவ்வாறு வெளித் தோற்றத்தை உண்டாக்கிக் கொண்டால், அதுவே போதுமானது. அவர்கள் பேரில் யாரும் தோஷம் கூறமாட்டார்கள். ரகசியத்தில் அவர்கள் எவ்வித சம்பந்தம் வைத்துக் கொண்டாலும் கொள்ளலாம். அது அவர்களுடைய சாமர்த்தியத்தைப் பொறுத்தது. அவர்களுடைய சமூகத்தில் திருடுவதைவிடத் தெட்டுவதே முக்கியமானது. ஒருவர் உள்ளுக்குள் எப்படி வேண்டுமானாலும் நடந்து கொள்ளலாம், வெளிப்பார்வைக்கு மாத்திரம் அவர்கள் சந்தேககரமாக நடந்து கொள்ளக் கூடாது. ஆனால் இது உலக வாழ்க்கையில், சுலபமாக நடக்கக்கூடிய காரியமா? ஒரு ஸ்திரீயும் புருஷனும் ஒன்றாய்ப் பழகுவது நெருப்பும் பஞ்சும் ஒன்றோடு ஒன்று பழகுவது போன்றதல்லவா! அவர்கள் ஒருவரிடத்தொருவர் கொள்ளும் காதலை மறைப்பதென்பது எளிய காரியமா? அது சூரியன் குஞ்சைக் கூரையில் வைத்து மறைத்த கதையாகவே அநேகமாய் முடிந்து போவதும், அதனால், கலியாண விடுதலை செய்வதற்காக

புருஷனோ, பெண்ஜாதியோ நியாயஸ்தலங்களில் வழக்குத் தொடருவதும் ஏராளமாக நடைபெறுகின்றன. நம்முடைய நாட்டிலோ ஒரு புருஷன் ஒரு ஸ்திரீயைக் கலியாணம் செய்து கொண்டால், அந்தக் கலியாணத்தினால், அவர்களுடைய இரண்டு ஜீவன்களும் பூர்வஜென்மக் கருமத்தின் பலனாக ஒன்றுபட்டுக் கலந்து போவதாகவே நாம் மதிக்கிறோம். இருவரும் இறந்து போனாலன்றி, புருஷர் பெண்ஜாதி என்ற பாந்தவ் வியத்தை எவரும் விலக்க முடியாது. வெள்ளைக்காரர்களோ கலியாணச் சடங்கை சாதாரணமான ஓர் ஒப்பந்தத்தைப் போல பாவிக்கிறார்கள். இருவரில் எவருக்காவது இஷ்டம் இல்லா விட்டால், நியாய ஸ்தலத்தின் மூலமாக, விவாக பந்தத்தை விலக்கிக் கொள்ளலாம். ஸ்திரீகள் ஒருவர் பின் ஒருவராக எத்தனை புருஷர்களை வேண்டுமானாலும் கலியாணம் செய்து கொள்ளலாம். ஐம்பது, அறுபது வயதடைந்த கிழவிகள்கூட, இருபது வயதுள்ள ஒரு சிறுவனை ஐந்தாவது கணவனாகக் கட்டிக் கொள்வார்கள். அதை அவர்களுடைய சமூகத்தார் இழிவாகக் கருதுவதில்லை. அவர்களுக்குப் புருஷர் தேடுவதும், பெண்ஜாதிகள் தேடுவதும், கலியாண சம்பந்தத்தை ரத்து செய்து கொள்வதும், தண்ணீர் குடிப்பது போன்ற சர்வ சாதாரணமான காரியம். நம்முடைய கலியாண சம்பந்தமோ அப்படிப்பட்டதல்ல. புருஷனும் பெண் ஜாதியும் சேர்வது பூர்வசம்பந்தத்தால் ஏற்படும் காரியம் என்பதும், அது ஆயிசு பரியந்தம் விலக்கக் கூடாத பந்தம் என்பதும் நம்முடைய எண்ணம் ஆகையால், ஸ்திரீகள் தமது பதிகளைத் தெய்வமென மதித்துத் தமது வாழ்நாளைய சுகம் தமது கணவனுடைய சுகத்துக்கு வேறானதல்ல என்று நினைக்கிறது அன்றி, புருஷர் இறந்த பிறகு, தமது அழகைக் கெடுத்து, அலங்காரங்களைச் சீர்குலைத்து, மற்ற எவரும் தம்மை நாடாமல் செய்து, தமது கற்பைக் கடைசி வரையில் காப்பாற்றிக் கொள்ளுகின்றனர். இப்படிப்பட்ட மாறுபட்ட கொள்கைகளை உடைய நாம் நமது ஸ்திரீகளுக்கு இங்கிலீஷ் பாஷை கற்றுக் கொடுத்தால் அவர்கள் எப்படியும் உத்தியோகத்தை நாடுவார்கள். குடும்ப வாழ்க்கை பல வகையில் சீர்குலைந்து அழியத் தொடங்கும். அவர்களது கற்பிற்கும் பங்கம் நேரிடுவது திண்ணம்.

அப்படி நேரிடுமானால், நம்மவர்கள் வெள்ளைக்காரரைப் போலக் கலியாண விடுதலைச் சீட்டு வாங்க நியாய ஸ்தலத்திற்குப் போக முடியுமா? அல்லது, அவர்கள் ஒரு புருஷரைவிட்டு இன்னொரு புருஷரைக் கலியாணம் செய்து கொள்வதுதான் சாத்தியமாகுமா? வெள்ளைக்காரர் எல்லோரும் பொருள் தேடுவதற்குத் தக்கபடி சகலமான வசதிகளையும் ஏற்படுத்தி இருக்கிறார்கள். ஸ்திரீகள் உத்தியோகம் வகிப்பதில் அவர்களுடைய கற்புக்கு பங்கம் வரலாம் என்பது தெரிந்தும் அவர்களை விலக்கி வேறே கலியாணம் செய்து கொள்ளலாம் என்று சட்டங்களும் நியாயஸ்தலங்களும் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களால் விலக்கப்படும் ஸ்திரீகளும் சமூகத்தார் அறிய பகிரங்கமாகவும் கண்ணியமாகவும் வேறொருவனைக் கலியாணம் செய்து கொள்ளலாம் என்றும் நியதி ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால், அவர்களுடைய ஸ்திரீகள் இங்கிலீஷ் படித்து வெளியில் போய் உத்தியோகம் வகிப்பதாலும், தங்களுடைய கற்பை இழப்பதாலும் அவ்வளவாக பாதிக்கப் படுகிறதில்லை. அவர்கள் ஒருவருக்கொருவர் பிடிக்காவிடில், தமது பிரியப்படி வேறே கலியாணம் செய்து கொள்ளலாம். நம்மவர்கள் அப்படிச்செய்ய, நமது பழக்க வழக்கங்களும் சாஸ்திரங்களும் இடந்தரவில்லை. நம்முடைய ஸ்திரீ இங்கிலீஷ் படித்து உத்தியோகம் பார்க்கப்போய், அவ்விடத்தில் ஓர் ஆடவனால் கெட நேர்ந்ததானால் அவளை அவளது சொந்தக் கணவன் தள்ளி வைத்து விடுவான். அவளுக்கு ஏற்பட்ட கள்ள நாயகன் அவளை பகிரங்கமாக ஸ்வீகரித்துக் கொள்ளலாம். ஆனாலும், அவர்கள் சமூகத்தார் அறிய புருஷன் பெண்ஜாதி என்ற கண்ணியமான சம்பந்தத்தோடு வாழமுடியாமல் போவது நிச்சயம். அந்த ஸ்திரீ தனது கற்பை இழந்து எடுபட்டுப் போனவள் என்ற தூஷணைக்கும் களங்கத்திற்கும் தனது ஆயிசு கால பரியந்தம் இலக்காக வேண்டும். அவளையும் அவளது கள்ள நாயகனையும் ஜனசமூகத்தார் சாஸ்திரீகமான தம்பதிகளாக ஒருநாளும் மதிக்கவே மாட்டார்கள். நம்முடைய ஸ்திரீகள் இங்கிலீஷ் கற்று உத்தியோகம் வகிப்பது முதலில், குடும்ப ஒற்றுமை, பரஸ்பர வாஞ்சை, குடும்ப சுகம் முதலிய கெட்டு

ஒருவருக்கொருவர் வேற்றுமை அடைவதற்கு விதைபோடுவது போன்றது, இரண்டாவது, ஸ்திரீ ஜாதிகளின் கற்பை அழிப்பதோடு, சமூகத்தில், கிரமப்படி மணந்து சதிபதியாக இருப்பது போய் ஒருவருக்கொருவர் இயற்கைக் காதலால் காந்தருவ விவாகம் செய்து சதிபதிகளாய் வாழ்வதாகிய மானக்கேட்டைப் பெருக்குவதற்கு, அஸ்திவாரம் போடுவது போன்றது. ஆகவே, நம் தேசத்து ஆண் மக்கள் வயிற்றுக்குப் பிழைப்பைக் கருதி இங்கிலீஷ் பாஷை கற்றுக் கொண்டாலும், அதை ஜீவனோபாயத்திற்கு மாத்திரம் பயன்படுத்திக் கொள்வதோடு நின்று, நமது தாய்ப் பாஷையில் உள்ள தெய்விகமான அரிய நூல்களை எல்லாம் அறவே கற்று, நமது புராதன ஆசார ஒழுக்கங்களையும் மதக்கொள்கைகளையும் விடாமல் ஒழுகுவது அத்தியாவசியமானது. அதைவிடப் பன்மடங்கு சிரேஷ்டமானது நம்முடைய பெண் மக்களின் கல்வி. இங்கிலீஷ் பாஷையின் ஓசைகூட நமது பெண்டிரின் காதில் வீழ்வதே கூடாதென்ற பிடிவாதம் ஒவ்வொரு ஆண் மகனுக்கும் இருக்க வேண்டும். நமது சுயபாஷையில் உள்ள பரிசுத்தமான நூல்களை அவர்களுக்குப் பயிற்றுவதே எதேஷ்டமானது. பணத்தைவிட குணமே நமது பெண்மக்களுக்கு ஒப்பற்ற செல்வம். எல்லோரும் ஓடியாடிக் கோடி கோடியாகப் பொருள் தேடி நாம் அடையப் போகும் சுகத்தைவிட, கற்பு, பணிவு, அடக்கம், வாஞ்சை, உழைப்புக் குணம் முதலிய நிறைந்த மனைவியரோடு மனமொத்து வாழ்க்கை நடத்திக் கூழ் குடிப்பதே தேவேந்திர போகத்திற்கு சமமானதென்ற நமது முன்னோரின் கொள்கையை நாம் விட்டு, அன்னிய நாட்டாரின் வெளிப் பகட்டான பொய்த் தோற்றத்தைக் கண்டு மதிமயங்கி ஏமாறிப் போகாமல், நமது முன்னோர் ஏற்படுத்தியதே நமக்கு சர்வ சிலாக்கியமானது என்ற உறுதியில் தளராமல் நம்மவர் நடந்து கொள்ள வேண்டும். இங்கிலீஷ் பாஷை கற்கும் ஸ்திரீகள்தான் மேலானவர்கள் என்றும், அதைக் கற்காமல் நமது நூல்களை மாத்திரம் கற்பவர் மூடர்கள் என்றும் அன்னிய நாட்டார் கூறும் கொள்கைகளை நாம் வெறும் பிதற்றல் என்றே மதித்து, அடக்கம், பணிவு, நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு முதலிய குணங்கள்

நிறைந்து இன்பவடிவமாய் இருக்கும் நமது ஸ்திரீகளை நாம் வெளியுலகில் விடுத்து, அவர்கள் லஜ்ஜையின்றி ஆண்பாலாரோடு பழகித் துணிகரம் துடுக்கு முதலிய குணங்களில் தேறி, முற்றிலும் ஆண் தன்மை அடையும்படி செய்வது, நாமே நமது வீட்டில் கொள்ளி வைத்துக் கொள்வது போல முடியுமே அன்றி வேறல்ல. இந்தப் பட்டாபிராம பிள்ளைக்கு வேறே ஆண் சங்கதியாவது பெண் சங்கதியாவது கிடையாது. இவருக்கு லட்சக்கணக்கில் சொத்து இருக்கிறது. அவ்வளவு சொத்தும் இந்த மனோன்மணிக்கே கிடைக்கப் போகிறது. இவள் உத்தியோகம் பார்த்து மேன்மேலும் பொருள் தேட வேண்டிய அவசியமே இல்லை. அப்படி இருக்க எதற்காக இவளுடைய தகப்பனார் இவளை பி.ஏ. வகுப்பு வரையில் படிக்க வைத்திருக்கிறார் என்பது தெரியவில்லை. ஸ்திரீகள் படிப்பதற்கு நம்முடைய தேசபாஷைகளில் அருமையான நூல்கள் இல்லை என்று நினைத்து இந்த இங்கிலீஷ் பாஷையைக் கற்க விடுத்தாரா? இவள் உத்தியோகம் வகிக்கா விட்டாலும் மேலான அறிவும் பாஷாஞானமும் அடைய வேண்டும் என்றால், அதற்கு, தமிழ் சமஸ்கிருதம் முதலிய நம்முடைய தேசத்துத் தாய் பாஷைகள் இல்லையா? அவைகளில் காணப்படும் அழகும், அற்புதங்களும் இங்கிலீஷ் பாஷையில் இருக்குமா? மனிதர் நற்குண, நல்லொழுக்கம், தெய்வபக்தி முதலிய ஆசார தர்மங்களைக் கற்பதற்கு நம்முடைய பாஷையில் உள்ள நூல்களைவிடச் சிறந்த நூல்கள் இந்த உலகில் வேறே எந்த பாஷையிலாவது இருக்குமா? இவள் இங்கிலீஷ் கற்று, நமது தேசத்தில் உள்ள ஸ்திரீ தர்மங்களுக்கு மாறாக நடந்து, சகல விதத்திலும் குதர்க்க புத்தியோடு ஒழுகினால், எந்தப் புருஷன் இவளை விரும்புவான்? இங்கிலீஷ் பாஷையால் ஏற்படும் மேலான அறிவு மனிதன் கட்டுப்பாட்டுக் கடங்காமல், அவனுக்கு எது சரி என்று தோன்றுகிறதோ அதைச் செய்யலாம் என்ற துணிகரமான நினைவையே உண்டாக்குவதால், அந்த வழியில் நமது ஸ்திரீகளை நடத்துவது ஒருவன் தன்னைத் தானே கொலை செய்து கொள்ள எத்தனிப்பது போன்றதே அன்றி வேறல்ல. இந்த மனோன்மணியம்மாளுக்கு இவ்வளவு அபாரமான

செல்வம் இருப்பதற்கு, இவள் தமிழ்ப்பாஷை, சமஸ்கிருத பாஷை முதலிய சுதேச பாஷைகளை நன்றாகக் கற்று, அவற்றில் உள்ள நூல்களைப் படித்துப் பாண்டித்தியம் அடைந்திருந்தால், இவள் ஸ்திரீ தர்மம் இன்னதென்பதையும், தான் எப்படிப்பட்ட ஆசார ஒழுக்கங்களைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதையும் நன்றாக உணர்ந்து உண்மையான ஞானம் பெற்று ஒப்பற்ற குணமணியாகவும் இன்பக் களஞ்சியமாகவும் தோன்றுவாள். இவளுடைய இம்மை வாழ்க்கையும் க்ஷேமகரமாகவும் இன்பகர மாகவும் இருக்கும். இவளை மணக்கும் புருஷனும் இவளிடம் மதிப்பு, மரியாதை, வாஞ்சை முதலியவை நிறைந்தவனாய் ஒழுகுவான். அப்படி இன்றி, இவள் இங்கிலீஷ் பட்டம் பெறுவதற்காக, உபயோகமற்ற குப்பைகளாகிய மேல்நாட்டுப் புஸ்தகங்களை நெட்டுருப் போட்டுத் தன் உடம்பையும், உயிரையும் பருகி, முடிவில் திடமான அறிவைப் பொறாமல், நற்குண நல்லொழுக்கம் ஸ்திரீ தர்மம் முதலிய எதையும் சிறிதும் தெரிந்து கொள்ளாமல், தனது வாழ்க்கைத் துணையான புருஷனோடு ஒன்றுபட்டு வாழும் மர்மங்களை உணராது, தான் என்ற ஆணவமும், வீண் பெருமையும் நிறைந்து, ஆயிசுகாலம் முடிய துக்கமும் துன்பமும் அனுபவித்து, உலகுக்கும் பயன்படாது தனக்கும் பயன்படாது நடைப்பிணமாய் இருந்து மடிவதே இவளுடைய முடிவு. இப்படிப்பட்ட நிலைமைக்கு இவளைக் கொண்டு வந்ததற்கு இவளது தந்தையே காரண பூதரான மனிதரன்றி, இவள் மீது குற்றங் கூறுவது பொருந்தாது. வீட்டில் பெற்றோர் பெரியோர் குழந்தைகளை எந்த வழியில் திருப்பி விடுகிறார்களோ அந்த வழியில் குழந்தைகள் செல்கிறார்கள். சட்டைநாத பிள்ளை எவ்வளவுதான் துஷ்டனாகவும் துன்மார்க்கத்தில் செல்லுகிறவனாகவும் இருந்தும், நல்ல வேளையாக அவன் வடிவாம்பாளை இப்படிப்பட்ட துறையில் விடாமல், சன்மார்க்கமும், நல்ல குணங்களும் பழகும்படி செய்து வைத்தான். இந்தப் பட்டாபிராம பிள்ளை நல்ல யோக்கியமான மனிதராகவும், படிப்பாளியாகவும், அறிவாளியாகவும் இருந்தும், நம்முடைய பாஷையில் உள்ள நூல்களின் பெருமையையும், நமது ஸ்திரீகள் நடந்து கொள்ள

வேண்டிய மாதிரி இன்னதென்பதையும் தெரிந்து கொள்ளாது, தமது பெண்ணை இப்படிக் கெடுத்து வைத்திருப்பது தான் விந்தையாக இருக்கிறது. இவர்தான் இப்படிச் செய்தார் என்றால், என்னுடைய தகப்பனார் முதலியோர் இந்தப் பெண் இப்படிப் பட்ட மனப்போக்கு உடையவளாய் இருக்கிறாள் என்பதைத் தெரிந்து கொள்ளாமல், பட்டாபிராம பிள்ளையின் சிநேகத்தைக் கருதி இந்தப் பெண்ணை எனக்குக் கட்டத் தீர்மானித்து விட்டார்கள். இவள் என்னைக் கட்டிக்கொண்டு மன்னார்குடிக்கு வந்து இந்த மாதிரி நடக்க முடியாதென்றும், மற்ற குடும்ப ஸ்திரீகள் நடப்பது போல நடக்க வேண்டும் என்றும் சொன்னதற்கு, அந்த இடத்தில் கலியாணம் செய்து கொள்ளத் தனக்கு விருப்பம் இல்லை என்று இவள் திறந்து சொல்லி விட்டாள். ஸ்திரீகள் புருஷனுக்கு அடங்கி, புருஷர் வீட்டு மனிதர்களோடு ஐக்கியப்பட்டு ஒழுங்காக நடப்பது அத்தியாவசியமான விஷயம் என்று நான் சொன்னதற்கு, இவள் கூறிய மறுமொழி ஒன்றே இவளுடைய மனப்போக்கை நன்றாக வெளிப்படுத்தி விட்டது. "நான் அவர்களுடைய வீட்டில் கேவலம் ஓர் அடிமைப்போல நடந்து கொள்ள வேண்டும் போலத் தோன்றுகிறது. அப்படி நான் என் சுயமதிப்பையும் மரியாதையையும் சுயேச்சையையும் இழந்து, புழுக்கைச்சி போல அவர்கள் வீட்டில் கிடந்து உழன்று புருஷசுகம் அடைவதைக் காட்டிலும், சுயமதிப்போடும், சுயேச்சையோடும் இருந்து, பட்டினி கிடந்து மரிப்பதே சிலாக்கியம் என்பது என்னுடைய உறுதியான அபிப்பிராயம்" என்று இவள் வெளியிட்ட கருத்தில் இருந்தே, இவள் பெண்ஜாதி புருஷனிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்னும் விஷயத்தில் நம்முடைய தேசத்துப் பழக்கவழக்கங்களை அடியோடு விலக்கி, வெள்ளைக்காரருடைய போக்கை முற்றிலும் பின்பற்றி நடக்க வேண்டும் என்று உறுதி செய்து கொண்டிருக்கிறாள் என்பது தெளிவாகத் தெரிகிறது. இவள் நமது தேசத்து குடும்ப ஸ்திரீகள் நடக்கும் முறையைக் கொஞ்சமும் தெரிந்து கொள்ளாமல், வெள்ளைக்காரருடைய நாகரிகத்தைப் புஸ்தகங்களின் மூலமாய்த் தெரிந்து கொண்டதே இதற்கு முக்கியமான காரணம் எனத்

தோன்றுகிறது. இவளுடைய மனப்போக்கு இனி மாறும் என்று நம்பவும் இடமில்லை. ஸ்திரீகளின் மனதில் இப்படிப்பட்ட விபரீதமான எண்ணங்கள் உண்டான பிறகு, அந்த மனம் அதே போக்கில் செல்லுமன்றி, அவைகளை விலக்கி மறுபடி அடக்கம், பணிவு முதலிய சிறந்த குண ஒழுக்கங்களை அவர்கள் வகித்து நடக்கச் செய்யும் என்று நாம் எதிர்பார்க்க நியாயமில்லை. இந்த விஷயங்களில் எல்லாம், வந்தபின் விலக்குவதைவிட வரும் முன் தடுப்பதே சுலப சாத்தியமான காரியம். மனைவிகளுக்குத் தமது புருஷரது விஷயத்தில் சிறிதளவு அலட்சியம் தோன்றிவிடும் பட்சத்தில், அது அவ்வளவோடு நிற்கிறதில்லை. அது விஷம் போலப் பெருகி, சிறியதில் இருந்து பெரியதாக வளர்ந்து கடைசியில் பெருத்த விபரீதத்தில் கொண்டு போய்விடும். அது போலவே, ஸ்திரீகள் புருஷரிடம் எதிர்த்து வாக்குவாதம் புரிந்து கொஞ்சம் கண்டுகொள்வார்களானால், அதன் பிறகு அந்தக் குணம் அமோகமாகப் பெருகிப் போகும். அதுபோலவே, அவர்கள் உழைத்து வேலை செய்வதை வெறுத்து, சோம்பேறி யாய் உட்கார்ந்திருந்து கொஞ்சம் பழகிவிடுவார்களானால், அந்தப் பேய் கொஞ்ச காலத்திற்குள் பெரும் பேயாக அவர்களைப் பிடித்துத் தனக்கு அடிமையாக்கிக் கொள்ளும். ஆகையால் சிறு பிராயத்திலிருந்தே நமது பெண்பாலாருக்கு உழைப்புக் குணம், குடும்ப அலுவல்களைக் கருத்தோடு கவனிப்பது, புருஷருக்குக் கீழ்ப்படிந்து நடப்பது, மாமனார் மாமியார் முதலிய புக்ககத்து உறவினரிடம் மரியாதையாகவும் ஒற்றுமையாகவும் ஒழுகுவது, தமது குடும்பத்தைச் சேர்ந்த மனிதர்களது தேகத்தை ஆரோக்கிய மாக வைத்துக் காப்பாற்றுவது, தமது வீட்டைச் சுத்தமாக வைத்துக் கொள்வது, தமது வருவாய்க்குத் தகுந்தபடி குடும்பச் செலவுகளைச் சிக்கனமாக நடத்துவது முதலிய சகலமான பொறுப்புகளும் தம்மைச் சேர்ந்தவைகள் என்று கருதும்படி நாம் அவர்களைப் பயிற்றுவது, மனித சமூகத்தின் க்ஷேம வாழ்க்கைக்கும், நாட்டின் நன்மைக்கும் இன்றியமையாத விஷயம். நமது தேசத்துப் பெண் பாலாருக்குக் கல்வி கற்றுக் கொடுப்பதிலும், இப்படிப்பட்ட நோக்கங்களே பெரும்பான்மை யாக இருக்க வேண்டும். ஸ்திரீகளுக்கு இப்படிப்பட்ட

மனப்பான்மை உண்டாக்கி, அவர்களையே குடும்பத்தின் முக்கியமான நிர்வாகிகள் ஆக்குவது ஒரு நாளில் சாதிக்கக்கூடிய காரியமல்ல. இளம்பிராயத்தில் இருந்தே அவர்களை அவர்களது பெற்றோர் அதே துறையில் பழக்கி, அதற்கு அனுகூலமான நூல்களை மாத்திரம் அவர்கள் படிக்கும்படி செய்ய வேண்டும். அக்கம் பக்கத்தில் உள்ள உத்தமமான குணங்கள் நிறைந்த குடும்ப ஸ்திரீகள் நடந்து கொள்ளும் தோரணையை அவர்கள் கவனிக்கும்படி செய்ய வேண்டும். துன்மார்க்கங்களும், துராசாரங்களும், துஷ்ட கிருத்தியங்களும் நிறைந்த ஸ்திரீகளின் குணாதிசயங்களைக் காட்டும் அன்னிய பாஷையின் நூல்களை அவர்கள் படிக்கும் சந்தர்ப்பம் இல்லாமல் தடுப்பதற்கு, அவர்கள் அந்த பாஷையையே கற்காமல் தடுத்துவிட வேண்டும். இத்தனை காரியங்களையும் நாம் ஜாக்கிரதையாக செய்தால்தான் நமது ஸ்திரீகள் பழைய காலத்து ஸ்திரீகள் போல உத்தம குண ஸ்திரீகளாக இருப்பார்கள். அப்படி இன்றி, அன்னிய நாட்டு அநாகரிக விஷம் முற்றிலும் பரவி நிலைத்து வேரூன்றி விடும்படி செய்த பின்னர், இனி இவளைத் திருத்தி நல்வழிப்படுத்துவது முற்றிலும் அசாத்தியமான காரியம். என் மனப்போக்கிற்கும் இவளுடைய மனப்போக்கிற்கும், கொஞ்சமாவது ஒற்றுமை ஏற்படும் என எனக்குத் தோன்றவே இல்லை. நான் இவளைக் கலியாணம் செய்து கொண்டு இவளிடம் என்னவிதமான இன்பத்தை அடையப் போகிறேன்? அநேகமாய் ஒன்றும் இராதென்றே நினைக்கிறேன். இவள் குடும்பப் பொறுப்பை ஏற்று நடத்துவதை இழிவாக மதிக்கக் கூடியவள். சமையலறையில் புகுந்து அவ்விடத்து அலுவல்களைச் செய்து மாதுரியமான போஜனம், சிற்றுண்டிகள் முதலியவைகளைத் தயாரித்து ஆண்மக்களுடைய மனதை மகிழச் செய்வதற்கு இவள் முற்றிலும் திறமையற்றவள். இவள் தேகப்பிரயாசையை விலக்கி, உட்கார்ந்த இடத்திலேயே இருந்தபடி பரீட்சைக்காகப் படித்துப் படித்து உடம்பின் செழுமையையும் ஆரோக்கியத்தையும் கெடுத்துக் கொண்டிருப்பதால், இன்னம் சில வருஷங்களில் இவள் கிழவி போல ஆகிப் பலவித நோய்களுக்கு இருப்பிட மாய்ப் போவது நிச்சயம். அதுவுமன்றி, இவள் கல்லாத

மூடஸ்திரீகளைப் போல, சிற்றின்ப விஷயங்களிலாவது உல்லாசமாக நடந்து புருஷனது மனப் பிரேமையையும் காதலையும் கவர்ந்து கொள்ளக்கூடியவளா? அந்த விஷயத்திலும், இவள் சிறிதும் உபயோகம் அற்றவளாகத் தோன்றுகிறாள். ஆனால் இவள் பி.ஏ. வரையில் படித்திருப்பதால், இவளிடம் புத்திசாலித்தனத்தையும், இவள் படித்த புஸ்தகத்தில் உள்ள விஷயங்களையும் நான் எதிர்பார்க்கலாம். அதே புஸ்தகங்களை நானும் படித்திருப்பதால், அவை எனக்கு ருசிக்கப் போகிற தில்லை. ஆனால் இன்னொரு விஷயம். இவளுடைய பெரிய ஆஸ்தி ஒன்றை உத்தேசித்து வேண்டுமானால், இவளைக் கலியாணம் செய்து கொள்ளலாம். அதுவுமன்றி, இவள் ஒருவேளை ஏதாவது பெருத்த உத்தியோகம் வகித்தாலும் வகிக்க லாம். அந்த இரண்டு அம்சங்களையும் நான் ஒரு பொருட்டாக நினைப்பவன் அல்ல. ஆகவே, என் மனதைக் கவர்ந்து, என் ஆசையைப் பெருக்கத்தக்க அம்சம் ஒன்றுகூட இவளிடத்தில் காணப்படவில்லை. அப்படி இருக்க, பெரியவர்கள் நிச்சயித்து விட்டார்கள் என்ற காரணத்தினால் மாத்திரம் நான் இவளை மணந்து கொண்டு என் ஆயிசு காலம் முழுவதும் தீராத மனக் குறையை வைத்து உள்ளுக்குள்ளாகவே மனம் நொந்து பரம வேதனையான வாழ்க்கை நடத்துவதல்லவா என்னுடைய கதியாக முடியும் போலிருக்கிறது. இவளே தன்னுடைய தகப்பனாரிடம் சொல்லி இந்தக் கலியாணத்தை நிறுத்த சாத்தியம் இல்லை என்றும், நான் மன்னார்குடிக்கு எழுதி அதை நிறுத்த வேண்டும் என்றும் இவள் முடிவாகச் சொல்லிவிட்டாள். ஆனாலும், இதில் சில முக்கியமான இடையூறுகள் இருக்கின்றன. பட்டாபிராம பிள்ளைக்கு மன்னார்குடியிலிருந்து என் தகப்பனார் அனுப்பிய தந்தியில் சொல்லப்பட்டிருக்கும் விஷயம் இவர்களுடைய மனதை முற்றிலும் குழப்பி, இவள் செய்து கொண்ட தீர்மானத்தை மாற்றிவிடக் கூடியதாக இருக்கிறது. அந்தத் தந்தியில் 'என் சம்சாரத்துக்கு கோமளேசுவரன் பேட்டையிலாவது வேறு எந்த இடத்திலாவது தங்கை முதலிய உறவினர் இல்லை; சட்டைநாத பிள்ளை சிறையில் இருந்து வெளிப்பட்ட விவரம் பத்திரிகைகளின் மூலமாய் உங்களுக்குத்

தெரிந்திருக்கலாம். அவருடைய தம்பி முதலியோர் நம்மிடம் பகை வைத்திருப்பது சகஜமே. நம்முடைய பகைவர் ஏதாவது கெட்ட கருத்தோடு அவ்வாறு எங்கள் உறவினர் என்று சொல்லிக் கொண்டு வந்திருக்கலாம். நீங்கள் அவர்களிடம் எச்சரிக்கையாக நடந்து கொள்ளுங்கள். பெண்ணினிடம் எங்களைப் பற்றி ஏதாவது அவதூறு சொல்லி அவளது மனதைக் கலைத்து இந்தக் கலியாணத்தை நிறுத்தவோ, அல்லது, பெண்ணுக்கு ஏதாவது கெடுதல் செய்யவோ அவர்கள் வந்திருக்கலாம் என்ற சந்தேகமே தோன்றுகிறது. நீங்கள் எச்சரிப்பாக நடந்துகொண்டு, முடிவைக் கடிதத்தின் மூலம் எழுதுங்கள்' என்று தகப்பனார் எழுதி இருக்கிறார். நான் பெண் வேஷந் தரித்துக் கொண்டு இங்கே வந்தவுடன், இவர் என் தகப்பனாருக்குத் தந்தி அனுப்புவார் என்று நான் கனவிலும் எண்ணவில்லை. இவருடைய தந்தியைப் பார்த்து என் தகப்பனார் சட்டைநாத பிள்ளை மீது சந்தேகித்தது சகஜமாக யாரும் செய்யக்கூடிய காரியமே. அப்படி அவர் சந்தேகித்து மறுதந்தி கொடுத்தது பெரிய விபரீதத்தை விளைவித்து விட்டது. என் தகப்பனாருடைய தந்தியில் உள்ள விஷயத்தைப் படித்த பிறகு மனோன்மணி அம்மாளும், அதுவே தான் உண்மையாக இருக்கும் என்று நம்பி இருப்பாள். ஆதலால், நான் சட்டைநாத பிள்ளையைச் சேர்ந்த யாரோ ஒரு பெண்பிள்ளை என்றும், வேண்டும் என்றே நான் அவளுடைய மாமியார் வீட்டாரைப்பற்றி அவதூறாகப் பேசியதாகவும் எண்ணிக் கொள்வது நிச்சயம். இவளுக்கும் எனக்கும் நடந்த சம்பாஷணையின் விவரம் முழுதையும் இவள் அநேக மாய்த் தன் தகப்பனாரிடம் வெளியிட்டாலும் வெளியிடலாம். ஆனால் இவர்கள் இருவரும், என்னுடைய வார்த்தைகளை அவ்வளவாக மதிக்கவும் மாட்டார்கள்; அவற்றைக் கொண்டே இந்தக் கலியாணத்தை நிறுத்திவிட வேண்டும் என்று நினைக்கவும் மாட்டார்கள். நான் எதிரியைச் சேர்ந்த மனிஷி என்று இவர்கள் நினைத்திருக்கும் வரையில், இவர்களுக்கு இந்தக் கலியாணத்தை நிறுத்தும் உத்தேசம் ஏற்படாது. ஆனால் நான் கந்தசாமி என்ற உண்மையைக் கோபாலசாமி வெளியிட்டிருந்தால், அதன் பிறகு இவர்களுடைய மனம் நிரம்பவும் கலக்கத்தை அடைவது

நிச்சயம். ஏனென்றால், நான் எங்கள் குடும்பத்தைப் பற்றியும், என்னைப் பற்றியும் சொல்லிய விவரங்களை எல்லாம் இவர்கள் பொய் என்று நினைக்க ஏதுவில்லை அல்லவா? ஆகவே, நான் இன்னான் என்பது இவர்களுக்குத் தெரிந்திருந்தால், எனது மனப்போக்கை இவர்கள் நன்றாக அறிந்து கொண்டும், இந்தக் கலியாணத்தை நடத்த எண்ண மாட்டார்கள் என்பது நிச்சயம். அப்படி இவர்கள் எங்களுடைய சம்பந்தத்தை விலக்கத் தீர்மானித் திருக்கும் பக்ஷத்தில், என்னை இவர்கள் இப்படிப்பட்ட சிரேஷ்டமான இடத்தில் இருக்கச் செய்வாரா என்ற சந்தேகமும் தோன்றுகிறது. எந்த விஷயத்தையும் நான் நிச்சயமாகத் தெரிந்து கொள்வதற்கு இங்கே வேறே மனிதர் யாரும் காணப்பட வில்லையே! பொழுது நன்றாக விடிந்து போயிருக்கிறது. எவரும் வந்து இன்னமும் கதவைத் திறக்கவில்லை; இனி எப்போது வந்து திறப்பார்கள் என்பதும் தெரியவில்லை. இன்னமும் பட்டாபிராம பிள்ளை முதலியோர் படுக்கையில் இருந்து எழுந்திருக்காமல் இருப்பார்களா? அல்லது, அவர்கள் எழுந்திருந்தும் வேறே ஏதாவது கருத்தோடு இங்கே வராமல் இருப்பார்களா? ஒன்றும் விளங்கவில்லையே" என்று பலவாறு சிந்தனை செய்தவனாய் நமது கந்தசாமி கட்டிலை விட்டுக் கீழே இறங்கி மறுபடி உலாவத் தொடங்கினான். அவ்வாறு மேலும் அரைநாழிகை காலம் கழிந்தது. கதவு திறக்கப்படாமலேயே இருந்தது. அப்போது பொழுது எவ்வளவு ஆகி இருக்கலாம் என்று அறிந்து கொள்ள வேண்டும் என்ற விருப்பம் அவனது மனதில் தோன்றியது; அவ்வளவு சிறப்பாக அலங்கரிக்கப்பட்டிருந்த விடுதியில் எவ்விடத்திலாவது கடிகாரம் வைக்கப்பட்டிருக்கலாம் என்ற யோசனை தோன்றியது ஆகையால், அவன் நாற்புறங்களிலும் திரும்பி சுற்றும் முற்றும் ஆராய்ச்சி செய்து பார்த்தான். எவ்விடத்திலும் கடிகாரம் இருப்பதாகத் தோன்றவில்லை. ஆகவே அவன் அவ்விடத்தில் இருந்த பஞ்சணையின் மீதேறி நின்று கொண்டு சுவரின் உச்சியில் இருந்த ஜன்னல்களுள் ஒன்றன் வழியாக வெளிப்பக்கத்தில் தனது பார்வையைச் செலுத்தினான். செலுத்தவே, அவன் நிரம்பவும் ஆச்சரியம் அடைந்தான். ஏனெனில், ஜன்னலுக்கப்பால் இருந்த

தோட்டத்தின் மரங்கள் யாவும் நிரம்பவும் தணிந்திருந்ததன்றி தரை கண்ணில் படாதபடி மிகவும் கீழே இருந்தது. பட்டாபிராம பிள்ளையினது பங்களாவில் ஒரே ஒரு மேன்மாடம் இருந்த தென்றே அவனுக்கு ஒருவித நினைவு உண்டாயிற்று. அந்த உப்பரிகையும் அவ்வளவு அதிக உயரமாக இல்லாமல் இருந்தது. பக்கத்தில் இருந்த மரங்கள் எல்லாம் உப்பரிகையைவிட அதிக உயரமாக வளர்ந்து ஆகாயத்தை அளாவிக் கொண்டிருந்தன. ஆனால், அவன் இப்போது பார்த்த இடத்தில் தான் இருந்த மாடம் மகா உயரமான இடமாகத் தோன்றியது. ஆகையால், அநேகமாய், அது மூன்றாவது, அல்லது, நான்காவது உப்பரிகையாக இருக்க வேண்டும் என்ற ஓர் எண்ணம் அவனது மனதில் தோன்றியது. அவனது மனம் மிகுந்த வியப்பையும் குழப்பதையும் அடைந்தது. அவன் அந்த ஜன்னலை விட்டு, அடுத்த ஜன்னலண்டை போய் நின்று கொண்டு உற்று நோக்கினான். அந்த மாளிகையை அடுத்தாற் போல வீடுகள் அடர்த்தியாக நிறைந்திருந்த பல தெருக்கள் காணப்பட்டன. அவற்றிற்கப்பால், ஓர் ஆறும் தென்பட்டது. அவைகளைக் கவனித்த வண்ணம் அவன் ஆழ்ந்து சிந்தனை செய்யலாயினான். "என்ன ஆச்சரியம் இது! இந்தக் கட்டி டத்திற்குப் பக்கத்தில் வீடுகள் ஏராளமாகக் காணப்படுகின்றனவே! இங்கே கால் மயில் தூரத்திற்கோர் இடத்தில் தானே பங்களாக்கள் இருந்தன. நான் இங்கே வந்த போது இந்த பங்களாவிற்கு சமீபத்தில் வீடுகள் காணப்படவில்லையே! அதுவுமன்றி, இவ்வளவு பக்கத்தில் ஆறு ஒன்று இப்போது காணப்படுகிறதே! நான் பார்த்த வரையில் இந்த இடத்தில் ஆறு இருந்ததாகவே நினைவுண்டாக வில்லையே! என்ன கண்கட்டு வித்தை இது? நேற்று இரவில் நான் தூங்கிய காலத்தில் இருந்தது ஓர் இடம், இப்போது நான் இருப்பது வேறே இடம். பட்டாபிராம பிள்ளை ஏதோ கருத்தோடு என்னை நான் இருந்த இடத்தில் இருந்து தூக்கிக் கொண்டு வந்து அதே பங்களாவில் வேறொரு விடுதியில் விட்டிருக்க வேண்டும் என்று நான் உத்தேசித்தது தவறாகத் தோன்றுகிறதே! இந்தப் பங்களாவே பட்டாபிராம பிள்ளை வசிக்கும் பங்களா அல்ல போலிருக்கிறதே! அந்த இடத்தில் இருந்து நான் இந்த இடத்திற்கு

எப்படி வந்திருப்பேன்! ஆற்றங் கரை இவ்வளவு பக்கத்தில் இருப்பதைப் பார்த்தால், இது அநேகமாய் **சிந்தாதிரிப் பேட்டை** என்றே நினைக்க வேண்டி இருக்கிறது. அந்தப் பேட்டையில் தான் வீடுகளுக்குக் கிழக்குத் திக்கில் ஆறு போகிறது. என்ன கருத்தோடு என்னை இவர்கள் சிந்தாதிரிப் பேட்டைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. ஒருவேளை இது போலீஸ் ஸ்டேஷனோ என்று சந்தேகிப்பதற்கும் இடமில்லை. போலீஸ் ஸ்டேஷனில் கருங்கல்லினாலும் இரும்பினாலும் சூழப்பட்ட வெறும் அறையான சிறைச்சாலையே (லாக்கப்) இருக்குமன்றி இப்படிப்பட்ட ஒரு மகாராணியின் அந்தப்புரம் இருப்பதற்கு ஏதுவில்லை அல்லவா? ஆகவே, இது போலீஸ் ஸ்டேஷனல்ல. இது எந்த இடமாகவாவது இருக்கட்டும். இந்த இடத்திற்கு நான் எப்படி வந்தேன் என்பதல்லவா விளங்கவில்லை. ஓர் அற்ப ஓசை கேட்டாலும், நான் வழித்துக் கொள்ளக் கூடியவன். நான் படுத்திருந்த சோபாவோடு இவர்கள் என்னை ஜாக்கிரதையாகத் தூக்கிக் கொண்டு வந்திருந்தால்தான் என்ன? ஒரு பங்களாவின் மேன் மாடத்தில் இருந்து கீழே இறங்கி, இன்னொரு பங்களாவின் உப்பரிகையில் ஏறும்போது, அந்த சோபா அசையாமலா இருந்திருக்கும். அதுவுமன்றி, என்னைத் தூக்கி வந்த ஆள்கள்தான் ஒரு வேளை நிரம்பவும் எச்சரிக்கையாகவும் நடந்து சந்தடி செய்யாமலே இருந்தாலும், ஒரு பங்களாவில் இருந்து இன்னொரு பங்களாவிற்குப் போவதற்குள் நடு வழியில் ஏதாவது அற்ப ஓசை கூடவா உண்டாகாமல் இருந்திருக்கும்? கொஞ்சம் அசைவாவது, ஓசையாவது உண்டாகி இருந்தால் நான் எப்படியும் விழித்துக் கொண்டிருப்பேனே! ஒன்றும் இல்லாமல் இவ்வளவு பெருத்த மாறுபாட்டை எப்படி நிறைவேற்றினார்கள்? ஒருவேளை நான் எருமை மாட்டைப் போல அடியோடு உணர்ச்சியில்லாமல் கடுமையான தூக்கத்தில் ஆழ்ந்து போயிருந்திருக்கலாமா? அல்லது, இப்போது நான் காண்பது கனவா? ஒருவேளை நான் இன்னம் பட்டாபிராம பிள்ளையின் பங்களாவிலேயே தூங்கிக் கொண்டிருக்கிறேனா? அல்லது நானும் கோபாலசாமியும் பட்டாபிராம பிள்ளையின்

பங்களாவிற்குப் போனதாக நினைவிருப்பதுகூடக் கனவின் காட்சியா? என்ன விநோதம் இது! என்ன ஜால வித்தை இது! எல்லாம் ஒரே குளறுபடியாக அல்லவா தோன்றுகிறது" என்று கந்தசாமி பலவாறு சிந்தனை செய்தவனாய்க் கீழே குனிந்து தனது உடம்பைப் பார்த்துக் கொண்டான். தான் பெண் உடையில் அப்போதும் இருந்ததை அவன் பார்த்து, தான் மனோன்மணியிடம் பெண் வேஷத்தோடு போனது நிஜம் என்று அவன் உறுதி செய்து கொண்டான். ஆனாலும், அப்படிப்பட்ட இடமாறுபாடு ஏற்பட்டது எப்படி என்பதையும், அப்படி அவர்கள் செய்வதன் நோக்கம் என்ன என்பதையும் உணர்ந்து கொள்ள மாட்டாதவனாய் மறுபடி கட்டிலின் மீது உட்கார்ந்து ஒய்ந்து திண்டில் சாய்ந்து கொண்டான்.

அவ்வாறு அரைநாழிகை காலம் சென்றது. சடேரென்று ஓர் ஓசை கதவின் பக்கத்தில் உண்டாயிற்று. கந்தசாமி திடுக்கிட்டு எழுந்து நிமிர்ந்து உட்கார்ந்து ஓசை வந்த திக்கில் தனது பார்வையைச் செலுத்தினான். அடுத்த நிமிஷம் கதவு மெதுவாகத் திறந்து கொண்டதைக் கண்ட கந்தசாமி சற்று முன் உண்டான ஓசை யாரோ கதவைத் திறந்ததால் ஏற்பட்ட ஓசை என்று யூகித்துக் கொண்டு யார் வரப்போகிறார்கள் என்று ஆவலோடு உற்று நோக்கினான். பட்டாபிராம பிள்ளை தனது உண்மையை எவ்வளவு தூரம் கண்டு கொண்டிருக்கிறார் என்பதும், தன்னை அவர் என்ன செய்ய உத்தேசிக்கிறார் என்பதும் உடனே தெரிந்து போகும் என்ற எண்ணம் அவனது மனதில் அதே க்ஷணத்தில் உதித்தது. ஆகையால், அவனது மனதும் உடம்பும் துடிதுடித்து ஆவலே வடிவாகவும் சஞ்சலமே நிறைவாகவும் காணப்பட்டன. அப்போது ஒரு கிழவி ஒரு கையில் ஒரு பெரிய தாம்பாளத்தை யும், இன்னொரு கையில் ஒரு கூஜாவையும் வைத்துக் கொண்டு உள்ளே நுழைந்தாள். தாம்பாளத்தில் பலவகைப்பட்ட சிற்றுண்டி களும், கூஜாவில் பாலும் இருந்தன என்பது எளிதில் யூகித்துக் கொள்ளக் கூடியதாக இருந்தது. அவைகளை எடுத்து வந்தவள் ஒரு வேலைக்காரி என்பதும் அவளது ஏழ்மையான தோற்றத்தில் இருந்து கண்டுகொள்ளக் கூடியதாக இருந்தது. அந்த

வேலைக்காரி கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தவுடனே வேறே யாரோ ஒருவர் அந்த விடுதிக்கு வெளியில் இருந்து கதவை மறுபடி மூடி அப்புறத்தில் தாளிட்டுக் கொண்டதும் தெரிந்தது. அவ்வாறு போஜன பதார்த்தங்களோடு உள்ளே வந்த வேலைக்காரி கட்டிலின் பக்கத்தில் காணப்பட்ட சலவைக்கல் மேடை ஒன்றை அடைந்து, தான் கொணர்ந்திருந்த வஸ்துக்களை அதன் மேல் வைத்துவிட்டு, அவ்விடத்தை விட்டுத் தண்ணீர்க் குழாய் இருந்த இடத்திற்குப் போய், ஒரு செம்பில் தண்ணீர் எடுத்துக் கொண்டு வந்து, அதையும் சலவைக்கல் மேடைமீது வைத்துவிட்டு நிரம்பவும் மரியாதையும் பணிவாகவும் கந்தசாமிக்கு எதிரில் நின்று, "அம்மா! உங்களுக்குப் பலகாரம் வந்திருக்கிறது. நீங்கள் பல் தேய்த்துக் கொண்டீர்களா? தேய்த்தாய்விட்டது என்றால், எழுந்து வந்து உட்கார்ந்து கொள்ளுங்கள். நான் எடுத்துப் பரிமாறுகிறேன்" என்றாள்.

அந்த வேலைக்காரி கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்த போது, கந்தசாமி அவளிடம் பல கேள்விகள் கேட்க வேண்டும் என்ற பதைப்பைக் கொண்டான். ஆனாலும், வேலைக்காரியே முதலில் தன்னோடு எப்படி பேசுகிறாள் என்பதை உணர்ந்து கொண்டு அதற்குப் பிறகு தான் கேள்விகள் கேட்க வேண்டும் என்று தீர்மானித்து, நிரம்பவும் பாடுபட்டுத் தனது ஆவலை அடக்கிக் கொண்டு மௌனமாக இருந்தான். வேலைக்காரி தன்னை "அம்மா" என்று அழைத்ததைக் கேட்டு, அவள் உண்மையான பணிவோடும் மரியாதையோடும் தன்னிடம் நடந்து கொள்வதைக் காணவே, அவற்றில் இருந்து அவன் பலவிதமான யூகங்கள் செய்யலானான். தான் உண்மையில் பெண்பிள்ளை என்றே அவர்கள் நினைத்துக் கொண்டு இருப்பதாகவும், தான் கந்தசாமி என்பதை அவர்கள் இன்னம் தெரிந்து கொள்ளவில்லை என்றும், அவன் ஒருவாறு நிர்ணயித்துக் கொண்டான்; அதுவுமன்றி, அவர்கள் தன்னை அப்படிப்பட்ட சிரேஷ்டமான விடுதியில் வைத்திருப்பதைக் கொண்டும், அந்த வேலைக்காரியிடம் பிரியத்தோடு பலவகைப் பட்ட ஆகாரங்கள் அனுப்பி இருப்பதில் இருந்தும், அவள்

தன்னிடம் பணிவாகவும் மரியாதையாகவும் நடந்து கொள்வதில் இருந்து பட்டாபிராம பிள்ளை முதலியோர் தன் விஷயத்தில் கோபமாவது அவமரியாதையாவது காட்ட எண்ணவில்லை என்றும், அவர்கள் முன்னிலும் அதிகமாகத் தன்னை கௌரவப் படுத்துவதற்கு அனுகூலமாக ஏதோ புதிய சம்பவம் நிகழ்ந்திருக்க வேண்டும் என்றும் யூகித்துக் கொண்டான். அப்போது காலை சுமார் 7-மணி இருக்கலாம். அந்த வேளைக்கு அவன் எப்போதும் பலகாரம், அல்லது, பழைய அமுது உண்கிறது வழக்கம். ஆதலால், அவனது வயிற்றில் பசி உண்டாகி இருந்தது. ஆனால், அந்த வேலைக்காரி நல்ல உயர்ந்த ஜாதியைச் சேர்ந்தவளா என்பதையும், இன்னம் தான் கேட்க எண்ணிய சந்தேகங் களையும் கேட்டு நிவர்த்தி செய்து கொண்டு, அதன் பிறகு தனது போஜனத்தைக் கவனிக்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டவனாய், அந்த வேலைக்காரியை நோக்கி அன்பாகப் பேசத் தொடங்கி "ஏனம்மா! உன் பெயர் என்ன?" என்றான்.

வேலைக்காரி, "என் பெயர் பார்வதி" என்றாள்; உடனே கந்தசாமி, "நீ எந்த ஜாதியைச் சேர்ந்தவள்?" என்றான். பார்வதி "நான் சைவ வேளாளர் வம்சத்தைச் சேர்ந்தவள். இந்தப் பங்களாவில் இன்னும் இரண்டு வேலைக்காரிகள் இருக்கிறார்கள். அவர்கள் மட்டமான ஜாதியைச் சேர்ந்தவர்கள். நீங்கள் மேலான ஜாதியைச் சேர்ந்தவர்கள் ஆகையால், அவர்களிடம் ஆகாரம் அனுப்பினால் நீங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டீர்கள் என்று நினைத்து எஜமானர் இவைகளை என்னிடம் கொடுத்தனுப்பினார். இந்த வீட்டு எஜமானர் தாமும் உங்களுடைய ஜாதியைச் சேர்ந்தவர் என்றும், ஆகையால் நீங்கள் கொஞ்சமும் யோசனை செய்யாமல் சாப்பிடலாம் என்றும் சொல்லச் சொன்னார்" என்றாள். அதைக் கேட்கவே கந்தசாமியின் மனதில் ஒருவித சந்தேகம் உதித்தது. தான் மன்னார் குடி வேலாயுதம் பிள்ளையின் மைத்துனி என்று சொல்லிக் கொண்டு வந்து, மனோன்மணியின் கலியாண விஷயங்களை எல்லாம் அறிந்தவள் போல, அவளிடம் பேசியதில் இருந்து பட்டாபிராம பிள்ளை சைவ வேளாளர் வகுப்பைச் சேர்ந்தவர் என்பது தனக்குத் தெரிந்திருக்க வேண்டும்

என்பதைக் கருதாமல், பட்டாபிராம பிள்ளை தனது ஜாதியின் உயர்வைப்பற்றி எதற்காகப் புகழ்ந்து பேசினார் என்ற சந்தேகம் கந்தசாமியின் மனதில் உண்டாயிற்று. அந்தச் சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்வதற்கு முன் முக்கியமான சில விஷயங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ள நினைத்து, "ஏன் பார்வதீ! உங்கள் எஜமானருடைய ஜாதி உயர்வான தென்பது எனக்கு நன்றாகத் தெரியும். அது எனக்குத் தெரியும் என்பதை உங்கள் எஜமானரும் அறிவார். ஆகையால், அவர் இந்த விஷயத்தில் எனக்குச் சமாதானம் சொல்லி அனுப்பவே முகாந்திரம் இல்லை. அது போகட்டும். நேற்று நான் வேறே ஓர் அறையில் ஒரு சோபாவின் மேல் அல்லவா படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தேன். அப்படி இருக்க, நான் எப்படி இந்த விடுதிக்கு வந்தேன் என்பது தெரியவில்லையே! நான் தூங்கிக் கொண்டிருந்தபோது ஒருவேளை என்னை யாராவது சோபாவோடு தூக்கிக்கொண்டு வந்து இந்தப் பஞ்சணையில் விட்டார்களா? அங்கே இருந்த என்னை என்ன உத்தேசத்தோடு இங்கே கொண்டு வந்து விட்டிருக்கிறார்கள்? இந்த விடுதி அதே பங்களாவில் இருக்கிறதா? அல்லது வேறே பங்களாவைச் சேர்ந்ததா? வேறே இடமானால், இது எந்தப் பேட்டையில் உள்ள இடம்?" என்றான்.

உடனே வேலைக்காரி, "அம்மா! நீங்கள் பேசுவது வேடிக்கை யாக இருக்கிறது; நீங்கள் நேற்று இரவில் இருந்த உங்களுடைய பங்களாவில் இப்படிப்பட்ட விடுதி இருக்கிறதா, இல்லையா என்பது உங்களுக்கே தெரியாதா? அப்படியிருக்க, இது அதே பங்களாவில் உள்ள வேறே விடுதியா என்று கேட்பது ஆச்சரியமாக இருக்கிறது. அதுவுமன்றி, எங்கள் எஜமானருடைய ஜாதி இன்னதென்பது உங்களுக்கு தெரியும் என்று நீங்கள் சொல் வதும் தவறு. எங்களுடைய எஜமான் இன்னார் என்பதே உங்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. ஆகையால் நீங்கள் இப்படித் தடுமாறிப் பேசுகிறீர்கள் என்பது நிச்சயம்; உங்களுடைய சந்தேகத்தை நான் முதலில் நிவர்த்தி செய்து விடுகிறேன். அதன் பிறகு உங்களுக்கு எல்லாம் தெளிவுபட்டுப் போகும்" என்றாள்.

அவளது சொற்களைக் கேட்ட கந்தசாமி நிரம்பவும் பிரமிப் படைந்து ஸ்தம்பித்து அப்படியே உட்கார்ந்து போனான். அவனது மனதில் பலவகைப்பட்ட எண்ணங்களும் சந்தேகங் களும் மின்னல்கள் போல மளமளவென்று தோன்றி மறைய ஆரம்பித்தன. வேலைக்காரி என்ன சொல்லப் போகிறாள் என்று மிகுந்த ஆவலோடு அவளது முகத்தைப் பார்த்தபடி மௌனமாக இருக்க, உடனே வேலைக்காரி, "அம்மா! இந்த பங்களாவின் எஜமானருக்கு சுமார் 10 லட்சம் ரூபாய்க்கு சொத்து இருக்கிறது. அவருக்கு வயது சுமார் இருபத்தைந்து தான் இருக்கும். பார்வைக்கு அவர் அழகாகவே இருப்பார். அவருக்குத் தாய், தகப்பன், சம்சாரம் முதலிய பந்துக்கள் யாரும் இல்லை. அவர் ஏகாங்கி. நீங்கள் பள்ளிக்கூடத்திற்குப் போன காலத்தில், அவர் உங்களைப் பலதடவைகளில் பார்க்க நேர்ந்ததாம். உங்கள் மேல் அவருக்கு நிரம்பவும் பிரியம் ஏற்பட்டு விட்டதாம். எப்படியாவது உங்களைக் கொண்டு வந்து, தாம் கலியாணம் செய்து கொண்டு இவ்வளவு அபாரமான செல்வத்திற்கும் உங்களை எஜமானியாக்க வேண்டும் என்ற ஆசை அவருடைய மனதில் உண்டாகி விட்டதாம். தாம் ஏகாங்கியாய் இருப்பதால், நேரில் உங்களுடைய தகப்பனாரிடம் கேட்டு அவருடைய சம்மதியைப் பெறமுடியா தென்று நினைத்து, அவர் ரகசியமாகப் பல ஆள்களை அனுப்பி உங்களை இவ்விடத்திற்குக் கொண்டுவரச் செய்திருக்கிறார். நாளைய தினம் காலையில் உங்களுக்கும் அவருக்கும் கலியாணம் நடக்கப் போகிறது. இது தான் உண்மையான வரலாறு" என்றாள்.

அவள் சொன்ன வரலாற்றைக் கேட்ட கந்தசாமி விவரிக்க இயலாத அபாரமான வியப்பும் பிரமிப்பும் திகிலும் அடைந்தவ னாய்த் தான் என்ன மறுமொழி கூறுவதென்பதை அறியாமல் சிறிது நேரம் அப்படியே ஓய்ந்து உட்கார்ந்து போய்விட்டான். மனோன்மணியின் மீது மோகங்கொண்ட யாரோ ஒரு பெரிய மனிதன் திருட்டுத்தனமாகவும் பலவந்தமாகவும் அவளை அபகரித்து வரும்படி ஆள்களை அனுப்ப, அவர்கள் தன்னை மனோன்மணி என்று நினைத்து ஆள் மாறாட்டமாகத் தன்னை

எடுத்து வந்திருக்கிறார்கள் என்ற உண்மை அப்போதே அவனுக்குப் புலப்பட்டது. முதல் நாள் இரவில் தான் தூங்கிக் கொண்டிருந்த காலத்தில் யாரோ சில முரடர்கள் திடீரென்று உள்ளே நுழைந்ததாகத் தனக்கு உண்டான ஞாபகத்தை, தான் கனவின் உணர்ச்சி என்று எண்ணியது தவறென்றும், மனோன்மணியம்மாளை அபகரித்துச் செல்வதற்கு முரட்டாள்கள் வந்தபோது தான் விழித்துக் கொண்டிருக்க வேண்டும் என்றும் அவன் நிச்சயித்துக் கொண்டு அவர்கள் கூறிய வார்த்தைகளை எல்லாம் ஞாபகத்திற்குக் கொண்டுவர முயன்றான். முரட்டு மனிதர்களுள் ஒருவன் மற்றவர்களை நோக்கி, "மனோன்மணி யம்மாள் அதோ இருக்கிறாள். அவள் விழித்துக் கொண்டு கூச்சலிட்டாலும் பாதகமில்லை. கீழே இருப்பவர்கள் எல்லாம் அப்படி இப்படி அசைய முடியாமலும் கூச்சலிட முடியாமலும் கட்டிப் போட்டிருக்கிறோம். சீசாவைப் பெண்ணின் மூக்கில் பிடியுங்கள்" என்று கூறிய வார்த்தைகள் ஒன்றன் பின் ஒன்றாக கந்தசாமியின் நினைவிற்கு வந்தன. அவற்றின் கருத்து அப்போதே அவனுக்குச் சந்தேகமற விளங்கியது. தன்னை அவர்கள் தூக்கி எடுத்துக் கொண்டு வேறே பங்களாவிற்குக் கொணர்ந்து படுக்க வைத்த விவரம் எதுவும் தனக்குச் சுத்தமாகத் தெரியாமல் போனதற்குக் காரணம் அவர்கள் ஏதோ மயக்க மருந்துள்ள ஒரு சீசாவைத் தனது மூக்கில் பிடித்து, தான் ஸ்மரணை தப்பிப் போகும்படி செய்ததே என்பது நிச்சயப்பட்டது. வேலைக்காரி தனக்கு அப்போது சரியானபடி மயக்கம் தெளியவில்லை என்று கூறியதும், அவர்கள் மயக்க மருந்தை உபயோகித்தார்கள் என்பதை ஊர்ஜிதப்படுத்தியது. தான் பெண் வேஷந்தரித்து, மனோன்மணி அம்மாளைப் பார்த்து அவளுடன் சம்பாஷித்து அவளது குணாதிசயங்களை அறிய வேண்டும் என்று வந்த தினமும், அந்த முரட்டு மனிதர்கள் அவளை அபகரித்துப் போக வந்த தினமும் ஒத்துக் கொண்டது அவனுக்குப் பெருத்த ஆச்சரியமாகத் தோன்றியது. ஆனாலும், மனோன்மணிக்குப் பதிலாக தான் அகப்பட்டுக் கொண்டதைப் பற்றி அவன் சிறிதும் வருந்தவில்லை. அபலையான மனோன்மணியம்மாளுக்கு அத்தகைய அபாயம் நேராமல்

தடுப்பதற்காகவே கடவுள் தன் மனதில் புகுந்து, பெண் வேஷந் தரித்து அவளிடம் போக வேண்டும் என்ற எண்ணத்தைக் கொடுத்திருக்கிறார் என்ற நினைவுண்டாயிற்று. கடவுளின் காரியங்களும் அற்புதச் செயல்களும் இருந்த வகையை நினைத்து நினைத்துக் கந்தசாமி முற்றிலும் வியப்பும் களிப்பும் அடைந்ததன்றி, மனோன்மணி அம்மாளுக்கு நேர இருந்த பெருத்த அபாயம் தன் மூலமாக நிவர்த்தியானதைக் குறித்து அபரிமிதமான உவகை அடைந்தவனாய்ச் சிறிது நேரம் மௌனத்தில் ஆழ்ந்திருந்தான். ஆண்மக்கள் கண்டு ஆசை கொள்ளத் தக்க மேம்பாடு எதுவும் மனோன்மணியம்மாளிடம் இல்லை என்று தான் நினைத்ததற்கு நேர் விரோதமாக அந்தச் சம்பவம் நிகழ்ந்திருக்கிறதே என்ற நினைவும் உண்டாயிற்று. வாடி மங்கிப் போன அவளது அழகைக் கண்டு ஓர் ஆடவன் அவள் மீது மோகங் கொண்டது நம்பத்தகாத விஷயமாகத் தோன்றியது. ஸ்திரீகளின் உண்மையான யோக்கியதையை அறிந்து கொள்ளாமல் மனிதர் தூரப்பார்வையில் இருந்தே மதிமயங்கி, தீபச்சுடரில் போய் விழுந்து மடியும் விட்டில் பூச்சியைப் போல, மேல் விழுந்து அவளை அடையும் பொருட்டு எப்படிப்பட்ட துன்மார்க்கமான செய்கைகளையும் கூசாமல் புரிகிறார்களே என்ற நினைவு உண்டாயிற்று. மனோன்மணியம்மாளின் மீது இன்னொருவன் அவ்வாறு கடுமையான மோகங் கொண்டு, அவளைத் தூக்கிக்கொண்டு போகும்படியும், அதைத் தான் உணர்ந்து கொள்ளும்படியும் கடவுள் செய்தது, அதனால் தனக்கு ஒரு படிப்பினை கற்றுக் கொடுப்பதற்காகவோ என்றும் கந்தசாமி நினைத்தான். "நீ இவளை வெறுக்கிறாயே; இவள் மீது கடு மையல் கொள்ளக் கூடியவர்களும் உலகத்தில் இருக்கிறார்கள் பார்" என்று தனக்குச் சுட்டிக்காட்டுவதற்காகவே, கடவுள் அவ்வாறு சூழ்ச்சி செய்திருப்பாரோ என்ற எண்ணமும் கந்தசாமியினது மனதில் தோன்றியது. அந்த அபூர்வமான சம்பவத்தைப் பற்றிச் சிந்திக்கச் சிந்திக்க, அவனது மனம் மனோன்மணியம்மாளது விஷயத்தில் ஓர் இளக்கமும் அன்பும் கொள்ள ஆரம்பித்தது. அவளது மனக் குணக்கையும் படிப்பினால் ஏற்பட்ட மாறுபாடுகளையும் நினைக்க, அவள் தனக்குச் சரிப்பட

மாட்டாள் என்ற எண்ணம் உறுதியாக ஏற்பட்டது. ஆகையால், அவனது மனம் மாறி மாறித் துன்பமும் இன்பமும், ஏக்கமும், ஆறுதலும் கொண்டு தாமரை இலைத் தண்ணீர் போலத் தவிக்கலாயிற்று.

தான் மறுபடியும் வேலைக்காரியோடு சம்பாஷித்து மற்ற விவரங்களை எல்லாம் தெரிந்துகொள்ள வேண்டும் என்று நினைத்தவனாய்க் கந்தசாமி தான் மனோன்மணியல்ல என்பதை யாவது தான் ஆண்பிள்ளை என்பதையாவது அவளிடம் வெளியிடுவது உசிதமல்ல எனத் தீர்மானித்துக் கொண்டு வேலைக்காரியைப் பார்த்து, "ஏனம்மா! இப்போது நாம் இருக்கும் இந்த மாளிகை பட்டணத்திலேயே இருப்பதா, அல்லது, பக்கத்தில் உள்ள ஏதாவது ஊரில் இருப்பதா? இந்தத் தெருவின் பெயர் என்ன? என்னைக் கொண்டு வந்துள்ள உங்கள் எஜமான ருடைய பெயர் என்ன? அவருக்கு ஏதாவது உத்தியோகம் உண்டா? எல்லா விஷயங்களையும் விவரமாகச் சொல்" என்றான்.

அதைக் கேட்ட வேலைக்காரி, "அம்மா! என்னுடைய எஜமானர் பெரிய மிராசுதார்; அவருக்கு ஏராளமான பூஸ்திதியிருக்கிறது. அதோடு ரொக்கமாகவும், வீடுகளாகவும், நகைகளாகவும் அநேக லட்சம் ரூபாய் பெறுமான சொத்து இருக்கிறது. அவருக்கு உத்தி யோகமாவது வேறே தொழிலாவது செய்து பொருள் தேட வேண்டும் என்ற அவசியமே இல்லை. நீங்கள் அவரைக் கட்டிக் கொண்டால், எல்லா சம்பத்தும் உங்கள் இருவருக்குமே ஆகும். நீங்கள் நல்ல உயர்வான பதவியில் இருந்து எப்போதும் ஆனந்த மாகக் காலங்கழிக்கலாம். அந்த ஒரு சங்கதியைத்தான் நான் இப்போது சொல்ல முடியும். இவருடைய பெயர் இன்ன தென்பதையாவது, இந்த மாளிகை இன்ன இடத்தில் இருக்கிற தென்ற விவரத்தையாவது நீங்கள் கேட்டால், அதை நான் சொல்லக் கூடாதென்று அவர் கண்டித்து உத்தரவு செய்திருக்கிறார். நான் அதை மீறி நடக்க முடியாது. அதைப்பற்றி நீங்கள் என்மேல் வருத்தப்படக் கூடாது. நான் வேலைக்காரி தானே; நான் அவருடைய உத்தரவை மீறி நடந்தால் என்னுடைய பிழைப்பின் வாயில் மண் வீழ்ந்துவிடும்.

ஆகையால், அந்த விவரங்களை மாத்திரம் நீங்கள் கேட்க வேண்டாம்; மற்றபடி நீங்கள் காலால் இடும் வேலையை நான் தலையால் செய்யக் காத்திருக்கிறேன்" என்றாள்.

அதைக் கேட்ட கந்தசாமி மிகுந்த கலக்கமும் கவலையும் அடைந்தவனாய், அப்படிப்பட்ட பரமரகசியமான இடத்தில் இருந்து தான் எப்படித் தப்பிப் போகிறதென்ற அச்சமும் மலைப்பும் தோன்றி வதைக்கலாயின. ஆனாலும், அவன் மறுபடியும் பேசத்தொடங்கி, "அப்படியானால், என்னைக் கலியாணம் செய்து கொண்டு எந்த விவரத்தையும் எனக்குச் சொல்லாமல் என் ஆயிசுகால பரியந்தம் என்னை மறைவாக ஒளித்து வைத்திருக்க வேண்டும் என்று உன் எஜமானர் தீர்மானித் திருக்கிறாரா?" என்றான்.

வேலைக்காரி, "அவருடைய உள்கருத்து இன்னதென்பது எனக்குத் தெரியாது. அவர் என்னிடம் சொன்ன வரையில் நான் தெரிவித்து விட்டேன். நாளைய தினம் காலையில் எட்டு மணிக் கெல்லாம் உங்களுக்கும் அவருக்கும் கலியாணம் நடக்கப் போகிறது. மறுநாள் இரவிலேயே அநேகமாய் சாந்தி முகூர்த்தமும் வைத்துக் கொள்வார் போலிருக்கிறது. அப்போது அவர் உங்களோடு அன்னியோன்னியமாகப் பழகிய பின், உங்களை நம்பி ரகசியங்களை வெளியிடலாம் என்ற தைரியம் ஏற்படுமானால், ஒருவேளை அவர் எல்லா ரகசியங்களையும் உங்களிடம் சொல்லலாம். ஆனாலும் நீங்கள் உங்களுடைய தகப்பனாருக்கு ரகசியமாக எழுதி விஷயங்களைத் தெரிவித்து விட்டால், அவர் ஒருவேளை நியாயஸ்தலத்தின் மூலமாக இவர் பேரில் நடவடிக்கை ஏதாவது எடுத்துக் கொண்டால், இவருக்குக் கடுமையான தண்டனை கிடைக்கும் என்ற பயம் இருக்கும் அல்லவா. ஆகையால், இவர் தம்முடைய உண்மைகளை எவ்வளவு தூரம் உங்களிடம் வெளியிடுவார் என்பது நீங்கள் அவரோடு பழகப் பழகத்தான் காலக்கிரமத்தில் தெரியும்" என்றாள்.

அதைக் கேட்ட கந்தசாமி தான் அதற்கு மேல் என்ன சொல்வ தென்பதை அறியாதவனாய்ச் சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்த பின்னர் மறுபடி பேசத்தொடங்கி, "சரி; என்னுடைய

தலைவிதி இவருக்கு நான் பெண்ஜாதி ஆக வேண்டும் என்று இருக்குமானால் அதை நான் தடுக்க முடியாது. நடப்பது நடக்கட்டும். ஆனால், இவர் நேராக என் தகப்பனாரிடம் வந்து பேசி, என்னைக் கலியாணம் செய்து தரும்படி கேட்டிருக்கலாம். அவரும் அநேகமாய் அதற்கு இணங்கி இருக்கலாம். அப்போது எவருக்கும் சிரமமில்லாமல் நாங்கள் உலகத்தார் அறிய புருஷன் பெண்ஜாதி ஆகி இருக்கலாம். இப்படிப்பட்ட மூடுமந்திரம் எல்லாம் அவசியமாக இருந்திராது. சரி; நடந்தது நடந்துவிட்டது. இனி இதைப்பற்றிக் கவலைப்படுவதில் உபயோகமில்லை. இவர் எப்போது என்னைக் கண்டு என்மேல் ஆசை கொண்டாரோ, இவர் என்னை அன்பாகவும் பட்சமாகவும் நடத்துவார் என்பதைப் பற்றி சந்தேகமில்லை. என் தகப்பனாரும் கூட இருந்து இந்தக் கலியாணத்தை நடத்தி வைக்கவில்லையே என்ற ஒரு விஷயந்தான் என் மனசிற்குக் குறையாக இருக்கிறது. அதைத் தவிர, வேறே எதைப்பற்றியும் நான் விசனப்படவில்லை. என்னை இவர் பலதடவைகளில் பார்த்திருக்கிறார் என்று நீ சொல்லுகிறாய். ஆனால், நான் இவரைப் பார்த்திருக்கிறேனோ இல்லையோ என்பதை நிச்சயமாகச் சொல்ல முடியவில்லை. ஒருவேளை நான் இவரை இதற்கு முன் பார்த்தும் இருக்கலாம்; இல்லாமலும் இருக்கலாம். ஆனாலும், என்மேல் இவ்வளவு பிரியம் வைத்து, பற்பல ஏற்பாடுகளைச் செய்து என்னைக் கொண்டு வந்து கட்டிக்கொள்ள உத்தேசித்திருக்கும் மனிதர் பார்வைக்கு எப்படி இருக்கிறார் என்று பார்க்க வேண்டும் என்ற ஓர் ஆசை உண்டாகிறது. ஆனால் அவரையே நேரில் பார்ப்பதற்கு நிரம்பவும் லஜ்ஜையாக இருக்கிறது. அவருடைய புகைப்படம் ஏதாவது இருக்குமானால் அதை நீ எடுத்து வந்து எனக்குக் காட்டினால், அதுவே போதுமானது. மற்ற விஷயங் களைப் பற்றி நான் அவரிடத்திலேயே பிற்பாடு பேசிக்கொள் கிறேன்" என்றாள்.

அவள் யாதொரு ஆட்சேபணையும் கூறாமல் அவ்வளவு எளிதில் வழிப்பட்டு வந்ததைக் கண்ட வேலைக்காரி அளவற்ற

மகிழ்ச்சி அடைந்தவளாய், "சரி; உங்களுக்கு எஜமானருடைய புகைப்படம் தானே வேண்டும். அது கீழே இருக்கிறது. நான் போய்க் கொண்டுவந்து கொடுக்கிறேன். நேரமாகிறது. நீங்கள் முதலில் எழுந்து ஆகாரத்தை முடித்துக் கொள்ளுங்கள். நான் பரிமாறிவிட்டுப் போகிறேன்" என்றாள்.

கந்தசாமி, "எனக்கு அவ்வளவாக பசி உண்டாகவில்லை. ஆனாலும் உங்களுடைய திருப்திக்காக, நான் ஏதாவது கொஞ்சம் சாப்பிடுகிறேன். எனக்கு நீ இருந்து பரிமாற வேண்டும் என்பதில்லை. நானும் உன்னைப் போலப் பெண்பிள்ளை அல்லவா. நானே பரிமாறிக் கொண்டு சாப்பிடுகிறேன். நீ போய் முதலில் படத்தை எடுத்துக் கொண்டுவா. அதைப் பார்க்க, எனக்கு நிரம்பவும் ஆசையாக இருக்கிறது" என்றான்.

வேலைக்காரி அதற்கு இணங்கி அவ்விடத்தை விட்டுக் கதவண்டை போய், அதை மெதுவாகத் தட்ட, அதன் பின்புறத்தில் ஆயத்தமாக நின்ற மனிதன் அதைத் திறந்துவிட, அவள் அப்பால் சென்று மறுபடியும் மூடி வெளியில் தாளிட்டுக் கொண்டு போய்விட்டாள்.

கந்தசாமி உடனே கட்டிலைவிட்டுக் கீழே இறங்கி சலவைக்கல் மேடையண்டை சென்று அவ்விடத்தில் வைக்கப்பட்டிருந்த தாம்பாளத்தின் மேல் மூடப்பட்டிருந்த துணியை விலக்கினான். தாம்பாளத்தில் மாதுரியமான பலவகைப்பட்ட பக்ஷண பலகாரங் கள் காணப்பட்டன. அந்த மாளிகையை விட்டுத் தான் வெளிப்பட எத்தனை நாட்கள் செல்லுமோ என்றும், அதுவரையில் தான் பட்டினி கிடக்க முடியாதென்றும் அவன் நினைத்ததன்றி, அந்த வேலைக்காரியின் தோற்றம் சொற்கள் முதலியவற்றில் இருந்து அவள் உயர்ந்த ஜாதி ஸ்திரீதான் என்பதையும் நிச்சயித்துக் கொண்டான். ஆகையால், அவன் அங்கே வைக்கப்பட்டிருந்த சிற்றுண்டிகளுள் சிலவற்றையும், சிறிதளவு பாலையும் உட்கொண்டு, அவ்விடத்தை விட்டுத் திரும்பி வந்து மறுபடி கட்டிலின் மீது உட்கார்ந்து சாய்ந்து கொண்டான். அவனது உடம்பு மாத்திரம் அவ்விடத்தில் இருந்து இயங்கிக் கொண்டிருந்ததேயன்றி, அவனது மனம் முழுதும்

சிந்தனைக் கடலில் ஆழ்ந்து போயிருந்தது. "நேற்று இரவில் என்னை முரட்டு மனிதர்கள் எடுக்க வந்த காலத்தில், கீழே இருந்த எல்லோரையும் கட்டி அப்படி இப்படி அசையமாட்டாமலும் கூச்சலிடமாட்டாமலும் செய்து விட்டு வந்திருப்பதாகச் சொன்னது எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. அநேகமாய்ப் பட்டாபிராம பிள்ளையும், என் சிநேகிதனான கோபாலசாமியும் கூட அதே கதிக்குத்தான் ஆளாகி இருக்க வேண்டும். மனோன்மணியம்மாள் ஒருவேளை தனியான ஓர் அறையில் படுத்துக் கொண்டிருக்கலாம். இந்த முரட்டு மனிதர்கள் அந்த அறையைத் திறந்து பார்க்காமல் நேராக நான் இருந்த அறைக்கே வந்திருக்கலாம். மனோன்மணியம்மாளின் படுக்கை அறையில் அவர்கள் என்னைச் சிறைப்படுத்தி இருந்தார்கள் அல்லவா. அந்த அறையில்தான் எப்போதும் மனோன்மணியம்மாள் சயனித்துக் கொள்வதென்பதை எப்படியோ தெரிந்து கொண்ட இந்த முரடர்கள் நேராக அந்த அறைக்கு வந்திருக்கலாம். அவளை அவர்கள் பார்த்தே இருக்க மாட்டார்கள் போலிருக்கிறது. அந்த இடத்தில் படுத்திருந்த என்னைப் பார்த்து இவர்கள் மனோன்மணியம்மாள் என்று நினைத்து எடுத்துக் கொண்டு வந்திருக்கிறார்கள் போலிருக்கிறது. நடந்ததும் நன்மையாகவே தோன்றுகிறது. மனோன்மணியம்மாளை இவர்கள் வேறே இடத்தில் பார்த்திருந்தால், அவளையே தூக்கிக் கொண்டு வந்திருப்பார்கள். அப்படிச் செய்யாமல் என்னிடம் வந்ததில் இருந்து, இவர்கள் மனோன்மணியைப் பார்க்கவில்லை என்றே நினைக்க வேண்டி இருக்கிறது. இவர்கள் அவளைத் தவிர, மற்றவரைத்தான் கட்டிப் போட்டிருக்கிறார்கள் என்பதும் நிச்சயமாகத் தெரிகிறது. அந்த விஷயத்திலும் அவள் இந்த துஷ்டர்களுடைய உபத்திரவத்திற்கு இலக்காகாமல் தப்பியது அதிர்ஷ்ட வசத்தினால்தான். நம்முடைய கோபாலசாமியின் நிலைமைதான் நிரம்பவும் தர்மசங்கடமானதாக இருக்கும். பெண் வேஷத்தோடு உள்ளே இருந்த என்னை யாரோ முரடர்கள் தூக்கிக் கொண்டு போய் விட்டார்கள் என்றால், அவனுடைய நிலைமை என்னவாக இருக்கும். திருடனுக்குத் தேள் கொட்டிய நிலைமை போலவேதான் அது இருக்கும். அவன் என்னைத்

தேடிப்பிடிக்க முயற்சி செய்யாமல் இருக்க விரும்ப மாட்டான். நான் உண்மையில் கந்தசாமி என்பதைப் பட்டாபிராம பிள்ளை முதலியோரிடம் வெளியிட்டால்தான்,. என்னைத் தேடுவதற்கு, அவர்களுக்கு உண்மையான அக்கறை பிறக்கும் என்று அவன் நினைப்பது சகஜமே. நான் பெண் வேஷந் தரித்து வந்தேன் என்பதை வெளியிடுவது வெட்கக்கேடான விஷயம் என்றும் அவன் நினைப்பான். இப்படிப்பட்ட தர்மசங்கட நிலைமையில் அவன் எப்படித்தான் நடந்து கொள்வானோ தெரியவில்லை. எங்களோடு வந்த வேலைக்காரப் பெண்ணோ, புதிதாக இதற்கென்றே பிரத்தியேகமாய் அமர்த்திக் கொண்டு வரப்பட்ட கூலிக்காரி. ஆகையால், அவளைப் போலீசார் எவ்வளவுதான் வதைத்துக் கொன்றாலும், அவள் தனக்கு எந்த விவரமும் தெரியாது என்று சொல்ல முடியுமேயன்றி, வேறே எதையும் சொல்ல முடியாது. கோபாலசாமி என் சொல்லின்படி நடந்ததால், அவனுக்கு என்னால் இப்படிப்பட்ட பெருத்த உபத்திரவமும் அவமானமும் ஏற்பட்டு விட்டன. அதைப்பற்றித் தான் என் மனம் வருந்துகிறது. நாங்கள் ரகசியத்தில் செய்த சூழ்ச்சியின் வரலாற்றை அவன் வெளியிட்டு விட்டால்கூட, அதைப்பற்றி நான் அவன் மேல் வருத்தப்படவே நியாயமில்லை. இத்தனை ஏற்பாடுகள் செய்து இவர்கள் என்னை இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள்! இவர்களுடைய இருப்பிடத்தைப் போலீசார் கண்டு கொள்ளும்படி இவர்கள் அசட்டுத்தனமாக நடந்து கொண்டிருக்க மாட்டார்கள். அதுவுமன்றி, இவர்கள் மனோன்மணியம்மாளை அபகரிக்க வந்து ஆள் மாறாட்டமாக என்னைத் தூக்கிக்கொண்டு வந்து விட்டார்கள் என்ற உள்மர்மமும் பட்டாபிராம பிள்ளை, கோபாலசாமி முதலியோர்க்குத் தெரிய நியாயமில்லை. அந்த பங்களாவில் இரண்டு பெண்கள் இருக்கையில், மனோன்மணியம்மாளை விட்டு விருந்தாளியாக வந்தவளை இவர்கள் எடுத்துப் போனது எதற்காக என்று அவர்கள் யோசித்துப் பார்ப்பார்கள். எவ்வளவு தான் யோசித்துப் பார்த்தாலும், இவர்களுடைய உள்கருத்து அவர்களுக்குத் தெரியும் எனத் தோன்றவில்லை" என்று கந்தசாமி நினைத்துப் பலவாறு சிந்தனை செய்து கொண்டிருந்த

தருணத்தில், வேலைக்காரி மறுபடியும் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்து ஒரு புகைப்படத்தைக் கந்தசாமியிடத்தில் கொடுத்தாள்.

மிகுந்த ஆவலோடு கந்தசாமி அதை வாங்கி அதில் காணப்பட்ட புருஷ வடிவத்தை உற்று நோக்கினான். நோக்கவே, அவனது முகம் சடக்கென்று மாறுபட்டது. விவரிக்க முடியாத அபாரமான திகிலும் குழப்பமும் அவனது மனதில் குடி கொண்டன. முகம் முற்றிலும் விகாரப்பட்டுப் போயிற்று. ஆனாலும் அருகில் வேலைக்காரி நின்றதைக் கருதி அவன் தனது பதைப்பையும் முக மாறுபாட்டையும் அவ்வளவாக வெளிப்படுத்தாமல், தன்னை அடக்கிக் கொண்டு அந்த வேலைக்காரியை பார்த்து, "பார்வதீ! நீ போன பிற்பாடு நான் பலகாரம் கொஞ்சம் சாப்பிட்டேன். அது வயிற்றில் விழுந்தவுடன், ஒருவிதமான அயர்வு உண்டாகி உடம்பை அழுத்துகிறது. தூக்கம் கண்களை மயக்குகிறது. நான் முதலில் கொஞ்சம் இப்படியே படுத்துத் தூங்குகிறேன். நீ போய் வேறே ஏதாவது வேலை இருந்தால் பார்த்துவிட்டு மத்தியானம் இங்கே வா. அதற்குள் நான் இந்தப் படத்தையும் பார்த்து என் மனசை ஒரு வழிக்குக் கொண்டு வருகிறேன்" என்றான்.

அதைக் கேட்ட வேலைக்காரி அப்படியே ஆகட்டும் என்று கூறிக் கந்தசாமியைத் தனிமையில் விடுத்து அவ்விடத்தை விட்டு நடந்து கதவைத் தாளிட்டுக் கொண்டு அப்பால் போய்விட்டாள்.

உடனே கந்தசாமி அந்தப் புகைப்படத்தை எடுத்து நன்றாக உற்று நோக்கிச் சிறிது நேரம் ஆழ்ந்து யோசனை செய்து, "ஆகா! இப்பொழுதல்லவா உண்மை தெரிகிறது! இந்தப் படத்தில் இருப்பது கும்பகோணம் சட்டைநாத பிள்ளையினுடைய தம்பி மாசிலாமணியல்லவா! ஆம்; கொஞ்சமும் சந்தேகம் இல்லை. என்னை எடுத்துக் கொண்டு வரும்படி செய்தவன் மாசிலாமணி யாகத் தான் இருக்க வேண்டும். இந்த ஊர் கும்பகோணமாகத் தான் இருக்க வேண்டும். இதோ பக்கத்தில் தெரிவது காவிரி ஆறு போலத் தான் இருக்கின்றது. கும்பகோணத்தில் உள்ள இந்த துஷ்டன் பட்டணத்தில் உள்ள மனோன்மணியம்மாளைப் பார்க்கவாவது! அவள் மேல் காதல் கொள்வதாவது! அதெல்லாம்

கட்டுக்கதை. மனோன்மணியம்மாளை நான் கட்டிக்கொள்ளப் போகிறேன் என்ற சங்கதி இவனுக்கு எப்படியும் தெரிந்திருக்க லாம். இதற்கு முன் மன்னார்குடியில் பட்டாபிராம பிள்ளை இருந்த காலத்தில், தமது பெண்ணை மாசிலாமணிக்குக் கொடுப்பதாகச் சொல்லித்தானே சட்டைநாத பிள்ளையை நம்ப வைத்து அவனுடைய ரகசியங்களை எல்லாம் கிரகித்து அவனைச் சிறைச் சாலைக்கு அனுப்பினார். அந்த ஆத்திரத்தையும் எங்கள் மேல் உள்ள ஆத்திரத்தையும் தீர்த்துக் கொள்வதற்காகவே, இவன் மனோன்மணியம்மாளை அபகரித்து வந்து ரகசியத்தில் கலியாணம் செய்து கொள்ள உத்தேசித்திருக்கிறான் போலிருக் கிறது! இவனுடைய எண்ணத்தில் கடவுள் முன்னே மண்ணைப் போட்டது போல இப்போதும் போட்டுவிட்டதன்றி, மனோன் மணியம்மாளுக்குப் பிரதிநிதியாக என்னை அனுப்பி வைத்திருக் கிறார் போலிருக்கிறது! துரோபதைக்குப் பதிலாக பீமசேனன் பெண் வேஷம் போட்டுக் கொண்டு போய் மறைந்திருந்து கீசகனை வதம் செய்யவில்லையா? அதுபோல இவன் விஷயத்திலும் நடக்கும்படி கடவுள் சூழ்ச்சி செய்திருக்கிறார். இதைப் பார்த்தால், கடவுள் எனக்கும் மனோன்மணியம் மாளுக்கும் தான் முடிச்சுப் போட்டு வைத்துவிடுவாரோ என்ற சந்தேகங்கூட என் மனதில் உண்டாகிறது. இருக்கட்டும். நம்முடைய புத்தியையும் முயற்சியையும் மீறி ஒரு காரியம் நடக்குமானால், அது கடவுளின் அருளேயன்றி வேறல்ல. அதை நாம் தடுக்க முடியவே முடியாது. இருக்கட்டும். நாளைய தினம் கலியாணம் நடக்கப் போவதாக இவள் சொன்னதைக் கேட்டவுடன், எனக்குச் சிரிப்பு உண்டாயிற்று. இந்த வீட்டின் எஜமானரை நேரில் பார்க்க வேண்டும் என்று சொல்லி இங்கே வரச் செய்து, நான் என்னுடைய பெண் வேஷத்தைக் கலைத்து விட்டு என் இயற்கை வடிவத்தோடு இருந்து, நான் இம்மாதிரி வேஷத் தோடு வந்திருந்ததற்கு ஏதாவது ஒரு சமாதானம் சொன்னால், இவன் என்னை இவ்விடத்தை விட்டு அனுப்பி விடுவான் என்று சற்று முன் நினைத்தேன். இனி அந்த எண்ணப்படி நான் செய்வது நிரம்பவும் அபாயகரமாகத் தோன்றுகிறது. நான் உண்மையில் கந்தசாமி என்பதை இவன்

தெரிந்து கொள்வானானால், தனியாக தனியாக அகப்பட்டுக் கொண்டிருக்கும் என்னை இவன் கொலை செய்தாலும் செய்துவிடுவான். ஆகையால் நான் இப்படியே இருந்து மனோன்மணியம்மாள் போலவே நடிக்கிறேன். நாளைய தினம் காலையில் கலியாணமும் முடிவு பெறட்டும். அதன் பிறகு மறுநாள் இரவில் இவன் சாந்தி கலியாணம் நடத்த உத்தேசிக்கிறா னாம். அப்போது இவன் தனியாக இந்த அறைக்குள் வருவான். அதற்குள் நானும் யோசனை செய்து சந்தர்ப்பத்திற்குத் தகுந்தபடி நடந்து கொள்ளுகிறேன்" என்று தீர்மானித்துக் கொண்டவனாய்க் கட்டிலின் மீது சயனித்துக் கொண்டிருந்தான்.

★ ★ ★

அன்றைய பொழுது யாதொரு விசேஷ சம்பவமும் இன்றிக் கழிந்தது. கந்தசாமி இருந்த இடத்திற்கு அடிக்கடி வேலைக்காரி வந்து அவனுக்குத் தேவையான போஜனம் முதலிய சௌகரியங் களை உதவி விட்டுப் போய்க் கொண்டிருந்தாள். அவள் எப்போதும் தன்னோடு கூட இருந்தால், தான் ஆண்பிள்ளை என்பதை அவள் ஒருகால் கண்டு கொள்வாள் என்ற அச்சம் கொண்ட கந்தசாமி ஏதோ முகாந்திரத்தைச் சொல்லி அவளை வெளியில் அனுப்பிக் கொண்டே இருந்தான்.

அவன் அவ்வாறிருக்க, மாசிலாமணியோ வேலைக்காரியோடு அடிக்கடி பேசி, உள்ளே நடந்த விருத்தாந்தங்களைத் தெரிந்து கொண்டே இருந்தான். மனோன்மணியம்மாள் மகா அற்புதமான அழகும் வசீகரமான முகதேஜஸும் உடையவளாய், மகாலக்ஷுமியின் அவதாரம் போல இருப்பதாகவும், அந்தக் கலியாணத்திற்கு அவள் அதிக ஆட்சேபனை சொல்லி இடையூறு செய்யக் கூடியவளாகத் தோன்றவில்லை என்றும் வேலைக்காரி மாசிலாமணியிடம் தெரிவித்தாள். ஆதலால், அந்த யௌவனப் புருஷன் கட்டிலடங்கா மனவெழுச்சியும் மோகாவேசமும் கொண்டு, அத்தகைய இன்பவடிவான பெண்மணியைத் தான் எப்போது அடைவோம் என்று ஆவலாகிய பெருத்த அக்கினியால் தகிக்கப்பட்டவனாய் ஊணுறக்கம் இன்றி அதே சிந்தனையாக இருந்து சதாகாலமும் வேதனை அடைந்தவனாய்த்

தனது பொழுதைப் போக்கியதுமன்றி, வேலைக்காரி கந்தசாமி இருந்த அந்தப்புரத்தின் கதவைத்திறந்து கொண்டு உள்ளே வந்த சமயத்தில், கதவுத் திறப்பின் வழியாக எட்டி உட்புறத்தில் தனது பார்வையைச் செலுத்தி கட்டிலின் மேல் உட்கார்ந்திருந்த சுந்தர வடிவத்தின் பின்னழகைக் கண்டு மதிமயங்கி, உணர்வு கலங்கி காதற் கனலிற்கு இரையாய், உயிர் அழிந்து ஓய்வற்று இருக்கை கொள்ளாமல் பைத்தியங் கொண்டவன் போல அங்கும் இங்கும் உலாவுவதும், உட்காருவதும் பிரமித்து வெறு வெளியை நோக்கியபடி நின்று போலி மனோன்மணியம்மாளின் பின் அழகைத் தன் அகக்கண்ணினால் பாவித்து ஒரே நிலையில் நிற்பதுமாய் அன்றைய பொழுதைப் போக்கினான். கந்தருவ மாது போலத் தோன்றிய மகா சிலாக்கியமான வனப்பு வழிந்த அந்த மங்கை அவ்வளவு எளிதில் தனக்கு வசியப்பட்டுப் போனதை நினைத்து நினைத்து அவன் உருகிப் பாகாய் ஓடிக் கொண்டிருந்தான்.

மறுநாட் காலையில் கலியாண ஏற்பாடுகள் யாவும் சித்தமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. மூன்றாவது கட்டின் முற்றத்தில் கலியாண மண்டபம் அழகாக ஜோடிக்கப் பட்டிருந்தது. அந்தக் கட்டு முழுதும் வாழை மரங்கள், மாவிலைத் தோரணங்கள் முதலிய அலங்காரங்கள் எல்லாம் காணப்பட்டன. இடும்பன் சேர்வைகாரனும், அவனது கையாட்கள் சுமார் முப்பதின்மரும் வண்ணானிடம் இரவல் வாங்கிய ஜரிகை வேஷ்டிகள், பட்டுச் சொக்காய்கள், ஜரிகைத் தலைப்பாகைகள், ஜரிகை உருமாலைகள் முதலியவற்றைத் தரித்து விஜயம் செய்து தாழ்வாரங்களிலும் கூடங்களிலும் கண்ணியமாக வீற்றிருந்தனர். அவர்களுள் ஒருவன் புரோகிதரைப் போலப் பூணூல் முதலியவற்றை அணிந்து கையில் நாணல் பில் முதலிய வைதிக அங்கங்களோடு கலியாண மண்டபத்தில் உட்கார்ந்திருந்தான். இரண்டாவது கட்டில் இருந்தபடி வாத்தியக்காரர்கள் மேளம் வாசிக்கத் தொடங்கினர். மாசிலாமணி தன்னை நிரம்பவும் படாடோபமாக அலங்கரித்துக் கொண்டு, தனது கட்டைக்கால் வெளியில் தெரியாதபடி இடுப்பு வஸ்திரத்தால் தனது கால்களை மறைத்துக் கொண்டு தோன்றி மணையின் மேல் அமர்ந்தான். முகூர்த்த

காலம் வந்து விட்டதென்று புரோகிதர் கூறி அவசரப்படுத்தவே, வேலைக்காரிகளுள் இருவர் மேன்மாடத்திற்குச் சென்று போலி மனோன்மணியை அழைத்து வரப்போயினர். அன்றைய தினம் காலையிலேயே வேலைக்காரிகளின் வற்புறுத்தலுக் கிணங்கி கந்தசாமி உயர்ந்த ஆடை ஆபரணங்களை அணிந்து, தலைமுதல் கால் வரையில் வைர கற்களும், ஜரிகைகளும், பட்டும் தகத்தகாயமாக மின்ன அப்ஸர ஸ்திரீபோல விளங்கிக் கொண்டிருந்தான். ஆதலால், அவன் வேலைக்காரிகளால் நடத்தப்பட்டு, குனிந்த தலையோடு நாணிக் கோணிக் கட்டை விரல்களைப் பார்த்தபடி அன்ன நடை நடந்து கலியாண மண்டபத்திற்கு வந்து சேர்ந்தான். அவனை இப்போது நன்றாகப் பார்த்த மாசிலாமணி சகிக்க முடியாத மனப் பூரிப்பும் பரவசமும் அடைந்து ஆனந்த மயமாக வீற்றிருந்தான். அவனது இருதயமும் மார்பும் சந்தோஷப் பெருக்கைத் தாங்க மாட்டாது படீரென்று வெடித்துப் போய் விடுமோ என்று நினைக்கத்தக்க விபரீத நிலைமையில் இருந்தன. அவனது தேகம் விண்ணில் பறந்து சுவர்க்கலோகத்தை தரிசித்து வருவது போலத் தோன்றியது. அப்போதைக்கு அப்போது அவன் தனது கடைக் கண்ணால், அந்த இன்பவடிவத்தைப் பார்த்துப் பார்த்து உவகைப் பூத்துப் பேரின்ப வசத்தனாய் விளங்கினான். கந்தசாமி அரை மனதோடு அந்தக் கலியாணத்திற்கு இணங்குகிறவன் போல நடித்தபடி நாணிக்கோணி மணை மீது உட்கார்ந்து தலை குனிந்து தங்க விக்கிரகம் போல வீற்றிருந்தான். கலியாணம் கால்நாழிகை காலத்தில் முடிவடைந்தது. மாசிலாமணி திருமாங்கலியத்தைப் போலி மனோன்மணியம்மாளின் கழுத்தில் கட்டி முடிச்சுப் போட்டான். மேளக்காரர்கள் டும் டும் டும் டும் என்று அபாரமாக முழக்கி, அந்த முடிவைப் பாராட்டி ஆனந்தக் களிப்பும் மங்களமும் பாடி நிறுத்தினார்கள். மாசிலாமணி அதற்கு முன்னரே தயாரித்து ஆயத்தமாக வைத்திருந்த பெருத்த பெருத்த சன்மானங்களை எடுத்து புரோகிதர், இடும்பன் சேர்வைகாரன், அவனது ஆட்கள், மேளக்காரர்கள், வேலைக்காரர்கள், வேலைக்காரிகள் முதலிய எல்லோருக்கும் வழங்கினான். உடனே பெண் தனது அந்தப்புரத்திற்குப் போய்ச் சேர்ந்தாள்.

அன்றைய தினம் பகலிலும் இரவிலும் அந்த மாளிகையில் மகா நேர்த்தியான விருந்துச் சாப்பாடு இடும்பன் சேர்வைகாரன் முதலிய எல்லோருக்கும் நடைபெற்றது. கலியாணப் பெண்ணும் வேலைக்காரியால் சம்பிரமமாக விருந்து உண்ணுவிக்கப்பட்டாள். மாசிலாமணியோ தனது பூத உடம்போடு மோக்ஷ லோகத்தை அடைந்தவன் போலத் தோன்றியதன்றி, பசி தாகம் முதலிய எவ்விதமான தேகபாதையும் அற்றவனாய் மனோன்மணி மனோன்மணி என்று சதாகாலமும் ஜெபம் செய்து, மறுநாளைய இரவு எப்போது வரும் வருமென்று ஆவலோடு எதிர்பார்த்து இருந்தான். அந்தக் கலியாணம் எவ்வித இடையூறும் இன்றி அவ்வளவு விரைவில் முடிந்ததைப் பற்றி மாசிலாமணி இடும்பன் சேர்வைகாரன் முதலியவர்கள் பன்மடங்கு களிப்புற்று அதைப் பற்றியே பாராட்டிப் பேசிக் கொண்டிருந்தனர். தாங்கள் அப்படிச் செய்ததனால் பட்டாபிராம பிள்ளை முதலிய தமது எதிரிகளைத் தண்டித்ததோடு, மகா அற்புதமான அழகும் கல்வி முதிர்ச்சியும் நிறைந்த பெண்மணியான மனோன்மணியை சுலபத்தில் அடைந்து விட்டதைப்பற்றி அவர்கள் இரட்டிப்புக் குதூகலம் அடைந்தவராய்ப் பொழுதைப் போக்கினார்.

மறுநாளாகிய செவ்வாய்க்கிழமை வந்து சேர்ந்தது. மலைபோல வளர்ந்த அன்றைய பகற்பொழுது எப்பொழுது தொலையப் போகிறதென்று நினைத்து மனோன்மணியைப் பற்றியே பகற்கனவு கண்டுகொண்டு மாசிலாமணி இன்பமும் துன்பமும் ஒரே காலத்தில் வதைப்பதான விபரீத உணர்ச்சியைப் பெற்றவனாய் ஆவலே வடிவாக வீற்றிருக்க, அப்போது அவ்விடத்திற்கு வந்த இடும்பன் சேர்வைகாரன், "என்ன எஜமானே! நாம் செய்த காரியத்தில் ஒரு பெருத்த தவறல்லவா நேர்ந்துவிட்டது! இதோ பாருங்கள். இது பட்டணத்தில் நேற்றைய தினம் வெளியான சமாசாரப் பத்திரிகை. பட்டாபிராம பிள்ளை வீட்டில் இருந்து நாம் பெண்ணை அபகரித்து வந்த விஷயம் இதில் வெளியிடப்பட்டிருக்கிற மாதிரியைப் பாருங்கள்" என்று கூறிய வண்ணம் தனது கையில் இருந்த சமாசாரப் பத்திரிகையை நீட்ட, அதைக் கேட்டுத் திடுக்கிட்ட மாசிலாமணி

பத்திரிகையை வாங்கி அதன் ஒரு மூலையில் வெளியிடப் பட்டிருந்த செய்தியைப் படித்தான். அது அடியில் வருமாறு எழுதப்பட்டிருந்தது:--

### ஓர் அதிசய சம்பவம்

சென்னையில் பெரிய கலெக்டர் உத்தியோகம் பார்த்து வரும் பட்டாபிராம பிள்ளை என்ற கனவானும் அவரது ஒரே புத்திரியும் புரசைப்பாக்கத்தில் ஒரு பெரிய பங்களாவில் இருந்து வருகிறார்கள். அந்தப் பெண்ணை மன்னார்குடியில் உள்ள பிரபல மிராசுதாரரான வேலாயுதம் பிள்ளையின் இளைய குமாரர் கந்தசாமி பிள்ளைக்குக் கலியாணம் செய்வதாக அவர்கள் நிச்சயித்து, அடுத்த வெள்ளிக்கிழமை அன்று நிச்சயதார்த்தத்தைப் புரசை பாக்கம் பங்களாவில் நடத்த உத்தேசித்தார்களாம். சென்ற சனிக்கிழமை அன்று பகலில் பட்டாபிராம பிள்ளை அவரது கச்சேரிக்குப் போயிருந்தாராம். அவருடைய குமாரத்தி பங்களாவின் மேன்மாடத்தில் படித்துக் கொண்டிருந்தாளாம். வேலைக்காரரும் வேலைக்காரிகளும் கீழே இருந்தார்களாம். அப்போது, ஒரு யௌவனப் புருஷரும், யௌவன ஸ்திரீயும் தமது வேலைக்காரியோடு வந்து தாங்கள் கோமளேசுவரன் பேட்டையில் உள்ளவர்கள் என்றும், பெண்ணைப் பார்த்து விட்டுப் போக வந்திருப்பதாகவும் சொன்னார்களாம். அவர்களை வேலைக்காரி ஒருத்தி பெண்ணினிடம் அழைத்துக் கொண்டு போய்விட்டாளாம். பெண் அவர்கள் வந்திருக்கும் செய்தியை டெலிபோன் மூலமாக உடனே தனது தகப்பனாருக்குத் தெரிவித் தாளாம். தகப்பனார் எப்படியோ சந்தேகங்கொண்டு உடனே மன்னார்குடிக்குத் தந்தி அனுப்பி பதில் தந்தி வருவித்தாராம். பதில் தந்தியில் வேலாயுதம் பிள்ளை, தமக்கு மைத்துனியே யாரும் இல்லை என்றும், வந்திருப்பவர் ஒருவேளை தமது பகைவரைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் என்றும், ஜாக்கிரதையாக நடந்து கொள்ளும்படிக்கும் எழுதி இருந்தாராம். அதை உணர்ந்த பட்டாபிராம பிள்ளை உடனே தமது பங்களாவிற்கு வந்து, அவர்களைக் கண்டு உண்மையைக் கேட்க, அவர்கள் உண்மையான வரலாற்றைச் சொல்ல மறுத்து விட்டனராம்.

ஆகவே, பட்டாபிராம பிள்ளையும் போலீசாரும் சேர்ந்து விருந்தாளியாக வந்தவர்களைத் தனித்தனியான இரண்டு இடங்களில் அடைத்துப் பூட்டி வைத்திருந்தனராம். அன்றைய தினம் இரவு 12-மணி சமயம் இருக்குமாம். சுமார் 15 முரட்டாள்கள் திடீரென்று பங்களாவில் நுழைந்து பட்டாபிராம பிள்ளை காவல் காரர்கள் வேலைக்காரிகள் முதலிய எல்லோரையும் அடித்துக் கட்டிப் போட்டுவிட்டு மேன்மாடத்திற்குப் போய், அவ்விடத்தில் ஓர் அறைக்குள் அடைத்து வைக்கப்பட்டிருந்த விருந்தாளிப் பெண்பிள்ளையான யௌவன ஸ்திரீயை விடுவித்துக் கொண்டு போய்விட்டார்களாம். அவர்கள் போன இடத்தைக் கண்டுபிடிப்பதற்குரிய எவ்வித தகவலும் கிடைக்க வில்லை. விருந்தாளியாக வந்தவர்கள் தம்மோடுகூட அழைத்து வந்த வேலைக்காரப் பெண்பிள்ளையும் காணப்படவில்லை. அவளையும் முரட்டு மனிதர்கள் அழைத்துக் கொண்டு போனார்களா என்பதும், அல்லது, இரவில் ஏற்பட்ட சந்தடியில், அவளே தப்பித்து வெளியில் ஓடிப்போய் விட்டாளோ என்பதும் தெரியவில்லை. ஆனால் இதில் இன்னொரு முக்கிய சங்கதியும் நடந்திருக்கிறது. விருந்தாளியாக வந்த இருவருள் பெண்பிள்ளை மாத்திரம் விடுவிக்கப்பட்டாளே அன்றி, ஆண்பிள்ளையாகிய யௌவனப் புருஷன் இரவில் இருளில் நடந்த சச்சரவில், கலெக்டருடைய ஆள்களினாலோ அல்லது, வந்த முரடர்களினாலோ பலமாக அடிபட்டு மயங்கி ஸ்மரணை தப்பிக் கீழே வீழ்ந்து கிடந்தார். அவர் இறந்து போய் விட்டதாகக் கருதி ஒருவேளை, முரடர்கள் அவரைப் போட்டு விட்டுப் போயிருக்கலாம் எனத் தோன்றுகிறது. காலையில் போலீசார் வந்து எல்லோருடைய கட்டுகளையும் அவிழ்த்து விட்டதன்றி, ஸ்மரணை தப்பிக் கிடந்த விருந்தாளி ஆண் பிள்ளையை வைத்தியசாலைக்கு எடுத்துப் போயிருக்கிறார்கள். அவருக்குப் பல இடங்களில் காயங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இன்னம் அவர் பேசக்கூடிய நிலைமையை அடையவில்லை. அவர் அநேகமாய்ப் பிழைக்கமாட்டார் என்றே வைத்தியர்கள் சொல்லுகிறார்கள். அவர் வாயைத் திறந்து பேசி உண்மையை வெளியிட்டால் அன்றி, இந்த அதிசயச் சம்பவத்தின் உள்

ரகசியத்தைப் பற்றி, எந்தத் தகவலும் தெரியாமல் போய் விடும் என்றே எண்ண வேண்டியிருக்கிறது. ஆனால் அதிர்ஷ்ட வசமாக கலெக்டருடைய பெண் ஒரு பிரத்யேகமான இடத்தில் சயனித்து இருந்தமையால், யாதொரு துன்பமும் இன்றி அவள் தப்பினாள். இரவில் நடந்த சம்பவம் பொழுது விடிந்த பிறகுதான் அவளுக்குத் தெரியுமாம். காலையில் அவள் எழுந்து போய்த்தான் போலீசாரைத் தருவித்தாளாம், போலீசார் நிரம்பவும் பாடுபட்டுத் துப்பு விசாரித்து வருகிறார்கள்.

என்று எழுதப்பட்டிருந்த செய்தியைப் படித்த மாசிலாமணி திடுக்கிட்டு திக்பிரமை கொண்டவனாய், "என்ன ஆச்சரியம்! இங்கே வந்திருக்கும் பெண் கலெக்டருடைய மகள் அல்லவாமே! அப்படியானால் இவள் யார் என்பது தெரியவில்லையே! இவர்கள் சொன்னபடி இவள் வேலாயுதம் பிள்ளையின் மைத்துனியும் அல்லவாம். பிறகு இவர்கள் யார் என்பதும், என்ன கருத்தோடு இவர்கள் மனோன்மணியிடம் போனார்கள் என்பதும் தெரியவில்லையே!" என்றான்.

★ ★ ★

8-வது அதிகாரம்

## சதிகாரனுக்கேற்ற கொலைகாரி

"ஆம், எஜமானே! இது கள்ளனைக் குள்ளன் பாய்ந்த கதை போல இருக்கிறதேயொழிய வேறல்ல. மனோன்மணியம்மாளை நாம் அபகரித்துவர நினைத்துப் போக, நமக்கு முன் யாரோ போய் அவளுக்கு ஏதோ கெடுதல் செய்ய நினைத்திருக்கிறார்கள் போல் இருக்கிறதே! நானும் அத்தனை ஆள்களும் பட்டணம் போய் எவ்வளவோ பாடுபட்டதெல்லாம் விழலுக்கு இறைத்த நீராகி விட்டதே!" என்று வியப்போடும் கவலையோடும் மறுமொழி கூறினான் இடும்பன் சேர்வைகாரன்.

அதைக் கேட்ட மாசிலாமணி, "நாம் கொண்டு வந்திருக்கும் இந்தப் பெண்ணும், அடிபட்டுப் பட்டணம் ஆஸ்பத்திரியில் கிடக்கும் அந்த மனிதனும் மனோன்மணியையும் அவளுடைய

பங்களாவில் இருந்த டலாயத்துகளையும் ஏமாற்றி விட்டு வீட்டிற்குள் போயிருந்தது கூட எனக்கு அவ்வளவு ஆச்சரியமாகத் தோன்றவில்லை. இந்தப் பெண் இங்கே வந்த பிறகு, நம்முடைய வேலைக்காரி இவளிடம் நம்முடைய கருத்தை வெளியிட்டாள் அல்லவா. நான் மனோன்மணியைக் கண்டு ஆசைப்பட்டு, அவளைக் கலியாணம் செய்து கொள்ள எண்ணுகிறேன் என்பதை அறிந்தவுடன், இவள் என்ன செய்திருக்க வேண்டியது? தான் மனோன்மணி அல்ல என்றும், தான் அவர்களுடைய பங்களாவிற்கு வந்திருந்த வேறோர் அன்னிய மனுஷி என்றும் இவள் உடனே வேலைக்காரியிடம் தெரிவித்திருக்க வேண்டாமா? தனக்கு நல்ல இடம் வாய்த்ததென்று நினைத்து இவள் பூடகமாகவே இருந்து, தான் மனோன்மணி என்று கடைசி வரையில் நடந்து இந்தக் கலியாணத்தை முடித்துக் கொண்டிருக் கிறாளே! இவள் செய்ததல்லவா சாமர்த்தியம்! இதைத்தான் கள்ளனைக் குள்ளன் பாய்ந்ததென்று சொல்ல வேண்டும்" என்றான்.

***இ. சேர்வைகாரன்:-*** நம்முடைய வேலைக்காரி சொன்ன வரலாறுகளை எல்லாம் கேட்டுக் கொண்டு இந்தப் பெண் ஒன்றையும் சொல்லாமல் பேசாதிருந்தாளா? அல்லது, நான் தான் மனோன்மணியம்மாள் என்று வாய்விட்டுச் சொல்லிக் கொண்டாளா? ஒருவேளை வேலைக்காரி இவளிடம், மனோன் மணியம்மாளின் மேல் நீங்கள் ஆசைப்பட்டு அவளைக் கலியாணம் செய்து கொள்ள வேண்டும் என்னும் கருத்தோடு கொண்டு வந்திருக்கிறீர்கள் என்ற வரலாற்றையே தெளிவாகச் சொல்ல வில்லையோ என்னவோ.

***மாசிலாமணி:-*** அதெல்லாம் இல்லை. வேலைக்காரி எத்தனையோ தடவை இந்தப் பெண்ணினிடம் போய்ப் பேசி விட்டு எனக்குச் சமாசாரம் கொண்டு வந்திருக்கிறாள். சென்னை கலெக்டர் பட்டாபிராம பிள்ளையின் மகளான மனோன்மணியே இவள் என்று நாம் நினைத்திருக்கிறோம் என்ற விஷயம் இவளுக்கு நன்றாகத் தெரியும். இவளை நாம் ஆள்மாறாட்டமாகக் கொண்டு வந்து விட்டோம் என்பது இவளுக்குத் தெரியாதே.

அப்படி இருக்க, இவள் யார் என்ற எந்த விவரத்தையும் கேட்காமல், இவளை நான் கலியாணம் செய்து கொண்ட பிறகாவது, இவளுக்குச் சந்தேகம் உண்டாகி இருக்காதா? இவளை நாம் வேறே யாரோ ஒரு பெண் என்று தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறோம் என்று, அப்போதாவது இவள் யூகித்துக் கொண்டிருப்பாள் அல்லவா?

*இ. சேர்வைகாரன்:-* ஆம். வாஸ்தவம் தான்.

*மாசிலாமணி:-* இவள் யாராக இருப்பாள்? என் மேல் இவள் உண்மையான ஆசை கொண்டு என்னைக் கலியாணம் செய்து கொள்ள இசைந்திருப்பாள் என்று நினைப்பதற்கில்லை. நான் பெரிய பணக்காரன் என்பதைத் தெரிந்து கொண்ட உடனே, இவ்வளவு அபாரமான சொத்திற்கும் தான் எஜமானி ஆகிவிடலாம் என்ற கருத்தைக் கொண்டே, இவள் நம்மை இப்படி ஏமாற்றி இருக்கிறாள். இவள் யாருடைய மகளோ? என்ன ஜாதியைச் சேர்ந்தவளோ? ஒருவேளை இவள் தாசி அல்லது வேசை வகுப்பைச் சேர்ந்தவளோ. என்ன இழவோ தெரிய வில்லையே! நீர் போய்ப் பட்டணத்திலிருந்து இவளைக் கொண்டு வந்து என் கழுத்தில் கட்டி விட்டீரே!

*இ. சேர்வைகாரன்:-* (வேடிக்கையாகப் புன்னகை செய்தவனாய்) இப்போது நமக்கு என்ன மோசம் முழுகிப் போய்விட்டது. இவள் உங்களைக் கலியாணம் செய்து கொள்ள வேண்டும் என்று மோசக் கருத்தாக எண்ணினால், அது பலித்துப் போய் விட்டதா என்ன? நாம் செய்தது நாடகக் கலியாணம் தானே! உண்மையான புரோகிதர் வந்து மந்திரம் சொல்லி பந்துக்களுக்கெதிரில் தாலி கட்டினது கெட்டுப் போகிறதா என்ன? இது பொம்மைக் கலியாணம் என்பதையும், நாம் இவளை ஏமாற்றுகிறோம் என்பதையும் தெரிந்து கொள்ளாமல் இவளே நம்முடைய வலையில் வந்து சிக்கிக் கொண்டாள். இதனால் நமக்கு என்ன பிரமாதமான விபரீதம் நேர்ந்து விட்டது? ஒன்றும் இல்லை. பெண் நல்ல உயர்ந்த ஜாதி மல்கோவா மாம்பழம் போல பார்ப்பதற்கு மகா சொகுசாக இருக்கிறாள். இவளோடு நீங்கள்

சந்தோஷமாக சில தினங்கள் இருந்தபின், துரத்திவிட்டால், ஒழிந்து போகிறாள். நீங்கள் இவளை உண்மையிலேயே கலியாணம் செய்து கொண்டதாக இவள் எண்ணிக் கொண்டிருப்பது உங்களுக்கு முற்றிலும் அனுகூலமான காரியமே அன்றி வேறல்ல. ஏனென்றால், நீங்கள் இன்றைய தினம் கிரமப்படி சாந்தி முகூர்த்தத்தை நிறைவேற்றுவதற்கு, இவள் எவ்வித இடக்கும் செய்யாமல் உங்களோடு மனம் ஒத்து நடந்து கொள்வாள் அல்லவா?

*மாசிலாமணி:-* (சந்தோஷமாகப் புன்னகை செய்து) ஆம். வாஸ்தவம் தான். நீர் சொல்லுகிறபடி தான் செய்ய வேண்டும். இருந்தாலும் நாம் இவளை இந்த வீட்டில் அதிக காலம் வைத்திருப்பது சரியல்ல. அடிக்கடி போலீஸ் நாய்கள் வந்து பார்த்து விட்டுப் போகின்றன. இந்த விஷயங்களில் எல்லாம் சுலபத்தில் மோப்பம் பிடிக்கும் திறமை அவர்களுக்கு அதிகமாக உண்டு. அதுவுமன்றி, நம்முடைய ரமாமணிக்கும் இது பிடிக்காது; கலெக்டரிடம் நமக்குள்ள ஆத்திரத்தைக் கருதிப் பழிதீர்த்துக் கொள்வதற்காக நாம் மனோன்மணியம்மாளைக் கொண்டு வந்து இப்படிப்பட்ட மோசடியான கலியாணம் நடத்துகிறோம் என்றும், அவளை வெகு சீக்கிரத்தில் அனுப்பி விடுவோம் என்றும், ரமாமணி நினைத்துக் கொண்டிருக்கிறாள். இப்போது நாம் படித்த சமாசாரப் பத்திரிகை அவளுக்கு வருகிறது. அவள் இந்தச் சங்கதியை எப்படியும் தெரிந்து கொள்வாள். இவள் மனோன்மணியல்ல என்பதும் அவளுக்கு உடனே தெரிந்து போகும். ஆகவே இவளை நான் இவ்விடத்தில் அதிக காலம் வைத்திருப் பதையாவது, இவளிடம் நான் அன்னியோன்னியமாக இருப்பதையாவது கண்டு, அவள் சகித்திருக்கவே மாட்டாள். அவளுக்கு நம்முடைய ரகசியங்களில் பல தெரிந்து போயிருப்ப தால், அவளுடைய பகைமையைச் சம்பாதித்துக் கொள்வது உசிதமான காரியம் அல்ல. ஆகையால் இவளை நான் இரண்டொரு தினங்கள் இங்கே வைத்திருந்து, நமது இஷ்டத்தைப் பூர்த்தி செய்து கொண்டு ரகசியமாகத்

துரத்திவிட வேண்டும். துரத்திவிடுவதைக் கூட நாம் நிரம்பவும் ஜாக்கிரதையாகச் செய்ய வேண்டும். நீங்கள் பட்டணத்தில் இருந்து இவளைக் கொண்டு வந்த போது உபயோகித்த மயக்க மருந்தையே, இவள் தூங்கிக் கொண்டிருக்கையில் மூக்கில் பிடித்து, இவள் மயங்கிப் போகும் படி செய்து, இவளைத் தூக்கி மோட்டார் வண்டியில் வைத்துக் கொண்டு போய் நீடாமங்கலம் முதலிய தூரமான ஊரில் உள்ள சத்திரம்சாவடி முதலிய ஏதாவது ஓரிடத்தில் படுக்க வைத்து விட்டு வந்துவிட்டால், தான் இன்னவிடத்தில் இருந்தது என்ற இடமே இவளுக்குத் தெரியாமல் போய்விடும். இது கும்பகோணம் என்பதும், நாம் இன்னார் என்பதும் தெரியாது. ஆகையால், இங்கே நடந்த கலியாணம், சோபனம் முதலியவைகள் எல்லாம் இவளுக்குக் கனவு போல ஆகிவிடும். பின்பு இவளால் நமக்கு எவ்வித இடரும் ஏற்படாமல் போகும்.

*இ. சேர்வைகாரன்:-* சரி; அப்படியே செய்து விடுவோம், நாம் இவ்வளவு பணச்செலவு செய்து அரும்பாடுபட்டு இவளைக் கொணர்ந்து இவ்வளவு சீக்கிரத்தில் அனுப்பி விடுவதற்கு என் மனம் சம்மதிக்கவில்லை. ஆகையால் நீங்கள் குறைந்தது ஒரு வார காலமாவது இவளை இங்கே வைத்திருந்து இவளுடைய கருவத்தை அடக்கி ஓட்டிவிட்டால், நமக்கு ஏற்பட்ட பெருத்த ஏமாற்றத்திற்கு அது ஓர் ஆறுதலாக இருக்கும். தங்களுடைய ஆசைநாயகி ரமாமணியம்மாள் இதைப்பற்றி சந்தேகங் கொள்ளாதபடி நாம் ஏதாவது தந்திரம் செய்யலாம். இந்தப் பெண்ணை சரியான தருணம் பார்த்து ரகசியமாக வெளிப்படுத்த உத்தேசிப்பதாகவும், நானும் என் வேலையாள்களும் வேறு வேலையாக எங்கேயோ போயிருப்பதால், நாங்கள் திரும்பி வந்தவுடன் இவளைக் கொண்டு போய் விடச்செய்ய வேண்டும் என்றும் ரமாமணியம்மாளுக்குச் சமாதானம் சொல்லி வையுங்கள். இதெல்லாம் உங்களுக்குத் தெரியாத சங்கதியா? இந்த ரமாமணி அம்மாளைப் போல ஆயிரம் அம்மாள்களைத் தாங்கள் ஒரு நிமிஷத்தில் எத்திவிடுவீர்களே! தங்களுக்கு நான் யோசனை சொல்லிக் கொடுக்க வேண்டுமா?

*மாசிலாமணி:-* (சந்தோஷமாக நகைத்து) சரி; உம்முடைய இஷ்டத்திற்குத் தான் ஏன் பழுதுவர வேண்டும். பட்டணத்தில் போய்ப் பட்டபாடு உமக்கல்லவா தெரியும். **மலைகல்லி எலி பிடித்தது போல** நீர் இவளைக் கொண்டு வந்ததும் அன்றி, அதற்கு என்னிடம் பெருத்த சன்மானமும் வாங்கிக் கொண்டிருக்கிறீர். ஆகையால், இவளை எளிதில் விட்டுவிட உமக்குச் சம்மதி இராது தான். உம்முடைய பிரியப்படியே நடத்துகிறேன். அதில் எனக்குக் கஷ்டம் கொஞ்சமாவது இல்லை. கரும்பு தின்ன யாராவது கைக்கூலி கேட்பார்களா?

*இ. சேர்வைகாரன்:-* (சிறிது முகவாட்டமடைந்து) என்ன எஜமானே! நான் செய்தவற்றைத் தாங்கள் குத்திக் காண்பிப்பது போலப் பேசுகிறீர்களே! இது வேண்டும் என்று செய்யப்பட்ட தவறல்ல என்பது தங்களுக்குத் தெரிந்திருந்தும், தாங்கள் இப்படிச் சொல்லிக் காட்டுவது என் மனசை நிரம்பவும் புண்படுத்துகிறது. நான் இதற்கு முன் அந்த மனோன்மணியம்மாளை நேரில் பார்த்தவனே அல்ல. தாங்களாவது அவளைப் பார்த்திருந்து, அவளுடைய அடையாளங்களை விஸ்தாரமாக சொல்லி இருந்தால், இந்தத் தவறு நடந்திருக்காது. பட்டாபிராம பிள்ளையும், அந்தப் பெண்ணும் தனியாக புரசைபாக்கம் பங்களாவில் இருப்பதாக தாங்களும் சொன்னீர்கள். நான் பட்டணத்தில் போய் விசாரித்ததிலும், ஜனங்கள் அப்படியே தான் சொல்லிக் கொண்டார்கள். நாங்கள் அங்கே போன அன்றைய தினம் இந்தப் பெண்ணும் இன்னொரு மனிதனும் அங்கே வந்து புகுந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் எப்படித் தெரிந்து கொண்டிருக்க முடியும்? நடு இரவில் நாங்கள் பங்களாவில் நுழைந்து கீழே இருந்த வேலைக்காரர்கள் வேலைக்காரிகள் பட்டாபிராம பிள்ளை முதலிய எல்லோரையும் அடித்துக் கட்டிப் போட்டுவிட்டு, மெத்தை மேல் ஏறினோம். ஏறிய உடனே எதிரில் அழகான படுக்கையறை ஒன்று காணப்பட்டது. அவ்விடத்தில் ஏராளமான புஸ்தகங்கள் காணப்பட்டன. மனோன்மணியம்மாள் ஏதோ பரீட்சைக்குப் படிக்கிறாள் என்று நீங்கள் சொல்லி இருக்கிறீர்கள் அல்லவா.

அதுவுமன்றி, அந்தப் படுக்கை அறையில் இந்தப் பெண் தனியாகப் படுத்திருந்தாள். இவள் நல்ல அழகும் யௌவனமும் அலங்காரமும் உடையவளாய்ப் பெரிய மனிதர் வீட்டுப் பெண்ணைப் போலக் காணப்படவே, மனோன்மணியம்மாள் இவளாகத்தான் இருக்க வேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. அந்த அவசர சமயத்தில் அவ்விடத்தில் அவளை விட்டு மற்ற பாகங்களில் எல்லாம் நுழைந்து இன்னம் வேறே பெண் எவளாவது இருக்கிறாளா என்று பார்க்க வேண்டும் என்ற எண்ணம் எப்பேர்ப்பட்டவருக்கும் உண்டாயிருக்கும் என்று நான் நினைக்கவில்லை. ஆகையால், நான் உடனே ஆள்களை ஏவி, இவளைத் தூக்கிக் கொண்டு வந்து சேர்ந்தேன். இது தற்செயலாக நடந்த தவறே அன்றி என்னால் வேண்டும் என்று செய்யப்பட்டதல்ல. இதோடு நான் நம்முடைய பகைவர்களை எல்லாம் சும்மா விட்டுவிடப் போகிறேன் என்று தாங்கள் நினைத்துக் கொண்டீர்களா? நாங்கள் சொன்னது போல கண்ணப்பா, வடிவாம்பாள், கந்தசாமி, வேலாயுதம் பிள்ளை முதலிய ஒவ்வொருவருக்கும் மரியாதை நடத்தியே மறுவேலை பார்க்கப் போகிறேன். அதுவுமன்றி அந்தப் பட்டாபிராம பிள்ளையின் விஷயத்திலும் நம்முடைய பழியை வட்டியும் முதலுமாகத் தீர்த்து வைப்பேன் என்பதைத் தாங்கள் நிச்சயமாக எதிர்பார்க்கலாம். இன்றைய தினமே நான் மறுபடி ஆள்களை அழைத்துக் கொண்டு பட்டணம் போகிறேன். இந்தத் தடவை நாங்கள் போவதற்குப் பிடிக்கும் செலவு என்னைச் சேர்ந்ததாக இருக்கட்டும். என் தவறுக்கு அது அவசியம் வேண்டிய தண்டனை என்று நினைக்கிறேன். எனக்கும் என்னுடைய ஆள்களுக்கும் தாங்கள் கொடுத்த வெகுமதிகளை எல்லாம் திருப்பிக் கொடுத்து விடுகிறோம். தங்களுடைய வேலைகளை எல்லாம் நாங்கள் திருப்திகரமாக முடித்துக் கொடுத்த பிறகு மறுபடி பெற்றுக் கொள்ளுகிறோம். இப்போது தங்கள் மனசுக்குத் திருப்திதானா?

*மாசிலாமணி:-* (சிறிது ஆயாசமடைந்து இளக்கமாகப் பேசத் தொடங்கி) என்ன சேர்வைகாரரே! உமக்குக்கூட கோபம் வந்தது?

நான் வேடிக்கையாக ஒரு வார்த்தை சொன்னதை நீர் விபரீதமாக அர்த்தம் செய்து கொண்டு நிரம்பவும் கோபமாகப் பேசுகிறீரே! நான் என்ன அவ்வளவு அற்பகுணமுள்ள மனிதன் என்று நினைத்தீரா? எனக்கு எள்ளளவும் புத்தி இல்லை என்று எண்ணினீரா? இந்தத் தவறு தற்செயலாக நடந்ததென்பதை நான் தெரிந்து கொள்ளவில்லையா? இதற்காக நான் உங்களிடம் இருந்து சன்மானத்தை எல்லாம் திருப்பி வாங்கிக் கொள்ளக்கூடிய கேவல புத்தி உடையவர் என்று நீர் நினைத்துக் கொண்டீரா? அல்லது, நீங்கள் பட்டணத்திற்கு மறுபடியும் போய் வருவதற்கு ஏற்படும் செலவை நான் ஒரு பொருட்டாக மதிப்பேன் என்று நினைத்தீரா? என்னோடு இவ்வளவு காலம் நீர் பழகி இருந்தும் என்னுடைய உண்மையான மனப்போக்கை அறிந்து கொள்ளாமல் இவ்வளவு தூரம் கசப்பான வார்த்தைகளை நீர் சொன்னதுதான் என்னால் பொறுக்க முடியவில்லை. நான் உம்மைப் புரளி செய்தது போல ஒரு வார்த்தை சொல்லிவிட்டது தவறுதான். அது வேடிக்கையாகச் சொல்லப்பட்டதேயன்றி, நீர் மூடத்தனமாக நடந்து கொண்டீர் என்று இடித்துக் காட்டி உம்மைப் பழிக்க வேண்டும் என்ற கருத்தோடு சொல்லப்பட்டதல்ல. ஆகையால், நீர் இனிமேலாவது என்னிடம் இப்பேர்ப்பட்ட வார்த்தைகளை உபயோகிக்க வேண்டாம். நீர் என் அண்ணனை விடுவித்தும், திகம்பரசாமியாரைக் கொன்றதும் அற்ப சொற்பமான விஷயங்கள் அல்ல. அவை இரண்டிற்கும் நான் உமக்கு என் ஆஸ்தி முழுதையும் சன்மானமாகக் கொடுத்தாலும், அது சரியான மரியாதை ஆகாது. அதோடு நீர் இனி எனக்கு எவ்விதமான கெடுதல் செய்தால் கூட, மேலே குறித்த இரண்டு பேருதவிகளைக் கருதி நான் உமக்கு என்றும் நன்றியறிதல் உள்ளவனாய் இருக்கக் கடமைப்பட்டவன். ஆகவே, இதைப்பற்றி நீர் என்மேல் மனவருத்தம் வைக்கவில்லை என்று பிரமாணிக்கமாகச் சொன்னாலன்றி என் மனம் நிம்மதி அடையாது.

**இ. சேர்வைகாரன்:-** (கோபம் தணிந்தவனாய் நகைத்து) இல்லை, எஜமானே! தாங்கள் சொன்னதைப் பற்றி, தங்கள் பேரில் எனக்கு எவ்வித மனவருத்தமும் உண்டாகவில்லை.

இவ்வளவு பணச் செலவு செய்தும், இத்தனைபேர் சேர்ந்து பிரயாசைப்பட்டும் காரியம் கெட்டுப் போய்விட்டதே என்றும், நான் இன்னும் கொஞ்சம் அதிக எச்சரிப்பாக நடந்து கொண்டிருந் தால், இந்தத் தவறு நடந்திருக்காதே என்றும் நினைக்க நினைக்க, எனக்கு என் மேலேயே கோபம் பிறந்தது. இப்படிக் காரியத்தைக் கெடுத்தவர்களுக்குச் சன்மானம் கூடவா என்ற ஆத்திரமும் உண்டாயிற்று. அதனால் அப்படிச் சொன்னேன். தங்கள் பேரில் எனக்கு எள்ளளவும் ஆயாசமில்லை. இது பிரமாணிக்கமான விஷயம். என்னவோ நடந்தது நடந்துவிட்டது. அதைப்பற்றி நாம் அதிகமாகப் பாராட்டிப் பேசுவதால், கெட்ட காரியம் திருந்தப் போவதில்லை. இனி ஆகவேண்டிய காரியத்தையாவது நாம் ஏமாறாமல் சரியானபடி நடத்த வேண்டும் என்று என் மனதைத் திடப்படுத்திக் கொள்வதைத் தவிர முக்கியமான விஷயம் வேறொன்றும் இல்லை. நான் ஆள்களோடு இன்றைய தினம் இரவே புறப்பட்டுப் பட்டணம் போய், நாளைய இரவில் அவளை எடுத்துக் கொண்டு விடியற்காலம் இங்கே வந்து சேருகிறேன். எனக்கு உத்தரவு கொடுங்கள். என்னுடைய ஆள்கள் மூலைக்கு ஒருவராய்ப் போயிருக்கிறார்கள். அவர்களை எல்லாம் சேர்த்துப் பிடித்துக் கொண்டு இன்றைய இரவு வண்டியிலேயே பட்டணம் போய்ச் சேருகிறேன். சிலர் மோட்டார் வண்டியில் வண்டிப்பாதை வழியாக வரட்டும்.

***மாசிலாமணி:-*** (சிறிது நேரம் யோசனை செய்து) அன்றைய தினம் நீங்கள் செய்த அமர்க்களத்தின் பிறகு, பட்டாபிராம பிள்ளை முன் போல அஜாக்கிரதையாக இருப்பார் என்று நான் நினைக்க வில்லை. யாரோ விரோதிகள் அவர்களுக்குக் கெடுதல் செய்ய எண்ணிக் கொண்டிருப்பதாக யூகித்துக் கொண்டு, பட்டாபிராம பிள்ளை இன்னும் இரண்டொரு மாசகாலம் வரையில் ஏராளமான போலீஸ் ஜெவான்களையும் டலாயத்து களையும் தம்முடைய பங்களாவில் காவலாக வைத்திருப்பார் எனத் தோன்றுகிறது. ஆகையால் நீங்கள் மறுபடியும் போய், முயற்சித்தால் அநேகமாய் நீங்கள் அவர்களிடம் அகப்பட்டுக் கொள்வீர்கள் என்றே நினைக்கிறேன். ஆகையால், நாம் இனி

கொஞ்ச காலத்திற்கு மனோன்மணியின் விஷயத்தை நிறுத்தி வைப்போம். அதற்குள் நாம் மற்றவர்களுடைய வேலையை முடிக்கலாம். எனக்கு இன்னொரு யோசனை தோன்றுகிறது. அதன்படி முடித்து விடுவோம்.

*இ. சேர்வைகாரன்:-* என்ன யோசனை? சொல்லுங்கள். அப்படியே நிறைவேற்றி விடுவோம்.

*மாசிலாமணி:-* மனோன்மணியை நாம் கொண்டு வந்து விட்டபடியால் பட்டாபிராம பிள்ளை அந்த விஷயத்தை வேலாயுதம் பிள்ளைக்குத் தெரிவிப்பார் என்றும், நிச்சயதார்த்தம் நின்று போய்விடும் என்றும், இவர்கள் பட்டணம் போவதை நிறுத்தி விடுவார்கள் என்றும் நாம் நினைத்தோம் அல்லவா? அது இப்போது தவறான நினைவாகப் போய்விட்டது. அவர்கள் முன்னே எண்ணியபடி வெள்ளிக்கிழமை அன்று நிச்சயதார்த் தத்தை எப்படியும் நடத்துவார்கள். வேலாயுதம் பிள்ளை வீட்டார் எல்லோரும் அதற்காக நாளைய தினம் புறப்பட்டுப் போவதும் நிச்சயமாகத் தோன்றுகிறது.

*இ. சேர்வைகாரன்:-* ஆம், இனிமேல் அவர்கள் ஏன் நிச்சயதார்த் தத்தை நிறுத்தப் போகிறார்கள்? அது வெள்ளிக்கிழமை அவசியம் நடந்தே தீரும். இவர்கள் முன்பு தீர்மானித்திருந்தபடி புதன் கிழமையே மன்னார்குடியை விட்டுப் புறப்பட்டு சென்னப் பட்டணம் போவதும் நிச்சயம். வேலாயுதம் பிள்ளை, கண்ணப்பா, வடிவாம்பாள், கந்தசாமி முதலியோருக்கு நாம் மரியாதை நடத்த வேண்டும் என்று சொன்னீர்களே. அதை நாம் எப்போது நடத்துகிறது? இன்று செவ்வாய்க்கிழமை. ஆகையால், அவர்கள் நாளைய தினம் அந்தியில் புறப்படும் வண்டியில் ஏறிக் கொண்டு போய்விடுவார்கள். நிச்சயதார்த்தத்திற்கு முன்பு நாம் நம்முடைய எண்ணத்தை முடிப்பதாய் இருந்தால், இன்றைய தினம் இரவில் தான் அதை நிறைவேற்ற வேண்டும். இன்று தவறினால், இனி அவர்கள் பட்டணத்தில் இருந்து திரும்பி வந்த பிறகு தான் நாம் அதை நடத்த வேண்டும். ஆனால் இதில் ஒரு விஷயம் இருக்கிறது. இன்றைய தினம் இரவிலேயே நாம் இவர்கள் எல்லோருக்குமே, அல்லது, சிலருக்கோ அங்கஹீனம்

செய்து விட்டால், இவர்கள் பட்டணம் போவதை நிறுத்தி விடுவார்கள். நிச்சயதார்த்தமும் நின்று போய்விடும். இப்படி அங்கஹீனம் அடைந்தவர்களுடைய வீட்டில் பட்டாபிராம பிள்ளை தம்முடைய பெண்ணை வாழ்க்கைப்படுத்துவதை அவர் ஓர் அவமானமாக நினைத்து, தம்முடைய பெண்ணை வேறே யாருக்காவது கட்டிக் கொடுத்து விடுவார். ஆகையால் நீங்கள் இதை எல்லாம் நன்றாக யோசித்து உங்களுடைய இஷ்டத்தை முடிவாகச் சொல்லி விடுங்கள்.

*மாசிலாமணி:-* (சிறிது நேரம் சிந்தனை செய்து) இந்த மன்னார் குடியாருக்கு இன்றைய தினம் மரியாதை நடத்தினால், நீர் எண்ணுகிறபடி பட்டாபிராம பிள்ளை தம்முடைய பெண்ணை இவர்களுடைய வீட்டில் கட்டிக் கொடுக்க மாட்டார் என்பது நிச்சயமே. அப்படி நடக்கும்படி நாம் விடக்கூடாது. ஏனென்றால், அதனால், பட்டாபிராம பிள்ளை எவ்வித தண்டனையும் இல்லாமல் தப்பிப் போகும்படி நாமே விட்டுவிடுவது போல முடியும். அவர் தம்முடைய பெண்ணை அந்தக் கந்தசாமிக்கே கட்டிக் கொடுப்பதற்கு உறுதியாக அவர்கள் நிச்சயதார்த்தத்தை நடத்த வேண்டும். அதன் பிறகு நாம் மன்னார்குடியார்களை மூளிப்படுத்த வேண்டும். அப்போது தான் பட்டாபிராம பிள்ளைக்கு சரியான அவமானமும் தலைகுனிவும் ஏற்படும். அங்கஹீனப்பட்டவர்களுடைய வீட்டிலேயே அவர் தம்முடைய பெண்ணைக் கட்டிக் கொடுத்து அவர்களுடன் ஆயிசுகால பரியந்தம் சொந்தம் பாராட்டியிருக்க வேண்டும். அதைவிட அதிகமான தண்டனை வேறு எதையும் நாம் பட்டாபிராம பிள்ளைக்குச் செய்ய வேண்டியதில்லை என்று நினைக்கிறேன்.

*இ. சேர்வைகாரன்:-* உண்மைதான்; தங்களுடைய பிரியப் படியே நடத்திவிடுகிறேன். அப்படியானால், இந்த மன்னார் குடியார் சென்னப் பட்டணத்தில் இருந்து திரும்பி வந்த பிறகு தானே நாம் அதை நிறைவேற்ற வேண்டும்? அவர்கள் திரும்பி ஊருக்கு வர ஐந்தாறு தினங்களாவது பிடிக்குமே!

*மாசிலாமணி:-* அவர்கள் மன்னார்குடிக்குத் திரும்பி வந்த பிறகு நாம் அவர்களை மானபங்கப்படுத்துவது அவ்வளவாச

சோபிக்காது. நிச்சயதார்த்தம் வெள்ளிக்கிழமை பகலிலோ, அல்லது, மாலையிலோ நடக்கும். அன்றைய தினம் இரவிலேயே நாம் இந்த மன்னார்குடியார்களை எல்லாம் அங்கஹீனப்படுத்தி விட வேண்டும். சம்பந்தியின் ஊரிலேயே எல்லா ஜனங்களுக்கும் மத்தியில், அவர்கள் மானபங்கப்பட்டால், அதை அவர்கள் சகிக்க மாட்டாமல் உயிரைவிட்டாலும் விட்டுவிடுவார்கள். தம்முடைய பெண்ணைக் கட்ட வந்திருக்கும் சம்பந்திகள் மானபங்கம் அடைந்தார்கள் என்பதைப் பட்டாபிராம பிள்ளை நேரிலேயே கண்டு அந்தச் சுகத்தை அனுபவிக்க வேண்டும். அதுதான் சரியான காரியம்.

*இ. சேர்வைகாரன்:-* அப்படியானால், நாங்கள் எல்லோரும் சென்னப்பட்டணத்திற்குப் போயிருந்து, வெள்ளிக்கிழமை இரவில் இதை நடத்த வேண்டும்.

*மாசிலாமணி:-* ஆம். அப்படித்தான் செய்ய வேண்டும்.

*இ. சேர்வைகாரன்:-* (சிறிது நேரம் யோசனை செய்து) இவர்கள் போய்க் கோமளேசுவரன் பேட்டையில் கந்தசாமி இருக்கும் வீட்டில் அல்லவா தங்கப்போவதாகக் கேள்வியுற்றோம். இவர்கள் சுமார் ஐம்பது பேர் சேர்ந்து போகப் போகிறதாகவும் நம்முடைய ஆள் சொன்னான் அல்லவா. அத்தனை பேரும் அன்றைய தினம் இரவில் அந்த வீட்டில்தானே படுத்திருப்பார்கள். அவ்வளவு பெரிய ஜனக் கும்பலில் நாம் நம்முடைய கோரிக்கையை நிறை வேற்றுவது என்றால், அது சுலபத்தில் முடியுமா? அதுவுமன்றி நான் கண்ணப்பா, கந்தசாமி, வேலாயுதம் பிள்ளை ஆகிய மூன்று பேரையும் தான் பார்த்திருக்கிறேன். வடிவாம்பாளையும் வேலாயுதம் பிள்ளையின் சம்சாரத்தையும் நான் பார்த்ததே இல்லை. என்னுடைய ஆள்கள் கண்ணப்பா முதலிய ஆண் பிள்ளைகளைக் கூடப் பார்த்தவர்கள் அன்று. ஆகையால் அவ்வளவு பெரிய ஜனக்கும்பலில் இரவில் போய் நாம் உத்தேசிக்கும் மனிதர்களுடைய அடையாளத்தை எப்படிக் கண்டு பிடித்து வேலையை முடிக்கப் போகிறோம். அதுதான் எனக்கு நிரம்பவும் மலைப்பாக இருக்கிறது.

*மாசிலாமணி:-* என்ன சேர்வைகாரரே! எதற்கும் அஞ்சாமல் யோசனை சொல்லக்கூடிய மகா தீரரான நீர்கூட மலைப்ப தென்றால், அது எனக்கு நிரம்பவும் வெட்கமாக இருக்கிறது. இதோ நம்முடைய ரமாமணி இருக்கிறாளே. அவள் எப்பேர்ப் பட்ட அரிய காரியத்தை முடித்தாள் என்பதை மறந்து போய் விட்டீரோ! அவள் ஒருத்தியே போய் இந்தக் காரியத்தை முடித்துக் கொண்டு வருவாளே. போகட்டும். உங்களுக்கு அவர்களுடைய அடையாளம் தெரியாதென்று சொல்லுகிறீர். அது ஒப்புக் கொள்ளக்கூடிய ஆட்சேபனையே. நீர் ஒரு காரியம் செய்யும். நான் நம்முடைய ரமாமணியையும் உம்மோடு பட்டணத்திற்கு அனுப்புகிறேன். அவள் வடிவாம்பாள் முதலிய எல்லோரையும் பார்த்திருக்கிறாள். மன்னார்குடி வேலாயுதம் பிள்ளை வீட்டாருடைய அடையாளம் எல்லாம் அவளுக்கு நன்றாகத் தெரியும். ஆனால், இவள் இன்னாள் என்பது அவர்களுக்குத் தெரியாது. ஆகையால், இவள் பெரிய மனிதர் வீட்டுப் பெண் போலத் தன்னை நன்றாக அலங்கரித்துக் கொண்டு வெள்ளிக் கிழமை அன்று கலியாணக் கும்பலில் நுழைந்து கொள்ளட்டும். பிள்ளை வீட்டார் இவள் பெண் வீட்டைச் சேர்ந்தவள் என்று நினைத்துக் கொள்வார்கள். பெண் வீட்டார் இவள் பிள்ளை வீட்டைச் சேர்ந்தவள் என்று நினைத்துக் கொள்வார்கள். ஆகையால் இவளை "நீ யார்" என்று யாரும் கேட்கப் போகிறதில்லை. இவள் நன்றாகப் பாட்டுப் பாடுவாள் என்பது உமக்குத் தெரியுமே. ஆகையால் பெண்ணுக்கு நலங்கு முதலிய காரியங்கள் நடக்கும் போது, இவள் நுழைந்து; கொண்டு பாட்டுப் பாடி எல்லாக் காரியங்களையும் முனைந்து செய்து, வடிவாம்பாளோடு பழக்கம் செய்து கொள்ளும்படி செய்கிறேன். இவள் மகா தந்திரி ஆகையால், எவரும் தன்மேல் சந்தேகப்படாதபடி, காரியங்களை நடத்தி எல்லோருடைய பிரியத்தையும் ஒரு நொடியில் சம்பாதித்துக் கொள்வாள். இவள் வெள்ளிக்கிழமை இரவில் வேலாயுதம் பிள்ளை வீட்டில் இருக்கும் பெண் பிள்ளைகளோடு கூடவே இருக்கும்படி செய்கிறேன். இரவில் எல்லோரும் தூங்கிய பிறகு நடு இரவில் இவள் மெதுவாக எழுந்து வந்து வாசற்கதவின் உள்

தாழ்ப்பாளைத் திறந்துவிடுவாள். அப்போது நீங்கள் சுமார் பத்துபேர் தயாராக இருந்து இவளோடுகூட உள்ளே போங்கள். நாம் உத்தேசிக்கும் ஐந்து பேரையும் இவள் காட்டிக் கொண்டே போவாள். ஒவ்வொருவருக்கும் பக்கத்திலும் இரண்டிரண்டு ஆள்கள் நின்ற பிறகு, எல்லா ஆள்களும் ஒரே காலத்தில் ஆரம்பித்து பொறித்தட்டும் நேரத்திற்குள் ஐந்து பேரையும் மூளிப்படுத்திவிட வேண்டும். உடனே எல்லோரும் கூச்சலிட்டுக் கொண்டு தாறுமாறாக எழுந்திருப்பார்கள். அப்போது அவ்விடத்தில் பெரிய குழப்பம் ஏற்படும். அந்தச் சமயத்தில் நீங்கள் எல்லோரும் தப்பித்து வெளியில் வந்து விடுங்கள். நம்முடைய ரமாமணியும் அதன்பிறகு அந்த அமர்க்களத்தில் எப்படியாவது நழுவி வந்து விடட்டும். நீங்கள் துணிந்து இந்தக் காரியத்தை முடித்து விட்டால் அதுவே போதுமானது. இந்த மானக்கேட்டைப் போல இந்த உலகத்தில் வேறே யாருக்கும் எந்தக் காலத்திலும் நேர்ந்திருக்கவே இருக்காது. அதனால் நமக்கு ஏற்படும் ஆனந்தத்திற்கும் ஈடு இந்த உலகத்தில் இருக்கும் என்று நினைக்கவில்லை. தேவரே! என்ன சொல்லுகிறீர்? இதை முடிக்க உம்மாலாகுமா? என்ன பலமாக யோசிக்கிறீரே! இதை நடத்த பயமாக இருக்கிறதா?

**இ. சேர்வைகாரன்:-** என்ன எஜமானே! என்னைப் பார்த்து இப்படிச் சொல்லுகிறீர்களே! நானா பயப்படுகிறவன்? பயம் என்பது என்னைக் கண்டே பயப்பட வேண்டுமன்றி, நான் எப்போர்ப்பட்ட சந்தர்ப்பத்திலும் பயப்படக் கூடியவனே அன்று என்பது தங்களுக்குத் தெரிந்திருந்தும் தாங்கள் இப்படிப் பேசுவது சரியல்ல. என் உயிர் போவதானாலும், எனக்கு சர்க்கார் தண்டனை கிடைப்பதானாலும், நான் அதற்கெல்லாம் கொஞ்சமும் அஞ்சுகிறவனல்ல. என்னுடைய உயிரை நான் திரணமாத்திரம் மதிக்கவில்லை, என்னுடைய ஆள்கள் என்னைவிடப் பதின் மடங்கு அதிக தைரியசாலிகள். ஆகையால், நாங்கள் எங்களைப் பற்றிக் கொஞ்சமும் கவலையாவது அச்சமாவது கொள்ளுகிற வர்களே அல்ல. இதைத் தாங்கள் உறுதியாக மனசில் வைத்துக் கொள்ளுங்கள். தாங்கள் இப்போது சொன்ன யோசனைப்படி நாங்கள் நடந்து கொள்ளத் தடையில்லை. அப்படிச் செய்வது மாத்திரம் போதாது. நாங்கள்

அத்தனை பேரும் ஏராளமான பணச் செலவு செய்து கொண்டு போய் முன்னொரு தடவை பட்ட பாடெல்லாம் வீணாய்ப் போனது போல இந்தத் தடவையிலும், காரியம் கெடக்கூடாது. நாம் ஒரு காரியத்தில் இறங்கினால் அது தவறாமல் நிச்சயமாக முடிய வேண்டும். அதற்குத் தக்கபடி நாம் சகலமான விஷயங்களையும் தீர்க்காலோசனை செய்து முன் எச்சரிக்கையான ஏற்பாடுகளோடு போக வேண்டும். அப்படிப் போனால் தான் காரியம் நிச்சயமாகக் கைகூடும். நம்முடைய எத்தனங்களையும் மீறி தற்செயலாகக் காரியம் கெட்டுப் போகும் பட்சத்தில், அதற்கு நாம் உத்தரவாதியல்ல. நாம் செய்யும் யோசனைகள் எல்லாம் ஆணித்தரமான யோசனைகளாக இருக்க வேண்டும்.

***மாசிலாமணி:-*** இப்போது நான் சொன்ன யோசனையில் ஏதாவது ஆட்சேபனைக்கு இடம் இருக்கிறதா?

***இ. சேர்வைகாரன்:-*** அதிகமாக ஒன்றுமில்லை. நம்முடைய ரமாமணி வேலாயுதம் பிள்ளையின் வீட்டு ஜனங்களோடு சேர்ந்து கொண்டு அவர்கள் சந்தேகப்படாதபடி இருப்பது ஒரு பெரிய காரியமல்ல. அவள் அதை சுலபத்தில் நிறைவேற்றக் கூடிய சாமர்த்தியசாலிதான். அன்றைய தினம் இரவில் அவள் கதவைத் திறந்து விடுவதும் சுலபமான வேலை தான். அதன் பிறகு ஆள்களை அழைத்துக் கொண்டு போய் கண்ணப்பா முதலியோர் படுத்திருக்கும் இடத்தைக் காட்டி அங்கங்கு நிற்க வைக்கலாம். ஆனால், அப்போதும், அவர்கள் எல்லோரும் ஒரே காலத்தில் எதிரிகளை மூளியாக்குவதற்கு முன்னும், யாராவது விழித்துக் கொண்டு கூச்சலிட்டால் எல்லோரும் உடனே குபீரென்று எழுந்து விடுவார்களே! நாங்கள் எவ்வளவு தைரியசாலியாக இருந்தாலும், அந்த இக்கட்டான நிலைமையில் என்ன செய்ய முடியும்? அத்தனை ஜனங்களுக்கு முன்னால் நாங்கள் அதற்குமேல் நம்முடைய கருத்தை நிறைவேற்றுவது முடியாத காரியம் ஆய்விடும். நாங்கள் அவர்களுடைய கையில் அகப்படாமல் தப்பித்துக் கொள்வதைத் தவிர வேறே எதையும் செய்வதற்கில்லை. ஆகையால் அதற்குத்தான் ஏதாவது தக்க யோசனை செய்ய வேண்டும்.

*மாசிலாமணி:-* ஆம், சேர்வைகாரரே! நீர் சொல்வதும் சரியான ஆட்சேபனை தான். அதற்கு நாம் வேறொரு தந்திரம் செய்யலாம் என்று நினைக்கிறேன். நீரும் உம்முடைய ஆள்களும் போகும் போது தலைக்கு அரைப்படி மிளகாய்ப் பொடியை மடியில் கட்டிக் கொண்டு போங்கள். தூக்கத்திலிருந்து விழித்துக் கொள்ளும் ஜனங்களுடைய முகத்தில், நீங்கள் மிளகாய்ப் பொடியை எடுத்தெடுத்து வீசினால், அந்த எரிச்சலைப் பொறுக்க மாட்டாமல் எல்லோரும் தம்முடைய கண்களை மூடிக்கொண்டு கதறி, கண்களை அலம்பிக் கொள்வதற்குத் தண்ணீர் இருக்கும் இடத்தைத் தேடிப் போவார்களே அன்றி உங்களைக் கவனிக்க மாட்டார்கள். அந்தச் சமயத்தில் நம்முடைய எதிரிகளை அங்க ஹீனப்படுத்திவிட்டு ஓடிவந்து விடுங்கள். இந்த மாதிரி செய்யலாம் அல்லவா? இதிலும் ஏதாவது ஆட்சேபனை உண்டோ?

**இ. சேர்வைகாரன்:-** அந்த மாதிரி செய்யலாம். ஆனாலும் அது எனக்கு அவ்வளவு உசிதமான யோசனையாகப் படவில்லை. ஜனங்கள் சுமார் பத்துப்பேருக்குள் இருந்தால், அந்தத் தந்திரத்தைச் சுலபமாகச் செய்து காரியத்தை முடிக்கலாம். சுமார் ஐம்பது ஜனங்கள் மூலைக்கொருவராய்ப் படுத்திருக்கையில், பத்து மனிதர்களாகிய நாங்கள் அத்தனை பேருடைய முகத்திலும் மிளகாய்ப் பொடியைத் தூவுவது சாத்தியமானதல்ல. நாங்கள் இருவது முப்பது பேருக்குத் தூவுவதற்குள், மற்றவர் எங்களுக்குப் பின்புறமாக வந்து வளைத்துக் கொள்ளுவார்கள், அல்லது, வெளியில் ஓடிப்போய்க் கூச்சலிட்டு ஏராளமான ஜனங்களைத் திரட்டிக் கொண்டு வருவார்கள். ஆகையால் இந்த யோசனை இருக்கட்டும். எனக்கு இன்னொரு நல்ல யோசனை தோன்றுகிறது. அப்படிச் செய்யலாம். ஆனால் அதை நம்முடைய ரமாமணிதான் துணிந்து செய்ய வேண்டும். அபினி என்று ஒரு லாகிரி வஸ்து இருக்கிறதென்று நீங்கள் கேள்வியுற்று இருக்கலாம். அந்த வஸ்துவில் ஒரு மிளகுப் பிரமாணம் ஒருவன் சாப்பிட்டால், அவன் பல நாட்கள் வரையில் மயங்கிக் கிடப்பான். அந்த அபினியைக் கொண்டு போய் ஜெர்மன் தேசத்தார் என்ன செய்கிறார்கள் தெரியுமா? அதோடு இன்னம் பல சாமான்களைச்

சேர்த்து திராவகமாக இறக்கி விற்பனைக்கு அனுப்பிக் கொண்டு வருகிறார்கள். அந்த ரஸம் பார்ப்பதற்குப் பளிங்கு போல எவ்வித நிறமும் இல்லாமல் நுட்பமாகவும் பளபளப்பாகவும் தெளிவாக வும் இருக்கிறது. அந்த திராவகத்தில் ஒரு துளி மனிதனுடைய உடம்பிற்குள் சென்றால், ஒரு கொட்டைப் பாக்களவுள்ள அபினியைத் தின்றால் எவ்வளவு கடுமையான போதையும் மயக்கமும் உண்டாகுமோ, அதைவிடப் பன்மடங்கு அதிக போதையும் மயக்கமும் உண்டாகும். அந்த திராவகத்திற்கு எவ்வித மணமாவது ருசியாவது கிடையாது. அதை நாம் வேறே எந்த வஸ்துவோடு கலந்தாலும் அதைக் கலந்த குறியே தெரியாது. ஆனால் அந்த திராவகம் தங்கத்தைவிட அதிக விலையுள்ளது. அதில் நாம் கால் அவுன்ஸ் வாங்கிக் கொள்வோம். அதன் விலை ஐம்பது ரூபாய் இருக்கலாம். இருந்தாலும் பரவாயில்லை. அதை வாங்கிக் கொள்வோம். அதை நம்முடைய ரமாமணி தன்னுடைய இடுப்பில் பத்திரமாகச் சொருகி வைத்துக் கொண்டே இருக்க வேண்டும். வெள்ளிக்கிழமை இரவில் எல்லா ஜனங்களுக்கும் வேலாயுதம் பிள்ளை இறங்கி இருக்கும் ஜாகையிலாவது, அல்லது, பட்டாபிராம பிள்ளையின் வீட்டிலாவது போஜனம் தயாராகும். நம்முடைய **ரமாமணி** மெதுவாகச் சமையலறைக்குள் போய் சுயம்பாகிகளோடு பேச்சுக் கொடுத்து, தங்கள் குழந்தை ஒன்று பசியைப் பொறுக்க மாட்டாமல் அழுகிற தென்றும், அதற்குக் கொஞ்சம் சாதம் வேண்டும் என்றும் சொன்னால், அவள் கலியாணத்திற்கு வந்திருக்கும் உறவினளென்று சுயம்பாகிகள் நினைத்து, அவள் கேட்பதைக் கொடுப்பார்கள். அந்தச் சமயத்தில், இவள் தந்திரம் செய்து, தன் மடியில் இருக்கும் சீசாவைத் திறந்து, திராவகம் முழுதையும், அங்கே தயாரித்து வைக்கப் பட்டிருக்கும் குழம்பில் வார்த்துவிட்டு, சந்தேகத்திற்கு இடமில்லாமல் வந்து விடட்டும். திராவகத்தை வார்த்ததனால், குழம்பின் மணமாவது ருசியாவது கொஞ்சமும் கெடாது. அங்கே போஜனம் செய்பவர் எல்லோரும் அரை நாழிகைக்குள் மயங்கிப் போய் அப்படி அப்படியே விழுந்து விடுவார்கள். கொஞ்ச நேரத்திற்கெல்லாம் நாங்கள் போய்

எங்கள் வேலையை சுலபத்தில் முடித்துவிட்டு வந்து விடுகிறோம். வரும் போது ரமாமணியையும் அழைத்துக் கொண்டு வருவதோடு, அங்கே மயங்கிக் கிடக்கும் பெண் பிள்ளைகள் ஏராளமாகப் போட்டுக் கொண்டிருக்கும் வைரம் முதலிய விலை உயர்ந்த ஆபரணங்களை எல்லாம் பிடுங்கி மூட்டை கட்டிக் கொண்டு வந்து சேருகிறோம்.

*மாசிலாமணி:-* பேஷ்! நல்ல முதல் தரமான யோசனை; சேர்வைகாரரே! மெச்சினேன்! அப்படியே செய்துவிடும். அங்கே நீங்கள் கைப்பற்றும் ஆபரணங்களை எல்லாம் நீங்களே எடுத்துக் கொள்ளுங்கள். அவைகளை எல்லாம் என்னிடம் கொண்டுவர வேண்டாம். எனக்கு, நாம் கோரும் காரியம் ஆனால், அதுவே போதுமானது. நம்முடைய ரமாமணியை மாத்திரம் நீர் நிரம்பவும் பத்திரமாகக் காத்து என்னிடம் கொண்டு வந்து சேர்க்க வேண்டியது. அவள் அபினித் திராவகத்தை குழம்பில் வெகு சுலபமாக வார்த்துவிடுவாள். அதைப்பற்றி நாம் கொஞ்சமும் கவலைப்பட வேண்டியதில்லை. ஆனால், இதில் ஒரு விஷயம் இருக்கிறது. வேலாயுதம் பிள்ளை, கண்ணப்பா முதலிய நம்முடைய எதிரிகள் எல்லோரும் அதை உண்டு மயங்கிக் கிடப்பார்களே, அந்தச் சமயத்தில் அவர்களுடைய மூக்கு முதலிய வற்றை அறுத்தால், அவர்கள் அந்தப் பாதையை அவ்வளவாக உணரமாட்டார்கள். அவர்கள் சரியானபடி அவஸ்தைப்படாமல் சகித்திருப்பதற்கு நாமே மருந்து தேடின மாதிரி ஆய்விடுகிறதே என்பது தான் என் மனசுக்குக் கொஞ்சம் குறையாக இருக்கிறது. இருந்தாலும் பாதகமில்லை. எப்படியாவது அவர்கள் மூளி ஆக வேண்டியது ஒன்றே முக்கியமான விஷயம். எனக்கு இன்னொரு சந்தேகமும் உண்டாகிறது. நீங்கள் அவர்களுடைய மூக்கு, காது முதலிய இடங்களை அறுக்கப் போகிறீர்களே. தங்களுடைய போதையில், அவர்கள் அறுபட்ட பிறகு எவ்வித சிகிச்சையும் இல்லாமல் அப்படியே மயங்கிக் கிடந்தால், உடம்பில் உள்ள இரத்தம் எல்லாம் வெளிப்பட்டுப் போவதனால், அவர்களுடைய உயிருக்கு அபாயம் நேர்ந்து விடுமோ என்னவோ?

*இ. சேர்வைகாரன்:-* நன்றாய் இருக்கிறது! அபினித் திராவகத்தின் மயக்கம், குளோரபாரம் முதலியவைகளின் மயக்கத்தைப் போல, அவ்வளவு பிரமாதமாக இருக்காது. நாம் மூக்கு காது முதலிய வற்றை அறுத்தவுடனே மயக்கம் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் பறந்துபோம். உடனே அவர்கள் மயக்கந் தெளிந்தவர்களாய்த் துள்ளிக் குதித்து அவஸ்தைப்பட்டு இரத்தம் வெளிப்படுவதை நிறுத்துவதற்குத் தக்க முயற்சி எடுத்துக் கொள்வார்கள். ஆகையால், அவர்களுடைய பிராணன் போய்விடுமோ என்ற பயமே வேண்டியதில்லை.

*மாசிலாமணி:-* சரி, உங்களை யாரும் பிடித்துக் கொள்ளாதபடி நீங்கள் இந்தத் தந்திரத்தைச் செய்தால், பிறகு, அவர்கள் பிழைத்துக் கொண்டாலும் சரி, இறந்து போனாலும் சரி; அதைப்பற்றி நமக்கு அக்கறை இல்லை. நீர் சொன்னபடி அந்த திராவகத்தையே வாங்கி உபயோகப்படுத்தி விடுங்கள்.

*இ. சேர்வைகாரன்:-* சரி; அப்படியானால், நாங்கள் எல்லோரும் எப்போது புறப்படுகிறது? ரமாமணி எப்போது வருகிறது? நாங்கள் எவ்விடத்தில் சந்திக்கிறது?

*மாசிலாமணி:-* நீர் ரமாமணியை அழைத்துக் கொண்டு இன்றைய சாயுங்கால ரயிலிலேயே போய்விடும். இன்றைய தினம் இரவில் அவள் இந்த ஊரில் இல்லாமல் போனால், எனக்கும் இந்தப் போலி மனோன்மணிக்கும் நடக்கப் போகும் சாந்தி கலியாணம் எவ்வித இடைஞ்சலும் இல்லாமல் சந்தோஷகரமாக நிறைவேறும். அவள் இருந்தால், இன்றைய காரியம் நடவாமல் தடுத்து விடுவாள். அதுவுமல்லாமல், நீர் பட்டணத்தில் வெள்ளிக் கிழமை அன்று நம்முடைய காரியங்களை முடித்த பிறகு ரமாமணியை அழைத்துக் கொண்டு போய்ப் பட்டணத்தில் உள்ள வேடிக்கைகளை எல்லாம் காட்டுவதாகச் சொல்லி, அவளைப் பட்டணத்திலேயே நாலைந்து தினங்கள் நிறுத்தி வையும். அதற்குள் இவ்விடத்தில் நான் என் ஆசையைப் பூர்த்தி செய்து கொள்ளுகிறேன். நீங்கள் திரும்பி

வரும் தினத்திலேயே இந்தப் போலி மனோன்மணியை நாம் முன் சொன்னது போல வெளியேற்றி விடலாம். உம்முடைய ஆள்கள் எல்லோரும் தக்க பெரிய மனிதர்கள் போல வேஷ்டி சட்டைகளைப் போட்டுக் கொண்டு வியாழக்கிழமை சாயுங்கால வண்டியில் புறப்பட்டு வெள்ளிக்கிழமை தினம் காலையில் பட்டணம் வந்து **ராமசாமி முதலியார்** சத்திரத்தில் உங்களைச் சந்திக்கட்டும். உங்களுடைய ஆள்கள் இரண்டு தினங்கள் முன்னாகவே அங்கே வந்து கும்பலாகக் கூடியிருந்தால், போலீசார் சந்தேகங்கொண்டு பிடித்துக் கொண்டாலும் கொள்வார்கள். ஆகையால் அவர்கள் வெள்ளிக் கிழமை அன்று அங்கே வருவதே போதுமானது. சனிக்கிழமையே அவர்கள் புறப்பட்டு இங்கே வந்துவிடட்டும். அவர்கள் பிரயாணம் போகும் போதும், திரும்பி வரும் போதும், ஒருவருக் கொருவர் சம்பந்தமில்லாத வெவ்வேறு மனிதர் போல நடக்க வேண்டுமே அன்றி கும்பலாய்ப் போகக்கூடாது. அதை அவர்களுக்குச் சொல்லிவையும்; இன்னும் கொஞ்ச நேரத்தில் போலீஸ் நாய்கள் வந்து என்னைப் பார்த்துவிட்டுப் போன உடனே நான் போய் ரமாமணியோடு பேசி, இன்றைய தினம் சாயுங்கால வண்டிக்குப் புறப்பட ஆயத்தமாக இருக்கும்படி செய்து விட்டு வருகிறேன். நீர் சாயுங்காலம் குதிரை வண்டியோடு வந்து சேரும். ஒருவேளை ரமாமணி தன்னோடு துணைக்குத் தன் மனிதர் யாரையாவது அழைத்துக் கொண்டு வந்தாலும் வருவாள். அவளுடைய பிரியப்படியே நடந்து கொள்ளும்.

**இ. சேர்வைகாரன்:-** சரி; அப்படியே செய்து விடுவோம். நான் உத்தரவு வாங்கிக் கொள்ளுகிறேன். நாங்கள் பட்டணம் போய்த் திரும்பி வருவதற்குள் தாங்கள் இந்தப் போலி மனோன்மணி யோடு பழகி, இவளுடைய உண்மையான வரலாற்றையும், என்ன கருத்தோடு இவர்கள் வேலாயுதம் பிள்ளையின் சொந்தக் காரர்கள் என்று பொய்யான தகவல்களைச் சொல்லிக் கொண்டு பட்டாபிராம பிள்ளையின் பங்களாவிற்குப் போனார்கள் என்ற விவரங்களையும் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். அதனால், நமக்கு ஏதாவது அனுகூலம் ஏற்படலாம்.

*மாசிலாமணி:-* நீங்கள் இன்றைய தினம் ரயிலில் ஏறிவிட்டீர்கள் என்ற சங்கதியை வண்டிக்காரன் வந்து சொல்வான் அல்லவா. உடனே நான் நம்முடைய வேலைக்காரியை இந்தப் போலி மனோன்மணியிடம் அனுப்பி, முகூர்த்த காலம் வந்துவிட்டது ஆகையால், நான் வரப் போகிறேன் என்று சொல்லி எச்சரிக்கைப் படுத்தி விட்டு கால் நாழிகைக்குப் பிறகு நான் உள்ளே போய்ச் சேருகிறேன். மற்ற விஷயங்களை எல்லாம் சந்தர்ப்பத்திற்குத் தகுந்தபடி நடத்திக் கொள்ளுகிறேன். நீர் புறப்பட்டுப் போம். உங்களுடைய செலவுக்குத் தேவையான பணத்தை எடுத்துக் கொண்டு போம் -- என்றான்.

உடனே இடும்பன் சேர்வைகாரன் தனக்குத் தேவையான பணத்தையும் மாசிலாமணியின் விடையையும் பெற்றுக் கொண்டு புறப்பட்டுப் போய்விட்டான். அதன் பிறகு அரை நாழிகை காலம் கழிந்தது. மாசிலாமணி எதிர்பார்த்ததற்கு இணங்க, போலீஸ் ஜெவான்கள் அவனை ஆஜர் பார்ப்பதற்காக வந்து, ஒரு புஸ்தகத்தில் அவனிடம் கையெழுத்துப் பெற்றுக் கொண்டு, அவ்விடத்தை விட்டுச் சென்றனர். உடனே மாசிலாமணி உயர்வான ஆடை ஆபரணங்களால் தன்னை நன்றாக அலங் கரித்துக் கொண்டு அத்தர், ஜவ்வாது முதலிய பரிமள வஸ்துக் களைத் தனது உடம்பிலும் ஆடைகளிலும் பூசிக்கொண்டு தனது ஆசை நாயகியான ரமாமணியிடம் போகப் புறப்பட்டான். அதே தெருவில், அவனது மாளிகைக்கு நேர் எதிரில் இருந்த பெரிய மெத்தை வீட்டிலேயே அவளை வைத்திருந்தான். ஆகையால், அவன் அதிக தூரம் போக வேண்டிய அவசியம் இல்லாது இருந்தது. அவன் தனது மாளிகையின் வாசலை விட்டுக் கீழே இறங்கி சுமார் முப்பது கஜ அகலமுள்ள வீதியைக் கடந்து நேராக எதிரே சென்று ரமாமணியின் வீட்டு வாசலை அடைந்தான். அந்த வீட்டின் முன் புறம் இரும்புக்கிராதிகள் போடப் பெற்றிருந்தது. அவைகளின் உள்ளே இருந்த திண்ணையின் மேல் உட்கார்ந்து, நூல் வலைப் பின்னிக் கொண்டிருந்த போயி ஒருவன் உடனே ஓடிவந்து கிராதிக் கதவைத் திறந்து விட்டு, **"தேவரா! தெண்டம் ஒஸ்துந்தி"** என்று தெலுங்கு பாஷையில் அவருக்கு வணக்கம் கூறிக் கையெடுத்துக் கும்பிடு போட்டான்.

அவனை நோக்கி, "அம்மாளுடைய சமயம் எப்படி?" என்றான். போயி சிறிது தயங்கி, "போஜன சமயமோ என்னவோ தெரிய வில்லை எஜமானே!" என்றான். அதைக் கேட்டுக் கொண்ட மாசிலாமணி முதல் வாசலைக் கடந்து உள்ளே சென்றான். அதன் நடைக்கதவு சாத்தி உள்பக்கத்தில் தாளிடப் பெற்றிருந்தது. அதன் பக்கத்தில் போய் நின்ற மாசிலாமணி "ரமா! ரமா!" என்று கொஞ்ச லாக இரண்டு குரல் கூப்பிட்ட வண்ணம் கதவை மெதுவாகத் தட்ட, உடனே கதவு திறக்கப்பட்டது. உட்புறத்தில் சுமார் நாற்பத்தைந்து வயதடைந்த ஒரு மனிதர் நின்று கொண்டார். அவர் மாசிலாமணியைக் கண்டு சிரித்த முகத்தோடு, "வாருங்கள், குழந்தை படுக்கை அறையில் நாவல் படித்துக் கொண்டு படுத்திருக்கிறாள்" என்று கூறிவிட்டு, மேல் பக்கம் நிமிர்ந்து மெத்தையைப் பார்த்தபடி, "ரமா! ரமா! எஜமான் வந்திருக்கிறார்கள்" என்று கூவி எச்சரித்தான்.

அடுத்த நிமிஷத்தில், மாசிலாமணி தாழ்வாரத்தில் இருந்த படிக்கட்டின் வழியாக ஏறி மேன்மாடத்திற்குச் செல்லலானான். படிகள் முடிந்தவுடன் எதிரில் ஒரு பெருத்த கூடம் காணப்பட்டது. அந்தக் கூடம் தேவேந்திரனது கொலு மண்டபம் போல மகா அற்புதமாக அலங்கரிக்கப்பட்டு, காண்போர் மனதை பிரமிக்கச் செய்வதாய் அமைந்திருந்தது. எங்கு பார்த்தாலும் நிலைக் கண்ணாடிகளும், ரவிவர்மாவின் படங்களும், வால்ஷேட், குலோப்புகளும், கண்ணாடி ஸரங்களாலான இதர விளக்குகளும், மின்சார விளக்குகளும், ரஸகுண்டுகளும், புதுமை புதுமையான மின்சார விசிறியும், தந்த நாற்காலிகளும், வெல்வெட்டு சோபாக் களுமே மயமாக நிறைந்திருந்தன. ஆங்காங்கு, சிற்பசாஸ்திரிகளால் செதுக்கப்பட்ட விநோதமான பெண் சிலைகள் வேடிக்கையாக நிறுத்தப் பெற்றிருந்தன. நவரத்னங்களும் பட்டுகளும் கலந்த விலை உயர்ந்த ஹாரங்களும் தோரணங்களும் அந்தக் கூடம் முழுதிலும் பின்னிக் கொண்டு கொடிசம்பங்கிப் பந்தல் போலக் காணப்பட்டன. தரையே தெரியாதபடி வழுவழுப்பான இரத்தின கம்பளம் கீழே பரப்பப் பெற்றிருந்தது. அந்தக் கூடத்திற்கு அடுத்தாற்போல ரமாமணியின் ப்ள்ளியறை இருந்தது.

மாசிலாமணி படிக்கட்டின் முடிவை அடைந்து கூடத்தில் நுழையும் வரையில் மூடப்பட்டிருந்த பள்ளியறையின் கதவுகள் உடனே திடீரென்று திறந்துவிடப்பட்டன. அந்தப் பள்ளியறையின் உள்பக்கத்து அமைப்பையும் அலங்காரங்களையும் உள்ளபடி விவரித்துக் கூறுவது சாத்தியமற்ற காரியம் என்றே சொல்ல வேண்டும். அவ்விடத்தில் காணப்பட்ட வில் வைத்த பெருத்த கட்டில் அந்த அறை முழுதையும் நிரப்பிக் கொண்டிருந்ததன்றி, அதன் மீது ஒரே காலத்தில் பத்து மனிதர் சயனித்துக் கொள்ளத் தகுந்த இடவசதி பெற்றதாய்க் காணப்பட்டது. அதன் மீது வெல்வெட்டு போர்த்தப் பெற்றதும், ஒருமுழ உயரமுள்ளதுமான மிருதுவான மெத்தையும், இருபது இருபத்தைந்து தலையணை திண்டு திணுசுகளும் காணப்பட்டன. அந்த அறை முழுதும் அத்தர், ஜவ்வாது, ஊதுவர்த்தி, பன்னீர், ரோஜாப்புஷ்பம், ஜாதிமல்லிகைப் புஷ்பம் முதலியவற்றின் ஒன்று கூடிய பிரம்மாநந்தமான மணம் கமகம என்று கமழ்ந்து அவ்விடம் வருவோரது மனத்தை மயக்கிப் பரவசப்படுத்தும் தன்மையதாயிருந்தது. சுவர்கள் முழுதும் நிலைக் கண்ணாடிகளே நிறைந்திருந்தமையால் கட்டிலும் அதன் மேல் உள்ள மனிதர் வடிவமும் அந்தக் கண்ணாடிகளிற்குள் பலவாய்ப் பெருகி, மனதை பிரமிக்கச் செய்ததோடு, அந்தப் பள்ளியறையின் அலங்காரத்தை ஆயிரம் மடங்கு பெருக்கிக் காட்டின. அந்த அறையின் மேல் பக்கம் முழுதும் ஜரிகைத் துய்யாக்களால் நிரம்பவும் விநோதமான ஒட்டு வேலைகள் செய்யப் பெற்றிருந்ததன்றி, லீலா விநோதங்களும், சிருங்காரக் காட்சிகளும் நிறைந்த எண்ணிறந்த படங்கள் பல தேசங்களில் இருந்து வரவழைக்கப் பெற்று மேற்பக்கம் முழுதிலும் மாட்டப் பெற்றிருந்தன. மனிதர் கட்டிலின் மீது சயனித்தபடி தமது பார்வையை மேல் பக்கம் திரும்பினால், அவர்களது திருஷ்டியில், அந்தப் படங்களில் நிறைந்துள்ள பல தேசத்து வடிவழகியரும் தமது காதலர்களோடு நடாத்தும் கலவிப்போரின் அதிசயக் காட்சிகள் எல்லாம் தத்ரூபம் கண்கூடாய்த் தோன்றுவதாய் அமைந்திருந்தன. சுவர்களில் பொருத்தப் பட்டிருந்த நிலைக் கண்ணாடிகளுள் சிலவற்றில்

உள்ள விசையை அழுத்தினால், அவை கதவுகள் போலத் திறந்து கொண்டன. ஒவ்வொரு நிலைக் கண்ணாடியின் பின்புறத்திலும் ஒவ்வொரு கண்ணாடி பீரோ வைக்கப் பட்டிருந்தது. ஒரு பீரோவில், ரமாமணியம்மாளின் வைரம், கெம்பு, தங்கம் முதலிய ஆபரணங்களும், பவுன்களும், ரூபாய்களும் இருந்தன. இன்னொன்றில் அவளது பட்டாடைகள் ரவிக்கைகள் முதலிய ஆடைகளே மயமாக நிறைந்திருந்தன. இன்னொரு பீரோவில் மல்கோவா, சீமை இலந்தை, ஆரஞ்சு, செவ்வாழை, மலைவாழை முதலிய முதல் தரமான கனி வர்க்கங்கள் நிறைந்திருந்தன. இன்னொன்றில் நிறைய நாவல் புஸ்தகங்களும் பாட்டுப் புஸ்தகங்களும் அடங்கி இருந்தன. இன்னொன்றில், வீணை, பிடில், ஹார்மோனியம் முதலிய வாத்தியங்கள் வைக்கப்பட்டிருந்தன. இன்னொன்றில் ஜிலேபி, ஹல்வா, தூத்பேடா, பூவுந்தி, பாஸுந்தி முதலிய மாதுரியமான மிட்டாய் தினுசுகள் வெள்ளிப் பாத்திரங்களில் வைக்கப்பட்டிருந்தன. இன்னொரு பீரோவில் இளநீர், ஷர்பத், சோடா, கலர்கள், பால் முதலிய பான வஸ்துக்களே காணப்பட்டன.

இவ்வாறு அந்த அதிசயப் பள்ளியறை உலகத்தில் உள்ள இன்பகரமான வஸ்துக்கள் எல்லாம் நிறைந்த ஒரு பண்டக சாலை போல அமைந்திருந்தது அன்றி, அவைகள் யாவினும் பதினாயிரம் மடங்கு அதிக இன்பமயமாக விளங்கிய ரமாமணியம்மாள் என்ற பெண்ணரசியின் ஆஸ்தான மண்டபமாகும் பாக்கியத்தையும் பெற்றிருந்தது. அத்தகைய மேன்மை வாய்ந்த சயன மாளிகையின் கதவுகள் திறக்கப்பட்ட உடனே, உள்புறத்தில் சுவர்ண பிம்பம் போல அழகின் திரளமாகக் காணப்பட்ட ஒரு பெண் வடிவம் ஜெகஜ் ஜோதியாக எதிரில் நின்றது. அவளது அழகு அத்யாச்சரியமான தெய்வீகத் தன்மை வாய்ந்ததாய்த் தோன்றியது ஆகையால், அவள் அப்போதே தெய்வ லோகத்தில் இருந்து இந்திர விமானத்தில் அமர்ந்து கீழே இறங்கியவள் போலக் காணப்பட்டாள். அவளுக்குச் சுமார் பதினெட்டு, அல்லது, பத்தொன்பது வயதே இருக்கலாம்.

ஆயினும் அவள் உருட்சி திரட்சியான அங்கங்களும், கட்டு மஸ்தான மேனி அமைப்பும் வாய்ந்தவளாய் இருந்தமையால், அவள் அப்போதே புஷ்பித்துப் புருஷர் முகத்தையே பாராத பதினான்கு, அல்லது, பதினைந்து வயது மடந்தை போலக் காணப்பட்டாள். அவளது கைகால்கள் முதலிய ஒவ்வோர் உறுப்பும் மிகுந்த காந்தியும் கனிவும் மிருதுத்தன்மையும் கட்டழகும் பெற்று, காண்பதற்கு மொழுமொழுவென்று நிரம்பவும் வசீகரமாகக் காணப்பட்டது. ஆனாலும், அவளது மொத்தமான தோற்றம் அவள் அதிகப் பருமன் இன்றி பொற்கொடி போல இருப்பதாகக் காணப்பட்டது. அவளது முகம் அப்போதே மலர்ந்த செந்தாமரைப் புஷ்பம் போல முற்றிலும் மனோக்கியமாகவும், சாத்வீகம், நிஷ்கபடம், மனிதரிடம் இயற்கையான வாஞ்சை முதலிய சிரேஷ்ட குணங்களைக் காண்பிப்பதாகவும் அமைந்திருந்தது. அவள் அன்றைய தினம் முழுதும் கெம்புகளினால் ஆன ஆபரணங்களையே பாதாதி கேசம் வரையில் அணிந்திருந்தாள். அவளது மேனியில் ஊதா நிறச் சேலையும் ரோஜாநிற ரவிக்கையும் அழகு பெற்றுக் கொண்டிருந்தன. தந்தம் போலத் துல்லியமாகக் காணப்பட்ட அவளது உடம்பில், சிவப்பு, ஊதா முதலிய மாறுபட்ட பல நிறங்களைக் கொண்ட ஆடை ஆபரணங்கள் இருந்தமையால், அவளது எழில் வர்ணனைக்கு அடங்காத அதீதமான சிருஷ்டியைச் சேர்ந்ததாய்த் தோன்றியது.

அந்த அற்புத வசீகர மங்கையாவள் என்பதையும், அவளுக்கும் மாசிலாமணிக்கும் எப்படி சிநேகம் உண்டாயிற்று என்பதையும் தெரிந்து கொள்வது, நமது கதைப் போக்கிற்கு அவசியமான விஷயம் ஆதலால், அதை நாம் முதலில் தெரிந்து கொள்வோம். சட்டைநாத பிள்ளை பிரபல தசையடைந்திருந்த காலத்தில் வடிவாம்பாளை மாசிலாமணிக்குக் கலியாணம் செய்விப்பதற்காக, அவளை பலவந்தமாக மன்னார்குடியில் இருந்து அபகரித்து வந்ததாக நாம் முன்னரே படித்தோம் அல்லவா; அந்தக் காலத்தில், அவர்களது மாளிகைக்கு எதிர்த்த வீட்டில் இன்னொரு

வக்கீல் வசித்து வந்தார். அவர் நிரம்பவும் கீர்த்தி வாய்ந்த பிரபல வக்கீலாக இருந்து மகா திறமைசாலி என்று எல்லோராலும் புகழப் பெற்று வந்தார். அவர் எடுத்துக் கொண்ட வழக்கு தோற்றுப் போனதென்ற இழுக்கே அவருக்கு ஒரு நாளும் உண்டானதில்லை. கண்ணிற்கெதிரில் கொலை செய்தவர்களும், அயலான் மனைவியைப் பலவந்தமாகக் கற்பழித்தவர்களும், கொள்ளை அடித்தவர்களும், பொய்க் கையெழுத்துச் செய்தவர்களும், இன்னும் இவை போன்ற பெரும் பெரும் குற்றங்களைச் செய்தவரும் அந்த வக்கீலின் அபார சாமர்த்தியத்தினால் நிரபராதிகளாய்ப் போய்த் தப்பித்துக் கொண்டனர். அத்தகைய பரோபகாரியான வக்கீலின் வீட்டில் ஆயிரம் ஆயிரமாக பொருள் வந்து குவிந்து கொண்டிருந்தது என்பதைச் சொல்வது மிகையாகும். ஆனால் அவருக்கு ஒரு கெட்ட பழக்கம் ஏற்பட்டு அது காலக்கிரமத்தில் பெருத்த பைத்தியமாக முற்றிப் போய் விட்டது. அதாவது சீமையில் இருந்து வரும் மதுபானங்களில் அவருக்கு எப்படியோ பரிச்சயம் ஏற்பட்டு இரண்டொரு வருஷத்தில் அது முற்றிப் பெருத்த பேய்போல அவரைப் பிடித்துக் கொண்டது. அதனால் அவருக்கு இயற்கையான ஆகாரத்தில் வெறுப்பு ஏற்பட்டுப் போனது. ஆகையால், காலக்கிரமத்தில் அவர் அன்னம், தண்ணீர் முதலிய எந்த வஸ்துவையும் உட்கொள்வதையே அடியோடு விட்டுவிட்டார். எப்போதும் சீமை மதுவையே ஜீவாதாரமாக மதித்து அவர் அருந்திக் கொண்டு வந்தார். எப்போதும் அவரது கண்கள் கோவைப்பழம் போலச் சிவந்தே காணப்பட்டன. அவர் தமது வீட்டில் இருக்கும் போது ஓயாமல் குடித்து மயங்கிப் படுத்த படுக்கையாகவே இருப்பார். கச்சேரிக்குப் போகும் காலத்தில் அவரது சட்டைப் பைக்குள் இரண்டொரு புட்டிகள் ஊஞ்சலாடிக் கொண்டே இருக்கும். கச்சேரியில் நியாயாதிபதி அப்புறம் இப்புறம் திரும்பும் சமயத்தில், இவர் மேஜையின் மறைவில் தமது வாயை வைத்து மதுப் புட்டியைத் திறந்து இரண்டொரு வாய் இழுத்துத் தனக்கு சுறுசுறுப்பை உண்டாக்கிக் கொண்டே எழுந்தெழுந்து வாதாடுவார். அத்தகைய பரிதாபகரமான மனிதர் என்ன

ஜாதியைச் சேர்ந்தவர் என்பதை அறிய நமது வாசகர்கள் விரும்பலாம். அவரது ஜாதி இன்னதென்பதை நாம் வெளியிடுவோமாயின், அதே ஜாதியைச் சேர்ந்த பிறரது மனம் புண்படுவதைக் கருதி, நாம் வெளியிடுவது அநுசிதம் என, அதைச் சொல்லாமல் விடுகிறோம். அவரது முதல் மனைவி இறந்து போனபிறகு சில வருஷகாலம் அவர் விதுரராகவே இருந்து, தற்செயலாக ஒரு நாள் ஒரு வழக்கின் பொருட்டு பக்கத்து ஊரிற்குப் போயிருந்த காலத்தில், அவ்விடத்தில் அவர் தமது பந்துவான ஒருவர் வீட்டில் தங்க, அங்கே அவரது திருஷ்டியில் பட்ட அந்த பந்துவின் மகளான நமது ரமாமணியைக் கண்டு, அவளது மகா வசீகரமான அழகில் ஈடுபட்டு அவளை இரண்டாவது மனைவியாகக் கலியாணம் செய்து கொண்டார். ரமாமணியின் தாய் தந்தையர் பரம ஏழையான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஆதலால், வக்கீலின் பெருத்த செல்வத்தையே கருதினார்கள் அன்றி, அவரது வயதையாகிலும் குடியினால் அவருக்கு ஏற்பட்டிருந்த இழிவையாகிலும் கருதவே இல்லை. நமது ரமாமணி தனது புருஷரது மனைக்கு வந்த பிறகு அபாரமான சம்பத்திற்கு எஜமானியாகி சகலமான சுகபோகங்களையும் செல்வாக்கையும் அனுபவித்து இருக்க, சொற்ப காலத்தில், அவளது தேகக்கட்டும் அழகும் பதினாயிரம் மடங்கு பெருகி அவளைக் காண்போரைப் பித்தராக்கத் தக்கவையாய் மாறிப் போயின. ஆபரணங்கள், ஆடைகள் முதலிய மற்ற எல்லா அம்சங்களிலும் அவளது மனம் திருப்தி அடைந்ததானாலும், புருஷன் சம்பந்தப்பட்ட வரையில், அவளது மனம் குறைப்பட்டுக் கொண்டே வந்தது. முன்னே கூறப்பட்டபடி வக்கீல் வீட்டில் இருந்த காலத்தில் எல்லாம் சீமை மதுவிற்கே அடிமையாய் மயங்கிக் கிடந்தார் ஆதலால், அவர் அவளை ஏறிட்டும் பார்க்காமல் அலட்சியமாக விட்டு வைத்திருந்தார். ரமாமணியம்மாளினது மனம் அதே ஏக்கத்தினால் வருந்தி வாடி மெலிந்து தத்தளித்து இருந்தது. வக்கீல் பகல் வேளைகளில் கச்சேரிக்குப் போயிருக்கும் காலத்தில், அவள் தனது வீட்டு மெத்தையின் மேல் நின்று வெளியில் பார்த்தபடி இருப்பது வழக்கம். ஆதலால், எதிரில் இருந்த நமது சட்டைநாத பிள்ளையின் மாளிகை எப்போதும்

அவளது திருஷ்டிக்கு எதிரில் நின்று கொண்டே இருந்தது. தெய்வ லோகத்து அரம்பை போல மேன்மாடத்தில் நின்ற ஏந்தெழில் அணங்கை ஒரு நாள் நமது மாசிலாமணி தற்செயலாகக் கண்டு விட்டான். கண்டது முதல் அவனது மனதில் அவள்மீது கடு மையல் தோன்றிவிட்டது. மேன் மேலும் அவளைப் பார்த்து அவளது அற்புதமான அழகைக் கண்டு ஆனந்தம் அடைய வேண்டும் என்ற நோக்கத்தோடு அவன் தனது மாளிகையின் உப்பரிகையில் இருந்தபடி இமை கொட்டாமல் அவளையே பார்த்துக் கொண்டிருப்பான். இவ்வாறு அவன் அவளைக் கண்டது, அவன் சிறைச்சாலையில் இருந்து விடுபட்டு வந்த சில தினங்களுக்குப் பிறகே. அவளும் அவனை நோக்கினாள். ஆரம்பத்தில், இரண்டொரு நாள் அவள் நாணிக் கோணி அப்பால் போய் மறைந்து கொண்டாள். ஆனாலும், அதன் பிறகு அவளும் கடைக்கண் பார்வையால் அவனைக் கூர்ந்து நோக்கலானாள். அவன் வலதுகால் அற்றவன் என்பதை அவள் அறியாதவள். ஆதலால், அவனது முகத்தழகு, யௌவனப் பிராயம், அபாரமான செல்வம், கலியாணமாகா நிலைமை முதலியவற்றைக் கருதி அவளும் அவன் மீது இச்சை கொள்ளத் தொடங்கினாள். சில தினங்கள் வரையில் அவர்கள் ஒருவரையொருவர் காண வேண்டும் என்னும் அவாவோடு அடிக்கடி மேன்மாடத்திற்கு வந்ததும், எதிர்ப்பக்கத்தில் தமது பார்வையைச் செலுத்தியதும் நன்றாகத் தெரிந்தன. அவன் பார்க்கும் போது, அவள் நாணிக் குனிவதும், அவள் பார்க்கும் போது, அவன் அப்பால் திரும்புவதும் நடைபெற்றன. பிறகு சில தினங்களில் அவர்கள் ஒருவரை ஒருவர் கண்ட காலத்தில், அவர்களை மிஞ்சி அவர்களது முகம் ஆனந்தத்தினால் மலர்ந்து புன்னகை செய்தன. இருவருக்கும் அந்த இன்பம் சொற்பகாலம் வரையில் கிடைத்துக் கொண்டிருந்தது. பிறகு படிப்படியாய் இருவரது கண்களும் சந்தித்து சமிக்ஞை செய்து ஊமை ஜாடை காட்டிக் கொண்டன. கைகள் தந்தி பேச ஆரம்பித்தன. கடைசியில் ஒரு நாள் வக்கீல் ஏதோ காரியார்த்தமாக வெளியூருக்குப் போயிருந்தார். ஆதலால், அன்றைய தினம் ரமாமணி தன்னை நிரம்பவும் ஸொகுஸாக அலங்கரித்துக் கொண்டு வழக்கத்திற்கு

முன்னதாகவே உப்பரிகையை அடைந்து மாசிலாமணியின் வருகையை நிரம்பவும் ஆவலோடு எதிர்பார்த்திருந்தாள். அவனைக் காண அவளது மனதும், முகமும் மலர்ந்தன. கண்கள் முழி மிரட்டின. வலது கை அவனை வருந்தி அழைத்தது. அன்றைய தினம் இரவில் அவன் அவளது வீட்டிற்குள் நுழைந்துவிட்டான். முழுமனதோடு இருவரும் வெகு சுலபத்தில் அந்தரங்கமான காதலர் ஆகிவிட்டனர். இராக்காலங்களில் வக்கீல் வீட்டில் இருப்பதைக் கருதி, அவர்கள் பகற்காலங்களில் ஒளிவு மறைவாக ஒருவரை ஒருவர் சந்தித்து ஆனந்தமாக இருந்து வந்தனர். ரமாமணியம்மாள் நிரம்பவும் மூர்க்கமான ஆசா பாசங்களைக் கொண்டவளாக இருந்தாள். ஆதலால், இராக் காலங்களிலும் மாசிலாமணியோடு சந்தோஷமாக இருக்க வேண்டும் என்ற விலக்க முடியாத பலத்த ஆசையும் ஆவலும் அடைந்து, அது விஷயத்தில் மாசிலாமணியோடு யோசனை செய்து, அவனது சொற்படி, வக்கீல் குடிக்கும் சீமை மதுவில் விஷத்தைக் கலந்து வைத்துவிட்டாள். குடிவெறியில், எதையும் உணராது மேன்மேலும் அதை அருந்திய வக்கீல் அன்றைய இரவில் பரலோகப் பிராப்தி அடைந்து விட்டார். அவர் மிதமிஞ்சிக் குடித்ததால் திடீரென்று இறந்து போய்விட்டார் என்ற வதந்தியைக் அவள் பரப்பிவிட்டு அண்டைவீட்டு மனிதர்களின் உதவியைக் கொண்டு நிரம்பவும் துரிதமாகப் பிணத்தை எடுத்துப் போய் தகனம் செய்து வக்கீலின் தேகத்தைச் சாம்பலாக்கி விட்டு நிம்மதியாக வீடு சேர்ந்து, வக்கீல் குடித்தழித்தது போக மிகுதி இருந்த பொருள்களுக்கு எல்லாம் எஜமானியானாள். அவளது சொந்த ஊரில் ஏழ்மை நிலைமையில் உழன்று கொண்டிருந்த வயோதிகர்களான தாய் தந்தையர் உடனே அவளது வீட்டிற்கே அழைத்துக் கொள்ளப்பட்டனர். வக்கீலின் அந்தியகாலச் சடங்குகள் நிறைவேறிய மறுதினம் முதல் மாசிலாமணியே அவளையும் அவளது வீட்டு நிர்வாகங்களையும் எல்லோரும் அறிய பகிரங்கமாக ஏற்றுக் கொண்டு அவளைத் தனது உயிருக் குயிரான ஆசை நாயகியாக வைத்துக் கொண்டான். அவளது அற்புதமான அழகில் அவன் மதிமயங்கிப் போய் அவள் குடியிருந்த பெருத்த மெத்தை வீட்டை விலைக்கு வாங்கி அவள்

பேரில் எழுதி வைத்து அதில் நாம் முன்னே விவரித்த பள்ளியறை கூடம் முதலிய ஏற்பாடுகளை எல்லாம் செய்து வைத்ததோடு, அவள் பொருட்டு தனது செல்வத்தில் பெரும் பாகத்தையும் விரயம் செய்து சொற்ப காலத்தில் அவன் அவளிடத்திலேயே தனது உயிரை வைத்தவனாக மாறிப் போனான். அவ்வாறு ஐந்தாறு மாத காலம் கழிந்தது. மாசிலாமணி அவளிடம் நிகரற்ற காதல் கொண்டு அவளை உயிருக்குயிராய் மதித்திருந்தான். ஆனாலும், அவன் வலதுகால் அற்ற அங்கஹீனன் என்பதை உணர்ந்து கொண்ட ரமாமணியின் மனதில் அந்த ஒரு விஷயத்தில் குறை இருந்து வருத்திக் கொண்டே வந்தது. தனது ஆயுள் காலம் முடிய தான் மாசிலாமணியை விடக்கூடாது என்ற உறுதியும், பிரியமும் அவளது மனதில் வேரூன்றி இருந்தது ஆனாலும், திரௌபதை, வீராதி வீரர்களான ஐந்து புருஷர்களை மணந் திருந்தும், ஆறாவது புருஷனாகக் கர்ணனை அடைய அந்தரங்கமாக ஆசை கொண்டது போல, ரமாமணியின் மனதில் இரகசியமான ஒரு வேட்கை இருந்து வந்தது. அதாவது, எவ்வித அங்கஹீனமும் இல்லாத கட்டழகனான ஒரு யௌவனப் புருஷன் எவனை யாகிலும் தான் மாசிலாமணிக்குத் தெரியாமல் இரகசியத்தில் காதலனாக வைத்துக் கொண்டு, மாசிலாமணியின் செல்வத்தை அவனுக்கு அள்ளிக் கொடுத்து, அவனை மகிழ்வித்து அவனது பூர்ணமான வாஞ்சையைத் தான் பெறுவதே தான் பிறந்ததற்கு அடையக் கூடிய பெருத்த பாக்கியமாக மதித்தாள். அந்தக் கருத்தைத் தன் மனதிற்குள் அடக்கிக் கொண்டிருந்த ரமாமணி மாசிலாமணி இல்லாத காலங்களில் மெத்தையின் மேல் இருந்தபடி, தெருவிற் செல்லும் விடபுருஷர்களின் திருமேனி அழகை ஆராய்ச்சி செய்த வண்ணம் பகல் முழுதும் காத்திருப்பாள். பல நாட்கள் ஆவலோடு கழிந்த பின்னர் அவள் எதிர்பார்த்த கட்டழகன் அவளது திருஷ்டியில் பட்டான். அன்றைய தினம் நடந்த ஓர் ஊர்கோலத்தில் மேளம் வாசித்துக் கொண்டிருந்த தவில்காரப் பையன் ஒருவன் அவள் கோரிய லட்சணங்கள் எல்லாம் வாய்ந்தவனாகக் காணப்பட்டான். அவனுக்குச் சுமார் இருபது வயது இருக்கலாம். நல்ல கட்டுமஸ்தான தேகமும்,

மினுமினுப்பான சிவந்த நிறமும், கருத்து அடர்ந்திருந்த செழிப்பான சுருட்டைத் தலைமயிரும், எவ்வித ஊனமும் இல்லாமல் சாமுத்திரிகா லட்சணப்படி அமைந்த கைகால்கள் மார்பு புஜம் முதலிய அங்கங்களும் பெற்று, அப்போதே பக்குவம் அடைந்த யௌவனப் பெண்ணைப் போன்ற வசீகரமான முகக்களை உடையவனாய்த் தோன்றிய **தவில்காரப் பக்கிரி** என்ற யௌவனப் புருஷன் ஒரு நொடியில் ரமாமணியின் மனதைக் கொள்ளை கொண்டு சென்றான்.

அவளது தாய் தந்தையர் இருவரும் ரமாமணியின் மனப் போக்கின்படி எவ்விதமான துர் நடத்தைக்கும் இணங்கக்கூடிய இழிந்த குணமுடையவர்கள் ஆதலால், தனது தந்தையின் முயற்சியைக் கொண்டே, அவள் மேற்கூறப்பட்ட பக்கிரியின் சிநேகத்தை அடைந்து மாசிலாமணிக்குத் தெரியாமல் அவனைப் பரம அந்தரங்கமாக வருவித்து அவனது விஷயத்தில் கருணை மாரி சொரிந்து, தனது உடல், பொருள், ஆவி ஆகிய மூன்றையும் உண்மையில் அவனுக்கே அர்ப்பணம் செய்தவளாய் இருந்து வந்தாள். மாசிலாமணி இராக்காலத்தில் மாத்திரம் வந்து போவதை வைத்துக் கொள்ளவே, பகற்காலம் முழுதும் தவில்காரப் பக்கிரிக்கே உரியதாக இருந்து வந்தது. மனிதர் உலக வியவகாரம் சம்பந்தப்பட்ட வரையில் புருஷன் குழந்தைகள் தாய் தகப்பன் முதலிய உறவினர்களையே தமது நெருங்கிய பந்துக்களாகவும் உயிர் போலவும் மதித்தனர். ஆனாலும், அவர்கள் தமக்குள் உயிருக்குயிராக மறைந்து நிற்கும் கடவுள் ஒருவரே சாசுவதமாக நாடத் தகுந்த ஆப்த பந்துவென்று நினைப்பது போல ரமாமணி மாசிலாமணியின் அபாரமான செல்வத்தையும் பிரியத்தையும் கருதி, எல்லா விஷயங்களிலும் அவனுக்கு அடிமை போல அவனது மனம் கோணாமல் நடந்து வந்தாள். ஆனாலும், தனது உண்மையான காதலை பக்கிரியா பிள்ளைக்கே அர்ப்பணம் செய்திருந்தாள். மாசிலாமணியை ஒரு நிமிஷ நேரம் காணாவிடில், அந்தத் தனிமையைப் பொறுக்க மாட்டாமல் விஷத்தைத் தின்று இறந்து விடலாம் போலிருக்கிறது என்று அவனிடம் பல தடவைகளில் கூறி, அவனது பந்தத்தை முன்னிலும் பன்மடங்கு

அதிகமாக வலுப்படுத்திக் கொண்டாள். ஆனாலும், அவன் எப்போதும் இல்லாமல் பக்கிரியா பிள்ளையே சதாகாலமும் தன்னோடு இருப்பதையே அவள் பரமபதமாக நினைத்து வந்தாள். மாசிலாமணியின் அபாரமான பிரியமும், அவனது பெருஞ் செல்வமும், அதனால் உண்டான செல்வாக்கும், வசதிகளும், சௌகரியங்களும் நிரந்தரமாகத் தனக்கு இருக்க வேண்டும், அவைகளோடு தான் தனது காதல் முழுதையும் பக்கிரியா பிள்ளை மீதே செலுத்தி, அவனும் தானும் எப்போதும் ஒப்புயர்வற்ற இன்பம் அனுபவித்திருக்க வேண்டும் என்பதே அவளது உள்கருத்து. அவள் தனது அபார சாமர்த்தியத்தைக் கொண்டும், தனது தாய் தந்தையரின் உதவியைக் கொண்டும், நிரம்பவும் திறமையோடு நடித்து வந்ததோடு, அதைப்பற்றி மாசிலாமணி சிறிதும் சந்தேகியாதபடி பாசாங்கு புரிந்து வந்தாள். தானும் பக்கிரியா பிள்ளையும் ஒன்றாக இருக்கையில் சயன அறைக்கு ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் மாசிலாமணி வந்துவிட நேர்ந்தால், பெருத்த அபாயம் வந்துவிடும் என்ற கருத்தோடு, அவள், தன்து கட்டிலைச் சுற்றிலும் பொருத்தப் பெற்றிருந்த நிலைக் கண்ணாடிகளுக்குப் பின்னால் மறைந்திருந்த பீரோக்களில் ஒன்றை விலக்கி, அவ்விடத்தில் தரையில் ஓர் ஆள் இறங்கத் தகுந்த வழி செய்து, அவ்விடத்தில் இருந்து கீழ்க்கட்டிற்கு இறங்க ஓர் ஏணியை வைத்திருந்தாள். எப்பொழுதாவது மாசிலாமணி வந்தால், நடைக் கதவைத் திறந்து விடும் வேலையைச் செய்து வந்த அவளது தந்தை உடனே அவளுக்கு அந்த வருகையை அறிவுறுத்த வேண்டும் என்பதும் அவளது ஏற்பாடு. உடனே பக்கிரியா பிள்ளை நிலைக் கண்ணாடிகளுக்குப் பின்னால் போய் பழந்துணிகளையும் பலகையையும் விலக்கிக் கொண்டு ஏணியின் வழியாய்க் கீழே இறங்கி, வீட்டின் பின் வாசல் வழியாய்ப் பக்கத்துத் தெருவுக்குப் போய் விடுவான். ரமாமணியின் தாயார் உடனே ஏணியை அப்புறப்படுத்தி விடுவாள். ரமாமணி ஒரு பாவத்தையும் அறியாத பரம சாதுபோல அப்போதே மலர்ந்த தாமரைப் புஷ்பம் போன்ற முகத்தோடு மாசிலாமணியை வரவேற்று, அவனிடம் மகா உத்தம பத்தினி போல நடந்து கொள்வாள். மாசிலாமணியின்

குடும்ப ரகசியம் முழுதையும் அவள் தெரிந்து கொண்டதன்றி, சட்டைநாத பிள்ளை விடுவித்த விஷயத்திலும் அவள் அவனுக்குப் பேருதவி புரிந்து, தன் பொருட்டு அவள் தனது உயிரையும் விடக்கூடியவள் என்று மாசிலாமணி நினைக்கும்படி நடந்து வந்தாள்.

இத்தகைய குணாதிசயங்கள் வாய்ந்த ரமாமணியம்மாளை இடும்பன் சேர்வைகாரனோடு சென்னைக்கு அனுப்பும் கருத்தோடு மாசிலாமணி அவளது வீட்டை அடைந்த காலத்தில், அவள் அவனது வருகையை எதிர்பார்க்காமல் தவில்காரனோடு அசந்தர்ப்ப நிலைமையில் இருந்தாள். ஆதலால், தனது தகப்பன் குரல் கொடுத்த உடனே திடுக்கிட்டு எழுந்து ஓசை செய்யாமல் நிலைக் கண்ணாடிக் கதவைத் திறந்து பக்கிரியா பிள்ளையை அதற்குள் அனுப்பிவிட்டு கண்ணாடிக் கதவை மறுபடி மூடிய பின், முற்றிலும் அலங்கோலமாகப் போயிருந்த தனது தலைமயிர், ஆடைகள் முதலியவற்றைச் சீர்திருத்திக் கொண்டு அவன் வருவதற்குள் கதவைத் திறந்து விட்டாள். ஆதலால், அவளது தேகம் ஒருவித படபடப்பைக் காட்டியது. அவளது முகம் உள்ளடக்கிய பயத்தையும், ஏமாற்றத்தையும், ஏக்கத்தையும், ஒருவித மினுமினுப்பையும் காட்டியது. கண்கள் இளகிப் பளபள வென்று ஜ்வலித்தன. கைகால்கள் எல்லாம் வெடவெடவென்று நடுங்கத் தலைப்பட்டன. ஆயினும், அவள் எதையோ கவனிப்பவள் போலத் தனது முகத்தைக் கீழே குனியவைத்தபடி தன்னை ஒருவாறு நிர்வகித்துக் கொண்டு, அவனைப் பார்த்துத் தனது இயற்கைப்படி புன்னகை செய்ய முயற்சித்தாள். அந்த முயற்சியில், அவளது முகம் விகாரமுற்றதே அன்றி அழகு பெறாமல் போயிற்று. மாசிலாமணி பிறருக்குத் தீங்கிழைப் பதிலேயே தனது முழு மனத்தையும் செலுத்தி இருந்தவனாதலால், தனது வீட்டில் இருந்து, தனது செல்வங்களை எல்லாம் விரயம் செய்து தன்னையே வஞ்சித்து வந்த உள் கள்ளனைச் சிறிதும் கவனியாமல், ரமாமணி தன்னிடத்தில் உண்மையான பிரேமை வைத்தவள் என்றே மதித்து அவளது முகம் சந்தோஷமற்றதாய் இருந்ததைக் கண்டு,

அவள் ஒருகால் தன்மீது ஏதேனும் காரணம் பற்றி வருத்தமுற்று இருக்கிறாளோ என்று சந்தேகித்தவனாய், சந்தோஷத்தினால் மலர்ந்து புன்னகை புரிந்த வதனத்தினனாய் அவளை நோக்கி, "என்ன ரமா! உன் முகம் ஒருமாதிரியாக இருக்கிறதே! என்மேல் ஏதாவது கோபம் உண்டா?" என்று நயமாகக் கேட்ட வண்ணம் பள்ளியறைக்குள் நுழைந்து கட்டிலின் மீது ஏறி உட்கார்ந்து கொண்டு, சிறிது தூரத்தில் நின்ற அவளது கையைப் பிடித்து அவளைத் தனக்கருகில் இழுக்க முயன்றான். அவள் சென்னைக்குப் போய் நிரம்பவும் துணிகரமான செய்கைகளை நிறைவேற்றி, வேலாயுதம் பிள்ளை வீட்டார் எல்லோரையும் அங்கஹீனப்படுத்த வேண்டியவள் ஆதலால், தான் அவளை சந்தோஷப்படுத்தி அனுப்ப வேண்டும் என்ற எண்ணத்தோடு அவன் வந்தான். ஆதலால், அவள் வாடிய வதனத்தோடு நின்றதைக் காணவே, அவனது மனம் மிகுந்த சஞ்சலம் அடைந்தது. தான் எப்படியாவது அவளிடம் நயந்து அவளது மனம் மகிழ்ச்சி அடையும்படி அவளிடம் நடந்து, தனது கருத்திற்கு அவள் இசையச் செய்ய வேண்டும் என்ற உறுதி கொண்டவனாய், அவளை ஆசையோடு பக்கத்தில் இழுக்கத் தொடங்கினான். அவன் தனது ரகசியத்தை அறிந்து கொள்ள வில்லை என்று உணர்ந்த ரமாமணியினது மனதில் உடனே பெருத்த தைரியமும் உற்சாகமும் பிறந்தன. அவளது விகாரத் தோற்றம் எல்லாம் உடனே மாறிப் போயிற்று. தான் தவில்காரப் பையனோடு சந்தோஷமாக இருந்ததற்கு இடையூறாக, தான் எதிர்பார்க்காத சந்தர்ப்பத்தில், அந்த நொண்டி வந்து சேர்ந்தானே என்ற விசனமும் ஆத்திரமும் அவளது மனதை விட்டு எளிதில் போகவில்லை. ஆதலால், அவள் எவ்வளவு முயன்றும், இயற்கையாக எழும் மகிழ்ச்சியும் குதூகலமும் உண்டாகவில்லை ஆதலால், அவன் மீது ஏதோ ஒரு காரணத்தைக் குறித்துத் தான் கோபம் கொண்டிருப்பது போல நடிக்க வேண்டும் என்று அவள் உடனே தனக்குள் தீர்மானித்துக் கொண்டவளாய், அவனைப் பார்த்துத் தனது முகத்தைச் சுளித்துக் கொண்டு ஒரு திருப்புத் திருப்பிக் கீழே குனிந்து கொண்டவளாய் முற்றிலும் பிணங்கி சிறிது தூரம் அப்பால் நகர்ந்து, "இருக்கட்டும், போங்கள்.

உங்களை எனக்குத் தெரியும். நீங்கள் நல்ல மனிதர்கள் தான். உங்களை யார் இங்கே கூப்பிட்டது" என்றாள்.

அதைக் கேட்ட மாசிலாமணி நிரம்பவும் கொஞ்சலாகவும் நயமாகவும் பேசத்தொடங்கி, "என்ன கண்ணே! இப்படிப் பேசுகிறாய்? இதற்குள் உனக்கு என்மேல் என்ன கோபம் வந்து விட்டது? நேற்று இரவில் நான் வந்துவிட்டுப் போனபோது, சாதாரணமாக இருந்த நீ, இதற்குள் இப்படி மாறிப் போகக் காரணம் என்ன? ஏன் தூரப்போகிறாய்? வா இப்படி; என் பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்டு, சங்கதியைச் சொல்; உன் மன வருத்தத்தை நான் உடனே தீர்த்து வைக்கிறேன்" என்று இளக்கமாகக் கூறிய வண்ணம் அவளது இடுப்புச் சேலையைப் பிடித்து பலமாக இழுக்கத் தொடங்கினான். ரமாமணி முன்னிலும் அதிக மூர்க்கமாகப் பிணங்கி அவனது இழுப்பிற்கு வராமல் பலமாகத் தனது உடம்பை அப்பால் இழுத்துக் கொண்டவளாய்த் தனது சேலையை எடுத்து முகத்தில் போட்டுக் கண்களைக் கசக்கிக் கொண்டு தேம்பித் தேம்பி அழத் தொடங்கினாள். மடை திறந்து விட்டது போல, அவளது கண்களில் இருந்து கண்ணீர் முத்து மாலைகள் போல சரம்சரமாகக் கீழே உதிரத் தொடங்கியது. "என் மனதைக் கவர்ந்த ஆசை வடிவமான தவில்கார வடிவழகனைத் துரத்தி விட்டு இந்த நொண்டிச் சண்டாளன் என்னைப் பிடித்து இழுக்கிறானே" என்று அவளது மனம் எண்ணித் துயரமுற்றது. ஆனாலும், அவள் வாயைத் திறந்து மாசிலாமணிக்குக் கேட்கும்படி, "சரிதான் போங்கள். எனக்கும் உங்களுக்கும் இனி என்ன இருக்கிறது? எல்லாம் தீர்ந்து போய்விட்டது. பட்டணத்தில் இருந்து புதிய சரக்கை வீட்டிலேயே கொண்டு வந்து வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் இங்கே வந்ததைப் பற்றி அவள் கோபித்துக் கொள்வாள். நீங்கள் போய் முதலில் அவளைச் சமாதானப் படுத்துங்கள். நான் தான் கழிபட்டவளாய் விட்டேன். இனி எனக்கென்ன பெருமை? எல்லா உபசாரமும் அவளுக்கே நடக்கட்டும். என்னை ஏன் இழுக்கிறீர்கள்? எழுந்து போங்கள். நீங்கள் வரவில்லை என்று அவள் வழிபார்த்து ஏங்கி இருக்கிறாளாம்?" என்று கோபமாகவும் மழலையாகவும் பேசிவிட்டுத் தனது முதுகுப் பக்கத்தை

அவனுக்கெதிரில் திருப்பியபடி அப்பால் திரும்பிக் கொண்டாள். உடனே மாசிலாமணி அவளது கோபத்தின் காரணத்தை ஒருவாறு உணர்ந்து கொண்டவனாய் முன்னிலும் அதிக உற்சாகமும் துணிவும் அடைந்து, "அடெ அசடே போ. உன்னைப் போன்ற பெருத்த பைத்தியக்காரியை நான் பார்த்ததே இல்லை. பட்டணத்தில் இருந்து மனோன்மணியைக் கொண்டு வந்து அவளைக் கலியாணம் செய்வது போல நடித்து அவளது கொட்டத்தை அடக்கி அனுப்ப வேண்டும் என்று நீயே சொன்னாய். உன்னுடைய சம்மதியின் மேல், எல்லாக் காரியமும் நடந்திருக்கிறது. அப்படி இருக்க, நீயே இப்போது கோபித்துக் கொள்ளுகிறாயே! அப்படித்தான், எங்களுக்குள் ஏதாவது பிரமாத மான சிநேகம் ஏற்பட்டுவிட்டதா. ஒன்றுமில்லையே! எவ்வித காரணமும் இல்லாமல், நீ உன் மனசைப் புண்படுத்திக் கொள்ளு கிறாயே" என்றான்.

உடனே ரமாமணி, "ஒகோ! எனக்கொன்றும் தெரியாதென்று என்னை ஏமாற்றப் பார்க்கிறீர்களோ! மனோன்மணியையா நீங்கள் கொண்டு வந்து வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? நான் இன்றைய தினம் வந்த பத்திரிகையைப் படிக்கவில்லை என்று நினைத்துக் கொண்டீர்களா? இந்தப் பெண் மனோன்மணியை விட அதிக அழகுடையவளாய் இருக்கிறாள் என்று கண்டே நம்முடைய இடும்பன் சேர்வைகாரன் இவளைத் தூக்கிக் கொண்டு வந்து உங்களிடம் கூட்டிக்கொடுத்து விட்டு, பெருத்த இனாம் வாங்கிக் கொண்டிருக்கிறான். உங்களுடைய சூதெல்லாம் எனக்குத் தெரியாதென்று நினைத்துப் பேசுகிறீர்களா! இவ்வளவு காலம் உங்களோடு கூட இருந்து நான் பழகவில்லையா? என்னை நீங்கள் "அசடே" என்று சொன்னதைப் பற்றி எனக்கு வருத்தமில்லை. மற்ற எல்லா விஷயங்களிலும் நான் அசடாக இருந்தாலும், இந்த விஷயத்தில் மாத்திரம் அசடல்ல என்று நினைத்துக் கொள்ளுங்கள்" என்றாள். மாசிலாமணி மகிழ்ச்சியோடு புன்னகை செய்து, "உன்னை அசடே என்று சொல்வது போதாது. பைத்தியமே என்று சொல்ல வேண்டும். பட்டணத்தில் இருந்து சமாசாரப் பத்திரிகை கொஞ்ச நேரத்திற்கு

முன்தானே எல்லோருக்கும் வந்தது. வந்திருப்பவள் மனோன்மணியல்ல என்பதை நீ எப்படி அரைநாழிகைக்கு முன் தெரிந்து கொண்டாயோ, அதுபோலவே, நாங்களும் இப்போது தான் தெரிந்து கொண்டோம். இடும்பன் சேர்வைகாரன் வேண்டும் என்றே மனோன்மணியை விட்டு, இவளைக் கொண்டு வந்தான் என்று நீ சொல்வது தவறான விஷயம். நம்முடைய ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்வதற்காக, நாம் மனோன்மணியைக் கொண்டுவரத் தீர்மானித்தோம் என்பது இடும்பன் சேர்வைகாரனுக்குத் தெரியாதா? அதுவுமன்றி, நான் உன்னைத் தவிர வேறே எப்படிப்பட்ட பெண்ணின் முகத்தையும் ஏறெடுத்துப் பார்க்கக் கூடியவனல்ல என்பதுதான் சேர்வைகாரனுக்குத் தெரியாதா? இது வரையில் அவன் எனக்காவது, வேறே யாருக்காவது இப்படிப்பட்ட தரகு வேலை செய்தவன் என்பதை நீ கண்டாயா? எவ்வித ஏதுவும் இல்லாமல், நீ பைத்தியம் கொண்டவள் போலத் தாறுமாறாக உளறுகிறாயே! வந்திருப்பவள் மனோன்மணியல்ல என்பதை நாங்களும் இப்போதுதான் தெரிந்து கொண்டோம். அது விஷயமாக நாம் மேலே என்ன செய்வதென்பதைப் பற்றி நானும் சேர்வைகாரரும் இப்போதுதான் கலந்து பேசி ஒரு முடிவிற்கு வந்தோம். அது விஷயமாக உன்னோடு பேசவே நான் இப்போது இங்கே வந்தேன். அப்படி இருக்க, நீ பெண் பிள்ளைகளின் பைத்தியக்கார நினைவையே காட்டுகிறாயே!" என்றான்.

அப்போது ரமாமணி தூரத்திலேயே நின்றபடி மறுபடியும் ஆத்திரமாகப் பேசத் தொடங்கி, "இதெல்லாம் யாரை ஏமாற்றுகிற வித்தை! இடும்பன் சேர்வைகாரன் உண்மையைத் தெரிந்து கொள்ளாமலே இவளைக் கொண்டு வந்தான் என்றே வைத்துக் கொள்வோம். அந்தப் பட்டாபிராம பிள்ளை மன்னார்குடியில் இருந்த காலத்தில், தம்முடைய பெண் மனோன்மணியை உங்களுக்குக் கட்டிக் கொடுக்க உத்தேசித்ததாக நீங்கள் என்னிடம் சொன்னதை நான் மறந்து விட்டேன் என்று நினைத்துக் கொண்டீர்களா? அவ்வளவு தூரம் உங்களுக்குள் கலியாணப் பேச்சு நடந்திருக்கிறது. நீங்கள் பெண்ணைப் பார்க்காதிருப்பீர்

களா? அவசியம் நீங்கள் இதற்கு முன் மனோன்மணியைப் பார்த்தே இருப்பீர்கள். அப்படி இருக்க, இப்போது வந்திருப்பவள் மனோன்மணியல்ல என்று நீங்கள் முதல் நாளிலேயே தெரிந்து கொண்டிருக்க மாட்டீர்களா? இந்த சமாசாரப் பத்திரிகையைப் பார்த்துத்தான் நீங்கள் இந்தத் தவறை அறிந்தீர்கள் என்பதை நான் ஒரு நாளும் நம்பமாட்டேன்" என்று கூறினாள்.

மாசிலாமணி, "அடே பைத்தியமே போ! நீ இன்னும் உன்னுடைய மூடத்தனத்தை விடாமலேயே பேசுகிறாயே! நான் அவளை இதற்கு முன் பார்த்ததே இல்லை என்று எத்தனையோ தடவை உன்னிடம் பிரஸ்தாபித்ததாக எனக்கு நன்றாய் ஞாபகம் இருக்கிறது. அதை மறந்து நீ பேசினால், நான் உன்னை எப்படித் திருப்தி செய்வேன்?" என்றான்.

அவ்வளவு தூரம் அவனோடு பேசிய பிறகு ரமாமணிக்கு பக்கிரியா பிள்ளையைப் பிரிந்த ஏக்கம் ஒருவாறு குறைந்தது. ஆகையால், தான் அதற்கு மேல் அதிகம் பிணங்கினால், மாசிலாமணிக்குக் கோபம் வந்துவிடும் என்று நினைத்தவளாய், அரை மனதோடு அவனண்டை நெருங்குகிறவள் போலத் தயங்கித் தயங்கி அவனுக்குப் பக்கத்தில் வந்து உராய்ந்து நின்றாள். ஆனாலும், தனது முகத்தை மாத்திரம் வேறு பக்கம் திருப்பியபடி, "ஆனால், இது தெரிந்தே செய்யப்பட்டதல்லவா? உண்மையி லேயே நீங்கள் இதற்கு முன் அவளைப் பார்த் ததில்லை என்று பிரமாணிக்கமாகச் சொல்லுவீர்களா?" என்று கொஞ்சலாகவும் சலுகையாகவும் கூறினாள்.

மாசிலாமணியும் நிரம்பவும் மனத்தாங்கல் அடைந்தவன் போலப் பேசத் தொடங்கி, "நான் சொன்னதை எல்லாம் நீ மறந்து கொண்டே போனால், அதற்காக எனக்குத் தண்டனையோ! நீ நினைத்துக் கொண்டால், முறுக்கிக் கொண்டு அப்பால் திரும்பிக் கொள்ளுகிறது. தொட்டதற்கெல்லாம் நான் பிரமாணிக்கம் செய்து, உன் குணக்கைத் தீர்க்க வேண்டும் போலிருக்கிறது. இருக்கட்டும். உன் இஷ்டப்படியே நான் பிரமாணிக்கமாகச் சொல்லுகிறேன். நான் மனோன்மணியையும் பார்த்ததில்லை; வேறே எந்த மணியையும் பார்த்ததில்லை" என்றான்.

உடனே அவள் அவனது பக்கத்தில் தனது முகத்தைத் திருப்பி சந்தோஷத்தோடு கொஞ்சலாகப் பேசத் தொடங்கி, "நீங்கள் பிரமாணம் செய்வதிலும் கொஞ்சம் பொய் கலந்துதானா பேச வேண்டும்? வேறே எந்த மணியையும் நீங்கள் பார்க்க வில்லையா? அப்படியானால் தங்களையே நிரந்தரமாக நம்பி இருக்கும் அடிமையான இந்த ரமாமணியைக் கூடத் தாங்கள் இது வரையில் சரியானபடி பார்க்கவில்லை என்றல்லவா அர்த்தமா கிறது. அப்படித் தாங்கள் என்மேல் பராமுகமாய் இருக்கலாமா?" என்று கூறிய வண்ணம், மூர்க்கமான உணர்ச்சியை வெளிப்படுத்தி அவனைப் பிடித்தணைத்துக் கொடி போலத் தழுவினாள்.

உடனே மாசிலாமணி பெருமகிழ்ச்சியும் பூரிப்பும் அடைந்து, "நான் ஒன்று சொன்னால், அதை நீ வேறொன்றாக மாற்றிப் பேசுவதில் நிரம்பவும் திறமைசாலி அல்லவா! அதை இப்போது காட்டுகிறாய் போலிருக்கிறது. உன்னை நான் இதுவரையில் சரியானபடி கவனித்தேனா இல்லையா என்பது உன் மனசுக்கே தெரியவில்லையா? அப்படி இருக்க, நீ அதைப்பற்றி ஏன் குத்திக் காட்ட வேண்டும்? உன்னை நான் என்னுடைய உயிராக மதித்திருக்கிறேன் என்பதை எத்தனையோ விஷயங்களில் இருந்து நிச்சயமாக நீ தெரிந்து கொண்டிருப்பாய். என்னுடைய குடும்ப ரகசியங்களை எல்லாம் நான் உன்னிடத்தில் வெளியிட்டிருப்பதில் இருந்தே, நான் உன்னை எப்படி மதித்திருக்கிறேன் என்பது சுலபத்தில் விளங்கிப் போவதோடு, இனி எப்போதும் உன்னை நான் புறக்கணிக்கக் கூடியவனல்ல என்பதும் நிச்சயமாகத் தெரிந்து போகும். நீயும் எனக்காக எவ்வளவோ பெரிய காரியங்களை எல்லாம் முடித்திருக்கிறாய். இனியும் நீ எனக்குப் பெரிய பெரிய காரியங்களைச் செய்யப் போகிறாய் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். இப்போது நான் இங்கே வந்ததுகூட, உன்னிடம் ஒரு ரகசிய விஷயத்தில் உன்னுடைய உதவியை நாடியே தான் வந்தது. அதை நீ துணிந்து செய்வாயோ, அல்லது பயந்து கொண்டு முதுகைக் காட்டுவாயோ என்னவோ; அதுதான் சந்தேகமாக இருக்கிறது" என்றான்.

ரமாமணி முன்னிலும் அதிகப் பரவசமும் மனவுருக்கமும் குழைவும் காண்பித்து, "ஓ! அப்படியா சங்கதி! ஆண் பிள்ளைகளின் தந்திரமோ இது! எங்களால் ஏதாவது காரியம் ஆக வேண்டுமானால், எங்களிடம் வந்து கண்ணே என்றும், தங்கமே என்றும் கொஞ்சுகிறது. அதைக் கேட்டவுடனே எங்களுக்கு உச்சி குளிர்ந்து போகிறது. நாங்கள் உடனே உங்கள் இஷ்டப்படி தலைவிரித்தாடுகிறது. உலக நியாயம் நன்றாக இருக்கிறது! நீங்கள் என்ன செய்வீர்கள். பெண் பிள்ளைகள் எல்லாம் ஆண் பிள்ளைகளின் இஷ்டம் போல ஆடும் பொம்மைகளாக இது வரையில் இருந்து தங்களுடைய கண்ணியத்தையே குறைத்துக் கொண்டு வந்து விட்டபடியால், நீங்களும் என்னிடம் அது போலவே பெரிய விஷயங்கள் எல்லாம் என் உதவியை எதிர்பார்க்கிறீர்கள் போலிருக்கிறது? இருக்கட்டும். பரவாயில்லை. தங்களுக்கு என்னால் எவ்வித உதவி தேவையானாலும், நான் பின் வாங்கக் கூடியவளல்ல; சொல்லலாம். எந்த நிமிஷத்தில் நான் உங்களை முதன் முதலில் கண்டு மயங்கினேனோ, அப்போதே நான் என்னுடைய உடல், பொருள், ஆவியாகிய மூன்றையும் உங்களுக்கே ஒப்புவித்து விட்டேன். அப்போது ஏற்பட்ட உங்கள் மயக்கம் இனி என் உயிர் போன பிறகு மறுஜென்மத்தில் கூட என்னை விடாது போலிருக்கிறது. அவ்வளவு தூரம் தாங்கள் சொக்குப் பொடி போட்டு என்னை மோகிக்கச் செய்து என் மனசையும் உடம்பையும் சீர்குலைத்து விட்டீர்கள். எவரும் துணிந்து செய்ய முடியாத காரியமாகிய பெருத்த கொலைக் குற்றத்தை நான் செய்யும்படி தூண்டியது உங்களுடைய மோகமே அன்றி வேறல்ல என்பதை நான் சொல்ல வேண்டியதில்லை. நீங்கள் இப்போது என்னிடம் கோரும் உதவி அந்தக் கொலையை விடக் குறைந்ததாக இருக்குமேயன்றி, அதிகக் கொடுமையானதாக இருக்காது என்பது நிச்சயம். அந்த உதவியைச் செய்ய நான் இணங்கிவிட்டதாகவே வைத்துக் கொண்டு நீங்கள் விஷயத்தைச் சொல்லலாம்" என்று கிள்ளை மொழிவது போலக் கொஞ்சலாக மொழிந்தாள்.

உடனே மாசிலாமணி அளவற்ற குதூகலமும் பூரிப்பும் அடைந்தவனாய், "உனக்கு ஏதாவது அபாயம் வரும்படியான

காரியத்தில் நான் உன்னை இறக்கி விடுவேன் என்று நீ நினைக்க வேண்டாம். நான் சொல்லும் காரியத்தை நீ வெகு சுலபத்தில் நிறைவேற்றி விட்டு பத்திரமாகத் திரும்பிவந்து சேர்ந்து விடுவாய். ஆகையால், விஷயம் பிரமாதமாக இருக்குமோ என்று நீ மலைக்க வேண்டாம். உனக்கு நான் கொடுக்கப் போகும் இந்த சிரமத்தில் இன்பமும் கொஞ்சம் கலந்திருக்கிறது" என்றான்.

ரமாமணி சந்தோஷமாகப் புன்னகை செய்து, "என்னுடைய இன்பத்தைத் தாங்கள் கோராத நிமிஷமும் உண்டா? நான் நாள் முழுதும் அனுபவிக்கும் இன்பம் எல்லாம், தாங்கள் கொடுத்த பிச்சைதானே. உங்களுடைய நினைவை நான் மனசில் எப்போதும் வைத்துக் கொண்டிருப்பது ஒன்றே எனக்கு என்றும் தெவிட்டாத பேரின்ப சுகமாக இருக்கிறது. அதைவிட நான் கண்டு அனுபவிக்கக்கூடிய சுகம் இந்த உலகத்தில் வேறே இருக்கிறதா?" என்று குழந்தை பேசுவது போல மழலையாக மொழிந்தாள். மாசிலாமணி அவளது முகஸ்துதியான சொற்களை உண்மை என்று நம்பி ஆனந்த பரவசம் அடைந்தவனாய் அவளை மறுபடி ஆசையோடு ஆலிங்கனம் செய்து இறுகப் பிடித்துக் கொண்டு, தானும் இடும்பன் சேர்வைகாரனும் சென்னையில் நடத்தத் தீர்மானித்த சதியாலோசனையைச் சுருக்கமாக அவளுக்குத் தெரிவித்து, மேலும் பேசத் தொடங்கி, "கண்ணே! பார்த்தாயா? பட்டணத்தில் உள்ள வேடிக்கைகளை எல்லாம் காட்ட வேண்டும் என்று என்னிடம் நீ இதற்கு முன் பல தடவை சொன்னதற்கும், நான் இப்போது பரிகாரம் தேடி இருக்கிறேன். உன் இச்சையையும் இந்தத் தடவை திருப்தியாக நீ பூர்த்தி செய்து கொள்ளலாம். ஒரு மாச காலம் உனக்குப் பட்டணத்தில் இருக்கப் பிரியம் இருந்தாலும், நீ அப்படியே செய்யலாம்" என்று நிரம்பவும் மன நெகிழ்வோடு கூறினான்.

அதைக் கேட்ட ரமாமணி, "ஆகா! எனக்கு இன்பம் உண்டாக்குவதாகச் சொல்லி, துன்பத்தை அல்லவா பெரிதாக உண்டாக்கி விட்டீர்கள்? நான் உங்களோடு கூடவே பட்டணம் போய் வேடிக்கைகளை எல்லாம் பார்க்க வேண்டும் என்று சொன்னேனே அன்றி, நான் மாத்திரம் போக வேண்டும் என்றா

சொன்னேன்? உங்களை விட்டுப் பிரிந்து நான் போவது எனக்குப் பெருத்த துன்பமாக இருந்து வதைக்குமே. அப்படி இருக்க, எனக்குப் பட்டணத்தில் இன்பம் எங்கிருந்து உண்டாகப் போகிறது? நீங்கள் இல்லாத காலத்தில், தேவேந்திர போகமும் எனக்குக் கசக்குமே அன்றி, என் மனசை எள்ளளவும் ரஞ்சிக்கா தென்பதைத் தாங்கள் நிச்சயமாக எண்ணிக் கொள்ளுங்கள்" என்றான்.

மாசிலாமணி முன்னிலும் பன்மடங்கு அதிகரித்த மன எழுச்சி அடைந்து மெய்ம்மறந்து போய், "சரி; எப்படியாவது இருக்கட்டும். நான் இந்தச் சமயத்தில் இந்த ஊரை விட்டு வர முடியவில்லை. நான் வரவில்லை என்பதைக் கருதி நீ போகாமல் இருக்க முடியாது. பட்டணத்தில் நீ இன்பம் அனுபவிப்ப தானாலும், துன்பம் அனுபவிப்பதானாலும், எப்படியும் நீ அவசியம் போய் இந்தக் காரியத்தை முடித்தே தீர வேண்டும்" என்றான்.

அதைக் கேட்ட ரமாமணி, "அந்தக் காரியம் வெள்ளிக்கிழமை இரவோடு முடிந்து போகக் கூடியதுதானே; ஒரு நாளைக்கு நீங்களும் என்னோடு வந்தால் என்ன? அதற்குள் இங்கே என்ன மோசம் முழுகிப் போய்விடப் போகிறது" என்று குழந்தை போலக் கொஞ்சிப் பேசினாள். மாசிலாமணி, "அந்தக் காரியம் ஒரே இரவில் ஐந்து நிமிஷத்தில் முடிந்து போகப் போகிறது. ஆனாலும், நான் வியாழக்கிழமையே இங்கே இருந்து புறப்பட வேண்டும். அவ்விடத்தில் சனிக்கிழமை தினம் வண்டி ஏறி ஞாயிற்றுக்கிழமை தான் இங்கே வரமுடியும். இதற்கென்று பட்டணம் போகும் நாம் அந்த ஊரில் உள்ள வேடிக்கைகளை எல்லாம் பார்க்காமல் வந்து விட்டால், மறுபடி நாம் எந்தக் காலத்தில் போகப் போகிறோம் என்பது நிச்சயமில்லை. அப்படியே நாம் அவசரப்பட்டு வந்தாலும் கூட, நான் மூன்று தினங்கள் ஊரைவிட்டுப் போவதென்றால், போலீசாரிடம் தெரிவித்துவிட்டுப் போக வேண்டும். இல்லாவிடில், அவர்கள் சந்தேகங் கொள்வார்கள். நான் பட்டணம் போகிறேன் என்று அவர்களிடம் வெளியிட்டே தீர வேண்டும். நான் அதை

மறைத்து வேறே ஊருக்குப் போவதாகச் சொன்னால், ஒருவேளை போலீசார் நாம் டிக்கெட்டு வாங்கும் போது அங்கே வந்திருந்து உண்மையைத் தெரிந்து கொள்வார்கள். அல்லது, நாம் வேறே யாரையாவது விட்டு, டிக்கெட்டு வாங்கிவரச் சொன்னாலும், நாம் உள்ளே நுழையும் போது, பரிசோதகரிடம் காட்டுவோம் ஆகையால், அதற்கு முன்னாலேயோ போலீசார் அவரிடம் சொல்லி வைத்து, நான் போகும் ஊரின் பெயரைக் கவனித்துச் சொல்லும்படி செய்வார்கள். நாம் பட்டணம் போனோம் என்பதை எப்படியும் போலீசார் தெரிந்து கொள்வார்கள். நாம் பட்டணத்தில் நம்முடைய எதிரிகளை அங்கஹீனப்படுத்திய மறுநாள் அந்த விஷயம் ஒருவேளை சமாசாரப் பத்திரிகைகளில் வெளியாகலாம். அவர்கள் நமக்கு விரோதிகள் என்பது போலீசாருக்குத் தெரியும். ஆதலால் நான் அந்த ஊருக்குப் போனதை அதோடு சம்பந்தப்படுத்தி, நானே அந்தக் காரியத்தைச் செய்தவன் என்று அனுமானித்துக் கொள்வார்கள். அதற்கு நாம் இடம் கொடுக்கக் கூடாது. அன்றைய தினம் நான் இங்கே இருந்து போலீசாருடைய புஸ்தகத்தில் கையெழுத்துச் செய்திருந்தால், அது ஒன்றே எனக்கு அனுகூலமான சாட்சியாய் உபயோகப்படும். ஆகையால், நீ எப்படியாவது உன் மனசை சமாதானப்படுத்திக் கொண்டு புறப்பட்டுப்போய், நாம் நிரம்பவும் முக்கியமாக எண்ணியுள்ள இந்தப் பழியைத் தீர்த்துக் கொண்டு வந்துவிடு; நீ செய்யப் போகும் இந்தப் பேருதவியை நான் என் ஆயிசுகால பரியந்தம் மறக்கவே மாட்டேன்" என்றான்.

அதைக் கேட்ட ரமாமணியினது கண்கள் கலங்கின. அவற்றில் இருந்து கண்ணீர்த் துளிகள் பொங்கி வழிந்தன. உடம்பு படபடத்து நடுங்கியது. "இங்கே நீங்கள் ஒவ்வொரு நாளும் இரவில் வருவதற்குள், உங்களைக் காணாமல், என் கண்கள் பூத்துப் போகின்றன. என் உடம்பு பறக்கிறது. உயிரோ தள்ளாடுகிறது. இந்தப் பாழும் பகற் பொழுது எப்போது போகும் போகும் என்று நான் கோவிலில் உள்ள தெய்வங்களை எல்லாம் வேண்டிக் கொண்டே இருக்கிறேன். இரவில் நீங்கள் வந்து

விட்டால், இராப்பொழுது விடியவே கூடாதென்று முன் காலத்தில் நளாயனி சாபம் கொடுத்தது போல நானும் கொடுக்கலாமா என்றுகூட நினைக்கிறேன். ஆனால், இந்தப் பாழும் உலகத்தில் உள்ள ஏற்பாட்டின்படி, நான் உண்மையான பதிவிரதையல்ல என்று நினைத்து சூரியன் என் வார்த்தையை இலட்சியம் செய்யாமல் உதித்து விடுவானோ என்ற எண்ணம் உண்டாகிறது. உண்மையில் பார்த்தால் என்னுடைய பதிவிரதைத் தனத்திற்கு நளாயனி முதலியோரின் பதிவிரதைத்தனம் ஈடாகும் என்று சொல்ல முடியாது" என்றாள்.

மாசிலாமணி, "ஏனென்றால், வக்கீல், மாசிலாமணி ஆகிய இரண்டு புருஷரை நீ அடைந்தாயே; அதனால், உன் பதிவிரதைத் தனம் மேலானதென்று நினைக்கிறாய் போலிருக்கிறது" என்று பரிகாசமாக நகைத்துக் கூறினான்.

ரமாமணி, "அப்படியல்ல. எப்போதும் ஒரே புருஷனை நாடி அவனிடம் உண்மையாகவே இருந்து பழகிப் போன பெண்கள் இயற்கையிலேயே அதே வழியில் போவார்கள். ஆகையால், அது ஒரு பெரிய காரியமல்ல. ஒரு புருஷனை விட்டு வேறு புருஷனைப் பிடித்து, அந்தச் சுகத்தைக் கண்டவர்களுக்கு மேன் மேலும் அதே வழியில் போக வேண்டும் என்ற எண்ணமே உண்டாகும். ஆகையால், அவர்கள் தங்களுடைய மனசை அடக்கி ஒரு நிலைப்படுத்தி அதன்பிறகு ஒரே புருஷனிடம் உறுதியாக இருப்பது சாத்தியமற்ற அபாரமான செய்கை. அதன் பிறகு அவர்கள் பதிவிரதைத் தனத்தைக் காப்பாற்றிக் கொள்வ தென்பதே முடியாத காரியம். மற்ற எவராலும் செய்ய முடியாத அந்த அரிய காரியத்தை நான் செய்து வருகிறேன். வக்கீலைத் தொலைத்ததுகூட நான் உங்கள் மேல் வைத்திருந்த அபாரமான பிரேமையினால் அல்லவா. அவன் தொலைந்த பிற்பாடு நாம் இருவரும் ஒருயிரும் ஈருடலுமாக இருக்கிறோம் என்பது உங்களுக்குத் தெரிந்த விஷயம். ஆகையால், என்னுடைய கற்பு உயர்வானதா நளாயனியின் கற்பு உயர்வானதா? நீங்களே சொல்லுங்கள்" என்றாள்.

மாசிலாமணி ஆனந்தமயமாக மாறிப் போய், "பேஷ்! நீ சொல்லுவது நன்றாக இருக்கிறது. சூரியன் நவவியாகரண பண்டிதன் என்று எல்லோரும் அவனைப் புகழுவது மூடத்தனம் என்றே சொல்ல வேண்டும். உண்மையான பதிவிரதை யார், அரைகுறையான பதிவிரதை யார் என்பதை அவன் தெரிந்து கொள்ளக் கூடவில்லை. அது போகட்டும். நீ நளாயனியைவிட அதிகமான கற்புடைய உத்தம பத்தினி. ஆகையால், உன் புருஷனாகிய நான் சொல்வதை மீறி நீ நடக்கக் கூடாதல்லவா; ஆகையால், நீ சொல்லும் நியாயப்படி பார்த்தாலும், நீ என் இச்சைப்படி பட்டணம் போக வேண்டியவளாகி விட்டாய்" என்று கூறிக் கண் சிமிட்டினான்.

அதைக் கேட்ட ரமாமணி ஆசையோடு அவன் மீது சாய்ந்து குலுங்கக் குலுங்க நகைத்து, "ஆகா! நீங்கள் பலே ஆசாமியல்லவா! பேச்சில் உங்களை ஏமாற்ற யாரால் முடியும்? நான் சொன்ன சொல்லைக் கொண்டே என் வாயை அடக்கி விட்டீர்களே! நான் எதற்காக அந்த உவமானம் சொன்னேன்! நீங்கள் அதை எப்படி மாற்றிவிட்டீர்கள்; இரவில் நீங்கள் இங்கே வந்தால், உங்களை விட்டுப் பிரியமுடியாமல் போகிறதென்றும், பொழுது ஏன் விடிகிறதென்றும் நான் சங்கடப்படுவதால், மூன்று தினம் வரையில் உங்களை விட்டு நான் எப்படிப் பிரிந்திருப்பேன் என்று சொன்னால், நீங்கள் என் கையைக் கொண்டே என் கண்ணைக் குத்துகிறீர்களே" என்று கட்டிலடங்காக் குதூகலத்தோடு கூறினாள்.

உடனே மாசிலாமணி, "கண்ணே! ஏன் என்னோடு இப்படி வாதாடுகிறாய். இந்த விஷயம் நமக்கு மகா முக்கியமான விஷயம் என்பதும், இங்கே, நான் வரக்கூடாத நிலைமையில் இருக்கிறேன் என்பதும் உனக்குத் தெரிந்திருந்தும், அறிவில்லாத மூடஸ்திரீ போல நீ பேசுகிறாயே. போதும், எனக்கு நேரமாகிறது. நான் வேறே சில அவசர காரியங்களைக் கவனிக்க வேண்டும். இன்றைய சாயுங்கால வண்டிக்குப் போகத் தயாராக இரு. வண்டியோடு இடும்பன் சேர்வைகாரன் வருவான். அவனோடு தனியாகப் போக, உனக்கு லஜ்ஜையாக இருந்தால், உன்னோடு கூட உன் தகப்பனார் முதலிய யாரையாவது துணைக்கு அழைத்துக் கொண்டு போ" என்றான்.

அதைக் கேட்ட ரமாமணி அவனை விட்டுப் பிரிந்து போவதைப் பற்றி பெரிதும் ஏக்கமும் விசனமும் கொண்டவள் போல உடனே குன்றிப்போனாள். அவளது குதூகலம் எல்லாம் பெட்டிப்பாம்பாக ஒடுங்கிப் போய்விட்டது. அவள் நிரம்பவும் ஹீனக்குரலாய்ப் பேசத் தொடங்கி, "சரி; உங்களிடம் நான் எதிர்த்து வார்த்தையாடினால், உங்களுக்கு இந்த ஏழையின் மேல் கோபம் வந்துவிடும். உங்களுடைய பிரியப்படியே நடந்து கொள்ளுகிறேன். ஆனால், நான் பட்டணத்தில் அதிக நாள் இருந்து, எந்த வேடிக்கையையும் பார்க்க மாட்டேன். காரியம் முடிந்த மறுதினமே நான் திரும்பி வந்து விடுவேன். நீங்கள் இன்னொரு தடவை என்னோடு பட்டணம் வந்து எனக்கு எல்லா வேடிக்கைகளையும் காட்ட வேண்டும்" என்றாள்.

மாசிலாமணி, "ஓ! தடையில்லை. அப்படியே செய்யலாம்" என்றான்.

ரமாமணி, "என் செலவுக்கு வேண்டிய பணம் இடும்பன் சேர்வைகாரனிடம் இருக்கிறதா, அல்லது, அதை என்னிடமே கொடுக்கப் போகிறீர்களா?" என்றாள்.

மாசிலாமணி, "அவனுக்கும், அவனுடைய ஆள்களுக்கும் தேவையான பணம் மாத்திரம் அவனிடம் இருக்கிறது. உனக்கு வேண்டியதை நீயே வாங்கி வைத்துக்கொள்" என்றான்.

ரமாமணி, "சரி; அப்படியானால், கொடுங்கள். குறைந்தது ஆயிரம் ரூபாயாவது என் கையில் இருக்க வேண்டும்" என்றாள்.

மாசிலாமணி, "இவ்வளவு தானா? நான் உனக்கு இரண்டாயிரம் ரூபாய் கொண்டு வந்திருக்கிறேன். நீ பட்டணத்தைச் சுற்றிப் பார்த்தால், அங்கே காணப்படும் அருமையான வஸ்துக்கள் எதையாவது நீ வாங்க ஆசைப்படுவாய் என்று நினைத்து அவ்வளவு அதிகமான தொகையை எடுத்துக் கொண்டு வந்தேன்" என்றான்.

ரமாமணி, "சரி, நீங்கள் கொண்டு வந்ததை எல்லாம் கொடுத்து வையுங்கள். அது கையோடு காவலாக இருக்கட்டும். எந்தச்

சமயம் எப்படி இருக்குமோ. மிச்சம் இருந்தால் கொண்டு வந்து கொடுத்து விடுகிறேன்" என்றாள்.

மாசிலாமணி, "மிச்சத்தை நீ திருப்பிக் கொடுக்க வேண்டுமா! அசடே போ. என்னுடைய சகலமான ஆஸ்தியையும் நீ கேட்ப தானாலும், நான் உனக்கே கொடுத்து விடுவேனே; அப்படி இருக்க, இந்த அற்பத் தொகையில் மிச்சப்படுவதை நீ எனக்குக் கொடுக்க வேண்டுமா?" என்றான்.

ரமாமணி, "அப்படியா! எனக்கு என்று நீங்கள் கொடுப்பதை மாத்திரம் நான் எடுத்துக் கொள்ள வேண்டும். இது எனக்குக் கொடுக்கப்படுவதல்ல. ஆகையால் அப்படிச் சொன்னேன்; கணக்கென்றால், கணக்காக இருக்க வேண்டாமா?" என்றாள்.

மாசிலாமணி, "சரி, போதும் உன் கணக்கு. இதோ இருக்கிறது, இரண்டாயிரம் ரூபாய் நோட்டுகள். எனக்கு நேரமாகிறது. நான் போகிறேன். நீ புறப்படுவதற்குள் நான் உன்னை மறுபடி பார்க்க சௌகரியப்பட்டால் வருகிறேன். இல்லாவிட்டால், நீ புறப்பட்டுப் போகலாம். நான் சொன்னபடி காரியங்களை ஜாக்கிரதையாக முடித்து விட்டு ஜெயத்தோடு நீ திரும்பிவர வேண்டும். இல்லா விட்டால் பார்த்துக்கொள்" என்று வேடிக்கையாகப் பயமுறுத்திக் கூறினான்.

ரமாமணி, "நான் போன காரியத்தில் இதுவரையில் அபஜெயம் ஏற்பட்டதுண்டா? ஒரு நாளுமில்லை. அப்படி இருக்க, நீங்கள் ஏன் என்னை இப்படி பயமுறுத்த வேண்டும்? காரியம் அபஜெயம் அடைந்தால், என்னை நீங்கள் எப்படிப்பட்ட கொடிய சிட்சைக்கும் ஆளாக்கலாம்" என்று கொஞ்சலாக மொழிந்தாள்.

மாசிலாமணி வேடிக்கையாகப் புன்னகை செய்து, "நீ அபஜெயத்தோடு வந்தால், அவர்களுக்குச் செய்ய வேண்டிய மரியாதையை உனக்கே செய்து விடுவேன்; ஜாக்கிரதை" என்று கூறிவிட்டு, அவ்விடத்தை விட்டு வெளியில் நடக்க யத்தனித்தான்.

ரமாமணி ஆசையோடு பாய்ந்து, அவனைப் பிடித்து இறுகத் தழுவிக் கண்ணீர் சொரிந்து, "இந்த ஆனந்தம் மறுபடி எப்போது

கிடைக்குமோ தெரியவில்லையே. நான் உங்களைவிட மாட்டேன்" என்று கூறி அழுது பாசாங்கு செய்தபடி, அவனை வெளியில் நடத்திக் கொண்டே வந்தாள். இருவரும் கூடத்தைக் கடந்து படிக்கட்டின் வழியாகக் கீழே இறங்கினார்கள். அவ்விடத்தில் ரமாமணியின் தந்தை நின்றதைக் கருதி இருவரும் வெவ்வேறாகப் பிரிந்தனர். அடுத்த நிமிஷம் மாசிலாமணி வெளியில் செல்ல, நடைக்கதவு மூடி உள்பக்கம் தாளிடப் பெற்றது. உடனே ரமாமணி தன் தகப்பனுக்கு ஏதோ சைகை காட்டிவிட்டு தடதடவென்று மெத்தைக்கு ஓடிப் பள்ளியறைக்குள் புகுந்தாள். உடனே நிலைக் கண்ணாடி ஒன்று சடக்கென்று திறந்து கொண்டது. அடுத்த நிமிஷம் தவில்காரப் பக்கிரியா பிள்ளை ஓடி வந்து ரமாமணியை அணைத்துக் கொண்டான். அவள் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்து, "ஆ! என்ன ஆச்சரியம்! நீ வீட்டிற்குப் போயிருப்பாய் என்றல்லவா நினைத்து துக்கப்பட்டுக் கொண்டிருந்தேன். நல்ல வேளை! போகாமல் இருந்தாயே! கண்ணூ! உனக்கு நான் ஒரு சந்தோஷ சங்கதி வைத்திருக்கிறேன்" என்று கூறிய வண்ணம் பக்கிரியா பிள்ளையைக் கட்டித் தூக்கி மெத்தையின் மேல் உட்கார வைத்து, அவனது மடியின் மீது தலையை வைத்து 'அப்பாடா' என்று சாய்ந்து கொண்டாள்.

உடனே பக்கிரியா பிள்ளை, "கண்ணூ! ஒரு நாளும் இல்லாமல் இந்த நொண்டிப்பயல் இன்றைய தினம் வந்து நம்முடைய சந்தோஷத்தைக் குலைப்பான் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. நான் இங்கே வந்து கால் நாழிகைகூட இருக்காது. திடீரென்று இவன் வந்து சேர்ந்தானே! இவனைக் கொன்று போட்டு விடலாமா என்ற ஆத்திரம் என் மனசில் பொங்கிப் போய் விட்டது. நீ பயப்பட்டதைக் கருதி நான் அப்பால் போய் மறைந்து கொண்டேன். இவ்வளவு சீக்கிரம் உன்னை விட்டுப் போக மனம் வரவே இல்லை. அதுவுமன்றி இந்த நொண்டி உன்னிடம் என்ன சொல்லுகிறான் என்பதைக் கேட்க வேண்டும் என்ற ஓர் ஆசையும் உண்டாயிற்று. அதனால் நின்று கொண்டிருந்தேன். நீங்கள் பேசினதை எல்லாம் நான் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன். நீ சொல்லப் போகும் சங்கதி எனக்கே தெரியும். நீ பட்டணத்திற்குப் போகிற சங்கதிதானே" என்றான்.

ரமாமணி தனது கையால் வாஞ்சையோடு அவனது உருண்டைக் கன்னத்தைத் தடவிக் கொடுத்த வண்ணம் குழந்தை போலக் கொஞ்சத் தொடங்கி, "நான் பட்டணம் போவதாய் இருந்தால், அதை நான் சந்தோஷ சங்கதி என்று சொல்லுவேனா? நீயும் என்னோடு கூட வரவேண்டும். நான் ஆயிரம் ரூபாய் கேட்டதற்கு, நொண்டி இரண்டாயிரமாகக் கொடுத்திருக்கிறான். நாம் இருவரும் பட்டணத்தில் பத்துப் பதினைந்து நாள் சந்தோஷமாக இருந்து வேடிக்கை பார்த்துவிட்டு வருவோம்" என்று கூறினாள்.

பக்கிரியா பிள்ளை, "மறுநாளே வந்து விடுவேன் என்று நீ நொண்டியிடம் சொன்னாயே!" என்றான்.

ரமாமணி, "நான் நொண்டியிடம் சொல்வதெல்லாம் வேத வாக்கியமா என்ன? அவன் கோரிய காரியத்தை முடித்த பிறகு, தூரப் பிரயாணத்தினால், எனக்கு அலுப்பாய் இருப்பதால், நான் இரண்டொரு நாள் இருந்து வருவதாகச் சொல்லி இடும்பன் சேர்வைகாரனை அனுப்பி விடுகிறேன். பிறகு நம்முடைய இஷ்டம் போல வருவோம். நொண்டி கேட்டால், எனக்கு ஜுரம் வந்து விட்டதென்றும், பிழைத்து வந்தது புனர் ஜென்மம் என்றும் சொல்லி விடுகிறேன். அதை அவன் உண்மை என்றே நம்பி விடுவான்" என்றாள்.

பக்கிரியா பிள்ளை, "அது சரிதான். இடும்பன் சேர்வைகாரன் உன்னோடு வரும்போது நானும் எப்படிக்கூட வருகிறது?" என்றான்.

ரமாமணி, "நீ இங்கே வரவேண்டாம். சாயுங்காலம் ரயிலடிக்கே நேராக வந்துவிடு. நான் என்னோடு அப்பாவை அழைத்துக் கொண்டு, இடும்பன் சேர்வைகாரன் மூன்றாவது வகுப்பு டிக்கெட்டு வாங்கிக் கொண்டு வேறே வண்டியில் ஏறும்படி செய்கிறேன். அப்பாவைவிட்டு நமக்கு முதல் வகுப்பு டிக்கெட்டுகள் வாங்கச் சொல்லி, ஒன்றை ரகசியமாக உன்னிடம் கொடுக்கச் சொல்லுகிறேன். நீ எங்களுக்குச் சம்பந்தமில்லாமல் வேறே எங்கேயோ போகிறவன் போல, நாங்கள் ஏறும் முதல்

வகுப்பு வண்டியில் வந்து ஏறிவிடு. பட்டணத்தில் நாம் இருக்கும் இடத்தைப்பற்றி பிற்பாடு யோசித்துக் கொள்வோம்" என்றாள்.

பக்கிரியா பிள்ளை, "சரி; அப்படியே செய்து விடுவோம். அப்பாவும் நம்மோடு பட்டணம் வரும் பக்ஷத்தில் இடும்பன் சேர்வைகாரனை நீ சுலபத்தில் ஏமாற்றிவிடலாம். ஏனென்றால், நானும் ஏதோ சொந்தக் காரியமாகப் பட்டணம் வருவதாயும், எனக்கும் அப்பாவுக்கும் இதற்கு முன் கொஞ்சம் பரிச்சயம் இருப்பதால், ரயிலில் கண்டு, ஒருவருக்கொருவர் பேச்சுத் துணையாய் இருக்கும் என்று ஒன்றாய்க் கூடி வந்ததாகவும் அவனிடம் சொல்லிவிட்டால், அவன் நம்பிவிடுவான்" என்றான்.

அதைக் கேட்ட ரமாமணி, "கண்ணூ! அந்தக் கவலை எல்லாம் உனக்கு எதற்காக? இவர்களை எல்லாம் ஏமாற்றுகிறதற்கு நான் இருக்கிறேன். நீ கொஞ்சமும் கவலைப்பட வேண்டாம். நான் நொண்டியோடு பேசியதை எல்லாம் நீ கேட்டுக் கொண்டிருந்தாய் அல்லவா. அவன் நம்பும்படி நான் நளாயனி முதலியவர்களை எல்லாம் இழுத்துப் போட்டு நாடகம் ஆடியது எப்படி இருந்தது நீ பார்க்கவில்லையா?" என்றாள்.

பக்கிரியா பிள்ளை ஆனந்தமாக நகைத்து, "ஆம் ஆம். எல்லா வற்றையும் நான் நன்றாகக் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன். ஆனால், நாம் இன்னம் எவ்வளவு காலத்திற்கு இப்படி ஒளிந்து பிழைக்கிறதென்ற விசனந்தான் என் மனசைப் புண்படுத்திக் கொண்டே இருக்கிறது. இந்த நொண்டி உன்னை அணைத்துக் கொண்டதை உணர்ந்தபோது என் மனம் எவ்வளவு தூரம் கொதித்தது தெரியுமா?" என்றான்.

ரமாமணி, "கண்ணூ! இன்னம் கொஞ்சம் பொறுத்துக் கொள், அந்த எண்ணம் என் மனசில் இல்லை என்றா நினைக்கிறாய். நானும் ஓயாமல் அதே கவலையாகத்தான் இருக்கிறேன். இந்த நொண்டியின் சொல்படி நடந்து இவனுடைய சொத்தில் ஒரு லட்சம் ரூபாயாவது ரொக்கமாகக் கறந்து கொண்டு, வக்கீலை ஒழித்த மாதிரி, இவனுக்கும் ஒரு நாள் விஷம் போட்டு ஒழித்துவிட வேண்டும். அதன் பிறகு நாமே ராஜா. நாம்

இருவரும் எவருடைய இடைஞ்சலும் இல்லாமல் ஏகபோகமாய் இருக்கலாம். கொஞ்சகாலம் பொறுத்துக்கொண்டு அநேகமாய் அந்தக் காலம் நெருக்கத்தில் வந்துவிட்டதென்றே நினைக்கிறேன்" என்று கூறி முடித்தாள்.

அதன்பிறகு அவர்கள் இருவரும் வெகு நேரம் வரையில் உல்லாசமாக இருந்த பின் ரயிலடியில் சந்திப்பதென்ற முடிவோடு பிரிந்து போயினர்.

★ ★ ★

அன்றைய பகற்பொழுது கழிந்தது. இரவில் சென்னைக்குப் போகும் ரயில் வண்டி வருவதற்கு ஒரு நாழிகை காலத்திற்கு முன்பு, இடும்பன் சேர்வைகாரன் குதிரை வண்டியோடு ரமாமணியினது வீட்டிற்கு வந்து சேர்ந்தான். அவ்விடத்தில், புறப்பட ஆயத்தமாக இருந்த ரமாமணியும், அவளது பெற்றோரும் உடனே வந்து வண்டியில் ஏறிக்கொண்டனர். மூட்டைகளை எடுத்து வைப்பதற்காகப் போயியையும் அவர்கள் வண்டியில் ஏற்றிக்கொள்ள, வண்டி உடனே புறப்பட்டு ரயில் ஸ்டேஷனை நோக்கிச் சென்றது.

9-வது அதிகாரம்

## புகைப்படமும், அமர்க்கலமும்

இவ்வாறு மாசிலாமணி மகா பயங்கரமான பெருத்த சதி ஆலோசனை செய்து, ரமாமணி இடும்பன் சேர்வைகாரன் முதலியோரை சென்னைக்கு அனுப்பிவிட்டு, தனது வீட்டில் சிறை வைக்கப்பட்டிருந்த போலி மனோன்மணியம்மாளிடம் போய், சாந்தி கலியாணம் நிறைவேற்றத் தீர்மானித்தவனாய், இரவின் வருகையை எதிர்பார்த்துப் பார்த்து ஆவலே வடிவாக இருந்து, வாடி வதங்கித் துவண்டு கிடந்தான். அன்றைய தினம் இரவில், அவன், பெண் வேஷந்தரித்து வந்திருந்த கந்தசாமி இருந்த சயன அறைக்குச் சென்ற காலத்தில், அவ்விடத்தில் நடந்த விநோத சம்பவங்களை நாம் விவரிப்பதற்கு முன், அன்றைய தினம் காலையில் மன்னார்குடி வேலாயுதம் பிள்ளையின் வீட்டில்

நடந்த சம்பவங்களைக் கூறுவது அவசியம் ஆதலால், சோபன முகூர்த்த வரலாற்றைப் பின்னோர் அதிகாரத்தில் விஸ்தரிப்போம்.

அன்றைய தினம் செவ்வாய்க்கிழமை என்பதை நாம் மறுபடி நினைவூட்டுவது அநாவசியம். மறுநாளாகிய புதன்கிழமை பிற்பகலில் எல்லோரும் புறப்பட்டு சென்னைக்குப் போக ரயிலேறுவது என்பது அவர்களது ஏற்பாடென முன்னரே கூறப் பட்டிருக்கிறது. வேலாயுதம் பிள்ளை சென்னையில் நடக்கப் போகும் நிச்சயதார்த்தத்தை நிரம்பவும் சிறப்பாகவும் டாம்பீகமாக வும் நடத்த வேண்டும் என்று, அதற்காக ஒரு லட்சம் ரூபாய் திட்டம் போட்டிருந்தார் அல்லவா. அதன்படி அவர்கள் மன்னார் குடியில் இருந்து சேகரம் செய்து எடுத்துக் கொண்டு போக வேண்டிய சகலமான வஸ்துக்களையும் திங்கட்கிழமையே கொணர்ந்து தமது மாளிகையில் நிரப்பிவிட்டார். கலியாணப் பெண்ணிற்கு, முழுதும் தங்க ஜரிகைகளும் நவரத்னங்களும் வைத்து நெய்யப்பட்டவையும், ஐயாயிரம் ரூபாய் பெறத்தக்கவையுமான புடவையும், ரவிக்கையும், சாம்பிராணி, அகில், கஸ்தூரி மஞ்சள் முதலியவற்றின் புகை போடப்பெற்று, அவைகளை வைப்பதற்கென்றே தயாரிக்கப் பெற்றிருந்த அழகான ஒரு கண்ணாடிப் பெட்டியில் வைக்கப்பட்டிருந்தன. ஆறாயிரம் ரூபாய் பெறுமானம் உள்ள முதல்தரமான ஒரு ஜதை வைரக் கம்மல், வைரங்களும், கெம்புகளும், பச்சைகளும் முற்றிலும் பதிப்பிக்கப்பெற்ற அற்புதமான ஒட்டியாணம், வரிசைக்கிரமமான பருமனுடைய ஐந்து பதக்கங்கள் ஒன்றன் கீழ் ஒன்றாகத் தொங்கப்பெற்ற சீமைக்கல் அட்டிகை, நவரத்னம் இழைத்த புதுமை புதுமையான வளையல்களில் எட்டு, பெரும் பெரும் வைரங்கள் நடுநாயகமாய் அமைந்த முகப்புகள் வைத்த தங்கக்காப்பு, கொலுசு, வங்கி, நாகபடம், கொண்டைப்பூ, திருகுபூ, உச்சிப்பூ, இராக்கடி, தாழம்பு, சந்திரப்பிரபை, சூரியப்பிரபை, நெற்றிஸரம், கண்டஸரம், பேசரி, மூக்குப்பொட்டு, பாதஸரம், சிலம்பு, மிஞ்சி, பீலி முதலிய பாதாதிகேசம் வரையில் அணிவதற்குத் தேவையான சகலமான ஆபரணங்களும், அவைகளை எப்போதும் வைப்பதற்கென்றே

பிரத்தியேகமாய்த் தயாரிக்கப்பெற்ற ஒரு வெள்ளிப் பெட்டியில் வைக்கப்பட்டிருந்தன. ஸ்ரீமான் வேலாயுதம் பிள்ளை அவர்கள் உத்தேசித்தபடி அந்த வருஷத்திலேயே தங்க சாலையில் இருந்து அச்சடிக்கப்பட்ட இரண்டாயிரம் புதிய பவுன்களும் வெகு பிரயாசையின் மேல் சேகரிக்கப்பட்டு ஒரு தங்கத் தாம்பாளத்தில் வரிசை வரிசையாக அடுக்கி கெட்டியான ஓர் இரும்புப் பெட்டியில் ஜாக்கிரதையாக வைக்கப்பட்டிருந்தன. அவை நிற்க, பட்டாபிராம பிள்ளை, வடிவாம்பாள், திரிபுரசுந்தரியம்மாள், கண்ணப்பா, கந்தசாமி முதலியோருக்காக வாங்கப்பட்ட முதல் தரமான புதிய புடவை வேஷ்டி மூட்டைகளும், பாக்கு, சர்க்கரை, கற்கண்டு, குங்குமம், மஞ்சள் முதலியவற்றின் மூட்டைகளும், கரும்புக் கட்டுகள், வாழைத்தாறுகள் முதலிய சமையல் சாமான்கள், சமையலுக்குத் தேவையான பெரும் பெரும் பாத்திரங்கள் முதலிய சகலமான பொருட்களும் ரயிலில் ஏற்றப்படுவதற்குத் தகுதியான நிலைமையில் பத்திரப்படுத்தப் பட்டு, அவரது மூன்றுகட்டு மாளிகையின் அடிப்பாகம், மேன்மாடம் முதலிய முழு இடத்திலும் நிரம்பி மனிதர் நடக்க இடமற்று அடர்ந்து கிடந்தன. வேலாயுதம் பிள்ளை போட்ட திட்டத்திற்கு மேல் செலவுகள் அதிகரித்துப் போனமையால், அவர் அதை இரண்டு லட்சம் ஆக்கிக் கொண்டார். வடிவாம்பாள், திரிபுரசுந்தரியம்மாள், கண்ணப்பா, நடராஜ பிள்ளை ஆகிய எல்லோரும் நிச்சயதார்த்தத்தை நிரம்பவும் ஆவலோடும் ஆசையோடும் எதிர்பார்த்துப் பார்த்து மனவெழுச்சி அடைந்து பூரித்துக் களிகொண்டு இரவு பகல் அதே பேச்சாக பேசியே தமது பொழுதைப் போக்கிக் கொண்டிருந்தனர். முதல் நாளாகிய திங்கட்கிழமை அன்று திரிபுரசுந்தரியம்மாள் வடிவாம்பாள் இருவரும் தமது மாளிகையில் இடம் இல்லாமல் போனது பற்றி, சுந்தரம் பிள்ளையின் பங்களாவிற்குப் போய், கந்தசாமியின் கலியாணச் சடங்கிற்குப் பூர்வாங்கமாக சுமங்கலிப் பிரார்த்தனை நடத்தி, ஐந்தாறு ஸ்திரீகளுக்கு மங்கள ஸ்நானம் செய்து வைத்து, வளையல்கள் அணிவித்து, புதிய புடவை ரவிக்கைகள் உடுத்திவிட்டு, சிறப்பான விருந்தளித்து அனுப்பிவிட்டு, மாது சிரோன்மணியான **சிவக்கொழுந்தம்மாளையும் சுந்தரம்**

பிள்ளையையும் பிரார்த்தித்து அழைத்துக் கொண்டு தமது இல்லம் வந்து சேர்ந்தனர். வேலாயுதம் பிள்ளை நிரம்பவும் பக்திமான் ஆதலால், அவர் எப்போதும் அதிகாலையில் நீராடி மடி வேஷ்டி அணிந்து சுவாமி பூஜை, சுவாமி ஸ்தோத்திரம் முதலிய வற்றையே செய்து கொண்டு விசிப்பலகை மீதிருந்தபடி எல்லா நிர்வாகங்களையும் மேற்பார்வை பார்த்து வந்தார். சகலமான பணச் செலவுகளையும் நடராஜ பிள்ளையே கவனிப்பதென்று அவர்களுக்குள் தீர்மானம் ஆகியிருந்தது. ஆதலால், அவர் ஏராளமான பணத்தை நோட்டுகளாகவும், வேண்டிய அளவிற்கு மேல் எட்டணா, நான்கணா, இரண்டனா, ஓரணா முதலிய சில்லரைகளாகவும் மாற்றி ஒரு கைப்பெட்டியில் வைத்துக் கொண்டு, அப்போதிருந்தே பணமாரி பெய்து வருணபகவானாய் விளங்கிக் கொண்டிருந்தார். எல்லா சாமான்களையும் சேகரித்துக் கொணர்ந்து பெட்டிகளில் வைத்து பத்திரப்படுத்தி ரயிலில் ஏற்றும் நிலைமையில் வைப்பதான சகலமான பொறுப்பையும் கண்ணப்பாவே நிர்வகித்து, ஏராளமான வேலையாட்களை ஏவி ஏவி இரவு பகல் ஓய்வின்றி அரும்பாடுபட்டுக் கொண்டிருந்தான். திகம்பரசாமியார் இறந்து போனதாக அவர்கள் நடித்த தினத்திற்கு பிறகு, அவர்கள் நிச்சயதார்த்தத்திற்குத் தேவையான சாமக்கிரியை களை எல்லாம் சேகரிப்பதைப் பற்றிக் கவலையுற்றதைவிட, அந்தச் சமயத்தில் திகம்பரசாமியார் மறைந்திருக்க நேர்ந்ததைப் பற்றி அளவற்ற ஏக்கங் கொண்டவர்களாய் இருந்தனர். கடைசியாக திகம்பரசாமியார் தங்களை எச்சரித்துவிட்டுப் போனதற்கு இணங்க, கண்ணப்பா முதலியோர் எதிரிகள் தங்களுக்கு எந்தச் சமயத்தில் எவ்விதமான தீங்கிழைப்பரோ என்று முற்றிலும் விழிப்பாக இருந்ததன்றி, கையும் தடியுமாய் இருபது பண்ணையாட்களை வீட்டின் பின்பக்கத்தில் காவலாக வைத்திருந்தனர். தபாலிலிருந்தும் வேறு எங்கிருந்தும் அவர்களுக்கு வரும் ஒவ்வொரு வஸ்துவையும் நன்றாக ஆராய்ந்து பார்த்தே அவர்கள் ஏற்றுக் கொண்டனர். கண்ணப்பா, நடராஜ பிள்ளை முதலியோர் வீட்டை விட்டு எங்கேயாகிலும் வெளியில் போக நேர்ந்தால், இரண்டு மூன்று ஆட்களையும்

கூடவே அழைத்துக் கொண்டு சென்றனர். இவ்வாறு அவர்கள் இரவு பகல் எதிரிகளை மறவாமல் எச்சரிப்பாக இருந்தபடியே, நிச்சயதார்த்த முஸ்தீப்புகளை எல்லாம் செய்து முடித்தனர்.

செவ்வாய்க்கிழமை தினம் காலையில் வேலாயுதம் பிள்ளை தமது வழக்கப்படி அனுஷ்டானம், பூஜை முதலியவற்றை முடித்த பின்னர் தமது மாளிகை முழுதும் நிறைந்திருந்த சாமான் பெட்டிகளை எல்லாம் சுற்றிப் பார்த்து, எல்லா ஏற்பாடுகளும் நிரம்பவும் திருப்திகரமாகச் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை உணர்ந்து மிகுந்த மனமகிழ்ச்சியோடு விசிப்பலகையின் மீது உட்கார்ந்து கொண்டு "தம்பீ! தம்பீ!" என்று உரக்க இரண்டு குரல் கூப்பிட்டார். மேன்மாடத்தில் வடிவாம்பாளோடு சம்பாஷித்துக் கொண்டிருந்த கண்ணப்பா "ஏன் அப்பா! இதோ வந்தேன்" என்று நிரம்பவும் பயபக்தி விநயத்தோடு மறுமொழி கூறிவிட்டு தடதட வென்று கீழே இறங்கி ஓடிவந்து தனது தந்தைக்கு எதிரில் இருந்த ஒரு கம்பத்தின் மறைவில் வணக்கமாக நின்று "ஏன்" என்றான்.

உடனே வேலாயுதம் பிள்ளை, "தம்பீ! வரவேண்டிய சாமான்கள் எல்லாம் வந்துவிட்டனவா? இன்னமும் ஏதாவது பாக்கி இருக்கிறதா?" என்றார்.

கண்ணப்பா கீழே குனிந்தபடி மிருதுவான குரலில் பேசத் தொடங்கி, "ஒன்றும் பாக்கி இல்லை. இன்னம் வெற்றிலை, காய்கறிகள் இரண்டையும் விட்டிருக்கிறேன். அவைகளை நாம் இப்போதே சேகரம் செய்து வைத்திருந்து இங்கே இருந்தே கொண்டு போனால் எல்லாம் அழுகிப்போகும். அவைகளை அந்த ஊரிலேயே வாங்கிக் கொள்ளலாம். கொஞ்சம் விலை ஏற்றமாக இருந்தாலும், இருந்துவிட்டுப் போகட்டும்" என்றான்.

வேலாயுதம் பிள்ளை, "சரியான யோசனை. அவைகளைப் பட்டணம் கொத்தவால்சாவடியில் வாங்கிக் கொள்வோம். விலை அதிகமாக இருந்தாலும் பரவாயில்லை. காய்கறிகளும் வெற்றிலை யும் புதிதாக இருப்பதே முக்கியம். அதிருக்கட்டும். நாளைய

தினம் காலந்தவறாமல் ரயில் வண்டிகள் வந்திருக்குமா? மறுபடி ஸ்டேஷன் மாஸ்டரை நீ பார்த்தாயா?" என்றார்.

கண்ணப்பா, "இன்று காலையில் அங்கே தான் போய் அவரோடு பேசிவிட்டு வந்தேன். நாம் கேட்டிருக்கும் ஆறு முதல் வகுப்பு வண்டிகளும் நாளைய தினம் காலையிலேயே இந்த ஊருக்கு வந்துவிடும் என்று அவருக்குத் தந்தி வந்திருக்கிறது என்றும், நாம் நாளைய தினம் காலையிலேயே இந்தச் சாமான்களை எல்லாம் கொணர்ந்து சேர்த்துவிடலாம் என்றும், நாம் மாலை நான்கு மணிக்கு வரலாம் என்றும் அவர் சொன்னார்" என்றான்.

வேலாயுதம் பிள்ளை, "சரி, இங்கே இருந்து இவைகளை எடுத்துப் போகவும், நாம் ஏறிப்போகவும் வண்டிகளுக்கு ஏற்பாடு ஆயிருக்கிறதல்லவா?" என்றார்.

கண்ணப்பா, "ஆயிருக்கிறது. சாமான் வண்டிகள் காலையி லேயே வந்துவிடும்" என்றான்.

வேலாயுதம் பிள்ளை, "எல்லாம் சரிதான். நாம் இத்தனை ஏற்பாடு களையும் செய்து நிச்சயதார்த்தத்தை இவ்வளவு சிறப்பாக நடத்தப் போகிறோம். இந்தக் கலியாணத்தை நிச்சயப்படுத்திக் கொடுத்த நம்முடைய சுவாமியார் ஐயா இல்லாத குறைதான் என் மனசில் பெருத்த குறையாக இருந்து தொந்தரவு கொடுத்துக் கொண்டு வருகிறது. அந்த விஷயத்தில் தான் என்ன செய்கிறதென்பது தெரியவில்லை" என்றார்.

கண்ணப்பா, "ஆம், எல்லோருக்கும் அதே சங்கடந்தான் இருந்து வதைக்கிறது. இப்போது அதே சங்கதியைப்பற்றித் தான் நம்முடைய வடிவு என்னிடம் பிரஸ்தாபித்துக் கொண்டிருந்தாள். சுவாமியார் ஐயா இல்லாத கலியாணம் ஒரு கலியாணமா என்று அவள் குறைப்பட்டுக் கொள்வது இவ்வளவு அவ்வளவு அல்ல. இன்னொரு தடவை நான் கும்பகோணம் போய், அவர் குறித்த ஆற்றுப் பாலத்தின் கண்வாயில் எழுதி வைத்துவிட்டு வர வேண்டும் என்று என்னிடம் அவள் இப்போதுதான் கேட்டுக்

கொண்டாள். அவர் பலவிதமாக உருமாறுவதில் கெட்டிக்காரர் ஆதலால், எவரும் அறியாதபடி ஏதேனும் வேஷம் போட்டுக் கொண்டு அவர் பட்டணம் வந்து நாம் இறங்கப் கோகும் ஜாகைக்குள் வந்து விட்டால், அவ்விடத்தில் மறைவாக இரண்டொரு நாள் இருந்துவிட்டுப் போகலாம் என்று நாம் எல்லோரும் நிரம்பவும் வருந்தி அழைப்பதாக எழுதும்படி சொல்லுகிறாள். உங்களிடம் கேட்டுக் கொண்டு கும்பகோணம் போய்விட்டு வர நினைத்தேன்" என்றான்.

வேலாயுதம் பிள்ளை, "ஆம், வாஸ்தவம் தான். குழந்தை வடிவு சொல்வது நல்ல யோசனை தான். அதுவுமன்றி சென்னப் பட்டணம், இவ்விடத்திற்குத் தூரதேசம் ஆகையால், அவர்களுடைய அடையாளம் எவருக்கும் தெரியப் போகிற தில்லை. ஆகையால், அவர்கள் சுலபமாக வந்துவிட்டுப் போகலாம். நீ இப்போதே வண்டியில் கும்பகோணம் போய், இந்தச் சங்கதிகளை எல்லாம் பாலத்தடியில் எழுதி வைத்துவிட்டு வா. மறுபடி நாளைய தினம் காலையில், நீ ஒருநடை அங்கே போய், அவர் எழுதி இருக்கும் மறுமொழியைத் தெரிந்து கொண்டு வரலாம்" என்றார்.

அந்தச் சமயத்தில் வேலைக்காரன் ஒருவன் நடையில் இருந்தபடி, "எஜமானே! தபாற்காரன் தபால்கள் கொடுத்து விட்டுப் போயிருக்கிறான்" என்று பணிவாகக் கூறினான்.

அதைக் கேட்ட கண்ணப்பா, "இங்கே கொண்டுவா" என்று அவனுக்கு மறுமொழி கூற, உடனே வேலைக்காரன் உள்ளே வந்து சென்னையில் இருந்து அவர்களுக்கு வழக்கமாக வரும் இங்கிலீஷ் தமிழ் முதலிய சமாசாரப் பத்திரிகைகளையும், நாலைந்து கடிதங்களையும் கண்ணப்பாவிடம் கொடுத்து விட்டு வெளியிற் போய்விட்டான். உடனே கண்ணப்பா கடிதங்களில் இருந்த மேல் விலாசங்களைப் பார்த்து, எல்லாம் வேலாயுதம் பிள்ளையின் பேருக்கே வந்திருந்ததை அறிந்து, எல்லாவற்றையும் தனது தந்தையாருக்குப் பக்கத்தில் விசிப்பலகையின் மீது வைத்தான். வேலாயுதம் பிள்ளை எல்லாவற்றிலும் மேலே

இருந்த கடிதத்தை நிதானமாக எடுத்துத் தமது மனத்திற்குள்ளாகவே படிக்கத் தொடங்கினார்.

கண்ணப்பா உடனே தரையில் உட்கார்ந்து கொண்டு, தனது கையிலிருந்த சமாசாரப் பத்திரிகைகளை எடுத்துப் பிரித்துப் பக்கங்களை மேன்போக்காகத் தள்ளி ஒவ்வொரு பத்தியிலும் இருந்த தலையங்கங்களை மாத்திரம் படித்துக் கொண்டு, ஏதேனும் விசேஷச் செய்தி இருக்கிறதோ என்று பார்த்துக் கொண்டே போனவன் திடுக்கிட்டு, "அப்பா! பயங்கரமான ஒரு சங்கதி வந்திருக்கிறது. பட்டணத்தில் நம்முடைய சம்பந்திப்பிள்ளை வீட்டில் கொள்ளைக்காரர்கள் நுழைந்து விட்டார்களாமே!" என்று வியப்போடு கூறினான்.

அதைக் கேட்ட வேலாயுதம் பிள்ளையும் திடுக்கிட்டு, "ஆ! என்ன! என்ன! நம்முடைய பட்டாபிராம பிள்ளையின் பங்களாவிலா திருடர்கள் புகுந்தார்களாம். அவர்களுக்கு ஏதாவது உபத்திரவம் ஏற்பட்டதா? பொருள் ஏதாவது களவு போய் விட்டதா? சங்கதியைப் படி கேட்கலாம்" என்று வியப்போடு அவசரப்பட்டுக் கூறினார். கண்ணப்பா பயங்கரமான சங்கதி வந்திருக்கிறதென்று சற்றுமுன் கூறிய குரலோசை சமயலறைக்குள் இருந்த திரிபுரசுந்தரியம்மாளுக்கும், வடிவாம்பாளுக்கும் நன்றாகக் கேட்டது. அவர்கள் இருவரும் உடனே பதறி வெலவெலத்துப் போய், அவ்விடத்தை விட்டு விரைவாக வெளியில் வந்தனர். திரிபுரசுந்தரி அம்மாள் கண்ணப்பாவிற்கருகில் வந்து ஆவலே வடிவாக நின்றாள். வடிவாம்பாள் கம்பத்தின் மறைவில் மாமனாருக்குத் தெரியாதபடி நின்று கவனித்துச் செவி கொடுத்துப் பதைபதைத்து நின்றாள்.

உடனே கண்ணப்பா அடியில் கண்ட செய்தியைப் படிக்கத் தொடங்கினான்:--

### ஓர் அதிசய சம்பவம்

சென்னையில் பெரிய கலெக்டர் உத்தியோகம் பார்த்துவரும் பட்டாபிராம பிள்ளை என்ற கனவானும் அவரது ஒரே புத்திரியும்

புரசைப்பாக்கத்தில் ஒரு பெரிய பங்களாவில் இருந்து வருகிறார்கள். அந்தப் பெண்ணை மன்னார்குடியில் உள்ள பிரபல மிராசுதாரான வேலாயுதம் பிள்ளையின் இளைய குமாரர் கந்தசாமி பிள்ளைக்குக் கலியாணம் செய்வதாக அவர்கள் நிச்சயித்து, அடுத்த வெள்ளிக்கிழமை அன்று நிச்சயதார்த்தத்தைப் புரசைப்பாக்கம் பங்களாவில் நடத்த உத்தேசித்தார்களாம். சென்ற சனிக்கிழமை அன்று பகலில் பட்டாபிராம பிள்ளை அவரது கச்சேரிக்குப் போயிருந்தாராம். அவருடைய குமாரத்தி பங்களாவின் மேன்மாடத்தில் படித்துக் கொண்டிருந்தாளாம். வேலைக்காரரும் வேலைக்காரிகளும் கீழே இருந்தார்களாம். அப்போது, ஒரு யௌவனப் புருஷரும், யௌவன ஸ்திரீயும் தமது வேலைக்காரியோடு வந்து தாங்கள் கோமளேசுவரன் பேட்டையில் உள்ளவர்கள் என்றும், வேலாயுதம் பிள்ளையின் மைத்துனியும், மைத்துனி புருஷர் என்றும், பெண்ணைப் பார்த்துவிட்டுப் போக வந்திருப்பதாகவும் சொன்னார்களாம். அவர்களை வேலைக்காரி ஒருத்தி பெண்ணினிடம் அழைத்துக் கொண்டு போய்விட்டாளாம். பெண் அவர்கள் வந்திருக்கும் செய்தியை டெலிபோன் மூலமாக உடனே தனது தகப்பனாருக்குத் தெரிவித்தாளாம். தகப்பனார் எப்படியோ சந்தேகங்கொண்டு உடனே மன்னார்குடிக்குத் தந்தி அனுப்பி பதில் தந்தி வருவித்தாராம். பதில் தந்தியில் வேலாயுதம் பிள்ளை, தமக்கு மைத்துனியே யாரும் இல்லை என்றும், வந்திருப்பவர் ஒரு வேளை தமது பகைவரைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் என்றும், ஜாக்கிரதையாக நடந்து கொள்ளும்படிக்கும் எழுதி இருந்தாராம். அதை உணர்ந்த பட்டாபிராம பிள்ளை உடனே தமது பங்களாவிற்கு வந்து, அவர்களைக் கண்டு உண்மையைக் கேட்க, அவர்கள் உண்மையான வரலாற்றைச் சொல்ல மறுத்து விட்டனராம். ஆகவே, பட்டாபிராம பிள்ளையும் போலீசாரும் சேர்ந்து விருந்தாளியாக வந்தவர்களைத் தனித்தனியான இரண்டிடங்களில் அடைத்துப் பூட்டி வைத்திருந்தனராம். அன்றைய தினம் இரவு 12-மணி சமயம் இருக்குமாம். சுமார் 15 முரட்டாள்கள் திடீரென்று பங்களாவில் நுழைந்து பட்டாபிராம

பிள்ளை காவல்காரர்கள் வேலைக்காரிகள் முதலிய எல்லோரையும் அடித்துக் கட்டிப் போட்டுவிட்டு மேன்மாடத்திற்குப் போய், அவ்விடத்தில் ஓர் அறைக்குள் அடைத்து வைக்கப்பட்டிருந்த விருந்தாளிப் பெண்பிள்ளையான யௌவன ஸ்திரீயை விடுவித்துக் கொண்டு போய்விட்டார்களாம். அவர்கள் போன இடத்தைக் கண்டுபிடிப்பதற்கு உரிய எவ்விதத் தகவலும் கிடைக்கவில்லை. விருந்தாளியாக வந்தவர்கள் தம்மோடு கூட அழைத்து வந்த வேலைக்காரப் பெண் பிள்ளையும் காணப்படவில்லை. அவளையும் முரட்டு மனிதர்கள் அழைத்துக் கொண்டு போனார்களா என்பதும், அல்லது, இரவில் ஏற்பட்ட சந்தடியில், அவளே தப்பித்து வெளியில் ஓடிப்போய்விட்டாளா என்பதும் தெரியவில்லை. ஆனால் இதில் இன்னொரு முக்கிய சங்கதியும் நடந்திருக்கிறது. விருந்தாளியாக வந்த இருவருள் பெண்பிள்ளை மாத்திரம் விடுவிக்கப்பட்டாளே அன்றி, ஆண் பிள்ளையாகிய யௌவனப் புருஷன் இரவில் இருளில் நடந்த சச்சரவில், கலெக்டருடைய ஆள்களினாலோ, அல்லது, வந்த முரடர்களினாலோ பலமாக அடிபட்டு மயங்கி ஸ்மரணை தப்பிக் கீழே வீழ்ந்து கிடந்தார். அவர் இறந்து போய்விட்டதாகக் கருதி ஒரு வேளை, முரடர்கள் அவரைப் போட்டுவிட்டுப் போயிருக்கலாம் எனத் தோன்றுகிறது. காலையில் போலீசார் வந்து எல்லோருடைய கட்டுகளையும் அவிழ்த்து விட்டதன்றி, ஸ்மரணை தப்பிக் கிடந்த விருந்தாளி ஆண்பிள்ளையை வைத்திய சாலைக்கு எடுத்துப் போயிருக்கிறார்கள். அவருக்குப் பல இடங்களில் காயங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இன்னம் அவர் பேசக்கூடிய நிலைமையை அடையவில்லை. அவர் அநேகமாய்ப் பிழைக்க மாட்டார் என்றே வைத்தியர்கள் சொல்லுகிறார்கள். அவர் வாயைத் திறந்து பேசி உண்மையை வெளியிட்டாலன்றி, இந்த அதிசயச் சம்பவத்தின் உள் ரகசியத்தைப் பற்றி, எந்தத் தகவலும் தெரியாமல் போய்விடும் என்றே எண்ண வேண்டி யிருக்கிறது. ஆனால் அதிர்ஷ்டவசமாக கலெக்டருடைய பெண் ஒரு பிரத்யேகமான இடத்தில் சயனித்திருந்தமையால், யாதொரு துன்பமும் இன்றி அவள் தப்பினாள். இரவில் நடந்த சம்பவம்

பொழுது விடிந்த பிறகுதான் அவளுக்குத் தெரியுமாம். காலையில் அவள் எழுந்து போய்த்தான் போலீசாரைத் தருவித்தாளாம். போலீசார் நிரம்பவும் பாடுபட்டுத் துப்பு விசாரித்து வருகிறார்கள்.

--என்று கண்ணப்பா படித்து முடித்தான்.

அந்த வரலாற்றை உணர்ந்த நால்வரும் அளவற்ற வியப்பும் பிரமிப்பும் அடைந்தனர். உடனே வேலாயுதம் பிள்ளை, "இந்த வரலாறு நிரம்பவும் புதுமையாக அல்லவா இருக்கிறது. அன்றைய தினம் பட்டாபிராம பிள்ளை நமக்கு அனுப்பிய தந்திக்கு நாம் பதில் அனுப்பினோமே. அதன் பிறகு எவ்விதமான தகவலும் தெரியவில்லையே என்று நான் நினைத்துக் கொண்டே இருந்தேன். அது இப்படியா முடிந்தது? அன்றைய தினம் பகலில் வந்த இருவரும் யாராய் இருக்கலாம் என்பது தெரியவில்லையே; என்ன கருத்தோடு நம்முடைய உறவினர் என்று சொல்லிக் கொண்டு வந்தார்கள் என்பதும் மனோன்மணி யம்மாளோடு என்னென்ன சங்கதிகள் பேசினார்கள் என்பதும் தெரியவில்லை. அவர்கள் சாதாரணமாகக் கொள்ளையடிக்க வந்தவராகத் தோன்றவில்லை. அந்த எண்ணத்தோடு வந்திருந்தால், இரவில் வந்த ஆள்கள் பங்களாவில் இருந்த பொருள்களைக் கொள்ளையடித்துக் கொண்டு போயிருப்பார்கள் அல்லவா?" என்றார்.

உடனே திரிபுரசுந்தரியம்மாள் பேசத் தொடங்கி, "அவர்கள் சாதாரணத் திருடர்களாக இருந்தால், நம்முடைய வரலாறெல்லாம் அவர்களுக்கு எப்படித் தெரியப் போகிறது! அவர்கள் அந்த மாசிலாமணியைச் சேர்ந்தவர்களாகத்தான் இருக்க வேண்டும். நாம் அந்தப் பெண்ணைக் கட்டப்போகிறோம் என்பதைத் தெரிந்து கொண்டு, நம்முடைய சொந்தக்காரர் போலப் பெண்ணினிடம் போய் அதன் மனதைக் கலைக்க எண்ணி யிருக்கலாம் என்று நினைக்கிறேன். அவர்களை சிறை வைத்ததை உணர்ந்து ஆள்கள் வந்து விடுவித்துக் கொண்டு போயிருக் கிறார்கள். அந்தப் பெண் ஆதியில் மாசிலாமணிக்குப் பேசப்பட்ட பெண்ணல்லவா. அந்த எரிச்சலினால், ஏதாவது கெடுதல்

செய்யும் எண்ணத்தோடு அவன்தான் ஏதோ சூது செய்திருக்கிறான்" என்றாள்.

உடனே கண்ணப்பா, "நம்முடைய சாமியார் ஐயா சொன்னது நிஜமாய்விட்டதே. எதிரிகள் நம்மேல் கத்தி தீட்டிக் கொண்டிருப்பதாகவும், நாம் விழிப்பாக இருக்க வேண்டும் என்றும் அவர் சொன்னார் அல்லவா. அவன் தன்னுடைய பாணத்தை சென்னப் பட்டணத்தில் பிரயோகம் செய்திருக்கிறான் போலிருக்கிறதே! இனிமேல் நம்முடைய முறை போலிருக்கிறது. நமக்கு எவ்விதமான துன்பம் இழைக்க அவன் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறானோ தெரியவில்லை" என்றான்.

அப்போது வடிவாம்பாள் மிருதுவான குரலில் தனது மாமியாரைப் பார்த்து, "இவ்வளவு பெருத்த விபரீதம் நடந்திருக்கையில், பட்டணத்து சம்பந்தி வீட்டார் இதைப்பற்றி நமக்கு எழுதாமல் இருக்க மாட்டார்கள். அன்றைக்கு மறுநாள் ஞாயிற்றுக்கிழமை ஆகையால், தபால் தலை அகப்படாமையால், கடிதம் எழுதக்கூடாமல் போயிருக்கும். அல்லது சரியான தகவல்களைத் தெரிந்து கொண்டு எழுத அவகாசம் கிடைத்திருக்காது. ஒரு வேளை நேற்று எழுதிப் போட்டிருக்கலாம். நமக்கு வந்திருக்கும் கடிதங்களில், அவர்களுடைய கடிதம் ஏதாவது இருக்கிறதா என்று பார்க்கச் சொல்லுங்கள்" என்று தணிவான குரலில் கூறினாள்.

திரிபுரசுந்தரியம்மாள் அதை உடனே தனது புருஷருக்குத் தெரிவிக்க, அவர், "ஆம், வாஸ்தவம்தான். அவரிடம் இருந்து கடிதம் வந்திருக்கலாம்" என்று கூறிக்கொண்டே, மிகுதி இருந்த கடிதங்களை எல்லாம் எடுத்து ஆராய்ந்து பார்க்க, பெருத்த உறையால் மூடப்பட்டிருந்த ஒரு கடிதம் சென்னையில் இருந்து வந்திருந்ததைக் கண்டு, நிரம்பவும் பரபரப்பாக அதை எடுத்து வாயைத் திறந்து, உள்ளே இருந்த காகித மடிப்பை வெளியில் இழுத்தார். அதற்குள் தபால் கார்டு அளவில் எடுக்கப்பட்ட ஒரு புகைப்படம் வேறொரு காகிதத்தால் மூடிப் பொட்டலமாக மடித்து

வைக்கப்பட்டிருந்தது அன்றி, தனியாக ஒரு கடிதமும் இருந்தது. கடிதத்தில் இருந்த விவரத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவலில், அவர் புகைப்படத்தைத் திறந்து பார்க்காமல், மடியில் வைத்துக் கொண்டு, கடிதத்தை எடுத்துப் பிரித்து எல்லோர்க்கும் கேட்கும்படியாகப் படிக்கலானார். அது அடியில் வருமாறு எழுதப் பெற்றிருந்தது:--

ம-ா-ா-ஸ்ரீ மகா கனம் பொருந்திய சம்பந்திப் பிள்ளை அவர்களுக்கு அடியேன் பட்டாபிராமன் அநந்தமான தெண்டனிட்டு எழுதுவது; உபயக்ஷேமம்.

சனிக்கிழமை அன்று நான் தங்களிடம் இருந்து தந்தி வருவித்த பிறகு இவ்விடத்தில் என்ன நடந்ததென்பதைத் தெரிந்து கொள்ளத் தாங்களும் தங்கள் குடும்பத்தினரும் நிரம்பவும் ஆவல் கொண்டிருக்கலாம். தாங்கள் தந்தியில் எழுதியிருந்தபடி அவர்கள் நம்முடைய எதிரிகளைச் சேர்ந்தவர்கள் என்பதைப் பற்றி சந்தேகமே இல்லை. பகலில் வந்தவர்கள் உங்களுடைய நன்மையைக் கோருகிறவர்கள் போலவே பேசி, என் பெண்ணினுடைய நடையுடை பாவனைகளை எல்லாம் பழித்ததன்றி, தங்கள் குடும்பத்தாரின் ஆசார ஒழுக்கங்களுக்கும் அவளுக்கும் சிறிதும் பொருத்தமில்லை என்று பலவகையில் பெண்ணின் மனதைக் கலைத்தார்களாம். அந்தச் சமயத்தில், உங்களுடைய தந்தியோடு நானும் பங்களாவிற்கு வந்து சேர்ந்தேன். அதன் பிறகு பங்களாவில் நடந்த விருத்தாந்தங்கள் எல்லாம், இன்றைய தினம் இவ்வூரில் இருந்து வெளியாகும் சமாசாரப் பத்திரிகைகளில் விவரமாக வெளியிடப்பட்டிருக் கின்றன. அந்தப் பத்திரிகைகள் தங்களுக்கும் வருகின்றன ஆகையால், தாங்கள் அவைகளில் இருந்து விவரங்களை நன்றாகத் தெரிந்து கொள்ளலாம். அநேகமாய் இந்தக் கடிதமும் பத்திரிகைகளும் ஒன்றாகவே உங்களிடம் வந்து சேரும் என்று நினைக்கிறேன்.

ஆனாலும் அதிர்ஷ்டவசமாய், எதிரிகளைச் சேர்ந்த ஒருவன் அகப்பட்டுக் கொண்டிருக்கிறான். அவன் நன்றாக அடிபட்டு

முற்றிலும் துர்ப்பலமான நிலைமையில் ஆஸ்பத்திரியில் கிடக்கிறான். ஆனாலும், அநேகமாய் பிழைத்துக் கொள்ளலாம் என்று டாக்டர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள். பேசுவதற்கு அவனுக்குச் சக்தி ஏற்பட்டவுடனே போலீசார் அவனைக் கொண்டே எதிரிகளின் சதி ஆலோசனை இன்னதென்று திட்டமாக அறிந்து விடுவது நிச்சயம். அப்படி ஆஸ்பத்திரியில் கிடப்பவன் இன்னான் என்று அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் என் மனதில் உண்டானதோடு, சனிக்கிழமை மத்தியானத்தில் இருந்து என் பங்களாவில் நடந்த சம்பவங்களை எல்லாம் தெரிவிக்க வேண்டும் என்ற எண்ணமும் உண்டானது. ஆகையால், நான் ஞாயிற்றுக்கிழமை மாலையில் கோமளேசுவரன் பேட்டையில் உள்ள நம்முடைய சிரஞ்சீவி கந்தசாமியின் ஜாகைக்குப் போனேன். தம்பி வீட்டில் இல்லை. வேலைக்காரி மாத்திரம் இருந்தாள். சனிக்கிழமை காலையில், அவர் புறப்பட்டு எங்கேயோ வெளியில் போனார் என்றும், அதன் பிறகு திரும்பி ஜாகைக்கே வரவில்லை என்றும், தான் ஒவ்வொரு வேளையிலும் ஆகாரம் தயாரித்து வைத்து அவருடைய வருகையை ஆவலோடு எதிர்பார்த்துத் தவித்துக் கொண்டிருப்பதாகவும் அவள் சொன்னாள். அதைக் கேட்டவுடன் எனக்குப் பெருத்த திகில் உண்டாகிவிட்டது. நம்முடைய எதிரிகள் சனிக்கிழமை பட்டணத்தில் இருந்தார்கள் என்பது பிரத்தியக்ஷமாதலால், அவர்கள் சிரஞ்சீவி தம்பிக்கும் ஏதாவது கெடுதல் செய்திருப்பார்களோ என்ற சந்தேகமும் திகிலும் என் மனதில் உண்டாயின. நான் உடனே போய் போலீசாரிடம் அந்த விஷயத்தை அறிவித்த பின், அவர்களோடு நான் புறப்பட்டு, அவர் போயிருக்கக்கூடிய இடங்களில் எல்லாம் போய்த் தேடிப் பார்த்தேன். எந்த இடத்திலும் அவர் காணப்படவில்லை. அவர் எங்கேயாவது பக்கத்து ஊர்களுக்கு நண்பர்களோடு தமாஷாய்ப் போய் இருந்துவிட்டுத் திரும்பி வந்துவிடலாம் என்றும், அரை குறையான சங்கதியைத் தெரிந்து நான் உங்களுக்கு உடனே எழுதினால், நீங்கள் எல்லோரும்

அநாவசியமான கிலிகொண்டு வதைப்படுவீர்கள் என்றும் நினைத்து நான் இன்று மாலை வரையில் அவரது வருகை எதிர்பார்த்ததோடு, தேடக்கூடிய இடங்களில் எல்லாம் தேடிப் பார்த்துவிட்டு கடைசி நிமிஷத்தில் இதைத் தபாலில் அனுப்பி இருக்கிறேன்; சிரஞ்சீவி தம்பி ஒருவேளை ஏதாவது எண்ணத்தோடு மன்னார்குடிக்கே வந்திருக்கலாம் என்ற சந்தேகம் தோன்றுகிறது. அப்படி அவர் அங்கே வந்திரா விட்டால், சிரஞ்சீவி கண்ணப்பாவை அடுத்த ரயிலில் இந்த ஊருக்கு அனுப்ப வேண்டுகிறேன். கந்தசாமி இந்த ஊரிலேயே தான் எவ்விடத்திலாயினும் சிறை வைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆதலால், அதற்குத் தக்க யோசனைகள் செய்து, இன்னும் நம்மால் ஆன பிரயாசைகளை பட்டு ஊர் முழுவதிலும் தேடிப் பார்க்கலாம்.

நிச்சயதார்த்தத்திற்குச் சகலமான ஏற்பாடுகளும் செய்யப் பட்டிருக்கின்றன. எப்படியும் அவர் வெள்ளிக்கிழமைக்குள் வந்து விடுவார் என்ற நம்பிக்கை இருப்பதால், எதையும் நிறுத்தாமல் நடத்திக் கொண்டே போகிறேன்.

உடனே தந்தியை எதிர்பார்க்கும்
அடியேன்,
**பட்டாபிராமன்.**

என்று எழுதப்பட்டிருந்த கடிதத்தை வேலாயுதம் பிள்ளை படித்து முடிப்பதற்குள் திரிபுரசுந்தரியம்மாள், "ஐயோ! என் மகனே! எதிரிகள் உன்னை என்ன செய்து விட்டார்களோ தெரிய வில்லையே! ஆ! தெய்வமே! இன்னமும் எங்களைச் சோதிக்க வேண்டுமா!" என்று வீரிட்டுக் கூக்குரலிட்டுத் தனது கைகளைப் பிசைந்து பிரலாபித்து அழத் தொடங்கினாள். அது போலவே வடிவாம்பாளும் கலங்கிக் கண்ணீர் வடித்து அழத் தொடங்கினாள். வேலாயுதம் பிள்ளையும் கண்ணப்பாவும் அபாரமான பிரமிப்பும், கலக்கமும், திகிலும் அடைந்து வெலவெலத்துப் போயினர். உடனே வேலாயுதம் பிள்ளை, "என்ன ஆச்சரியம் இது! வெளியில் போன பையன் எங்கே போயிருப்பான்! எதிரிகள்

யாரைக் கொண்டாவது பையனை வஞ்சித்து ரகசியமான எந்த இடத்திற்காவது அழைத்துக் கொண்டு போய் ஏதாவது கெடுதல் செய்திருப்பார்களா, அல்லது, சாதாரணமாய்ப் போனபோது மோட்டார் வண்டியினால் ஏதாவது அபாயம் நேரிட்டு இருக்குமா?" என்று அளவற்ற விசனத்தோடு கூறினார்.

கண்ணப்பா, "மோட்டாரினால் விபத்து ஏற்பட்டிருந்தால், அது போலீசாருக்கு அவசியம் தெரிந்து போயிருக்கும் ஆகையால், எதிரிகள்தான் ஏதாவது மோசடி செய்திருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். நாம் ஒரு பெருத்த தவறு செய்துவிட்டோம்: சுவாமியார் ஐயா நம்மை எச்சரித்தவுடனே, அதை நாம் பட்டணத்திற்கு எழுதி, எதிரிகள் நம்மீது கத்தி தீட்டிக் கொண்டிருப் பதால், ஜாக்கிரதையாக இருக்கும்படி தெரிவித்திருக்க வேண்டும். அது நம்முடைய மனசில் படாமல் போய்விட்டது. எதிரிகள் அவ்வளவு தூரமான இடத்திற்குப் போகப் போகிறார்களா என்று நினைத்து நாம் அஜாக்கிரதையாக இருந்து விட்டோம். அது இப்போது பெருத்த அநர்த்தத்தை உண்டாக்கி விட்டது" என்று கூறி நிரம்பவும் பரிதவித்தான்.

வேலாயுதம் பிள்ளை, "தம்பீ! இதெல்லாம் கடவுளின் சோதனையே அன்றி வேறல்ல. உண்டாக்குகிறவனும் அவனே. இல்லையாக்குகிறவனும் அவனே. நாம் ஒரு விஷயத்தில் ஜாக்கிரதையாக இருந்தால், நாம் எதிர்பார்க்காத இன்னொரு விஷயத்தில் ஏதாவது துன்பம் வந்து சேருகிறது. ஆகையால், நம்முடைய கெட்ட வேளையில், நாம் ஏதாவது துன்பம் அனுபவிக்க வேண்டும் என்று இருந்தால், நாம் எவ்வளவு தான் முன் எச்சரிக்கையாக இருந்தாலும், எந்த விதத்திலாவது துன்பம் வந்து தான் தீருகிறது. எல்லாப் பொறுப்பையும் நாம் கடவுளின் மேல் போட்டு நம்மாலான முயற்சியைச் செய்தால், எல்லாம் கடைசியில் நன்மையாகவே முடியும். இருக்கட்டும். நீ ஒரு காரியம் செய். உடனே தந்தி ஆபீசுக்குப் போய், கந்தசாமி இங்கே இல்லை என்றும், நாம் எல்லோரும் இன்றைய இரவு வண்டியிலேயே புறப்பட்டு அங்கே வருகிறோம் என்றும் சம்பந்திப் பிள்ளைக்கு அவசரத் தந்தி கொடுத்துவிட்டு, உடனே

கும்பகோணம் போய், இந்த விவரங்களை எல்லாம் பாலத்தின் கீழ் எழுதி வைத்துவிட்டு சீக்கிரமாக வந்து சேர். பட்டாபிராம பிள்ளை உன்னை அனுப்பும் படி எழுதி இருக்கிறார். உன்னைத் தனியாக அனுப்ப பயமாக இருக்கிறது. அதுவுமன்றி, இந்தச் சாமான்களை எல்லாம் எடுத்துக் கொண்டு போவதற்கு அவசியமான நீயே போகும் போது, நாங்கள் மாத்திரம் இங்கே இருந்து என்ன செய்யப் போகிறோம். ஆகையால், நாம் எல்லோருமே புறப்பட்டு இன்றைய இரவு வண்டியில் பட்டணம் போவோம். நம்முடைய அண்ணன் நடராஜ பிள்ளை சுவாமி தரிசனத்திற்குக் கோவிலுக்குப் போயிருக்கிறார்கள். அவர்கள் வந்தவுடன், எல்லாவற்றையும் அவர்களுடைய வசத்தில் விட்டு, ஆள்களையும் காவல் போட்டு விட்டுப் போவோம். பட்டணத்தில் கந்தசாமி அகப்பட்டுவிட்டால் நாம் உடனே தந்தி அடிப்போம். அண்ணன் இந்தச் சாமான்களை எல்லாம் வண்டியில் வைத்துக் கொண்டு, நம்முடைய பந்துக்களையும் அழைத்துக் கொண்டு பட்டணம் வந்து சேரட்டும்" என்றார். கண்ணப்பாவுக்கும், மற்றவருக்கும் அந்த யோசனை உசிதமான தெனத் தோன்றியது. கண்ணப்பா தந்தி ஆபீசுக்குப் புறப்பட எத்தனித்த காலத்தில் வடிவாம்பாள், "அந்தப் படம் யாருடையது என்று பார்க்கவில்லையே" என்றாள். உடனே வேலாயுதம் பிள்ளை தமது மடியில் கிடந்த புகைப்படத்தை எடுத்து மேல்காகிதத்தை விலக்கி விட்டு, அதற்குள் காணப்பட்ட வடிவத்தை உற்றுநோக்கி வியப்படைந்து, "இவன் யரோ நமக்கு அறிமுகமான மனிதன் போல் அல்லவா இருக்கிறான். இன்னான் என்பது விளங்க வில்லையே!" என்று கூறிய வண்ணம் அதைக் கண்ணப்பாவிடம் கொடுக்க, அவனும் திரிபுரசுந்தரி அம்மாளும் அதைக் கூர்ந்து நோக்கினர். உடனே திரிபுரசுந்தரியம்மாள், "இது கோபாலசாமியின் சாயலாக இருக்கிறது!" என்றாள்.

உடனே கண்ணப்பா, "ஆம். ஆம். இது கோபாலசாமி தான். என்ன ஆச்சரியம் இது! இவன் எதற்காக அவர்களுடைய பங்களா விற்குப் போனான்! நம்முடைய எதிரியின் ஆள்களோடு இவன் எப்படி சம்பந்தப்பட்டான் என்பது விளங்கவில்லையே!" என்றான்.

உடனே திரிபுரசுந்தரியம்மாள், "அந்த மாசிலாமணி பணத் திமிர் கொண்டவனல்லவா. இவன் எப்போதும் கந்தசாமியோடு கூட இருக்கிறான் என்று தெரிந்து கொண்டு, இவனுக்கு ஏதாவது பணம் கொடுத்து இவனைக் கையில் போட்டுக் கொண்டு, இவன் மூலமாகக் கந்தசாமிக்கும், மனோன்மணிக்கும் கெடுதல் செய்ய எத்தனித்தார்களோ என்னவோ" என்றாள்.

வேலாயுதம் பிள்ளை, "அப்படித்தான் இருக்க வேண்டும். அதற்குத் தகுந்த சிட்டையை ஈசுவரன் கைமேல் நடத்தி விட்டார். கெடுவான் கேடு நினைப்பான் என்பது ஒரு நாளும் பொய்யாகாது" என்றார்.

உடனே கண்ணப்பா அவ்விடத்தை விட்டு வெளிப்பட்டு வண்டியில் ஏறிக் கொண்டு தந்தி ஆபீசுக்குப் போய், பட்டாபிராம பிள்ளைக்கு அவசர தந்தி அனுப்பிவிட்டு, அப்படியே நேராகக் கும்பகோணம் போய் திகம்பரசாமியார் குறித்த பாலத்தின் உள்வாயில் அவருக்குத் தெரிவிக்க வேண்டிய விவரங்களை எல்லாம் எழுதி வைத்து விட்டு உடனே திரும்பி மன்னார்குடிக்கு வந்து சேர்ந்தான்.

வேலாயுதம் பிள்ளையின் யோசனைப்படி நடராஜ பிள்ளையும் மற்ற ஆள்களும் வீட்டையும், சாமான்களையும் பார்த்துக் கொள்ளும் பொறுப்பை ஏற்றுக் கொண்டனர். அன்றைய தினம் முழுதும், வேலாயுதம் பிள்ளை, திரிபுரசுந்தரியம்மாள், கண்ணப்பா, வடிவாம்பாள் ஆகிய நால்வரும் அன்னத்தையாவது தண்ணீரையாவது நாடாமல், ஏக்கமும் துயரமும் கவலையுமே வடிவாக ஓய்ந்து எப்போது பட்டணம் போவோம் என்று முற்றிலும் ஆவலே நிறைவாக மாலை நேரத்தின் வருகையை எதிர்பார்த்துத் துவண்டு கிடந்து சாயுங்காலம் அவ்வூரில் இருந்து புறப்பட்ட ரயில் வண்டியில் ஏறி சென்னைக்குப் பிரயாணம் போயினர்.

பல ஆட்களோடு வீட்டைக் காவல் காத்திருந்த நடராஜ பிள்ளை, கந்தசாமி காணாமல் போன விஷயத்தைக் குறித்து அளவற்ற துயரமும் கவலையும் கொண்டவராய், இரவு முழுதும்

கடவுளை நினைத்து ஸ்தோத்திரம் செய்தவண்ணம் ஊணுறக்கம் இன்றிப் பொழுதைப் போக்கினார். மறுநாளாகிய புதன்கிழமை அன்று, பட்டணம் போவதற்காக, வேலாயுதம் பிள்ளையின் விருந்தினர்களும், முதல் நாள் இரவில், ஏதோ அவசர காரியமாய்த் தமது பங்களாவிற்குத் திரும்பிப் போயிருந்த சுந்தரம் பிள்ளையும் சிவக்கொழுந்தம்மாளும் வந்து சேர்ந்தனர். பட்டணத்தில் நிகழ்ந்த சம்பவத்தின் விவரங்களையும், வேலாயுதம் பிள்ளை முதலியோர் முதல் நாளே பட்டணம் போயிருக்கும் செய்தியையும் கேட்ட விருந்தினர் எல்லோரும் கரைகடந்த வேதனையும் அங்கலாய்ப்பும் அடைந்து விசனமே வடிவாக மாறிப் போயினர். அவ்விடத்தில் கூடியிருந்த எல்லோரும் தந்தி ஆபீசிலேயே ஓர் ஆளை வைத்துப் பட்டணத்தில் இருந்து எப்போது தந்தி வரும் என்று ஆவலோடு எதிர்பார்த்திருந்தனர். அன்றைய தினம் பகலில் நடராஜ பிள்ளைக்கு ஒரு தந்தி வந்தது. அது அடியில் வருமாறு எழுதப்பட்டிருந்தது:--

க்ஷேமமாய்ப் பட்டணம் வந்தோம். பையன் இன்னமும் அகப்படவில்லை. மறுபடி தந்தி வந்த பிறகு நீங்கள் புறப்பட்டு வரலாம். விருந்தாளிகளை உபசரித்து நம்முடைய வீட்டிலேயே இருக்கச் செய்யுங்கள்.

*கண்ணப்பா.*

என்று கிடைத்த செய்தியை உணர்ந்த சுந்தரம் பிள்ளை, நடராஜ பிள்ளை, விருந்தினர் முதலிய எல்லோரும் மனத்தளர்வும் துயரமும் அடைந்து ஓய்ந்து போய், செய்வது இன்னதென்பதை அறியாது ஊணுறக்கம் இன்றி அதே பேச்சாகப் பேசிக் கொண்டு அந்த மாளிகையிலேயே இருந்தனர்.

அன்றைய தினம் கழிந்தது. மறுநாட்களாகிய வியாழக் கிழமையும் வெள்ளிக்கிழமையும் ஒவ்வொரு தந்தி வந்தது. அந்தத் தந்தியிலும் முதல் நாளில் வந்த செய்தியே காணப்பட்டது. அவர்களது விசனமும் கவலையும் சஞ்சலமும் மலை போலப் பெருகிக் கொண்டே இருந்தன. சனிக்கிழமை தினம் வரும் தந்தியாவது நல்ல செய்தியைக் கொண்டு வராதா

என்று அவர்கள் எல்லோரும் ஆவலாகக் காத்திருந்தார்கள். அன்று முழுதும் தந்தியே வராமையால் எல்லோரும் பெருத்த ஏமாற்றமும் கலக்கமும் அடைந்து நெருப்பின் மீது வீழ்ந்த புழுக்கள் போலத் துடித்துக் கொண்டிருந்தனர்.

மறுநாளாகிய ஞாயிற்றுக்கிழமை தினம் வந்தது. அன்றைய தினம் எப்படியும் கடிதமாவது, தந்தியாவது வரும் என்று நடராஜ பிள்ளை, சுந்தரம் பிள்ளை, விருந்தினர் முதலிய எல்லோரும் எதிர்பார்த்தனர். தபாற்காரன் சமாசாரப் பத்திரிகைகளை மாத்திரம் கொடுத்தானே அன்றி, கடிதம் எதையும் கொடுக்கவில்லை. விருந்தினருள் ஒருவர் சமாசாரப் பத்திரிகைகளைப் பிரித்து பொழுது போக்காகப் பக்கங்களை மேன்போக்காகத் தள்ளிக் கொண்டே வந்தார். அவர் திடீரென்று எதையோ கண்டு திடுக்கிட்டுக் கூக்குரலிட்டு, "ஐயோ! இதென்ன பெருத்த இடியாக இருக்கிறதே! நம்முடைய வேலாயுதம் பிள்ளை முதலியோருக்கு பயங்கரமான அவகேடு நேர்ந்து விட்டதாமே" என்றார்.

அதைக் கேட்ட மற்ற எல்லோரும் திகில் கொண்டு நடுநடுங்கி அந்தச் செய்தியைப் படிக்கச் சொல்ல, முன் குறிக்கப்பட்ட விருந்தாளி அடியில் வருமாறு சமாசாரப் பத்திரிகையில் படிக்கலானார்:--

சென்னையில் பெரிய கலெக்டர் உத்தியோகம் பார்த்து வரும் ம-ள-ள-ஸ்ரீ பட்டாபிராம பிள்ளை அவர்களுடைய பெண்ணுக்கு வெள்ளிக்கிழமை அன்று நிச்சயதார்த்தம் நடத்தினார்களோ, அல்லது, நடத்த உத்தேசித்து இருந்தார்களோ தெரியவில்லை. மன்னார்குடியில் உள்ள பெருத்த மிராசுதார் ஒருவருடைய பிள்ளைக்குத் தம் பெண்ணைக் கொடுக்க கலெக்டர் நிச்சயித்திருந்தாராம். பிள்ளை வீட்டார் கோமளேசுவரன் பேட்டையில் உள்ள ஒரு பெருத்த மெத்தை வீட்டில் இறங்கி இருந்தார்களாம். இரவில் அவர்கள் படுத்துத் தூங்கின சமயத்தில் யாரோ பகைவர்கள் உள்ளே நுழைந்து மகா பயங்கரமான பெருத்த அட்டூழியம் செய்துவிட்டுப் போய்விட்டார்களாம். இன்று காலையில் போலீஸ் ஸ்டேஷனில் சுமார் ஆயிரம் ஜனங்கள் கும்பலாகக் கூடி இருந்தார்கள். நான் உள்ளே நுழைந்து

பார்ப்பதற்குள், என் பாடு திண்டாட்டமாகி விட்டது. நான் ஸ்டேஷனுக்குள் நுழைந்து பார்த்தவுடன், ஏன் இந்தப் பரிதாபகரமான காட்சியைப் பார்த்தோம் என்று ஆகிவிட்டது. சுமார் ஐம்பது வயதான ஒரு பெரியவருடைய வலது காதும், ஒரு பெரிய அம்மாளுடைய இடது காதும் அடியோடு அறுபட்டுப் போய்விட்டன. அவர்கள்தான் ஸ்ரீமான் பட்டாபிராம பிள்ளையின் சம்பந்திகள் என்று சொல்லிக் கொண்டார்கள். சுமார் இருபத்தைந்து வயதுள்ள ஒரு யௌவனப் புருஷனுடைய இரண்டு கண்களும் பலாக்காய் கொத்துவது போலக் கொத்தப்பட்டுப் போயிருந்தன. அழகே வடிவாக அமைந்துள்ள சுமார் 20– வயதுள்ள ஒரு யௌவன ஸ்திரீயின் மூக்கு அடியோடு பெயர்த்தெடுக்கப்பட்டுப் போனதால்; அவள் மூர்ச்சித்துப் பிணம்போலக் கிடந்தாள். சுமார் 20–வயதுள்ள அழகான இன்னொரு யௌவனப் புருஷனது முகத்தில் அக்கினித் திராவகம் கொட்டப்பட்டதால், முகம் முழுதும் குழைகறியாக வெந்துபோயிருக்கிறது. அவன் துடிதுடித்து உயிர்க் கழுவில் நின்றவன் போல அலறிப் புரண்டு கொண்டு கிடந்தான். அவனே பட்டாபிராம பிள்ளையின் பெண்ணைக் கட்ட வந்த மாப்பிள்ளையாக இருக்க வேண்டும் என்று ஜனங்கள் சொல்லிக் கொண்டார்கள். இந்த மகா பயங்கரமான காட்சியைக் காணச் சகியாதவனாய், நான் அவ்விடத்தைவிட்டு, உடனே வெளியில் வந்து, நான் போய் உத்தேசித்த இடத்திற்குப் போய்விட்டேன். விரிவான வரலாற்றை நன்றாக விசாரித்து மறுபடி எழுதுகிறேன்"

என்று எழுதப்பட்டிருந்த செய்தியை விருந்தாளி ஒருவர் படிக்கவே, அதைக்கேட்ட சுந்தரம் பிள்ளை, நடராஜ பிள்ளை, சிவக்கொழுந்தம்மாள், மற்ற விருந்தினர் முதலிய எல்லோரும் எவ்விதமான நிலைமையை அடைந்திருப்பார் என்பதை யூகித்துக் கொள்வது சுலபமானதன்றி அதை விவரித்து எழுதுவது சாத்தியமற்ற காரியம் என்றே சொல்ல வேண்டும். சுருங்கக் கூறுமிடத்து, ஒரு நாழிகை காலம் வரையில் எல்லோரது உயிரும் உடம்பை விட்டுப் போய்விட்டதென்று சொல்வதே பொருத்தமாக இருக்கும். அவர்கள் எல்லோரும் அலறியடித்துக் கொண்டு அன்றைய மாலை, ரயிலில் சென்னைக்குப் பிரயாணமாயினர்.

10 – வது அதிகாரம்

## சோபனப் பெண்

மன்னார்குடி சுந்தரம் பிள்ளை முதலியோர் ஞாயிறன்று சென்னையிலிருந்து வந்த சமாசாரப் பத்திரிகையைப் படித்து, அதில் வெளியிடப்பட்டிருந்த விபரீதச் செய்தியைக் கண்டு, பெருந்திகிலும், குலைநடுக்கமும், சித்தப்பிரமையுமடைந்து, பதை பதைத்து, அன்றையதினம் மாலை வண்டியில் புறப்பட்டுச் சென்னைக்குப் போயினரென்ற விவரம் முந்திய அதிகாரத்தின் முடிவில் கூறப்பட்டதல்லவா. அந்தக் கிழமைக்கு முந்திய செவ்வாயன்று இடும்பன் சேர்வைகாரன், ரமாமணி முதலியோர் கும்பகோணத்திலிருந்து புறப்பட்டுச் சென்னைக்குப் போய், அவ்விடத்தில் என்ன செய்தார்கள் என்பதையும், அவர்கள் நிறைவேற்ற எண்ணிய அங்கஹீனம் நடைபெற்ற விவரத்தையும் நாம் கூறுமுன், கும்பகோணம் பெரிய தெருவில் மாசிலாமணி யினது மாளிகையில் பெண் வேஷத்தோடு சிறைவாசம் செய்து வந்த கந்தசாமிக்கு அன்றைய தினம் இரவில் அவ்விடத்தில் சோபன முகூர்த்தம் நடைபெற்ற வைபவத்தை விஸ்தரிப்போம்.

அன்றைய தினம் பகலில் மாசிலாமணி, இடும்பன் சேர்வை காரனோடு சம்பாஷித்த பிறகு, தனது ஆசை நாயகியான ரமாமணி அம்மாளிடம் போய், அவளும் சென்னைக்குப் போக இணங்கும் படி செய்து, வழிச் செலவிற்குப் பணமும் கொடுத்து விட்டுத் தனது மாளிகைக்கு வந்து அன்றைய பகல் பொழுது எப்போது தொலையும் தொலையுமென்று ஆவலே வடிவாகத் தவித்திருந்தார் என்று முன்னரே கூறினோமல்லவா. அன்றைய தினம் மாலைப் பொழுது வருவதற்குள் அவன் தனது மிதமிஞ்சிய ஆவலில் உண்மையிலேயே பைத்தியம் கொண்டவன் போல் சித்தக் கலக்க மடைந்து விட்டதன்றி, புதிதாகக் கூண்டில் அடைக்கப்பட்ட கொடிய வேங்கைப்புலி போல தனது விடுதியில் இருக்கை கொள்ளாதவனாய்த் தத்தளித்துத் தவித்துக் கொண்டிருந்தான். காமாந்தகாரமே வடிவெடுத்தது போல அமைந்திருந்த அவனது மனம் கட்டிலடங்காமல் பம்பரம் போலச் சுழன்று கொண்டு இருந்தது. கனிந்த யௌவனப் பருவமும், அற்புதமான

கட்டழகும், ஸரஸ குணங்களும் வாய்ந்தவளான ரமாமணி அவனுக்கு ஆசை நாயகியாய் ஏற்பட்டிருந்தும், பெண் வேஷம் தரித்திருந்த கேவலம் ஓர் ஆண்பிள்ளையைக் கண்டு அவன் அவ்வாறு கட்டிலடங்காப் பெருங்காமம் கொண்டது கடவுளது சிருஷ்டியில் காணப்படும் எண்ணிறந்த விநோதங்களுள் பெரியதொரு விநோதமென்றே நாம் கூற வேண்டும். ஆண் பாலாரிலும், பெண் பாலாரிலும் அநந்தம் பேர் இது போலவே *இக்கரைக்கு அக்கரை பச்சை* என்ற மனப்பிராந்திக்கு அடிமையாய், ஒன்றைவிட்டு இன்னொன்றைப்பற்றி, எவ்விடத்திலும் திருப்தி அடையாதவராய்த் தமது ஆயுள் காலம் முடிய நிம்மதியற்ற அலகைகள் போல் இருந்தே மடிவது சர்வ சாதாரணமாக இருந்து வருகிறது. எவ்வித இன்பமாயினும், தமக்குக் கிடைக்கும் சொற்பத்தோடு திருப்தியடைந்து, நிர்ணயம் தவறாது இருந்து, தமது ஆயுட்காலத்தைக் கழிப்போரும் இவ்வுலகில் அகந்தமாக இருக்கின்றனர். மனிதனது ஆசைக்கு அளவில்லை என்பது மண்ணாசை பொன்னாசை ஆகிய இரண்டையுமே முக்கியமாய்க் குறிப்பதாக இருக்கிறது. கோடி கோடியான சம்பத்தைச் சேர்த்து வைத்திருப்போரும் அதை வட்டிக்குக் கொடுத்து மேன்மேலும் வளர்ப்பதிலேயே கண்ணுங் கருத்துமாயிருக்கின்றனர். உலகைத் துறந்து காஷாயம் பெற்றுக் கொண்டு திரியும் சந்நியாசிகள் கூடத் தமக்கு ஏராளமாகப் பாத காணிக்கை செலுத்துபவரை பலமாக ஆசீர்வதித்துத் தமது நன்றியறிதலை வெளியிடுகின்றனர். பட்டினத்துப் பிள்ளை முதலியோரைப் போல மனப்பூர்வமாக உலகை வெறுத்துப் பொருளில் பற்றற்றுத் திரிகரண சுத்தியாக ஒழுகும் மகான்கள் பல நூற்றாண்டுகளுக்கு ஒருவரே தோன்றுகின்றனர். ஆகவே, மண்ணாசை பொன்னாசையாகிய இரண்டின் கவர்ச்சிக்கும் இலக்காகாத மனிதர் இருப்பது அரிதிலும் அரிதென்றே மதித்தல் வேண்டும். ஆனால், பெண்ணாசையின் தன்மையோ வேறு மாதிரியானது. உலகத்தில் உள்ள ஜனங்களில் நூற்றில் தொண்ணூறு மனிதர் தமக்கு வாய்க்கும் மனைவிகளால் தமக்குக் கிடைக்கும் இன்பத்தோடு திருப்தியடைந்து ஒரே நிலையில் உறுதியாக நின்று தமது ஆயுட்காலத்தைக் கழிக்கின்றனர். சட்டைநாத பிள்ளை மாசிலாமணி முதலியோரைப்

போல புதிய புதிய ஸ்திரீகளை அடைய விரும்பும் காமாதுரர்கள் நூற்றிற்குப் பதின்மரே இருப்பரென நாம் ஓர் உத்தேசமாகக் கணக்கிடலாம். அவர்களுக்கு ஒருத்தியைவிட, மற்றவள் அதிக அழகாக இருக்க வேண்டுமென்ற நியதியே அவசியமில்லை. அவர்களுக்கு வாய்த்த ஸ்திரீ ரதிதேவி, இந்திராணி, மகாலக்ஷ்மி முதலியோரின் அவதாரமாகவே இருந்தாலும், அவர்களது ஆசைப் பேய் தணிவடைகிறது மில்லை; கட்டில் அடங்குகிறது மில்லை. அவர்களது வீட்டில் குற்றேவல் செய்யும் ஏழைப் பணிப்பெண் நல்ல பக்குவகாலமடைந்திருப்பாளாயின், அந்தக் காமாதுரர்கள் தமது மனைவிமார் வீட்டிலில்லாத காலங்களில், பணிப் பெண்களைப் பிடித்திழுப்பர். ஒன்றில் இல்லாத நூதன இன்பம் வேறொன்றில் இருக்கும் என்ற மனப்பிரமையே முக்கியமாக அவர்களைத் தூண்டுவதால், அவர்களுக்கு அழகைப் பற்றியாவது, குணத்தைப் பற்றியாவது அக்கறை இல்லை. இவ்வாறு சிலர் வரம்பைமீறிக் கடுங்காமங் கொண்டு தலைதடுமாறித் திரிவதற்கு முக்கியமாக அவர்களது தேகத்தின் அமிதமான திமிரே காரணமென்று சிலர் மேன்போக்காகக் கூறுகின்றனர். அது உண்மையாயின், அதிக பலசாலிகளாயி ருப்பவர் அனைவரும் காமாதுரர்களென்றும், அவர்களே பர ஸ்திரீ கமனத்தில் நாட்டம் உடையவர்கள் என்றும் நாம் நினைப்பது போலாவதுமன்றி, துர்ப்பலமாக இருக்கிற மனிதர்கள் மாத்திரமே ஒரு ஸ்திரீயோடு திருப்தியடைந்து நிலையில் நிற்பவர்கள் என்று எண்ணுவது போலவும் முடியும். வீராதி வீரர்களான இராவண கும்பகர்ணாதி அரக்கர்களை எதிர்த்துப் போர் புரிந்து, வெற்றியும், என்றும் அழியாப்பெரும் புகழும் பெற்ற ஒப்புயர்வற்ற அதிபராக்கிரமசாலியான இராமர் ஏகபத்னிவிரதராயிருந்தார் என்பதிலிருந்து அவரை நாம் ஸ்திரீ விஷயத்தில் மாத்திரம் துர்ப்பலமான தேகமுடையவரென்று நினைப்பது பொருந்துமா? அந்த உதாரணத்தை நாம் விடுத்து சாதாரணமாக உலகத்தில் ஒவ்வொரு நாளும் நமது கண்ணிற்கெதிரில் காணப்படும் குடும்பங்களை எடுத்துக் கொள்வோம். வயல்களில் வேலை செய்வதிலோ, கிணறு தோண்டுவதிலோ, கட்டைகள் வெட்டுவதிலோ, கருங்கல் உடைப்பதிலோ, இன்னும் இவை

போன்ற பயங்கரமான கொடிய முரட்டு வேலைகள் செய்வதிலோ தமது பொழுதையே செலவிடும் அதிபலிஷ்டர்களான ஏழைக் கூலியாட்களின் விஷயத்தை எடுத்துக் கொள்வோம். அவர்கள் தமது அன்றாட உழைப்பைத் தீர்த்துக் கொண்டு வீட்டிற்கு வந்த பிறகு, தனது மனைவி மக்களிடத்தில் எவ்வளவோ அந்தரங்கமான வாஞ்சையும் உருக்கமும் காட்டி, வரம்பில் நின்று ஒரே உறுதியாக ஒழுகுவதை நாம் காண்கிறோமல்லவா. பத்துப்பதினைந்து குழந்தைகளைப் பெற்று முற்றிலும் தொத்தலாகக் காணப்படும் தமது மனைவியரே அவர்களுக்கு இன்பக் களஞ்சியமாகத் தோன்றுகின்றனர். ரதி தேவியைப் போல இருக்கும் கட்டழகுவாய்ந்த யௌவன ஸ்திரீகளைக் காணினும், அந்த ஏழைப் புருஷர்களது மனம் சொற்பமும் சலிப்பதே அரிது. அவர்களது உதாரணம் எதைக் காட்டுகிறது? அவர்களது மனம் அற்புதமான திடசக்தி வாய்ந்ததாக அமைந்திருக்கிறதென்று நாம் எண்ணவேண்டுமேயன்றி, அவர்களது தேகம் திமிரற்றது என்று நினைப்பது சிறிதும் பொருந்தாது. நாம் மனிதரைவிட்டு, காட்டு விலங்குகளை எடுத்துக் கொள்ளுவோம். மகா பயங்கரமான மூர்க்க குணமுடைய புலி, கரடி, சிங்கம், யானை முதலிய விலங்குகள் கூட ஒரே ஒரு பெண் விலங்கைத் தமது உயிர்த் துணையாக ஏற்றுக் கொள்வதையும், அவைகளை விட்டு இணைபிரியாமல் ஜதையாகவே எவ்விடத்திலும் சென்று வேட்டையாடுவதையும் நாம் காண்கிறோ மேயன்றி, மேற்படி மிருகங்கள், மாசிலாமணி முதலிய கோஷ்டியாரைப் போல, ஒன்றைவிட்டு ஒன்றாகப் பல பெண் மிருகங்களைத் தேடி அலைவதை நாம் காண்பது அரிது. ஆகவே மனிதரது நிர்ணய மற்ற காமத்திற்கு, ஒருத்தியைவிட மற்றொருத்தி அதிக அழகுடையவளாக இருக்கிறாள் என்பதையாவது, அல்லது, அந்த மனிதர் ஏகபத்நிவிரதராக ஒழுகும் இதர புருஷரை விட அதிக தேகத்திமிர் வாய்ந்தவராக இருக்கிறார் என்பதையாவது காரணமாகக் கூறுவது பொருந்தாது. அற்புதமான அழகு வாய்ந்த மனைவியைப்படைத்த புருஷர்கள், அழகில்லாத வேறு குரூபிகளிடத்திலும் ஆசை கொள்ளுகின்றனர். அற்புதமான தேகபலம் வாய்ந்த புருஷர்கள் தமது மனைவியரிடத்திலேயே உறுதியான அன்பை வைத்து மற்றவர்

விஷயத்தில் தமது மனதைச் சலிக்கவிடாமல் ஒழுங்காக நடக்கின்றனர். தளர்வடைந்த பலஹீனர்களும், நோயாளிகளும், கிழவர்களும் பரஸ்திரீ கமனத்தில் நாட்டமுடையவர்களாக இருப்பதை நாம் ஆங்காங்கு காண்கிறோம். மனிதர் இப்படிப் பலவாறாக ஒழுகுவதற்கு அவர்களது தேகக்கூற்றைவிட மனப்பான்மையே முக்கியமான காரணமாக அமைந்திருக்கிற தென்றே நாம் துணிந்து கூறலாம். மனிதரது மனப்போக்கு, அவரது பூர்வஜென்ம வாசனை நிறைந்ததாய் அமைந்துள்ள தென்பது எல்லோரும் அறிந்த விஷயமாதலால், மனிதன் சுத்தனாய் இருப்பதும் சபல புத்தியுடையவனாய் இருப்பதும், அவன் எடுத்த பல ஜென்மங்களில் அவனது மனம் எவ்வித நாட்டத்தைக் கொண்டு எவ்வித துறையில் பழகி முதிர்ச்சியடைந் திருக்கிறதோ, அதைப் பொறுத்ததாகவே இருக்கின்றது.

ஆகவே, நமது மாசிலாமணி உண்மையான யோக்கி யதைகள் நிறைந்த நிஜவஸ்துவிருக்க, அதைவிட்டு, போலி வஸ்துவின் மீது பிரமைகொண்டது ஓர் அதிசயமன்று. ஆதி காலத்திலிருந்தே சட்டை நாத பிள்ளையும், அவரது சகோதரனான மாசிலாமணியும் அதே மனப்பான்மையுடையவர்களாக இருந்தது எல்லோருமே அறிந்த விஷயம். மாசிலாமணி வடி வாம்பாளென்கிற நமது பெண்ணரசியை மணக்க வேண்டு மென்று பேரவாக் கொண்டிருந்த சமயத்திலும், அஞ்சலை என்ற வயதான ஸ்திரீயிடம் நட்பாயிருந்தது முன்னரே கூறப்பட்ட விஷயம். வடிவாம்பாள் தனக்கு இல்லாமல் போன ஏமாற்ற நிலைமையில், அவன் சிறைச்சாலையில் ஸ்திரீகளின் முகத்தையே பாராமல் இருக்க நேர்ந்தமையால், அந்தக் காலத்தில் அவனது மனப்பேய் அக்ஷயமாய்ப் பெருகி அவனது தலைக்கேறி யிருந்தது. அவனது சிறைவாசம் முடிந்த பின்னர், அவன் அபாரமான செல்வத்திற்கு அதிபதியாய் அடக்குவாரின்றித் தனிமையில் இருக்க நேர்ந்தமையால்; முன்னர்க் கூறப்பட்டபடி அவனுக்கு ரமாமணியின் தொடர்பு சுலபத்தில் ஏற்பட்டது. அவள் அவனது மனதை மயக்கி, அறிவைக் கலக்கி, அவனது வாஞ்சை எப்போதும் மாறாமல் தன் மீது இருக்க வேண்டு மென்ற கருத்தோடு தன்னாலான ஸாகஸங்களையும் தனுக்கு

குலுக்குகளையும் காட்டி வந்தாளானாலும், அவனது மனம் ஒரு நிலையில் நிற்காமல் பலர் மீதும் சென்று கொண் டிருந்தது. ஆயினும், அவன் போலீசாரது பார்வையில் இருக்க நேர்ந்தமையால், தான் அதிகமாய் வெளியிற் சென்று பல இடங்களிலும் சிநேகம் வைத்துக் கொண்டிருந்தால், தான் போலீசாரது தொந்தரவிற்கு இலக்காக நேருமென்ற நினைவினால் அஞ்சி, அவன் அரும்பாடுபட்டுத் தனது மனத்தை அடக்கிக் கொண்டிருந்தான். சென்னையிலிருந்து இடும்பன் சேர்வை காரனால் அபகரித்து வரப்பட்ட பெண் ரமாமணியைவிடப் பன் மடங்கு அதிக அழகுடையவளென்பதை அவன் வேலைக் காரிகளின் மூலமாய் உணர்ந்ததன்றி, கலியாண காலத்தில் நேரில் கண்டு, அதை ஊர்ஜிதப்படுத்திக் கொண்டானாதலால், அத்தகைய அபார அழகு வாய்ந்த பெண்மணியிடம் எவ்விதமான புதிய இன்பம் இருக்குமோ என்ற மனப்பிரமை அவனை முற்றிலும் பித்தனாக்கிக் கொண்டிருந்தது. அதுவுமன்றி, தங்களது ஜென்ம விரோதியான பட்டாபிராம பிள்ளையின் விஷயத்தில் தான் பழிக்குப்பழி வாங்க அதுவே நல்ல காரியமென்று அவன் நினைத்தானாகையால், அந்த இன்பகரமான எண்ணம், அந்தப் பெண்ணிடம் அவன் அடைய எதிர்பார்த்த சுகத்தைப் பன் மடங்கு பெருக்கிக் காட்டியது. ஆகவே, அவன் மனோன்மணி யம்மாளிடம் தான் சோபனக் கலியாணம் நிறைவேற்றுவதைத் தான் தேவேந்திர பதவியை அடைவதைக் காட்டிலும் சிரேஷ்ட மானதாகவும், அதிக இன்பகரமானதாகவும் அவன் மதித்து அதற்காக அவன் ரமாமணிக்குத் தெரியாமல் பெருத்த பெருத்த ஏற்பாடுகளையெல்லாம் ரகசியத்தில் செய்து கொண்டிருந்தான். அந்த நிலைமையில் இடும்பன் சேர்வைகாரன் சென்னையிலிருந்து செவ்வாய்க்கிழமை அன்று வந்த சமாசாரப் பத்திரிகையைக் காட்டி, தான் சென்னையிலிருந்து அபகரித்து வந்தது மனோன்மணியல்ல என்பதைத் தெரிவிக்கவே, அதை உணர்ந்த மாசிலாமணியின் மனப்பிரமையும் ஆவலும் முன்னிலும் பன்மடங்கு அதிகரித்தன. இன்னாள் என்ற தகவலே தெரியாத ஓர் அழகான யௌவன ஸ்திரீ தன்னை மணந்து கொண்டதையும், தான் ஏற்படுத்திய சோபன முகூர்த்தத்திற்கு இசைந்திருப்பதையும் எண்ண எண்ண,

அவளைப் பற்றிய ரகசியம் அதிகரிக்க அதிகரிக்க, அவளது விஷயத்தில் மாசிலாமணியின் மனதில் ஏற்பட்ட கவர்ச்சி முன்னிலும் நூறு மடங்கு அதிகரித்து அவனை வதைக்கத் தொடங்கியது. அன்றைய தினம் இரவில் தனக்குக் கிடைக்கப் போகும் ஆநந்தத்தை அவன் உலகில் எவரும் அநுபவித்தறியாத புதுமையான ஆனந்தமாக மதித்ததன்றி, தன் மனதில் வேறு எவ்வித நினைவையும் கொள்ளாமல் அதே நினைவைக் கொண்டு ஊணுறக்கத்தையும் நாடாமல், தனது விடுதியில் மாறி மாறி உட்காருவதும் நடப்பதுமாய்ப் பொழுதை நலிந்து போக்கிக் கொண்டிருந்ததன்றி, அடிக்கடி தனது வேலைக்காரிகளைக் கூப்பிட்டு, சோபன அறையை அவர்கள் எவ்விதம் சிங்காரிக்க வேண்டுமென்றும், எவ்விதமான பக்ஷண பலகாரங் களை அவ்விடத்தில் வைக்க வேண்டுமென்றும், சோபனப் பெண்ணை எவ்விதமான ஆடையாபரணங்களால் எப்படி அலங்கரிக்க வேண்டுமென்றும் உத்தரவுகள் பிறப்பித்துக் கொண்டிருந்தான். அவன் தனக்குச் சொந்த மனைவி வாய்க்கும் காலத்தில், அவளும் தானும் சயனிப்பதற்காக வேண்டுமென்று பிரத்தியேகமாக ஒரு சயன மாளிகை அமைத்து, அதை அவன் உபயோகப்படுத் தாமல் மூடியே வைத்திருந்தான். அது அந்த மாளிகையில் இரண் டாவது உப்பரிகையின் வடகிழக்கு பாகத்தில் நிரம்பவும் அற்புதமாக அமைக்கப் பெற்றிருந்தது. அந்த சயனக்கிரகம் விசாலமான ஒரு கூடத்தளவு கட்டப்பட்டிருந்தது. அதன் தரையும் சுவர்களும், செங்கல், சுண்ணாம்பு முதலியவற்றால் ஆக்கப்படாமல், பீங்கான் போன்ற வழுவழுப்பான வெள்ளைச் சலவைக்கல்லின் சிறிய சிறிய சதுரத்துண்டுகள் பதிப்பிக்கப்பெற்று முகத்தைக் காட்டும் கண்ணாடிபோல் அமைந்திருந்தன. எங்கு பார்த்தாலும், விநோதமான இங்கிலீஷ் கொடி செடிகள் நிறைந்த பித்தளைத் தொட்டிகளும், இடை இடையே கமகமவென்று மணங்கமழ்ந்த ரோஜா, ஜாதிமல்லிகை, மருக்கொழுந்து, ஸம்பங்கி முதலிய புஷ்பஜாதிகள் குலுங்கி நின்ற வெள்ளித் தொட்டிகளும் அந்தக் கூடத்தில் பத்தி பத்தியாக நிறைந்து, அவை ஓர் உத்தியானவனத்தை வடிகட்டின ஸாரம் போலவும் அதன் உயிர்நிலை போலவும் அமைந்து மனோரம்மியமான குளிர்ச்சி

யையும் மாதுரியமான நறுமணத்தையும் உண்டாக்கிக் கொண் டிருந்தன. அந்த அழகிய கூடத்தின் மேல்பாகம் முழுதும் சிற்றின்ப லீலைகளைக் காட்டிய அதிசயமான உருவங்கள் தங்க ரேக்கினால் இழைக்கப் பெற்றதாய் விளங்கியதோடு, அதில் வெள்ளை, சிவப்பு, ஊதா, நீலம், மஞ்சள் முதலிய எண்ணிறந்த நிறங்களில் மணி மணியாகப் பொருத்தப் பெற்றிருந்த மின்சார விளக்குகளும், இடையிடையே மின்சார விசிறிகளும், ரஸ குண்டுகளும், தங்க ரேக்கினாலான கந்தருவப் பதுமைகளும், ஸ்படிக ரத விளக்குகளும், வால்ஷேட், குளோப்புகளும், எல்லா வற்றையும் பின்னிக் கொண்டிருந்த பெரும் பெரும் செயற்கைப் புஷ்ப ஹாரங்களும் நிறைந்து, மனிதர் படுத்து நிமிர்ந்து பார்த்தால், அவர்களது கண்களையும் மனத்தையும் ஒரே க்ஷணத்தில் காந்தம் போலக் கவர்ந்து கொள்ளும் அபார சக்தி வாய்ந்து அழகுத் திரளாய் விளங்கின. அந்த மாளிகையில் கிழக்குத்திக்கில் இருந்த பூஞ்சோலையைப் பார்த்தபடி அந்த சயனக்கிரகத்தில் அடுத் தடுத்து நான்கு ஜன்னல்கள் அமைந்திருந்தன. மேற்படி ஜன்னல் களில் இரும்புக் கம்பிகளுக்குப் பதில், தடித்த பவளக் கொடிகள் கம்பிகள் போல நறுக்கி நறுக்கி, தங்கமுலாம் பூசப்பெற்ற வெள்ளி நிலையில் பொருத்தப்பெற்று எவ்விடத்திலும் காணப்படாத புதுமையாக இருந்தன. தங்கக்கொடிகளினால் அழகான வேலைப்பாடுகள் செய்யப்பெற்ற தந்தத் தகடுகள் போர்த்தப் பெற்ற அபூர்வமான கதவுகள் மேற்படி ஜன்னல்களின் உட்புறத்தில் காணப்பட்டன. மேற்படி ஜன்னல்களை அடுத்தாற் போல தேர் சிங்காரம் போலவும், முத்துப் பல்லக்குப் போலவும், பளபளவென மின்னிய ரஸமணிகளாலும், மயில் தோகை களாலும் சிங்காரிக்கப்பட்டிருந்த பிரம்மாண்டமான முத்துக்கட்டில் தேவேந்திரனது விமானமோ, அல்லது, மன்மதனது வஸந்த உற்சவப்பளிங்கு மாடமோ என அதிசயக் களஞ்சியமாக அமைந்திருந்தது. அந்த முத்துக்கட்டிலின் மேல்பாகங்களும், நான்கு பக்கங்களும் நவரத்னங்களால் இழைக்கப்பெற்று, சகலமான வசதிகளும் நிறைந்து, ஒரு மகாராஜனது சிம்மாசனம் போல முன் பக்கத்தில் படிகள் பெற்று ஒரே ஜோதி மயமாகக் காணப்பட்டது. அதன் மீது பஞ்சைக் காட்டிலும் அதிமிருது

வானதும் அன்னப்பட்சிகளின் இறகுகளிற்குள் புகையிலும் அதிக நுட்பமாகக் காணப்படுவதுமான பூ மயிர்களே பஞ்சாகக் கொண்டு வெல் வெட்டினால் போர்த்தப் பெற்ற மெத்தை, திண்டுகள், தலையணைகள் நிறைந்திருந்தன. சுவர்கள் முழுவதும் நிலைக்கண்ணாடிகளும் படங்களுமே மயமாக அடர்ந்திருந்தன. புஷ்பத்தொட்டிகளின் பந்திக்கு இடையிடையில் இருந்த இடைவெளிகளில் தரை முழுதும் காலை வைத்ததால் அந்த சுகத்தினால் உடனே தூக்கம் உண்டாகத்தக்க வழுவழுப்பான வெல்வெட்டுகள் போர்த்தப்பெற்ற ரஜாய் மெத்தைகளே நடை பாவாடையாக விரிக்கப்பெற்றிருந்ததன்றி, ஆங்காங்கு சதிபதிகள் பலவித சந்தர்ப்பங்களில் பலவாறாக இருப்பதற்குத் தக்கபடி சொகுஸான ஸோபாக்கள் காணப்பட்டன.

இவ்விதமாக அமைக்கப்பட்டிருந்த நமது மாசிலாமணியின் சயனமாளிகை செவ்வாய்க்கிழமையன்று மற்ற நாட்களைவிடப் பதினாயிர மடங்கு விசேஷமாக அலங்கரிக்கப்பட்டுப் புத்துயிர் பெற்று அமோகமாக விளங்கியது. அந்த மாளிகைக்குள் கோடிக் கணக்கில் பொருத்தப் பெற்றிருந்த மின்சார மணி விளக்குகளும், வால்ஷேட் குளோப்புகளும், ஸ்படிக ஸரவிளக்குகளும் கொளுத் தப்பட்டு, வானவில்லில் காணப்படுவது போன்ற அற்புதமான பல நிறங்களில் அத்யாச்சரியகரமான ஜோதிமயமாக விளங்கின. அதற்கு முன்பே இரண்டு மூன்று பீப்பாய்களில் வந்த புதிய பன்னீரில், பச்சைக் கற்பூரம், குங்குமப்பூ, சந்தனம் முதலிய பரிமளகந்தங்களைக் கரைத்து அந்த மாளிகையின் சுவர்கள், தரை முதலிய சகலமான இடங்களும் அலம்பிச் சுத்தி செய்யப்பட்டன. அங்கு நிறைந்திருந்த பூச்செடிகளுக்கு எல்லாம் அன்றையதினம் தண்ணீருக்குப் பதிலாக பன்னீரே வார்க்கப்பட்டது. அந்த சயனகிரகத்தில் நான்கு மூலைகளிலும் நடுமத்தியிலும் ஐந்து அழகான பெண் சிலைகள் அமைக்கப்பட்டிருந்தன. அந்த ஐந்து சிலைகள் வெறுந்தகடுகளினால் அமைக்கப்பட்டிருந்தமையால், அவற்றின் உள்பக்கம் முழுதும் காலியாக இருந்தன. ஜவ்வாது, புனுகு, அம்பர், அரகஜா முதலிய விலையுயர்ந்த பரிமள கந்தங்கள் ஐந்து விதமான வாசனையுள்ள ஐந்து தினுசு அத்தர் களில் கரைத்து மேற்படி ஐந்து சிலைகளின் உட்புறங்களிலும்

நிரப்பப்பெற்றிருந்தன. நடுமத்தியிலிருந்த சிலையின் தலையிலும், நான்கு மூலைகளிலிருந்த சிலைகளின் மார்பிலும் மகா நுட்பமான துளைகள் நிறைந்த தாமரைப் புஷ்பம் போன்ற வடிவமுள்ள விசையின் வழியாக, புகையிலும் அதிக நுட்பமான அத்தர்த் திவலைகள் அந்த அறை முழுதிலும் ஒரே மாதிரியாகப் பெய்து கொண்டிருந்தமையால், சுவர்கள், பூச்செடிகள், ஸோபாக்கள், சயனமஞ்சம் முதலிய சகலமானவைகளும் வாசனை மயமாக நிறைந்து போயிருந்தன. அதுவும் அன்றி, அன்றையதினம் மாசிலாமணி இரண்டு மூன்று வண்டிகள் காணத்தகுந்த ரோஜாப் புஷ்பங்கள், ஜாதிமல்லி கைப் புஷ்பங்கள், தாமரைப் புஷ்பங்கள் முதலியவைகளைத் தருவித்து அவற்றின் காம்புகள், நரம்புகள், முதலியவைகளைப் போக்கி, மிருதுவான இதழ்களை மாத்திரம் பிரித்தெடுத்து மெத்தையின் மீது கூடை கூடையாகக் கொட்டிப் பரப்பிவிடச் செய்திருந்தான். அவற்றின் இனிய நறுமணமும், அத்தர் பன்னீர் முதலியவற்றின் சுகந்தமும் ஒன்று கூடி மனிதரது மனத்தைப் பரவசப்படுத்தி ஆநந்தசாகரத்தில் ஆழ்த்துவனவாய் நிறைந்து ஜன்னல் திறப்பின் வழியாக வெளியிற் சென்று பல தெருக்கள் வரையில் கமகமவென்று வீசின. மஞ்சத்தின் பக்கத்தில் ஒரு விசாலமான சலவைக்கல் மேஜையின் மீது மாதுரியமான சுவை ததும்பிய பக்ஷண பலகாரங்களும், மிட்டாயி தினுசுகள், குழம்புப்பால், காப்பி, தண்ணீர் முதலியவை வெள்ளிப் பாத்திரங் களில் வரிசை வரிசையாக வைக்கப்பட்டிருந்தன. அதற்குப் பக்கத்தில் காணப்பட்ட இன்னொரு மேஜையின் மீது புதுமை புதுமையான கனிவர்க்கங்கள் கமகமவென்ற மணத்தோடு ஏராள மாகக் குவிந்துகிடந்தன. மஞ்சத்தினருகில் வாசனைத் திரவியங்கள் கலந்த தாம்பூல சாமான்களும், தங்கப்பாளங்கள் போலவிருந்த பொறுக்கிளசு வெற்றிலையும், வெள்ளி பஸ்பமும் வாசனையும் கலந்த வெண்ணெய் போன்ற சுண்ணமும் காணப்பட்டன. இன்னம் வர்ணிப்பில் அடங்காத இவை போன்ற ஏராளமான வஸ்துக்களும், முஸ்தீபுகளும் அந்த மாளிகையில் மாலை ஆறு மணிக்கே நிறைந்து போகும்படி நமது மாசிலாமணி தனது பணி மக்களை ஏவிச் செய்ததன்றி, தானும் அன்றையதினம் மாலையில் சுத்தமாக க்ஷவரம் செய்துகொண்டு, வாசனை கலந்த பன்னீரில்

வெகுநேரம் வரையில் ஊறியிருந்து நீராடி தகத்தகாயமாக மின்னிய பனாரீஸ் பட்டு வஸ்திரமுடுத்தி, கேசத்திற்கு வாசனைத் தைலமூட்டி அழகாய் வாரிவிட்டு, புருவத்தில் ஜவ்வாதணிந்து, கண்ணிமைகளில் மைதீட்டி, நெற்றியில் அம்பர் கலந்த கஸ்தூரி திலகம் வைத்து, காதில் வைரக் கடுக்கன்கள், பத்து விரல்களிலும் வைரமோதிரங்கள், கழுத்தில் வைர ஹாரங்கள், கையில் நவரத்ன மிழைத்த காப்பு கொலுசுகள் முதலிய ஆபரணங்களை நிறைத்துக் கொண்டு ராஜ்ய பட்டாபிஷேகத்திற்கு ஆயத்தமாகும் யுவராஜன் போலத் தேஜோமயமாக விளங்கினான்.

தன்னையும் தனது சயன மாளிகையையும் அவ்வளவு நேர்த்தி யாகவும் அபூர்வமாகவும் அலங்கரித்துக் கொண்ட மாசிலாமணி, அந்த முகூர்த்தத்திற்கு அத்யாவசியமான ஜீவாதார வஸ்துவாகிய சோபனப் பெண்ணை எவ்வளவு புதுமையாகவும் அற்புத மாகவும் அலங்கரிக்கச் செய்திருப்பானென்பது கூறாமலே விளங்கும். நமது கந்தசாமி சிறை வைக்கப்பட்டிருந்த விடுதியில் முன்னர் குறிக்கப்பட்ட வேலைக்காரி அன்றைய தினம் பிற் பகலிலேயே வந்து, இரவு சரியாக எட்டு மணிக்கு நல்ல சுப முகூர்த்த காலம் வருகிறதாகையால், அந்த வேளை தவறாமல் சோபன முகூர்த்தம் நிறைவேற வேண்டுமென்று தமது எஜமானர் தெரிவித்ததாகக் கூறி, ஏராளமான புதிய ஆடைகளையும் ஒரு ஜோடிப்பு வைர ஆபரணங்களையும் கொணர்ந்து வைத்து, அவனது நீரோட்டத்திற்கு வாசனை கலந்த பன்னீரை ஒரு தொட்டியில் நிரப்பிவைத்து, இன்னம் கூந்தல் தைலம், களப கஸ்தூரி முதலிய வாசனைத் திரவியங்களையும், அலங்காரத் திற்குத் தேவையான வஸ்துக்களையும் ஏராளமாகக் கொணர்ந்து பரப்பி, ஸ்நானம், அலங்காரம் முதலியவை நடப்பதற்குத் தானும் உதவி செய்வதாகக் கூறினாள். அதைக் கேட்ட கந்தசாமி மிகுந்த நாணமடைந்தவன் போல நடித்து அந்த வேலைக்காரியை நோக்கி, "சரி! எஜமானருடைய பிரியப்படி நான் ஸ்நானம் அலங்காரம் முதலியவைகளை முடித்துக்கொண்டு தயாராக இருக்கின்றேன். இந்தக் காரியங்களுக்கெல்லாம் வேறே ஒருவருடைய உதவி கூட வேண்டுமா என்ன? எல்லாவற்றையும் நானாகவே சுலபத்தில் முடித்துக் கொள்ளுகிறேன். நீ சரியாக ஏழே முக்கால் மணிக்கு

வந்து என்னை அழைத்துக் கொண்டுபோய்ப் படுக்கையறையில் சேர்த்துவிடு" என்றான். வேலைக்காரி அப்படியே செய்வதாக ஒப்புக் கொண்டு அவ்விடத்தை விட்டு வெளியில் சென்றாள்.

கந்தசாமி உடனே எழுந்து கதவின் உட்புறத்தைத் தாளிட்டுக் கொண்டான். அன்றைய தினம் தனக்கும் மாசிலாமணிக்கும் சோபன முகூர்த்தம் நடக்கப் போகிறது என்பதை எண்ணி, தனக்கு எதிரில் வைக்கப்பட்டிருந்த விலையுயர்ந்த அபாரமான ஆடை ஆபரணங்களைப் பார்க்க, அவன் தனக்குத்தானே சிரித்துக் கொண்டு, "ஆகா என்ன மனிதனுடைய பேதமைத்தனம்! கொஞ்ச நேரத்திற்கு முன் வேலைக்காரி வந்து, படுக்கையறையின் வைபவத்தையும், மாசிலாமணியின் அலங்காரச் சிறப்பையும் வர்ணித்ததைப் பார்த்தால், பரமசிவன் தன்னுடைய கலியாண காலத்தில் அழைத்துக் கொண்டு போன குண்டோதரனைப் போல இவன் இந்த உலகத்திலுள்ள சிற்றின்ப சுகங்களை எல்லாம் ஒரே இரவில் மலை மலையாக அள்ளி விழுங்கி விடுவான் போலல்லவா இருக்கிறது! இவனுடைய ஆசை இருப் பதைப் பார்த்தால், இவன் என்னைக்கூட எடுத்து அப்படியே சாப்பிட்டு விடுவான் போலத் தோன்றுகிறதே! என்ன பைத்தியம் இது! என்ன மனப்பிராந்தி! நம்முடைய முன்னோர்கள் அறி யாமலா இதற்கு சிற்றின்பமென்று பெயர் கொடுத்தார்கள்! ஒரு குடத்தைத் தண்ணீருக்குள் போட்டு ஆழ ஆழ அமுக்கி, தண் ணீரைப் பலமாக உள்ளே தள்ளித் தள்ளி விட்டாலும், அதற்குள் ஒருகுடம் ஜலம் கொள்ளுமே அன்றி நான்கு குடம் நிறையக் கூடிய ஜலம் நுழைந்து கொள்ளுமா? மனிதனுடைய புலன்கள் எவ்வளவு நுட்பமானவை! அவைகள் எவ்வளவு சுகத்தைத்தான் அநுபவிக்கப் போகின்றன! இவ்வளவு அபாரமான ஏற்பாடுக ளோடு சோபன முகூர்த்தம் நிறைவேற்றப் போகும் இவனைவிட, ஒரு குடிசையில் சர்வ சாதாரணமான ஆடையாபரணங்களோடு வரும் தனது யௌவன மனைவியோடு சாந்திமுகூர்த்தம் நடத்தும் ஓர் ஏழையே அதிகமான சந்தோஷத்தை அடைவானென்று நினைக்கவேண்டும். இவனுடைய சயன மாளிகையின் அற்புத அலங்காரமெல்லாம் அந்தக் குடிசையில் இராதென்பது உண்மையே. அவ்விடத்தில் பூமாதேவியின் மடியே பஞ்சணை. ஒரு புதிய கோரைப்பாயே ரோஜா இதழ்.

கூரையில் சிலந்தி பூச்சி கள் கட்டியுள்ள கூடாரங்களே அஸ்மானகிரி. கொசுக்கள் பறந்து வட்டமிடுவதே தோரணங்கள். மூலைக்கொன்றாய்ச் சொருகப் பெற்றிருக்கும் நாலைந்து ஊதுவத்திகளின் வாசனை அற்பமாக இருந்தாலும், எப்போதும் சுத்தமான காற்றைப் பிடித்துப்பழகிய அந்த மணமகனது மூக்கில் அந்த வாசனை நன்றாக உறைத்து அவனுக்கு உண்மையான இன்பத்தை உண்டாக்குவது நிச்சயம். ஆனால் மாசிலாமணியின் சயன அறைக்குள் மனிதர் போய் ஐந்து நிமிஷ நேரம் இருப்பார் களானால், அங்கு விபரீதமாக உண்டாகும் வாசனைப் படலம் தாக்குவதால், மூக்கின் சுரணையே உடனே அற்றுப்போவதன்றி, கொஞ்சநேரத்தில் எரிச்சல் எடுத்துக் கொள்ளும். அளவிற்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷமல்லவா? நல்ல சுத்தமான காற்றில்லாமல், முழுவாசனையையே முகர்ந்து கொண்டு கொஞ்சநேரம் இருந்தால் மனிதன் உடைய உடம்பில் சகிக்க முடியாத வேதனை உண்டாவது நிச்சயம். அந்த நிலைமை யில் அவ்விடத்தில் அபாரமாகக் காணப்படும் மிட்டாயி தினுசு களையும், பழங்களையும் பார்க்கும்போதே குமட்டலுண்டாகும். அவன் எல்லா வஸ்துக்களையும் கண்ணால் பார்ப்பதோடு திருப்தி யடைய வேண்டுமேயன்றி, உண்மையில் அவன் சாப்பிடப் போவது ஒன்றுமில்லை. குடிசையில் நான்கு ஊதுவத்திகளின் வாசனையோடிருப்பவன் தனக்காக வைக்கப்பட்டிருக்கும் அதிரசம், திரட்டுப்பால், பஜ்ஜி முதலியவைகளைப் பூர்த்தியாக உண்டு களிப்பதற்கு எவ்வித இடையூறும் ஏற்படுகிறதில்லை. அவைகளைத் தவிர, இன்னொரு முக்கியமான பேதமுமிருக்கிறது. மாசிலாமணி வாசனைத் திரவியங்கள், தின்பண்டங்கள் இவைகளையெல்லாம் விடுத்து தன்னுடைய புதிய சோபனப் பெண்ணினிடம் நெருங்கிக் கொஞ்ச நேரம் இருப்பானாகில், இவ்வளவுதானா இந்த இன்பம் என்று அவன் நினைத்து உடனே வெறுப்படைந்துவிடுவது நிச்சயம். ஏனென்றால், எவ்வளவு அழகுடைய ஸ்திரீகளாக இருந்தாலும், தூரத்திலிருந்து பார்க்கும் மட்டுமே கவர்ச்சியும் வசீகரமும் இருக்கும் அன்றி, கிட்ட நெருங்கிய பிறகு, அது சாதாரணமாய்த் தோன்றுவது நிச்சயம். இந்த மாசிலாமணி மகா துன்மார்க்கனான காமாதுரன். இவன்

எப்போதும் ஒன்றைக் காட்டிலும் விசேஷமான இன்னொன்றை அநுபவிக்க வேண்டுமென்ற ஆசைகொண்டு எப்போதும் அலைந்து திரிபவன். இப்படிப்பட்ட மனப்போக்கு உடைய மனிதருக்கு ஒரே ஒரு ஸ்திரீயினிடத்தில் நீடித்த வாஞ்சையும், வேரூன்றிய பற்றும் இருப்பது துர்லபம்; ஆகையால், இவன் இவ்வளவு அமர்க்களமான வைபவங்களோடு சோபனம் நடத்தும் புதுப் பெண்ணோடு இவன் ஒரு நாழிகை காலம் இருப்பதற்குள் இவனது மனம் அந்தப் பெண்ணை வெறுத்து, இன்னொருத்தியை நினைத்து ஆசைகொள்ளத் தொடங்கும். ஆகையால், இவனுக்கு எதிலும் திருப்தியும் நீடித்த பற்றும் உண்டாகவே போகிறதில்லை. குடிசையிலிருப்பவன் எவ்விதமான மனப்பான்மையோடு தனது புதிய மனைவியை அடைகிறான்? "இவளே நம்முடைய ஆயுசு காலம் முடிய நம்மோடு கூட இருந்து நம்முடைய சுகதுக்கங்களை எல்லாம் பகிர்ந்து கொள்ளப் போகும் வாழ்க்கைத் துணைவி. கடவுள் தம்முடைய அபாரமான பெருங்கருணையால் இவளே நமக்குத் தகுந்த துணைவியென்று தேர்ந்தெடுத்து அனுப்பி இருக்கிறார். இவளிடம் எவ்விதமான குற்றங்குறைபாடுகள் இருந்தபோதிலும், அவைகளையெல்லாம் அத்தனை அழகாகப் பாவித்து, கடவுள் உதவிய அற்பத்தை நாம் அக்ஷயமாக மதித்து, அதைக் கொண்டே திருப்தியடைந்து, அதனால் உண்டாகும் இன்ப துன்பங்களையே பேரின்பமாக ஏற்று, அதற்கு மேல் வேறெதையுங் கண்டு காமுறாமல் ஒரு நிறையில் நிற்க வேண்டும் என்ற மனப்பான்மையோடு அந்த ஏழை மனிதன் தனது புது மனைவியை அடைகிறான். ஆகையால், அந்தப் புதிய சோபனப் பெண் என்றும் தெவிட்டாத இன்பக் களஞ்சியமாகவும், தன் குலத்தை விளக்கவந்த அருந்தெய்வமாகவும் அவனுக்குத் தோன்றுகிறாள். சுகமென்பது மனது ஏற்படுத்தும் ஒரு பிரமையே அன்றி, உண்மையில் சுகம் அல்லது துக்கம் என்பது பிரத்தியேகமாக எதிலும் கிடையாது. உலக நியாயம் அப்படி இருக்க, இந்த மாசிலாமணி இப்படி எல்லாம் மதியிழந்து சிற்றின்பங்களில் அதிகமான சிற்றின்பம் எவ்விடத்தில் இருக்கிறதென்று தேடியலைந்து திண்டாடுகிறானே! அந்த இன்பம் தன் மனசிலேயே இருக்கிறதன்றி, வெளியுலகத்தில் இல்லை என்பது இந்த மூட

னுக்குத் தெரியவில்லையே! இவனுடைய நிலைமை எவ்வளவு பரிதாபகரமானது. நிஜமான ஒரு ஸ்திரீ இவனுடைய சயன அறையில் வந்து இவனுக்கு மனைவியாக இருந்தால் கூட இவனுக்கு மனத்திருப்தியும் உண்மையான ஆநந்தமும் உண்டாகப் போகிறதில்லையே. இவனைப் போலவே இருக்கும் ஆண் பிள்ளையாகிய என்னை இவன் பெண்பிள்ளை என்று மதித்து மனக்கோட்டை கட்டி என்னிடம் சுகம் அநுபவிக்க ஆவல் கொண்டு துடிதுடித்திருக்கிறானே! என்ன இவனுடைய துரதிஷ்டம்! பணத்தை லக்ஷக்கணக்கில் வாரி இறைத்து மகா பிரமாதமான இத்தனை ஏற்பாடுகளையும் செய்துள்ள இவன் கடைசியில் ஏமாறப் போகிறானே! அப்போது இவனுடைய மனம் எப்படிப் பட்ட சங்கடமடையுமோ தெரியவில்லையே! பேராசை பெரு நஷ்டமென்று, அபாரமான ஆசைகொண்டு ஆகாயத்தில் பறக்கிறவர்களுடைய கதியெலாம் இப்படித்தான் தாங்கமுடியாத பரமவேதனையில் போய் முடியும். இருக்கட்டும். நான் இவனுடைய பிரியப்படியே அலங்காரம் செய்து கொண்டு படுக்கையறைக்குப் போய்ச் சேருகிறேன். என்னிடம் வந்து இவன் என்ன செய்கிறானென்று தான் பார்க்கிறேன்." என்று தீர்மானித்துக் கொண்டவனாய் மாலை வரையில் கட்டிலில் சாய்ந்து ஓய்வடைந்து இருந்துவிட்டு எழுந்து தனது உடைகளை எல்லாம் விலக்கி விட்டு வேலைக்காரியால் நிரப்பப்பட்டிருந்த பன்னீர் நிறைந்த தொட்டியில் இறங்கி நீராடி உடம்பைத் துடைத்துக் கொண்டு மாசிலாமணியால் அனுப்பப்பட்டிருந்த ஆடையை ஆபரணங்களை எல்லாம் எடுத்து அணிந்து கொள்ளத் தொடங்கினான். நமது கந்தசாமி சுத்த வீரத்தன்மை பூர்த்தியாக நிறைந்த ஆண் பிள்ளையாகப் பிறந்திருந்தும், அவனது தேகவனப்பைப் போலவும், முகத்தின் வசீகரத் தன்மையைப் போலவும், மகா அற்புதமான அழகு வாய்ந்த ஒருயௌவன ஸ்திரீக்குக் கூட அமைவது அரிதென்ற விஷயம் முன்னரே கூறப்பட்டதல்லவா. அதனாலேயே அவன் படித்த கலா சாலையில் நாடகம் நடிக்கப்பட்ட காலங்களிலெல்லாம், எந்த நாடகத்திலும் கதாநாயகி வேஷத்திற்கு அவனே பொறுக்கி எடுக்கப்பட்டதன்றி, அழகிலும், நடிப்பிலும், தனக்கு எவருமே

நிகரில்லை என்ற அபாரமான கீர்த்தியையும் அவன் அடைந் திருந்தான். அவனுக்கு வயது சுமார் இருபது ஆகி இருந்தத னாலும், அப்போது அவனது முகத்தில் மீசை முளைக்காதிருந்த மையால், ஸ்திரீகளின் முகத்தைப் போல அவனது முகம் மிருது வாகவும், வழவழப்பாகவும், தளதளப்பாகவும் இருந்தது. ஆகவே ரோஜாப் புஷ்பத்தின் சென்னிறத்தை உள்புறம் அடிக்கடி தோற்றுவித்த தந்தத்தகடு போல அமைந்திருந்த அவனது முகம் வாசனை கலந்த பன்னீரினாலும் சந்தன ஸோப்பினாலும் சுத்தமாக அலம்பப்படவே, அது அப்போதே மலரும் தாமரைப்புஷ்பம் போல புதுத்தன்மையும் அழகும் வசீகரத்தன்மையும் வடி வெடுத் தது போலத் தோன்றியது. இயற்கையிலேயே கன்னங்கரே லென்று அமைந்திருந்த அவனது கண்களும், புருவ விற்களும், முகத்தின் துல்லியமான நிறத்தினால் பன்மடங்கு அதிக வசீகர மாய்த் தோன்றின. அழகிற்கு அழகு செய்வது போல, அவன் தனது கண் இமைகளில் மைதீட்டி, புருவவிற்களில் ஜவ்வாது அணிந்து, நெற்றியில் செஞ்சாந்துத் திலகமிட்டிருந்தது கண் கொள்ளா வைபவமாக விளங்கினதன்றி பெண்தெய்வங்களான பார்வதி, ஸரஸ்வதி, லக்ஷ்மி முதலியோரது அழகும், முக வசீகர மும் இப்படித்தான் இருக்குமோ என்ற சந்தேகத்தையும் உண் டாக்கின. அவனது இடுப்பில், ரோஜா நிறமுள்ள முழு வெல் வெட்டினாலான பாவாடை காணப்பட்டது. அந்தப் பாவாடை யின் கீழ்பாகத்தில் இருந்த ஓரத்தில் அழகான கொடியில் புஷ்பங்கள் மலர்ந்திருப்பது போல தகத்தகாயமான தங்க ஜரிகையினால் நெய்யப்பட்ட மகா வசீகரமான கரை அமைக்கப் பட்டிருந்தது அன்றி, பாவாடையின் உடலில், ஏழுவகை நிறங் களில் தூரதூரமாய் ஜரிகைப் புட்டாக்கள் நெய்யப்பட்டிருந்தன. அந்தப் பாவாடை, சமப்பருமனில் மடிப்பு மடிப்பாகச் சுருண்டு அவனது தேகத்தின் அடிப்பாகத்தை மூடி நிறைந்து அந்த பாகத்தின் அழகைப் பதினாயிரமடங்கு பெருக்கிக் காட்டிக் கொண்டிருந்தது. பாவாடையின் கரைகள் முடியும் இடத்தில் சுவர்ணத்தினாலானவைபோலத் தோன்றிய அவனது மிருதுவான பாதங்களில் பாதசரம், பட்டை கொலுசு, மிஞ்சி, பீலி முதலிய ஆப ரணங்கள் நிறைந்து, அவை தத்ரூபம் பெண்ணின் இன்பமயமான

பாதங்கள் போலவே காண்போரது மனதை பிரமிக்கச் செய்தன. அவனது மார்பு, புஜம், அடிக்கைகள் முதலிய ஸ்தானங்களை மறைத்திருந்த இரவிக்கையும் பாவாடையைப் போலவே ஜரிகைக்கரைகளும் புட்டாக்களும் நிறைந்த விலை மதிப்பற்ற வெல்வெட்டினால் ஆக்கப்பட்டிருந்தனவானாலும், பாவாடையின் ரோஜா நிறத்தின் முன் அதிக வசீகரமாகவும் எடுப்பாகவும் இருக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு, இரவிக்கை பச்சைப் பசேலென்ற பசுமைநிறமுடையதாக இருந்தது. அவன் ஏற்கெனவே உபயோகித்து வந்திருந்த இரண்டு துணிப்பந்து களின் உதவியினால், அவன் தனது மார்பிற்குப் பெண் தோற்றத்தை உண்டாக்கிக் கொண்டான். வெவ்வேறாகத் தோன்றிய பாவாடை, இரவிக்கை ஆகிய இரண்டையும் ஒன்று செய்து, தனது உடம்பைப் பெரிதுபடுத்தி ஒரு ரூபமாய்க் காட்டு வதற்காக, அவன் புதுமையான ஒரு தாவணியைத் தனது பாவாடையின் மேல் பாகத்தில் ஒரு சுற்றுச் சுற்றி அதை மேலாக்குப் போட்டு கழுத்தை வளைத்துக் கொணர்ந்து வலதுபக்கத்தில் தொங்கவிட்டிருந்தான். அந்தத் தாவணி பத்தரைமாற்றுத் தங்கத்தை உருக்கிவார்த்த பாளம் போல பளபளவென்று ஒரே ஜோதிமயமாக இருந்ததானாலும், அது ஒரு நிமிஷம் ஊதா நிறத்தையும், இன்னொரு நிமிஷம் பவுன் நிறத்தையும் மாறி மாறிக் காட்டி மனதை பிரமிக்கச் செய்து கொண்டிருந்ததன்றி, அது புகையினாலானதோ, அல்லது காற்றினாலானதோ, அது இருப்பது பொய்யோ மெய்யோ என்ற சந்தேகத்தை உண்டாக்கத்தக்கதாய் அவ்வளவு மெல்லியதாய் நெய்யப்பட்டிருந்தது. அவன் தனது அபாரமான கருத்த அளக பாரத்தை மினுமினுப்பாக வாரிப் பின்னி விசாலமான ஜடைப் பின்னல் போட்டுப் பின் பக்கத்தில் கணைக்கால் வரையில் தொங்கவிட்டிருந்தான். ஜடைப்பின்னலின் நுனியில் காணப்பட்ட சிவப்பு நாடாவும், இடையிடையில் நட்சத்திரச்சுடர்கள் போலக் காணப்பட்ட வைர ஜடைபில்லைகளும், சிரசின் பின்புறத்தில் காணப்பட்ட சிறிய நவரத்ன இராக்கடியும், அதைச் சுற்றிலும் மிதமாகச் சூட்டப்பட்டிருந்த ரோஜாப்புஷ்பமும் ஜாதிமல்லிகைப் புஷ்பமும் ஒன்றுகூடி, அவனது பின்னழகைக் காண்போர்

அப்படியே மயங்கி ஸ்தம்பித்துப் போகும்படி செய்வனவாய் இருந்தன. அவனது முன்புறத்தில் சிரம், நெற்றி, மூக்கு, செவிகள், கழுத்து, மார்பு, முழங்கைகள், முன்கைகள், விரல்கள் முதலிய சர்வாங்கமும் ஒரே வயிர மயமாக நிறைந்து போனதோடு, அவனது இடுப்பில் பாவாடையின் மீது காணப்பட்ட மகா விநோதமான வேலைப்பாடுகள் நிறைந்த ஒட்டி யாணத்தினால் அவனுக்கு ஏற்பட்ட வசீகரத் தன்மைக்கு நிகர் இந்த உலகத்திலேயே காண்பதரிதென்றே மதிக்க வேண்டும்.

அவ்வாறு இயற்கையழகும் செயற்கை அலங்காரமும் திரண்டு எழிலின் ஸாரமாயும் வசீகரத்தின் வடிவாகவும் இன்பத்தின் திரளாகவும் தோன்றிய நமது கந்தசாமியைக்கண்டு, அவனைப் படைத்த பிரமதேவனும் சிறிதுநேரம் ஸரஸ்வதியை மறந்து அவன் மீது மோகங்கொண்டு அவனை ஆசை நாயகியாய் வைத்துக் கொள்ள அவாக்கொள்வான் என்றால், சேலை கட்டிய ஒரு மரத்தைக் கண்டு மோகங் கொள்ளக்கூடிய நமது மாசிலாமணி அவனைக் காண்பானாயின் அவனது உயிரும் உள்ளமும் எவ்வாறு தவிக்குமென்பது கூறாமலேயே விளங்கும். ஆடைகள் ஆபரணங்கள் முதலியவற்றால் அதிகரித்துக் தோன்றும் பொய்த்தோற்றமாகிய மனிதரது செயற்கை அழகைவிட, நற்குண நல்லொழுக்கமாகிய இயற்கை அழகையே அதிகமாய் விரும்பும் மனப்பான்மையுடைய கந்தசாமியே, அவ்விடத்தில் இருந்த ஒரு நிலைக்கண்ணாடியில், தனது மோகனாவதாரத்தைப் பார்த்து முற்றிலும் பிரமிப்பும் திகைப்பும் அடைந்து, கண்ணாடிக்குள் தோன்றிய தனது சாயலைக் கண்டு மோகித்து, தன்னை மறந்து அதன் முகத்தில் முத்தம் வைப்பவன் போல ஆசையோடு கொஞ்சலாகத் தனது உதடுகளைச் சேர்த்து ரஸமாகச் சுவைத்து நொட்டையிட்டா என்றால், அவனது அழகின் ஒப்புயர்வற்ற கவர்ச்சிக்கு அதைவிட சிலாக்கியமான வேறு அத்தாக்ஷியும் தேவையோ! அவனது அலங்காரம் முடிந்தபோது மாலை ஆறரை மணி சமயமாயிற்று. அவன் அவ்விடத்தில் கிடந்த மஞ்சத்தின் மீது உட்கார்ந்து திண்டுகளில் சாய்ந்த வண்ணம் சிந்தனையிலாழ்ந்து தான் அன்றைய இரவில் எப்படி அவ் விடத்தை விட்டுத் தப்பி வெளியில் போவதென்பதைப்பற்றி எண்ணுவதும், இடை

இடையே, தனது அழகைக் கண்டு தானே வியப்பும் கவர்ச்சியும் கொண்டு தனது கைகளையும் கால் களையும் மாறிமாறிப் பார்ப்பதும், உண்மையில் தான் பெண் தானோ என்று அப்போதைக்கப்போது சந்தேகிப்பதுமாய்த் தனது பொழுதைப் போக்கினான். தனக்கு மனையாட்டியாக வரிக்கப்பட்டிருந்த மனோன்மணியம்மாளைக் கண்டு, அவளது அழகையும் குணா அதிசயங்களையும் நேரில் கண்டு உணரும் பொருட்டு பெண்வேஷந் தரித்துப் போனது, தானே வேறொரு வனுக்கு மனைவி ஆகி சோபன அறைக்குப் போவதற்கு ஆயத்தமாய்த் தன்னைத்தானே நன்றாக அலங்கரித்துக் கொண்டு தயாராய் இருக்கும் படியான அத்தகைய விபரீத நிலைமையில் கொண்டு வந்து விட்டுவிட்டதே என்று நினைத்து நினைத்து அவன் ஆச்சரிய வசத்தனாய் நெடுமூச்செறிந்தான். தான் ஒரு பெண்ணை மணந்து அவளோடு ஏகாந்தமாயிக்கும் காலத்தில் தான் அவ்விதமாகப் பெண்ணுருக்கொண்டு தன்னை அற்புதமாக அலங்கரித்துக் கொண்டு அவளுக்குக் காட்டினால், அவள் எவ்வளவு ஆனந்தமடைவாளென்ற எண்ணம் தோன்றியது. அடுத்த நிமிஷத்தில் அந்த எண்ணம் வேறுவிதமாக மாறியது. தன்னை மணப்பவள் தனது அபூர்வமான எழிலைக் கண்டு, தான் அவ்வளவு அழகாய் இல்லையே என்றும், இவ்வித தேஜஸ் வாய்ந்த புருஷன் தன்னைக் கண்டு எவ்விதம் ஆசைகொள்ளப் போகிறானென்றும் நினைத்து நிரம்பவும் பொறாமை கொண்டு வருந்தி அநாவசியமாகத் தன் மனத்தை வதைத்துக் கொள்வாளே அன்றி, உண்மையில் சந்தோஷமென்பதையே கொள்ள மாட் டாள் என்றும் கந்தசாமி நினைத்தான். பத்மா சூரனை அழிப்ப தற்கு மாத்திரம் மகாவிஷ்ணு மோகனாவதாரம் எடுத்தாரே அன்றி, அந்த அவதாரத்தைத் தமது பத்நியான மகா லக்ஷ்மிக்குக் காட்டி அவளை மகிழ்விக்க நினைக்கவில்லை அல்லவா. அது போல, மனோன்மணியம்மாளை அபகரித்து வரவேண்டுமென்று துராசை கொண்டு ஆள்மாறாட்டமாகத் தன்னை எடுத்து வந்துள்ள பத்மா சூரனான மாசிலாமணியின் எண்ணத்தை மண்ணாக்கி விட்டுப் போவதோடு தான் திருப்தியடைய வேண்டுமன்றி, அதன் பிறகு தனது மனைவிக்குக் காட்டுவதற்காகத் தான் மோகனாவதாரம்

எடுப்பது துன்பத்தில்தான் முடியுமென்று கந்தசாமி எண்ணிக் கொண்டான். அவ்விதமான மன நிலைமையில் அவன் இருக்க, மணி எழரை ஆயிற்று. சோபன அறைக்கு அவனை அழைத்துப் போவதற்காக வேலைக்காரி வந்து சேர்ந்தாள். அவன் நாடகங் களில் கதாநாயகி வேஷம் தரித்து நடித்த காலங்களில், அவனைப் பார்த்த மனிதர்கள் எல்லோரும் அவன் தத்ரூபம் பெண்போலவே இருக்கிறான் என்றும், அவன் ஆணென்று கண்டுபிடிக்க எவரா லும் இயலாதென்றும் அடிக்கடி கூறி அவனை அபாரமாகப் புகழ்ந்ததைக் கேட்டு இருந்தானா தலால், அந்த வேலைக்காரியா வது, மாசிலாமணியாவது, மற்ற எவராவது தனது சூதைக் கண்டு கொள்வார்களோ என்ற அச்சமே அவனது மனதில் சிறிதும் உண் டாகவில்லை ஆதலால், அவன் அற்பமும் விகாரப்படாத முகத் தோற்றத்தோடு, ஒரு ஸ்திரீ எப்படி இயற்கையான நாணம் மடம் அச்சம் பயிர்ப்புடன் நடந்து கொள்வாளோ அவ்வாறே அவன் நடந்து கொண்டான். அதிகப் பழக்கமும் அநுபவமும் இல்லாத புதிய வேஷக்காரர்கள் தமது முகத்தோற்றத்திலிருந்து தாம் ஆண் பிள்ளை என்பதைப் பிறர் கண்டு கொள்வார்களோ என்று அஞ்சித் தமது முகத்தை மறைத்துக் கொள்ள முயல்வது இயற்கை. ஆனால், நமது கந்தசாமியோ அவ்வித பயமும் கிலேசமும் சிறிதுமின்றி நன்றாக நிமிர்ந்து வேலைக்காரியைப் பார்த்தான். அவ்வாறு அவன் பார்த்தது, "சோபன அறைக்குப் புறப்பட்டுப் போக நேரம் ஆய் விட்டதா?" என்று கேட்க அவன் விரும்புகிறானென்பதை எளிதில் காண்பித்தது. அதை உணர்ந்த வேலைக்காரி, "அம்மா! மணி எழரை ஆகிறது. நீங்கள் எழுந்துவந்து சாப்பாட்டை முடித்துக் கொள்ளுங்கள். அதற்குள் ஏழேமுக்கால் மணியாகிவிடும். உடனே நாம் புறப்பட்டுப் போகலாம்" என்றாள்.

உடனே கந்தசாமி, "எனக்கு இன்றையதினம் பசியே உண்டாக வில்லை. மத்தியானம் சாப்பிட்டது வயிற்றில் அப்படியே இருக்கிறது. ஆகையால், இப்போது எனக்கு ஆகாரமே தேவை யில்லை" என்று தனது குரலைப் பெண்ணின் குரல்போல மாற்றிக் கொண்டு பேசினான்.

வேலைக்காரி, "சரி; படுக்கையறையில் வைத்திருக்கும் பக்ஷணங் களை எல்லாம் கொஞ்சம் கொஞ்சம் சாப்பிடுவதற்கு வயிறு வேண்

டுமல்லவா. நீங்கள் இப்போது வேறே எதையும் சாப்பிடாமல் இருப்பதே நல்லது" என்றாள்.

கந்தசாமி புன்னகை செய்து நாணிக் குனிந்தவண்ணம், "சரி, நான் சாப்பிடுவதிருக்கட்டும். நீ அந்த அறையின் அழகை வர்ணித் ததைக் கேட்டது முதல் அதற்குள்ளிருக்கும் வேடிக்கைகளை எல்லாம் பார்க்க வேண்டுமென்ற ஆசை என்னைத் தூண்டுகிறது. நாம் ஏழே முக்கால் மணிக்கு அங்கே போனால், கொஞ்ச நேரத்திற்கு எல்லாம் எஜமானர் வந்துவிடுவார். அதற்குப் பிறகு, நான் அங்கே இருக்கும் வேடிக்கைகளைப் பார்த்துக் கொண்டிருக்க, எனக்கு அவகாசம் கிடைக்காது. ஆகையால், நாம் இப்போதே அங்கே போய்விட்டால், அவர் வருவதற்குள் எல்லாவற்றையும் சுற்றிப் பார்த்து விடலாம்" என்றாள்.

அதைக் கேட்ட வேலைக்காரி சந்தோஷமான முகத்தோற்றத் தோடு பேசத் தொடங்கி, "சரி; போவோம் வாருங்கள். அதுவும் நல்ல யோசனைதான்" என்று மறுமொழி கூறினாள். உடனே கந்த சாமி கட்டிலை விட்டுக் கீழே இறங்கி தத்ரூபம் பெண்ணைப் போல் அன்ன நடையும் அழகு நடையுமாக நடக்கத் தொடங்கி னான். அவனது கால்களிலிருந்த பாதஸரம் கலீர்கலீரென்ற இன்னொலியெழுப்பி சங்கீதம் பாடத் தொடங்கியது. மெட்டிகள் டக் டிக் என்று தாளம் போடவாரம் பித்தன. சுருண்டு சுருண்டு தொங்கிய வழுவழுப்பான புதிய வெல்வெட்டுப் பாவாடை தேர் போல அசைந்தாட, அதன் மேல் தாவணி உராய்ந்து ஸரஸர வென்று ஓசைசெய்ய, தோகை விரித்தாடும் சோலை மயில் போல, நமது போலி மணப்பெண் நாணிக் குனிந்து நடக்க, வேலைக்காரி அவளை நடாத்தி அழைத்துக் கொண்டு போய் இரண்டு மூன்று விடுதிகளுக்கப்பால் இருந்த சோபன அறையை அடைந்து தாளை நீக்கிக் கதவைத் திறந்து அதற்குள் கந்தசாமியை அனுப்பிவிட்டு தான் போவதாகக் கூறிவிட்டு மறுபடியும் கதவை மூடிக்கொண்டு போய்விட்டாள்.

ஒரே ஜோதிமயமாகவும், விநோதக் களஞ்சியமாகவும் காணப் பட்ட சோபன அறைக்குள் நுழைந்த கந்தசாமி, நாற்புறங்களிலும் திரும்பித் திரும்பிப் பார்த்து பிரமித்து சிறிதுநேரம் அப்படியே

ஸ்தம்பித்து நின்றுவிட்டான். அத்தர்களின் வாசனையும், ரோஜா, ஜாதிமல்லிகை முதலியவற்றின் வாசனையும், பன்னீர் முதலிய வற்றின் மணமும் ஒன்றுகூடி அடர்ந்து குபீரென்று அவனது நாசியில் தாக்கி ஒரே நொடியில் அவனது மனத்தை மயக்கின. வெண்கலச்சிலைகள் உதிர்த்துவிட்ட அத்தர்த் திவலைகளும் மின்சார விசிறிகள் சுழல்வதால் உண்டான இனிமையான காற்றும் ஒன்றுகூடி நாற்புறங்களிலும் வந்து அவன் மீது தாக்கவே, அவனது ஐம்புலன்களும் ஒரு நிமிஷநேரம் பிரம்மானந்த நிலை யில் தோய்ந்து நின்றன. அவன் நாலா பக்கங்களிலும் திரும்பி நோக்கி ஆங்காங்கு காணப்பட்ட விநோதங்களை ஒவ்வொன் றாய்ப் பார்த்து இன்புற்றவனாய் நடந்துபோய்க் கட்டிலண்டை நெருங்கி, அதை உற்றுநோக்கி, அதன் அரிய வேலைப்பாடு களைப் பார்த்துப் பார்த்து அளவற்ற ஆச்சரியமும் வியப்பும் அடைந்தவனாய், அந்த விஷயங்களில் மாசிலாமணிக்கு ஏற்பட்டிருந்த உலக அனுபவத்தையும் திறமையையும் தனக்குத் தானே மெச்சிக்கொண்டவனாய், முத்துக்கட்டிலை நன்றாக ஆராய்ச்சி செய்த படி ஐந்து நிமிஷ நேரம் நின்றபின் தற்செயலாக மேல் பக்கத்தில் நிமிர்ந்து பார்த்தான். பார்க்கவே, அவனது வியப் பும் மகிழ்ச்சியும் முன்னிலும் நூறுமடங்கு அதிகரித்து அபாரமாகப் பெருகின. மேலே நோக்கிய தனது விழியை அவ்விடத்தை விட்டு வாங்க வல்லமையற்ற வனாய் நமது கந்தசாமி, "ஆகா! பேஷ்! இவ்வளவு அற்புதமான அலங்காரத்தை நான் என் ஆயிசு காலத்தில் இன்றைய தினந்தான் பார்க்கிறேன். மாசிலாமணியை முட்டாளென்று நினைப்பது சரியல்ல. இவனுடைய மூளை அபாரசக்தி வாய்ந்தது என்பதற்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் இவன் தன்னுடைய திறமையையும் யுக்திகளையும் வேறே உபயோகமான நல்ல வழிகளில் செலவழித்துப் பயன்படுத்தி இருந்தால், உலகு நிறைந்ததும் என்றைக்கும் மாறாததுமான பெரும் புகழை இவன் சம்பாதித்துக் கொண்டிருக்கலாம். அவ்வள வையும் இவன் இப்படிப்பட்ட துன்மார்க்கங்களில் உபயோகிப் பதால், அது குடத்திற்குள் வைத்த விளக்குபோல ஒளிமழுங்கித் தோன்றுவதோடு, அவனுக்கே கெடுதலையும் உண்டாக்குகிறது. இத்தனை ஏற்பாடுகளும் அலங்காரங்களும் ஒரு நாளில் முடியக்

கூடியவைகளா? அல்லது இரண்டு நாள்களில் தான் சேகரிக்கக் கூடியவைகளா? சட்டைநாத பிள்ளையின் காலத்திலிருந்தே இந்த இடம் சிறுகச் சிறுக விருத்தியடைந்து இப்போது இந்த நிலைமைக்கு வந்திருக்க வேண்டும். எவ்வளவோ பிரயாசைப் பட்டு, பணத்தை வாரி இறைத்து இத்தனை ஏற்பாடுகளையும் செய்திருக்கும் இவன் முடிவில் ஏமாற்றமடையப் போகிறானே என்பதை நினைக்க, நினைக்க என் மனம் இவனைக் குறித்து நிரம்பவும் இரங்கி வருந்துகிறது. தனக்குச் சொந்தமல்லாத வஸ்துவைக் கொணர்ந்து வைத்துக் கொண்டு சந்தோஷமடைய வேண்டுமென்று துராசை கொள்வோருடைய கதியெல்லாம் இப்படித்தான் சகிக்க முடியாத துயரமாகவும் ஏமாற்றமாகவும் முடியும்," என்று தனக்குத்தானே நினைத்துப் பலவாறு எண்ண மிட்டிருக்கையில், கடிகாரத்தில் டான் டான் என்று மணி எட்டு அடித்தது. அதே நிமிஷத்தில் அந்த சயனமாளிகையின் கதவை மெதுவாகத் திறந்து கொண்டு மாசிலாமணி உள்ளே நுழைந்தான். நுழைந்தவன் கதவை மறுபடியும் மூடி உட்புறத்தில் தாளிட்டுக் கொண்டு சோபனப் பெண் எங்கே இருக்கிறாளென்று பார்க்க வேண்டுமென்ற ஆவல் கொண்டவனாய்த் தனது பார்வையை நாற்புறங்களிலும் ஒரே நொடியில் சுழற்றிப் பார்த்த வண்ணம் கட்டிலை நோக்கி நடந்தான். கதவு திறந்துகொண்ட உடன் மன்மதாகாரமான அழகிய அலங்காரத் தோற்றத்தோடு உள்ளே நுழைந்த மாசிலாமணியை ஒரே பார்வையில் பூர்த்தியாகப் பார்த்துக்கொண்ட கந்தசாமி சகிக்கவொண்ணாத நாணமும் கூச்சமும் கொண்டவன் போல விரைவாக ஓடி, கட்டிலின் அப்புறத்தில் போய்த் தலைகுனிந்து அப்புறம் பார்த்தபடி நின்று கொண்டான். அவ்வாறு அவன் சென்ற போது அவனது கால்கள், கைகள் முதலிய சர்வாங்கமும் அழகாகவும் வசீகரமாகவும் வளைந்து கொடுத்து தத்ரூபம் உத்தம ஜாதி ஸ்திரீயின் தோற்றத்தை அவனுக்கு உண்டாக்கினவாகையால், அந்த ஒரே ஸாகஸம் மின்னல் தோன்றி மறைவது போல மாசிலாமணியின் உயிரைக் கொள்ளை கொண்டு போயிற்று. சோபனப்பெண் தனது புதிய ஆபரணங்களில், கோடி ரதிதேவிகளின் அழகுகளெல்லாம் ஒன்று சேர்ந்தது போல தெய்விகமான தோற்றத்தோடு

இருக்கிறாளென்பதை சற்றுமுன் வேலைக்காரியிடம் கேட்டுத் தெரிந்து கொண்ட மாசிலாமணி அத்தகைய மனமோகன சுந்தர வடிவத்தைக் கண்டு, அவளால் கிடைக்கப்போகும் நிகரற்ற சுகத்தை அடைய வேண்டுமென்று நினைத்து ஆவல் பெருந்தீயி னால் தகிக்கப்பட்டு அங்கே வந்தான் ஆதலால், அதற்கிணங்க, ஒரே ஜோதியாகத் தனது கண்ணைப் பறித்துக்கொண்டு கட்டிலிற் கப்பால் போய் நின்ற சோபனப் பெண்ணைப் பார்க்கவே அவன் இரண்டொரு நிமிஷநேரம் மதிமயங்கி, உணர்வு கலங்கி, வைத்த விழி வைத்தபடியே நின்று, "ஆகா! என்னுடைய பாக்கியமே பாக்கியம்! இப்படிப்பட்ட மடமயிலை அணையக்கிடைத்த என் தவமே தவம்! ரமாமணி இவளுடைய காலில் ஒட்டிய தூசிக்கும் இணையாகமாட்டாள். அவளுடைய உடம்பு இறுகலாகவும் கை கால்களெல்லாம் கரணை கரணையாக உருண்டு திரண்டு தந்தத் தில் கடைந்தெடுக்கப்பட்டவை போலவும் இருப்பது தனித் தனியான ஓர் அழகாக இருந்தாலும், மொத்தத்தில் அவளுடைய தோற்றம் இவளுடைய தோற்றத்தைப் போல இவ்வளவு அதிகமாக மனசைக் கவரவில்லை. இவளுடைய கைகால்கள் முதலிய ஒவ்வோரங்கமும் அவளுடையது போல உருட்சி திரட்சி யாகவும் தந்தத்தில் கடைந்தெடுக்கப்பட்டவைபோலவும் இருந்தாலும், அவளைக் காட்டிலும் இவள் சிறிது அதிக உயரமாயிருப்பதனால், இவளுடைய தோற்றம் கொடிபோல் இருக்கிறது. பெண்கள் இப்படி இருப்பது தான் அழகு. குழந்தை களை வாரி எடுத்து அணைத்துக் கொள்வதுபோல அவ்வளவு சுலபத்தில் எடுத்து மார்போடணைத்துக் கொள்ளும்படி ஸ்திரீகள் பளுவில்லாமலும் இலேசாகவும் இருக்கவேண்டும். அவளது முகமோ பரந்த வடிவமானது. அமிதமான புத்தசாலித்தனமும் குறும்புத்தனமும் அந்த முகத்தில் வழிகின்றன. இவளுடைய முகமோ அண்டாகாரமாய் இருப்பதோடு மணிப்புறாவின் முகம்போல சாத்வீகத்தையும் உத்தம லக்ஷணங்களையும் காட்டுகிறது. அவளது தோற்றம் மூர்க்கமான ஆசாபாசங்களை வெளிப்படையாகக் காட்டுவதோடு, சமயங்களில் அவள் மகா கொடுமையான கோபம் முதலிய துர்க்குணங்களைக் காட்டக் கூடியவளென்பது நன்றாகத் தெரிகிறது. இவளோ பரிபூர்ணமான

கனிந்த இன்பம் நிறைந்த அமைப்பாய் இருப்பதோடு, அடக்கம் பணிவு சாந்தம் உருக்கம் முதலிய குணங்களின் அவதாரம் போல விளங்குகிறாள். இவ்வளவு சிலாக்கியமான குண விசேஷங் களமையப் பெற்ற இந்த அப்ஸர ஸ்திரீயோடு நான் இரண்டொரு நாள்கள் கூடியிருந்தபின் இவளை விட்டு விடுவதற்கு எப்படி என் மனம் இடந்தரும்! ஒரு நாளும் அதற்கு என் மனம் இணங்காது. நான் ஒரு காரியம் செய்கிறேன். இவளை இங்கேயே ஒளித்து வைத்துவிட்டு, ரமாமணியும் இடும்பன் சேர்வைகாரனும் பட்டணத்திலிருந்து திரும்பி வந்தவுடனே, இவளைக் கொண்டு போய் எங்கேயோ விட்டுவிட்டதாக ரமாமணியிடம் சொல்லி விடுகிறேன். வேலைக்காரிகள், இடும்பன் சேர்வைகாரன் முதலி யோரும் அதுபோலவே சொல்லும்படி ஏற்பாடு செய்து விடுகி றேன். அது உண்மையென்று, ரமாமணி நம்பி அவ்வளவோடு விட்டுவிடுவாள். அவளுடைய பகைமையைச் சம்பாதித்துக் கொள்வதும் உசிதமல்ல. ஏனென்றால், என்னுடைய குடும்ப ரகசியங்களில் பலவற்றை அவள் தெரிந்து கொண்டு இருக்கிறா ளாகையால், அவளால் கெடுதல் நேருவது நிச்சயம். ஆகையால், அவள் நம்பும்படி பொய் சொல்லிவிட்டு, இவளை வெளியில் அனுப்பாமல் இங்கேயே வைத்துக் கொள்ளுகிறேன்." என்று தனக்குள் தீர்மானித்துக் கொண்டவனாய் பாதி மறைந்ததும் பாதி வெளிப்பட்டும் நின்று கொண்டிருந்த பெண் வேஷத்தைப் பார்த்தபடி மகிழ்ச்சியும் பூரிப்பும் நிறைந்தவனாய் மெய்ம்மறந்த நிலைமையில் நடந்துபோய் முத்துக் கட்டிலின் மீது ஏறி உட்கார்ந்து கொண்டு அவளைப் பார்த்தபடி மெதுவாகக் கனைத்துக் கொண்டான்.

அதற்கு முன் பேசிப் பழகாத புதிய பெண்ணினிடம் தான் எப்படிப் பேசுவதென்பதை அறியாமல், அவன் மிகுந்த லஜ்ஜையினால் வதைக்கப்பட்டவனாய் ஐந்து நிமிஷநேரம் தான் என்ன செய்வதென்பதை அறியாமல் தத்தளித்திருந்தான். அவன் மறுபடியும் இரண்டொருதரம் கனைத்துக் கொண்டு சிறிது துணி படைந்து தழுதழுத்த குரலில் பேசத் தொடங்கி, "பெண்ணே! ஏன் அங்கே போய் அப்படி மறைந்து கொண்டு நிற்கிறாய்? உனக்காக

அமைக்கப்பட்டிருக்கும் இந்த சிம்மாசனத்தில் நீ வந்து உட்காரு வதற்குத் தடை என்ன?"என்று கொஞ்சலாகக் கூறினான்.

அந்த வார்த்தைகளைக் கேட்ட போலிச் சோபனப்பெண் வாய் திறந்து மறுமொழி கூற வெட்கினவள் போல நடித்து, சகிக்க வொண்ணாத நாணமும் அச்சமும் கொண்டு தவிப்பவள் போலத் தனது கைகளையும் கால்களையும் உடம்பையும் நெளித்துத் தனது கடைக்கண் பார்வையால் அச்சத்தோடு அவனைப் பார்ப்பதும் கீழே குனிவதுமாய் நின்றான்.

அதைக் கண்ட மாசிலாமணி அவள் நல்ல உத்தம ஜாதி ஸ்திரீ யாதலால், நிரம்பவும் கூச்சமடைந்து தத்தளித்து நிற்கிறாளென்று நினைத்துக்கொண்டு, அவளது மனத்தைத் தைரியப்படுத்த எண்ணி முன்னிலும் பன்மடங்கு அதிகரித்த வாஞ்சை ததும்பிய நயமான குரலில் உருக்கமாகப் பேசத் தொடங்கி, "பெண்ணே! பெண்ணே! உன்னுடைய பெயர் இன்னதென்பது கூடத் தெரியவில்லையே! தெரிந்திருந்தால் அதைச் சொல்லியாவது பிரியமாக உன்னைக் கூப்பிடலாம். அதுவும் தெரியவில்லை! நான் உன்னை வேறே எவ்விதமாகக் கூப்பிட்டால், நீ பேசுவாய் என்பதும் தெரியவில்லை. உன்னை நான் சாதாரணமாக "பெண்ணே!'' என்று கூப்பிடுகிறேனே என்ற கோபமாயிருக்குமா? அப்படியானால் உன்னை 'கண்ணே' என்று கூப்பிடுகிறேன். ஏ கண்ணே! என்னிரு கண்மணியே! எங்கே, வா இப்படி; வந்து என் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு, உன் முகத்தை எனக்குக் காட்டு; தூரத்திலிருந்து உன் முகத்தைப் பார்க்கும்போதே, என் உள்ளம் பூரிக்கிறது. என் தேகம் பரவசமடைகிறது. என் பக்கத்தில் நீ வந்து உட்கார்ந்து உன் முகத்தைக் காட்டுவாயானால், அதைப் பார்த்தவுடனே என் கலியெல்லாம் நீங்கிவிடும் என்பது திண்ணம். தாமரை இதழ் போல மிருதுவாக இருக்கும் உன்னுடைய தேகம் என்மேல் படுமானால், நான் உடனே சாயுஜ்ய பதவி அடைந்தவன் போல ஆவது நிச்சயம். நான் இதற்கு முன் பழகாத புது மனிதனாயிற்றே என்றும், நான் எப்படிப்பட்ட குணமுடைய மனிதனோ என்றும் நீ ஒரு வேளை பயப்படுகிறாய் போலிருக் கிறது. நீ இனி எதைப் பற்றியும் பயப்படவே தேவையில்லை.

என்னை நீ இனி உன்னுடைய அடிமைபோலவே எண்ணிக் கொள்ளலாம். நீ காலாலிடும் வேலையை நான் தலையால் செய்யக் காத்திருக்கிறேன். இனி நீயே என்னுடைய எஜமானி; என்னுடைய அபாரமான சம்பத்து முழுதிற்கும் இனி நீயே உரியவள். என்னுடைய உடல் பொருள் ஆவி ஆகிய மூன்றையும் நான் இந்த நிமிஷம் முதல் உனக்கே கொடுத்துவிட்டேன். உன் முகத்தைப் பார்த்த முதல் அந்த முகத்திலிருக்கும் ஏதோ ஓர் அற்புதமான சக்தி என் மனசைக் காந்தம் போல இழுத்து என்னை உனக்கு அடிமையாக்கி விட்டது. நான் இது வரையில் எத்தனையோ ஸ்திரீகளைப் பார்த்திருக்கிறேன். எவளிடத்திலும் இப்படிப்பட்ட அபூர்வமான முகக் களையை நான் கண்டதே இல்லை. உன் முகத்தில் அவ்வளவு அதிகமாக லக்ஷ்மி விலாசம் ஜ்வலிக்கிறது. உபயோகமற்ற பல ஸ்திரீகளிடத்தில் என் புத்தி சென்று சபலித்தலைகிறதே என்று நினைத்து என்னை ஒழுங்கான நெறிக்குக் கொண்டு வரவேண்டுமென்ற கருத்தோடு கடவுள் இப்படிப்பட்ட தெய்வீகமான முகவிலாஸம் பொருந்திய உன்னைப் பொறுக்கி எனக்கு மனைவியாக அனுப்பி இருக்கிறாரென்றே நினைக்கிறேன். வா இப்படி, கண்ணே! நேரமாகிறது. சரியாக எட்டு மணிக்கு முகூர்த்த காலம் வருகிறதென்று புரோகிதர் சொல்லி இருக்கிறார். இது நம்முடைய ஆயிசு காலம் முழுதையும் பாதிக்கக்கூடிய மகா புனிதமான காரியம். நல்ல காலம் தவறும்படி நாம் விட்டுவிடக் கூடாது; என்ன ஆச்சரியம்! என் மனசை விட்டு நான் இவ்வளவு தூரம் பேசியதைக் கேட்டும், நீ இன்னமும் வெட்கப்படுகிறாயே! கண்ணே! கண்மணியே! ஏழரை மணிக்கே நீ இங்கே வந்து விட்டாயென்று நான் வேலைக்காரியிடத்திலிருந்து தெரிந்து கொண்டேன். அது முதல் நீ நிற்கிறாய்போல் இருக்கிறதே. வெகு நேரமாய் நிற்பதனால் உன்னுடைய உடம்பு தள்ளாடித் தவிக்கி றது நன்றாய்த் தெரிகிறது. கால் கடுக்க நீ நிற்பதைப் பார்க்கப் பார்க்க, என் மனசிற்குக் கொஞ்சமும் தாளவில்லை. உன் உடம்பு தவித்துக் தடுமாறுவதைப் பார்க்க, என் உயிரே துடிக்கிறது. நின்றது போதும், வா இப்படி என் தங்கமே! ஏன் இப்படி மௌனம் சாதித்து என்னை உயிரோடு கொல்லுகிறாய்! நீ இம்மாதிரி மர்மம் பாராட்டி நிற்கும் ஒவ்வொரு நொடிப்பொழுதும்

ஒவ்வொரு கொடிய தேள் கொட்டுவது போல அவ்வளவு வேதனையாக இருக்கிறது. என் கட்டிக் கரும்பே! என் கற்கண்டே! வா இப்படி, நேரமாகிறது" என்று அனலிடு மெழுகுபோல உருகிப் பணிவாகக் கூறினான்.

மாசிலாமணி கூறிய காதற் கனிமொழிகளைக் கேட்ட கந்தசாமி அப்புறம் திரும்பியபடி தனக்குள்ளாகவே நகைத்து, "மகா அயோக்கிய சிகாமணியாகிய இவன் உண்மைபோல எவ்வளவு உருக்கமாகவும் குழைவாகவும் பேசுகிறான்! அறியாத பெண் எவ ளாவது வந்து இவனிடம் அகப்பட்டுக் கொண்டால், அவளைக் கொஞ்ச காலத்திற்குத் தன்னுடைய வலையில் சிக்க வைப்பதற்கு இவன் இப்படிப்பட்ட தந்திரமெல்லாம் செய்து, அவளை ஒரு நிமிஷத்தில் ஏமாற்றி விடுவானல்லவா. மற்ற பெண்பிள்ளை எவளுடைய முகத்திலும் இல்லாத அபூர்வமான லக்ஷ்மி விலாசம் என்னுடைய முகத்தில் இருக்கிறதாம். அதைக் காண, இவனு டைய கலியே நீங்கிவிட்டதாம். இனி நான் இவனுக்கு எஜமானி யாம். இவன் இனி என்னுடைய அடிமையாம். இவனுடைய உடல் பொருள் ஆவி ஆகிய மூன்றையும் எனக்கே அர்ப்பணம் செய்து விட்டானாம். பேஷ்! பேஷ்! நன்றாக இருக்கிறது இவ னுடைய சாகஸம். தமது கோரிக்கையும் மன ஆவலும் தீருகிற வரையில் இவ்விதமான சொற்களை உபயோகிப்பது காமாதுரர் களின் இயல்பென்று நான் எத்தனையோ புஸ்தகங்களில் படித்த பழைய கதைதானே இது. இவன் சொல்லும் வார்த்தைகளை எல்லாம் தண்ணீரின் மேலே தான் எழுதிவைக்க வேண்டும். எட்டாவிட்டால் காலைப்பிடி, எட்டினால் குடுமியைப்பிடி என்று சுலோகம் சொல்லுவார்கள்; அதுபோல, இவனுடைய பிரியப்படி இணங்கி வருகிற வரையில், இவன் அடிமைதான். அதன் பிற கல்லவா இவனுடைய உண்மையான சுயரூபம் வெளிப்படும். இன்றைய இரவு முழுதும் இவன் இப்படித்தான் பிதற்றுவான். பொழுது விடிவதற்குள் இவனுடைய புத்தியும் வார்த்தைகளும் மாறிப்போய் விடும். நாளையதினம் இரவில் இவன் வேண்டா வெறுப்பாக இந்த அறைக்கு வருவான், அதற்கடுத்த நாள் இவனைக் கூப்பிடுவதற்கு சோபனப் பெண் ஓர் ஆளை அனுப்ப வேண்டும். அதற்கடுத்த நாள் இவன், "இதென்னடா சனியன்

தொலையமாட்டேனென்கிறதே" என்பான்; அதற்கடுத்த நான் அடியிலும் உதையிலும் இறங்குவான்; அதற்கடுத்த நாள் பெண்ணை அவளுடைய பிறந்த வீட்டிற்கு அனுப்ப வண்டி தயாரித்து விடுவான். இவனுடைய குணமும், சபலபுத்தியும் உலகப் பிரசித்தமானவைதானே. இன்று கரும்பு, நாளையதினம் இரும்பு, மூன்றா நாள் வேம்பு, அதற்கடுத்தநாள் பாம்பு, அடுத்த நாள் வந்த வழி திரும்பு என்று எண்ணும் மனப்போக்குடைய மனிதப் பதராகிய இவன் ஸ்திரீகளை ஏமாற்றும் விதம் நன்று நன்று! நான் அதிக நேரம் பேசாதிருந்தால் இவன் ஒரு வேளை எழுந்து என்னிடம் வந்தாலும் வருவான். அதற்கு நான் இடம் கொடுக்கக் கூடாது. இவன் பேசியதில் இன்னொரு விஷயமும் ஆச்சரியமாக இருக்கிறது. இவன் பட்டாபிராம பிள்ளையின் மகளாகிய மனோன்மணியம்மாளின் மேல் ஆசை கொண்டு, ஆள்களை அனுப்பி அவளை அபகரித்துவரச் செய்தா என்பது, வேலைக்காரியின் சொல்லிலிருந்து நன்றாகத் தெரிந்தது. அவர்கள் ஆள் மாறாட்டமாக என்னை எடுத்து வந்து விட்டதாக நான் எண்ணினேன். நான் மனோன்மணியம்மாள் போலவே வேலைக்காரியிடம் நடித்தேன். அதையெல்லாம் அவள் இவனிடம் போய்த் தெரிவித்திருப்பாள் என்பது நிச்சயம். அதன் பிறகு, நான் மனோன்மணியம்மாள்தான் என்ற நம்பிக்கையின் மேலே இவன் கலியாணச் சடங்கையும் நடத்தினான். காரியம் அவ்வளவு தூரம் நடந்திருக்க, இப்போது இவன் என்னுடைய பெயர் இன்னதென்பது தெரியவில்லை என்று சொல்லவேண்டிய காரணமென்னவென விளங்கவில்லை. நான் மனோன்மணி யல்ல என்பதை இவன் ஒருவேளை அதற்குப் பிறகு தெரிந்து கொண்டிருப்பானோ என்னவோ தெரியவில்லை; இருக்கட்டும். இவனோடு தந்திரமாகப் பேசி இவன் என்னை யாரென்று எண்ணிக்கொண்டிருக்கிறானென்பதை அறிந்து கொள்வதோடு இவனுக்கு நல்ல புத்தி கற்பித்து வைக்கிறேன்" என்று தீர்மானித் துக் கொண்டு, அப்போதும் உத்தம ஜாதி ஸ்திரீயின் தோற்றத் திற்குச் சிறிதும் பழுதில்லாமல் காணப்பட்டு மெதுவாகத் தனது முகத்தைச் சிறிதளவு நிமிர்த்தி அவனது முகத்தைப் பார்த்து வசீகர மாகப் புன்னகை செய்துவிட்டு மறுபடி தனது முகத்தைக் கீழே

தாழ்த்திக் கொண்டான். அவ்வாறு அவன் மையடர்ந்த தனது கூரிய கருவிழிகளால் பார்த்த மகா அழகான இனிய பார்வை மாசிலாமணியின் மனதை மயக்கி, உணர்வைக் கலக்கி, ஹிருதயத் திற்குள் ஊடுருவிப் பாய்ந்து அவனது உயிரைப் பருகிவிட்டுத் திரும்பி வந்தது. அவனது உள்ளம் பாகாய் உருகியது. வார்த்தை கள் குழறிப்போயின. காமவிகாரம் தலைக்கேறி உச்சிமயிரைப் பிடித்திழுத்தது. ஆயினும், தான் எழுந்து போய் அவளைக் கட்டிலிற்கு அழைத்துக் கொண்டு வரவேண்டுமென்ற துணிபு மாத்திரம் அவனது மனதில் உண்டாகவில்லை. தான் இன்னதைச் செய்வதென்பதை அறியாமல், அவன் சித்திப்பிரமை கொண்ட வன் போலவும், கலக்கமும் ஆவலுமே வடிவெடுத்தது போலவும் சிறிது நேரம் ஸ்தம்பித்து அவனைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்த பின்னர் மறுபடியும் துணிபடைந்து, "கண்ணு! என்னைப் பார்த்து விட்டு ஏன் அப்படியே நின்றுகொண்டு என்னவோ யோசிக்கி றாய்? நான் அங்கே வந்து உன்னை அழைத்துக்கொண்டு வர வில்லையென்று கோபித்துக் கொண்டு நிற்கிறாயா? இன்னம் எவ்வளவு நேரந்தான் நீ வெட்கப்பட்டுக்கொண்டு தூரவே நிற்கப் போகிறாய்? உன் மனசார சம்மதப்பட்டு என்னை நீ கட்டிக் கொண்டாய். இன்று சோபன முகூர்த்தம் நடத்துவதற்கும் நீ இதுவரையில் இணங்கி இருந்தாய். அதற்காக இப்போது ஏழரை மணி முதல் வந்து இங்கே இருக்கிறாய். அதை எல்லாம் பார்த் தால், என்மேல் உனக்குப் பூர்த்தியான பிரியம் ஏற்பட்டிருக்கிறது என்பது நன்றாகத் தெரிகிறது. அப்படி இருந்தும், யாரோ அன்னிய மனிதனைக் கண்டு பயந்து அருவருப்போடு தூர விலகி நிற்பவள் போல எங்கேயோ போய் மூலையில் நின்றுகொண்டிருக்கிறாயே! இது உனக்கு நியாயந் தானா? உன்னை நினைத்து நினைத்து என் பிராணன் எப்படித் துடிக்கிறதென்பதை நீ கொஞ்சமாவது உணரவில்லையே! அல்லது, உணர்ந்து தான், என்மேல் இரக்கங் கொள்ளாமல் இப்படி நிற்கிறாயா? உன் மனமென்ன கல்லினா லானதா? கண்ணே! நேரமாகிறது; முகூர்த்த காலம் தவறிவிடும் போல் இருக்கிறது. என் மனம் படும்பாட்டைக் கண்டு இரங்கி நீ வராவிட்டாலும், முகூர்த்தகாலம் தவறிப்போகக் கூடாது என்ற நம்மிருவருடைய நீடித்த நன்மையைக் கருதியாவது நீ வரக்

கூடாதா? நின்றது போதும்; வா பெண்ணே! உன்னுடைய பெயரைக் கூட நீ இன்னமும் தெரிவிக்க மாட்டேன் என்கிறாயே?''

போலிப்பெண் கட்டிலண்டை வர உத்தேசிக்கிறவள் போல வும், ஆனால், வெட்கத்தினால் பின்னடைகிறவள் போலவும் நடித்துத் தனது கால்களை எடுத்து முன்னும் பின்னுமாக வைத்த வண்ணம் முன்னிலும் பன் மடங்கு அதிக இனிமையாக அவனை நோக்கிப் புன்னகை செய்து கீழே குனிந்து நாணிக்கோணித் தனது குரலைக் கீச்சுக் குரலாகமாற்றி, ஒரு யௌவனப்பெண் பேசும்போது உண்டாகும் கோகிலத்வனி போன்ற கணீரென்ற இனிமையான குரலில் பேசத்தொடங்கி, ''இந்த அடிமையின் மேல் அபாரமான பிரியம் வைத்து எவ்வளவோ பிரயாசைப்பட்டு என்னைக் கொணர்ந்து வைத்திருக்கும் தாங்கள் என்னுடைய பெயரை இன்னமும் தெரிந்து கொள்ளவில்லை என்றால், அதை யார் நம்புவார்கள்!" என்று நிரம்பவும் பணிவாகவும் கொஞ்சலாக வும் மழலையாகவும் கூறினாள்.

அவளது குரலின் இனிமையையும், அவள் நடந்துகொண்ட பணிவான மாதிரியையும், அவளது சொல்லின் நயத்தையும் உணர்ந்து கட்டிலடங்கா மகிழ்ச்சியும் பூரிப்பும் அடைந்த மாசிலா மணி, "கண்ணே! உன்னிடத்தில் நான் பொய் பேசுவேனா? உன் னுடைய பெயர் எனக்குத் தெரிந்திருந்தால், அதை நான் இந் நேரம் ஆயிரம் தரம் சொல்லி இருப்பேனே. பஞ்சாக்ஷரம், அஷ்டாக்ஷரம் முதலிய மந்திரங்களைச் சொல்லி ஜெபித்தால், மனசில் இன்பம் ஊறுமென்று பைத்தியக்காரர்கள் சொல்லிக் கொண்டு திரிகிறார்களே. உன்னுடைய பெயரைச் சொல்லி ஜெபித்துக் கொண்டே இருந்தால் உண்மையில் பேரின்பம் மனசில் சுரக்குமென்பதில் சந்தேகமே இல்லை. மனிதருடைய சகலமான ஆசையையும் பூர்த்தி செய்து, அவர்களுக்குப் பேரின்ப சுகத்தின் தன்மையைக் காட்டக் கூடிய பேசும் தெய்வம் நீயே என்றாலும், அது முற்றிலும் பொருந்தும். அப்படி உன்னுடைய பெயர் இன்ன தென்பது தெரிந்திருந்தால், நான் இந்நேரம் சும்மா இருப்பேனா? பிரமாணமாகச் சொல்லுகிறேன். உன்னுடைய பெயர் எனக்குத் தெரியவே தெரியாது?" என்றான்.

*போலிமணப்பெண்:-* பட்டணத்தில் என்னைக் கண்டு தாங்கள் ஆசைப்பட்டு, என் தகப்பனாருக்குத் தெரியாமல் ஆள்களை விட்டு எடுத்து வந்திருப்பதாகவும், என் பெயர் மனோன்மணி யம்மா என்றும் தாங்கள் சொல்ல அவள் தெரிந்து கொண்டதாக என்னிடம் வேலைக்காரி சொன்னாளே! தங்களுக்கு என் பெயர் தெரியாதென்றால், அந்த விவரத்தை அவள் எப்படிச் சொன்னாள்?

*மாசிலாமணி:-* (புன்னகை செய்து) நான் சொல்வதற்கும் வேலைக்காரி சொன்னதற்கும் வித்தியாசமிருக்கிறது என்பது உண்மைதான். அப்படி வித்தியாசம் ஏற்பட்டதை நீதான் சரியான படி திருத்த வேண்டும். வேலைக்காரி அப்போது தவறாகச் சொன்ன காலத்திலேயே நீ அது தப்பென்று திருத்தி இருக்கவேண்டும். அப்படிச் செய்யாமல், நீ அதுவே உண்மையென்று ஒப்புக் கொள்பவள் போலப் பேசாமலிருந்து விட்டாய். இப்போது என்னிடத்திலாவது நீ உண்மையைச் சொல்ல வேண்டுமல்லவா?

*போலி மணப்பெண்:-* (சிறிது தயங்கி) அப்படியானால் வேலைக்காரி சொன்னது பொய்யென்பது இப்போது தெரிந்து போய்விட்டது போலிருக்கிறது. வேலைக்காரி என்னிடம் சொன்னபோதே அவளிடம் நான் உண்மையைச் சொல்ல எத்தனித்தேன். ஆனால், அதைத் தாங்கள் நிஜமென்று நம்பமாட்டீர்களென்ற பயம் என் மனசில் உண்டானதாகையால் நான் சும்மா இருந்து விட்டேன். ஏனென்றால், சென்னப் பட்டணத்திலிருக்கும் கலெக்டருடைய மகளை எடுத்து வரும்படி நீங்கள் ஆள்களை அனுப்பி இவ்வளவு தூரம் பிரயாசைப் பட்டிருக்கையில், தங்கள் மனம் ஏமாற்றமடையக் கூடாதென்பது என்னுடைய எண்ணம். ஏனென்றால், அந்த ஏமாற்றத்தினால், தாங்கள் ஒருவேளை கடுமையான கோபங்கொண்டு, அதை அநாதையான என்மேல் காட்டி என்னை உபத்திரவிக்கப் போகிறீர்களே என்ற எண்ணத்தினால் கிலிகொண்டு, நடப்பது நடக்கட்டுமென்று நினைத்து, சும்மா இருந்தேன். தாங்கள், எந்தப் பெண்ணின்மேல் ஆசை கொண்டீர்களோ அவள் வேறே ஒருத்தி யென்பதையும், நான் வேறொருத்தி என்பதையும் தாங்கள் தெரிந்து கொண்டிருக்கிறீர்கள் என்பது தாங்கள் பேசுவதிலிருந்து

நன்றாக விளங்குகிறது. தாங்கள் ஆள்களை விட்டு அக்கிரமமாக அபகரித்து வரும்படி தங்களுடைய மனசில் அப்படிப்பட்ட விபரீதமான ஆசையை உண்டாக்கிய அந்தப் பெண்ணைத் தாங்கள் இவ்வளவு சுலபத்திலும் சீக்கிரத்திலும் மறந்து, நான் இன்னாள் என்பதையே தெரிந்து கொள்ளாமல் என்னை உடனே கலியாணம் செய்து கொண்டீர்களே? இது தர்மமாகுமா?

*மாசிலாமணி:–* அந்த விஷயத்திலும் என்னைக் காட்டிலும் நீயே அதிகமான குற்றவாளி என்று நினைக்கிறேன். பட்டணத்திலுள்ள கலெக்டருடைய பெண்ணான மனோன்மணியம்மாளைக் கண்டு நான் ஆசைகொண்டது நிஜமே. ஆனால், என்னுடைய ஆள்கள் அவளை விட்டு தவறுதலாக உன்னை எடுத்துக்கொண்டு வந்து விட்டார்கள். அவர்கள் தவறு செய்துவிட்டார்கள் என்பது, நான் உன்னைக் கலியாணம் செய்து கொண்ட பிறகே எனக்குத் தெரிந்தது. ஆகையால், நான் உன்னை மனோன்மணியென்று நினைத்தே கலியாணம் செய்து கொண்டேன். இன்றைய தினம் சென்னையிலிருந்து வந்த சமாசாரப் பத்திரிகையைப் படித்த பிறகுதான் இவர்கள் ஆள்மாறாட்டாக உன்னை எடுத்து வந்து விட்டார்களென்பதை அறிந்து கொண்டேன். ஆகையால், நான் செய்ததில் தவறு ஒன்றுமில்லை. வேலைக்காரி உன்னிடம் சொன்ன விவரத்தைக் கேட்ட உடனே, நீ உண்மையை வெளியிட பயந்து பேசாமலிருந்து விட்டாயென்று சொன்னதை நான் ஒரு விதத்தில் ஒப்புக் கொண்டதாக நீ நினைத்துவிடக் கூடாது. நீ எவ்வளவுதான் பயந்திருந்தாலும் நான் அந்தப் பெண்ணைக் கண்டு, அவள்மேல் ஆசை கொண்டு, அவளைக் கலியாணம் செய்துகொள்ள வேண்டுமென்று அபகரித்து வந்து இருக்கிறே னென்று வேலைக்காரி சொன்னாளே, கலியாண விஷயம் பெரிய விஷயமல்லவா. உண்மையான வரலாற்றை வெளியிடாம லிருந்தே நீ இந்தக் கலியாணத்தை நிறைவேற்றிக் கொள்ளலாமா? நீ அழகும் நற்குணங்களும் வாய்ந்தவளாய் இருக்கிறாய் என்பதை நான் நேரிலும் வேலைக்காரியின் மூலமாகவும் பின்னால் தெரிந்து கொண்டதனால், நான் என் மனசை ஒரு விதத்தில் சமாதானப் படுத்திக் கொண்டேன். நடந்தபோன தவறை நான் இனி திருத்த முடியாதென்றும், இவளும் நமக்குத் தகுந்தவளே என்றும்

நினைத்து நான் அந்த ஏமாற்றத்தை அவ்வளவாகப் பொருட் படுத்தாமல் மறந்து, அவள்மேல் நான் வைத்திருந்த ஆசையையெல்லாம் உன்மேல் திருப்பினேன். உன்னுடைய யோக்கியதாம்சங்களைக் கண்டபிறகு, உன் விஷயத்தில் என் மனத்தில் அபாரமான வாஞ்சை சுரந்து போய் விட்டதாகையால், உன்னால் ஏற்பட்ட இந்த இரண்டாவது தவறைப் பற்றி உன்மேல் கடுமைகாட்ட என் மனம் சம்மதிக்கவில்லை. பழம் நழுவிப் பாலில் விழுந்ததென்று சொல்லும் பழமொழியை நான் நினைத்து ஒருவிதத்தில் சந்தோஷமடைந்து, உன்னையே என்னுடைய பெண்ஜாதியாக ஏற்றுக்கொள்ளத் தீர்மானித்து உன் பொருட்டு இத்தனை அலங்காரங்களையும் ஏற்பாடுகளையும் செய்திருக் கிறேன். இப்போதாவது உண்மை உனக்குத் தெரிந்ததா? ஆகையால், இனியாவது நீ உன்னுடைய பெயரையும், நீ யார் என்ற விவரங்களையும் சொல்லலாமல்லவா?

***போலி மணப்பெண்:-*** தாங்கள் சொல்வது நிஜமான விஷயம். சென்னப்பட்டணத்தில் இராத்திரி படுத்துத் தூங்கிக் கொண்டிருந்த நான் கண்விழித்துப் பார்க்கையில், முன்பின் தெரியாத ஒரு புதிய இடத்தில் இருக்கிறேன் என்பது தெரியவே, அறியாத பெண் ணான என் மனசில் எவ்வளவு பெருத்த கிலி ஏற்படும் என்பதை நான் சொல்லவேண்டுவதே இல்லை. அதோடு, இவ்வளவு பயங்கரமும் துணிகரமுமான காரியத்தைச் செய்து என்னை அபகரித்துக் கொண்டு வந்திருக்கும் மனிதர் எப்படிப்பட்ட துஷ்டராயும் கொடியராயும் இருப்பாரோ என்ற திகில் என் மனசில் உண்டாகாதா? அப்படிப்பட்ட மனிதரிடத்திலிருந்து நாம் எப்படித் தப்பித்துக்கொண்டு போகப் போகிறோமென்ற மலைப்பும் கவலையும் என் மனசில் உண்டாவது சகஜமல்லவா? கண்ணைக்கட்டி காட்டில் விட்டது போல, இன்ன ஊர், இப்படிப் பட்ட மனிதர் என்ற விவரம் எதையும் அறிந்து கொள்ளக்கூடாத நிலைமையில் நான் இருந்தேன். இது எந்த ஊர், தாங்கள் யார் என்ற விவரங்களையும் எனக்குத் தெரிவிக்கக்கூடாதென்று தாங்கள் கண்டித்திருந்ததாகவும் வேலைக்காரி என்னிடம் சொன் னாள். அதைக் கேட்கவே, என்னுடைய திகலும், கவலையும், மனக்கலக்கமும் ஆயிரமடங்கு அதிகமாய்ப் பெருகிவிட்டன.

தங்களுடைய விவரம் எதையும் எனக்குச் சொல்லாமல், தாங்க்ள் என்னைக் கலியாணம் செய்து கொள்ள எண்ணுகிறீர்களென்று வேலைக்காரி சொன்னதை நான் நம்பவே இல்லை. இப்படிப் பட்ட மனிதர் என்ற விவரம் எதையும் அறிந்து கொள்ளக்கூடாத நிலைமையில் நான் இருந்தேன். இது எந்த ஊர், தாங்கள் யார் என்ற விவரங்களையும் எனக்குத் தெரிவிக்கக்கூடாதென்று தாங்கள் கண்டித்திருந்ததாகவும் வேலைக்காரி என்னிடம் சொன்னாள். அதைக் கேட்கவே, என்னுடைய திகிலும், கவலையும், மனக்கலக்கமும் ஆயிரமடங்கு அதிகமாய்ப் பெருகிவிட்டன. தங்களுடைய விவரம் எதையும் எனக்குச் சொல்லாமல், தாங்கள் என்னைக் கலியாணம் செய்து கொள்ள எண்ணுகிறீர்களென்று வேலைக்காரி சொன்னதை நான் நம்பவே இல்லை. இப்படிப் பட்ட விநோதமான கலியாணம் நம்முடைய நாட்டில் நடந்ததாக நான் கேள்வியுற்றது கூட இல்லை. பெண் வீட்டாரும், பிள்ளை வீட்டாரும், சுற்றத்தாரும், நண்பர்களும், மற்ற ஜனங்களும் அறிய நடத்தும் சடங்கே கலியாணமென்று சொல்லத்தகுந்த தன்றி, இப்படி ரகசியமாகவும், பலாத்காரமாகவும் ஒரு சாராருடைய மனத்திற்கு விரோதமாகவும் பெண்ணைக் கொணர்ந்து வைத்துக் கொண்டு இந்தச் சடங்கை நடத்துவது நியாயப்படி கலியாணத் தில் சேர்ந்ததல்ல. புரோகிதர் கலியாண மந்திரங்களைச் சொல்லு வதும், தாங்கள் என் கழுத்தில் தாலி கட்டுவதும் மாத்திரம் போதுமா? கொல்லத்துக்காரர்கள் நம்முடைய வீடுகளுக்குச் சுவர் வைக்கிறார்களே; எப்படி வைக்கிறார்கள்? வேகவைத்து பஸ்ப ரூபமாய் இருக்கும் சுண்ணாம்புத்தூள் தண்ணீரினால் குழைத்துக் கொள்ளப்படுகிறது. காய்ந்து போயிருக்கும் செங்கல்லிலும் ஜலத்தை வார்த்து அதை நனைத்துக் கொண்டு கொல்லத்துக் காரர்கள் அதையும், சுண்ணாம்பையும் சேர்த்துச் சுவர் வைக்கிறார்கள். இரண்டிலும் நீர்ப்பசை இருந்தால்தானே அவை இரண்டும் ஒட்டிக்கொண்டு, ஒன்றுபட்டு, இறுகி சுவராய் மாறுகிறது. காய்ந்து கிடக்கும் செங்கல்லும், ஜலம் விடப் பெறாத சுண்ணாம்புத் தூளும் ஒட்டுமா? கொல்லத்துக்காரன் அவைக ளிரண்டையும் ஒன்றாய்ச் சேர்த்து வைத்துவிட்டு சுவர் ஆகிவிட்ட தென்றால், உண்மையில் அது சுவர் ஆகுமா? அதுபோல

பெண்வீட்டார் பிள்ளை வீட்டார் ஆகிய இரு வகுப்பாருடைய சம்மதமாகிய பசை இல்லாமல் புரோகிதர் மந்திரத்தை மாத்திரம் சொல்லித் தாலிகட்டச் செய்துவிட்டால், அது கலியாணம் ஆகி விடுமா? பெண் வீட்டாருடைய சம்மதமில்லாமல் பெண்ணுக்குத் தாலி கட்டுவதும், ஒரு கம்பத்திற்குத் தாலி கட்டுவதும் இரண்டும் ஒன்றுதான். ஆகவே, தாங்கள் செய்ய உத்தேசித்ததை நான் உண்மையான கலியாணமென்றே நினைக்கவில்லை. மனோன் மணியம்மாளைக் கொண்டுவந்து வைத்துக் கொண்டு தாங்கள் துரோகிருதமாகப் பெண்டாள உத்தேசித்தீர்கள் என்றே நான் எண்ணிக்கொண்டேன். தங்களுடைய வேலைக்காரி முதல் முதலில் என்னிடம் சொல்லிய வரலாற்றிலிருந்து, தங்களுடைய ஆள்கள் மனோன்மணியம்மாளை விட்டு என்னை ஆள் மாறாட்டமாக எடுத்துக் கொண்டுவந்து விட்டார்களென்பதை நான் உடனே உணர்ந்து கொண்டேனானாலும், நீங்கள் செய்ய உத்தேசித்தாக அவள் சொன்ன இந்த ஒருதலைக் கலியாணத்தை நான் நியாயமான கலியாணமென்றே மதிக்கவில்லையாகையால், தாங்கள் மனோன்மணியம்மாளைக் கொணர்ந்து வைத்துக் கொண்டு துரோகிருதமாகப் பெண்டாள உத்தேசிக்கிறீர்கள் என்ற நினைப்பே என் மனசில் உறுதியாகப்பட்டது. அவளைப் பெண்டாள விரும்பும் தாங்கள் அவளுக்குப் பிரதிநிதியாக வந்திருப்பவளான என்னையும் அதே கதிக்கு ஆளாக்குவது நிச்சயமென்று என் மனசில் பட்டதாகையால், நான் அதைப்பற்றி எவ்வித ஆட்சேபம் சொன்னாலும், அது உங்கள் காதிற்கு ஏற்காதென்றே நான் நினைத்துக் கொண்டேன். தாங்கள் செய்ததைக் கலியாணமென்ற மரியாதையான சொல்லினால் அவள் குறித்தாளானாலும், அதன் அர்த்தம் எனக்குத் துராகிருத சம்பந்தமென்றேபட்டது. ஆகையால் நான் முதலில் வேலைக் காரி இடத்திலும், பிறகு கலியாணச் சடங்கு நடந்த காலத்திலும் எவ்வித ஆட்சேபமும் சொல்லாமல் நடப்பது நடக்கட்டுமென்று பார்த்துக் கொண்டே இருந்தேன்.

*மாசிலாமணி:–* (முற்றிலும் பிரமிப்படைந்து) நீ சொல்லும் நியாயம் நிரம்பவும் ஆச்சரியமாக இருக்கிறதே! நான் அந்த மனோன்மணியம்மாளைக் கண்டு ஆசை கொண்டேன். அவளு

டைய தகப்பனாருக்கும் எங்களுக்கும் பகைமை உண்டாகையால், நான் அவளைக் கலியாணம் செய்து கொள்ள ஆசைப்படுவதாக அவரிடம் தெரிவிப்பது எனக்கு வெட்கமாக இருந்தது. அதுவுமன்றி, வெட்கத்தை விட்டு, நான் அவரிடம் அதைப்பற்றி பிரஸ்தாபித்தாலும் அவர் அதற்கு இணங்கி வரமாட்டார். ஆகவே, நான் அவளை பலவந்தமாக எடுத்து வர நேர்ந்தது. அப்படி எடுத்து வந்ததனால், நான் செய்த சடங்கு கலியாணத்தைச் சேர்ந்ததல்லவென்று சொல்லி விட முடியுமா? நான் ஒழுங்காக நடத்தும் இந்தக் காரியத்தைக் துராகிருத சம்பந்தமென்று நீ சொல்லிவிட முடியுமா? இந்த மாதிரி தாய் தகப்பன்மாருக்குத் தெரியாமல் பெண்ணை எடுத்து வந்து நம் முன்னோர்கள் கலியாணம் செய்து கொண்டதாக நாம் புஸ்தகங்களில் படிக்கிறோம். அதெல்லாம் கலியாணத்தில் சேர்ந்ததல்லவா? அப்படிச் சேர்ந்த தம்பதிகள் உண்மையான புருஷன் பெண்ஜாதியல்ல என்று சொல்ல முடியுமா? அவர்களுக்குப் பிறந்த குழந்தைகள் எல்லோரும் ஒழுங்கான தாய் தந்தையருக்குப் பிறந்தவர்கள் அன்று என்று நினைத்துவிடலாமா? நீ சொன்ன செங்கல் சுண்ணாம்பு உவமானம் இதற்கு எப்படிப் பொருந்தும். அவை உயிரற்றவை. கொல்லத்துக்காரன் எவ்வளவுதான் பிரயாசைப்பட்டாலும் ஜலமாகிய பசையைச் சேர்க்காவிட்டால், அவை சேருவதில்லை. புருஷன் பெண் ஜாதியின் சேர்க்கை அவ்விதமானதல்ல. ஆரம்பத்தில் பெண்ணுக்கு இஷ்டமில்லாது இருக்கலாம். புருஷனோடு பழகப் பழக காலக் கிரமத்தில் அவனிடம் பிரியமும், பற்றும் ஏற்பட்டுப்போகு மல்லவா? அப்போது அவர்களிருவருக்கும் பந்தம் ஏற்பட்டுவிடுமல்லவா?

**போலி மணப்பெண்:-** ஏற்படலாம். அது பெண்ணின் மனவுறுதியையும் மனப்போக்கையும் பொருத்த விஷயம். பெண் உத்தம ஜாதிப் பெண்ணாக இருந்தால், தன்னை இவ்வளவு காலம் வளர்த்து ஆளாக்கியவர்களும், பேசும் தெய்வங்கள் போல இருப்பவருமான தாய் தகப்பன்மாருக்குப் பகைவரான புருஷரை அவர்களும் கடைசிவரையில் பகைத்து வெறுப்பதே நியாயம். அதைவிட்டு, அவர்கள் அந்தப் புருஷருடைய பாந்தவ்

வியத்தையும், அவரால் கொடுக்கப்படும் சுகத்தையும் ஏற்றுக் கொள்ளுவார்களானால், அவர்கள் உத்தம ஜாதி ஸ்திரீகள் ஆகமாட்டார்கள். ஒரு தாசி கேவலம் பணத்தையும் சுகத்தையும் நாடி, இன்னானென்பது தெரியாத ஒரு மனிதனிடம் சம்பந்தம் கொள்வதற்கும் அதற்கும் கொஞ்சம் பேதமில்லை. ஒரு தாசி கூட தமது ஜென்ம விரோதியான ஒரு மனிதனையும் அவனால் கொடுக்கப்படும் பணத்தையும் சுகத்தையும் வெறுத்து உல்லங் கனம் செய்வாளே அன்றி, தன் கௌரவத்தையும் கண்ணியத் தையும் இழந்து விடமாட்டாள். ஆகையால், தாங்கள் சொல்லும் உவமானத்தின்படி காலக்கிரமத்தில் கணவனோடு இணங்கிப் போகும் ஸ்திரீயின் நிலைமை இழிவான ஒரு தாசியின் நிலை மையை விடத் தாழ்ந்ததென்றே கொள்ள வேண்டுமன்றி அதை சாஸ்திரப்படி மணந்துகொண்ட தர்மபத்தினியின் நிலைமையாகக் கொள்ளக்கூடாது.

*மாசிலாமணி:-* (முன்னிலும் அதிகரித்த வியப்பும், திகைப்பும் அடைந்து) அப்படியா! உத்தம ஜாதி ஸ்திரீயாக இருந்தால் அப்படியா நடந்து கொள்வாள்! ஒருவேளை அப்படி நடந்து கொள்வாளோ என்னவோ! நான் ஆண்பிள்ளைதானே; பெண் பிள்ளையாகிய உனக்குத்தான் ஸ்திரீகளின் மனப்போக்கு நன்றாகத் தெரியும். அப்படியே இருக்கட்டும்! நான் செய்த சடங்கு சாஸ்திரப்படி நடத்தப்பட்ட கலியாணமே அல்லவென்று வைத்துக் கொள்வோம். இது துராகிருத சம்பந்தமாகவே இருக்கட் டும். உன்னுடைய அபிப்பிராயம் அது; என்னுடைய அபிப் பிராயம் அதுவல்ல. அது போனால் போகட்டும். நான் மனோன் மணியம்மாளைக் கண்டு அவள் மேல் ஆசைப்பட்டு, அவளைக் கட்டிக்கொள்ள எடுத்துக்கொண்டு வந்திருப்பதாக வேலைக்காரி சொன்னாளே. நீ இந்தச் சம்பந்தத்தை உண்மையான கலியாண மாகவோ, அல்லது, துராகிருத சம்பந்தமாகவோ நினைத்தாலும், நான் ஒருத்தியின்மேல் வைத்த ஆசையை உடனே விலக்கி, இதற்குமுன் பழகாத இன்னொரு புதிய மனுஷியிடம் அந்த ஆசையை வைக்கக்கூடிய மனிதனென்று நீ எப்படி யூகித்துக் கொண்டாய்? நான் கண்ட ஸ்திரீயிடத்திலும் பிரியம் கொள்ளக் கூடிய காமாதுரனென்று நீ நினைக்கலாமா?

*போலி மணப்பெண்:-* தாங்கள் அப்படியெல்லாம் தப்பான வழியில் போகாத மனிதராயிருந்தால், அவர்களுக்குத் தெரியாமல் ஆள்களைவிட்டு மனோன்மணியம்மாளை அபகரித்துக்கொண்டு வரச் சொல்லியே இருக்கமாட்டீர்கள். அதிலிருந்தே தாங்கள் ஸ்திரீ விஷயத்திலும் வேறு எந்த விஷயத்திலும் வரம்புகடந்த எவ்விதச் செய்கைக்கும் ஒருப்படக் கூடியவர்களென்ற எண்ணம் என் மனசில் எப்படியோ உண்டாயிற்று. அது உண்மையென்பதை நீங்களே இப்போது ஒப்புக் கொண்டு விட்டீர்கள்.

*மாசிலாமணி:-* (மிகுந்த பிரமிப்படைந்து) நானே ஒப்புக் கொண்டேனா? நான்தான் நீ அப்படி நினைக்கலாமா என்று கேட்கிறேனே?

*போலி மணப்பெண்:-* கொஞ்ச நேரத்திற்கு முன் சொன்னதை இதற்குள் மறந்துவிட்டீர்களா? நானும், அதிக அழகாகவும் நற்குணங்கள் உடையவளாகவும் இருப்பதால், உடனே தாங்கள் தங்கள் மனசைத் தேற்றிக்கொண்டு, அவள்மேல் வைத்த ஆசையை என் மேல் மாற்றிவிட்டதாகச் சொன்னீர்கள். ஆனால், அதற்குத் தாங்கள் ஒரு சமாதானம் சொல்ல வருவீர்கள். ஆள் மாறாட்டம் ஏற்பட்டிருக்கிற தென்பதைத் தெரிந்து கொள்ளாமல், நான் கலியாணத்தை நடத்தி விட்டேனாகையால், நடந்து போனதை ஏற்கனவே எப்படி மாற்றுகிறதென்று சொன்னீர்களே. அதையே மறுபடியும் சொல்ல வருவீர்கள். ஆகையால், நான் அதைச் சொல்லாமல் விட்டுவிடுகிறேன். தாங்கள் கொஞ்ச நேரத்திற்குமுன், என் முக விலாஸத்தில் ஏதோ புதுமையான கவர்ச்சி இருப்பதாகச் சொன்ன காலத்தில், உபயோகமற்ற பல ஸ்திரீகளிடத்தில் தங்கள் புத்தி சென்று சபலித்தலைகிறதே என்று நினைத்து, தங்களை ஒழுங்கான நெறிக்குக் கொண்டுவர வேண்டுமென்ற கருத்தோடு கடவுள் என்னுடைய முகத்தில் ஏதோ சூட்சுமத்தை வைத்துப் படைத்து அனுப்பியிருப்பதாகச் சொன்னீர்களே, அதிலிருந்து என்ன அர்த்தமாகிறதென்று எண்ணிப் பாருங்கள். தங்கள் மனம் இதற்குமுன் பல ஸ்திரீ களிடத்தில் சபலித்து அலைந்ததென்று அர்த்தமாகவில்லையா? ஒருவேளை தாங்கள் இதற்குமுன் இரண்டு மூன்று பெண்களைக்

கலியாணம் செய்து கொண்டிருந்து, அந்த மனைவிகள் இறந்து போய்விட்டதால், இதை நாலாவது, அல்லது ஐந்தாவது கலியாணமாக நடத்துகிறீர்களோ என்னவோ தெரியவில்லை.

*மாசிலாமணி:-* (வெட்கித் தலைகுனிந்து பிறகு துணிபடைந்து நிமிர்ந்து) பெண்ணே! உன்னுடைய தோற்றத்தைப் பார்த்தால் நீ பரம ஸாதுவாகக் காணப்படுகிறாய்! உன் முகம் நல்ல உத்தம லக்ஷணங்களைக் காட்டுகிறது! உன் வாயிலிருந்து வரும் வார்த்தைகள் நிரம்பவும் கடுமையான வார்த்தைகளாக இருக்கின் றனவே. அதுவுமன்றி, நான் சொல்லும் வார்த்தைகளை நன் றாய்க் கவனித்து முக்கியமானவைகளை எடுத்து வக்கீல் போலக் குறுக்கு விசாரணை செய்யும் கூர்மையான குதர்க்கபுத்தி உனக்கு இருக்கிறதேயன்றி, வார்த்தைகளைச் சந்தர்ப்பத்திற்குத் தகுந்தபடி எப்படி அர்த்தம் செய்துகொள்ள வேண்டுமென்ற பெருந்தன்மை யான விவேகம் உன்னிடத்தில் இல்லைபோலத் தோன்றுகிறது. என் புத்தி பல ஸ்திரீகளிடத்திலும் சபலித்தலைகிறதென்றால், நான் இதற்குமுன் பல ஸ்திரீகளிடத்தில், சிநேகமாயிருந்தேன் என்று அர்த்தம் செய்கிறதா? நான் ஆண்பிள்ளை அல்லவா? நான் லக்ஷம் லக்ஷமாகப் பொருள் படைத்த சீமானல்லவா? எத்தனையோ பெரிய பெரிய தனிகர்கள் தம் தம் பெண்களை எனக்குக் கட்டிக் கொடுப்பதாகப் பிரஸ்தாபம் செய்வது சகஜம்தானே. அந்தப் பெண்களையெல்லாம் நான் பார்த்திருக்கக்கூடாதா? அவர்கள் உபயோக மற்றவர்களாக இருந்தும், என் மனம் அவர்கள்மேல் சென்று சபலித்திருக்கக் கூடாதா?

**போலி மணப்பெண்:-** அப்படி சபலித்திருந்தால், தங்களுக்கு இந்நேரம் கலியாணம் நடந்திருக்காதா? அவர்கள்தான் பெண் கொடுக்க இணங்கி வந்ததாகச் சொல்லுகிறீர்களே. உங்களுக்கும் மனமிருந்தால், கலியாணம் முடிய ஆட்சேபனை என்ன? ஒரு தனிகர் தம்முடைய பெண்ணைத் தங்களுக்குக் கொடுப்பதாகச் சொல்லி முன்வர, அந்தப் பெண்ணின் மேல் தங்களுக்கும் ஆசை ஏற்பட்டுப் போயிருக்க, அதை விட்டு தாங்கள் தங்களுடைய ஜென்ம விரோதியான ஒருவருடைய பெண்ணின்மேல் ஆசை வைத்து அவளைப் பலாத்காரமாய் அபகரித்துவரக் காரணமே இல்லையே.

*மாசிலாமணி:–* (நிரம்பவும் தத்தளித்தவனாய்) ஏதேது! நீ பெருத்த வாயாடியாக இருக்கிறாயே! உன் முகத்தழகைப்போல அகத்தழகும் இருக்குமென்றல்லவா நான் நினைத்தேன். பேஷ்! பேஷ்! நீ பேசுவது நன்றாயிருக்கிறது. உன்னைக் கட்டிக்கொண்டு நான் கடைத்தேறிப் போய்விடலாம். பல தனிகர்கள் எனக்குப் பெண் கொடுக்க முன் வந்திருக்கலாம். அவர்களுடைய பெண்கள் பார்ப்பதற்கு அழகாகவும், நற்குணம் வாய்ந்தவர்களாகவும் இருக்கலாம்; அதனால் அவர்களைக் கண்டு என் மனம் சபலித்திருக்கலாம். ஆனாலும், அவர்கள் ஜாதி மட்டம் என்கிற காரணத்தினாலோ, அல்லது, அது போன்ற வேறு காரணங்களினாலோ அவர்களுடைய சம்பந்தத்தை நான் விலக்க நேர்ந்திருக்கலாமல்லவா? பட்டாபிராம பிள்ளை எங்களுடைய ஜென்ம விரோதியாயிருந்தாலும் அவர் உயர்ந்த ஜாதியைச் சேர்ந்தவர்; பெரிய கலெக்டர் பதவியிலிருக்கும் செல்வச் சீமான்; அவருடைய சம்பந்தம் எல்லா அம்சங்களிலும் சிரேஷ்டமானது. அந்த நிலைமையில் அவருடைய பெண்ணைப் பார்த்து அவளுடைய குணவிசேஷங்களை உணர்ந்து அவள்பேரில் நான் பலமாக ஆசைகொண்டிருந்ததால், நான் அவளைப் பலாத்கார மாகவாவது கொண்டு வராமல் வேறே என்னதான் செய்கிறது? அவளை நான் என்னுடைய பெண்ஜாதியாக அடைந்திருந்தால், நான் என்னைப் பெருத்த பாக்கியவானாகவே எண்ணிக் கொள்வேன். அதற்கு ஒரு பெருத்த சத்துருவாக நீ வந்து சேர்ந்தாய். என்னுடைய ஆள்கள் ஆள் மாறாட்டமாக உன்னை எடுத்து வந்திருந்தால்தான் என்ன? அப்போதே நீ உண்மையைச் சொல்லி இருந்தால் என்னுடைய ஆசை பூர்த்தியாயிருக்கும்; அதைக் கெடுத்தவள் நீதான். அதற்காக நான் உன்னைக் கடுமையாகத் தண்டிக்க வேண்டும்.

*போலி மணப்பெண்:–* (மாசிலாமணியைப் பார்த்து இனிமையாக நகைத்து) ஆகா! அப்படியே செய்யுங்கள்! தாங்கள்தான் என்னுடைய பர்த்தாவாகி விட்டீர்கள். நான் தங்கள் அடிமையாய் விட்டேன். இனி தாங்கள் இந்த ஏழையை எவ்வித ஆக்கினைக்கு உள்படுத்தினாலும், அதையே பெருத்த பாக்கியமாக நான் ஏற்றுக் கொள்ளக் கடமைப்பட்டவள். ஆனால், இதில் இன்னொரு

முக்கியமான சந்தேகமிருக்கிறது. நான்தான் ஏதோ மதியீனத்தினால் உண்மையைச் சொல்லாமல் சும்மா இருந்துவிட்டேன். தாங்கள் மனோன்மணியம்மாளைக் கண்டு அவள் பேரில் பிரியப்பட்டு அவளை அபகரித்து வரச் சொன்னீர்களே. கலியாண காலத்தில் நான் மணையில் வந்து உட்கார்ந்து கொண்டேனே. நான் மனோன்மணியம்மாள் அல்லவென்பது அப்போது தங்களுக்குத் தெரியவில்லையா? கலியாணப் பெண்கள்தான் தலையைக் கீழே குனிந்தபடி உட்கார்ந்து கொண்டிருக்க வேண்டும். புருஷர் கருப்போ சிவப்போ என்பது கூட அவர்களுக்குத் தெரிய ஏதுமில்லை. கலியாண மாப்பிள்ளை பெண்ணின் முகத்தைப் பார்க்காமல் தாலிகட்ட முடியுமா? தாங்கள் தாலி கட்டிய போது கூடவா, நான் மனோன்மணியம்மாள் அல்லவென்பதைத் தெரிந்து கொள்ளவில்லை?

*மாசிலாமணி:–* (திடுக்கிட்டு, சிறிது நேரம் தத்தளித்தவனாய்) ஏதேது! நீ மகா பொல்லாதவளாக இருக்கிறாயே! நீ கேள்விகள் கேட்கிற சாமர்த்தியத்தைப் பார்த்தால், வக்கீல்களெல்லோரும் உன்னிடம் வந்து பிச்சை வாங்கவேண்டும் போல இருக்கிறதே. நீ செய்த தவறைப்பற்றி நான் கேட்டால், என்னையே நீ மடக்கி மடக்கி குறுக்கு விசாரணை செய்ய ஆரம்பித்துவிட்டாயே! இவ்வளவு அபாரமான மனோதிடத்தோடு கேள்விகள் கேட்கும் நீ என் பக்கத்தில் வந்து உட்காருவதற்கு மாத்திரம் ஏன் பயப்பட்டு நாணிக் கோணி அவ்வளவு தூரத்தில் நிற்கிறாய் என்பது தெரிய வில்லை. நீ கேட்கும் சகலமான கேள்விகளுக்கும் நான் திருப்திகரமான உத்தரம் சொல்லுகிறேன். நீ முதலில் என் பக்கத்தில் வந்து உட்கார்ந்துகொள். நீ இவ்வளவு தூரம் வளைத்து வளைத்துப் பேசுகிறாய். உன்னுடைய பெயர் என்ன என்பதைக் கூட நீ இன்னமும் சொன்னபாடில்லையே! உன்னுடைய சாமர்த்தியமல்லவா சாமர்த்தியம். நீ முதலில் இங்கே வந்து உட்காரப் போகிறாயா? இல்லையா? நான் எழுந்து வரட்டுமா? – என்று கூறி, உடம்பைத் தூக்கிக்கொண்டு எழுந்திருக்க எண்ணுகிறவன் போல நடித்து மறுபடி கீழே உட்கார்ந்து கொண்டான்.

முக்கியமான சந்தேகமிருக்கிறது. நான்தான் ஏதோ மதியீனத்தினால் உண்மையைச் சொல்லாமல் சும்மா இருந்துவிட்டேன். தாங்கள் மனோன்மணியம்மாளைக் கண்டு அவள் பேரில் பிரியப்பட்டு அவளை அபகரித்து வரச் சொன்னீர்களே. கலியாண காலத்தில் நான் மணையில் வந்து உட்கார்ந்து கொண்டேனே. நான் மனோன்மணியம்மாள் அல்லவென்பது அப்போது தங்களுக்குத் தெரியவில்லையா? கலியாணப் பெண்கள்தான் தலையைக் கீழே குனிந்தபடி உட்கார்ந்து கொண்டிருக்க வேண்டும். புருஷர் கருப்போ சிவப்போ என்பது கூட அவர்களுக்குத் தெரிய ஏதுமில்லை. கலியாண மாப்பிள்ளை பெண்ணின் முகத்தைப் பார்க்காமல் தாலிகட்ட முடியுமா? தாங்கள் தாலி கட்டிய போது கூடவா, நான் மனோன்மணியம்மாள் அல்லவென்பதைத் தெரிந்து கொள்ளவில்லை?

*மாசிலாமணி:–* (திடுக்கிட்டு, சிறிது நேரம் தத்தளித்தவனாய்) ஏதேது! நீ மகா பொல்லாதவளாக இருக்கிறாயே! நீ கேள்விகள் கேட்கிற சாமர்த்தியத்தைப் பார்த்தால், வக்கீல்களெல்லோரும் உன்னிடம் வந்து பிச்சை வாங்கவேண்டும் போல இருக்கிறதே. நீ செய்த தவறைப்பற்றி நான் கேட்டால், என்னையே நீ மடக்கி மடக்கி குறுக்கு விசாரணை செய்ய ஆரம்பித்துவிட்டாயே! இவ்வளவு அபாரமான மனோதிடத்தோடு கேள்விகள் கேட்கும் நீ என் பக்கத்தில் வந்து உட்காருவதற்கு மாத்திரம் ஏன் பயப்பட்டு நாணிக் கோணி அவ்வளவு தூரத்தில் நிற்கிறாய் என்பது தெரிய வில்லை. நீ கேட்கும் சகலமான கேள்விகளுக்கும் நான் திருப்திகரமான உத்தரம் சொல்லுகிறேன். நீ முதலில் என் பக்கத்தில் வந்து உட்கார்ந்துகொள். நீ இவ்வளவு தூரம் வளைத்து வளைத்துப் பேசுகிறாய். உன்னுடைய பெயர் என்ன என்பதைக் கூட நீ இன்னமும் சொன்னபாடில்லையே! உன்னுடைய சாமர்த்தியமல்லவா சாமர்த்தியம். நீ முதலில் இங்கே வந்து உட்காரப் போகிறாயா? இல்லையா? நான் எழுந்து வரட்டுமா? – என்று கூறி, உடம்பைத் தூக்கிக்கொண்டு எழுந்திருக்க எண்ணுகிறவன் போல நடித்து மறுபடி கீழே உட்கார்ந்து கொண்டான்.

சொல்லிக் கொள்ளுகிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமோ தெரியாதோ! அந்த ஊரிலுள்ள பிச்சைக்காரர்கள் கூட லா பாயிண்ட் பேசிக் கொண்டேதான் பிச்சை கேட்பார்களாம். வீட்டுக்காரர்கள் அவர்களிடம் கூட நிரம்பவும் பயந்து, "ஐயா! தயவுசெய்து போய்விட்டு வாருங்களைய்யா" என்று பணி வாகவும் வணக்கமாகவும் பேசவேண்டுமென்று நான் கேள்வியுற் றிருக்கிறேன். ஏனென்றால் அது இங்கிலீஷ்காரன், சீமான், ஆண் பெண் குழந்தைகள் முதலிய எல்லோரும் சமமான யோக்கி யதையும், சமமான புத்தியும், சமமான மரியாதையும் உடையவர் கள் என்ற கொள்கை வெள்ளைக்காரருடைய தேசங்களிலிருந்து கப்பல் மூலமாக வந்து பட்டணத்தில்தானே முதலில் இறங்கு கிறது. அதனாலேதான் அந்த ஊர் வெளியூர்களை விட இவ்வளவு அதிகமாய் நாகரீகமடைந்திருக்கிறது. நீ அந்த ஊரில் இருப்பவள் ஆகையால், நீ இங்கிலீஷ் பள்ளிக்கூடங்களில் படித்து அந்த பாஷையில் அதிக தேர்ச்சி பெற்றிருக்கிறாய் என்பது நீ பேசுவதிலிருந்தே நன்றாகத் தெரிகிறது. நீ புத்திசாலித்தனமாகக் கேள்விகள் கேட்பதும் அழகாய்த்தானிருக்கிறது. வெளியூர்களில் உள்ள ஸ்திரீகளெல்லோரும் வாய் திறந்து ஒரு வார்த்தை கூட ஒழுங்காய்ச் சொல்லத் தெரியாத சுத்த ஆடுகளாய் இருக்கிறார்கள். அவர்களுடைய கட்சி நியாயமானதாக இருந்தாலும், அதைப் புருஷரிடம் எடுத்துத் தெரிவிக்காமல் பயந்து கொண்டு மௌனமாகவே இருந்து விடுவார்கள். அப்படிக் கம்பங்கள் போல நின்று புருஷருக்குக் கோபம் உண்டாகும்படி செய்து அடியும் உதையும் சாப்பிடுவதை விட நீ பேசுவதுபோல இப்படி கணீர் கணீரென்று ஒவ்வொன்றுக்கும் உத்தரம் கொடுத்தால், அது மனசுக்கு எவ்வளவு திருப்தியாயிருக்கிறது!

***போலி மணப்பெண்:***– (நாணிக் குனிந்து சிறிதுநேரம் மௌனமாய் நின்றபின்) நாணன் இனி பேசுகிறதா பேசக்கூடாதா என்பது தெரியவில்லை. நான் சொன்ன வார்த்தை தங்களுடைய மனசைப் புண்படுத்திவிட்டது போலிருக்கிறது. நான் பேசாமல் வாயை மூடிக்கொண்டிருக்க வேண்டுமென்று பார்த்தாலும், அதுவும் முடியவில்லை. தாங்கள் கேட்பதற்கு நான் பதில் சொல்லாவிட்டால், அதுவும் தங்களை அவமதிப்பதுபோல

இருக்கும்! ஸ்திரீகளின் ஜென்மம் என்ன ஜென்மம்! இரண்டுங் கெட்ட மகா துர்லபமான ஜென்மம். எந்த வழியிலும் போக முடியாத நிர்மூட ஜென்மம். பிறந்தால் ஆண்பிள்ளை சிங்கமாகப் பிறக்கவேண்டும். நான் பட்டணத்தில் இருப்பதால், இங்கிலீஷ் பள்ளிக்கூடத்தில் படித்து மகா மேதாவியாய் விட்டேனென்று தாங்கள் நினைக்கிறீர்கள் போலிருக்கிறது. அப்படி ஒன்றுமில்லை. அங்கே இருக்கிறவர்களும் தங்களைப்போல ஆண் சிங்கங்கள் தானே! அவர்கள் மாத்திரம் தங்களுடைய உரிமைகளும் அதிகாரத்தையும் செல்வாக்கையும் விட்டுக்கொடுத்து விடுவார்களா? இங்கிலீஷ் காரரிடம் உத்தியோகம் பெறவோ, அல்லது, வர்த்தகம் முதலிய இதர ஜீவனோபாயங்களில் அவர்களது தயவை நாடியோ இருந்து அவர்களைப் போலத் தாமும் நடப்பதாகக் காட்டிக் கொள்ளும் சிலர் தான் அந்த மாதிரி நடந்து கொள்ளு கிறார்களே அன்றி, எல்லோரும் தங்களுடைய பெண்களுக்கு இங்கிலீஷ் கற்பிக்கிறதுமில்லை. தங்களுக்குச் சமதையான மரியாதையையும் கொடுக்கிறதில்லை. என் தகப்பனார் என்னைப் பள்ளிக்கூடத்திலேயே வைக்கவில்லை. அவருடைய மனப் போக்கு ஒரு மாதிரியானது; ஸ்திரீகள் ஆண் பிள்ளைகளுக்குச் சமதையாகப் படித்து, அவர்களுக்குச் சமதையாக அறிவு, யூகம் முதலியவைகளை அடைவதும், அவர்களுக்குச் சமதையான மரியாதையைப் பெறுவதும் சில அம்சங்களில் நன்மையாகத் தோன்றுகின்றனவானாலும், முக்கியமான அம்சங்களில் பெருந் தீங்காக முடிகின்றனவென்பது என் தகப்பனாருடைய அபிப் பிராயம். ஆண்பிள்ளைகளுக்குத் தேக பலம், புத்தி தீக்ஷண்யம் முதலிய அம்சங்களினால் கவர்ச்சியும் மேம்பாடும் ஏற்படு கின்றன. அந்த இரண்டு அம்சங்களும் இல்லாவிட்டால், அவர் களுக்கு மதிப்புண்டாகாது. ஸ்திரீகளுக்கு அழகு, மிருதுத் தன்மை, அடக்கம், பணிவு, அறியாமை, மூடத்தனம், பலமின்மை முதலிய குணங்களால் கவர்ச்சியும் மேம்பாடும் ஏற்படுகின்றன. கடவுள் இந்த இருதிறத்தாரையும் இப்படி வெவ்வேறு மாதிரியான அமைப்பாகப் படைத்திருப்பதன் நோக்கம், ஒருவரையொருவர் சார்ந்து, ஒருவரது உதவியை மற்றவர் நாடி, ஒருவருக்கொருவர் ஆதரவாயிருந்து, இருவரும் ஒற்றுமையாக இல்லற வாழ்க்கையை

நடத்த வேண்டும் என்பதே அன்றி வேறல்ல. ஸ்திரீகளிடம் முன் சொல்லப்பட்ட குணங்கள் இல்லாவிட்டால், புருஷர்களது மனதில் அவ்வளவு அதிகமான மன இளக்கமும் கவர்ச்சியும் ஏற்படுவது சந்தேகம். ஒரு ராஜாங்கத்தில் மகா மேதாவிகளான எத்தனையோ ஜனங்கள் இருந்தாலும், அரசன், அல்லது மந்திரி, அல்லது சேனாதிபதி ஆகிய ஒருவனது அதிகாரத்திற்கும், புத்திப் போக்கிற்கும் அடங்கி எல்லா ஜனங்களும் நடந்து கொண்டால் மாத்திரம் ராஜ்யபாரம் நடைபெறுமே அன்றி, எல்லோரும் ஒருவருக்கொருவர், புத்தியிலும் மற்ற எல்லா அம்சங்களிலும் சமதையென்று சொல்லி, எல்லோரும் தத்தம் மனப்போக்கின்படி நடந்தால், அந்தத் தேசம் கலகத்திற்கு இருப்பிடமாய் வெகு சீக்கிரம் அழிந்துபோவது நிச்சயம். அதுபோல ஒவ்வொரு குடும்பத்திலும், தலைவனான புருஷனுக்கு அடங்கியே ஸ்திரீகள் தான் கவனமாக நடந்து கொள்ள வேண்டும். பள்ளிக்கூடத்திற்குப் போகா விட்டாலும் இயற்கையிலேயே சில பெண்களுக்கு நல்ல பகுத்தறிவும், விவேகமும் இருப்பது சகஜமே. அதைக்கூட அவர்கள் தங்கள் புருஷர்களுக்கு எதிரில் காட்டி பகிரங்கப்படுத்திக் கொள்ளாமல் மறைத்து, தங்களை அடக்கி, அவர்களிடம் பணிவாக நடந்து கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அப்படியிருக்க, ஸ்திரீகளை இங்கிலீஷ் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பி, புருஷருக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள கல்வியை அவர்களுக்குப் புகட்டி, அவர்களுக்கு ஆண்பிள்ளைகளின் மனப்போக்கை உண்டாக்கிவிட்டால் குடும்ப வாழ்க்கையில், புருஷர்களுக்கும் அவர்களுக்கும் எப்படி ஒற்றுமை உண்டாகும்? குடும்பம் க்ஷேமகரமாகவும், ஒற்றுமையாகவும் நடந்து அபி விருத்தியடைவதே பிரதானமன்றி, எல்லோரும் தான்தான் அதிக புத்திசாலி என்றும், தான் மற்றவரைப் பணிவது கூடாதென்றும், தனக்கும் சரியான மரியாதையும் கண்ணியமும் ஏற்பட வேண்டுமென்றும் எண்ணி அகந்தை கொண்டு குடும்பத்தைச் சீர்குலைப்பது உசிதமன்று என்பதும், கடவுளின் சிருஷ்டி நோக்கம் அப்படி இருக்குமெனத் தோன்றவில்லை என்பதும் என் தகப்பனாருடைய கொள்கையாகையால், அவர் என்னை எந்தப் பள்ளிக்கூடத்திலும் வைக்கவில்லை. வீட்டிலுள்ள தாய்

தகப்பனாருடைய ஆசார ஒழுக்கங்கள் புத்திப்போக்கு முதலிய வற்றிலிருந்தே நான் எல்லா விஷயங்களையும் தெரிந்து கொண்டேன். அதைத் தவிர, தாங்கள் எண்ணுவது போல, நான் பட்டணம் போக்கிரி என்ற வகுப்பில் சேர்ந்தவளேயல்ல. நான் இப்போது தங்களிடம் சொன்ன வார்த்தைகளிலிருந்து அப்படிப் பட்ட குணம் என்னிடம் இருப்பதாகத் தாங்கள் நினைத்தது என்னுடைய பொல்லாத வேளையின் கூறு என்றே நினைக்கி றேன். இப்போது தாங்கள் பேசியதிலிருந்து எனக்கு இன்னொரு சந்தேகம் உண்டாகிறது. நாம் இருக்கும் இந்த வீடும் பட்டணத்தி லேயே இருக்கிறதென்றும், தாங்களும் பட்டணத்து மனிதர் என்றும் நான் இதுவரையில் எண்ணிக் கொண்டிருந்தேன். இப்போது யோசித்துப் பார்த்தால், இது பட்டணத்திற்கு வெளியிலுள்ள ஏதோ ஒர் ஊர்போல இருக்கிறது. தாங்கள் மனோன்மணியம்மாளைப் பார்த்து ஆசைப்பட்டு அவளை எடுத்துவர ஆளை அனுப்பியதாகச் சொன்னீர்கள். ஆனால், நான் வந்து உங்களுக்குப் பக்கத்தில் மணையில் உட்கார்ந்த காலத்தில், நான் மனோன்மணியம்மாள் அன்றென்பதை நீங்கள் கண்டு கொள்ளவில்லை. இப்போது தாங்கள் சொன்னதிலிருந்து, தாங்கள் வெளியூரிலுள்ளவர்கள் என்பதும் தெரிவதால், அதையும் எண்ணிப் பார்க்க, என் மனம் பலவிதத்தில் சந்தேகம் கொள்கிறது.

*மாசிலாமணி:–* (முன்னிலும் பன்மடங்கு அதிகரித்த வியப்பும் பிரமிப்பும் அடைந்து) என்ன ஆச்சரியம் இது! ஸ்திரீகள் இப்படி யும் பேசுவதுண்டா! அதிலும், சோபன அறைக்கு முதன் முதலாக வந்து, தன்னுடைய புருஷனோடு பேசுவதற்கும், புருஷனைப் பார்ப்பதற்கும் வெட்கி நாணிக்கோணி மூலையில் ஒளிந்து, பின் புறத்தைத் திருப்பிக்கொண்டு நிற்கும் ஒர் அறியாத பெண் சொல்லக்கூடிய வார்த்தையா இது? உன்னைத் தகப்பனார் பள்ளிக்கூடத்தில் படிக்க வைக்கவே இல்லை என்கிறாய்? ஸ்திரீ கள் தங்களுக்கு இயற்கையாக உள்ள புத்திசாலித்தனத்தையும் தம்முடைய பர்த்தாவிற்கெதிரில் அதிகமாக பகிரங்கப்படுத்திக் கொள்ளாமல் அடக்கிக்கொள்ள வேண்டுமென்கிறாய்! ஆனால் நீ செய்யும் யூகங்களும் கேட்கும் கேள்விகளும் என் மனசில் பெருத்த பிரமிப்பை உண்டாக்குகின்றனவே! நீ மணையில்

உட்கார்ந்த காலத்தில், நீ மனோன்மணியம்மாள் அன்றென்று நான் அடையாளங்கண்டுகொள்ளவில்லை என்பதிலிருந்தும், நான் வெளியூரில் உள்ளவன் என்பதிலிருந்தும், உன் மனம் பலவித சந்தேகம் கொள்ளுகிறதென்றாயே. என்ன சந்தேகம் அது?

***போலி மணப்பெண்:***– தாங்கள் இதற்குமுன் அந்த மனோன் மணியம்மாளைப் பார்த்ததே இல்லையென்றும், அவளைக் கண்டு ஆசைப்பட்டு அபகரித்துவரச் செய்தீர்களென்பது சரியல்ல வென்றும் என் மனம் சந்தேகப்படுகிறது. இப்படி நான் நினைப்பதற்கு முக்கியமான இன்னொரு காரணமும் இருக்கிறது; அவள் எப்போதும் தன்னுடைய பங்களாவிற்குள்ளேயே இருக்கிறாள். தன்னுடைய பெட்டி வண்டிக்குள் உட்கார்ந்து பள்ளிக்கூடத்திற்குப் போய்விட்டு நேராக அதே வண்டியில் பங்களாவிற்கு வந்து விடுகிறாள். பட்டணத்திலுள்ளவர்களுக்குக் கூட அவளைப் பார்ப்பது துர்லபமான காரியமென்பது எனக்கு நன்றாகத் தெரியும். அப்படியிருக்க, வெளியூரிலுள்ளவர்களான தாங்கள் அவளைப் பார்த்திருக்கவே சந்தர்ப்பம் இருந்திருக்காது. அப்படித் தாங்கள் அவளைப் பார்த்திருந்தால், இப்போது சுத்தமாக அவளுடைய அடையாளம் தெரியாமல் போயிருக்கவே இருக்காது.

***மாசிலாமணி:***– அப்படியே வைத்துக்கொள். அதனால் என்ன? நான் அவளை எடுத்துவர வேண்டுமென்று ஆள்களை அனுப்ப வில்லை என்றும், உன்னை எடுத்து வருவதற்காகவே ஆள்களை அனுப்பினேனென்றும் நீ நினைக்கிறாயா? உன்னுடைய கருத்து இன்னதெனத் தெரியவில்லையே?

***போலி மணப்பெண்:***– நான் அன்றைய தினம் மத்தியானம் தானே தற்செயலாக அங்கே வந்தேன். என்னை எடுத்துவரத் தாங்கள் ஆள்களை அனுப்பியதாக நான் எண்ணுவேனா? அப்படி நான் எண்ணவில்லை. தங்களுக்கும் அந்தப் பட்டாபிராம பிள்ளைக்கும் ஏதோ பகைமை இருப்பதாகச் சொன்னீர்களே. அந்தப் பகைமையே முக்கியமான காரணமென்று நான் நினைக்கிறேன்; வேறொன்றுமில்லை. மனோன்மணியம்மாளின் மேல் நீங்கள் ஆசைப்பட்டுத்தான் அவளைக் கொண்டுவர வேண்டுமென்பதில் லையல்லவா? பகைவருடைய மகளை பலவந்தமாக அபகரித்து

வந்து மானபங்கப்படுத்தினால், அது அந்தப் பகைவரைத் தண்டித்தது போன்ற ஒரு திருப்தியை உண்டாக்குமல்லவா? அதுவுமன்றி, எனக்கு இன்னொரு சந்தேக மும் தோன்றுகிறது. அந்தப் பெண்ணுக்கு வருகிற வெள்ளிக் கிழமையன்று நிச்சய தார்த்தம் நடக்கப்போகிறது என்பது தங்களுக்குத் தெரிந்திருக்க லாம். ஒருவேளை தங்களுக்கும் அந்த மாப்பிள்ளை வீட்டாருக்கும் பகைமை இருக்கலாம். அவர் களுடைய எண்ணம் நிறைவேறாமல் செய்வதோடு, இரண்டு பகைவரையும் அவமானத்திற்கும், விசனத்திற்கும் ஆளாக்க உத்தேசித்து தாங்கள் அவளை எடுத்து வரச் செய்திருக்கலாமென்றும் நான் நினைக்கிறேன்.

*மாசிலாமணி:–* (மிகுந்த பிரமிப்பும் கலக்கமுமடைந்து) என்ன விநோதம் இது? நீ என் மனதிற்குள் நுழைந்து பார்த்தவள் போல எல்லா விஷயங்களையும் சொல்லுகிறாயே! அப்படியே தான் இருக்கட்டுமே! அதற்கு நான் என்ன செய்யவேண்டுமென்று சொல்லுகிறாய்? நீ சொல்வது உனக்கு இன்னம் அதிக அநுகூலமான விஷயந்தானே. நான் மனோன்மணியம்மாளின் மேல் உண்மையில் ஆசைப்பட்டு, அவள் வராமையால் ஏமாற்றம் அடைந்து, அந்த நிலைமையில் உன்னைக் கட்டிக் கொள்வது நல்லதா? அல்லது, நான் வேறொருத்தியின் மேல் வைத்த ஆசையை மாற்றவேண்டிய துன்பமில்லாமல், புதிதாக உன் மேலேயே ஆசை கொள்வது நல்லதா? நீயே யோசித்துப் பார்.

*போலி மணப்பெண்:–* புதிதாக என்மேல் ஆசை கொள்வது தான் சிலாக்கியமானது. அவள் மேல் ஆசை வைத்ததாகவும், நான் வந்து அதைக் கெடுத்து, அதை என்மேல் திருப்பிக் கொண்டதாகவும் இல்லாத சங்கதியை உண்டாக்கிச் சொன்னீர்களே. அது நல்லதா?

*மாசிலாமணி:–* (வெட்கமும் ஆயாசமும் அடைந்து அசட்டு நகை நகைத்து) ஏதேது, நீ மகா கண்டிப்புக்காரியாக இருக்கிறாயே! உன்னிடம் நான் எவ்விதமான பணிவை எதிர்பார்க்க முடியும் என்பது தெரியவில்லையே! சாதாரணமாக மனிதர் பொய் சொல்வது கூடாது தான். இருந்தாலும் உலகத்தில் எப்போதும் உண்மையையே பேசிய அரிச்சந்திரன் ஒருவன் தானே இருந்தான். மற்ற ஜனங்களில் பெரும்பாலோரும் கபடிகளாகவும்

தந்திரமாக நடப்பவர்களாகவும் இருக்கிறபடியால், இதில் நாம் சுத்த பட்டவர்த்தனமாக நடந்து கொண்டால், அதனால் பல கெடுதல்கள் வந்து சேரும். பிறரைக் கெடுக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு நாம் அபாண்டமான மோசத்திலும் பொய்யிலும் இறங்கக்கூடாது. உலக வியவகாரங்களில், பிறருக்குக் கெடுதலில்லாமல், நம்முடைய காரியங்களை அநுகூலப்படுத்திக் கொள்வதற்கு, நாம் சில சமயங்களில் இப்படி உண்மையை மறைத்துத்தான் நடந்து கொள்ளவேண்டும். முக்கியமாக இது கலியாணமல்லவா. ஆயிரம் பொய் சொல்லி, ஒரு கலியாணத்தை முடி என்று நம்மவர்கள் சொல்வதில்லையா?

***போலி மணப்பெண்:-*** ஆம் வாஸ்தவமே! கலியாணம் செய்வதற்கு முன் பொய் சொல்லலாம் என்றார்களேயொழிய அதற்குப் பிறகு சொல்லும்படி சுலோகம் சொல்லவில்லையே! கலியாணத்திற்குப் பிறகு பொய் சொன்னால், பிரியமும் அன்னியோன்னிய பாவமும் எப்படி ஏற்படும்? கலியாணத்திற்கு முன் சொன்ன பொய்யெல்லாம் மறையும்படி அதன்பிறகு உண்மையாகவும் ஒழுங்காகவும் நடந்து கொண்டால்தான், அவ்வளவு பாடுபட்டுச் சம்பாதித்த பொருளினால் சரியான பலன் பெறலாம். தாங்கள் என்னைக் கலியாணம் செய்துகொண்ட பிறகு இப்போது கொஞ்ச நேரத்திற்கு முன்பல்லவா என்னிடம் பொய் சொன்னது?

***மாசிலாமணி:-*** பேஷ்! பேஷ்! பலே பலே! இப்பேர்ப்பட்ட அபாரசக்தி வாய்ந்த மூளையை வைத்துக் கொண்டிருக்கும் நீ செம்மறியாடு தலையைக் குனிந்து மூலையில் ஒதுங்கி நிற்பதைப் போல நாணிக்கோணி விகாரமாக நிற்பதைப் பார்க்க, என் மனம் நிரம்பவும் பிரமிப்பை அடைகிறது. ஆணாகப் பிறக்க வேண்டிய நீ தவறிப் போய்ப் பெண்ணாகப் பிறந்துவிட்டாய் என்றே நினைக்கிறேன். மற்ற எல்லாப் பெண்களையும் விட அதிக அழகாயும் அதிக முகவசீகரத்தோடும் உன்னைப் படைத்த பிரமதேவன் உன் முக வசீகரத்தைக் கண்டு மதிமயக்கம் அடைந்து, ஆண் பிள்ளைக்கு வைக்கவேண்டிய மூளையை மறதியாய் உனக்கு வைத்துவிட்டானென்றே நினைக்கிறேன். இப்படி அவன்

செய்த தவறு உனக்கு நிரம்பவும் பிரதிகூலம் உண்டாக்கக் கூடியதாக இருக்கிறது. இப்படிப்பட்ட அபார சக்தி வாய்ந்த மூளையை அவன் ஓர் ஆண்பிள்ளைக்கு வைத்திருந்தால் அந்த ஆண்பிள்ளை மகாமேதாவியாக இருப்பதோடு, உன்னதமான பதவியில் இருக்கும் நியாயாதிபதி, வக்கீல் முதலிய ஸ்தானங் களை வகிப்பவற்குத் தகுந்தவனாக இருப்பான். இப்படிப்பட்ட பிரமாதமான அறிவு உனக்கு இருப்பது எப்படி இருக்கிறது என்றால், அறுசுவையும், மாதுரியமான மணமும் நிறைந்த சிலாக்கியமான பஞ்சாமிர்தப் பரமான்னங்கள் ஏராளமாகப் பரிமாறப்பட்டிருக்கும் இலையின் நடுவில் கொஞ்சம் விஷத்தை வைத்தது போல இருக்கிறது. அறிவு முதிர்ச்சி பெறாத ஒரு குழந்தையைக் காணும்போது, அதை எடுத்து அணைத்துக் கொள்ளவும், அதற்கு முத்தம் கொடுக்கவும் வேண்டுமென்ற கட்டுக்கடங்காத ஆவலும், வாஞ்சையும் நம்முடைய மனசில் சுரந்து கரை புரண்டு ஓடுகின்றன. அந்தக் குழந்தை ஊறிக் குளறி மழலையாகப் பேசும் வார்த்தைகளைக் கேட்பது தேவாமிருதம் சாப்பிடுவதைவிட அதிக இனிப்பாகத் தோன்றுகிறது. அதே குழந்தை ஐந்தாறு வயது அடைந்து, அறிவு முதிர்ச்சி பெற்று விடுமானால், அதன் ஒழுங்கான சொற்கள் சர்வ சாதாரணமாகப் போய்விடுகின்றன. அதற்கு முன் நம்மனதில் உண்டான இன்பம் பிறகு உண்டாகிறதில்லை. அதை எடுத்து முத்தமிடவேண்டு மென்ற ஆசையும் உண்டாகிறதில்லை. இது போலவே, ஸ்திரீ களின் தன்மையும். பேதைமை என்பது மாதர்க்கணிகலம் என்கிற படி அவர்கள் குழந்தைகளைப் போல பரப்பிரம்ம ஸ்வரூபிகளாய் இருந்தால்தான், ஆண்பிள்ளைகளுக்கு அவர்களிடம் கரைபுரண் டெழும் பிரேமையும் வாத்சல்யமும் உண்டாகும். அவர்கள் அச்சமும் கிலேசமும் இல்லாதவராய்ப் பெண்பாலாரிடம் குழந்தை போலக் கொஞ்சி விளையாடுவர். புருஷன் சயனக் கிரகத்தில் பெண்பாலாரோடு நடத்தும் சம்பாஷணைகளும், காரியங்களும், விவேகமும், அர்த்தம் அற்ற குழந்தை விளையாட்டு கள் ஆகையால், அவைகள் பரம ரகசியமாக இருக்க வேண்டும் என்றும், வெளியில் தெரிந்தால் வெட்கக்கேடென்றும் பெரியோர் ஏற்படுத்தி இருக்கிறார்கள். ஆகையால், ஸ்திரீகள் வக்கீல்களைப்

போலக் குறுக்கு விசாரணை செய்து புருஷரோடு குதர்க்கவாதம் செய்கிறவர்களாய் இருந்தால், புருஷருக்கு அவர்களிடம் மன இளக்கமும், வாஞ்சையும் கொஞ்சமும் உண்டாக ஏதுவில்லை. உன்னுடைய அழகையும் முகவிலாசத்தையும் கண்டு என் மனம் உன்மேல் பிரமாதமாக லயித்துப் போயிருந்தது. அந்த நிலைமையில் நான் இங்கே வந்து உன்னைப் பார்த்தேன். நீ நாணிக் கோணி மூலையில் ஒதுங்கி நின்ற நிலைமை என்னுடைய உயிரையும் மனசையும் முன்னிலும் நூறு மடங்கு அதிக உரமாகக் கொள்ளை கொண்டது. அந்த நிலைமையில் நீ குழந்தை போல நடந்து என்னிடம் வந்து விளையாடி இருந்தால், அந்தச் சுகத்தை நான் தேவேந்திர போகமாய் மதித்திருப்பேன். அது அர்த்தமற்ற சிற்றின்பமாய் இருந்தாலும், அது தேவாமிருதம் போல இனித்திருக்கும். அதை விட்டு, நீ நல்ல கருத்தோடும் அதிக விவேகத்தோடும் பேசி வாக்குவாதம் செய்ததைக் கேட்கக் கேட்க, இப்போது என் மன நிலைமை எப்படி மாறிவிட்டது தெரியுமா? கைபட்டால் குற்றம் கால் பட்டால் குற்றம் என்று இப்படி பச்சை மிளகாய் போல நடந்து கொள்ளும் இந்த மனுஷியிடம் நாம் வெட்கத்தை விட்டு எப்படி விளையாடி சந்தோஷமாக இருக்கிறது என்ற பயம் என் மனசில் உண்டாகி விட்டது. உன்னைக் கூப்பிட்டு என் பக்கத்தில் உட்கார வைத்துக் கொள்ளவும் உன்னைத் தொடவும் என் மனம் கூசுகிறது. நீ பகுத்தறிவற்ற ஒரு குழந்தையைப் போல நடந்து என் மனதை சந்தோஷப்படுத்தி இருந்தால், நீ என்னுடைய உயிரைக் கேட்பதானாலும், நான் கொடுக்கக்கூடிய மனநிலைமை எனக்கு ஏற்பட்டிருக்கும். இப்போது என்ன எண்ணம் உண்டாகிறது தெரியுமா? உன் வாயாடித்தனத்தை அடக்க வேண்டும் என்றும், நீ இனி எப்போது அசதி மறதியாய்த் தப்பாகப் பேசுவாய் என்று பார்த்திருந்து, அதை வைத்துக் கொண்டு உன்னை நன்றாகத் தண்டிக்க வேண்டும் என்றும் என் மனம் நினைக்கிறது. உன் னுடைய அபாரமான புத்திக் கூர்மையினால் உனக்கு ஏற்பட்ட அனுகூலத்தைப் பார்த்துக் கொண்டாயா? ஆயிரம் பொய் சொல்லி ஒரு கலியாணத்தை முடிக்க வேண்டும் என்று நான் சொன்னதற்கு, நான் கலியாணம் ஆனபிறகல்லவா பொய் சொன்னேன் என்று நீ

என்னை மடக்கினாயே. மற்றவர்கள் சாதாரணமான பெண்களைக் கட்டிக் கொள்வதால், அந்த மொழியின்படி கலியாணத்திற்கு முன் பொய் சொல்லுகிறார்கள். நான் கட்டிக் கொண்ட பெண், அபாரமான மூளையும் ஆண் தன்மையும் வாய்ந்த நூதனப் பெண் ஆகையால், அப்படிப்பட்ட பெருமைக்குப் பாத்திரமான நானும் மற்ற சாதாரண ஜனங்களைப் போல கலியாணத்திற்கு முன் தவறு செய்தால் அவர்களுக்கும் எனக்கும் என்ன பேதம் இருக்கப் போகிறது. மற்றவர்கள் கலியாணத்திற்கு முன் தவறுகள் செய்தால், நான் அதற்குப் பின்னால் செய்ததாகவே வைத்துக் கொள். தவறு முன்பின்னாக இருந்தாலும், விஷயம் கலியாண விஷயந்தானே. அது ஓர் ஆறுதல் அல்லவா? நான் செய்தது தவறாகவே இருக்கட்டும். நீயும் இன்னொரு மனிதனும் சேர்ந்து பட்டாபிராம பிள்ளையின் பங்களாவிற்குள் போய், மன்னார்குடி வேலாயுதம் பிள்ளையின் மைத்துனியும், மைத்துனி புருஷனும் வந்திருப்ப தாய் அபாண்ட மாய்ப் புளுகினீர்களே! அதை என்னவென்று சொல்லுகிறது! அது தவறல்ல, ஜெகஜாலப்புரட்டு. வேலாயுதம் பிள்ளைக்கு மைத்துனியே இல்லையே. அப்படி இருக்க, நீ அவருக்கு எப்படி மைத்துனி ஆனாய்? அதுவுமன்றி, நீ இப்போது என்னைக் கலியாணம் செய்து கொள்ள இணங்கி எவ்வித ஆட்சேபனையும் சொல்லாமல் மணையில் உட்கார்ந்து தாலி கட்டிக் கொண்டு இன்று சோபன அறைக்கு வந்திருப்பதைப் பார்த்தால், நீ இதற்கு முன் கலியாணச் சடங்கிற்கு இலக்காகாத கன்னிகாஸ்திரீ என்று அர்த்தம் ஆகிறது. அப்படி இருக்க, அன்றைய தினம் நீ இன்னொரு மனிதனை உன்னுடைய புருஷன் என்று சொல்லி அழைத்துக் கொண்டு போனாயே. அதுவும் நீ சொன்ன உத்தமஜாதி ஸ்திரீகளின் லட்சணங்களுள் ஒன்று தானா? நீ உண்மையிலேயே வேறொருவனுடைய சம்சாரமாய் இருந்து, இங்கே வந்த பிறகு, என் அபாரமான ஐசுவரியத்தைக் கண்ட வுடன் இதற்கெல்லாம் எஜமானியாக வேண்டும் என்று எண்ணங் கொண்டு பழைய புருஷனைக் கைவிட்டு, என்னைக் கலியாணம் செய்து கொண்டு இங்கேயே இருந்துவிட நினைத்தாயா?

**போலி மணப்பெண்:-** நாங்கள் சென்னப்பட்டணத்தில் பட்டாபி ராம பிள்ளையின் பங்களாவில் தெரிவித்த தகவல்களை எல்லாம்

தாங்கள் சொல்வதைப் பார்த்தால், அங்கே இருந்து வந்ததாகச் சொன்ன சமாசாரப் பத்திரிகையில் இவைகள் எல்லாம் வெளியிடப்பட்டிருக்கலாம் என்று நினைக்கிறேன். என்ன கருத்தோடு நாங்கள் அவர்களுடைய பங்களாவிற்குப் போனோம் என்பதை நான் சொல்வதற்கு முன், தங்களுடைய முக்கியமான கடைசி சந்தேகத்தை நிவர்த்திக்கிறேன். அந்தப் பங்களாவிற்கு என்னோடு கூட வந்தவர் என்னுடைய புருஷர் என்று நான் சொல்லிக் கொண்டேன் ஆனாலும், உண்மையில் அவர் என்னுடைய புருஷர் அல்லர்; அவர் என்னுடைய அம்மான் குமாரர்; அவருக்கு என்னைக் கட்டிக் கொடுப்பதற்குத் தான் ஏற்பாடாகி இருந்தது. அதற்குள் கடவுள் என்னை இங்கு கொணர்ந்து தங்களிடம் ஒப்படைத்திருக்கிறது. எனக்கு இன்னமும் கலியாணம் நடக்க வில்லை என்பதை நான் ருஜுப்படுத்தினால் அல்லாமல் தாங்கள் அதை நம்பவே மாட்டீர்கள். அதற்கும் தக்க ருஜுவிருக்கிறது. அன்றைய தினம் இரவில் தாங்கள் என்னை இங்கே கொண்டு வரப் போகிறீர்கள் என்பதை அறியாமல் நான் அங்கே தூங்கிக் கொண்டிருந்த நிலைமையில்தானே நான் இங்கே வந்தேன். இங்கே வந்த பிறகு என் கழுத்தில் தாலி இருந்ததை வேலைக்காரி பார்த்தாளா என்று விசாரித்துப் பாருங்கள். ஒருவேளை அவள் அதைக் கவனிக்காமல் இருந்திருக்கலாம். நான் அதைக் கழற்றி ஒளித்திருக்கலாம் என்று நீங்கள் சந்தேகிக்கக்கூடும். என்னை இதுவரையில் வைத்திருந்த விடுதிக்கு நீங்கள் உடனே போய் ஓரிடம் விடாமல் தேடிப் பாருங்கள்; அதுவுமன்றி, அங்கேயுள்ள ஜன்னல்களிற்கு அப்பாலும் போய்ப் பாருங்கள். நான் ஒரு வேளை அதை வெளியில் எறிந்திருப்பேனோ என்ற சந்தேகமும் நிவர்த்தியாகி விடும். தாங்கள் முதலில் இந்த முக்கியமான சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொண்டு வாருங்கள். மற்ற விவரங் களை நான் பின்னால் தெரிவிக்கிறேன்.

***மாசிலாமணி:-*** நீ சொல்வது சரியான விஷயம். அந்தச் சந்தேகத்தை நான் முன்னரே தீர்த்துக் கொண்டேன். உன்னை முதன்முதலில் கண்ட வேலைக்காரி என்னிடம் வந்து உன்னுடைய அழகைப்பற்றிப் புகழ்ந்து பேசி நீ இன்னின்ன நகைகள் போட்டிருக்கிறாய் என்று சொன்னாள். உன் கழுத்தில் நீ

இன்னின்ன நகைகள் தான் போட்டிருந்தாய் என்று அவள் சந்தேகமறத் தெரிந்து கொண்டவள் போலவே சொன்னாள். அந்த வேலைக்காரி மகா கூர்மையான புத்தியுடையவள். உன்னை நான் கட்டிக் கொள்ள உத்தேசிக்கிறேன் என்பது அவளுக்குத் தெரியும். உன் கழுத்தில் தாலி இருந்தால், அதை அவள் கவனிக்காமல் விட்டிருக்க மாட்டாள். ஆகையால், நீ தாலியோடு இங்கே வரவில்லை என்று நீ சொல்வதை நான் ஒப்புக்கொள்கிறேன். உனக்கு இன்னமும் கலியாணம் ஆகவில்லை என்பதையும் நான் உண்மை என்றே நம்புகிறேன். ஆனால், நீங்கள் இருவரும் வேலாயுதம் பிள்ளையின் மைத்துனன் மைத்துனி என்று பொய் வேஷம் போட்டுக் கொண்டு எதற்காக அந்தப் பங்களாவிற்குள் போனீர்கள்? அந்த வரலாற்றை மாத்திரம் நீ உள்ளபடி தெரிவித்து விட்டால், நான் உன்மேல் எவ்வித வெறுப்பும் கொள்ளாமல் உன்னையே என்னுடைய உயிருக்குயிரான பெண்சாதியாய் வைத்துக் கொள்ளுகிறேன். சமாசாரப் பத்திரிகையில் விஷயம் ஒரு மாதிரியாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நீ பொய் சொன்னால், அது எனக்கு எப்படியும் தெரிந்து போகும். ஆகையால் எதையும் மறைக்காமல் நீ உண்மையைச் சொன்னால், அதனால் உனக்கு நீடித்த நன்மை ஏற்படும்.

**போலி மணப்பெண்:-** தாங்கள் தான் என்னை அக்கினி சாட்சி யாகக் கட்டிக்கொண்ட பர்த்தாவாகி விட்டீர்கள். நான் அதிக புத்தி சாலித்தனமாகப் பேசுகிற குற்றத்தைத் தவிர தங்கள் விஷயத்தில் மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரணசுத்தியாய் நான் வேறு எவ்விதமான பிழையையும் செய்யவில்லை. தாங்கள் என்னைக் கலியாணம் செய்து கொள்ள உத்தேசிக்கிறதாகச் சொல்லி தங்களுடைய செல்வச் சிறப்பை விவரித்துச் சொன்ன காலத்தில், நான் தங்களுடைய புகைப்படம் ஒன்றைத் தருவித்துப் பார்த்தேன். அதைப் பார்த்தது முதல் என் மனமும் ஒரு நிலையில் நிற்காமல் பலவிதமாக சஞ்சலப்பட்டுக் கொண்டுதான் இருந்தது. இந்த இரண்டு மூன்று தினங்களாக உங்களுடைய இனிமையான முகம் என் கண்ணைவிட்டு மாறாமல் எதிரிலேயே நின்று கொண்டே தான் இருந்தது. இன்று முழுதும் எனக்கு அந்த விடுதி யில் இருக்கை கொள்ளவே இல்லை. அதனாலேதான் நான் ஏழரை

மணிக்கே இங்கே வந்துவிட்டேன். நான் சொல்லும் குறிகளில் இருந்து, என் மனம் தங்கள் விஷயத்தில் எப்படிப்பட்ட எண்ணம் கொண்டிருக்கிறதென்பது தங்களுக்கு எளிதில் தெரிந்து போகும். அதற்கு மேல் விவரமாகச் சொல்ல, எனக்கு வெட்கமாய் இருக்கிறது. ஆகையால், இனி என்னைத் தாங்கள் வெறுத்து விலக்கினாலும், நான் இந்த வீட்டை விட்டு உயிரோடு வெளியில் போகமாட்டேன். என்னுடைய பிராணனையாவது நான் இந்த வீட்டிலேயே விடுவேன் அன்றி, உயிரோடு தங்களை விட்டு நான் பிரிந்து போக மாட்டேன். இதைத் தாங்கள் உறுதியாக நம்பலாம். இனி நான் தங்களுக்குத் தெரியாமல் எந்த விஷயத்தையும் என் மனசில் மறைத்து வைக்கப் போகிறதில்லை. நானும், என் அம்மான் மகனும் என்ன கருத்தோடு பட்டாபிராம பிள்ளையின் வீட்டிற்குப் போனோம் என்ற விவரத்தை நான் உள்ளபடி சொல்லி விடுகிறேன். அதைத் தாங்கள் கேளுங்கள். பிறகு, அது பொய் என்று நானே பிரமாணிக்கம் செய்து மறுத்தால்கூட, தாங்கள் என்னுடைய பிந்திய பிரமாணத்தை நம்பவே மாட்டீர்கள். நான் எங்கள் கருத்தை உள்ளபடியே தெரிவித்திருக்கிறேன் என்பது தானாகவே தங்கள் மனசில் பட்டுப்போகும். நான் இனி எந்த வரலாற்றையும் தங்களிடம் மறைக்க வேண்டும் என்ற பயமே இல்லை. ஏனென்றால், தாங்களும் அவர்கள் விஷயத்தில் எங்களைப் போலவே நடந்து கொள்ளக் கருதியிருப்பதால், நம் இருவருடைய மனப்பான்மை யும் ஒத்துப் போய்விட்டது. நாம் ஒருவருக்கொருவர் அனு சரணையான மனிதர் ஆகிவிட்டோம். தங்களுக்கும் சென்னப் பட்டணத்தில் உள்ள பட்டாபிராம பிள்ளைக்கும் கடுமையான பகைமை உண்டென்று தாங்களே ஒப்புக் கொண்டீர்கள் ஆனால், வேலாயுதம் பிள்ளை வீட்டாருக்கும், தங்களுக்கும் பகைமை இருக்கலாம் என்று நான் சொன்னதைத் தாங்கள் ஒப்புக் கொண்டீர்கள். ஆனாலும், அது உண்மையோ, அல்லது, வாக்குவாதத்திற்காக ஒப்புக் கொள்ளப்பட்டதோ என்பது தெரியவில்லை. தங்களுக்கும் அவர்களுக்கும் பகைமையில்லை என்றே வைத்துக் கொண்டாலும், தாங்கள் மனோன்மணியம்மாளை எடுத்துவர உத்தேசித்ததில் இருந்து தங்களுக்கும் அவர்களுக்கும் சிநேகம்

இல்லை என்பது நன்றாக விளங்குகிறது. அது ஒன்றே எனக்குப் போதுமானது. நான் இனி துணிந்து விஷயத்தை வெளியிடலாம். எங்களுக்கும், மன்னார்குடி வேலாயுதம் பிள்ளைக்கும் ஜென்ம விரோதம். நாங்கள் மன்னார்குடி கோபால சமுத்திரத்தில் இருப்பவர்கள். நாங்களும் அவர்களைப்போல பெருத்த மிராசுதாரர்கள்தான். ஆனால், அவர்களுக்கும் எங்களுக்கும் எப்படி பகைமை ஏற்பட்டது என்பதைச் சொல்லுகிறேன். அவ்விடத்தில் வேறொரு பெரிய மிராசுதார் இருந்தார். அவருக்கு வருஷத்தில் ஒரு லட்சம் ரூபாய்க்கு வருமானம் உண்டு. ஆனால், அவருக்குச் சந்ததியே உண்டாகவில்லை. அவருக்கு ஒரு சம்சாரம் உயிரோடு இருக்கும் போதே புத்திர சந்தானத்தை அபேட்சித்து என் தமக்கையை அவர் இரண்டாவது தாரமாகக் கட்டிக் கொண்டார். ஆனால், என் தமக்கைக்கும் சந்ததி உண்டாகவில்லை. என் தமக்கையின் புருஷருக்கு அதிக வயது ஆய்விட்டதாகையால், அதற்கு மேல் அவருக்குப் புத்திரசந்தானம் உண்டாகாதென்ற நிச்சயம் ஏற்பட்டுப் போனதாகையால், அவர் அந்த வேலாயுதம் பிள்ளையின் இளைய குமாரனான கந்தசாமி என்பவனை சுவீகார புத்திரனாய் எடுத்துக் கொள்ள உத்தேசித்து, அவனை அழைத்து வந்து பிள்ளைபோல வைத்துக் கொண்டிருந்தார். ஆனால், அவனை வளர்த்துக் கொண்டதாக தஸ்தாவேஜி முதலிய ஆதாரம் எதையும் ஏற்படுத்தவில்லை. கொஞ்ச காலத்திற்கெல்லாம் என் அக்காள் புருஷனும், அவருடைய மூத்த சம்சாரமும் திடீரென்று இறந்து போய் விட்டார்கள். என் தமக்கை எங்களுடைய வீட்டிற்கு வந்துவிட்டாள். என் தமக்கை புருஷருடைய ஐசுவரியம் முழுதும் தங்களைச் சேரவேண்டும் என்று வேலாயுதம் பிள்ளை என் தமக்கை பேரில் வியாஜ்ஜியம் தொடர்ந்தார். கும்பகோணத்தில் இருந்த பிரபல வக்கீலான சட்டை நாத பிள்ளை அவர்களை வக்கீலாக வைத்து என் தமக்கை எதிர்கட்சியாடி அவருக்கு ஒரு லட்ச ரூபாயும், அவர் மூலமாக சப் ஜட்ஜிக்கு ஒரு லட்ச ரூபாயும் கொடுத்தாள். அந்த நியாயஸ்தலத் தில் வழக்கு என் தமக்கைக்கு அனுகூலமாய் முடிந்தது. அப்போது திகம்பரசாமியார் என்ற பாவி வந்து இல்லாத பொல்லாத உபத்திரவங்களை எல்லாம் கொண்டு வந்து வைத்து எங்களுக்கு உபகாரம் செய்த புண்ணிய

மூர்த்திகளான சட்டை நாத பிள்ளை அவர்களையும் சப் ஜட்ஜியையும் தண்டனைக்கு ஆளாக்கினதோடு, மேல் நியாயஸ்தலத்தில் சுவீகார வியாஜ்ஜியம் என் தமக்கைக்கு விரோதமாய் முடியும்படி செய்து விட்டான். அதன் பிறகு நாங்கள் என் தமக்கையிடம் இருந்த குபேர சம்பத் திற்குச் சமதையான ஐசுவரியத்தை எல்லாம் அந்தக் கந்தசாமிக்குக் கொட்டிக் கொடுக்க நேர்ந்தது. அவன் எங்கள் வீட்டில் வந்திருந்து கொஞ்ச காலம் எங்கள் சோற்றைத் தின்ற பாவத்திற்காக நாங்கள் சகலமான சம்பத்தையும் இழக்க நேர்ந்தது. என் தமக்கையின் வியாஜ்ஜியத்தை நடத்தியதில் என் தகப்பனாருக்கு தம்முடைய சொந்த சொத்தில் பல லட்சம் நஷ்டமாயிற்று. அந்த வியாஜ்ஜியம் எங்களுக்குத் தோற்றுப் போனதோடு எங்கள் கையே முறிந்து போய்விட்டது. அந்தத் தீராத விசனத்தில் என் தகப்பனாரும், என் தமக்கையும் நோயாய் விழுந்து இன்னும் படுத்த படுக்கையாக இருந்து வருகிறார்கள். அது முதல் எங்கள் குடும்பத்திற்கும் அந்த வேலாயுதம் பிள்ளையின் குடும்பத்திற்கும் ஜென்மப் பழியாக இருந்து வருகிறது. எங்களால் ஆனவரையில் அவர்களுக்குக் கெடுதல் செய்ய வேண்டும் என்பது எங்களுடைய கருத்து. அந்தக் கந்தசாமியைக் கொன்று போட்டு, அவன் எங்களிடம் அக்கிரமமாக அபகரித்த சொத்தை அவன் அனுபவிக்க முடியாமல் செய்துவிட வேண்டும் என்பது தன் தகப்பனாருடைய எண்ணம். இந்த நிலைமையில், அவனுக்கிருக்கும் சொத்து போதாதென்று, புத்திர சந்தானமற்ற பட்டாபிராம பிள்ளை தம்முடைய பெண்ணை அவனுக்குக் கொடுக்கப் போகிறார் என்பது தெரிந்தது. அதை எப்படியாவது தடுத்துவிட வேண்டும் என்பது எங்களுடைய கருத்து. அதற்காக என் தகப்பனார் என்னையும், என் அம்மான் மகனையும் அனுப்பினார். நாங்கள் அன்னியர்கள் என்றால், அவர்கள் எங்களைக் கிட்டச் சேர்க்கவும் மாட்டார்கள். ஆகையால், நாங்கள் வேலாயுதம் பிள்ளையின் மைத்துனியும் மைத்துனி புருஷனும் என்று சொல்லிக் கொண்டு போனோம். போய் அந்தப் பெண்ணின் இங்கிலீஷ் நாகரிகத்தைப் பார்த்து, வேலாயுதம் பிள்ளையின் வீட்டார் சுத்த கர்னாடக மனிதர் ஆகையால், அவர்கள் அவளைக் கேவலம் அடிமை போல நடத்துவார்கள்

என்று நான் பக்குவமாகச் சொல்லி அவளுடைய மனைசைக் கலைத்து விட்டேன். நாங்கள் வந்திருக்கும் சங்கதியை அந்தப் பெண் டெலிபோன் மூலமாகத் தன் தகப்பனாருக்குத் தெரிவித்தாள் போலிருக்கிறது. அவர் உடனே மன்னார்குடிக்குத் தந்தி அனுப்ப, அங்கிருந்து வேலாயுதம் பிள்ளை தமக்கு மைத்துனியே யாரும் இல்லை என்று மறு தந்தி கொடுத்து விட்டார். அதை எடுத்துக் கொண்டு பட்டாபிராம பிள்ளை பங்களாவிற்கு வந்து சேர்ந்து போலீசாரை வரவழைத்து எங்களைச் சிறைப்படுத்தி விட்டார். என்ன சமாதானம் சொல்வதென்பதை அறியாமல் நாங்கள் விழித்துக் கொண்டு பேசாமல் இருந்தோம். அன்றைய தினம் இரவில், அவர்கள் என்னை மனோன்மணியின் படுக்கை அறையில் தனியாக விட்டுப்பூட்டி இருந்தார்கள். நான் தூங்கிக் கொண்டு இருக்கையில், தங்களுடைய ஆள்கள் வந்து, நான் தான் மனோன்மணியம்மாள் என்று எண்ணிக் கொண்டு விட்டார்கள் போலத் தோன்றுகிறது. இதுதான் எங்களுடைய உண்மையான வரலாறு. இதில் தங்களுக்கு இன்னமும் எவ்வித சந்தேகம் இருந்தாலும் நான் நிவர்த்தி செய்யத் தடையில்லை.

*மாசிலாமணி:-* (மிகுந்த வியப்பும் களிப்பும் அடைந்து) பெண்ணே! நீ சொன்னதெல்லாம் உண்மையான வரலாறு தான் என்பது நிச்சயமாகத் தெரிகிறது. இனி உன்மேல் எனக்கு எவ்வித சந்தேகமும் இல்லை. கடவுள் எல்லாவற்றையும் நல்ல நோக்கத் தோடு தான் செய்கிறார், நாங்களும் அவர்களுக்குப் பகைவர்கள். நீங்களும் அவர்களுக்குப் பகைவர்கள். இருவரும் தனித்தனியாக வேலை செய்தால் பலவீனம் என்று நம் இருவரையும் கடவுள் ஒன்று சேர்த்துவிட்டு இருவரும் சேர்ந்து அவர்களை சம்ஹாரம் செய்யுங்கள் என்று இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறார். நீ சொல்லும் சுவீகார வியாஜ்ஜியம் நடந்தது எனக்கு நன்றாக நினை விருக்கிறது. வக்கீல் சட்டைநாத பிள்ளையின் தம்பிதான் நான். நீங்கள் பணம் கொடுத்ததெல்லாம் எனக்குத் தெரியும். ஆகை யால், உங்களுக்கு எங்களால் ஏற்பட்ட பெருத்த பண நஷ்டத்தைக் கருதியாவது நாங்கள் உங்களுக்கு உதவி செய்யக் கடமைப்பட்ட வர்கள் அல்லவா. அதனால், கடவுள் உன்னை நான் மணந்து கொள்ளும்படி செய்தார் போலிருக்கிறது. மெத்த சந்தோஷ

மாயிற்று. பழம் நழுவிப் பாலில் விழுந்த மாதிரியானது. இந்த விபரத்தை எல்லாம் நீ அன்றைய தினமே சொல்லி இருக்கக் கூடாதா? சொல்லி இருந்தால், உன்னை நான் இத்தனை நாள் சிறையில் வைத்திருக்கவே மாட்டேன். நமக்குள் இப்படிப்பட்ட வாக்குவாதம் ஏற்பட்டிருக்கவே இடமில்லை. ஆனால், உன் மேலும் குற்றம் சொல்வதற்கில்லை. நான் மனோன்மணியம் மாளின் மேல் ஆசைப்பட்டு அவளை எடுத்துக் கொண்டு வந்திருக்கிறேன் என்று வேலைக்காரி சொல்லும்போது, நீ அவர்களுக்குக் கெடுதல் செய்ய வந்தவள் என்பதைச் சொன் னால், எனக்கு மனோன்மணியம்மாளிடம் உள்ள அபிமானத் தைக் கருதி நான் உன்னைக் கடுமையாக நடத்துவேன் என்று பயந்து நீ உண்மையை மறைப்பதும் சகஜமே. வேலைக்காரி சொன்னதற்கு நீ சரியான மறுமொழி சொல்லாமல் மறைத்ததும் நியாயமே. போனது போகட்டும். அதைப்பற்றி இனி நாம் பேசி மனசைப் புண்படுத்திக் கொள்வதைவிட இருவரும் ஒன்றுகூடி ஆனந்தமாக இருப்போம். கண்ணே! வா இப்படி! இனிமேல் நீ என்னிடம் பயப்படவாவது, லஜ்ஜைப்படவாவது காரணமே இல்லை.

*போலி மணப்பெண்:-* ஆகா! தெய்வத்தின் கருணையே கருணை! அவருடைய திருவிளையாட்டின் மகிமையை யார் தான் அறியவல்லார்! காருண்ய வள்ளலான ஜெகதீசன் கடைசி யில் என்னை அந்த மகான் சட்டைநாத பிள்ளை அவர்களுடைய திருத்தம்பியாருடனா கூட்டிவைத்தார். ஆகா! என் பாக்கியமே பாக்கியம்! எங்கள் முன்னோர்கள் செய்த தவமே தவம்! தங்கள் மனைவியாகிய நான் அவ்விடத்தில் அவர்களிடத்தில் அகப்பட்டு அவமானப்படப் போகிறேன் என்றும், தங்களுக்கு உரியவள் அல்லாத மனோன்மணியை விட்டு, என்னை எடுத்து வரும் பொருட்டு கடவுள் செய்த திருவிளையாடல் எப்படி இருக்கிறது. அதை நினைக்க நினைக்க என் தேகமும் மனமும் பூரித்துப் பரவசம் அடைகின்றன. இனி நான் தங்களுடைய அடிமை. எனக்குக் கடவுள் அபார சக்தி வாய்ந்த மூளையை அளித்திருப்ப தாக இனி தாங்கள் எண்ணி அது பற்றி என்னை வெறுக்க வேண் டாம். அந்த மூளையை நான் தங்களுக்கு அனுகூலமாக உபயோகப்படுத்து

வேனே அன்றி, பிரதிகூலமாக உபயோகப்படுத்தவே மாட்டேன் என்பது நிச்சயம். நம்முடைய மனசின் வாத்சல்யத்தையும், நம்முடைய அன்னியோன்னிய பாவத்தையும் இனி கடவுள்கூட விலக்க முடியாது என்பது நிச்சயம். இப்போது நம்மிருவருடைய சந்தேகங்களும் தீர்ந்து போய்விட்டன. ஆனால், இன்னொரு விஷயம் நான் தங்களிடம் கேட்க ஆசைப்படுகிறேன். பட்டாபிராம பிள்ளையின் வீட்டில் அன்றைய தினம் நடந்த வரலாறு முழுதும் சமாசாரப் பத்திரிகையில் வந்திருப்பதாகச் சொன்னீர்களே. என் அம்மான் குமாரர் அந்தப் பங்களாவில் இருந்தாரே, அவரை அவர்கள் என்ன செய்தார்கள் என்ற விபரம் ஏதாவது தெரிகிறதா?

*மாசிலாமணி:-* ஆம்; வந்திருக்கிறது. ஆனால், அந்த விவரத்தைக் கேட்பாயானால், உனக்கு நிரம்பவும் விசனம் உண்டாகும். என்னுடைய ஆள்களோ, அல்லது, கலெக்டருடைய ஆள்களோ அவரை நன்றாக அடித்துப் போட்டுவிட்டார்களாம். அவர் நிரம்பவும் அபாயகரமான நிலைமையில் ஆஸ்பத்திரியில் கிடக்கிறாராம். அவருக்குப் பிரக்ஞையே இல்லையாம். அவர் பேச்சு மூச்சில்லாமல் கிடக்கிறாராம். அவரிடம் உண்மையைக் கிரகிக்க வேண்டும் என்று போலீசார், அவர் எப்போது சுய உணர்வை அடைவார் என்று ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறார்களாம்.

*போலி மணப்பெண்:-* (உண்மையில் துடிதுடித்துப் பதறிப் போய்) ஆ! அப்படியா! ஐயோ! என் அம்மான் சேய்க்கு அப்படிப் பட்ட அபாயமா நேரிட்டது. ஐயோ தெய்வமே! என் விஷயத்தில் பெருத்த நன்மை செய்த நீ அவர் விஷயத்தில் இப்படித்தானா தாங்க முடியாத பெருத்த சதி செய்ய வேண்டும். அவரும் தப்பித்துக் கொண்டு போகும்படியான ஒரு மார்க்கத்தை நீ காட்டக் கூடாதா? ஐயோ! என்ன செய்வேன்! என் தேகம் பதறுகிறதே! எனக்கு மயக்கம் வருகிறதே!

*மாசிலாமணி:-* (நிரம்பவும் உருக்கமாக) கண்ணே! விசனப் படாதே! அவர் எப்படியும் பிழைத்துக் கொள்வார். அவர் நல்ல நிலைமைக்கு வரட்டும். நான் என்னுடைய ஆள்களை விட்டு,

ஆஸ்பத்திரியில் இருந்தபடி அவரைத் தூக்கிக் கொண்டு வந்துவிடச் செய்கிறேன். அதைப்பற்றி நீ கொஞ்சமும் கவலைப்பட வேண்டியதில் லை. இன்னமும் நீ ஏன் தூரத்தில் நிற்கிறாய்? இப்படி வந்து என் பக்கத்தில் உட்கார்ந்து கொள். உனக்கு நான் ஒரு பெருத்த சந்தோஷ சங்கதி சொல்லுகிறேன். நம்முடைய பகைவனான வேலாயுதம் பிள்ளையையும் அவனுடைய குடும்பத்தைச் சேர்ந்த எல்லோரையும் அங்கஹீனப்படுத்திவிட்டு வரும்படி என்னுடைய ஆள்களை மறுபடி இன்று நான் பட்டணத்திற்கு அனுப்பி இருக்கிறேன். கந்தசாமிக்கும் மனோன்மணியம்மாளுக்கும் செய்ய ஏற்பாடாய் இருக்கும் கலியாணத்தை ஊர்ஜிதப்படுத்த, வருகிற வெள்ளிக்கிழமை நிச்சயதாம்பூலம் மாற்றப் போகிறார்களாம். நாளைய தினம் மாலையில் புறப்பட்டு மன்னார்குடியார் பட்டணம் போகிறார்களாம். வெள்ளிக்கிழமை இராத்திரி அவர்கள் எல்லோரும் படுத்திருக்கையில், நம்முடைய ஆள்கள் உள்ளே புகுந்து, அவர்களை எல்லாம் மூளிப்படுத்த போகிறார்கள். வடிவாம்பாளுடைய மூக்கை அறுக்கவும், கண்ணப்பாவின் கண்களைத் தோண்டிவிடவும், வேலாயுதம் பிள்ளையின் வலது காதையும், அவர்களுடைய பெண்ஜாதியின் இடது காதையும் அறுக்கவும், கந்தசாமியின் முகத்தில் அக்கினித் திராவகத்தைக் கொட்டி முகத்தை விகாரப்படுத்தவும் ஏற்பாடு ஆகியிருக்கிறது. அந்தக் காரியம் நிறைவேறிப் போகுமானால், அதுவே அவர்களுடைய ஜென்மத்திற்கும் போதுமானது. அதன் பிறகு நாம் அவர்களை அவ்வளவோடு விட்டுவிடலாம். உங்களுக்கும் மனத்திருப்தி ஏற்படும் என்று நினைக்கிறேன் - என்றான்.

அந்த வரலாற்றைக் கேட்ட போலி மணப் பெண்ணின் தேகம் கிடுகிடென்று நடுங்கியது. மனம் துடித்தது. உயிர் தள்ளாடியது. தங்களுக்குத் தெரியாமல் தங்கள் குடும்பத்தாருக்கு மகா பயங்கரமான தீங்கிழைக்க மாசிலாமணி அப்படிப்பட்ட விபரீதமான சதியாலோசனையைச் செய்திருக்கிறானே என்ற எண்ணமும் திகிலும் தோன்றி, மின்சார சக்தி போல அவனது தேகம் கிடு கிடென்று இரண்டொரு தரம் ஆடும்படி செய்தன. ஆனால், தனது

விபரீத நிலைமையை மாசிலாமணி கண்டு, தன் மீது சந்தேகங்கொண்டுவிடப் போகிறானோ என்ற நினைவினால், கந்தசாமி நிரம்பவும் பாடுபட்டுத் தனது விகாரத் தோற்றத்தை மறைத்துக் கொண்டு, முன்போலவே பேசத் தொடங்கி, "ஆஹா! தாங்கள் பிரமாதமான ஏற்பாடுகளை எல்லாம் செய்திருக்கிறீர்கள்! தாங்கள் மரத்தை அடி வேரோடு தள்ள ஏற்பாடு செய்திருக்கி றீர்கள்! நாங்கள் ஒரு கிளைக்கு ஓர் அற்பத் தீங்கு செய்ய எத்தனித் தோம். இந்தச் சங்கதி எங்களுக்கு முன்பே தெரிந்திருந்தால், நாங்கள் பட்டணம் போய் இந்த அநாவசியமான தொந்தரவில் மாட்டிக் கொண்டிருக்கவே மாட்டோம். நாங்கள் முதலில் உங் களோடு கலந்து யோசனை செய்யாமல் போய்விட்டோம். அப்படிப் போனதில், என் அம்மான் குமாரர் பெருத்த அபாயத் திற்கு இலக்காய்ப் பிழைப்பாரோ மாட்டாரோ என்ற நிலைமையை அடைய நேரிட்டதானாலும், வேறு விதத்தில் நாங்கள் தலைகீழாய் நின்று தவஞ் செய்தாலும் கிடைக்காததான தங்க ளுடைய சம்பந்தம், எங்களுக்கு ஏற்பட்டது கடவுளின் கருணை என்றே சொல்ல வேண்டும். ஆனாலும், என் அம்மான் குமாரருடைய தேக நிலைமையைக் கேட்ட முதல் என் தலை சுற்றுகிறது; மயக்கம் வருகிறது; உடம்பு கிடுகிடுவென்று ஆடுகிறது தங்களுடைய சம்பந்தம் ஏற்பட்டதைப்பற்றியும், எதிராளிகள் அங்கஹீனப்படப் போவதைப்பற்றியும் என் மனசில் ஒரு பக்கத்தில் ஆனந்தம் ஏற்பட்டது ஆனாலும், என் அம்மான் குமாரரைப் பற்றிய துக்ககரமான செய்தி ஒரு குடம் பாலில் ஒரு துளி விஷத்தைக் கலந்தது போல என்னைச் சகிக்க முடியாத சஞ்சலத்தில் ஆழ்த்துகிறது. ஆகையால், தாங்கள் இந்த ஏழையின் மேல் கருணைபாவித்து இந்த முகூர்த்தத்தை நாளைய தினம் வரையில் ஒத்திவைக்க வேண்டுமாய் மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன். தங்கள் மேல் நான் எவ்வளவு அபாரமான பிரேமையும் வாஞ்சையும் வைத்திருக்கிறேன் என்பதை நான் சரியானபடி காட்டி, அற்பமும் விசனமே கலவாத பேரின்ப சுகத்தைத் தாங்கள் அனுபவிக்கும்படி செய்ய வேண்டும் என்பது என்னுடைய மனப்பூர்வமான அவா. என் இப்போதைய மன நிலைமையும் தேகநிலைமையும் அதற்கு அனுகுணமாக இல்லை.

தங்களுடைய பெருந் தன்மையையும் காருண்யத்தையும் தாங்கள் இந்தச் சமயத்தில் கொஞ்சம் காட்டி, நாளைய இரவு வரையில் என்னை மன்னித்துவிடக் கோருகிறேன். அதுவுமன்றி, இந்த சயனக் கிரகத்தில் உண்டாகும் அபாரமான வாசனையை இந்த நிலைமையில் நான் தாங்க முடியவில்லை ஆகையால், நான் முன்னே இருந்த விடுதிக்கே போய்ப்படுத்துக் கொள்ளுகிறேன். என் உடம்பு நிலை கொள்ளாமல் தத் தளிக்கிறது. தங்களுக்கு இன்னமும் என்மேல் சந்தேகமாய் இருந்தால் தாங்கள் வேலைக் காரியைக் கொண்டு முன் போல வெளியில் தாளிடச் செய்யுங்கள்" என்றான்.

அதைக் கேட்ட மாசிலாமணி, "பெண்ணே! உன் அம்மான் குமாரர் இருக்கும் கேவலமான நிலைமையை உணர்ந்ததால், உன் மனம் கவலைப்பட்டு வருந்துவது சகஜமே. இந்த நிலைமையில், உன் மனசைப் புண்படுத்தி, நான் உன்னிடம் சுகம் அனுபவிக்க எண்ணுவது ஒழுங்காகாது. ஆகையால், உன் இஷ்டப்படி நாம் இந்த முகூர்த்தத்தை நாளைய தினமே நடத்துவோம். நீ முன் இருந்த விடுதிக்குப் போய்ப் படுத்துக்கொள். இனி நீயே இந்த மாளிகைக்கும், என் அபாரமான ஐசுவரியத்திற்கும், இங்கேயுள்ள என் ஆள் மாகாணங்களுக்கும் எனக்கும் எஜமானியாகிவிட்டாய். அப்படி இருக்க, உன்னை நான் இனி முன்போல நடத்துவது நியாயமல்ல. உன்னை நான் இனி சிறைவைக்க வேண்டிய அவசியமே இல்லை. நீ உன் இஷ்டப்படி இந்த மாளிகையை சுயேச்சையாய் உபயோகப்படுத்திக் கொண்டு, நீ எங்கே வேண்டுமானாலும் இருக்கலாம்; வேலைக்காரிகளை உன் பிரியப் படி ஏவலாம், நீ போய்ப்படுத்துக்கொள். நானும் போகிறேன்" என்று வாஞ்சையாகவும் உருக்கமாகவும் கூறினான். அதைக் கேட்ட போலி மணப்பெண் அவனைப் பார்த்து அழகாகவும் இனிமையாகவும் புன்னகை செய்து, தனது வாஞ்சையையும், நன்றியறிதலின் பெருக்கையும் தோற்றுவிப்பவள் போல நடித்து விட்டு அன்னநடை நடந்து நாணிக் குனிந்தபடி அந்த சயனக் கிரகத்தை விட்டு வெளியில் போய்விட்டாள். அவளது பின்னழ கையும், நடையழகையும், சாயலழகையும் கண்ணிமை கொட் டாமல் பார்த்து பிரமிப்பும் உவப்பும் கொண்டவனாய்ச் சிறிது

நேரம் உட்கார்ந்திருந்த மாசிலாமணி, மறுநாள் எப்படியும் தான் அந்த நடக்கும் சுவர்க்க லோகத்தைத் தனது மார்பில் சேர்த் தணைத்துத் தனதாக்கலாம் என்று எண்ணமிட்டவனாய் இரண் டொரு நிமிஷ நேரம் இருந்த பின் அவ்விடத்தை விட்டு எழுந்து போய், தான் அதற்கு முன் வழக்கமாகப் படுத்துக் கொள்ளும் சயனக்கிரகத்தை அடைந்து படுத்து அந்தப் பெண்ணின் ஒப்புயர் வற்ற அழகையும், அபார புத்தி விசேஷத்தையும், குணாதிசயங் களையும் பற்றிக் கனவு கண்டவனாய்த் துயின்று அந்த இரவைப் போக்கினான்.

★ ★ ★

பொழுது விடிந்தது; அவன் படுத்திருந்த அறைக்குள் வேலைக் காரி தடதடவென்று தலைவிரி கோலமாக ஓடிவந்து, "சாமி! சாமி!" என்று பணிவாகவும் பதைப்பாகவும் கூப்பிட்டாள். அந்தக் குரல் ஓசையைக் கேட்டு விழித்துக் கொண்ட மாசிலாமணி திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்து, "என்ன சங்கதி? என்ன விசேஷம்? என்ன நடந்தது?" என்று ஆவலோடு வினவ, வேலைக்காரி, "எஜமானே! நாம் பட்டணத்திலிருந்து கொண்டுவந்த பெண்ணைக் காணோமே! அவளை நீங்கள் எங்கேயாவது அனுப்பி விட்டீர்களா? என்ன" என்றாள்.

அதைக் கேட்ட மாசிலாமணி துள்ளிக் குதித்து அளவற்ற பிரமிப்பும் கலக்கமும் அடைந்து, "என்ன! என்ன! பட்டணத்தில் இருந்து கொண்டு வந்த பெண் காணப்படவில்லையா! இந்த இரண்டு தினமும் அவள் இருந்த அறையில் போய்ப் படுத்துக் கொள்வதாய்ச் சொல்லிவிட்டுப் போனாளே! அங்கே போய்ப் பார்த்தாயா?" என்றான்.

வேலைக்காரி, "நான் முதலில் சோபன அறைக்குப் போய்ப் பார்த்தேன். அவள் அங்கே இல்லை. பிறகு நான் அதற்கு முன் அவள் இருந்த அறையில் போய்ப் பார்த்தேன். அங்கேயும் அவள் இல்லை; எனக்குப் பெருத்த கவலை உண்டாகிவிட்டது. நீங்கள் ஒருவேளை அவளை இங்கே அழைத்து வந்து படுக்க வைத்துக் கொண்டிருக்கிறீர்களோ என்று நான் கொஞ்ச நேரத்திற்கு முன் இங்கே வந்து பார்த்தேன். இங்கேயும் அவள் காணப்படவில்லை.

என் திகில் அதிகரித்து விட்டது. நானும் மற்ற வேலைக்காரரும் சேர்ந்து வீடு முழுதும் ஓரிடம் விடாமல் போய்த் தேடிப் பார்த்தோம். ஒரு வேளை கிணற்றில் விழுந்திருப்பாளோ என்று வேலைக்காரன் கிணற்றிற்குள் இறங்கித் தேடிப் பார்த்தான். அவள் காணப்படவில்லை. அதன் பிறகு ஒரு வேலைக்காரன் சந்தேகமாக ஒரு வார்த்தை சொன்னான். அதாவது, அவன் இரவு பன்னிரண்டு மணி சுமாருக்கு விழித்துக் கொண்டு எழுந்து வெளியில் ஒன்றுக்குப் போனானாம். அப்போது வாசற்கதவு உள்பக்கத்தில் தாழ்ப்பாள் போடப்படாமல் சும்மா சாத்தி வைக்கப்பட்டு இருந்ததைக் கண்டானாம். இராத்திரி பத்து மணிக்குத் தான் படுக்கப் போன போது கதவை உள்பக்கத்தில் தாழ்ப்பாள் போடத் தான் மறந்து போயிருக்கலாம் என்று அவன் சந்தேகித்து மறுபடி தாழ்ப்பாள் போட்டுக் கொண்டு உள்ளே வந்து படுத்துக் கொண்டானாம். அதை நினைக்க, பெண் நடு இரவிற்கு முன் எழுந்து எவருக்கும் தெரியாதபடி கதவைத் திறந்து கொண்டு வெளியில் போயிருப்பாளோ என்ற சந்தேகம் உண்டாயிற்று. தங்களை எழுப்பி இதைச் சொல்ல வேண்டும் என்று ஓடி வந்தேன்" என்றாள்.

அதைக் கேட்ட மாசிலாமணியின் தேகம் பறந்தது. அவனது மனம் தாங்க ஒண்ணாத பிரமிப்பும் கலவரமும் அடைந்தது. வேலைக்காரி சொன்னது மெய்யோ பொய்யோ என்ற பிரமையினால், அவன் ஸ்தம்பித்துப் போய் ஐந்து நிமிஷ நேரம் மௌனமாக இருந்தபின் எழுந்து, தனது உடைகளைச் சரியாக அணிந்து, வீடு முழுதும் சென்று ஓரிடம் விடாமல் தேடிப் பார்த்தான். பெண் தன்னை வஞ்சித்து ஓடிப் போய்விட்டாள் என்ற எண்ணம் அவனது மனதில் உதிக்க ஆரம்பித்தது. அவள் மன்னார்குடிப் பெண்ணாக இருந்தால் அப்படி ஓடமாட்டாள் ஆதலால், அவள் தன்னைப் பற்றிச் சொல்லிக் கொண்ட வரலாறு பொய்யான வரலாறு என்ற நிச்சயமும் ஏற்பட்டது. ஆனாலும், அவன் உடனே ஓர் ஆளை வண்டியில் வைத்து மன்னார்குடிக்கு அனுப்ப, அந்த ஆள் அன்றையதினம் பகலில் திரும்பி வந்து கந்தசாமியின் சுவீகாரத் தாயார்களில் இளைய தாயாருக்கு தங்கை,

அல்லது, வேறு சகோதர சகோதரிகளே இல்லை என்று தான் கேள்வியுற்றதாகத் தெரிவித்தான்.

அதைக் கேட்கவே, மாசிலாமணியின் திகிலும் கலவரமும் ஆயிரம் மடங்கு பெருகி வதைக்கத் தொடங்கின. அந்தப் பெண்ணின் சொல்லை உண்மை என்று நம்பி தங்களது ரகசியத்தை எல்லாம் சொல்லிவிட்டதை நினைக்க நினைக்க மாசிலா மணியின் மனம் இன்னதென்று விவரிக்க முடியாத பரம வேதனையை அடைந்து தத்தளித்தது. அந்தப் பெண் அப்போதே மன்னார்குடிக்குப் போய் வேலாயுதம் பிள்ளை வீட்டாரை எச்சரித்து விடுவாளோ என்ற பயமும் கவலையும் எழுந்தெழுந்து வதைக்கலாயின. ஆனாலும், அந்தப் பெண் வேறு எந்த விதத்தி லாவது வேலாயுதம் பிள்ளை வீட்டாரிடத்திலோ பட்டாபிராம பிள்ளை வீட்டாரிடத்திலோ பகைமை உடையவளாய் இருக்க வேண்டும் என்ற நினைவு உண்டானது ஆகையால், அவள் அநேகமாய் அவர்களை எச்சரிக்கமாட்டாள் என்ற எண்ணமே மேலாடி நின்றது. அவ்வாறு அவன் பலவகைப்பட்ட எண்ணங்க ளாலும் சந்தேகங்களாலும் மாறிமாறி வதைக்கப்பட்டும் தைரியம் அடைந்தும் அன்றைய பொழுதைப் போக்கினான். வேலாயுதம் பிள்ளை வீட்டார் சென்னப் பட்டணத்திற்குப் போய்விட்டார்கள் என்ற செய்தியும் அவனுக்கு எட்டியது. ஆகவே அவன் வெள்ளிக்கிழமை அன்று சென்னையில் தமது ஆட்கள் வெற்றி அடைவார்களோ மாட்டார்களோ என்று எண்ணி ஓயாக் கவலையில் ஆழ்ந்து, நரகவேதனை அனுபவிப்பவனது நிலைமையை அடைந்து, வியாழன், வெள்ளி, சனி ஆகிய மூன்று நாட்களையும் கடத்தினான். வெள்ளிக்கிழமை இரவில், அங்க ஹீனம் நடந்திருந்தால், அது சனிக்கிழமைப் பத்திரிகைகளில் வெளியாகி ஞாயிற்றுக்கிழமை கும்பகோணத்திற்கு வரும் ஆதலால், அவன் ஞாயிற்றுகிழமைத் தபாலை ஆவலோடு எதிர்பார்த்து, அன்றைய தினம் வந்த பத்திரிகையைப் பிரித்துப் பார்க்க, அதில் காணப்பட்ட விபரீதச் செய்தி அவனது கண்ணில் பட்டது. மகா கோரமான சம்பவம் என்ற தலைப்பின் கீழ் வெளியிடப்பட்டிருந்த விவரத்தை அவன் படிக்கவே, அவன் அடைந்த ஆனந்தமும், குதூகலமும், அளவிட முடியாதவையாய்

இருந்தன. தன்னை வஞ்சித்துப் போன பெண் தனது ரகசியத்தை வெளியிடவில்லை என்றும், அவளும் தனது பகையாளிகள் இடத்தில் விரோதம் கொண்டவள் என்றும் நிச்சயித்துக் கொண்டான். தனது கோரிக்கை முழுதும் தான் உத்தேசித்தபடியே நிறைவேறிப் போனதை நினைத்து நினைத்து மாசிலாமணி உவகை பூத்துக் கட்டிலடங்காத களிவெறி கொண்டு, அன்றைய தினம் பதினாயிரம் ரூபாய் செலவு செய்து, தேவாலயங்களில் அபிஷேகம், அர்ச்சனை நிவேதனம் முதலியவற்றை நடத்தி வைத்து ஆயிரக்கணக்கான ஏழைகளுக்கு அன்னதானம் வஸ்திர தானம் முதலியவற்றை வழங்கி பூத உடம்போடு சுவர்க்கலோகம் புகுந்தவன் போல பசி, தாகம், அயர்வு, நித்திரை முதலிய எந்த தேக பாதையையும் உணராமல் ஆனந்தமயமாய் அன்றைய பொழுதைப் போக்கினான்.

மறுநாளாகிய திங்கட்கிழமைத் தபாலிலும் சில சமாசாரப் பத்திரிகைகள் வந்தன. இராஜாங்க சம்பந்தமாய் ஏதோ விசேஷ மான சம்பவம் நடந்ததைக் கருதி, ஞாயிற்றுக்கிழமை தினம் ஒரு பிரத்தியேக அநுபந்தம் வெளியிடப்பட்டது ஆகையால், அது மாசிலாமணிக்கும் வந்து சேர்ந்தது. வேலாயுதம் பிள்ளை முதலி யோரை அங்கஹீனப் படுத்தி பிறகு இடும்பன் சேர்வைகாரனும் அவனுடைய ஆட்களும் தப்பித்து வந்து விட்டார்களோ, அல்லது, போலீசாரிடம் எவராவது அகப்பட்டுக் கொண்டார்களோ என்பதை நிச்சயித்துக் கொள்ள வேண்டும் என்ற ஆவல் மாசிலாமணியின் மனதில் ஒரு புறத்தில் வதைத்துக் கொண்டிருந் தது ஆகையால், அவன் அன்றைய தினம் வந்த அநுபந்தத்தை எடுத்துப் பிரித்து விஷயங்களை மேன் போக்காகப் பார்த்துக் கொண்டே போக, அதில் காணப்பட்ட ஒரு விஷயம் அவனது மனதைக் கவர்ந்தது. அவன் அதை உடனே படிக்கத் தொடங்கி னான். அது அடியில் வருமாறு எழுதப்பட்டிருந்தது.

**முக்கியமான ஒரு பிழை திருத்தம்**

(ஒரு நிருபர் எழுதுகிறார்)

***மகா கோரமான ஒரு சம்பவம்*** என்ற தலைப்பின் கீழ் வெளியான ஒரு விஷயத்தை எல்லோரும் படித்திருக்கலாம். விரிவான

வரலாற்றை நன்றாக விசாரித்து மறுபடி எழுதுகிறேன் என்று நான் நேற்று தெரிவித்தேன் அல்லவா; அந்த விஷயத்தைப் பூர்த்தியாகத் தெரிந்து கொள்ளாமல் வீட்டில் இருக்க என் மனம் இடந்தரவே இல்லை. ஆகையால், நான் உடனே புறப்பட்டு சென்னை கலெக்டர் பட்டாபிராம பிள்ளையின் ஜாகைக்குப் போய்ச் சேர்ந்து கலெக்டரைக் கண்டு பேசி போலீஸ் ஸ்டேஷனில் பார்த்த பயங்கர மான காட்சியை விவரித்துக் கூறினேன். அதைக் கேட்டவுடனே, நான் ஒருவேளை பைத்தியம் கொண்டவனோ என்று அவர் சந்தே கித்தவர் போலப் பேசினார். ஆனால், நான் மறுபடியும் அதை உறுதியாகச் சொன்னதைக் கேட்டபிறகு, அவர் உடனே டெலி போனுக்குப் போய்ப் போலீஸாருடன் பேசி உண்மையைத் தெரிந்து கொண்டு வந்து என்னைப் பார்த்து, "ஐயா! நீர் சொன்ன படி அங்கஹீனம் நடந்திருப்பது உண்மைதான் என்று போலீசார் சொல்லுகிறார்கள். அங்கஹீனப்பட்டவர்கள் எல்லாம் ஆஸ்பத்திரி யில் இருக்கிறார்களாம். ஆனால், அவர்கள் வேலாயுதம் பிள்ளையும், அவரைச் சேர்ந்த மனிதரும் அல்லர். வேலாயுதம் பிள்ளையும் அவருடைய குடும்பத்தாரும் என் பங்களாவிலேயே வேறொரு விடுதியில் இப்போது க்ஷேமமாய் இருக்கிறார்கள். எனக்கு மாப்பிள்ளையாக வரிக்கப்பட்டிருந்தவரும், வேலாயுதம் பிள்ளையின் இரண்டாவது குமாரருமான கந்தசாமி என்பவர் போன சனிக்கிழமை முதல் காணப்படவில்லை. நாங்கள் எல்லோரும் அவரைத் தேடி அலைந்து கொண்டிருக்கிறோம். அது ஒன்று தான் எங்கள் குடும்பத்தில் நடந்திருக்கும் விசேஷ சம்பவம். வேலாயுதம் பிள்ளை முதலியோர் இதோ க்ஷேமமாய் இருக்கிறார் கள். உமக்குச் சந்தேகமாய் இருந்தால், நீர் என்னோடு வாரும்; நான் காட்டுகிறேன்" என்றார். அவர் சொன்னதை நான் நம்பவில்லை ஆகையால், நான் அவரோடு நேரில் போய் பக்கத்து விடுதியில் இருந்த வேலாயுதம் பிள்ளையையும், அவரது குடும்பத்தாரையும் பார்த்தேன். அவர்கள் தங்களது புத்திரரைக் காணாமல் விசனப் பட்டவர்களாய் இருந்தார்கள் ஆனாலும், எவ்வித அங்கஹீனமும் இன்றி க்ஷேமமாய் இருக்கிறார்கள். அவரைச் சேர்ந்த பந்து மித்திரர்கள், நேற்று வெளியான செய்தியைக் கண்டு விசனக் கடலில் ஆழ்ந்து இருப்பார்கள். ஆதலால், நேற்று ஏற்பட்ட தவறை

நான் இந்த விசேஷ அநுபந்தத்தின் மூலமாய்த் திருத்த முன் வந்தேன்.

வேலாயுதம் பிள்ளை முதலியோர் க்ஷேமமாய் இருப்பது ஒரு விஷயத்தில் சந்தோஷத்தை உண்டாக்கியது ஆனாலும், உண்மையில் அங்கஹீனப்பட்டு ஸ்மரணையின்றி ஆஸ்பத்திரி யில் கிடப்பவர்கள் இன்னார் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற தடுக்க முடியாத ஆவலினால் தூண்டப்பட்டு நான் உடனே ஆஸ்பத்திரிக்குப் போய் விசாரித்தேன். மற்ற எல்லோரும் இன்னும் பிரக்ஞையற்றுக் கிடக்கிறார்கள். முகத்தில் அக்கினித் திராவகம் கொட்டப்பட்ட யௌவனப் புருஷன் மாத்திரம் அப்போதைக் கப்போது கண் திறந்து வார்த்தைகள் சொல்லுகிறானாம். போலீசார் அவனிடம் கேட்டதில், அவரது வரலாற்றில் ஒரு பாகம் மாத்திரம் வெளியாயிற்றாம். அவர்கள் இன்னார் என்பது சந்தேகமறத் தெரிந்து போய்விட்டதாம். அவர்கள் கும்பகோணத்தில் பெரிய தெருவில் இருப்பவர்களாம். மூக்கறுபட்டுக் கிடக்கும் ஸ்திரீயின் பெயர் ரமாணியம்மாளாம். காதறுபட்டுக் கிடப்பவர்கள் அவளுடைய தாயும் தகப்பனுமாம். கண்கள் போய்க் கிடப்பவன் அவர்களிடம் வேலை பார்க்கும் போயியாம். முகத்தில் அக்கினித் திராவகம் கொட்டப்பட்டுக் கிடப்பவன் பக்கிரியா பிள்ளை என்ற ஒரு தவில்காரனாம். இது நிச்சயமான பெயர்களாம். அவர்களுக்கு இந்த விபரீத சம்பவம் நேர்ந்த வரலாற்றை இன்னம் தெரிந்து கொள்ள முடியவில்லை யாம். இதைக் கேட்டுக் கொண்டு நான் வீடு வந்து சேர்ந்தேன். விரிவான செய்தியை நாளைய தினம் அறிந்து மறுபடியும் எழுதுகிறேன்.

என்று எழுதப்பட்டிருந்த அதிவிபரீதமான செய்தியைப் படிக்கவே, மாசிலாமணியின் தலையில் பெருத்த இடி திடீரென்று விழுந்தது போலாய்விட்டது. அப்போது அவனது மனநிலைமை எப்படி இருந்திருக்கும் என்பதை விவரிப்பதைவிட வாசகர்கள் யூகித்துக் கொள்வதே நன்று.

★ ★ ★

11-வது அதிகாரம்

## நீர்மேல்குமிழி நீலலோசனியம்மாள்

இனி நாம், ரமாமணியம்மாள் சென்னைக்குச் சென்ற வரலாற்றையும், அவ்விடத்தில் புரிந்த திருவிளையாடல்களையும் விஸ்தரிப்போம். செவ்வாய்க்கிழமை மாலையில், இடும்பன் சேர்வைகாரனால் கொண்டுவரப்பட்ட வண்டியில், ரமாமணியம் மாளும், அவளது தாய் தகப்பன்மாரும், அவர்களது வேலைக்கார னான போயியும் ஏறிக்கொண்டு கும்பகோணம் ரயில்வே ஸ்டேஷனிற்குச் சென்றார்கள் அல்லவா. அவர்கள் அங்கே போய்ச் சேர்ந்த காலத்தில் இரவு நேரம் வந்துவிட்டது. ஆகையால், எங்கும் இருளே மயமாக நிறைந்திருந்தது ஆனாலும், ஸ்டேஷனில் ஆங்காங்கு விளக்குகள் கொளுத்தப்பட்டு மிகுந்த பிரகாசத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தன. மூன்றாவது வகுப்பு ஜனங்கள் உட்காரும் இடம் முழுதும் மூட்டை முடிச்சுகள் பிள்ளை குட்டிகள் சமேதராய் ஏராளமான ஜனங்கள் கூடியிருந்தனர். அடிக்கடி குதிரை வண்டி களும் ஒற்றை மாட்டு வண்டிகளும் வந்து புதிய பிரயாணிகளை இறக்கிவிட்டுத் திரும்பிப் போய்க் கொண்டே இருந்தன. அவ்வாறு வந்த ஜனங்கள் எல்லோரும் மூன்றாவது வகுப்புப் பிரயாணிகள் தங்கும் இடத்திற்கே சென்றனர். ஆனால், நமது ரமாமணியம் மாளை ஏற்றிவந்த வண்டி மூன்றாவது வகுப்புப் பிரயாணிகளின் இடத்தில் நிற்காமல், 1-வது வகுப்புப் பிரயாணிகளான சீமான் சீமாட்டிகளது உபயோகத்திற்காக ஏற்படுத்தப்பட்டிருந்த பிரத்தியேகமான விடுதியின் வாசலில் போய் நின்றது. எல்லோரும் வண்டியை விட்டுக் கீழே இறங்கினார்கள். சென்னையில் அவர்களது உபயோகத்திற்குத் தேவையான ஆடைகளும், பாத்திரங்களும், மெத்தை தலையணை முதலிய சாமான்களும் நன்றாகக் கட்டப்பட்டு பிரத்தியேகமான வண்டியில் வந்து தாழ்வாரத்தில் இறங்கி, இடும்பன் சேர்வைகாரன், போயி ஆகிய இருவரது வசத்திலும் பார்வையிலும் இருந்தன. ரமாமணியம்மாளின் தாயார் தாங்கள் அன்றைய இரவு முழுதும் ரயிலில் சந்தோஷமாக இருந்து உண்டு களிப்பதன் பொருட்டு பலவகைப்பட்ட பக்ஷண பலகாரங்களையும் இதர நொறுவைகளையும் பெருத்த

மூட்டையாகக் கட்டி எடுத்து வந்திருந்தாள் ஆதலால், அவள் அந்த மூட்டையை அன்னியரிடம் கொடுக்காமல்தானே எடுத்துக் கொண்டு ஸ்டேஷன் விடுதிக்குள் நடந்தாள். ரமாமணியம்மாளது தகப்பனார் சுத்த ஜலமும், பாலும் நிறைந்த இரண்டு பெருத்த வெள்ளிக் கூஜாக்களைத் தமது இரண்டு கைகளிலும் பிடித்துக் கொண்டு உள்ளே சென்றார். ரமாமணியம்மாளோ மற்ற நாட்களைக் காட்டிலும் அன்று பன்மடங்கு அதிக அழகாகவும் கவனிப்பாகவும் தன்னை அலங்கரித்துக் கொண்டு கட்டிலடங்கா மகிழ்ச்சியும் குதூகலமும் நிறைந்தவளாய் வண்டியை விட்டு இறங்கினாள். அவள் கனிந்த பக்குவமும், இயற்கையிலேயே வசீகரமாக அமைந்த அழகும், சிவப்பு நிறமும் வாய்ந்த கட்டழகி என்பது முன்னரே கூறப்பட்ட விஷயம். மாசிலாமணி வந்து கண்டு கொள்வானோ என்ற கவலையும் பீதியும் கொண்டு அவள் தனது மாளிகையில் பக்கிரியாப் பிள்ளையோடு ஏகாந்தமாக இருப்பதற்கு மாறாக அன்று தான் அவனுடைய நிர்ப்பந்தமின்றித் தனது ஆருயிர்க் காதலனான பக்கிரியாப் பிள்ளையோடு முதல் வகுப்பு வண்டியில் வெகு உல்லாசமாகப் பிரயாணம் செய்யலாம் என்றும், தன்னிடம் இருந்த பெருந் தொகையைச் செலவு செய்து தானும் அவனும் சென்னையில் பல தினங்கள் இருந்து ஆனந்த மாகப் பொழுது போக்கலாம் என்றும் நினைத்து மிகுந்த மன எழுச்சியும் உற்சாகமும் பூரிப்பும் அடைந்திருந்தாள் ஆதலால், அதற்குப் பூர்வாங்கமாக அவள் அன்றைய தினம் பாதாதி கேசம் வரையில் வைர நகைகளையே அணிந்து கொண்டதன்றி, அப்போதே மடிப்புப் பிரித்ததும், தாழம்பூ வாசனை ஏற்பட்டது மான புத்தம் புதிய பனாரீஸ் புட்டாப் புடவையும் வெல்வெட்டு ரவிக்கையும் அணிந்திருந்தாள். அந்த வடிவழகி தனது அபாரமான அளகபாரத்திற்கு வாசனைத் தைலமூட்டிப் பின்னித் தேருருளைப் போலச் சுருட்டி சிவப்புப்பட்டு நாடாவால் கட்டி அதன் இடையில் வைர ஜடபில்லை அணிந்து, அதைச் சுற்றிலும், ரோஜாப் புஷ்பமும் ஜாதி மல்லிகைப் புஷ்பமும் சூடியிருந்ததும், காதில் அழகான வைர மாட்டல்கள் அணிந்திருந்ததும், இடுப்பில் ஜெகஜ் ஜோதியாக மின்னிய ஒட்டியாணம் அணிந்திருந்ததும், கைகளில் குஞ்சங்கள் நிறைந்த வங்கி நாகஒத்து முதலியவைகளையும்,

காலில் பாதஸரம் பட்டைக்கொலுசு முதலியவைகளையும் அணிந்திருந்ததும் ஒன்றுகூடி அவளது அழகையும் வசீகரத் தன்மையையும் நூறு மடங்கு அதிகரிக்கச் செய்தன. அத்தர், அம்பர், ஜவ்வாது முதலியவற்றின் வாசனையூட்டப் பெற்ற பட்டுக் கைக்குட்டை ஒன்றை அவள் தனது கையில் பிடித்துக் கொண்டிருந்தாள். அழகிலும், அலங்காரத்திலும் தன்னை மீறக் கூடியவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள் என்ற எண்ணம் அவளது மனதில் இருந்தது ஆகையால், தான் போகும் இடத்தில் உள்ள ஜனங்கள் எல்லோரும் தன்னைக் கண்டு பிரமிப்படையச் செய்வதும், அதனால் தன் மனம் திருப்தி அடைய வேண்டும் என்பதும் அவளது முக்கிய நோக்கமாக இருந்தன. ஆகவே, அவள் வண்டியை விட்டுக் கீழே இறங்கிய வுடனே, தனது கைக் குட்டையை எடுத்து, தான் வண்டியில் உட்கார்ந்திருந்ததால், புடவையில் பட்ட தூசியைத் தட்டிவிட்டு, தனது ஆடையாபரணங்களைச் சீர்திருத்தி வண்டியின் ஓட்டத்தில் ஏற்பட்ட அதிர்ச்சியி னால், தங்கப்பாளம் போலிருந்த தனது முகத்தில் முத்து முத்தாகத் துளித்திருந்த வியர்வைத் துளிகளைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்து நாணிக்கோணி உல்லாசமாகவும் கம்பீரமாகவும் நடந்து முதல் வகுப்புச் சீமாட்டிகளின் விடுதிக்குள் போய்ச் சேர்ந்தாள். அவ்வாறு அவள் போய்ச் சேருவதற்குள், அவள் நாற்புறங்களிலும் தனது பார்வையைச் செலுத்தி அங் கிருந்த சகலமான ஜனங்களும் தன்னையே பார்த்துத் தனது ஒப்பு யர்வற்ற அழகைக் கண்டு பிரமிப்படைந்து விட்டார்கள் என்று நினைத்து அளவற்ற செருக்கும் மன எழுச்சியும் அடைந்து மெய்ம்மறந்தவளாய் உள்ளே சென்றாள். அதுவுமன்றி, அவளது தாய் தகப்பன்மார் அவளுக்கு வாய்த்த அபாரமான ஐசுவரி யத்தைக் கருதி அவளிடம் அடங்கி ஒடுங்கி வேலைக்காரன்போல நடந்து கொண்டனர் ஆதலால், தன்னை அடக்குவாரும், தன் அதிகாரத்திற்கு மிஞ்சிய வரும் இந்த உலகத்திலேயே இல்லை என்ற எண்ணம் உறுதியாக அவளது மனதில் வேரூன்றி இருந்தது ஆகையால், தனது நிலைமை ஒரு கவர்னர் ஜெனரலுடைய நிலைமையைவிட மேலானது என்ற அகம்பாவமும் மனத் துணிவும் கொண்டவளாய்த் தனது பெற்றோரையும், போயி

யையும், இடும்பன் சேர்வைகாரனையும் கேவலம் திரணமாக மதித்து அதிகாரமும் அட்டகாசமும் செய்து வந்தாள். அவளது அபாரமான செல்வத்தையும் கருதி மற்றவரும் அவளிடம் பணி வாகவும், அவளது மனம் கோணாமலும் நடந்து கொண்டனர்.

ரமாமணியம்மாள் முதல் வகுப்புப் பிரயாணிகளது விடுதிக் குள் நுழைந்து அவ்விடத்தில் போடப்பட்டிருந்த ஒரு நாற்காலி யில் உட்கார்ந்து கொண்டவுடன், அவளது தாய் அவ்விடத்தில் காணப்பட்ட ஓர் இரும்பு பெஞ்சியின் மேல் தனது மூட்டையை வைத்துவிட்டுத் தானும் அதன் பக்கத்தில் உட்கார்ந்து கொண் டாள். ரமாமணியம்மாளின் தகப்பனார் தமது கைகளில் இருந்த கூஜாக்களை மூட்டையின் பக்கத்தில் வைத்தார். உடனே ரமாமணியம்மாள் அவரிடம் தணிவான குரிலில், "அப்பா! நம்முடைய பக்கிரியா பிள்ளை வந்திருக்கிறாரா என்று பாருங்கள். பெட்டிகளை எல்லாம் நிறுத்து, டிக்கெட்டுகளை வாங்குங்கள். இடும்பன் சேர்வைகாரனுக்குத் தெரியாமல், பக்கிரியா பிள்ளை யிடம் ஒரு டிக்கட்டுக் கொடுங்கள். நமக்கெல்லாம் முதல் வகுப்பு டிக்கெட்டு வாங்குங்கள். இடும்பன் சேர்வைகாரனுக்கும், போயிக்கும் மூன்றாவது வகுப்பு டிக்கெட்டு வாங்குங்கள். அவர்கள் நம்முடைய பெட்டிகளை எல்லாம் வைத்துக் கொண்டு முதல் வகுப்பு வண்டிக்குப் பக்கத்தில் வேலைக்காரர்களுக்காகச் சேர்க்கப் பட்டிருக்கும் வண்டியில் உட்கார்ந்து கொள்ளட்டும். நமக்கும் பக்கிரியா பிள்ளைக்கும் எவ்வித சம்பந்தமும் இருக் கிறதாக இடும்பன் சேர்வைகாரன் சந்தேகிக்காதபடி அவர் ஜாக்கிர தையாக நடந்து கொள்ளும்படி சொல்லுங்கள்" என்று கூறினாள்.

அதைக் கேட்டுக் கொண்ட அவளது தந்தை அப்படியே செய்வதாகச் சொல்லிவிட்டு அவ்விடத்தில் இருந்து போய், அரை நாழிகை நேரம் கழித்து மறுபடி திரும்பி அவளிடம் வந்து, "அம்மா! பக்கிரியா பிள்ளை வந்து இடும்பன் சேர்வைகாரனுக்குத் தெரியாதபடி, ஜனக்கும்பலில் மறைந்து கொண்டிருக்கிறார். பெட்டிகளை எல்லாம் நிறுத்துப் பார்த்து டிக்கெட்டுகள் வாங்கி விட்டோம். மூன்றாவது வகுப்பு டிக்கெட்டுகள் இரண்டையும் சாமான்களின் டிக்கெட்டையும் இடும்பன் சேர்வைகாரனிடம்

கொடுத்து, வேலைக்காரர் வண்டியில் உட்கார்ந்து கொள்ளும்படி அவனிடம் சொல்லி ஏற்பாடு செய்துவிட்டேன். ஆனால், நமக்குத் தான் முதல் வகுப்பு டிக்கெட்டு கிடைக்கவில்லை. இன்று வரப்போகும் மெயில் வண்டியில் ஜனக்கும்பல் அதிகமாக இருக்கிறதென்றும், முதல் வகுப்பு வண்டியில் இடமே இல்லை ஆகையால், அந்த வகுப்புக்கு டிக்கெட்டுகளே கொடுக்க வேண்டாம் என்றும் முன்னாகத் தந்தி வந்திருப்பதாய் ஸ்டேஷன் மாஸ்டர் சொன்னார். ஆகையால், இரண்டாவது வகுப்பு டிக்கெட்டுகள் தான் அகப்பட்டன" என்று கூறினார்.

அதைக் கேட்ட ரமாமணியம்மாள் ஒருவித ஆத்திரமும் ஏமாற்றம் அடைந்தவளாய், "என்ன அப்பா! இப்படிச் செய்து விட்டீர்களே! நாம் சௌக்கியமாக முதல் வகுப்பு வண்டியில் இருக்க வேண்டும் என்று நினைத்தோமே. இரண்டாவது வகுப்பு வண்டி அவ்வளவு சௌகரியமாக இருக்குமா? அதில் ஜனக் கும்பல் இருக்குமோ என்னவோ? ஸ்டேஷன் மாஸ்டர் நம்மிடம் ஒரு வேளை பணம் பிடுங்குகிறதற்காகப் பொய் சொல்லு கிறானோ என்னவோ? அவனுக்கு ஏதாவது வாய்மூட்டுப் போட்டுப் பாருங்களேன்" என்று நிரம்பவும் அதிருப்தியோடு கூறினாள்.

அதைக் கேட்ட தந்தை நிரம்பவும் பணிவாகவும் நயமாகவும் பேசத் தொடங்கி, "இல்லை, அம்மா! நான் அவரிடம் முதல் வகுப்பு டிக்கெட்டுக் கேட்பதற்கு முன்பாகவே அவர் தமக்குத் தந்தி வந்த விவரத்தை வேறொருவரிடம் சொல்லிக் கொண் டிருந்தார். அவர் நம்முடைய மாசிலாமணிப் பிள்ளைக்கு நிரம்ப வும் வேண்டியவர், ஆகையால், இன்னார் வந்திருக்கிறார்கள் என்று நான் அவரிடம் சொல்லி, பட்டணத்திற்கு நாலு முதல் வகுப்பு டிக்கெட்டுகள் கேட்டதோடு அவருக்கும் ஒரு ரூபாய் பணம் கொடுத்தேன். அவர் நிரம்பவும் தாபந்திரியப்பட்டார். ஆனால், முதல் வகுப்பில் இடமே இல்லை ஆகையால், அதற்குத் தாம் டிக்கெட்டுக் கொடுத்தாலும், நமக்கு கஷ்டமேயன்றி சுகம் இருக்காதென்று சொன்னார். இரண்டாவது வகுப்பு வண்டியில் ஒரு தனி வண்டியே காலியாக இருக்கிறதாம். அதுவும் முதல்

வகுப்பு வண்டியைப் போல, படுக்க சோபா முதலிய வசதிகள் உடையதாம். இனி வேறே யார் வந்து கேட்டாலும் இரண்டாவது வகுப்பு டிக்கெட்டு தாம் கொடுக்கிறதில்லை என்றும், வண்டியில் நாம் ஏறியவுடனே அதை வெளியில் பூட்டி விடுவதாகவும், அதன் பிறகு நாம் பட்டணம் வரையில் சுகமாய்ப் போகலாம் என்றும், 2-வது வகுப்பில் இனி இடமில்லை ஆகையால், அந்த வகுப்பிற்கும் டிக்கெட்டு கொடுக்க வேண்டாம் என்று வடக்கே உள்ள பெரிய ஸ்டேஷன்களிற்கெல்லாம், தாம் தந்தி கொடுத்து விடுவதாகவும் சொன்னார். ஆகையால், நமக்கு ஒன்றும் கெடுதல் இல்லை. நாம் இரண்டாவது வகுப்பு வண்டியிலேயே வசதியாகவும் ஏகபோகமாகவும் போகலாம்" என்றார்.

அதைக் கேட்ட ரமாமணியம்மாள் ஓரளவு ஆறுதல் அடைந்தாள் ஆனாலும், தான் தனது ஆசை நாயகனை சென்னைக்கு முதல் வகுப்பு வண்டியில் வைத்து அழைத்துக் கொண்டு போவதனால் ஏற்படும் பெருமையும் ஆத்மதிருப்தியும் தனக்கு இல்லாமல் போகும்படியான சந்தர்ப்பம் ஏற்பட்டு விட்டதே என்ற ஒருவித அதிருப்தி அவளது மனதில் இருந்து வந்தது. ஆயினும் அதற்கு மேல் தான் செய்யக்கூடியது ஒன்றும் இல்லை என்பதையும் அவள் உணர்ந்தாள் ஆதலால், அந்த வார்த்தையை அவ்வள வோடு நிறுத்தி, "சரி! பக்கிரியா பிள்ளைக்கு ஒரு டிக்கெட்டுக் கொடுத்து விட்டீர்களா? இதில் இன்னொரு இடைஞ்சல் இருக்கிறதே! நாம் போய் வண்டியில் ஏறிக்கொண்டதற்குக் கொஞ்ச நேரத்திற்குப் பிறகு தானே, பக்கிரியா பிள்ளை யாரோ அன்னியர் போல வந்து நம்முடைய வண்டியில் ஏறப்போகிறார். நாம் ஏறிய உடனே ஸ்டேஷன் மாஸ்டர் வந்து கதவைப்பூட்டி விடுவாரோ என்னவோ?" என்று நிரம்பவும் கவலையாகக் கூறினாள்.

தந்தை, "அதைப் பற்றிக் கவலையில்லை. நமக்கு நாலு டிக்கெட்டுக் கொடுத்தது அவருக்கு நினைவிருக்கும். பக்கிரியா பிள்ளை நம்மைச் சேர்ந்த மனிதர் என்றே நாம் அவரிடத்தில் சொல்லி விடுவோம். பக்கிரியா பிள்ளை ஏறுவதற்கு முன் ஸ்டேஷன் மாஸ்டர் வந்து கதவைப் பூட்டினால், நம்முடைய

மனிதர் இன்னொருவர் பாக்கி இருக்கிறார், அவர் வந்து ஏறிய பிற்பாடு பூட்டலாம் என்று சொல்லி விடுவோம். பக்கிரியா பிள்ளை வந்து ஏறியவுடனே பூட்டச் செய்வோம். ஸ்டேஷன் மாஸ்டர் எங்கே போகப்போகிறார். நம்முடைய வண்டிக்குப் பக்கத்திலே தான் இருப்பார். அதுவுமன்றி, பெட்டிகளை எடுத்து வைக்கிற அவசரத்திலும் ஜனக்கும்பலிலும் பக்கிரியா பிள்ளை நம்முடைய வண்டியில் ஏறுவதை இடும்பன் சேர்வைகாரன் கவனிக்கவே போகிறதில்லை. கவனித்தாலும், அது சந்தேகம் உண்டு பண்ண நியாயமில்லை. எத்தனையோ பேர் வருகிறார் கள், ஏறுகிறார்கள். அதைப் பற்றி யாரும் சந்தேகப்பட ஏதுவே இல்லை. பக்கிரியா பிள்ளைகூட அதிகமாய்த் தாமதம் செய்யா மல், நாம் ஏறிய பிறகு இரண்டொரு நிமிஷத்திற்கெல்லாம் வந்து ஏறிவிடும்படி ஏற்பாடு செய்திருக்கிறேன்" என்றார். அதைக் கேட்டு ரமாமணியம்மாள் முற்றிலும் திருப்தி அடைந்தாள்.

அந்தச் சமயத்தில் வண்டி சமீபத்தில் வந்துவிட்டதென்பதையும் ஜனங்கள் உள்ளே போகவேண்டும் என்பதையும் காட்டுவதற் காக மணி அடிக்கப்பட்டது. மூன்றாவது வகுப்பில் ஏராளமாகக் கூடியிருந்த ஜனங்கள் எல்லோரும் மூட்டைகளையும் குழந்தை களையும் தூக்கிக் கொண்டு நான் முந்தி நீ முந்தி என்று அவசரப் பட்டு மோதியடித்து அலறிக் கூக்குரல் செய்து கொண்டு உள்ளே நுழைய ஆரம்பித்தனர். நமது ரமாமணியம்மாளும், அவளது தாய் தந்தையரும் முதல் வகுப்புப் பிரயாணிகள் உள்ளே போவதற்காக ஏற்படுத்தப் பட்டிருந்த பிரத்தியேகமான வாசலின் வழியாக உள்ளே சென்றார்கள். ஸ்டேஷன் மாஸ்டர் கையில் ஜண்டாக் களைப் பிடித்தபடி அங்கே வந்து ரமாமணியம்மாளை ஒரு தரம் பார்க்கவே, அவர் அப்படியே பிரமித்து மயங்கி திக்குதிசை தெரியாமல் நின்று விட்டார். இளஞ் சூரியனைப் பார்த்த கண்ணிற்குச் சர்வமும் சூரியமயமாகவே தோன்றுவது போல, ஸ்டேஷன் மாஸ்டர் எந்தப் பக்கம் திரும்பிப் பார்த்தாலும், அல்லது, கண்களை மூடிக்கொண்டாலும், ரமாமணியம்மாளின் இன்பவடிவமே அவரது அகக்கண்ணில் ஒட்டிக் கொண்டு நின்று அவரை இன்பமோ துன்பமோ என்று அறிய இயலாத ஒருவித நூதன வேதனையிற்படுத்தியது. ரயில் வந்திருப்பதையும், தாம்

செய்ய வேண்டிய கடமைகளையும் மறந்து போனவராய் ஸ்டேஷன் மாஸ்டர் தேன் குடித்த மந்தி போல அப்படியே பல் இளித்து அந்த மடவன்னத்தின் மீது வைத்த விழியை எடுக்காமல் ஸ்தம்பித்து நின்றார். அது போலவே, வண்டியில் ஏறவந்த ஜனங்களும் வண்டிக்குள் இருந்து கீழே இறங்கிய ஜனங்களும் ஒரே ஜோதிமயமாக நின்ற ரமாமணியம்மாளின் வசீகர சக்தியால் கவரப் பெற்று தம்மை முற்றிலும் மறந்து அப்படியப்படியே நின்றுவிட்டனர். அந்த வடிவழகிக்கு அருகில் நின்ற அவளது தந்தையைப் பார்த்த பின்னரே ஸ்டேஷன் மாஸ்டர் தமது உணர்வைப் பெற்று அவர்களிடம் நெருங்கி கரைகடந்த அன்பும் குழைவும் காண்பித்து எதிரில் இருந்த இரண்டாவது வகுப்பு வண்டியின் கதவை நிரம்பவும் பக்தி சிரத்தையோடு திறந்து விட்டு, "ஏறுங்கள்; வண்டிக்குள் யாருமில்லை. உள் பக்கத்தில் 6 மனிதர் உட்காருவதற்கு இடம் இருக்கிறது. இனி இதில் யாரும் வந்து ஏறாதபடி நான் தக்க ஏற்பாடு செய்கிறேன்" என்றார்.

உடனே ரமாமணியம்மாள் நிரம்பவும் நாணம் அடைந்தவள் போலத் தனது உடம்பை நெளித்துத் தலையைக் கீழும் மேலு மாய் நிமிர்த்தியபடி நடந்து இரண்டாவது வகுப்பு வண்டிக்குள் ஏறிக் கொண்டாள். அவளுக்குப் பின்னால் அவளது தாய் தகப்பன்மாரும் ஏறி உள்ளே சென்றனர். அப்போது வெளியே சிறிது தூரத்தில் ஜனங்களுக் கெதிரில் பதுங்கிப் பதுங்கி நின்று கொண்டிருந்த பக்கிரியா பிள்ளையைக் கண்ட ரமாமணியம்மாள் தனது முகத்தை வண்டிக்கு வெளியில் வைத்து அப்புறம் இப் புறம் பார்க்க, போயியும், இடும்பன் சேர்வைகாரனும் பெட்டி களை எல்லாம் ஒரு வண்டிக்குள் வைத்து விட்டு தாமும் ஏறி உள்ளே போய்க் கதவை மூடிக்கொண்டது அவளுக்குத் தெரிந்தது. அவள் உடனே பக்கிரியாப் பிள்ளையைப் பார்த்துக் கண்ணடிக்க, அவன் உடனே விசையாக நடந்து வந்து அவள் இருந்த வண்டியில் ஏறத் தொடங்கினான். அந்த வண்டியை விட்டு அப்பால் போக மனம் அற்றவராய் பக்கத்திலேயே நின்று கொண்டிருந்த ஸ்டேஷன் மாஸ்டர் பக்கிரியாப்பிள்ளை வந்து ஏறியதைக் கண்டு மிகுந்த கோபமும் ஆத்திரமும் அடைந்து, "ஓய்! யாரைய்யா அது? அந்த வண்டியில் ஏறவேண்டாம்; இது ரிசர்வ்

செய்யப்பட்டிருக்கிறது. உள்ளே இருக்கிறவர்கள் அந்த வண்டி முழுதிற்கும் பணம் கொடுத்து எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஏறவேண்டாம்" என்று அதட்டிக் கூறினார். உள்ளே இருந்த ரமாமணியம்மாளது தந்தை உடனே தமது தலையை வெளியில் நீட்டி, "ஐயா! இவர் எங்களைச் சேர்ந்த மனிதர்தான். நாலு டிக்கெட்டுகள் வாங்கினது உங்களுக்கு ஞாபகம் இல்லையா? இவர் ஒரு காரியமாக வெளியில் போய்விட்டு வருகிறார். ஆகையால், இவரை மாத்திரம் உள்ளே விட்டு கதவை மூடிப் பூட்டி விடுங்கள்" என்றார். உடனே ஸ்டேஷன் மாஸ்டர் தேங்காய்ச்சில் போடப் பெற்ற நாய் போல அடங்கிப் போய், "ஓகோ அப்படியா! உங்களுடைய மனிதரா! சரி, அப்படியானால், ஏறிக்கொள்ளட்டும்" என்று நிரம்பவும் அன்பாகக் கூற, பக்கிரியாப் பிள்ளையை உள்ளே ஏற்றிவிட்டு வண்டியின் கதவை மூடி வெளியில் பூட்டி விட்டு, உள்ளே இருந்த ரமாமணியைப் பார்த்தபடி அவளது தந்தையோடு பேசத் தொடங்கி, "எனக்கும் மாசிலாமணிப் பிள்ளைக்கும் இப்போதைய நேற்றைய பழக்கமல்ல. அவருக்கும் எனக்கும் வெகு நாளாய் சிநேகம். அவருடைய தமையனார் சட்டைநாத பிள்ளைக்கும் என்னிடம் அத்யந்த பிரியம் உண்டு. அவர்களாவது, அவர்களுடைய மனிதர்களாவது வந்துவிட்டால், எங்களுக்குத் தெய்வத்தைக் காண்பது போல இருக்கும். அவர்கள் பொருட்டு நாங்கள் முதல் வகுப்பு வண்டியில் இருப்பவர்களைக் கூட இறக்கி விட்டு இடம் செய்து கொடுப்போம். அவர்கள் எங்கேயாவது போய்விட்டுத் திரும்பி வந்தால், நான் டிக்கெட்டே கேட்கிறதில்லை. அநேகமாய் அவர்கள் டிக்கெட்டு வாங்காமலேயே வந்து விடுவார்கள். ஆகையால், அதுபோலவே நீங்கள் திரும்பி வரும் போதும் என்னால் ஆன சகலமான உதவிகளையும் செய்யத் தடையில்லை" என்று கூறியபடி அவரோடு பன்னிப் பன்னி மேன் மேலும் பேச்சை வளர்த்துக் கொண்டே நின்று அடிக்கடி ரமாமணியம்மாளைக் கடாக்ஷித்த வண்ணம் இருந்தார்.

ரமாமணியம்மாளின் மனம் முழுதும் பக்கிரியாப் பிள்ளையின் மீதே சென்று லயித்துப் போயிருந்தமையாலும், அவனோடு தான்

ஆனந்தமாகப் பேசி, சரசமாக இருக்க வேண்டும் என்ற ஆவலில் அவள் உலகையும் தன்னையும் மறந்திருந்தமையாலும், அதற்கு இடையூறாக ஸ்டேஷன் மாஸ்டர் நின்று பிதற்றிக் கொண்டிருந்த சொற்கள் அவளுக்குக் கன்ன கடூரமாக இருந்தன. ஸ்டேஷன் மாஸ்டர் பெட்டை மோகம் பிடித்தவன் என்றும், தனது அழகைக் கண்டு மயங்கி அவன் ஏதேதோ பிதற்றுகிறான் என்றும், ஆயினும், அவனால் தங்களுக்கு ஏற்பட்ட சௌகரியங் களைக் கருதி தான் மௌனம் சாதிப்பதே உசிதமான காரியம் என்றும் நினைத்தவளாய், ஸ்டேஷன் மாஸ்டரைப் பார்ப்பது போலப் பக்கிரியா பிள்ளையைப் பார்ப்பதும், நாணிக் கீழே குனிவதுமாய் இருந்தாள். அப்போது ரயில் புறப்படும் நேரமாகி, அதற்கு மேலும் ஐந்து நிமிஷ காலம் கழிந்துவிட்டது ஆகையால், எஞ்சின் ஓட்டுகிறவர் பல தடவைகளில் ஊதி ஊதி துரிதப்படுத்தத் தொடங்கினார். பின் பக்கத்தில் இருந்த கார்ட், ஸ்டேஷன் மாஸ்டர் வழக்கப்படி தம்மிடம் வருவார் என்று எதிர்பார்த்துப் பார்த்து உடனே இறங்கி ஸ்டேஷன் மாஸ்டரைத் தேடிக் கொண்டே ஓடி வந்து, இரண்டாவது வகுப்பு வண்டியண்டை அவர் நிற்கக் கண்டு, வண்டி புறப்படுவதற்கு அதிக காலஹரணம் ஆகிவிட்ட தென்று கோபித்துக் கொள்ள, அப்போதே தமது சுய உணர்வை அடைந்த ஸ்டேஷன் மாஸ்டர் அவரை சாந்தப்படுத்தி, அவருக்குச் செய்ய வேண்டிய காரியங்களை முடித்து, "ஐயா! இந்த வண்டியில் நம்முடைய ஊர்ப் பெரிய மனுஷியாள் வீட்டு ஜனங்கள் இருக்கிறார்கள். இவர்கள் பட்டணம் போகிறார்கள். வேறே யாரும் இதில் ஏறாமல் பார்த்துக் கொள்ளும்" என்று கேட்டுக் கொள்ள, கார்ட் தமது பார்வையை உட்புறத்தில் செலுத்தி அவ்விடத்தில் இருந்த மனிதர்களைக் கவனித்துப் பார்த்து விட்டு அப்பால் போய், வண்டியை விடும்படி எஞ்சின் ஒட்டிக்குச் சைகை காட்ட, அடுத்த நிமிஷம் வண்டி நகரத் தொடங்கியது. நகர்ந்த வண்டி வரவரத் தனது விசையை அதிகப்படுத்திக் கொண்டு ஓடத் தலைப்பட்டு வெகுதூரம் போய் மறைகிற வரையில் ஸ்டேஷன் மாஸ்டர் சித்தப் பிரமை கொண்டவர்போல அப் படியே நின்று நெடுநேரம் கழித்துத் தனது அறைக்குச் சென்றார்.

அவ்வாறு தன்னைக் காண்போரது சித்தத்தை எல்லாம் கலக்கி வேதனைக்கு இருப்பிடமாக்கிக் கொண்டு போன வசீகர அலங்காரியான ரமாமணியம்மாள் இருந்த வண்டிக்குள் என்ன நடந்தது என்பதை இனி நாம் கவனிப்போம். அவர்கள் இருந்த வண்டி இரண்டாவது வகுப்பு வண்டியானாலும், முதல் வகுப்பு வண்டிக்கும் அதற்கும் அதிக வித்தியாசம் எதுவும் காணப்பட வில்லை. முதல் வகுப்பு வண்டியில் உள்ள சகலமான செளகரியங் களும் அந்த வண்டியில் இருந்தன. அதில் ஒரே காலத்தில் ஆறு ஜனங்கள் வசதியாக இருப்பதற்கும் இரவில் படுத்துத் தூங்கு வதற்கும் ஆறு சோபாக்கள் போடப் பெற்றிருந்தன. ஒரு சோபா வில் இருப்பவர்கள் என்ன செய்கிறார்கள் என்பது இன்னொரு சோபாவில் இருப்பவர்களுக்குத் தெரியாதிருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, இடையிடையில் நான்கடி உயரத்தில் மறைவுகள் அமைக்கப் பெற்றிருந்தன. சோபாக்களும் சாய்ந்து கொள்ளும் முதுகுப் பக்கங்களும் வழுவழுப்பான தோல் போர்த்தப் பெற்ற கனமான மெத்தைகள் உடையவையாய் இருந்தன. அவர்கள் ஏறிச் சென்றது துருமெயில் வண்டி ஆதலால், வண்டி அபாரமான விசையோடு மாயமாய்ப் பறந்தது ஆனாலும், அதனால், அசைவாவது ஓசையாவது சிறிதும் உண்டாகவில்லை. ஆனால் வழுவழுப்பான மெத்தையில் உட்கார்ந்திருப்போருக்கு வண்டி யின் ஒழுங்கான ஓட்டம் சப்பிரமஞ்சத்தில் உட்கார வைத்து ஆனந்தமாய்த் தாலாட்டப்படுவது போல, முற்றிலும் புதுமை யான ஒருவித இன்பத்தை உண்டாக்கியது.

வண்டி கும்பகோணத்தை விட்டுப் புறப்பட்ட காலத்தில், இரவில் அதிக நேரம் கழியவில்லை ஆதலால், அப்போதே ஒவ்வொருவரும் தனித்தனியாக சோபாவின் மீது படுத்துத் தூங்க வேண்டும் என்ற எண்ணம் அவர்களது மனதில் உண்டாக வில்லை. ரயிலின் சுகமான ஓட்டத்தினால் ஏற்பட்ட இன்பத்தை அனுபவித்து, வழியில் காணப்படும் ஸ்டேஷன்கள் முதலிய வற்றின் வேடிக்கைகளைக் கவனித்த வண்ணம் இரவு முழுதும் விழித்துக் கொண்டே பட்டணம் போய்ச் சேரவேண்டும் என்ற ஒருவித உற்சாகமும் மன எழுச்சியும் தோன்றி அவர்களை ஊக்கத்

தொடங்கின. வண்டியின் கதவிற்கு அருகில் இருந்த சோபாவின் மீது தாயும் தந்தையும் உட்கார்ந்து கொண்டனர். அதற்கு அப்பால் மறைவாக இருந்த இன்னொரு சோபாவில் ரமா மணியம்மாளும் பக்கிரியா பிள்ளையும் உட்கார்ந்து கொண்டனர். அவ்வாறு தனிமையில் உட்கார்ந்து கொண்ட கள்ளக் காதலர் இருவரது மன எழுச்சியும் குதூகலமும் ஆனந்தமும், அப்போது, வர்ணிக்க இயலாத உச்ச நிலையை அடைந்துவிட்டன என்றே கருத வேண்டும். பக்கிரியா பிள்ளை ரமாமணியிடம் வைத்திருந்த வாஞ்சையும் பிரேமையும், அவளால் தனக்குக் கிடைக்கும் செல்வத்தையும் சிற்றின்ப சுகத்தையும் கருதியவையாக இருந்தன. ஆனால், அவன் மீது ரமாமணியம்மாள் கொண்டிருந்த மோகமும் பிரேமையும் அளவிட இயலாதவையாயும், அவனது பரஸ்பர வாஞ்சையைத் தவிர வேறு எவ்வித பிரதிபலனையும் கருதாத ஒரு வகைப் பைத்தியமாக இருந்தது. இரவு பகல் சதாகாலமும் அவன் தன்னோடு கூடவே இருக்க வேண்டும். தான் அவனிடம் அடிமை போல நடந்து கொண்டு சகலமான சௌகரியங்களையும் அவனுக்குத் தானே செய்து கொடுத்து எப்போதும் அவனுக்கு சந்தோஷம் உண்டாக்கிக் கொண்டே இருக்க வேண்டும். அவன் வேறே எந்த ஸ்திரீயையும் கண்ணாலும் பார்க்கக்கூடாது. அவர்களைப் பற்றிய பிரஸ்தாபத்தைக்கூட அவன் தன்னிடம் எடுக்கக் கூடாது. தனது ஆசை முழுவதையும் அவன் தன்மீதே வைத்திருப்பவன் போல எப்போதும் நடந்து கொள்ள வேண்டும். தான் அவனுக்கு எதைச் செய்தாலும், மறுக்காமல் அவன் ஏற்றுக் கொள்ள வேண்டும். தின்பண்டங்களை தான் எவ்வளவு கொடுத்தாலும், வேண்டாம் என்று சொல்லாமல் அவன் அவைகளை வாங்கி உண்ண வேண்டும். தனக்கு வயிறு நிறைந்து விட்டது, இனி இடமில்லை, போதும் என்று அவன் எந்த விஷயத்திலாவது சொல்வானாகிலும், அவளுக்கு உடனே கோபமும் அழுகையும் வந்துவிடும். மற்ற சகலமான வியவகாரங் களிலும் அவள் மகா தந்திரியாகவும், புத்திசாலியாகவும் இருந்தாள் ஆனாலும், பக்கிரியா பிள்ளையின் மீது அவள் வைத்திருந்த மகா பிரமாதமான வாத்சல்யத்தில் மாத்திரம் அவள் பைத்தியக்காரி போல ஒழுகி உண்மையிலேயே சித்தப்பிரமை கொள்ளத்தக்க

நிலைமையில் இருந்தாள். அவன் பொருட்டு அவள் தனது அபார மான செல்வத்தை எல்லாம் செலவிடவும் ஆயத்தமாய் இருந்தாள். அவனது வாஞ்சையும் நட்பும் மாறாதிருப்பதற்கு, அவள் கொலை முதலிய மகா கொடிய பஞ்சமா பாதகங்களையும் செய்யத் துணிபவளாய் இருந்தாள். கும்பகோணத்தில், அவள் பல சந்தர்ப் பங்களில் அவனோடு தனிமையில் இருந்து களித்தால் ஆனாலும், மாசிலாமணி வந்துவிடுவானே என்ற பயம் இடையிடையில் தோன்றி வதைத்தது ஆகையால், அத்தகைய துன்பம் கலவாத களங்கமற்ற பூர்த்தியான இன்பம் அனுபவிக்கும் காலம் எப்போது வரும் வரும் என்று அவள் ஆவலோடு எதிர்பார்த்திருந்தவள் ஆதலால், அவனோடு தான் சென்னைக்குப் போகக் கிடைத்ததை அவள் நேரிலேயே சுவர்க்க லோகத்திற்குப் போய் அதன் ஒப்பற்ற பேரின்ப சுகத்தை அனுபவிக்கப் போகிறவள் போல மதித்தாள். அவ்வாறு தாங்கள் சென்னையில் அனுபவிக்கப் போகும் சொர்க்க போகத்திற்குப் பந்தக்கால் நாட்டப்படுவது போல அன்றைய இரவு முழுதும் தானும் அவனும் ரயிலில் தனிமையில் ஆனந்தமாய்ப் பிரயாணம் செய்ய நேர்ந்ததை அவள் சாயுஜ்ய பதவிக்கு மேலானதாகவே மதித்து மெய்ம்மறந்து போனாள். பட்டணத்தில் அனுபவிக்கப் போகும் பேரின்ப சுகத்தை எதிர்பார்த்தும், அப்போது வண்டி கிடுகிடென்று சுகமாக ஓடித் தங்களை ஆனந்தமாக அசைத்து லாலி பாடியதை உணர்ந்தும், எவ்வித இடையூறும் இன்றி அந்த இன்பகரமான இடத்தில் தானும் தன் ஆருயிர்க் காதலனும் அந்த இரவு முழுவதும் இருக்க லாம் என்ற எண்ணத்தினாலும், ரமாமணியம்மாள் தன்னை முற்றிலும் மறந்து குதூகலமும் ஆனந்தமுமே வடிவெடுத்து வந்தனவோ என்னலாம் படி மாறி பக்கிரியா பிள்ளையிடத்தில் குழந்தை போலக் கொஞ்சி விளையாடத் தொடங்கி,

“ஓங்கு மலைக்காட்டின் உள்ளிருந்து தூங்காமல்
தூங்கு சப்ர மஞ்சமிசைத் தூங்கு நவரசத்தேன்
மொய்த்த மலைக்காட்டு முள்ளு நவரசத்தேன்
மெத்தையின் மேலேறி விளையாடும் தோகைமயில்”

என்ற லட்சணங்கள் வாய்ந்தவளாய்ப் பக்கிரியா பிள்ளையை இன்ப வெள்ளத்தில் ஆழ்த்தி அபரிமிதமான சுகத்தினால்

அவனைச் சித்திரவதை செய்யத் தொடங்கினாள். ரயில் வண்டி அபாரமான விசையோடு ஓடுவதும், ஆங்காங்கு காணப்படும் சிறிய ஸ்டேஷன்களில் நிற்காமல் பெரிய ஸ்டேஷன்களில் மாத்திரம் இரண்டொரு நிமிஷ நேரம் நிற்பதும், மறுபடி பறப்பது மாகப் போய்க் கொண்டே இருந்தது. மற்ற வண்டிகளில் ஜனங்கள் ஏறினரே அன்றி அவர்கள் இருந்த வண்டியில் எவரும் ஏற வில்லை. ஆகவே அந்த இரவு முழுதும் தமது வண்டியில் எவரும் ஏறமாட்டார்கள் என்ற உறுதி அவர்களது மனதில் ஏற்பட்டது. அவ்வாறு இன்பகரமாகப் பிரயாணம் செய்தது, ரமாமணியின் பெற்றோர் மனதிலும் ஒருவிதமான குதூகலத்தையும், ஆனந்தத்தையும், யௌவனத் தன்மையையும் உண்டாக்கியது ஆகையால், அவர்கள் இருவரும்கூட குழந்தை போல சந்தோஷ மாக இருக்கத் தொடங்கி, தமது மூட்டைக்குள் வைத்திருந்த பக்ஷண பலகாரங்கள் முதலியவற்றை எல்லாம் எடுத்து, இளையோர் இருவருக்கும் வழங்கித் தாமும் உண்டு களித்தனர். பிறகு காப்பி தாம்பூலம் முதலியவை கொடுக்கப்பட்டன. அவைகளை எல்லாம் வாங்கிய ரமாமணிதான் அதிகமாய் எதையும் உண்ணாமல் தலையணையில் பஞ்சடைப்பது போல, எல்லாவற்றையும் பக்கிரியா பிள்ளையின் வாயில் போட்டு அவனை உண்ண வைப்பதே பெருத்த இன்பமாக மதித்து, யாவற்றையும் அவனது வயிற்றில் வைத்துத் திணிக்க, அவன் அவளது கோபத்திற்குப் பாத்திரனாகக் கூடாதென்ற அச்சத்தி னால், அவள் கொடுத்ததை எல்லாம் உள்ளே செலுத்தியபடியே இருக்க, அவள் அவனைக் குழந்தையின் கையில் அகப்பட்ட பதுமை போலவும், குரங்கின் கைப்பூமாலை போலவும் நடத்தி, அமிதமான சுகத்தினால் நிமிஷத்திற்கு நிமிஷம் அவனைக் கொன்று கொண்டே இருந்தாள்.

அவ்வாறு ரமாமணியம்மாள் தனது ஆசை நாயகனோடு விளையாடிப் பொழுதைப் போக்கிக் கொண்டிருக்க, அவளது தொற்று வியாதி அவளது தாய் தகப்பன்மாரையும் பிடித்துக் கொண்டதோ என்று நினைக்கும்படி அவர்களும் அளவற்ற மன

எழுச்சியும் குதூகலமும் அடைந்து உண்டு களித்து வேடிக்கையாக சம்பாஷித்து இன்பகரமாகப் பொழுதைப் போக்கிக் கொண்டிருந்தனர். அவர்களது உடம்பு சோர்வடையாமலேயே இருந்தது ஆகையால், அவர்கள் அன்றைய இரவில் தூங்க உத்தேசித்தவர்களாகவே தோன்றவில்லை.

அந்த நிலைமையில் ரயில் வண்டி விர்ரென்று அம்பு பாய்வது போல ஒரே விசையாகப் பறந்து போவதும், வெகு தூரத்திற்கு ஓரிடத்தில் குறுக்கிடும் பெரிய ஸ்டேஷன்களில் நிற்பதுமாய்ச் சென்று கொண்டே இருந்தது. அப்போது நடுநிசி சமயம் ஆதலால், எங்கும் நிச்சப்தமே மயமாக நிறைந்திருந்தது. கண்ணிற்கு எட்டிய தூரம் வரையில் காணப்பட்ட மரங்களும், செடி கொடிகளும், வயல்களில் நிறைந்திருந்த பயிர்களும், ஆறுகளும், வாய்க்கால்களும், கோவில்களும், குளங்களும், இன்னும் மனிதர், விலங்கு, பறவை, புழுப்பூச்சி முதலிய சகலமான ஜீவ ஜெந்துகளும் ஒய்ந்து ஒடுங்கி நித்திரா தேவியின் வசீகர சக்தியால் கவரப்பெற்று அசைவற்று உணர்வற்று ஓய்ந்து போயிருந்தன. ஆகாயப் பரப்பில் நிறைந்திருந்த கோடாநுகோடி நக்ஷத்திரச் சுடர்கள் மாத்திரம் கண் விழித்து நீலநிற அரங்க மேடையில் நாடகம் ஆடிக் கொண்டிருந்தன. மனிதர் துயிலுகையில் அவர்களது சர்வாங்கமும் ஒடுங்கி உணர்வற்றுப் பிணம் போல ஓய்ந்து கிடக்க, அவர்களது மூளைக்குள் மாத்திரம் உக்கிரமான சொப்பனக் காட்சிகள் அபரிமிதமான வேகத்தோடு தோன்றிக் கொண்டிருப்பது போல உலகமே ஒடுங்கி உணர்வற்று நிச்சப்தமாய் இருந்த அந்தச் சந்தர்ப்பத்தில், அந்த ரயில் வண்டி மாத்திரம் ஊர்களையும், வயல்களையும், ஆறுகளையும், தோப்புகளையும் கிழித்துக் கொண்டு அபாரமான விசையோடு ஊடுருவிப் பாய்ந்து போய்க் கொண்டிருந்தது. அவ்வாறு சென்ற வண்டி அநேக ஸ்டேஷன்களில் நின்றதானாலும் ஜனங்கள் வந்து மற்ற வண்டிகளில் ஏறினார்களே அன்றி, ரமாமணி முதலியோர் இருந்த இரண்டாவது வகுப்பு வண்டியில் ஏறவில்லை. ஆனால், வண்டி கடைசியாக சிதம்பரத்திற்கு வந்து நின்ற காலத்தில், ரமாமணி இருந்த வண்டியின் கதவு தடேரென்று திறக்கப்பட்டது. அது

வரையில் எதேச்சையாக இருந்து அந்த இடத்தைத் தமது சொந்த வீடு போலவே மதித்துக் குதூகலமாய் மெய்ம்மறந்து பொழுதைப் போக்கிக் கொண்டிருந்த ரமாமணியம்மாள் முதலியோர் திடுக்கிட்டு அப்போதே தமது சுய உணர்வைப் பெற்று அது ரயில் வண்டி என்பதையும், வேறு மனிதரும் அந்த இடத்தில் இருக்க ஸ்தானங்கள் இருக்கின்றன என்பதையும் உணர்ந்தனர். ஆயினும், தமது ஏதேச்சாதிபத்தியத்தை இழந்துவிட யார்தான் எளிதில் சம்மதிப்பார்கள்? மற்ற மனிதர் உள்ளே வருவதைத் தடுப்பதற்குத் தமக்கு அதிகார மில்லை என்பது தெரிந்திருந்தும், ரமாமணியின் தகப்பனார் விரை வாக எழுந்து, "யார் கதவைத் திறக்கிறது? இங்கே இடமில்லை. வேறே வண்டிக்குப் போங்கள்" என்று கூறிக் கொண்டே கதவண்டைப் பாய்ந்து அதை கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டார்.

வெளிப்பக்கத்தில் நின்ற ரயில் வண்டியின் கார்ட், "ஏனைய்யா தடுக்கிறீர்? நீங்கள் நாலு பேர் இருப்பதற்கு இடம் இருக்கிறதே! வண்டி பூராவையும் நீங்களே எடுத்துக் கொண்டிருக்கிறீர்களா என்ன? போம் அப்பால்" என்றார்.

அதைக் கேட்ட ரமாமணியின் தந்தை உடனே கலகலத்துப் போனார் ஆனாலும் தமது ஊக்கத்தைக் கைவிடாமல் கார்டைப் பார்த்துத் தமது பற்களைக் காட்டி நயந்து பேசத் தொடங்கி, "ஐயா! கும்பகோணம் ஸ்டேஷன் மாஸ்டர் உங்களிடம் சொன்னது நினை வில்லையா? நாங்கள் அவருக்கு நிரம்பவும் வேண்டியவர்கள். நாங்கள் பொழுது விடிகிற வரையில் பிரயாணம் செய்ய வேண்டியவர்கள், எங்களுக்கு அசௌகரியம் இல்லாமல் கொஞ்சம் நீங்கள் பார்த்துக் கொள்ள வேண்டும். நீங்கள் செய்யும் உதவியை நாங்கள் மறக்க மாட்டோம்" என்று கூறினார்.

அதைக் கேட்ட கார்ட், "சரிதான் ஐயா; நகரும் அப்பால், உங்களுக்கு கும்பகோணம் ஸ்டேஷன் மாஸ்டர் வேண்டியவராக இருந்தால், அதற்காக, இன்னும் இரண்டு பேர் உட்காரும் இடத்தைக் காலியாக வைத்து, கம்பெனியாருக்கு நஷ்டம் உண்டாக்குவது நியாயமா? வேறே வண்டியில் இடமிருந்த வரையில் ஜனங்களை அதில் ஏற்றினோம். இப்போது ஒரு பெரிய

அம்மாள் இரண்டாவது வகுப்பு டிக்கெட்டு வாங்கிக் கொண்டு இடம் இல்லாமையால் அவஸ்தைப்படுகிறார்கள். இங்கே இடம் இருக்கையில், அவர்களை மூன்றாவது வகுப்பு வண்டியில் ஏற்றுவது நியாயமாகுமா? இங்கே ஏறப்போகிறவர்கள் ஒரே ஒரு பெண் பிள்ளை ஆகையால் உங்களுக்கு எவ்வித இடைஞ்சலும் ஏற்படாது. ஒவ்வொருவருக்கும் பிரத்தியேகமான ஒவ்வொரு சோபா இருக்கையில், ஒருவரால் மற்றவருக்கு என்ன அசௌ கரியம் ஏற்படப் போகிறது. வழியை விட்டு அப்பால் நகர்ந்து கொள்ளும். நேரமாய்விட்டது. வண்டியை விட வேண்டும்" என்று அழுத்தமாகவும் அதிகார தோரணையாகவும் கூற, அதற்கு மேல் எவ்வித ஆட்சேபனையும் சொல்ல மாட்டாமல் கிழவர் அப்பால் போய்விட்டார். வண்டிக்குள் அன்னிய மனிதர் யாரோ வரப் போகிறார் என்பதை உணர்ந்தவுடனே நால் வரும் தனித்தனியே பிரிந்து நான்கு சோபாக்களில் போய் சௌகரியமாய் உட்கார்ந்து கொண்டனர். ரமாமணியின் பெற்றோர் அதுவரையில் உட்கார்ந்திருந்ததும், கதவிற்கு அருகில் இருந்ததுமான சோபா காலி செய்து விடப்பட்டது. அடுத்த நிமிஷம் கார்ட் கதவைத் திறந்துவிட்டு, "ஏறுங்கள் அம்மா! அதோ முதலில் இருக்கும் சோபா காலியாக இருக்கிறது. அதில் போய் உட்கார்ந்து கொள்ளுங்கள். இந்த வண்டியில் இன்னம் ஒருவர் இருப்பதற்கு இடம் இருக்கிறது. அடுத்த ஸ்டேஷன்களில் இன்னம் யாராவது ஏறவந்தால், ஒருத்தருக்குத் தான் இடம் இருக்கிறது என்று சொல்லுங்கள். ஒருவருக்கு மேல் அதிக மனிதரை விட வேண்டாம்" என்று நிரம்பவும் மரியாதையாகக் கூற, அடுத்த நிமிஷம் ஓர் அம்மாள் ஏறி வண்டிக்குள் வந்து, முதலில் இருந்த சோபாவின் மேல் உட்கார்ந்து கொண்டாள். உடனே கார்டு கதவை மூடிக்கொண்டு அப்பால் போய்விட்டார். வண்டியும் உடனே புறப்பட்டு விட்டது.

அவ்வாறு புதிதாக வந்து உட்கார்ந்து கொண்ட அம்மாள் சுமார் ஐம்பத்தைந்து வயதடைந்தவள் போலக் காணப்பட்டாள். அவளது தலைமயிர் முற்றிலும் நரைத்து வெண்சாமரம் போல் வெளுத்து, பெருத்த புதர் போல அடர்ந்து பொதிர்ந்து காணப்

பட்டது. அவ்வாறு அந்த அம்மாளது தலைமயிர் பொதிர்ந்திருந் தது, அதன் அபாரமான் செழிப்பினால் என்றே கொள்ள வேண்டு மன்றி, அவள் அதை அநாகரிகமாக வைத்திருந்தாள் என்று நினைக்க இடம் இல்லை. அந்த அம்மாளுடைய தோற்றமும், ஆடையாபர ணங்களும், அவள் மூன்றாவது வகுப்பிற்குப் போகாமல் இரண்டாவது வகுப்பு டிக்கெட்டு வாங்கி வந்ததும், அவள் தக்க பெரிய மனுஷி என்பதை நன்றாக வெளிப்படுத்தின. அவளது உடம்பு தங்கப்பாளம் போலப் பழுத்திருந்தது ஆனாலும், ஆங்காங்கு திரைந்து சுருங்கிப் போயிருந்த தோல் அவளது வயது முதிர்ச்சியை நன்றாகக் காட்டியது. அந்த அம்மாள் தனது உடம்பின் மினுமினுப்பிற்கிசைந்தபடி பளபளப்பாகத் தோன்றிய நார்மடிப் புடவை ஒன்றை அணிந்து, நெற்றி, கழுத்து, கைகள் முதலிய சர்வாங்கத்திலும் பளிச்சென்று விபூதி பூசிக் கொண்டிருந் தாள். கழுத்தில் நான்கு வடங்கள் உள்ள தங்கச் சரடு ஒன்று அணியப் பெற்றிருந்தது. இந்தச் சரட்டில் நவரத்னங்கள் இழைக்கப் பெற்ற பெரிய முகப்பு காணப்பட்டது. அதுவுமன்றி தங்கக் குவளை கட்டப்பட்ட ருத்திராக்ஷ மாலையொன்று அந்த அம்மாளுடைய கழுத்தை அலங்கரித்துக் கொண்டிருந்தது. அந்த அம்மாளது வலது கைவிரல்களில் பளீர் பளீர் என்று சுடர் விட்டெரித்த வைர மோதிரம் இரண்டு காணப்பட்டன. அந்த அம்மாளது சுத்த சாத் விகமான முகத்தோற்றம், நார்மடிப் புடவை, விபூதி, ருத்திராக்ஷம் முதலியவை ஒன்று கூடி, அவள் அத்யந்த தெய்வபக்தி வாய்ந்த உத்தம ஸ்திரீ என்பதை முதல் பார்வையிலேயே வெளிப் படுத்தின. அந்த அம்மாள் தனது கையில், சிவப்பு சகலாத்தினால் ஆன மடிசஞ்சி மூட்டை ஒன்றும், பைராகிகள் வைத்திருக்கும் பித்தளைச் செம்பொன்றும் வைத்திருந்தாள். அவை நிற்க, அவளது கையில் மிளகுப் பருமனுள்ள ருத்திராக்ஷங் கள் கோர்க்கப்பட்ட ஜெபமாலை ஒன்றும் காணப்பட்டது. அந்த அம்மாளினது மொத்தத் தோற்றம், அவள் ஒரு பணக்கார சைவ மிராசுதார் வீட்டு எஜமானியான விதவை என்ற எண்ணத்தை உண்டாக்கியது. அவ்வித ஆடையாபரண லட்சணங்களோடு வந்து உட்கார்ந்து கொண்ட வயோதிக ஸ்திரீ பக்கத்தில் அன்னிய புருஷர்கள் இருந் ததைக்

கருதி நாணமும் அடக்கமும் காண்பித்து மரியாதையாக உட்கார்ந்து கொண்டதன்றி, அங்கே யார் இருக்கிறார்கள் என்று அநாகரிகமாய்ப் பார்க்காமல், தனது ஜெப மாலையில் உள்ள உருத்திராக்ஷ மணிகளை நகர்த்தியபடி ஏதோ இஷ்ட தெய்வ நாமத்தை உருக்கமாக ஜெபித்துக் கொண்டே இருந்தாள். சிதம்பரம் ஸ்டேஷனை விட்டுப் புறப்பட்ட வண்டி முன் போல அபரிமிதமான விசையோடு கடுகிப் பாய்ந்து பல சிறிய ஸ்டேஷன்களை மதியாமல் வெகுதூரத்திற்கு ஓரிடத்தில் காணப் படும் பெரிய ஸ்டேஷன்களில் நின்ற வண்ணம் சென்று கொண்டே இருந்தது. சிதம்பரத்தில் உட்கார்ந்த விதவையம்மாள் தான் இருந்த வண்டியில் வேறே யார்யார் இருக்கிறார்கள் என்பதை அறிய வேண்டும் என்ற எண்ணமே கொள்ளாத வளாயும், அவர்கள் இருந்த பக்கத்தில் திரும்பிப் பார்க்க வேண்டும் என்று கூட நினையாமலும் தனது கவனத்தையும் பார்வையையும் வேறு எங்கேயோ வைத்துக்கொண்டு தனது இஷ்ட தெய்வ ஜெபம் செய்வதே மணியமாக உட்கார்ந் திருந்தாள்.

அதுவரையில் தாங்கள் ஏகாதிபத்தியமாய் அனுபவித்து வந்த இடத்தில் அன்னிய மனுஷி ஒருத்தி வந்து விட்டாளே என்ற ஆத்திரமும் அருவருப்பும் பொங்கிய மனதோடு, தமது குதூ கலத்தை அடக்கிக் கொண்டு உட்கார்ந்திருந்த மற்ற நால்வரும் வெகு நேரம் வரையில் மௌனமாகவே இருந்தனர். ஆனால், புதிதாக வந்த அம்மாளினது சுத்த சாத்வீகத் தன்மையையும், அவளால் தங்களுக்கு எவ்வித இடைஞ்சலும் இல்லை என் பதையும் காணக்காண, அவர்களது ஆத்திரமும், அருவருப்பும் படிப்படியாய்க் குறையத் தொடங்கின. எவ்வளவு நீண்ட காலமானாலும் தனது காதலனுக்கு அருகில் இருந்து அவனுடன் விளையாடுவது சிறிதும் தெவிட்டாத தேவாமிர்த பானம் போல ரமாமணிக்குத் தோன்றியது ஆகையால், அவனை விட்டுப் பிரிந் திருந்த அந்தச் சொற்ப காலமும் ஒரு கற்பகாலம் போல அவளுக்குத் தோன்றியது ஆகையால், அவள் தனது உயிரையே விட்டுப் பிரிந்து தவிப்பவள் போலத் தத்தளித்திருந்து, புதிதாய் வந்த விதவையம்மாள் தங்களைக் கவனிக்கவில்லை என்பதை உணர்ந்து மெதுவாக நகர்ந்து பக்கிரியா பிள்ளை இருந்த சோபா

விற்கே போய்ச் சேர்ந்து தனது திருவிளையாடல்களைத் துவக்கிக் கொண்டாள். ஆனால் அவளது தந்தையோ அதற்கு மேல் தமது மனைவியோடு கூட இருக்க எண்ணாமல் தாம் இருந்த சோபாவி லேயே படுத்து உறங்க ஆரம்பித்தார். அவரது மனைவிக்கு அப்போதும் தூக்கம் பிடியாமல் இருந்தது ஆகையாலும்; தன்னோடு பேச யாருமில்லை ஆதலாலும், சும்மா இருந்தது அவளால் சகிக்க இயலாத வேதனையாக இருந்தது. ஆகவே அவள், தனக்கெதிரில் ஜெபம் செய்தபடி உட்கார்ந்திருந்த விதவை யம்மாளை நோக்கி, "அம்மா! நீங்கள் எந்த ஊருக்குப் போகிற வர்கள்?" என்று நயமாகவும் சிநேகபாவமாகவும் வினவினாள்.

அப்போதே தூக்கத்தில் இருந்து விழிப்பவள் போல, அந்த அம்மாள் திடுக்கிட்டு தனது ஜெபத்தில் சென்று லயித்துப் போயிருந்த தனது கவனத்தைத் திருப்பி, "என்ன அம்மா? என்னையா கேட்கிறீர்கள்?" என்று மிகுந்த வாஞ்சையோடு வினவ, உடனே ரமாமணியின் தாய், "ஆமம்மா! உங்களைத் தான் கேட்கிறேன்" என்று மரியாதையாக மறுமொழி கூறினாள். விதவையம்மாள் "நான் பட்டணத்திற்குப் போகிறேன் அம்மா!" என்றாள்.

அந்த அம்மாளின் பெருந்தன்மையையும் இனிமையும் பணிவு மான நடத்தையையும் கண்டு, அவளிடம் ஒருவித அன்பும் இளக்கமும் கொண்டு, மேலும் அவளோடு பேச்சுக் கொடுக்க வேண்டும் என்ற தடுக்க முடியாத ஒருவித வேட்கையினால் தூண்டப்பட்டு, "ஓகோ! அப்படியா! வண்டி பட்டணம் போகும் போது பொழுது விடிந்து போகுமே. அதுவரையில் தூங்காமல் விழித்துக் கொண்டிருந்தால், உடம்பு கெட்டுப் போகாதா? அப்படியே கொஞ்சம் படுத்துத் தூங்குகிறதுதானே. நாங்களும் பட்டணத்திற்குத்தான் போகிறோம். இங்கே வேறே யாரும் வரலாமல் நாங்கள் பார்த்துக் கொள்ளுகிறோம்" என்று அன் பொழுகக் கூறினாள். விதவையம்மாள் அன்பாகப் புன்னகை செய்து, "பரஸ்தலத்திற்குப் போனால் எனக்குத் தூக்கமே பிடிக்கிற தில்லை. என்னுடைய ஜாகையில் இருந்தால்தான் எனக்குச் சரியானபடி தூக்கம் வருகிறது வழக்கம். அல்லது வேறே எங்கே

யாவது போனால், அங்கே இரண்டொரு நாள் இருந்து பழகிய பிறகு தான், எனக்கு சாதாரணமான நிலைமை ஏற்படுகிறது வழக்கம். வண்டி ஓடிக்கொண்டே இருக்கையில் சிலருக்குத் தூக்கம் சாதாரணமாக வந்துவிடுகிறது. நான் எவ்வளவு தான் முயற்சி செய்தாலும் எனக்கு ரயிலில் மாத்திரம் தூக்கம் வருகிறதே இல்லை. உங்களுக்கு ஒரு வேளை தூக்கம் வருகிறதோ என்னவோ? அப்படியானால், தூங்குங்களேன். இங்கே யாரும் வராமல் நான் பார்த்துக் கொள்ளுகிறேன்" என்றாள்.

*ரமாமணியின் தாய்:-* (அன்போடு சிரித்து) நானும் உங்களைப் போலத்தான். எனக்கும் பரஸ்தலத்தில் தூக்கமே பிடிக்கிற வழக்க மில்லை. எனக்குத் தகுந்த ஜோடி யாருமில்லை என்று நினைத் திருந்தேன். நீங்கள் வந்து சேர்ந்தீர்கள். சரி, மற்றவர் வேண்டு மானால் தூங்கட்டும்; நாம் இருவரும் பேசிக் கொண்டிருப்போம்.

*விதவையம்மாள்:-* நாம் பேசிக் கொண்டிருந்தால், மற்றவர் களுக்கு அது உபத்திரவமாக இருக்குமோ என்னவோ. இது இராக் காலம் அல்லவா. நாம் நம்முடைய சுகத்தை அசட்டை செய்தாலும் பிறருக்கு மாத்திரம் எவ்வித இடைஞ்சலும் செய்யக்கூடாது.

*ரமாமணியின் தாய்:-* இங்கே வேறே யார் இருக்கிறார்கள்? ஒருத் தரும் இல்லை. இதோ படுத்திருப்பது என்னுடைய எஜமானர். அவர் அயர்ந்து தூங்கக்கூடியவர் அல்ல. அவர் தூங்குவதற்கும் விழித்திருப்பதற்கும் யாதொரு பேதமும் இருக்காது. நாம் பேசுவதை எல்லாம் அவர் கேட்டுக் கொண்டே தான் இருப்பார்; அதே சமயத்தில் தூங்கிக் கொண்டே இருப்பார். அதை நாம் தூக்கம் என்று சொல்லுவது சரியல்ல; உறக்கம் என்று சொல்ல வேண்டும். அதோ இருப்பது என்னுடைய மகளும், மருமகப் பிள்ளையும். அவர்கள் இருவரும் இளம் பருவத்தினர்; எட்டு நாள் வேண்டுமானாலும் தூங்காமல் ஒருவரோடு ஒருவர் சந்தோஷ மாகப் பேசிக்கொண்டிருப்பார்கள். அவர்களுக்குப் பக்கத்தில் இடி இடித்தால் அது அவர்களுடைய காதிற்படாது. அவர்கள் தங்கள் ஜோலியைக் கவனித்துக் கொண்டு தங்கள் பாட்டிலேயே இருப்பார்கள். ஆகையால், நம்மால் யாருக்கும் உபத்திரவம் உண்டாகப் போகிற தில்லை. எங்களைத் தவிர இந்த வண்டியில்

வேறே அன்னியர் யாருமில்லை. ஏனம்மா! நீங்கள் இப்போது ஏறினீர்களே? அது எந்த ஊர்?

**விதவையம்மாள்:-** அது சிதம்பரம்.

*ர. தாய்:-* நீங்கள் தனியாகப் போகிறீர்களே! உங்களுடைய சொந்த ஊரே சிதம்பரந்தானோ?

**விதவையம்மாள்:-** இல்லை இல்லை. சிதம்பரத்தில் நடராஜா வின் தரிசனத்திற்காக நான் வந்திருந்தேன். அங்கே நாலைந்து நாள் தங்கி சுவாமி தரிசனம் செய்து கொண்டு அங்கிருந்து பட்டணம் போகிறேன்.

*ர. தாய்:-* ஓகோ அப்படியா! உங்களுடைய சொந்த ஊர் பட்டணம் போலிருக்கிறது.

**விதவையம்மாள்:-** இல்லை இல்லை. என்னுடைய சொந்த ஊர் பட்டணமல்ல. தெற்கே திருவரங்கம் என்ற ஓர் ஊர் இருக்கிறதாக நீங்கள் கேள்வியுற்றிருக்கலாம். அதை அடுத்தாற்போல நீர்மேல் குமிழி என்று ஒரு சிறிய கிராமம் இருக்கிறது. அதுதான் என்னுடைய சொந்த ஸ்தலம். நான் புண்ணிய ஸ்தலங்களைச் சுற்றிப் பார்த்து சுவாமி தரிசனம் செய்து கொண்டே யாத்திரை போகிறேன்.

*ர. தாய்:-* இப்போது நேராகப் பட்டணம் போகிறீர்களா, அல்லது, வேறே ஏதாவது ஊருக்குப் போகிறீர்களா?

**விதவையம்மாள்:-** நேராகப் பட்டணம் போய் அந்த ஊரில் சில தினங்கள் தங்கி, அதற்குப் பக்கத்தில் உள்ள திருமயிலை க்ஷேத்திரம், திருவொற்றியூரில் பட்டணத்துப் பிள்ளையார் அடக்கமான இடம், திருத்தணிகை முதலிய புண்ணிய ஸ்தலங் களை எல்லாம் தரிசித்துக் கொண்டு, அரக்கோணம் மார்க்கமாய்த் திருவண்ணாமலைக்குப் போய்விட்டுத் திரும்பலாம் என்று உத்தேசிக்கிறேன்.

*ர. தாய்:-* ஓகோ! அப்படியா! உங்களைப் பார்த்தால் பெரிய மனுஷியாள் போல இருக்கிறது. இவ்வளவு தூரதூரமான இடங்களுக் கெல்லாம் வேறே யாரும் துணையில்லாமல்

தனியாய்ப் போகிறீர்களே. உங்களுக்கு வேண்டிய சொந்த மனுஷ்யாள் யாருமில்லையா?

**விதவையம்மாள்:-** (நிரம்பவும் விரக்தியோடு பேசத் தொடங்கி) எனக்கு நெருங்கிய பந்துக்கள் ஆயிரம் பேர் இருக்கிறார்கள்; எனக்குப் பிறகு என்னுடைய சொத்து சுதந்திரங்களை எல்லாம் அவர்கள் அடையக் கூடியவர்களே அன்றி, என்னுடைய ஜீவிய காலத்தில் எனக்கு உதவி செய்யக்கூடிய சொந்தக்காரர் எனக்கு ஒருவரும் இல்லை. கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட இவ்வளவு பெரிய உலகில் பிறருடைய கஷ்டங்களையும் விசனங்களையும் தம்முடையவையாக எண்ணி இரங்கக்கூடிய புண்ணியாத்து மாக்கள் எந்த இடத்திலும் இருக்கிறார்கள்; எந்த ஊரிலும் இருக்கி றார்கள். வழிப்பறி நடத்தும் கள்வருடைய கும்பலில்கூட நீதிநெறி தவறாமல் நடக்கும் யோக்கியன் ஒருத்தன் இருப்பான். மகா கொடிய அரக்கர்களான இராவணன் கும்பகர்ணன் முதலியோர் இராஜ்யபாரம் செய்த மகா பயங்கரமான தேசத்தில் நடுநிலை தவறாத புண்ணியவானான விபீஷணன் ஒருத்தன் இருந்தான் அல்லவா? நம்முடைய தேசத்தில் எப்படி புண்ணிய க்ஷேத்திரங் கள் எங்கு பார்த்தாலும் நிறைந்திருக்கின்றனவோ, அது போல, பரோபகாரச் சிந்தை வாய்ந்த புண்ணியாத்துமாக்களும் எங்கே பார்த்தாலும் ஏராளமாக நிறைந்திருக்கிறார்கள். அவர்கள் தான் என் னுடைய நெருங்கிய பந்துக்கள். அவர்கள் செய்யும் உதவியில் ஆயிரத்தில் ஒரு பங்குகூட சொந்தக்காரர்கள் செய்ய மாட்டார்கள். நம்மிடம் பணம் இருந்தால், அதை எப்படி அபகரிக்கலாம் என்று சொந்தக்காரர்கள் சதியாலோசனை செய்வார்கள். எனக்கு எப்போதும் சிநேகிதர்களும், வழிப்போக்கர்களும் தான் உதவி செய்கிறார்கள். சொந்தக்காரர்கள் என்னைக் கொன்றுவிட்டு என் னுடைய சொத்துகளை எல்லாம் அபகரிக்க வழி தேடுகிறார்கள். ஆகையால் நான் சொந்தக்காரர்களுக்கு மத்தியில் இருப்பதை விட்டு, இப்படி தேசயாத்திரை புறப்பட்டு விட்டேன். இப்போது நீங்கள் தான் இருக்கிறீர்கள். உங்களுக்கும் எனக்கும் இதற்கு முன் பழக்கமில்லை. இப்போது எனக்கு ஏதாவது துன்பம் நேரிட்டால் நீங்கள் என்னைக் கைவிட்டு விடுவீர்களா? அல்லது, நான் பசியினால் துன்பப்படுகிறேன் என்றால், எனக்கு ஒரு கவளம்

அன்னம் கொடுக்க மாட்டீர்களா? இது போலவே, நான் எங்கே போனாலும், நல்ல மனிதர்களின் சங்கமமே எனக்கு ஏற்படுகிறது. ஆகையால், நமக்கு வேறே யாரும் துணையில்லையே என்ற எண்ணமாவது குறையாவது எனக்கு இருந்ததே இல்லை. எல்லா ஜனங்களையும் தெய்வம் காப்பாற்றுகிறதென்பது உங்களுக்குத் தெரியாத விஷயமல்ல. தெய்வம் நேரில் வந்து ஒவ்வொருவரையும் காப்பாற்றாமல், ஒரு மனிதரைக் கொண்டே இன் னொரு மனிதரைக் காப்பாற்றுகிறது. நம்மைக் காப்பாற்ற நம் முடைய சொந்தக்காரர்கள்தான் நம்மோடுகூட வரவேண்டும் என்ற அவசியமே இல்லையல்லவா. உலகத்தில் உள்ள நல்ல மனிதர்கள் எல்லோரும் ஒருவருக்கு ஒருவர் அன்னியோன்னிய பாவமுள்ள நெருங்கிய பந்துக்களே. அவர்கள் எல்லோரும் தனியான ஒரு பெரிய குடும்பத்தைச் சேர்ந்த பந்துக்கள் ஜீவ காருண்யம் என்ற பாந்தவ்வியத்தைவிட மேலான வேறே பாந்தவ்வியம் இந்த உலகில் இருக்கிறதா?

*ர. தாய்:-* ஆம் அம்மா! நீங்கள் சொல்வது நிஜமான வார்த்தை. சொந்தக்காரர்களை விட அன்னியர்கள் தான் நம் விஷயத்தில் அதிகமாக இரங்கி உதவி செய்கிறார்கள் என்பது தெரிந்த விஷயந் தானே. இருந்தாலும், நம்முடைய அக்ஞானம் போகிறதா? யாராவது நம்முடைய சொந்தக்காரர் கூட இருக்க வேண்டும் என்று நம்முடைய மனம் எண்ணுகிறதேயொழிய, அங்கங்கே பரோப காரிகள் இருப்பார்கள் என்று நினைத்துத் துணிந்து நாம் வெளியில் புறப்பட்டு விடுகிறதில்லை. இருந்தாலும் நீங்கள் நிரம்பவும் துணிந்துதான் தனியாகப் பிரயாணம் செய்கிறீர்கள். நீங்கள் சொல்வதைப் பார்த்தால், உங்களுக்குப் பிள்ளை குட்டிகள் யாருமில்லை என்றே நினைக்க வேண்டியிருக்கிறது.

**விதவையம்மாள்:-** எனக்குப் பிள்ளையும் இல்லை; குட்டியும் இல்லை. அந்த ஒரு குறையைத் தான் எனக்குக் கடவுள் வைத்து விட்டார். எனக்கு வேறே யாதொரு குறையுமில்லை. நான் சொன்ன நீர்மேல்குமிழி என்ற கிராமத்தில் என்னுடைய எஜமானர் தான் முதன்மையான மிராசுதார். எங்களுக்கு மூன்று போக நஞ்சை நிலம் ஐம்பது வேலி இருக்கிறது. மூன்று கட்டுகளும் இரண்டு

உப்பரிகைகளும் உடைய பெரிய மாளிகை ஒன்று இருக்கிறது. ஆடு மாடுகள் பெட்டி வண்டிகள் ஆள் மாகாணங்கள் முதலிய சகலமான வைபவங்களும் இருக்கின்றன. என் எஜமானர் இருந்த வரையில் எல்லாவற்றிற்கும் நானும் சொந்தக்காரி என்றே எண்ணி சகல சம்பத்தையும் போக போக்கியங்களையும் அனுபவித்து வந்தேன். எங்களுக்கு ஈசுவரன் ஒரு கடுகவ்வளவு ஆண் குழந்தையை அளித்திருந்தால், இன்னமும் அவைகளுக் கெல்லாம் நான் எஜமானியாகத் தான் இருப்பேன். எங்களுக்குப் புத்திர சந்தானமே இல்லாமல் போய்விட்டது. என் எஜமானர் திடீரென்று இறந்து போய்விட்டார். இதற்கு முன் கருப்போ சிவப்போ என்று கூடக் கண்டிராத அநந்தர வார்சுதார்கள் யார் யாரோ இப்போது முளைத்து விட்டார்கள். என் புருஷருடைய சொத்துகள் யாவும் அவர்களுக்கே இனி சொந்தமாம்; நான் உயிரோடிருக்கும் வரையில், சுகமாக இருந்து சாப்பிடலாமாம். அதற்குமேல் அதிகமாக சொத்துகளை விநியோகிக்கவோ, பராதீனப்படுத்தவோ எனக்கு அதிகாரமே இல்லையாம். இது வரையில் நான் சகல சம்பத்துகளுக்கும் எஜமானியாய் இருந்தது போக, நான் இப்போது ஜீவனாம்சக்காரியாய் விட்டேன். நான் உயிரோடிருப்பது அவர்களுக் கெல்லாம் பெருத்த இடையூறாக இருக்கிறது. ஆகையால், அந்த அநந்தர வார்சுதார்கள் என்னை ரகசியமாகக் கொன்றுவிட வேண்டும் என்று பல வகையில் சதியாலோசனை கள் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரிந்தது. ஆகையால் நானே அவர்களைக் கூப்பிட்டு, "நான் ஸ்தல யாத்திரை செய்யப் போகிறேன். எல்லாவற்றையும் இனி நீங்களே நிர்வகித்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லி விட்டு அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு வந்து, உலகத்தில் உள்ள க்ஷேத்திரங்களுக்கெல்லாம் போய் ஸ்வாமி தரிசனம் செய்து பொழுதைப் போக்கிக் கொண்டிருக்கிறேன். அப்படி நான் செய்யும் சுவாமி தரிசன புண்ணியத்தில் நல்ல நல்ல மனிதர்களுடைய பழக்கமும் சிநேகமும் எனக்குக் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. நான் இது வரையில் என்னுடையது, என்னுடையது என்று எண்ணியிருந்த பொருள் எல்லாம் பொய்ப் பொருளாகி விட்டது. இப்போது கிடைக்கும் கடவுள் தரிசனம்,

நல்லோர் இணக்கம் ஆகிய இரண்டும் இம்மையிலும் பயன் தருவதோடு, மறுமைக்கும் உதவக்கூடிய மெய்ப்பொருளாக இருக்கின்றன என்பதை நான் நிதரிசனமாகக் காண்கிறேன். எனக்குப் பிள்ளை குட்டிகள் பிறந்திருந்தால், அவரிடத்தில் உள்ள பாசமும், சொத்துக்கள் பிறரிடம் போகாமல் நம்மிடமே இருந்து மனதைக் கவருவதான சொந்தமும் ஒன்று கூடி என்னை இப்படிப் பட்ட பரிசுத்தமான மார்க்கத்திலே விட்டிரா. எங்களுக்குப் புத்திர சந்தானம் இல்லாமல் போனதும் ஒரு பெருத்த நன்மைதான் என்று நான் இப்போது உறுதியாக எண்ணி விட்டேன்.

*ர. தாய்:-* ஐயோ பாவம்! உங்களுடைய வரலாற்றை ஏன் கேட்டோம் என்று இருக்கிறது. எப்பேர்ப்பட்ட அபார சம்பத்தி லிருந்த உங்களுக்கு எப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது! உங்களைப் போல சகலமான செல்வத்தையும் முன் பின் தெரியாத அயலாரிடம் மனதார ஒப்புவிக்க வேறே யாருக்கு மனம் வரும்? நீங்கள் மேலான மனப்போக்கு உடையவர்களாக இருக்கிறீர்கள். கடவுள் இனி உங்களுக்கு ஒரு குறைவையும் வைக்கமாட்டார். ஆகா! சகலமான சொத்துகளையும் தாயாதி களிடம் நீங்களே ஒப்பு வித்து விட்டதாகச் சொல்லுகிறீர்களே. உங்களுடைய வழிச் செல விற்கும், உங்கள் ஆயிசு கால பரியந்தம் ஜீவனம் நடப்பதற்கும் நீங்கள் ஒன்றையும் வைத்துக் கொள்ளவில்லையா?

**விதவையம்மாள்:-** என் செலவிற்கு அவர்கள் மாதம் ஒன்றுக்கு நூறு ரூபாய் கொடுக்கிறதென்ற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மாசம் ஒரு தரம் எந்த ஊரில் இருந்து கேட்டாலும், அவர்கள் அதை அனுப்பி விடுவார்கள். அதுவுமன்றி, என் எஜமானர் இறந்த காலத்தில், என் உடம்பில் ஐந்து லட்சம் ரூபாய் பெறுமான முடைய நகைகள் இருந்தன. அவைகளை எல்லாம் நான் என்னுடைய பிரியப்படி உபயோகப்படுத்திக் கொள்ள எனக்கு அதிகாரம் உண்டென்று சொன்னார்கள். ஆகையால் நான் அவை களை விற்றுப் பணமாக்கி, எனக்குப் பழக்கமான ஒரு செட்டி யாருடைய கடையில் வட்டிக்குப் போட்டிருக்கிறேன். நான் எந்த நிமிஷத்தில் போய்க் கேட்டாலும் அந்தத் தொகையை அவர் கொடுத்து விடுவார்.

*ர. தாய்:-* போகட்டும், அவ்வளவாவது உங்களுக் கென்று வைத்துக் கொண்டீர்களே, அது ஒருவிதமான ஆறுதல் தான். அதிருக்கட்டும்; நீங்கள் தேச சஞ்சாரம் புறப்பட்டு எவ்வளவு கால மாகிறது?

*விதவையம்மாள்:-* மூன்று மாச கால மாகிறது.

*ர. தாய்:-* அடேயப்பா! மூன்று மாச காலமாக இப்படி ஊரூராய்ப் போய்க் கொண்டிருந்தால், உங்களுடைய உடம்பு என்னத்திற் காகும்? இன்னும் எவ்வளவு காலம் வரையில் இப்படி நீங்கள் தேச சஞ்சாரஞ் செய்ய உத்தேசித்திருக்கிறீர்கள்?

*விதவையம்மாள்:-* ஊரூராய்ப் போவதில் பலவித நன்மை களும், முக்கியமாக ஆத்ம திருப்தியும் உண்டாகின்றன ஆனாலும், இது வரையில் சொகுசாகவும் மெலுக்காகவும் இருந்து, எவ்வித சௌகரியமும் இல்லாமல் அலைந்து திரிவது தேகத்திற்குப் பிரயாசையாகத் தான் இருக்கிறது. ஒவ்வொரு விதமான அரிசி, ஒவ்வொரு விதமான தண்ணீர், ஒவ்வொரு விதமான படுக்கை, ஒரு நாள் வெயில், ஒரு நாள் மழை, ஒரு நாள் வெப்பம், ஒரு நாள் குளிர், இப்படிப்பட்ட பலவகையான மாறுபாடுகளை மாறி மாறி உடம்புக்குக் கொடுத்துக் கொண்டே இருப்பதால், உடம்பு பலவீனப்பட்டுப் போய்விட்டது. இனி நான் அதிகமாய் அலைந்து கொண்டிருந்தால், வியாதியாய் விழுந்து விடுவேன் போலத் தோன்றுகிறது. ஆகையால், இனி அதிகமாக தேச சஞ்சாரஞ் செய்ய எனக்கு உத்தேசமில்லை. நான் பார்க்க எண்ணிய இடங்கள் எல்லாம் அநேகமாய்த் தீர்ந்து போய் விட்டன. நான் முன்னே சொன்னபடி பட்டணம், மயிலை, திருவொற்றியூர், திருத்தணிகை, திருவண்ணாமலை இந்த இடங்கள் மாத்திரம் பாக்கி இருக்கின்றன. அவைகளைப் பார்த்துக் கொண்டு திரும்பி வந்து ஓரிடத்தில் நிலையாய்த் தங்க உத்தேசிக்கிறேன்.

*ர. தாய்:-* அது தான் நல்ல காரியம். அப்படியே செய்யுங்கள். "நம்முடைய எஜமானர் போய்விட்டார். சொத்து சுதந்திரங்கள் போய்விட்டன. நமக்கு உற்றார் உறவினர் இல்லை. இந்த உலகத்தில் இனி என்ன பற்று இருக்கிறது" என்று நினைத்து

யாராவது உயிரை விட்டுவிட முடியுமா? அவரவர்கள் வாங்கி வந்த விதியைத் தொலைத்து, அவரவர்களுக்கு ஏற்பட்ட ஆயிசுகாலம் வரையில் உலகத்தில் இருந்துதான் போக வேண்டும். இந்த உலகப் பற்று இல்லாதவருக்கு, அந்த உலகப் பற்று என்று ஜனங்கள் சொல்லுவார்கள். அது போல, நீங்கள் இனி உங்களுக் குள்ள மிகுதி ஆயிசு காலத்தை ஈசுவர பக்தியில் செலவிட்டால், அடுத்த ஜென்மத்திலாவது உங்களுக்குச் சுகிர்தம் கிடைக்கும். ஆனால், நீங்கள் தேசயாத்திரை செய்த பிறகு உங்களுடைய சொந்த ஊரில்தானே போய்த் தங்க வேண்டும்?

**விதவையம்மாள்:-** இருந்திருந்து மறுபடி நான் அந்த ஊருக்குத் தானா போக வேண்டும்! எனக்கு இனி அது சொந்த ஊர் அல்லவே அல்ல. என் மனசுக்கு எந்த ஊர் பிடிக்கிறதோ அது தான் இனி எனக்குச் சொந்த ஊர்.

**ர. தாய்:-** ஆம். நீங்கள் இந்த மூன்று மாசகாலமாய் யர்த்திரை செய்கிறீர்களே, எந்த ஊரும் உங்கள் மனசுக்குப் பிடிக்கவில் லையா? நீங்கள் எப்போதும் நிரந்தரமாக இருப்பதற்கு எந்த ஊரை யாவது மனசில் குறிப்பிட்டு வைத்துக் கொண்டிருக்கிறீர்களா.

**விதவையம்மாள்:-** நான் இந்த மூன்று மாச காலத்தில் எத்தனையோ ஊர்களைப் பார்த்தேன். அநேக ஊர்கள் வாசத்திற்கு யோக்கியமாகத் தான் இருக்கின்றன. ஆனாலும், என் மனசுக்கு எதெதில் பிரியம் தெரியுமா? ஊர் காவிரியாற்றை அடுத்ததாக இருக்க வேண்டும். அந்த ஊர் பட்டிக்காடாக இருக்கக் கூடாது. அவ்விடத்தில் விஷ்ணு ஆலயம் சிவாலயம் முதலிய ஆலயங்கள் ஏராளமாக இருக்க வேண்டும். எப்போதும் மங்கள கரமாக கோவில்களில் மேளமும் திருவிழாவும் சுவாமி புறப்பாடு மாக இருக்க வேண்டும். அதோடு ஜனங்களும் நம்முடைய பழைய பழக்க வழக்கங்களை அனுசரித்து சன்மார்க்கத்தில் ஒழுகு கிறவர்களாக இருக்க வேண்டும். விடிந்தெழுந்தால் காவிரியில் ஸ்நானம் செய்து, கோவில்களுக்குப் போய் சுவாமி தரிசனம் செய்து, நல்ல வார்த்தைகளையே எப்போதும் காதால் கேட்டு, நல்ல காரியங்களையே எப்போதும் செய்து என் வாழ்நாட்களைக் கடத்த வேண்டும் என்பது என்னுடைய உத்தேசம். அந்த

அம்சங்கள் எல்லாம் பொருந்திய ஊர்கள் இதுவரையில் இரண்டு தான் என் மனசில் பட்டன.

*ர. தாய்:-* அவை எந்தெந்த ஊர்?

*விதவையம்மாள்:-* ஒன்று திருச்சிராப்பள்ளி, இன்னொன்று கும்பகோணம்.

*ர. தாய்:-* பேஷ்! பேஷ்! இரண்டும் நல்ல ஊர்தான். இரண்டிலும் காவிரியாறு போகிறது. இரண்டிலும் தேவாலயங்கள் ஏராளமாக இருக்கின்றன. அந்த இரண்டு ஊர்களுக்குள் எது சிரேஷ்டமானது என்பதை நீங்கள் நிச்சயிக்க வேண்டிய வேலை ஒன்று தான் பாக்கி வைத்துக் கொண்டிருக்கிறீர்கள் போலிருக்கிறது.

*விதவையம்மாள்:-* அந்த வேலையும் அநேகமாய் முடிந்து போன மாதிரிதான்.

*ர. தாய்:-* ஓகோ! அப்படியானால், இரண்டில் எந்த ஊரில் இருக்க முடிவுகட்டி இருக்கிறீர்கள்?

*விதவையம்மாள்:-* முதலில் திருச்சிராப்பள்ளி தான் என் மனசுக்குப் பிடித்தமாகத் தோன்றியது. ஏனென்றால், அந்த இடத்தில் காவிரியாற்றின் அழகு இவ்வளவென்று சொல்லி முடியாது. ஆனால், முக்கியமான ஒரு விஷயத்தில் அது எனக்குப் பிடிக்க வில்லை. நான் ஒவ்வொரு நாளும் சிவாலயத்திற்குப் போய் ஈசுவர தரிசனம் செய்ய வேண்டும் என்று ஒரு பிரதிக்னை செய்து கொண்டிருக்கிறேன். அந்த ஊரில் ஈசுவரன் மலையின் மேல் இருக்கிறார். ஒவ்வொரு நாளும் மலையின் மேலேறி இறங்கு வதற்கு என்னால் சாத்தியப்படாது. ஆகையால், நான் அந்த ஊர் ஆசையை விட்டுவிட்டேன். முடிவாகக் கும்ப கோணத்தில் தான் இருக்க உத்தேசம். ஆனால், அதில் இன்னொரு முக்கியமான விஷயம் இருக்கிறது. அந்த ஊரில் நான் இருப்பதற்கு நல்ல ஜாகையும், பழகுவதற்கு நல்ல மனுஷ்யாளும் வாய்க்க வேண் டும். அதைப்பற்றித் தான் இப்போது இரவு பகல் கடவுளை பஜித்துக் கொண்டே இருக்கிறேன்.

*ர. தாய்:-* நல்ல மனுஷ்யாளுக்கு அவர்களுடைய கோரிக்கையின் படியேதான் எல்லாக் காரியமும் கைகூடும். உங்களுடைய

பணத்தை எறிந்தால், நல்ல ஜாகைக்குப் பஞ்சமா? வேண்டிய இடம் கிடைக்கும். அதோடு, நாம் நல்லவர்களாக இருந்தால், துஷ்டர்கள் கூட நம்முடைய விஷயத்தில் நல்லவர்களாக நடந்து கொள்வார்கள். உங்களுடைய குணத்திற்கு, நீங்கள் நல்லவர் களைத் தேடி அலைய வேண்டியதே இல்லை. அதிருக்கட்டும்; இவ்வளவு தூரம் கேட்டபிறகு, உங்களுடைய பெயர் இன்ன தென்று தெரிந்து கொள்ள, என் மனம் ஆசைப்படுகிறது.

**விதவையம்மாள்:-** என்னை நீலலோசனியம்மாள் என்பார்கள்.

*ர. தாய்:-* ஓகோ! அப்படியா! ஆம்; நீங்கள் ஒரு செட்டியாரிடம் ஐந்து லட்சம் ரூபாய் பணம் கொடுத்து வைத்திருப்பதாகச் சொல்லுகிறீர்களே, அதை நீங்கள் அப்படியே தான் கடைசி வரையில் வட்டிக்கு விட்டு வைக்க உத்தேசிக்கிறீர்களா? அவர் நூற்றுக்கு என்ன வட்டி கொடுக்கிறார்?

**விதவையம்மாள்:-** அது பெருத்த தொகை. அதுவுமன்றி, அவருடைய அவசரத்துக்கென்று அவர் என்னிடம் கடன் வாங்கி இருந்தால் அவர் அதிகவட்டி கொடுப்பார். நான் என்னுடைய பணம் எங்கேயாவது தக்க இடத்தில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று நானாகவே அவரிடம் கொடுத்து வைத்திருக்கி றேன். ஆனாலும், செட்டியார் நிரம்பவும் யோக்கியமான மனிதர் ஆகையால், அவர் நூற்றுக்குக் கால்வட்டி வீதம் அனுப்பிக் கொண்டு வருகிறார். அந்தப் பணத்தை நான் அவரிடத்திலேயே வைத்திருக்க உத்தேசிக்கவில்லை. நான் நிலையாக ஓர் ஊரில் தங்குகிற வரையில் தான் பணம் செட்டியாரிடம் இருக்கும். பிறகு நான் அதை வாங்கி என் கையில் ரொக்கமாக வைத்துக் கொண்டு, தானம், தருமம் முதலிய காரியங்களை ஏராளமாகச் செய்ய எண் ணுகிறேன். முக்கியமாக என்னை ஆயிசுகால பரியந்தம் வைத்து சாப்பாடு போட்டு யார் அன்பாகக் காப்பாற்றுகிறார்களோ, அவர்களுக்கே அநேகமாய் அந்தத் தொகையில் பெரும் பாகத் தையும் கொடுத்துவிட உத்தேசிக்கிறேன். அதைக் கருதித்தான், எனக்கு நல்ல மனிதராக வேண்டும் என்று நான் சொன்னது.

*ர. தாய்:-* ஓகோ! அப்படியா! நீங்கள் நிரம்பவும் தயாளமான எண்ணத்தைத் தான் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். இப்படிப் பட்ட காருண்ய வள்ளல் இந்த உலகத்தில் இந்தக் காலத்தில் இருப்பது அரிது. நீங்கள் மகா புண்ணியவதி என்பதைப் பற்றி கொஞ்சமும் சந்தேகமே இல்லை. உங்களுடைய தரிசனமும் பழக்கமும் எங்களுக்கு ஏற்பட்டது அதிர்ஷ்டவசம் என்றே நினைக்கிறேன். எங்களுடைய ஊரும் கும்பகோணம் தான். நீங்கள் எங்களுடைய ஊருக்கே வருவதைக் கேட்க, எனக்கு அளவற்ற சந்தோஷம் உண்டாகிறது. உங்களை நாங்கள் அடிக்கடி அந்த ஊரில் பார்க்கும்படியான பாக்கியம் கிடைக்கும் அல்லவா.

***விதவையம்மாள்:-*** (மிகுந்த வியப்போடு) ஓகோ! அப்படியா சங்கதி! உங்கள் ஊரும் கும்பகோணமா! சரி, சரி, நான் இனி கும்ப கோணத்திற்குப் போய்ப் புதிய மனுஷ்யாளைத் தேடி அலையா மல் இருக்கும் பொருட்டு கடவுள் என்னை இந்த வண்டிக்கு இழுத்து வந்து உங்களோடு பரிச்சயம் செய்து வைக்கிறார் போல் இருக்கிறது. அவருடைய திருவிளையாடல்களின் தந்திரங்களை யார் அறிவார்! எங்கெங்கோ இருக்கும் மனிதர்களை எப்படியோ கொண்டு வந்து சேர்த்து என்னென்னவோ காரியங்களை எல்லாம் கூட்டி வைத்து விடுகிறார். ஆகா! கடவுளின் மகிமையே மகிமை! அப்படியா! நீங்கள் இருப்பது கும்பகோணமா! நல்லதாயிற்று. நீங்கள் கும்பகோணத்தில் எந்தத் தெருவில் இப்வர்கள்?

*ர. தாய்:-* நாங்கள் பெரிய தெருவில் இருப்பவர்கள்.

***விதவையம்மாள்:-*** ஓகோ! பெரிய தெருவா! நான் அந்த ஊருக்கு வந்த போது அந்தத் தெருவைப் பார்த்திருக்கிறேன். அது நல்ல அழகான தெரு. அந்தத் தெருவில் உங்களுடையது சொந்த வீடு தானே? உங்களுக்கு அங்கே என்ன தொழிலோ?

*ர. தாய்:-* அது எங்களுடைய சொந்த வீடுதான். எங்களுக்குப் போதுமான சொத்தைக் கடவுள் கொடுத்திருக்கிறார். ஆகையால், நாங்கள் அதை வைத்து காலக்ஷேபம் செய்து கொண்டு சௌக்கிய மாக அந்த ஊரில் இருக்கிறோம் - என்றாள்.

இவ்வாறு அவர்கள் இருவரும் சம்பாஷித்துக் கொண்டிருந்ததை ரமாமணியம்மாளும், அவளது தந்தையும், பக்கிரியா பிள்ளையும் கவனித்துக் கேட்டனர் ஆதலால், நீலலோசனியம்மாளது வரலாறு அவர்களுக்கும் சுவாரஸ்யமாகத் தோன்றியது. நீலலோசனியம்மாள் தான் சேர்த்து வைத்திருந்த ஐந்து லட்ச ரூபாயையும் கும்பகோணத்திற்கு வரவழைத்து வைத்துக்கொள்ள வேண்டும் என்றும், தன்னை வைத்து அன்பாக சவரக்ஷிக்கிறவருக்கு அதைக் கொடுத்து விட உத்தேசிப்பதாயும் நீலலோசனியம்மாள் கூறியதைக் கேட்ட ரமாமணியம்மாளின் மனத்தில் உடனே ஒரு வஞ்சக நினைவு தோன்றியது. அந்த அம்மாளை உபசரித்துத் தனது வீட்டிற்கு அழைத்து கொண்டு போய் இரண்டொரு மாதகாலம் வைத்திருந்து, அவளிடம் தாம் அளவற்ற வாஞ்சை வைத்திருப்பதாகப் பாசாங்கு செய்து, அவளுக்குத் தினம் தினம் விருந்தளித்து அவளது மனத்தையும் பிரியத்தையும் முற்றிலும் கவர்ந்து அவளிடம் உள்ள ஐந்து லட்சம் ரூபாயையும் தாம் அபகரித்துக் கொண்டு அவளை வீட்டை விட்டுத் துரத்திவிட வேண்டுமென்ற கள்ள நினைவு ரமாமணியம்மாளது மனத்தில் உண்டாகி விட்டது. நீலலோசனியம்மாள் ஐந்து லட்சம் ரூபாயைத் தங்களுக்குக் கொடுத்து விட் விரும்பாவிட்டாலும், அவள் கும்பகோணத்திற்குப் போனவுடன் எப்படியும் அந்தத் தொகையை நீர்மேல்குமிழி செட்டியாரிடத்தில் இருந்து வர வழைத்துத் தன் கையில் வைத்துக் கொள்ளும்படி செய்து, அவளுக்கு விஷமிட்டு அவளைக் கொன்றாவது, அந்தச் சொத்தை அபகரித்துவிட வேண்டும் என்ற நினைவு உண்டாகி விட்டது. தான் மாசிலாமணிக்கு வைப்பாட்டியாக இருந்து, அவன் செய் யும் சதியாலோசனைக் கெல்லாம் துணைக்கருவியாக உதவி, அவன் பேரில் தான் உயிரை வைத்திருப்பதாக நடித்துச் சாகசங்கள் செய்தும், தான் அவனிடம் சுமார் ஒரு லட்சத்திற்கு மேல் எதிர்பார்க்க முடியாதென்று அவள் எண்ணினாள் ஆதலால், அதைக் காட்டிலும் ஐந்து பங்கு பெரியதான அபாரசம்பத்து தனக்கு எவ்வித பிரயாசையும் இன்றி சுலபத்தில் கிடைத்துவிடும் என்ற எண்ணம் தோன்றத் தோன்ற, தான் அதோடு மாசிலா மணியின் சம்பந்தத்தை விலக்கிவிட்டு, அந்த நீலலோசனி

யம்மாளிடம் உள்ள சொத்தை அபகரிப்பதிலேயே தன் பொழுதையும் கவனத்தையும் செலுத்தலாமா என்ற யோசனை தோன்றியது ஆனாலும், அடுத்த நிமிஷம் அவளது மனம் வேறுவிதமாக நினைத்தது. அவ்வளவு காலம் வரையில் தான் மாசிலாமணிக்கு உழைத்து விட்டு, தன் உத்தேசப்படி அவ னிடம் ஒரு லட்சம் ரூபாயாவது அபகரிக்காமல் அவனை விட்டு விலகுவது சரியல்ல என்ற எண்ணம் உண்டாயிற்று. ஆகவே, அவன் தனக்கு இட்ட அலுவலைச் சென்னையில் முடித்துவிட்டு, அவனிடம் சென்று ஒரு லட்சம் ரூபாய் அதற்காக சன்மானம் பெற்றுக்கொண்டு அதோடு அவனது தொடர்பை விலக்கிவிட வேண்டும் என்று அவள் முடிவு செய்ததோடு தான் அந்த நிமிஷம் முதல் முயன்று தன்னாலான வரையில் சாகசம் செய்து நீலலோசனியம்மாளது நட்பையும் பிரியத்தையும் சம்பாதிப் பதிலேயே கண்ணும் கருத்துமாய் இருக்க வேண்டும் என்ற உறுதியான தீர்மானத்தையும் செய்து கொண்டாள். அவள் தனது கருத்தை உடனே பக்கிரியா பிள்ளைக்குச் சுருக்கமாகக் கூறியதன்றி, அவனிடம் தனக்கு ஏற்பட்ட அபாரமான மோக வேட்கையை அவ்வளவோடு அடக்கிக் கொண்டாள். மாசிலா மணியிடத்தில் இருந்து தனக்குக் கிடைக்கப்போகும் லட்சம் ரூபாயோடு நீலலோசனியம்மாளின் ஐந்து லட்சம் ரூபாயும் சேர்ந்து ஆறு லட்சமாக வந்து சேர்ந்தவுடனே, தானும் பக்கிரியா பிள்ளையும் அது வரையில் இருந்ததை விடப் பதினாயிரம் மடங்கு வட்டியும் முதலுமாக அதிகரித்த வாஞ்சையும் பிரேமையும் காட்டி, எவரது ஆதங்கமுமின்றி இந்திரன் இந்திராணி போல இருக்கலாம் என்று அவள் மனக்கோட்டை கட்டி அதன் சாரத்தை அவனிடம் ரகசியமாகக் கூறவே, தவில் அடிப்பதைத் தவிர வேறு எந்த விஷயத்திலும் எள்ளளவும் சுய அறிவற்ற வனாய் இருந்த பக்கிரியா பிள்ளை எந்த விஷயத்திலும் அவளது இச்சைப்படி நடந்து கொள்ள ஆயத்தமாக இருந்தான். தான் என்றைக்கும் எதிர்பார்க்க இயலாததும், அவளால் தனக்குக் கிடைப் பதுமான போக போக்கியங்களைக் கருதி, அவன் மாசிலாமணி, நீலலோசனியம்மாள் முதலிய எவரை வேண்டுமானாலும் கொல்வதற்கும் இணங்குபவனாய் இருந்தான்.

ஆகவே, ரமாமணியம்மாள் பக்கிரியா பிள்ளையைத் தனியாக இருக்க விடுத்து, அது வரையில் நீலலோசனியம்மாள் கூறிய சொற்களைச் சிறிதும் கேளாதவள் போலவும், தனது தாயினிடம் இருந்த தண்ணீர்க் கூஜாவில் இருந்து தண்ணீர் குடிக்க வருபவள் போலவும், மெதுவாக எழுந்து வந்து, "அம்மா! ரயில் பிரயாணம் செய்தால் உடம்புக்கு அதிக சூடு உண்டாகும் என்று சொல்லு வார்கள். அது நிஜமான விஷயம். எனக்கு நெஞ்சு காய்ந்து காய்ந்து போகிறது. ஒரே தாகமாக இருக்கிறது. நானும் இது வரையில் பத்துப் பதினைந்து தடவை தண்ணீர் குடித்து விட்டேன். வயிறு மாத்திரம் பிரம்மாண்டமாகப் பெருத்து போய்த் தூக்க முடியாமல் இருக்கிறது. நாக்கு மாத்திரம் வறண்டு வறண்டு போகிறது. கூஜாவில் இன்னம் கொஞ்சம் தண்ணீர் இருந்ததே. அதைக் கொடுங்கள்" என்று குழந்தை போலக் கொஞ்சி பேசிய வண்ணம் தனது தாயினிடம் போக, அவளது நயவஞ்சகங்களை நன்றாக அறிந்திருந்த அவளது தாய் தனது மகள் ஏதோ உள் கருத்தோடு அங்கே வந்திருக்கிறாள் என்றும், அது அநேகமாய் நீலலோசனி யம்மாளைப் பற்றியதாகத்தான் இருக்க வேண்டும் என்றும் ஒரு விதமாக யூகித்துக் கொண்டு, தனது மகளிடம் மிகுந்த அன்பும் சந்தோஷமும் காட்டி கூஜாவில் இருந்த தண்ணீரைப் பருகக் கொடுத்த பின், "அம்மா! இப்படியே தான் உட்கார்ந்து கொள்ளேன்; நான் ஒரு புதிய சிநேகிதம் சம்பாதித்து இருக்கி றேன். இவர்கள் யார் என்பதை நீயும் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டும். இவர்கள் நம்முடைய ஊருக்கே விருந்தாளியாக வரப் போகிறவர்கள்" என்று மதிப்பாகக் கூறினாள்.

உடனே ரமாமணியம்மாள் அப்போதே திரும்பி நீலலோசனி யம்மாளைப் பார்ப்பவள் போல நடித்து, அன்பும் வசீகரமும் அரும்ப தனது முகத்தை அழகாக மலர்த்தி அந்த அம்மாளை நய மாகவும் மரியாதையாகவும் பணிவாகவும் உற்று நோக்கியபடி, "ஒகோ! அப்படியா? நம்முடைய ஊருக்கா விருந்தாளியாய் வரப் போகிறார்கள்! எல்லா மனிதருக்கும் சொந்தமான காரியத்தை ஒருவர் கூட கவனிக்கமாட்டார்கள் என்று ஒரு சுலோகம் சொல்லு வார்கள். ஏனென்றால், அது எல்லோருக்கும் சொந்தம் ஆகை யால், நாம் ஏன் கவனிக்க வேண்டும், மற்றவர்கள் கவனிக்கட்டும்

என்று நினைத்து, கோமுட்டி கோவிலில் பால் வார்த்த கதை போல நடந்து கொள்வது உலக வழக்கமல்லவா. அது போல, இவர்கள் நம்முடைய ஊருக்கே விருந்தாளி என்றால், இவர்களுக்கு உபவாசம் தான் மிஞ்சும். ஆகையால், அப்படிச் சொல்ல வேண்டாம். இவர்கள் நம்முடைய விருந்தாளி என்று சொல்வதற் குத் தடையென்ன? இப்படிப்பட்ட தக்க மனுஷ்யாளை உப சரிப்பதற்கு வேண்டிய யோக்கியதையும் செல்வமும் நம்மிடம் இல்லையா? ஏன் யோசனை செய்கிறீர்கள்?" என்று தனது தாயைப் பார்த்துப் பெருந்தன்மையாகவும் ஹாஸ்யமாகக் கடிந்தும் கூறினாள். உடனே அவளது தாய், "இல்லையம்மா! ஆயிரந்தான் நீ என் மகளாக இருந்தாலும், எனக்கு என்ன அதிகாரமிருக்கிறது. எல்லாம் உன்னுடைய சொத்து; உன்னுடைய இஷ்டத்தைத் தெரிந்து கொள்ளாமல், நான் வாக்குக் கொடுத்துவிட்டு, பிறகு அவமானப்படுவது நல்லதல்ல என்று நினைத்து நான் இவர்களுக்குப் பிடிகொடாமல் இருந்தேன். இவர்களுடைய வரலாற்றையும், கண்ணியமான யோக்கியதையையும் கேள் வியுற்ற உடனே, இவர்களுக்கு நம்மாலான உதவியை எல்லாம் செய்ய வேண்டும் என்ற ஆசை என் மனசில் உண்டாயிற்று. ஆனாலும், நான் சுய அதிகாரியல்ல ஆகையால், உன்னிடம் கலந்து பேசி முடிவைத் தெரிவிக்கலாம் என்று இருந்தேன். அதற்குள் நீயே தண்ணீர் குடிக்க வந்து இந்தப் பிரஸ்தாபத்தை எடுத்தாய். இவர்கள் என்னிடம் சொன்ன வரலாற்றை எல்லாம் நீ கேட்டுக் கொண்டிருந்தாய் அல்லவா?" என்றாள்.

உடனே ரமாமணியம்மாள் தனது தாயின் பக்கத்தில் உட்கார்ந்த படி, "இல்லையே! நான் தூங்கி விழுந்து கொண்டே இருந்தேன். நீங்கள் பேசிய சப்தமே எனக்குக் கேட்கவில்லையே. நம்முடைய வீட்டுக்கு வரும் மனிதர்களுக்கு நாம் தக்கபடி உபசரணை செய்ய வேண்டும் என்பதே என்னுடைய பிரியமன்றி, அவர்களுடைய வரலாற்றை எல்லாம் கேட்டு, அதன்பிறகுதான் அவர்களிடம் மரியாதை வைக்க வேண்டும் என்பது ஒழுங்கான காரியமல்ல. உங்களுக்கு யார் பேரில் பிரியமும், மரியாதையும் ஏற்படு கின்றனவோ, அவர் களிடம் எனக்கும் பிரியமும் மரியாதையும் ஏற்பட்டுவிடும் என்பது நிச்சயம்" என்றாள்.

அதைக் கேட்ட நீலலோசனியம்மாள் மிகுந்த களிப்பும் புன்னகையும் தோற்றுவித்து, "ஆகா! குழந்தை இருந்தாலும் இப்படி அல்லவா இருக்க வேண்டும். உங்கள் குணம் எப்படி இருக்கிறதோ, அது போலவே, உங்கள் குழந்தையின் குணமும் தேவாமிருதம் போல நிரம்பவும் மாதுரியமாக இனிக்கிறது. குழந்தை பேசுகிறதைக் கேட்டுக் கொண்டிருந்தால், மனிதருக்குப் பசி தாகம் முதலியவைகூட உண்டாகா என்றே நினைக்கிறேன். இந்தக் குழந்தையின் அழகையும் அது பேசும் விதரணையையும் பார்க்கும் போது, இப்படிப்பட்ட மாணிக்கக்கட்டி ஒன்று நம்முடைய வயிற்றில் ஜனித்திருக்கக் கூடாதா என்ற ஒரு விசனம் என் மனசில் பொங்குகிறதம்மா. ஆனால், நான் இப்படி பேசுவதி லிருந்து நான் உங்கள் பெண்ணைக் கண்டு பொறாமைப்படு கிறேன் என்று நினைக்க வேண்டாம். ஈசுவரன் எனக்கு ஓர் ஆண்குழந்தையைக் கொடுக்காவிட்டாலும், இப்படிப்பட்ட அருமையான லட்சணங்கள் பொருந்திய ஒரு பெண் குழந்தை யையாவது எனக்கு அளித்திருந்தால், என்னுடைய சகலமான சம்பத்தும் போனதைப் பற்றி நான் நினைக்கவே மாட்டேன். அந்தப் பெண்குழந்தை ஒன்றையே நான் ஒப்பற்ற நிதியாக வைத்துக் கொண்டாடுவேன். என் ஆயிசுகாலம் வரையில் நான் அதற்கு என்னால் ஆன தேக உதவியைச் செய்து என் வாழ் நாளைக் கடத்துவேன். கடவுள் அந்த விஷயத்திலும் பெரிய சதி செய்து விட்டார்" என்றாள்.

ரமாமணியின் தாய், "உங்கள் வயிற்றில் தான் குழந்தை பிறக்காமல் போய்விட்டதே. நீங்கள் யாரையாவது சுவீகாரக் குழந்தையாக வளர்த்துக் கொள்ளுகிறது தானே?" என்றாள்.

அவளுக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்தபடி நீலலோசனியம் மாளை நிரம்பவும் வாஞ்சையாகவும் மகிழ்ச்சியாகவும் பார்த்தபடி ரமாமணியம்மாள், "பாட்டீ! என்னைத்தான் நீங்கள் சுவீகாரப் பெண்ணாக வளர்த்துக் கொள்ளுங்களேன். நீங்கள் எப்படி எங்களைக் கண்டு எங்கள் குணத்தைப் பற்றிப் புகழுகிறீர்களோ, அது போல உங்களைப் பார்க்கும் போதே என் மனசில் தானாகவே ஒருவித வாஞ்சையும், பாசமும் உண்டாகி இழுக்கின்

றன. அது என்ன காரணத்தினாலோ தெரியவில்லை" என்றாள்.

அவர்கள் இருவரும் கூறிய வார்த்தைகளைக் கேட்ட நீலலோசனியம்மாள் கட்டிலடங்கா மன எழுச்சியும் ஆனந்தமும் கொண்டு பூரிப்படைந்தவளாய், "ஆகா! என் கண்ணே, நீ எனக்கு வளர்ப்புப் பெண்ணாக வருகிறேன் என்றா சொல்லுகிறாய்! நான் அவ்வளவு தவம் செய்திருக்கிறேனோ! நாடோடியாய்த் திரிகிறவளான எனக்கு உங்கள் தாய் தகப்பன்மார் உன்னை வளர்ப்புப் பெண்ணாகக் கொடுப்பார்களா? அப்படிப்பட்ட துணிகரமான சொல்லை நான் உபயோகித்தால், எனக்கு உடனே உன் தாய் தகப்பன்மார் சரியான மரியாதை நடத்தமாட்டார்களா? அம்மா! குழந்தாய்! மகா லக்ஷ்மியின் அவதாரம் போல இருக்கும் நீ எனக்கு அபிமான புத்திரி ஆவதாய்ச் சொல்லுவதை நான் மறுத்தால், தானாய் வரும் ஸ்ரீதேவியை வேண்டாம் என்று விலக்குவது போல் அல்லவா முடியும். இப்போது என்னிடம் மிஞ்சியிருக்கும் சொற்ப லக்ஷ்மிகடாக்ஷமும் உடனே என்னை விட்டு விலகி விடுவது நிச்சயம். என்னைக் கண்டு உன் மனசில் ஒரு விதமான பாசமும் வாஞ்சையும் சுரப்பதாக நீ சொல்வது போலவே, என் மனசிலும் அதே உணர்ச்சிகள் எழுந்து கரை புரண்டு வழிகின்றன. நாம் முன் ஜென்மங்களில் நெருங்கிய பந்துக்களாகவாவது, ஆருயிர் நேசர்களாகவாவது இருந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால், இப்படிப்பட்ட உணர்ச்சிகள் உண்டாகமாட்டா" என்றாள்.

உடனே ரமாமணியின் தாய், "ஆம் அம்மா! நீங்கள் சொல்வது சரியான விஷயமே. முன் ஜென்மத்தில் நாம் இதற்கு முன் ஒருவரிடத்தொருவர் மிகுந்த பிரியம் வைத்ததாகத்தான் இருந்திருக்க வேண்டும். இடை இடையில் தூங்கி விழிப்பது போல, நாம் பிரிந்திருந்து மறுபடி இப்போது சேருகிறோம்" என்றாள்.

ரமாமணியம்மாள் முன்னிலும் அதிக பணிவாகவும் இனிமையாகவும் பேசத் தொடங்கி, "அம்மா! வளர்த்துக் கொள்வதென்றால் நான் என்னுடைய தாய் தகப்பன்மாரை விட்டுத் தனியாக உங்களுடைய ஊருக்கே வந்துவிட வேண்டுமோ?" என்றாள்.

நீலலோசனியம்மாள், "இல்லை குழந்தாய்! எனக்கு இனி வேறே ஊர் எதுவுமில்லை. நான் இனி என் ஆயிசுகால பரியந்தம் உங்கள் ஊரான கும்பகோணத்தில் தான் இருக்கப் போகிறேன். நீங்கள் தான் எனக்கு ஒரு நல்ல ஜாகை அமர்த்திக் கொடுக்க வேண்டும். சமையல் முதலிய என்னுடைய குற்றேவல்களைச் செய்ய, ஒரு வேலைக்காரி மாத்திரம் தேவை, நான் வளர்த்துக் கொள்ளும் குழந்தை என்னை, அம்மா! அம்மா! என்று வாஞ்சையோடு அழைத்து, ஒரு நாளில் ஒரு நாழிகை காலமாவது என்னோடு இருந்து, நான் கொடுக்கும் பக்ஷண பலகாரங்களைத் தின்று சந்தோஷமாக என்னோடு பேசிவிட்டுப் போகவேண்டும். நான் அடிக்கடி கொடுக்கும் ஆடையாபரணங்களை வாங்கி அணிந்து கொண்டு, அந்த அலங்காரத்தை நான் கண்டு சந்தோஷம் அடையும்படி செய்ய வேண்டும். மற்ற வேளை களில் அது தன்னுடைய சொந்த தாய் தகப்பன்மாரிடம் இருக்க லாம்" என்றாள். ரமாமணி "அம்மா! நீங்கள் வேறே எங்கேயும் ஜாகை பார்க்க வேண்டிய அவசியமே இல்லை. எங்களுடைய வீடு இரண்டு கட்டுகள் உடைய பெரிய மெத்தை வீடு. அதில் இரண்டாங்கட்டு கொஞ்சமும் உபயோகிக்கப்படாமல் அப்படியே காலியாக இருக்கிறது. உங்களுக்கு அது நிரம்பவும் சௌகரியமாக இருக்கும். நீங்கள் அதையே உங்கள் ஜாகையாக வைத்துக் கொள்ளுங்கள். மற்றபடி நீங்கள் அங்கே வந்த பிறகு உங்களுடைய அன்பும் அபிமானமும் தானாக யார் மேல் உண்டாகின்றனவோ, அவரை நீங்கள் அபிமானக் குழந்தையாக வைத்துக் கொள்ளலாம். ஒருவரிடத்தொருவருக்கு உண்மையான வாஞ்சை இருக்குமானால், அதை நடத்தையில் காட்டி மெய்ப்பிக்க வேண்டுமன்றி, வாயால் சொல்லித் திருப்தி செய்வது சாத்தியமான காரியமல்ல" என்றாள்.

நீலலோசனியம்மாள் மிகுந்த சந்தோஷமும் முகமலர்ச்சியும் காட்டி, "குழந்தாய்! நீ சொன்ன வார்த்தை அக்ஷர லட்சம் பொன் பெறக்கூடிய வார்த்தை. நான் வந்து உங்கள் வீட்டில் இருப்பதால் உங்களுக்கு யாதொரு அசௌகரியமும் ஏற்படாது என்பதை நீங்கள் உறுதியாக வைத்துக் கொள்ளலாம். நான் இப்படி ஊரூராய்

நாதியற்று அலைகிறேனே என்று கடவுளே தமது அபாரமான திருவருட் கருணையால் உங்களுடைய வழியில் என்னைக் கொண்டு வந்து விட்டிருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். குழந்தாய்! உன்னுடைய இஷ்டம் போல நான் உங்கள் வீட்டு இரண்டாங்கட்டில் ஜாகை வைத்துக் கொள்ளுகிறேன். மற்றபடி, நாம் ஒருவர்மேல் ஒருவர் கொண்டுள்ள பிரியத்தைச் செய்கை யிலேயே காட்டிக் கொள்வோம். அதிருக்கட்டும். நாம் இவ்வளவு நெருங்கிய பந்துக்கள் ஆகிவிட்டோமே. இன்னும் நான் உங்க ளுடைய பெயரைத் தெரிந்து கொள்ளவில்லையே" என்றாள்.

ரமாமணியம்மாள், "எனக்கு ஆதியில் வைத்த பெயர் திரிலோக சுந்தரி என்பது. இவர்கள் என்னை செல்லமாக ரமாமணி என்று கூப்பிட்டு வருகிறார்கள். என் தாயாருடைய பெயர் விசாலாக்ஷி யம்மாள்" என்றாள்.

அதைக் கேட்ட நீலலோசனியம்மாள், "ஆகா! அப்படியா! எப்படியாவது நாம் ஒருவரை ஒருவர் பெயர் சொல்லி அழைப்பது போல சுவாமியினுடைய பெயர்களைச் சொல்லி அவரை அழைப் போம். அம்மா! குழந்தாய்! நீ நல்ல பாக்கியசாலி; உன் முகத்தில் லக்ஷ்மி விலாசம் கொஞ்சுகிறது. நீ ஆயிரங்காலம் அமோகமாக வாழ்வாய்" என்று கூறி மனப்பூர்வமாக ஆசீர்வதித் தாள்.

உடனே ரமாமணியம்மாள், "எல்லாம் உங்களைப் போன்ற புண்ணியாத்மாக்களுடைய ஆசீர்வாத பலன்தான். அது இருக்கட்டும். நீங்கள் எப்போது போஜனம் செய்தீர்களோ என்னவோ தெரியவில்லை. நாங்கள் கொஞ்சம் பக்ஷண பலகாரங் கள் கொண்டு வந்திருக்கிறோம். அவைகளில் கொஞ்சம் சாப்பிடுகி றீர்களா?" என்று அன்பொழுகக் கூற, நீலலோசனியம்மாள், "வேண்டாம், தங்கமே! நான் இராத்திரி 9-மணிக்குத்தான் சிதம்பரத்தில் பலகாரம் சாப்பிட்டேன். இரண்டு மூன்று தினங் களாய் எனக்கு உடம்பு சரியாக இல்லை. வயிறு மந்தமாக இருக்கிறது. இந்த அகாலவேளையில், நான் எதையாவது வயிற்றில் செலுத்தினால், பிறகு அது பெருத்த உபத்திரவமாக முடியும். என்னுடைய சாப்பாட்டுக்கென்ன தாயே! இனி நான் உன் மனுஷியாய் விட்டேன். நீ எனக்கு எவ்வளவோ சாப்பாடு

போடப்போகிறாய்; கடவுள் கிருபையால், இன்னும் கொஞ்ச காலம் வரையில் நான் பிழைத்திருந்தால், உன் மனம் திருப்தி அடையும்படி நான் சாப்பிடக் காத்திருக்கிறேன்" என்றாள்.

உடனே விசாலாக்ஷியம்மாள் தனது மகளைப் பார்த்து, "ஆம் குழந்தாய்! அவர்கள் சொல்வது சரியான சங்கதி. அவர்களுக்கு உடம்பு சரியாய் இல்லாத சமயத்தில் அகாலவேளையில், தின் பண்டங்களைக் கொடுப்பது பிசகு. அவர்கள் தான் இனி நம்முடைய மனிதர் ஆகிவிட்டார்கள். செய்கிற விருந்தை எல்லாம் நாளை முதல் செய்வோம்" என்று கூற, நீலலோசனியம்மாள் தேச யாத்திரை புறப்பட்டுவர நேர்ந்த வரலாறு முழுதையும் ரமாமணி யம்மாளுக்குச் சுருக்கமாகத் தெரிவித்தாள். ஆரம்பத்தில், ரமாமணி யம்மாள் பக்கிரியா பிள்ளையோடு தனியாய் இருந்த போதே அவள் மேற்படி வரலாறுகளை எல்லாம் கேட்டுக் கொண்டே இருந்தாள் என்பதும், அவள் நீலலோசனி யம்மாளிடத்தில் உள்ள ஐந்து லட்சம் ரூபாயையும் அபகரித்துவிட வேண்டும் என்ற கருத்தோடு அவ்வாறு தந்திரமாக நடித்தாள் என்பதும் முன்னரே கூறப்பட்டன. ஆகவே, அவள் தனது தாய் இரண்டாம் முறை அதே வரலாற்றைத் தெரிவித்ததைக் கேட்டு, அப்போதே அதைப் புதிதாய்த் தெரிந்து கொண்டவள் போல அளவற்ற வியப்பும், விசனமும், அனுதாபமும், இரக்கமும் கொண்டவள் போல நடித்து நீலலோசனியம்மாளை நோக்கி, "அம்மா! உங்களுடைய வரலாறு கல்லும் கரையும்படியான மகா துக்ககரமான வரலாறாக இருக்கிறது. ஈசுவரன் நல்லவர்களைத் தான் இப்படி சோதிக் கிறான். இடையில் அவர்களுக்குப் பல கஷ்டங்களும் வேதனை களும் நேர்ந்தாலும், முடிவில், அவர்கள் நிரந்தரமான நன்மை யையும் கடவுளின் அருளையும் பூர்த்தியாகப் பெறுவார்கள். எங்களால் ஆன உதவிகளைச் செய்து ஆறுதல்களைச் சொல்லி உங்களை இனி எப்போதும் நாங்கள் நல்ல நிலைமையில் வைத்திருக்க வேண்டும் என்ற கருத்தோடுதான் சர்வேசுவரன் நம்மை இப்படிச் சேர்த்து வைத்தார் போலிருக்கிறது. முதலில் நீங்கள் வந்து ஏறிய காலத்தில், நாம் தனியாய் இருப்பதற்கு இடைஞ்சலாக யாரோ வந்து விட்டார்களே என்று நினைத்து நாங்கள் எங்களுக்குள் சங்கடப்பட்டோம். இப்போது உங்

களுடைய வரலாற்றைக் கேட்டபிறகு, "அடாடா! நாம் எப்பேர்ப் பட்ட பரமபாதகமான நினைவைக் கொண்டோம்" என்று எங்கள் மனமே எங்களை அறுக்கிறது. இப்பேர்ப்பட்ட சிரேஷ்டமான மனிதருடைய பரிச்ச யமும் பிரியமும் எங்களுக்கு ஈசுவரன் உண்டாக்கிக் கொடுத்த தைப்பற்றி நாங்கள் அடையும் ஆனந்தம் சொல்லி முடியாது. இனி நம்முடைய சிநேகமும் வாஞ்சையும் வளர்பிறைச் சந்திரன் போல வளர்ந்து, கரும்பை நுனியில் இருந்து சாப்பிட்டுக் கொண்டு அடிக்குப் போவது போல நாளுக்கு நாள் அதிகரிக்கும் இன்பத்தை யும் ஆனந்தத்தையும் கொடுக்க வேண்டுமாய் கோவில்களில் உள்ள தெய்வங்களை எல்லாம் நான் வேண்டிக் கொள்ளுகிறேன்" என்றாள்.

அவ்வாறு அவர்கள் மூவரும் மேன்மேலும் பற்பல விஷயங் களைப் பற்றி சம்பாஷித்துக் கொண்டே பொழுதைப் போக்கினர். நீலலோசனியம்மாள் அந்த வண்டியில் ஏறியது முதல் கடைசி வரையில் நிகழ்ந்த சம்பாஷணை முழுதையும் கவனித்துக் கேட்டுக் கொண்டிருந்த ரமாமணியம்மாளின் தகப்பனார் சிறிது நேரத்திற்குப் பிறகு எழுந்து உட்கார்ந்து, நீலலோசனியம் மாளோடு நயமாகப் பேச்சுக் கொடுத்து, மற்ற இருவர்களைப் போல, அவரும், அவளிடம் அன்னியோன்னிய பாவத்தை உண்டாக்கிக் கொண்டு அவர்களது சம்பாஷணையில் கலந்து கொண்டார். நீலலோசனியம்மாளது ஐந்து லட்சம் ரூபாயும், அவளது அநாதரவான நிலைமையும், அபார சக்தி வாய்ந்த காந்தம் இரும்பை இழுப்பது போல, அவர்கள் மூவரையும் நீலலோசனியம்மாளிடம் கவர்ந்து கொண்டன. பக்கிரியா பிள்ளை மாத்திரம் தூரத்தில் இருந்தபடியே அவர்களது சம்பாஷணையை அப்போதைக்கப்போது கவனிப்பதும், தூக்கத்தினால் ஆடி விழுவதுமாய்த் தனது பொழுதைப் போக்கிக் கொண்டிருந்தான். கும்பகோணத்தில் உள்ள தமது வீட்டின் இரண்டாவது கட்டில் நீலலோசனியம்மாள் ஜாகை வைத்துக் கொள்ளலாம் என்று ரமாமணியம்மாள் சொன்னதும், தான் அவளுக்கு அபிமான புத்திரியாய் இருப்பதாய் மறை பொருளாகக் கூறியதும், அவளிடம் உள்ள பொருளை அபகரிக்க வேண்டும் என்ற கருத்தோடுதான் என்பதை அவளது தாய் தந்தையார் இருவரும்

வெகு சுலபத்தில் யூகித்துக் கொண்டு அவளுக்கு அனுகூல மாகவே சொல்லிலும் செய்கையிலும் நடிக்கலாயினர்.

அதற்கு மேல் விசேஷ சம்பவம் எதுவும் இல்லாமல் அந்த இரவு கழிந்தது. விடியற்கால சமயத்தில் நீலலோசனியம்மாள் தூங்கி ஆடி விழுந்ததைக் கண்ட மற்ற மூவரும் தமக்குள் சைகை செய்து கொண்டு ஒருவர் ஒருவராய் எழுந்து சிறிது தூரமாக இருந்த ஒரு சோபாவண்டை போய்த் தமது மனக்கருத்தை வெளியிட்டுக் கொண்டதன்றி, நீலலோசனியம்மாளை விடாமல் சென்னையில் தம்மோடுகூட வைத்திருந்து, தாம் திரும்பி கும்பகோணத்திற்குப் போகும் போது கூடவே அழைத்துக் கொண்டு போய்த் தமது வீட்டில் வைத்துக் கொண்டு, அவளிடம் வாஞ்சை உள்ளவர்கள் போல நடித்து, அவளது ஐந்து லட்சம் ரூபாயையும் அபகரித்துக் கொண்டு அவளை ஒழித்துவிட வேண்டும் என்று தமக்குள் முடிவு செய்து கொண்டனர். அதுவரையில் மன்னார்குடி வேலாயுதம் பிள்ளை வீட்டாரை அங்கஹீனப்படுத்தும் விஷயத்தில் சென்று லயித்துப் போயிருந்த அவர்கள் மூவரது மனமும் அதை அடியோடு மறந்து, நீலலோசனியம்மாளைத் தமது வஞ்சக வலையில் வீழ்த்துவதைக் குறித்து மனக்கோட்டைகள் நிர்மாணம் செய்வதில் சுறுசுறுப்பாக வேலை செய்யத் தொடங்கியது. அதுவுமன்றி, அவர்கள் இன்னொருவித முடிவையும் செய்து கொண்டனர். பக்கிரியா பிள்ளை தம்மோடுகூட இருப்பதைப் பற்றி இடும்பன் சேர்வைகாரன் சந்தேகங்கொள்ளாமல் இருப்பதற்கு அவர்கள் ஒரு சூழ்ச்சி செய்தார்கள். தாம் ரயில் பிரயாணம் செய்த காலத்தில் நீலலோசனியம்மாளும், பக்கிரியா பிள்ளையும் தங்களுக்குப் பழக்கமானார்கள் என்றும், பக்கிரியா பிள்ளை நீலலோசனியம்மாளுடைய மகன் என்றும், அவர்கள் பட்டணத்திற்கு வேடிக்கை பார்க்கப் போகிறார்கள் என்றும், அவர்கள் தங்களோடு கூடவே இராமசாமி முதலியார் சத்திரத்தில் தங்குவார்கள் என்றும், பிறகு அவர்கள் தங்களுடனேயே கும்ப கோணம் வந்து தங்களுடைய வீட்டின் இரண்டாவது கட்டை வாடகைக்கு எடுத்துக் கொள்ள உத்தேசிக்கிறார்கள் என்றும், தாங்கள் இடும்பன் சேர்வைகாரனிடம் சொல்ல வேண்டும்

என்றும், தங்களுடைய சதியாலோசனை பக்கிரியா பிள்ளைக்குத் தெரியாமல் இருக்க வேண்டும் என்றும் அவர்கள் தங்களுக்குள் தீர்மானித்துக் கொண்டனர்.

அதன் பிறகு ரமாமணியம்மாள் பக்கிரியா பிள்ளையிடம் தந்திரமாய்ப் பேசி, நீலலோசனியம்மாள் கும்பகோணத்தில் தங் களுடைய வீட்டின் இரண்டாவது கட்டை வாடகைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறாள் என்றும், அவளும் பட்டணத்தில் தங்களோடு கூடவே இருந்து கூடவே திரும்பி கும்பகோணத்திற்கு வரப் போகிறாள் என்றும் கூறியதன்றி, இடும்பன் சேர்வைகாரனுக் கெதிரில், பக்கிரியா பிள்ளை நீலலோசனியம்மாளுடைய பிள்ளை போல நடித்து, அவளோடு கூடவே நெருங்கிப் பழகிக் கொண் டிருக்க வேண்டும் என்றும், தனது தகப்பனார் ஒருவரைத் தவிர, மற்றவரை பக்கிரியா பிள்ளை ஏறெடுத்துப் பார்க்கக்கூடாது என்றும் கண்டிப்பாகத் தெரிவித்து வைத்தாள். அதைக் கேட்ட பக்கிரியா பிள்ளை எந்த விஷயத்திலும் ரமாமணியம்மாளின் விருப்பப்படியே நடந்து கொள்வதாக உறுதி கூறினான்.

அவ்வித ஏற்பாடுகளை எல்லாம் செய்த பின்னர், ரமாமணியம் மாளும், அவளது பெற்றோரும் முன்போல, நீலலோசனியம்மாள் இருந்த சோபாவிற்கு எதிரில் உட்கார்ந்து கொண்டு ஒன்றையும் அறியாத பரமசாதுவைப் போல நடித்துக் கொண்டிருந்தனர். வெள்ளிக்கிழமை இரவில் அங்கஹீனம் நிறைவேறிய பிறகு, இடும்பன் சேர்வைகாரனையும் அவனது ஆட்களையும் அனுப்பி விட்டு தனக்கு உடம்பு அசௌக்கியமாக இருக்கிறதென்ற முகாந்தி ரத்தை வைத்துக் கொண்டு தாங்களும் பக்கிரியா பிள்ளையும் சென்னையில் சுமார் ஒரு மாதகாலம் இருந்துவிட்டுப் போக வேண்டும் என்று அதற்கு முன் செய்த ஏற்பாடெல்லாம் ஒரு நிமிஷத்தில் தலைகீழாக மாறிப் போய்விட்டது. வெள்ளிக்கிழமை இரவில் தாம் செய்ய உத்தேசித்த பெரிய காரியத்தை நிறைவேற்றி விட்டு, மறுநாள் இரவிலேயே தாம் நீலலோசனியம்மாளை அழைத்துக் கொண்டு ஊருக்குத் திரும்பிவிட வேண்டும் என்று அவர்கள் முடிவு செய்து கொண்டனர். திருத்தணிகை, திருவண்ணாமலை முதலிய ஸ்தலங்களுக்குத் தான் அவசியம்

போய்த்தான் வரவேண்டும் என்று நீலலோசனியம்மாள் சொல்லும் பட்சத்தில், தாமும் அந்த ஸ்தலங்களைப் பார்க்க விரும்புவதாகச் சொல்லி, அவளோடு கூடவே தொடர்ந்து போய், அவளது மனதை அடியோடு கவர்ந்து, எப்படியும் அவளைக் கும்பகோணத்திற்கு அழைத்துக் கொண்டு போய்விட வேண்டும் என்று அவர்கள் உறுதியான முடிவு செய்து கொண்டனர்.

அந்த நிலைமையில் ரயில் வண்டி சென்னையை அடைந்து எழும்பூர் ஸ்டேஷனில் வந்து நின்றது. எல்லோரும் தத்தம் சாமான் களை எடுத்துக் கொண்டு வண்டியை விட்டுக் கீழே இறங்கினார் கள். இடும்பன் சேர்வைகாரனும், போயியும் தமது வசத்தில் இருந்த பெட்டி பேழைகளை எல்லாம் கீழே இறக்கினார்கள். உடனே மூன்று குதிரை வண்டிகள் அமர்த்தப்பட்டன. பெண்டீர் மூவரும் ஒரு வண்டியிலும், பக்கிரியா பிள்ளை, இடும்பன் சேர்வைகாரன், போயி, ரமாமணியின் தகப்பனார் ஆகிய நால்வரும் ஒரு வண்டி யிலுமாக உட்கார்ந்து கொண்டனர். அவர்களது பாத்திரம் படுக்கை முதலிய சாமான்கள் எல்லாம் மூன்றாவது வண்டியில் வைக்க ப்பட்டன. மூன்று வண்டிகளும் அரை நாழிகை காலத்தில் சர் சவலை இராமசாமி முதலியாரது சத்திரத்தை அடைந்தன. அவ்வாறு வண்டிகள் எழும்பூரில் இருந்து சத்திரத்திற்கு வந்த காலத்தில் எவ்வித விசேஷ சம்பவமும் நிகழவில்லை ஆனாலும், ரமாமணியின் தந்தை இடும்பன் சேர்வைகாரனுடன் லோகாபிரம மாய்ப் பேசத் தொடங்கி ரயில் வந்த காலத்தில் நீலலோசனி யம்மாள், பக்கிரியா பிள்ளை ஆகிய இருவருக்கும், தமக்கும் பரிச் சயமாயிற்று என்றும், அவர்கள் பட்டணம் பார்க்க வந்திருக்கி றார்கள் என்றும், அவர்களும் தம்மோடு கூடவே சனிக்கிழமை அன்று திரும்பி கும்பகோணத்திற்கு வரப்போகிறார்கள் என்றும் சொல்லி வைத்தார். இடும்பன் சேர்வைகாரன் அதற்கு முன் நமது பக்கிரியா பிள்ளையைப் பார்த்தவனே அன்று ஆதலின், அந்த வரலாற்றை எல்லாம் அவன் உண்மை என்றே நம்பினான். அவர்களது வேலைக்காரனான போயியும் அந்த வரலாற்றை நிஜம் என்றே எண்ணினான். ரமாமணியின் புருஷரான குடிகார வக்கீல் உயிரோடிருந்த காலத்தில் இருந்தே அந்தப் போயி அவர்களது வீட்டு வாசலில் காவல் இருந்து அவர்களது குற்றேவல்களைச்

செய்து வந்தவன். ரமாமணியம்மாள் தனது புருஷருக்கு விஷம் வைத்து அவரைக் கொன்ற போது, அந்த போயியே ஒரு வைத்தியரிடத்தில் இருந்து ரகசியமாக அவளுக்கு விஷம் வாங்கிக் கொடுத்தவன். தன் புருஷனைக் கொல்வதற்கு அவள் விஷம் கேட்கிறாள் என்பதை உணர்ந்தும், அவன் அவளது தயவைச் சம்பாதித்துக் கொள்வதற்காக, அவ்வாறு அவளுக்கு உடந்தையாய் இருந்து விஷம் வாங்கிக் கொடுத்தான். அந்தக் காலத்தில் மாசிலாமணிக்கும் அவளுக்கும் திருட்டு நட்பு உண்டு என்பதும் அவன் அறிந்த விஷயமே. ஆனால், அதன் பிறகு அவள் ரகசியத்தில் பக்கிரியா பிள்ளையின் நட்பைச் சம்பாதித்துக் கொண்டு, அவனைப் பகல் வேளைகளில் வீட்டின் பின்வாசலின் வழியாக வரவழைத்து அவனோடு உல்லாசமாக இருந்து வருகிறாள் என்பதை அந்தப் போயி தெரிந்து கொள்ள வில்லை ஆதலால், அவனுக்கும் பக்கிரியா பிள்ளை புதிய மனிதனாகவே தோன்றினான். ஆகவே பக்கிரியா பிள்ளையும் நீலலோசனியம்மாளும் அநேகமாய்த் தாய் பிள்ளை முறைமை உடையவர்களாகத்தான் இருக்க வேண்டும் என்று சேர்வை காரனும், போயியும் யூகித்துக் கொண்டதன்றி, அவர்களைப் பற்றி ரமாமணியின் தந்தை கூறிய விருத்தாந்தத்தை அப்படியே ஏற்றுக் கொண்டனர். ஆனால், அவர்கள் எப்போதும் தம்முடன் கூடவே இருந்தால், தாம் எண்ணிவந்த காரியத்தை நிறைவேற்றுவதற்கு அது ஓர் இடையூறாக இருக்குமே என்ற சந்தேகம் இடும்பன் சேர்வைகாரனது மனதில் உதித்தது ஆனாலும் மற்றவர் இருந் ததைக் கருதி அதை அப்போது வெளியிடாமல், பின்னால், தனிமையில் கேட்டுக் கொள்ளலாம் என்று எண்ணி பேசாமல் இருந்து விட்டான். ரமாமணியம்மாள், இடும்பன் சேர்வைகாரன் முதலியோர் மன்னார்குடி வேலாயுதம் பிள்ளை முதலியோ ருக்குக் கெடுதல் செய்யும் கருத்தோடு சென்னைக்கு வந்திருக் கிறார்கள் என்ற விஷயம் போயிக்குத் தெரியாது ஆனாலும், அவர்கள் மாசிலாமணியின் தூண்டுதலின் மேல் ஏதோ காரியார்த்தமாக சென்னைக்கு வந்திருக்கிறார்கள் என்று மாத்திரம் அவன் தனக்குத்தானே யூகித்துக் கொண்டிருந்தான். அவர்கள் எல்லோரும் சர் சவலை ராமசாமி முதலியாரது சத்திரத்தை

அடைந்தவுடன், இடும்பன் சேர்வைகாரனும் போயியும் சாமான்களை எல்லாம் இறக்கி உள்ளே கொண்டு போய்ச் சேர்த்தனர். அந்தச் சத்திரம் ஒரே காலத்தில் நூற்றுக்கணக்கான ஜனங்கள் தங்குவதற்கும், சுயமாகவே சமையல் செய்து கொள்வதற்கும் தேவையான கூடங்கள், திண்ணைகள், அறைகள் முதலியவை உடைய கட்டிடம் என்பதை நாம் கூறுவது மிகையாகாது. அந்தச் சத்திரத்தின் ஒரு பாகத்தில் பிராமணர்களின் போஜன சாலை ஒன்று ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது. சுயமாகவே சமையல் செய்து கொள்ள மாட்டாத பிரயாணிகள் பணம் கொடுத்து மேற்படி போஜன சாலையில் உண்பது வழக்கம். நமது ரமாமணியம்மாளின் தாயாரான விசாலாக்ஷியம்மாள் நிரம்பவும் உழைப்புக் குணம் உடையவள் ஆதலால், தங்களுக்குத் தேவையான போஜனத்தை அவளே செய்கிறது என்ற தீர்மானத்தின் மேலேயே அவர்கள் பாத்திரம் சாமான்கள் முதலியவைகளைக் கும்பகோணத்தில் இருந்தே கொணர்ந்திருந்தனர். போயி பாத்திரங்களையும் சமையல் அறையையும் சுத்தி செய்து கொடுத்தான். உடனே விசாலாக்ஷியம்மாள் நீராடி சமையல் செய்யத் துவக்கினாள். மற்றவரில் சிலர் நீராடினர்; சிலர் பல்தேய்த்து முகம், கைகால்களை மாத்திரம் சுத்தி செய்து கொண்டனர். ரமாமணியின் தகப்பனார் அருகில் இருந்த காப்பிக் கடைக்குப் போய் சிற்றுண்டிகள், காப்பி முதலியவற்றை ஏராளமாக வாங்கிக் கொணர்ந்து வைத்து, சமையல் ஆவதற்கு அதிக நேரம் பிடிக்கும் ஆதலால், அதற்குள் எல்லோரும் சிற்றுண்டி உண்டு காப்பி பருகுமாறு கேட்டுக் கொள்ள, நீலலோசனியம்மாளைத் தவிர மற்ற எல்லோரும் திருப்திகரமாய் உண்டு ஆங்காங்கு படுத்துக் கொண்டனர். முதல் நாள் இரவு முழுதும் எவரும் தூங்காமலேயே இருந்தவர் ஆதலால், எல்லோரும் அப்படியப்படியே சுவாரஸ்யமாகத் தூக்கத்தில் ஆழ்ந்து விட்டனர். விசாலாக்ஷியம்மாள் மாத்திரம் தூங்காமல் சமையல் செய்து கொண்டிருந்தாள். நமது நீர்மேல்குமிழி நீலலோசனியம் மாள் சிற்றுண்டி உண்ணாமலும், தூங்காமலும் இருந்ததன்றி, தான் சமுத்திரத்திற்குப் போய் ஸ்நானம் செய்துவிட்டு வருவதாக விசாலாக்ஷியம்மாளிடம் சொல்லிவிட்டு,

அவ்விடத்தை விட்டு எங்கேயோ போயிருந்து, மறுபடி பகல் இரண்டு மணிக்குத் திரும்பி வந்து சேர்ந்தாள். சேர்ந்தவள் நன்றாக ஸ்நானம் செய்து பளிச்சென்று விபூதியணிந்து நார்மடி ருத் திராக்ஷம் ஜெபமாலை முதலிய வசீகரமான அங்கங்களோடு காணப்பட, அவளைக் கண்ட விசாலாக்ஷியம்மாள், "அம்மா! சமையல் ஆய்விட்டது. முதலில் நீங்கள் போஜனம் செய்ய வாருங்கள். நீங்கள் காலையில் கூட காப்பி சாப்பிடவில்லை. மணி இரண்டாகிறது" என்று அந்தரங்கமான வாஞ்சையோடு உபசரித்து அழைக்க, அந்த அம்மாள், "அம்மா! நான் இங்கே இருந்து புறப்பட்டுப் போனேன் அல்லவா; போய் சமுத்திரத்தில் ஸ்நானம் செய்து அநுஷ்டானங்களை முடித்து விட்டு இங்கே வந்து கொண்டிருந்தேன். வழியில் ஏராளமான வாடகை மோட்டார் வண்டிகள் பறந்து கொண்டிருக்கின்றன. மயிலாப்பூர், மயிலாப் பூர் என்று சில வண்டிக்காரர்கள் கத்தினார்கள். அவர்கள் என்னைப் பார்த்து மயிலாப்பூருக்கு வருகிறீர்களா என்று கேட்டார்கள். எவ்வளவு நேரத்தில் மயிலாப்பூர் போகலாம் என்று நான் கேட்டேன். பதினைந்து நிமிஷ நேரத்தில், அங்கே கொண்டு போய்விடுவதாகச் சொன்னார்கள். என் மனசில் உடனே ஓர் எண்ணம் உதித்தது. சமுத்திர ஸ்நானம் செய்தது தான் செய் தோம். மயிலாப்பூருக்குப் போய் கபாலீசுவர தரிசனம் செய்து கொண்டு வந்துவிடுவோம் என்ற யோசனை தோன்றியது. உடனே நான் ஒரு வண்டியில் ஏறி உட்கார்ந்து கொண்டேன். கால் மணியில் மயிலாப்பூர் போய்ச் சேர்ந்து, ஆனந்தமாக சுவாமி தரிசனம் செய்து கொண்டேன். நேற்று நான் சரியானபடி ஆகாரம் சாப்பிடாமையால் வயிறு கொஞ்சம் பசிப்பது போலத் தோன்றியது. கோவிலுக்குப் பக்கத்தில் பிராமணர்களுடைய சாப் பாட்டுக் கடை ஒன்று இருக்கிறது. அங்கே போய் நான் போஜனம் செய்து கொண்டு வந்து விட்டேன். என் சாப்பாட்டுக் கவலை நீங்கிவிட்டது. இனி நான் படுத்துத் தூங்க வேண்டும். இன்று முழுதும் நான் எங்கேயும் போகப் போகிறதில்லை. இராத்திரி வேண்டுமானால், இங்கேயே சாப்பிடுகிறேன். எங்களைப் போல நீங்களும் நேற்று இராத்திரி முழுதும் தூங்காமலே இருந்து இன்று இவ்வளவு நேரம் பாடுபட்டு சமையல் செய்திருக்கிறீர்கள்.

உங்களுக்கு நிரம்பவும் அலுப்பாக இருக்கும். மற்ற எல்லோரையும் எழுப்பி உட்கார வைத்து நீங்களும் உட்காருங்கள். நான் எல்லோருக்கும் இலை போட்டுப் பரிமாறுகிறேன். அலுத்துப் போயிருக்கும் நீங்கள் பலதடவை குனிந்து நிமிர்ந்து இத்தனை பேருக்கும் பரிமாறுவது கஷ்டமாக இருக்கும். அந்த வேலையை எனக்குக் கொடுத்துத் தான் தீர வேண்டும்" என்று அந்தரங்கமான வாஞ்சையும், கனிகரமும் தோன்றக் கூற, அதைக் கேட்டு, முதலில் ஆட்சேபனையாகப் பேசிய விசாலாக்ஷியம்மாள், முடிவில் நீலலோசனியம்மாளது சொல்லைத் தான் மீறி நடந்தால், அவளது பிரியம் தங்கள் மேல் ஏற்படாமல் போய்விடுமோ என்ற நினைவினால், அவளது மனப் போக்கின்படி செய்யவிட்டு நயவஞ்சக நடனம் புரியத் தொடங்கி னாள். உடனே ரமாமணியம்மாள், அவளது தந்தை, பக்கிரியா பிள்ளை, போயி, இடும்பன் சேர்வைகாரன் ஆகிய ஐவரும் போஜனத்திற்காக எழுப்பப்பட்டனர். எழுந்தவர்கள் கை கால்களைச் சுத்தி செய்து கொண்டு அவரவர்கள் எங்கெங்கு உட் காருவது முறைமையோ அதன்படி உட்கார்ந்து கொண்டனர். ரமாமணியம்மாளோடு விசாலாக்ஷியம்மாளும் உட்கார்ந்து கொண்டாள். நீலலோசனியம்மாள் அளவற்ற ஊக்கமும் சுறு சுறுப்பும் தோற்றுவித்து அங்குமிங்கும் ஓடி ஓடி எல்லோருக்கும் இலைகள் போட்டு மிகுந்த அன்போடும் உவப்போடும் அன்னம் முதலிய சகலமான பக்குவ பதார்த்தங்களையும் எடுத்தெடுத்துப் பரிமாறி எல்லோரையும் திருப்திகரமாக உண்பித்தாள். எல் லோரும் போஜனத்தை முடித்துக் கொண்டு எழுந்து மூலைக் கொருவராய் உட்கார்ந்து தாம்பூலந் தரித்துக் கொண்டு, மறு படியும் அங்கங்கே படுத்து மாலை நேரம் வரையில் சம்பாஷித்துக் கொண்டே இருக்க, விசாலாக்ஷியம்மாள் அப்படியே அயர்ந்து நித்திரையில் ஆழ்ந்து விட்டாள். நீலலோசனியம்மாள் மற்ற வரைப் போல அயர்ந்து தூங்காவிட்டாலும், இரண்டொரு நாழிகை நேரம் அப்படியே சோர்ந்து உறங்கியபடியே படுத்திருந்தாள்.

மாலை ஐந்து மணிக்கு விசாலாக்ஷியம்மாள் எழுந்து அன்றைய இராப்போஜனம் தயாரிப்பதில் தனது கவனத்தைச் செலுத்த ஆரம்பித்தாள். நீலலோசனியம்மாளும் எழுந்து விசாலாக்ஷியம்

மாளுடன் கூடவே இருந்து தன்னாலான உதவிகளைச் செய் தாள். அன்றைய பகல் பொழுது கழிந்து போக, இரவு வந்தது. எல்லோரும் இராப்போஜனத்தை முடித்துக் கொண்டு, தத்தம் படுக்கைகளை எடுத்து விரித்துக் கொண்டு சௌக்கியமாகப் படுத்துக் கொண்டனர். பகலில் செய்தது போலவே நீலலோசனி யம்மாளே இரவிலும் எல்லோருக்கும் பரிமாறி போஜனம் செய்து வைத்தாள். அந்த அம்மாள் பரிமாறும் விஷயத்தில் உதவி செய்தது விசாலாக்ஷியம்மாளுக்கு நிரம்பவும் அனுகூலமாகவும் இதமாகவும் இருந்ததன்றி, அதனால் அவளது பிரியமும் தங் களிடம் அதிகரித்துக் கொண்டு போவது போலத் தோன்றியது. ஆனால், அன்றைய இரவிலாவது நீலலோசனியம்மாளை உண்பிக்க வேண்டும் என்று விசாலாக்ஷியம்மாள் முயற்சித்தது மாத்திரம் பலிதமடையாமல் போய்விட்டது. நீலலோசனியம்மாள் விசாலாக்ஷியம்மாளைப் பார்த்து, "அம்மா! நான் அநேகமாய் மத்தியான வேளைச் சாப்பாட்டோடு போட்டு விடுவதே வழக்கம். இன்று மத்தியானம் அந்தச் சாப்பாட்டுக் கடையில் நான் சாப்பிட்டது இன்னம் அப்படியே இருக்கிறது. எனக்கு இப்போது ஒன்றும் தேவையில்லை. பக்கத்தில் உள்ள கடைக்குப் போய் நான் இரண்டு வாழைப்பழங்கள் வாங்கி வைத்திருக்கிறேன்; அதையும் கொஞ்சம் பாலையும் சாப்பிடுவதே போதுமானது. இது பெரிய பட்டணம். இவ்விடத்தில் சாப்பாட்டு விஷயத்தில் நிரம்பவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ஏனென்றால், நான் இங்கிருந்த படியே இன்னம் இரண்டொரு ஸ்தலங்களுக்குப் போகவேண்டும். உடம்பைக் கெடுத்துக் கொண்டு படுக்கையில் விழுந்தால், என்னால் மற்றவர்களுக்கும் இடைஞ்சல் ஏற்படும். நாளைய தினம் அதிகாலையில் எழுந்து நான் திருவொற்றியூருக்குப் போய் சுவாமி தரிசனம் செய்து கொண்டு, பட்டினத்தாருடைய சமாதி முதலிய விசேஷங்களைப் பார்த்துவிட்டு அந்தியில் வந்து சேருகிறேன். அதன் பிறகு எனக்கு உடம்பு கெட்டாலும் பரவா யில்லை. அதன் பிறகு நீங்கள் எனக்கு விருந்து செய்யுங்களேன்" என்றாள்.

அதைக் கேட்ட விசாலாக்ஷியம்மாள் அவ்வளவோடு திருப்தி அடைந்து படுத்துக்கொண்டாள். நீலலோசனியம்மாளும் சௌகரியமான ஒரு மூலையில் போய்ப் படுத்துக் கொண்டாள்.

அன்றைய பகற் பொழுதும், இரவும் அவ்வாறு எவ்வித விசேஷ சம்பவமும் இன்றிக் கழிந்தன. ஆனால், இரவு இரண்டு மணி சுமாருக்கு விசாலாக்ஷியம்மாள், ரமாமணியம்மாள், அவளது தந்தை ஆகிய மூவரும் தனித்திருந்து தமக்குள் ஏதேதோ விஷயங் களைப் பற்றி நெடுநேரம் வரையில் ரகசியமாகப் பேசி முடிவு செய்து கொண்டிருந்தனர். விடியற்காலம் ஐந்து மணிக்கு நீல லோசனியம்மாள் எழுந்து குழாயண்டை போய் ஸ்நானம் முதலிய காலைக் கடன்களை முடித்துக் கொண்டு விசாலாக்ஷியம்மாளிடம் வந்து மெதுவாக அவளைத் தட்டி எழுப்பி, "அம்மா! நான் திருவொற்றியூருக்குப் போய்விட்டு மாலையில் வருகிறேன். ஆனால், எனக்குத் துணையாக யாரையாவது என்னோடு அனுப்ப முடியுமானால், மிகுந்த உபகாரமாக இருக்கும்" என்றாள். உடனே விசாலாக்ஷியம்மாள், "சரி உங்கள் பிரியப்படி செய்யுங்கள். ஆனால், அவ்விடத்திற்கு உங்களைத் தனியாக அனுப்புவது சரியல்ல என்று எங்களுக்கே தோன்றியது ஆகை யால், நாங்களே உங்களோடு துணைக்கு மனிதரை அனுப்ப ஏற்பாடு செய்திருக்கிறோம். எங்களுடைய மருமகப்பிள்ளையும் திருவொற்றியூரைப் பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டார் ஆகையால், அவரை உங்களோடு அனுப்பத் தீர்மானித்திருக்கி றோம். அவரை அழைத்துக் கொண்டு போங்கள்" என்று கூறிவிட்டு அவ்விடத்தில் படுத்திருந்த பக்கிரியா பிள்ளையை எழுப்பி விட்டாள். அன்றைய இரவிலேயே ரமாமணியம்மாள் அவனை ரகசியமாக எழுப்பி அவனுக்குச் செய்ய வேண்டிய போதனைகளைச் செய்து வைத்திருந்தமையால், அவன் எழுந்தவுடன் எவ்விதமான கேள்விக்கும் மறுமொழிக்கும் இடங் கொடுக்காமல், பிரயாணத்திற்கு ஆயத்தமானான். அவர்களுக்காக உடனே ஒரு குதிரை வண்டி வருவிக்கப்பட்டது.

அப்போது நீலலோசனியம்மாள் விசாலாக்ஷியம்மாளோடு மறுபடியும் பேசத் தொடங்கி, "ஏனம்மா! நீங்கள் இந்த ஊரில் இன்னும் எத்தனை நாளைக்குத் தங்க உத்தேசிக்கிறீர்கள்? அந்தத் தகவலைச் சொன்னால், அதற்குத் தகுந்தபடி, நான் என்னுடைய யாத்திரைகளை முடித்துக் கொண்டு உங்களோடு புறப்பட ஆயத்தமாகிறேன்" என்றாள்.

விசாலாக்ஷியம்மாள், "அம்மா! நாங்கள் இந்த ஊரில் இந்தத் தடவை அதிகநாள் இருக்க உத்தேசிக்கவில்லை. ஒரு காரியத்தைக் கருதி வெள்ளிக்கிழமை வரையில் நாங்கள் இந்த ஊரில் இருப்போம். சனிக்கிழமை இரவு வண்டியில் புறப்படப் போகிறோம். இன்று நீங்கள் திருவொற்றியூர் போய் வந்து விடுங்கள். இன்னும் பார்க்க வேண்டிய இடம் ஏதாவது பாக்கி இருந்தால் அதை நாளைய தினத்திற்கு வைத்துக் கொள்ளுங்கள். மறுநாளாகிய சனிக்கிழமையன்று நாங்கள் சாமான்களை எல்லாம் சேர்வைகாரர் வசம் ஊருக்கு அனுப்பிவிட்டு உங்களோடு வருகி றோம். இப்படியே அரக்கோணம் மார்க்கமாகத் திருத்தணிகை, திரு வண்ணாமலை ஆகிய இரண்டிடங்களுக்கும் போய்விட்டு அப்படியே ஊருக்குப் போய்விடுவோம்" என்றாள்.

அந்த ஏற்பாட்டை மிகுந்த சந்தோஷத்தோடு ஏற்றுக் கொண்ட நீலலோசனியம்மாள் பக்கிரியா பிள்ளையைத் தன்னோடு அழைத்துக் கொண்டு தங்களுக்காக வந்திருந்த குதிரை வண்டியில் ஏறிக்கொள்ள இருவரையும் வைத்துக் கொண்டு குதிரை வண்டி திருவொற்றியூர் போய்ச் சேர்ந்தது. ரமாமணியம்மாள் முதலியோர் பக்கிரியா பிள்ளையை நீலலோசனியம்மாளுடன் அனுப்பியதன் முக்கிய கருத்து, அவனுக்கும் தங்களுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை என்றும், அவன் நீலலோசனியம்மாளைச் சேர்ந்தவன் என்றும் இடும்பன் சேர்வைகாரன் உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதே. அதோடு, நீலலோசனியம்மாளுக்கும் தாம் உதவி செய்வது போல நடித்து, அவளது பிரியத்தைக் கவர வேண்டும் என்பது இரண்டாவதான கருத்து. ஆனால், ரமாமணியம்மாள் பக்கிரியா பிள்ளையினிடம், எவ்வளவு தூரம் அவசியமோ அவ்வளவு தூரம் விஷயங்களைத் தெரிவித்தாளே அன்றி தங்கள் சதியாலோசனைகளை எல்லாம் அடியோடு தெரிவிக்கவில்லை ஆதலால், அவனுக்கு அவள் சம்பந்தப்பட்ட வரலாறுகளில் பெரும் பாகமும் தெரியாமல் இருந்தது. ஆனால், அவன் ரமாமணி யம்மாளின் புருஷன் என்றே கடைசி வரையில் நீலலோசனி யம்மாளிடம் நடிக்க வேண்டும் என்று அவனை எச்சரித்து வைத் திருந்தார்கள் ஆதலால், அதை மாத்திரம் அவன் உறுதியாக மனதில்

வைத்துக் கொண்டான். அதுவுமன்றி, அவள் கும்பகோணத்தில் ரமாமணியம்மாளின் வீட்டில் வந்து வசிக்கப் போகிறாள் என்று மாத்திரம் அவன் தெரிந்து கொண்டிருந்தானே அன்றி, ரமாமணி யம்மாள் அவளுக்கு அபிமான புத்திரிபோல நடித்து, அவளிடம் உள்ள ஐந்து லட்சம் ரூபாயை அபகரித்துக் கொண்டு அவளை ஒழிக்கக் கருதுகிறாள் என்பதையும் பக்கிரியா பிள்ளை அறியான். ஆனாலும், அவனும் திருவொற்றியூருக்குப் போக வேண்டும் என்று அவனிடம் ரகசியத்தில் ரமாமணியம்மாள் சொன்ன காலத்தில், அவன் தங்களுடைய குடும்ப ரகசியம் எதையும் வெளியிடாமல் நீலலோசனியம்மாளிடம் நிரம்பவும் ஜாக்கிரதை யாக நடந்து கொள்ள வேண்டும் என்று கூறி அவனை எச்சரித் திருந்தாள். ஆகவே அவன் தானாகவே எதையும் நீலலோசனியம் மாளிடம் தெரிவிக்காமல், அவள் கேட்பதற்கு மாத்திரம் சுருக்கமாக மறுமொழி கொடுத்துக் கொண்டே போனான்.

அவர்கள் இருவரும் வண்டியில் உட்கார்ந்து திருவொற்றியூர் போய்ச் சேருகிற வரையில் அவர்களுக்குள் அதிகமான சம்பாஷணை எதுவும் நடக்கவில்லை. நீலலோசனியம்மாள் மிகுந்த ஈசுவர பக்தி யுடையவள் ஆதலால், அவள் அநாவசியமான வார்த்தைகளில் தனது அரிய பொழுதைச் செலவிடாமல், சதாகாலமும் தனது ஜெப மாலையை வைத்து இஷ்ட தெய்வ ஜெபம் செய்தபடியே பெரும்போக்காக இருந்தாள். வண்டி திருவொற்றியூரை அடைந்தவுடன், தாம் திரும்பி வருவதற்கும் அதே வண்டியை அமர்த்தியிருந்தார்கள் ஆதலால், வண்டிக்காரன் வண்டியைச் சௌகரியமான ஓரிடத்தில் அவிழ்த்து விட்டு, குதிரைக்குத் தேவையான புல், கொள் முதலியவற்றை உதவி, தானும் தனது போஜனம் முதலியவற்றைச் செய்து கொண்டு ஒரு திண்ணையில் படுத்திருந்தான்.

நீலலோசனியம்மாள் பக்கிரியா பிள்ளையைத் தனது சொந்த மகனைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு சிரேஷ்டமான அருமை மகன் போல அபாரமான வாஞ்சையோடும் பிரேமையோடும் மரியாதையோடும் நடத்தி, தன்னோடு கூடவே அவனையும் கோவிலுக்கு அழைத்துப் போய் சுவாமி தரிசனம் செய்விக்க.

அவ்விடத்தை விட்டு இன்னம் தான் பார்க்கத் தகுந்த இடங்களை எல்லாம் பார்த்துவிட்டு வந்து, அவ்விடத்தில் உள்ள பிராமணர் சாப்பாட்டுக் கடையில் பக்கிரியா பிள்ளையை உண்பித்ததன்றி, தானும் தனது போஜனத்தை முடித்துக் கொண்ட பிறகு, தாம் ஒரு சத்திரத்தின் திண்ணையில் வெயில் தணிகிற வரையில் இருந்து சிரம பரிகாரம் செய்து கொண்டு, மாலை நான்கு மணிக்குப் புறப்பட வேண்டும் என்று தீர்மானித்து, பக்கிரியா பிள்ளையோடு வசதியான ஒரு சத்திரத்தின் திண்ணையை அடைந்தாள்.

அந்த அம்மாளின் அருமையான குணத்தையும், அவள் தன்னிடம் காட்டும் கரைபுரண்டோடும் வாத்சல்யத்தையும் மரியாதையையும் காணக் காண பக்கிரியா பிள்ளை தன்னை அறியாமலேயே அவளிடம் அத்யந்த பிரியமும் மரியாதையும் வணக்க வொடுக்கமும் காட்டத் தொடங்கினான். அவன் கபட சுபாவம் உடையவன் அல்லன் ஆதலால், விஷயங்களை மாற்றிப் பொய் பேசுவதில் அவன் அவ்வளவு சாமார்த்தியம் அற்றவனாய் இருந்தான். அதுவுமன்றி, தன்னிடம் யாராவது அந்தரங்கமான பிரியமும் மரியாதையும் காட்டினால், அவன் அதனால் வெகு எளிதில் கவரப்பட்டு, தானும் அவர்களிடம் அது போலவே உண்மையாகவும் மரியாதையாகவும் நடந்து கொள்ளும் சுபாவம் உடையவன். ஆகவே, அவன் நீலலோசனியம்மாளது மேலான குணங்களாலும் நயமும் உருக்கமுமான சொற்களாலும் முற்றிலும் வசீகரிக்கப்பட்டு, அவளிடம் உண்மையாகவே நடக்கத் தொடங்கினான். அவர்கள் திண்ணையில் உட்கார்ந்தவுடனே நீலலோசனியம்மாள் கரைகடந்த அன்போடு அவனை நோக்கி, "தம்பீ! வண்டியில் வந்தது உனக்கு அலுப்பாக இருக்கும். கொஞ்சம் இப்படியே படுத்துத் தூங்கு. மூன்று மணி சுமாருக்கு நான் எழுப்புகிறேன். மறுபடி நீ ஏதாவது ஆகாரம் பார்த்துக்கொள். உடனே புறப்பட்டுப் பட்டணம் போய்விடலாம்" என்றாள். அவள் அவ்வாறு பேசிய காலத்தில் அவளது கைவிரல்களில் அணியப் பெற்றிருந்த இரண்டு வைர மோதிரங்களும் பளபள வென்று அழகாக மின்னிக் கண்களைப் பறித்தன. பக்கிரியா பிள்ளையின் திருஷ்டி பல தடவைகளில் அந்த மோதிரங்களின் மேல் சென்று கொண்டே இருந்தன. படுத்துத் தூங்கும்படி அந்த

அம்மாள் சொன்னதைக் கேட்டவுடனே பக்கிரியா பிள்ளை, "இல்லையம்மா! நான் பகலில் படுக்கிறதும் இல்லை. படுத்தாலும் தூக்கம் வராது. இப்படியே சும்மா உட்கார்ந்திருக்கிறேன். நீங்கள் வேண்டுமானால் அப்படியே படுத்துக் கொள்ளுங்கள்" என்று அன்போடு கூறினான். நீலலோசனியம்மாள், "என் சுபாவமும் அப்படிப்பட்டதுதான். நானும் படுக்கிறதுமில்லை. படுத்தாலும், தூக்கம் பிடிக்கிறதே இல்லை. ஆனாலும், நாம் வெயில் தணிகிற வரையில் இங்கே இருந்து பிறகு புறப்பட்டுப் போவோம்" என்றாள்.

உடனே பக்கிரியா பிள்ளை, "ஏனம்மா! நீங்கள் கையில் மோதிரங்கள் போட்டிருக்கிறீர்களே, அவைகளில் இருப்பது புஷ்பராக்க் கல்தானே? ஒவ்வொரு மோதிரமும் என்ன விலை?" என்றான்.

நீலலோசனியம்மாள் தனது பவித்திர விரலில் இருந்த மோதி ரத்தை நிரம்பவும் பிரியத்தோடு கழற்றி அதை அவனிடம் கொடுத்த வண்ணம், "இந்த மோதிரம் ஒவ்வொன்றும் இரண்டாயிரம் ரூபாய் விலை. கல்கள் எல்லாம் வைரக்கல்கள். என் புருஷர் போட்டிருந்த இந்த இரண்டு மோதிரங்களை மாத்திரம் விற்காமல் அவருடைய ஞாபகத்திற்காக நான் வைத்திருக்கிறேன். இந்த மோதிரத்தை நீ உன் கை விரலில் போட்டுப் பார்" என்றாள்.

அவைகளின் அபாரமான விலையைக் கேட்டவுடனே பக்கிரியா பிள்ளை அளவற்ற ஆச்சரியம் அடைந்தவனாய், அந்த மோதிரத்தை மரியாதையாக வாங்கித் தனது சுண்டு விரலில் போட்டுப் பார்க்க, அது அந்த விரலிற்குப் பொருத்தமாக இருந்த தோடு, அதனால் கையின் அழகும் பன்மடங்கு அதிகரித்துத் தோன்றியது. அதைக் காண அவனது மனம் மட்டற்ற மகிழ்ச்சியை அடைந்தது. அவனது முகம் புன்னகையால் மலர்ந் தது. ஆயினும், அவன் அவ்வளவோடு திருப்தி அடைந்து அதை நீலலோசனியம்மாளிடம் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்ற கருத்தோடு கழற்ற எத்தனித்தான். அதைக் கண்ட அந்த அம்மாள், "தம்பீ! கழற்றாதே. மோதிரம் உன் கையிலேயே இருக்கட்டும். அது விதவையான என் கையில் இருப்பதைவிட உன் கையில்

இருப்பது பார்ப்பதற்கு நிரம்பவும் அழகாகவும் பொருத்தமாகவும் இருக்கிறது. அது உனக்கே இருக்கட்டும். என் கையில் இருக்கும் இன்னொரு மோதிரத்தை உன் சம்சாரமாகிய ரமாமணி யம்மாளுக்குக் கொடுத்துவிடப்போகிறேன்" என்று அன்பொழுகக் கூறினாள்.

பக்கிரியா பிள்ளை தான் கேட்டது பொய்யோ மெய்யோ என்று சந்தேகித்தவனாய் மனங்கொள்ளா ஆனந்தமும் பூரிப்பும் அடைந்து தான் எவ்வித மறுமொழி சொல்வது என்பதை அறியாதவனாய்ச் சிறிது நேரம் தத்தளித்த பிறகு, "அம்மா! இரண் டாயிரம் ரூபாய் பெறத்தக்க மோதிரத்தை எனக்குக் கொடுக்கிறீர் களே! இது நியாயமா? அதுவுமன்றி, உங்கள் புருஷருடைய ஞாபகார்த்தமாய் வைத்திருப்பதாகச் சொன்னீர்களே" என்றான்.

நீலலோசனியம்மாள், "ஓகோ உனக்கு உண்மை தெரியாது போலிருக்கிறது. என்னுடைய வரலாறுகளை எல்லாம் நான் அவர்களிடம் தெரிவித்ததை அவர்கள் உன்னிடம் சொல்ல சந்தர்ப்பம் ஏற்படவில்லை போலிருக்கிறது. என்னிடம் ரொக்கமாக ஐந்து லட்சம் ரூபாய் இருக்கிறது. அதோடு மாசம் நூறு ரூபாய் என் ஜீவனத்திற்காக வருகிறது. எனக்குக் குழந்தை குட்டிகள் யாரும் இல்லை. உன்னையும் ரமாமணியம்மாளையும் நான் என்னுடைய் அபிமானக் குழந்தைகளாக வளர்த்துக் கொள்ளப் போகிறேன். நான் இனி உங்களுடைய ஜாகையிலே தான் இருக்கப் போகிறேன். இனி என்னுடைய சொத்து முழுதும் உங்களுடையது. நான் ஞாபகார்த்தமாக வைத்திருக்கும் இந்த இரண்டு மோதிரங்களும் உங்கள் இருவருடைய கைகளிலும் இருப்பது தான் பொருத்தமானது. உங்கள் இருவரையும் நான் என் புருஷருடைய பிரதிநிதிகள் போல பாவிப்பதால், உங்கள் இருவரையும் நான் பார்க்கும் போது, இனி எனக்கு அவருடைய ஞாபகம் வரவேண்டும் ஆதலால், மோதிரங்கள் உங்களிடத்திலே தான் இருக்க வேண்டும்" என்றாள்.

அவள் கூறியதைக் கேட்ட பக்கிரியா பிள்ளை அது கனவோ நினைவோ என்று சந்தேகித்தான் ஆயினும், ரமாமணியம்மாள் முதலியோர் அந்த அம்மாளிடம் காட்டும் அத்யந்த வாஞ்சையை

யும் மரியாதையையும் எண்ண, அது உண்மையான வரலாறாக இருக்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டு, அப்போதே நேரில் சுவர்க்க லோகத்தில் புகுந்தவன் போல விவரிக்க இயலாத பேரானந்த நிலைமையை அடைந்து மௌனத்தில் ஆழ்ந்து போனான். ரமாமணியின் சிநேகத்தால் மேன்மேலும் தனக்கு வந்து சேரும் குபேர சம்பத்தையும் போக பாக்கியங்களையும் எண்ண எண்ண, அவன் ஒரே இன்பமயமாய் நிறைந்து உட்கார்ந்து போனான்.

உடனே நீலலோசனியம்மாள், "தம்பீ! உங்கள் இருவருடைய இனிமையான குணத்தையும் காணக் காண, எப்போது நாம் திரும்பி கும்பகோணம் போவோம், எப்போது நான் என் பணத்தை வருவித்து உங்களிடம் கொடுப்பேன் என்று என் மனம் துடிக்கிறது. நான் முக்கியமாக மயிலாப்பூரையும் இந்த ஊரையும் பார்க்க வேண்டும் என்று வந்தேன். பட்டணத்தில் இன்னம் நான் பார்க்க வேண்டிய கோவில்கள் இரண்டொன்று இருக்கின்றன. அவைகளை எல்லாம் நான் நாளைய தினம் பார்த்து விடுவேன். அதோடு என் வேலை முடிந்து போகும். நீங்கள் கோரி வந்திருக்கும் காரியமும் நாளைக்கு முடிந்து போகும் என்றும், மறு நாள் மாலையில் நாம் எல்லோரும் ஊருக்குப் போகலாம் என்றும் விசாலாக்ஷியம்மாள் சொன்னார்கள். நாளைய தினமாகிய ஒரு பொழுது கழிய வேண்டும். நீங்கள் கோரி வந்திருக்கும் காரியம் நாளைக்கு முடியாமல் ஒருவேளை தாமதப்படுமோ என்னவோ!" என்றாள்.

உடனே பக்கிரியா பிள்ளை, "இல்லை இல்லை; நாங்கள் கருதி வந்திருக்கும் காரியம் நாளைய தினம் ராத்திரி அவசியம் முடிந்து போகும். மறுநாள் நாம் எப்படியும் புறப்பட்டுப் போய் விடலாம்" என்று அழுத்தமாகக் கூறினான்.

நீலலோசனியம்மாள் அதற்கு மேல் கால் நாழிகை வரையில் மௌனமாக இருந்து கண்களை மூடி ஜெபம் செய்த பின் விழித்துக் கொண்டு, "ஏன் தம்பி! உங்களோடு வந்திருக்கிறாரே ஒரு சேர்வைகாரர்; அவர் யார் என்பது தெரியவில்லையே! நீங்கள் அவரிடம் காட்டும் மரியாதையைப் பார்த்தால், அவர் உங்

களுடைய வேலைக்காரர் அல்ல என்பது நன்றாகத் தெரிகிறது. நீங்கள் கோரி வந்திருக்கும் காரியம் ஒருவேளை அவருக்குச் சம்பந்தப்பட்டதாக இருக்கும் போலிருக்கிறது" என்றாள்.

பக்கிரியா பிள்ளை, "எங்கள் ஊரில் மாசிலாமணிப் பிள்ளை என்று ஒரு தனவந்தர் இருக்கிறார். அவருடைய வேலைக்காரர் இவர். அந்த மாசிலாமணிப் பிள்ளையின் விரோதிகள் சிலர் இந்த ஊரில் உள்ள ஒரு பெரிய மனிதர் வீட்டுப் பெண்ணைக் கொள்வ தாக ஏற்பாடு செய்து நாளைய தினம் நிச்சயதாம்பூலம் மாற்ற வருகிறார்களாம். அது சம்பந்தமாக அந்த மாசிலாமணிப் பிள்ளை இந்தச் சேர்வைகாரரை முதலில் அனுப்பி இருக்கிறார். இவருடைய ஆட்கள் சுமார் இருபது பேர் நாளைய தினம் இரவில் வந்து சேருவார்களாம். அவர்கள் என்ன செய்யப் போகிறார்களோ அது எங்களுக்குத் தெரியாது. அதில் எங்களுக்கு யாதொரு சம்பந்தமும் இல்லை. ஆனால், அந்த மாசிலாமணிப் பிள்ளையின் எதிரிகளில் சிலருடைய அடையாளம் இந்தச் சேர்வைகாரருக்குத் தெரியாதாம். நம்முடைய ரமாமணியம்மாள் அவர்கள் இன்னார் இன்னார் என்று இந்தச் சேர்வைகாரருக்குக் காட்டப் போகிறாள். அதுதான் நாளைய தினம் நாங்கள் செய்ய வேண்டிய வேலை. அது முடிந்தவுடன் நாம் புறப்பட்டு விடலாம். அதன் பிறகு சேர்வைகாரரும் அவருடைய ஆட்களும் என்ன செய்யப் போகிறார்களோ அதைப்பற்றி எங்களுக்குக் கவலையில்லை" என்றான்.

அதைக் கேட்ட நீலலோசனியம்மாள், "ஓகோ! அப்படியா? உலகத்தில் ஆயிரம் விவகாரங்கள் இருக்கும். அதை எல்லாம் நாம் ஏன் காதில் வாங்கி மனசைப் பல வழியில் அலட்டிக் கொள்ள வேண்டும். அது எப்படியாவது இருக்கட்டும். முக்கியமாக எனக்குத் தெரிய வேண்டியது ஒரே ஒரு விஷயம். நீங்கள் எவ்வித மான கெட்ட காரியத்திலும் இறங்காத யோக்கியமான மனிதர்கள் என்பதொன்று மாத்திரம் என் மனசுக்கு உறுதியாகத் தெரிந்தால், அதுவே போதுமானது" என்றாள்.

பக்கிரியா பிள்ளை, "நாங்கள் ஒரு நாளும் கெட்ட வழியில் போகிறவர்கள் அல்ல. அதுவுமன்றி இந்தச் சேர்வைகாரரும் எதிரிகளுக்கு அதிக கெடுதல் எதுவும் செய்ய உத்தேசிக்கிறதாகத்

தோன்றவில்லை. இந்தப் பெண்ணை அதன் தகப்பனார் அந்த மாசிலாமணிப் பிள்ளைக்குக் கொடுப்பதாகச் சொல்லி கடைசியில் ஏமாற்றி விட்டாராம். இந்தக் கலியாணம் நடக்காமல் செய்து அந்தப் பெண்ணைத் தானே கட்டிக் கொள்ள வேண்டும் என்பது தான் அந்த மாசிலாமணிப் பிள்ளையின் எண்ணம் போலிருக் கிறது. வேறு வித்தியாசம் எதுவும் இராதென்று நினைக்கிறேன்" என்றான்.

அதைக் கேட்ட நீலலோசனியம்மாள் முற்றிலும் திருப்தியும் மகிழ்ச்சியும் அடைந்தவளாய்த் தனது ஜெபத்தில் புத்தியைச் செலுத்தத் தொடங்கினாள். அதன் பிறகு அவர்கள் இருவரும் ஒருவரோடு ஒருவர் லோகாபிராமமாய் அப்போதைக் கப்போது வார்த்தை சொல்லிக் கொண்டே இருக்க, பொழுதும் கழிந்தது. மாலை நான்கு மணியாயிற்று. நீலலோசனியம்மாள் பக்கிரியா பிள்ளையை மறுபடி ஏதாவது ஆகாரம் பார்த்துக் கொண்டு வரச் செய்து, அவனோடு குதிரை வண்டியில் உட்கார்ந்து கொண்டு திருவொற்றியூரை விட்டுப் பிரயாணமானாள். வண்டியின் குதிரை அதிக வயதான கிழக்குதிரை ஆதலால், அது நிரம்பவும் மெது வாகவே ஓடிவந்து பட்டணத்தை அடைய மாலை ஏழுமணி சமய மாயிற்று. அன்றைய பகல் முழுதும் ரமாமணியம்மாளும் அவளது பெற்றோரும் பட்டணத்தில் உள்ள வேடிக்கைகளில் பலவற்றைப் பார்த்து விட்டுத் திரும்பி வந்தனர். விசாலாக்ஷியம்மாள் அன்றைய இரவிலாவது நீலலோசனியம்மாளை உண்பிக்க வேண்டும் என்ற கருத்தோடு வடை பாயாசங்களோடு கூடிய மாதுரியமான போஜனம் தயாரித்து வைத்து விட்டு, திருவொற்றியூருக்குச் சென்றவரின் வருகையை மிகுந்த ஆவலோடு எதிர்பார்த்திருந்தாள். குதிரை வண்டி வந்து நின்றவுடனே விசாலாக்ஷியம்மாள் ஓடோ டியும் வந்து அளவற்ற சந்தோஷத்தோடும் புன்னகையோடும் நீலலோசனியம்மாளை வரவேற்று, "ஆகா! எவ்வளவு நேரமாக உங்கள் வழியைப் பார்த்துப் பார்த்து கண் பூத்துப்போய் விட்டது. நீங்கள் ஒருவேளை இன்றைய இரவு அங்கேயே தங்கி நாளைக்கு வரத் தீர்மானித்து விட்டீர்களோ என்று சந்தேகித் தோம். ஏன் இவ்வளவு தாமசம்" என்று கூறிய வண்ணம், வண்டி யின் பின்பக்கத்துக் கம்பியை விலக்க, நீலலோசனியம்மாளும்

மகிழ்ச்சியும் புன்னகையும் தோற்றுவித்த வண்ணம், "நாலுமணி வரையில் வெயிலாக இருந்தது. அதற்கு மேல் தான் புறப்பட்டோம். குதிரை மெதுவாக வந்தது. அங்கேயே இன்று இருந்து நாளைக்கு வரலாம் என்று கூட நான் நினைத்தேன். ஆனால் உங்களை விட்டுப் பிரிந்து போய் அவ்வளவு நேரம் இருந்தது மனசில் ஒருவித வேதனையை உண்டாக்கிக் கொண்டு இருந்தது ஆகையால், புறப்பட்டு விட்டோம்" என்று கூறிய வண்ணம் உள்ளே வந்து சேர்ந்தாள். பக்கிரியா பிள்ளையும் கீழே இறங்கி, வண்டிக்காரனை அனுப்பிவிட்டு உள்ளே வந்தான். அப்போது இடும்பன் சேர்வைகாரன் சத்திரத்தின் வெளித் திண்ணையில் உட்கார்ந்திருந்தான் ஆதலால் பக்கிரியா பிள்ளை தனது கையில் அழகாக ஜ்வலித்துக் கொண்டிருந்த வைர மோதி ரத்தை ரகசியமாக ரமாமணியம்மாள் முதலியோருக்குக் காட்டி நீல லோசனியம்மாள் அதைத் தனக்கே கொடுத்துவிட்ட தாகவும், இன்னொன்றை ரமாமணியம்மாளுக்குக் கொடுக்க உத்தேசிப்ப தாய்ச் சொன்னதாகவும் தெரிவித்தான். அதைக் கேட்டு அவர்கள் நீலலோசனியம்மாள் இயற்கையிலேயே பெருந்தன்மை வாய்ந்தவள் என்றும்; அவள் உண்மையிலேயே தங்கள் விஷயத் தில் அளவற்ற வாஞ்சையும் மதிப்பும் வைத்திருக்கிறாள் என்றும், தாம் அவளை ஏமாற்றி, அவளிடம் உள்ள ஐந்து லட்சம் ரூபாயையும் அபகரிப்பது சுலபத்தில் கைகூடி விடும் என்றும் தமக்குள் நினைத்து மிகுந்த மகிழ்ச்சியும் குதூகலமும் அடைந்து நீலலோசனியம்மாளை முன்னிலும் பன்மடங்கு அதிக கனிகரமாக வும், மரியாதையோடும் உவப்போடும் உபசரித்ததன்றி, அன்றைய தினம் அவள் எவ்வித ஆட்சேபனையும் சொல்லாமல், அவளுக்காக தாம் தயாரித்திருந்த முதல் விருந்தை உண்டு தங்களை மகிழ்விக்க வேண்டும் என்று வருந்தி வருந்தி வேண்டிக் கொண்டனர். நீலலோசனியம்மாள், தனக்கு உண்மையில் பசியே இல்லை ஆயினும், அவர்கள் அவ்வளவு பிரியமாகச் சொல்வதைக் கருதிதான் சொற்ப ஆகாரம் பார்ப்பதாகக் கூறி அவர்களது வேண்டுகோளுக்கு இசைந்தாள். ஆனால், தானும் விசாலாக்ஷியம்மாளும் கடைசியில் ஒன்றாக உட்கார்ந்து உண்ணலாம் என்றும், முதலில் மற்றவரை உட்கார வைத்துத் தாம்

இருவரும் பரிமாறுகிறதென்றும் அவர்களுக்குள் முடிவு செய்து கொண்டனர். அதற்கு இணங்க, ரமாமணியம்மாள், அவளது தந்தை, பக்கிரியா பிள்ளை ஆகிய மூவரும் ஓரிடத்தில் உட்கார்ந்து கொண்டனர். இடும்பன் சேர்வைகாரனும், போயியும் தனித்தனி வெவ்வேறு இடத்தில் உட்கார்ந்து கொண்டனர். விசாலாக்ஷியம்மாளும் நீலலோசனியம்மாளும் அவர்களுக்குப் பரிமாறி எல்லோரையும் திருப்திகரமாக உண்பித்தனர். பிறகு அவர்கள் இருவரும் தனித்தனியாய் உட்கார்ந்து தமது போஜனத்தையும் முடித்துக் கொண்டனர். அதன் பிறகு தாம்பூலம் தரித்துக் கொள்ளத் தக்கவர்கள் அந்த வேலையை முடித்துக் கொள்ள, அவர்கள் முதல் நாள் இரவில் எந்தெந்த இடத்தில் சயனித்துக் கொண்டார்களோ, அந்தந்த இடத்திற்கு, தத்தம் படுக்கையோடு போய்ச் சேர்ந்து படுத்து ஒவ்வொருவராய்த் துயிலில் ஆழ்ந்து போயினர். நீலலோசனியம்மாள் தனது மடி சஞ்சியைத் தலையின் கீழ் வைத்துக் கொண்டு முதல் நாள் இரவில் செய்தது போலத் துயின்று கொண்டிருந்தாள். அவர்கள் எல்லோரும் படுத்திருந்த இடம் விசாலமான ஒரு கூடம். அவர்களைத் தவிர, அந்தக் கூடத்தில் வேறு நாலைந்து பிரயாணிகளும் சயனித்துக் குறட்டை விட்டுத் துயின்று கொண்டிருந்தனர். அவ்விடத்தில் கொசுக்கடி அதிகமாக இருந்ததைக் கருதி, அவ்விடத்தில் தொங்கிய ஆறு பட்டை லாந்தரின் தீபத்தை அவர்கள் அணைத்து விட்டனர் ஆதலால், அந்த இடம் இருள் மயமாக நிறைந்திருந்தது.

விடியற்காலம் மூன்று மணி சமயம் இருக்கலாம். எல்லோரும் அயர்ந்து குறட்டை விட்டு நிரம்பவும் சுவாரஸ்யமாகத் தூங்கிக் கொண்டிருந்தனர். அப்போது திடீரென்று அந்தக் கூடத்தில் ஒரு பெரிய கூச்சல் உண்டாயிற்று. "ஐயோ! ஐயோ! திருடன்! திருடன்!" என்று ஒரு ஸ்திரீ கூக்குரலிட்ட ஓசை கேட்டது. கூடத்தில் படுத்திருந்த எல்லோரும் திடுக்கிட்டு விழித்துக் கொண்டு குபீர் என்று எழுந்து, "எங்கே திருடன்? யார் கத்தினது?" என்று ஆவலோடு கேட்டனர். சிலர், "விளக்கைப் பற்ற வையுங்கள்" என்றனர். சிலர், "வாசற் கதவைத் திறக்க வேண்டாம்" என்றனர். ஒருவர் அவ்விடத்தில் இருந்த ஆறுபட்டை லாந்தரைக் கொளுத்தினர். அதனால் அவ்விடத்தில் பளிச்சென்று வெளிச்சம் உண்

டாயிற்று. அவ்விடத்தில் ரமாமணியம்மாள், அவளது பெற்றோர், பக்கிரியா பிள்ளை, இடும்பன் சேர்வைகாரன், போயி, நீலலோசனி யம்மாள் முதலியோரைத் தவிர, அன்னியர்களான நான்கு பிரயாணிகளும் இருந்தனர் என்பது முன்னரே சொல்லப்பட்ட தல்லவா. எல்லோரும் எழுந்து கிலி கொண்டு யாரிடத்தில் இருந்து என்ன வஸ்து திருடப்பட்டது என்பதையும், திருடியவன் யாவன் என்பதையும் அறிய ஆவல் கொண்டு துடிதுடித்து நின்றனர். அப்போது நீலலோசனியம்மாள் தனக்கருகில் இருந்த விசாலாக்ஷி யம்மாளை நோக்கி மிகுந்த வியப்போடு பேசத் தொடங்கி, "என்ன ஆச்சரியத்தைச் சொல்வேன் அம்மா! கொசுக்கடியினால் எனக்குத் தூக்கமே பிடிக்கவில்லை ஆகையால், நான் அரைத் தூக்கமும் அரை விழிப்புமாகப் படுத்திருந்தேன். யாரோ ஓர் ஆண்பிள்ளை மெதுவாக வந்து என் பக்கத்தில் உட்கார்ந்தது போல இருந்தது. அடுத்த நிமிஷம் அவர் என் கையைப் பிடித்து என் கையில் இருந்த வைர மோதிரத்தைக் கழற்றின மாதிரி தோன் றியது. அது கனவு போலவும் இருந்தது; உண்மை போலவும் இருந்தது. என் மனசில் அபாரமான கிலியும் குழப்பமும் உண்டாகி விட்டது. கை கால்கள் எல்லாம் நடுங்க ஆரம்பித்தன. திருடன் மோதிரத்தைக் கழற்றுகிறான் என்று கத்தலாமா என்று நினைத்தேன். வாய் குழறிப் போய்விட்டது. மோதிரத்தை எடுத்துக் கொண்டு, அவர் கொஞ்சம் அப்பால் நகர்ந்தவுடன், எனக்குத் துணிவு உண்டாயிற்று. நான் உடனே, என் கை விரலைப் பார்த்தேன். மோதிரம் காணப்படவில்லை. நான் உடனே கத்தினேன். அவர் உடனே அப்பால் பாய்ந்து கும்பலில் நுழைந்து கொண்டார்" என்று கூறினாள். அந்த அம்மாளது கை கால்கள் எல்லாம் வெடவெட என்று நடுங்கித் தத்தளித்தன. அவளது தோற்றம் மிகுந்த பீதியையும் குழப்பத்தையும் காண்பித்தது. அவள் கூறிய வரலாற்றைக் கேட்கவே, அங்கிருந்தோர் அனை வரும், "என்ன வேடிக்கை இது! இத்தனை பேர் இருக்கையில் துணிந்து இப்படியும் செய்வார்களா! நீங்கள் படுத்திருந்த இடத்தை நன்றாகப் பாருங்கள்" என்றனர். உடனே விசாலாக்ஷியம்மாள் முதலியோர் விளக்கைக் கையில் எடுத்துக் கொண்டு அந்தக் கூடம் முழுதும் தேடிப் பார்த்தனர். நீலலோசனியம்மாள் தனக்குக் கொடுத்த

மோதிரத்தை அணிந்திருந்த பக்கிரியா பிள்ளை அபாரமான திகிலும் கலக்கமும் அடைந்து நடுநடுங்கி நின்றான். அங்கிருந்த போயி, இடும்பன் சேர்வைகாரன் முதலிய ஒவ்வொரு வரும் "நான் ஒரு பாவத்தையும் அறியேன். என்னைச் சோதனை போட்டுப் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று மிகுந்த கவலையோடு கூறினர். அன்னியர்களான பிரயாணிகளும் அதுபோலவே குற்றவாளி அல்ல என்று கூறினர். உடனே விசாலாக்ஷியம்மாள் தனது புருஷனைப் பார்த்து, "சரி, எல்லோரும் இப்படியே இருக்கட்டும். நீங்கள் போய் போலீஸ்காரரை அழைத்துக் கொண்டு வாருங்கள்" என்றாள். அதைக் கேட்ட நீலலோசனி யம்மாள், "மோதிரம் போனால் பீடை போயிற்று. இதற்காக போலீஸாரை ஏன் கூப்பிட வேண்டும்? யாரோ அந்த மோதிரத்தைக் கண்டு பிரியப் பட்டு அதை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களே வைத்து சந்தோஷம் அடையட்டும். போலீஸாரைக் கூப்பிட வேண்டாம்" என்றாள். அப்போது ரமாமணியம்மாளின் மனதில் ஒரு நினைவு தோன்றியது. உண்மையில் யார் திருடியவர் என்பது தெரியா விட்டால், நீலலோசனியம்மாள் தங்கள் பேரில் சந்தேகங் கொண்டு தங்களை அயோக்கியர்கள் என்று எண்ணி, தங்கள் வீட்டில் இராமல் வேறிடத்திற்குப் போய்விட்டால், அதனால், ஐந்து லட்சம் ரூபாய் தங்களுக்கு இல்லாமல் போய்விடுமே என்று நினைத்த ரமாமணியம்மாள், "அப்படியல்ல அம்மா! போலீசார் வந்துதான் ஆக வேண்டும். இப்போது உங்கள் மோதிரத்தை எடுத்தவர் நாளைக்கு என் நகைகளையும் எடுப்பார்கள். நீங்கள் போய் போலீசாரை அழைத்து வாருங்கள் அப்பா!" என்றாள். உடனே ரமாமணியின் தகப்பனார் கதவைத் திறந்து கொண்டு வெளியில் போய் சிறிது நேரத்தில் இரண்டு போலீஸ் ஜவான் களோடு திரும்பி வந்து சேர்ந்தார். தம்மை அழைத்து வந்தவரிடம் போலீசார் அந்தத் திருட்டின் விவரத்தையும், படுத்திருந்த மனிதர்கள் இன்னின்னார் என்பதையும் தெரிந்து கொண்டவர்கள் ஆதலால், அவர்கள் வந்தவுடனே நீலலோசனியம்மாளை நோக்கி, "அம்மா! இதோ இருக்கும் இந்த மனிதர் கையில் போட்டிருக்கிறாரே, இந்த மோதிரமா திருட்டுப் போனது?" என்றனர். நீலலோசனியம்மாள், "இல்லை, அதை அவருக்கு நானே கொடுத்து விட்டேன். அது

போலவே இன்னொன்று என் கையில் இருந்தது. அதைத் தான் யாரோ ஒருவர் வந்து கழற்றிக் கொண்டார்" என்றாள்.

ஜவான்கள், "கழற்றியது ஆண்பிள்ளை தான் என்பது நிச்சய மாகத் தெரிந்ததா?" என்றனர். நீலலோசனியம்மாள், "ஆம். அது நிச்சயமாகத் தெரிந்தது. அதுவுமன்றி, உங்களை அழைத்து வந்த பெரியவர், இந்தப் பக்கிரியா பிள்ளை முதலியவர்கள் எல்லாம் எனக்கு வேண்டியவர்கள். இவர்கள் இந்தக் காரியத்தைச் செய்தே இருக்க மாட்டார்கள். இவர்களோடு வந்திருக்கும் போயியும், சேர்வைகாரரும் கூட அப்படிச் செய்யக் கூடியவராகத் தோன்ற வில்லை. இன்னும் மிகுதியுள்ள பிரயாணிகள் யார் என்பதே எனக்குத் தெரியாது" என்றாள்.

அவள் கூறியதைக் கேட்டுக் கொண்ட ஜவான்கள் விசாலாக்ஷி யம்மாள், ரமாமணியம்மாள், அவளது தந்தை, பக்கிரியா பிள்ளை ஆகிய நால்வரையும் தூர விலகி நிற்கச் செய்து விட்டு, போயி, இடும்பன் சேர்வைகாரன், மற்ற பிரயாணிகள் ஆகிய அறுவரை யும் சோதனைப் போட்டுப் பார்த்தனர். எவரிடத்திலும் மோதிரம் காணப்படவில்லை. விளக்கை எடுத்துக் கொண்டு தரை முழுதும் தேடிப்பார்த்தனர்; பிறகு அவ்விடத்தில் இருந்த மூட்டைகளை எல்லாம் பரிசோதித்துப் பார்க்க எத்தனித்த காலத்தில் நீலலோசனி யம்மாள், "ஐயா! ஏன் வீணில் பிரயாசைப்படுகிறீர்கள். எடுத்தவர் கள் மூட்டையிலா வைக்கப் போகிறார்கள். அது சிறிய மோதிரம். அதை வாயில் போட்டுக்கூட சுலபத்தில் விழுங்கி விடலாம். அப்படி இருக்க; நீங்கள் அதைத் தேடிக் கண்டுபிடிக்க முடியும் என்று நான் நினைக்கவில்லை. மோதிரம் போனால் போகிறது. இவ்வளவோடு விட்டு விடுங்கள்" என்றாள்.

அதைக் கேட்ட போலீசார், "இருக்கட்டும் அம்மா! முதலில் மூட்டையைப் பார்ப்போம். மூட்டையில் இல்லாவிட்டால், பிறகு இவர்களுடைய வயிற்றையும் சோதனை போட்டுப் பார்த்து விடுவோம்" என்றனர்.

நீலலோசனியம்மாள், "வயிற்றை எப்படி சோதனை போடுகிறது?" என்று வியப்போடு கேட்க, ஜெவான்கள், "அம்மா!

இந்த ஊர் பெரிய ஆஸ்பத்திரியில் எக்ஸ்ரே என்று ஒரு கருவி இருக்கிறது. அதன் உதவியால் மனிதருடைய உடம்பின் உள் பக்கத்தை போட்டோகிராப் பிடிக்கலாம். வயிற்றில் மோதிரம் இருந்தால், அந்த போட்டோ கிராப்பில் உடனே அது தெரிந்து போகும்" என்று கூறிய வண்ணம் அங்கிருந்த மூட்டைகளை எல்லாம் ஒன்று விடாமல் எடுத்துப் பரிசோதனை செய்து பார்த்தனர். மோதிரம் அகப்படவில்லை. போலீசார் அவ்விடத்தில் இருந்த அன்னியரான பிரயாணிகள் நால்வரையும், இடும்பன் சேர்வைகாரனையும், போயியையும் அழைத்துக் கொண்டு அவ்விடத்தை விட்டுச் சென்றனர். அவ்வாறு போகும் முன் அவர்கள் நீலலோசனியம்மாளும் மற்றவரும் பொழுது விடிந்த உடன் போலீஸ் ஸ்டேஷனுக்கு வர வேண்டும் என்று சொல்லி விட்டு, அவர்களது ஊர் பெயர் முதலிய விவரங்களை எழுதிக் கொண்டு போயினர்.

அதன் பிறகு ரமாமணியம்மாள் முதலியோருக்குத் தூக்கமே பிடியாமல் போனது ஆகையால், அவர்கள் ஒருவரோடு ஒருவர் சம்பாஷித்துக் கொண்டே படுத்து மிகுதிப் பொழுதையும் கழித் தனர்; இடும்பன் சேர்வைகாரனும், போயியும் யோக்கியமான மனிதர்கள் ஆதலால், அவர்கள் மோதிரத்தைத் திருடி இருக்க மாட்டார்கள் என்றும், மற்ற நான்கு பிரயாணிகளுள் யாரோ ஒருவரே திருடியிருக்க வேண்டும் என்றும் தமக்குள் நிச்சயித்துக் கொண்டனர். விடியற்காலம் ஐந்து மணி சுமாருக்கு நீலலோசனி யம்மாள் தனது வழக்கப்படி குழாயண்டை போய்த் தனது ஸ்நானம், அநுஷ்டானம் முதலியவைகளை முடித்துக் கொள்ள, அதற்குள் பொழுதும் விடிந்தது. அந்தத் திருட்டின் உண்மையைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் எல்லோரது மனதிலும் தோன்றி வதைத்துக் கொண்டிருந்தது. போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய், உண்மை வெளிப்பட்டதா என்பதைத் தெரிந்துகொண்டு வரும்படி ரமாமணியம்மாள் தனது தந்தையைக் கேட்டுக் கொள்ள, அவர் உடனே புறப்பட்டு போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் விட்டு வெகு நேரம் கழித்து திரும்பி வந்து, "என்ன ஆச்சரியத்தைச் சொல்லுவேன்! நாம் யாரை யோக்கியர் என்று நினைத்தோமோ, அவன் தான் அயோக்கியத் தனம் செய்திருக்கிறான். பொழுது

விடிந்தவுடன் போலீசார் சந்தேகப்பட்ட மனிதர்களை எல்லாம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய், எக்ஸ்ரே என்ற யந்திரத்தை வைத்து வயிற்றின் உள் பாகத்தை போட்டோ பிடித்தார்களாம். மோதிரம் நம்முடைய இடும்பன் சேர்வைகாரனுடைய வயிற்றில் இருக்கிறதாம்; அந்தப் படத்தை நானும் பார்த்தேன். மோதிரம் வயிற்றில் இருப்பது நன்றாகத் தெரிகிறது. போலீசார் அவனை மாத்திரம் ஜெயிலுக்கு அனுப்பிவிட்டு, மற்றவரை விட்டு விட்டார்கள். நம்முடைய போயியைக் காய்கறிக் கடைக்குப் போய் விட்டு வரும்படி அனுப்பி இருக்கிறேன். மற்ற பிரயாணிகள் தாம் போக வேண்டிய இடங்களுக்குப் போய் விட்டார்கள். இடும்பன் சேர்வைகாரனை இரண்டு நாளில் தண்டித்து விடுவார்கள். குறைந்தது ஆறுமாத தண்டனையாவது கிடைக்குமாம். போலீசார் எவ்வளவு தூரம் அடித்து வற்புறுத்திக் கேட்டாலும், சேர்வைகாரன் தான் திருடவில்லை என்றும், மோதிரம் தன் வயிற்றில் இருக்கா தென்றும் சொல்லுகிறான். இந்த அம்மாளை சப் இன்ஸ்பெக்டர் விசாரணை செய்ய வேண்டுமாம். வரச் சொன்னார்" என்றார்.

அதைக் கேட்ட மற்றவர் பெருத்த கலக்கமும், கவலையும் விசனமும் அடைந்து என்ன சொல்வதென்பதை அறியாமல் மௌனமாக இருந்தனர். தான் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் விட்டு வருவதாகச் சொல்லிவிட்டு நீலலோசனியம்மாள் உடனே அவ்விடத்தில் இருந்து புறப்பட்டுப் போய்விட்டாள். ரமாமணி யம்மாள் முதலியோர் பெருத்த மனக் கலக்கமும், மலைப்பும் அடைந்து, தாம் போஜனம் செய்ய வேண்டும் என்பதையும் மறந்து அப்படியே உட்கார்ந்து போயினர். தங்களோடு வந்த மனிதரை ஏவி தாங்களே அந்தத் திருட்டை நடத்தி இருக்கிறோம் என்று நீலலோசனியம்மாள் நினைத்து தம்மைப் பற்றி வித்தியாச மான அபிப்பிராயம் கொண்டு விடப் போகிறாளே என்பதே அவர்களது முக்கியமான கவலையாக இருந்தது. அதுவுமன்றி, அன்றைய தினம் வெள்ளிக்கிழமை ஆதலால், நிச்சயதார்த்தம் கோமளேசுவரன் பேட்டையில் நடக்கிறதா, அல்லது, புரசைப் பாக்கத்தில் நடக்கிறதா என்பதைத் தெரிந்து கொண்டு ரமாமணியம் மாள் கல்யாணக் கும்பலில் போய்ச் சேர்ந்து கொள்ள வேண்டும். அதுவுமன்றி, இடும்பன் சேர்வைகாரனுடைய ஆள்களை அவன்

இரவில் நேராக கோமளேசுவரன் பேட்டைக்கு வரும்படி ஏற்பாடு செய்திருந்தான் ஆதலால், அவர்கள் வந்தவுடன், அவர்களைத் தக்கபடி நடத்தி, வேலாயுதம் பிள்ளையின் வீட்டார் இருக்கும் இடத்திற்கு அழைத்துக் கொண்டு போய்க் காரியத்தை நடத்த வேண்டும். பகைவரின் அடையாளத்தை ரமாமணியம்மாள் இடும்பன் சேர்வைகாரனுக்குக் காட்ட வேண்டும். அவன் தன்னுடைய ஆள்களை ஏவி உடனுக்குடன் ஒவ்வொருவரது வேலையையும் முடிக்க வேண்டும். ஆகவே, இடும்பன் சேர்வைகாரன் இல்லாமல் போனால், அவர்கள் கோரி வந்த காரியம் நடவாது. அதுவுமன்றி, இடும்பன் சேர்வைகாரனுடைய ஆள்கள் இன்னின்னார் என்பது கூட, ரமாமணியம்மாள் முதலியோருக்குத் தெரியாது. ஆகவே, அந்தப் பெருத்த இக்கட்டில் தாம் எப்படி நடந்து கொள்வது என்பதை அறியாதவராய், ரமாமணியம்மாள் முதலியோர் குழம்பித் தவித்துத் தத்தளித்தனர். நீலலோசனியம்மாள் பெருந்தன்மை உடையவள் ஆதலால், அவள் இடும்பன் சேர்வைகாரனுக்குத் தண்டனை செய்து வைக்க விரும்ப மாட்டாள் என்றும், அநேகமாய் அவன் விடுதலையடைந்து விடலாம் என்றும், விடுதலை அடையாவிடில், ரமாமணியின் தகப்பனார் அவனை ஜாமீனில் விடுவித்து அழைத்துக் கொண்டு வர வேண்டும் என்றும் அவர்கள் முடிவு கட்டினர். ஆகவே, ரமாமணியின் தகப்பனார் தமது போஜனத்தை முடித்துக் கொண்டு, தம்மிடத்தில் இருந்த இரண்டாயிரம் ரூபாய் பணத்தையும் கையில் எடுத்துக் கொண்டு போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய்ச்சேர்ந்தார்.

பிறகு ரமாமணியம்மாளும் மற்றவரும் தமது போஜனத்தை முடித்துக் கொண்டு போலீஸ் ஸ்டேஷனில் இருந்து என்ன செய்தி வருமோ என்று மிகுந்த ஆவலோடு காத்திருந்தனர். ரமா மணியின் தந்தை மாத்திரம் மாலை நான்கு மணிக்கு விசனத்தி னால் வாடிய முகத்தோடு வந்து சேர்ந்து, "அம்மா! ரமாமணி! நீலலோசனியம்மாள் இங்கே என்ன நடந்ததோ அதை அப்படியே அங்கே சொன்னாள். அதிலிருந்தும், இடும்பன் சேர்வைகாரனுடைய வயிற்றில் மோதிரம் இருப்பதிலிருந்தும், அவனே

திருடன் என்பது நிச்சயமாவதால், அவனை ஜாமீனில் விட முடியாது என்று போலீசார் கண்டித்துச் சொல்லிவிட்டார்கள். இரண்டொரு நாளில் கேஸ் மாஜிஸ்டிரேட் கச்சேரியில் விசாரணைக்கு வருமாம். அதுவரையில் அந்த அம்மாள் இந்த ஊரில் இருக்க வேண்டுமாம். அதுவரையில் நாமும் இங்கே இருந்தே அந்த அம்மாளை அழைத்துக் கொண்டு போக வேண்டும், அந்த அம்மாளுக்கு நம்மேல் ஏற்பட்ட பிரியமும் மதிப்பும் கொஞ்சமும் குறையவில்லை. அவர்கள் நம்மேல் எள்ளளவும் சந்தேகமே கொள்ளவில்லை ஆகையால், அவர் களைப்பற்றி நாம் கவலைப் பட வேண்டியதில்லை. ஆனால், மாசிலாமணிப்பிள்ளை நம்மை அனுப்பிய காரியம் மாத்திரம் இன்று நிறைவேறாது" என்றார். உடனே ரமாமணியம்மாள், "சரி, நாம் என்ன செய்யலாம். திடீரென்று இந்தச் சேர்வைகாரனுடைய புத்தி இப்படிக் கெட்டுப் போனதே அதற்குக் காரணம். மாசிலா மணி நம்மேல் கோபங் கொள்ள நியாயமே இல்லை. அது போகட்டும். இந்த அம்மாள் எங்கே காணோமே?" என்றாள்.

ரமாமணியின் தகப்பனார், "இந்த அம்மாள் இந்த ஊரிலும் திருவேட்டீச்சுவரன் பேட்டையிலும் உள்ள சிவாலயங்களுக்கெல்லாம் போய் சுவாமி தரிசனம் செய்து கொண்டு இராத்திரி வருவதாகச் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்கள். இன்று இரவில் நாம் இங்கே இருக்க மாட்டோம் என்றும், அந்த அம்மாள் வந்து வழக்கப்படி இங்கே படுத்துக் கொண்டிருந்தால், நாம் விடியற்காலம் வருவோம் என்றும் சொல்லி வைத்திருக்கிறேன்" என்றார். ரமாமணியம்மாள், "சரி; அப்படியானால், நாம் எல்லோரும் இராத்திரி போஜனத்தை முடித்துக் கொண்டு புறப்பட்டு கோமளேசுவரன் பேட்டைக்குப் போய், வேலாயுதம் பிள்ளையின் ஜாகையண்டை இருப்போம். இடும்பன் சேர்வைகாரனுடைய ஆட்கள் வந்தால், அவர்களைத் திருப்பி அனுப்பிவிட்டு வந்து சேருவோம்" என்றாள். அதுவே சரியான யோசனை என்று தாய் தந்தையர் ஒப்புக் கொண்டனர்.

★ ★ ★

அன்றைய இரவு சுமார் 9-மணி சமயம் இருக்கும்; ரமாமணி யம்மாள், அவளது தாய் தந்தையர், போயி, பக்கிரியா பிள்ளை ஆகிய ஐவரும் கோமளேசுவரன் பேட்டையில் கந்தசாமியின் ஜாகை வாசலை அடைந்தனர். அது பெருத்த மெத்தை வீடாகத் தோன்றியது. அதோடு, அதன் வெளிப்பக்கத்தில், வாழைமரங்கள், பந்தல், தோரணங்கள் முதலிய கலியாண அலங்காரங்கள் நிறைந் திருந்தன. அவைகளைக் கொண்டே நம்மவர் அதுதான் கந்தசாமி யின் ஜாகையென்று உணர்ந்து கொண்டனர். ஆனால் வாசல் கதவு மாத்திரம் மூடப்பட்டு வெளிப்பக்கத்தில் தாளிடப் பெற்றிருந் தது. மனிதர் ஒருவர்கூடக் காணப்படவில்லை.

ரமாமணியம்மாளின் தந்தை எதிர்த்த வீட்டுத் திண்ணையில் இருந்த ஒரு மனிதரோடு பேசி, அன்று நிச்சயதார்த்தம் நடந்ததா என்றும் கலியாண வீட்டில் மனிதரே யாரும் இல்லாததன் காரணத் தையும் கேட்க, அந்த மனிதர், "ஐயா! எனக்கு நிச்சயமான சங்கதி எதுவும் தெரியாது; கலியாணப் பிள்ளை நாலைந்து தினங்களாய்க் காணப்படவில்லையாம். பந்தல் போட்டு அலங்காரம் செய்யும் படி அவர் ஒருவரிடம் பேசிப் பணம் கொடுத்திருந்தாராம். அவர் தம்முடைய ஒப்பந்தப்படி பந்தல் முதலியவைகளைப் போட்டு விட்டுப் போய்விட்டார். வெளியூரில் இருந்து பிள்ளையின் தாய் தகப்பன்மார் வந்து இரண்டு மூன்று தினங்களாய் இங்கே இருந்தார்கள். இன்று மத்தியானந்தான் அவர்கள் புறப்பட்டு ஊருக்குப் போய்விட்டார்கள் போலத் தோன்றுகிறது. இந்தப் பந்தல் நேற்று மாலையில்தான் போடப்பட்டது. காணாமல் போன பையன் ஒருவேளை இன்றாவது வரமாட்டானா என்றும், வந்தால் நிச்சயதார்த்தத்தை நடத்தி விடலாம் என்றும் அவனுடைய தாய் தகப்பன்மார் நினைத்து, பந்தல் போட்டதைத் தடுக்காமல் இருந்தார்களோ; அல்லது, அவர்கள் தடுத்தும், கண்டிராக்டர் அதைக் கேளாமல் தம்முடைய ஒப்பந்தப்படி முடித்துப் பணத்தை வாங்கிவிட வேண்டும் என்று நினைத்து இந்த அலங்காரங்களை எல்லாம் செய்து வைத்தாரோ என்னவோ தெரியவில்லை. கலியாணப் பிள்ளைக்குச் சமையல் செய்து போட்டுக் கொண் டிருந்த வேலைக்காரி சமையலறையை மாத்திரம் பூட்டிக் கொண்டு

மற்ற இடத்தை இந்தக் கண்டிராக்டர் வசம் ஒப்புவித்து விட்டு, உள் பக்கத்தில் இவர்கள் செய்ய வேண்டிய அலங் காரங்களை இன்று செய்யட்டும் என்று விட்டுத் தன்னுடைய வீட்டுக்குப் போய் விட்டாள் போலிருக்கிறது. கண்டிராக்டர் தன் வேலையை முடித்துக் கொண்டு கதவை வெளியில் தாளிட்டுக் கொண்டு போயிருக்கலாம். இந்த மாதிரி அலங்கோலக் கலி யாணத்தை நான் இதுவரையிலும் பார்த்ததே இல்லை" என்றார்.

அதைக் கேட்டுக் கொண்ட ரமாமணியின் தகப்பனார் திரும்பி வந்து அந்தத் தகவல்களை எல்லாம் மற்றவரிடம் தெரிவித்த தன்றி, தாம் எல்லோரும் அந்த அகாலவேளையில் வெளியில் நிற்பதை விட கலியாணத்திற்கு வந்தவர் போல நடித்து வீட்டிற்குள் போயிருந்தால், எப்படியும் சேர்வைகாரனுடைய ஆட்கள் வருவார்கள் என்றும், தாம் அவர்களை எச்சரித்து ஊருக்குத் திரும்பிப் போய் விடச் செய்ய வேண்டும் என்றும் கூறினார்.

அதை மற்றவர் ஆமோதிக்க, எல்லோரும் உள்ளே சென்று கூடத்தில் காணப்பட்ட விசிப்பலகைகளில் உட்கார்ந்து கொண்டு, ஆட்களின் வரவை ஆவலோடு எதிர்பார்த்திருந்தனர். அவ்வாறு, இரவு பன்னிரண்டு மணி நேரம் வரையில் பார்த்தனர். ஆட்கள் வர வில்லை. எல்லோரும் அலுத்துத் தூங்கிவிட்டனர். ஒரு நாழிகை நேரத்திற்குப் பிறகு திடுதிடென்று பனைமரங்கள் போலிருந்த ஆட்கள் சுமார் இருபதின்மர் உள்ளே நுழைந்து விட்டனர். எல்லோரும் நன்றாகக் கள் குடித்து மயங்கி வெறி கொண்டு ஆடி விழுந்து கொண்டு வந்து கூடத்தில் படுத்திருந்த வர்கள் மீது பாய்ந்து இடும்பன் சேர்வைகாரன் அதற்கு முன் சொல்லி வைத்திருந்தபடி எல்லோரையும் அங்கஹீனப்படுத்தி விட்டனர். ரமாமணியம்மாள் முதலியோர் அலறியடித்துக் கொண்டு எழுந்து, தாங்கள் மன்னார்குடியார் அல்ல என்று சொன்னதையும் காதில் வாங்காமல் அந்த முரட்டு மனிதர்கள் தாம் கோரிவந்த காரியத்தை நிறைவேற்றி விட்டு, வீட்டில் இருந்து வெளிப்பட, அந்தச் சமயத்தில் அங்கே ஓடிவந்த ஜனங்களும் போலீசாரும் அந்த ஆட்களைப் பிடித்துக் கொண்டனர்.

★ ★ ★

12-வது அதிகாரம்

## ஏட்டுச்சுரைக்காய் கறிக்கான விந்தை

இனி நாம் மனோன்மணியம்மாளினது நிலைமையை ஆராய்வோம். சனிக்கிழமை அன்று தமது பங்களாவிற்கு வந்திருந்த கொடிமுல்லையம்மாளும், அவளது புருஷனும் உண்மையில், வேலாயுதம் பிள்ளையின் மைத்துனியும், அவளது புருஷனும் அல்லர் என்றும், அவர்கள் இருவரும் வேலாயுதம் பிள்ளையின் விரோதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் மனோன்மணியம்மாள் நிச்சயித்துக் கொண்டாள் ஆனாலும், கொடிமுல்லையம்மாள் கூறிய சொற்கள் யாவும் பசுமரத்தாணி போல மனோன்மணியம் மாளது மனத்தில் சுருக்கென்று பாய்ந்து, அவளது செவிகளை விட்டு அகலாமல் ஒலித்துக் கொண்டே இருந்தன. கொடி முல்லையம்மாள் இங்கிலீஷ் பாஷையும் புதுநாகரிகமும் அறியாத பட்டிக் காட்டு மனுஷி என்ற எண்ணம் மனோன்மணி யம்மாளின் மனதில் உறுதியாக ஏற்பட்டுப்போனது ஆனாலும், அவள் நிரம்பவும் கூர்மையான அறிவும், வியவகார ஞானமும் உள்ளவள் என்ற நினைவும், புது நாகரிகச் செய்கைகளைக் கண்டித்து அவள் நிரம்பவும் சாதுர்யமாகவே பேசினாள் என்ற நினைவும் தானாகவே மனோன்மணியம்மாளது மனதில் தோன்றி மறைந்து கொண்டே இருந்தன. ஸ்திரீகள் நாற்காலியில் உட்காருவதைப் பற்றியும், ஒருவரை ஒருவர் காணும்போது வெற்றிலை பாக்கு, மஞ்சள், குங்குமம் முதலியவற்றைக் கொண்டு போய்க் கொடுப்பதைப் பற்றியும், அவைகளை உபயோகிப்பதைப் பற்றியும், ஸ்திரீகள் வெள்ளை உடை உடுத்துவதைப் பற்றியும், அன்னிய நாட்டு பிஸ்கோத்து முதலியவற்றை உண்பதைப் பற்றியும், எச்சில் கையைத் துணியால் துடைத்துக் கொண்டதைப் பற்றியும் கொடி முல்லையம்மாள் குத்திக் காட்டிய சொற்களை எல்லாம் மனோன்மணியம்மாள் அவ்வளவாகப் பொருட்படுத்தாமலும் பாராட்டாமலும் அலட்சியமாக விட்டுவிட்டாள் ஆனாலும், மன்னார்குடியார் சுத்த கர்னாடக மனிதர்கள் என்றும், தனது இங்கிலீஷ் படிப்பையும் தனது நடையுடை பாவனைகளையும் அவர்கள் வெறுப்பார்

களே அன்றி விரும்பார்கள் என்றும், தனக்குக் கணவனாக வரிக்கப்பட்டுள்ள கந்தசாமியும் அதே மனப்போக்குடையவன் என்றும், தான் அவனை மணந்து கொண்ட பிறகு தனது பி.ஏ. பட்டம் எப்படி உபயோகப்படப் போகிறதென்றும் கொடி முல்லையம்மாள் கூறிய சொற்கள் கூர்மையான ஈட்டிகள் போல மனோன்மணியம்மாளது மனத்தில் தைத்து பலவித சந்தேகங் களையும் ஓயாத கவலையையும் மனவேதனையையும் உண்டாக்கிக் கொண்டே இருந்தன. மன்னார்குடியாருக்குக் கெடுதல் செய்ய வேண்டும் என்ற கருத்தோடு அவர்களது பகைவரைச் சேர்ந்த மனிதர்கள் வந்து தன் மனதைக் கலைக்க முயன்றார்கள் என்று அவள் நிச்சயமாக எண்ணினாள் ஆனாலும், அவர்களது பழக்க வழக்கங்களைப்பற்றியும், கர்னாடகமான மனப்போக்கைப் பற்றியும் கொடிமுல்லையம்மாள் கூறிய விவரங்கள் அநேகமாய் உண்மையாக இருக்க வேண்டும் என்ற நினைவே மும்முரமாய் அவளது மனத்தில் எழுந்து எழுந்து வதைக்கத் தொடங்கியது. மனோன்மணியம்மாள் இரண்டு வருஷ காலத்திற்கு முன் மன்னார் குடியில் இருந்த காலத்தில், வேலாயுதம் பிள்ளை வீட்டார் எவரையும் மனோன்மணியம் மாள் பார்த்தவளும் அன்று. அவர்களைப் பற்றி எவ்வித தகவலும் தெரிந்து கொண்டவளும் அன்று; ஆனால், அவளது தந்தையான பட்டாபிராம பிள்ளை தமது புதல்விக்கு வயது வந்து விட்டதைக் கருதி, அவளைத் தக்க ஓர் இடத்தில் வாழ்க்கைப் படுத்த வேண்டும் என்ற எண்ணமும் கவலையும் கொண்டு, தமது பழைய நண்பரும் பரோபகாரியுமான திகம்பரசாமியாருக்கு அவ்விஷயத்தைப் பற்றி எழுதி, அவருக்குத் தெரிந்த நல்ல இடம் ஏதாவது இருந்தால் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருந்தார். திகம்பரசாமியாரும் பெண்ணைப் பார்த்ததில்லை ஆனாலும், அவளது குணாதிசயங்களை அறியவில்லை ஆனாலும், பட்டாபிராமபிள்ளையின் குலத்தின் உயர்வையும், குணத்தின் மேம்பாட்டையும், மேலான அந்தஸ்தையும், அளவற்ற ஐசுவரியத்தையும் கருதியதன்றி, அவரது புதல்வியான மனோன்மணியம்மாள் நற்குண நல்லொழுக்கம் உடையவளாகவே இருப்பாள் என்று எண்ணி, அந்த

விஷயத்தை வேலாயுதம் பிள்ளையிடம் பிரஸ்தாபித்து, அந்தப் பெண்ணைக் கந்தசாமிக்கு மணம் புரிவிக்கலாம் என்று கூற, திகம்பரசாமியாரது சொல்லை வேதவாக்கியமாக மதித்து வந்த வேலாயுதம் பிள்ளை அவரது விருப்பத்திற்கு உடனே இணங்கி விட்டார். வதூவரர்களின் ஜாதகங்களும் நன்றாகப் பொருந்தின. ஆகவே, திகம்பரசாமியார் பட்டாபிராம பிள்ளைக்கு எழுதி மனோன்மணியம்மாளைக் கந்தசாமிக்குக் கொடுத்து விடும்படி முடிவாகக் கூறிவிட்டார். பட்டாபிராம பிள்ளை மன்னார்குடியில் இருந்த காலத்தில், அவர் வேலாயுதம் பிள்ளையைப் பற்றியும், அவரது சம்பந்தியான சுந்தரம் பிள்ளையைப் பற்றியும், அவர்களது குடும்பங்களைப் பற்றியும் நன்றாக அறிந்திருந்தார் ஆதலால், அவர்களது சம்பந்தம் தமக்கு வாய்க்கப் போவது தாமும் தமது முன்னோரும் பூர்வ ஜென்மங்களில் செய்த பூஜா பலனே என்று எண்ணி, அந்த ஏற்பாட்டை அவரும் உடனே ஏற்றுக் கொண்டு, நிச்சயதார்த்தத்திற்கு நாள் குறித்து எழுதி விட்டார். அதன் பிறகு அவர் கோமளேசுவரன் பேட்டைக்குப் போய்க் கந்தசாமியை இரண்டொரு முறை பார்த்து அவனது ஒப்பற்ற அழகையும் குணச்சிறப்பையும் கண்டு மிகுந்த களிப் படைந்து திரும்பி வந்து அந்த விஷயத்தை மனோன்மணியம் மாளிடம் தெரிவித்திருந்தார். அதுவுமன்றி, வேலாயுதம் பிள்ளையும் அவரது குடும்பத்தாரும் பழைய ஆசார ஒழுக்கங் களை விடாமல் சன்மார்க்கத்தில் ஒழுகுகிறவர்கள் என்பதையும் அவர் மனோன்மணியம்மாளிடம் ஒருவாறு தெரிவித்து வைத்திருந்தார்.

அந்த மடந்தையோ இங்கிலீஷ் படிப்பில் பெரிய பட்டமும் புகழும் பெற வேண்டும் என்ற ஆசையும், மற்ற ஸ்திரீகளைப் போல அடிமை போல் இல்லாமல் தக்க யோக்கியதையோடு தனது புருஷனுக்குச் சமதையாக இருக்கும் நிலைமையை அடைய வேண்டும் என்ற மனப்போக்கும் உடையவளாய் இருந்தாள் என்பது முன்னரே சொல்லப்பட்டதல்லவா. அதுவுமன்றி, அவள் மேன்மேலும் இங்கிலீஷ் பாஷையைக் கற்றுக் கரைகாண ஆவல் கொண்டு, அந்த வேட்கைக்கே அடிமையாய் இருந்து வந்தா ளன்றி, தான் கலியாணம் செய்து கொள்ள வேண்டும் என்ற

நினைவைக் கொள்ளவில்லை என்பதும், ஆனால், அவள் தனது தந்தை வற்புறுத்தியதைத் தடுக்க மாட்டாதவளாய் அந்தக் கலியாண ஏற்பாட்டிற்கு இணங்கினாள் என்பதும் முன்னரே கூறப்பட்ட விஷயங்கள். கந்தசாமியைப் பற்றியும், அவனது குடும்பத்தாரைப் பற்றியும் பட்டாபிராம பிள்ளை அபாரமாகப் புகழ்ந்ததைக் கேட்டுக் கேட்டு, அவள் அதிக ஆட்சேபனை எதையும் சொல்லாமல், அந்தக் கலியாணத்திற்கு இசைந்தாளே அன்றி, தனது புருஷனைப் பார்க்க வேண்டும் என்ற வேட்கை யைக் கொண்டவளன்று. அவனது குடும்பத்தாருக்கும் தனக்கும் எவ்விதமான பாந்தவ்வியம் ஏற்படப் போகிறது என்பதைப் பற்றி யாவது அவள் சொப்பனத்திலும் நினைத்தவளன்று. தானும் தனது புருஷனும் வெள்ளைக்காரருள் கணவனும் மனைவியும் இருப்பது போல சமயோக்கியதை, சமமரியாதை முதலியவற் றோடு கண்ணியமாகவும் கம்பீரமாகவும் இருக்கப்போவதாக அவள் எண்ணிக் கொண்டிருந்தாள். அந்த மன நிலைமையில், கொடிமுல்லையம்மாள் வந்து கூறிய வரலாறு மனோன்மணி யம்மாளின் மனதைக் கலக்கிவிட்டது. வேலாயுதம் பிள்ளையின் வீட்டில் தான் வாழ்க்கைப்பட்டால், அவ்விடத்தில் தனது கண்ணி யமும், அந்தஸ்தும் நிலைக்காவென்ற எண்ணம் அப்போதே அவளது மனத்தில் தோன்றி வதைக்க ஆரம்பித்தது. கந்தசாமி யினிடத்தில் அவளுக்கு அதிக மனப்பற்று ஏற்படாதிருந் தமையால், வெகு சுலபத்தில் அவனும் அவளுக்குக் கசந்து போய் விட்டான். தனது தந்தை அதே இடத்தில் தன்னைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்ற ஒரே பிடிவாதமான விருப்பங் கொண் டிருந்தாலும், தான் எப்படியாவது முயன்று அந்த மணம் நடவா விதம் தடுத்துவிட வேண்டும் என்ற தீர்மானத்தைக் கொண்டு இரவு பகல் அதே கவலையால் உலப்பப்பட்டவளாய்த் தனது ஊணுறக் கங்களை எல்லாம் வெறுப்பதும் தனது தந்தையின் சொற்களை அசட்டை செய்வதுமாய் இருந்தாள்.

கொடிமுல்லையம்மாள் முதலியோர் தமது பங்களாவிற்கு வந்ததற்கு மறுநாளாகிய ஞாயிறன்றும், திங்களன்றும் பட்டாபி ராம பிள்ளை கந்தசாமியைப் பார்ப்பதற்காக கோமளேசுவரன் பேட்டைக்குப் போனதும், அவன் காணப்படவில்லை என்பதை

உணர்ந்து, கலக்கமடைந்து அவனைக் கண்டு பிடிப்பதற்கான முயற்சிகளைச் செய்ததும், கோபாலசாமியின் புகைப்படத்தைக் கொணர்ந்து வைத்து மன்னார்குடியாருக்குக் கடிதம் எழுதியதும், மனோன்மணியம்மாளது மனத்திற்குச் சம்மதியாக இருக்க வில்லை. ஆயினும், அவர் கந்தசாமிக்கே அவளை மணம் புரிவிக்க வேண்டும் என்ற மனவுறுதியோடு எல்லாக் காரியங்களையும் நடத்தினார் ஆதலால், தனது சொல்லை அவர் கேட்க மாட்டார் என்ற எண்ணத்தினால், அவள் அவரை நேருக்கு நேர் தடுக்காமல் மௌனமாகவே இருந்து சஞ்சலமடைந்து வந்தாள். அவளது மனம் அவள் பரீட்சைக்குப் படித்து வந்த பாடங்களில் செல் லாமல் தனது மனத்தை நிறுத்தும் விஷயத்திலேயே ஓயாமல் சென்று கொண்டிருந்ததன்றி, காணாமற் போன கந்தசாமி திரும்பாமல் அப்படியே காணாமலே போய்விட வேண்டும் என்று கடவுளை வேண்டிக் கொண்டபடி அவள் தனது பொழுதைப் போக்கிக் கொண்டிருந்தாள்.

அந்த நிலைமையில், செவ்வாய்க்கிழமை மாலையில் மன்னார் குடியில் இருந்து பட்டாபிராம பிள்ளைக்கு அவசரமான ஒரு தந்தி வந்தது. வேலாயுதம் பிள்ளை முதலிய எல்லோரும் அன்றைய இரவு வண்டியிலேயே புறப்பட்டு சென்னைக்கு வருவதாக அந்தத் தந்தியில் எழுதப் பட்டிருந்ததைப் படித்த பட்டாபிராம பிள்ளை அந்த விஷயத்தை உடனே தமது புதல்விக்குத் தெரிவித்து மிகுந்த அன்போடு, "அம்மா! அவர்கள் நாளைய தினம் அதிகாலையில் எழும்பூர் ஸ்டேஷனில் வந்திறங்குவார்கள். நான் போய் அவர்களை வரவேற்று சகலமான விஷயங்களையும் சவிஸ்தாரமாய் நேரில் சொல்லிவிட்டு, அவர்களைத் தக்கபடி உபசரிப்பது அவசியம் என்று நினைக்கிறேன்" என்றார்.

அதைக் கேட்ட மனோன்மணியம்மாளினது மனதில் ஒருவித யோசனை தோன்றியது. வேலாயுதம் பிள்ளையையும், அவரைச் சேர்ந்த மற்ற மனிதர்களையும் தான் நேரில் பார்த்து, அவர்களது குணம், நடத்தை முதலியவற்றைக் கவனித்துணர்ந்து, அவர் களிடம் பல குற்றங்களைக் கண்டுபிடித்தால், அவற்றை ஆதார மாக வைத்துக் கொண்டு, தான் தனது தந்தையிடம் வாதாடி, அந்தச்

சம்பந்தத்தை விலக்கச் செய்ய வேண்டும் என்ற ஓர் எண்ணம் அவளது மனதில் உதித்தது. ஆகவே அவள் தனது தந்தையை நோக்கி, "அப்பா! அந்த கொடிமுல்லையம்மாள் சொன்ன வரலாற்றைக் கேட்ட முதல், இந்த மன்னார்குடியாரை நேரில் பார்க்க வேண்டும் என்றும், இவர்களுடைய குணாதிசயங் களை அறிந்து கொள்ள வேண்டும் என்றும் ஓர் அவா என் மனசில் இருந்து வருகிறதாகையால், அவர்கள் வருவது இந்தச் சந்தர்ப்பத் திற்கு ஏற்றதாகவே இருக்கிறது. அவர்கள் எல்லோரையும் நம்மு டைய பங்களாவிற்கே அழைத்துக் கொண்டு வாருங்கள். அவர்கள் இங்கேயே தனியான ஒரு விடுதியில் சௌகரியமாய் இருக் கட்டும்" என்றாள்.

பட்டாபிராம பிள்ளை, "நானும் அப்படித்தான் எண்ணுகிறேன். ஆனால், அவர்களுக்குச் சொந்தமான வீடு ஒன்று கோமளேசுவரன் பேட்டையில் இருக்கிறது. அது பிரம்மாண்டமான மெத்தை வீடு. கந்தசாமி இருந்து படிப்பதற்கென்றே அந்த மாளிகையை அவர் கள் வாங்கி இருக்கிறார்கள்; அவர்கள் அநேகமாய் அங்கேதான் போய் இறங்குவார்கள். இருந்தாலும், நான் அவர்களை இவ் விடத்திற்கே அழைத்துப் பார்க்கிறேன். அவர்களுக்காக எட்டு மனிதர்கள் உட்காரத் தகுந்த மோட்டார் வண்டி ஒன்று அமர்த்தி வைக்கப் போகிறேன். அவர்கள் இங்கே வர இணங்கினால், அவசியம் அழைத்துக் கொண்டு வந்து விடுகிறேன்" என்றார்.

அதைக் கேட்டு சிறிது நேரம் சிந்தனை செய்த மனோன்மணியம் மாள், "அவர்கள் இங்கே வராமல் கோமளேசுவரன் பேட்டைக்கே போய்விட்டால், தான் அவர்களைப் பார்ப்பதற்குச் சந்தர்ப்பம் கிடைக்காமல் போய்விடும். ஆகையால், நானும் நாளைய தினம் காலையில் உங்களோடு எழும்பூர் ரயில்வே ஸ்டேஷனுக்கு வருகிறேன்" என்றாள்.

பட்டாபிராம பிள்ளை மிகுந்த வியப்படைந்து, "அம்மா! அப்படிச் செய்வது தவறு. நீ அவர்களுடைய வீட்டில் வாழ்க்கைப் படப்போகிற பெண்; அவர்களுக்கெதிரில் நீ அடங்கி வொடுங்கி மறைவாக இருக்க வேண்டும். அதுதான் நம்முடைய பூர்விகர்களின் குலாசாரம். அந்த விஷயத்தில் எல்லாம், அவர்கள்

நிரம்பவும் கவனிப்பாக இருக்கக்கூடியவர்கள். ஆகையால், நீ அவர்களுக்கெதிரில் என்னோடு கூட ரயிலுக்கு வருவது அவர் களுடைய மனதிற்குப் பிடிக்காது. அவர்கள் நம்மைப்பற்றி இழி வான அபிப்பிராயம் கொள்வார்கள். ஆகையால், நீ வரவேண் டாம். நானே அவர்களுடைய குணாதிசயங்களை எல்லாம் நன் றாகத் தெரிந்து கொண்டு வந்து உன்னிடம் சொல்லுகிறேன். அது போதாதா?" என்றாள்.

மனோன்மணியம்மாள், "இல்லையப்பா! எந்த விஷயத்தையும் ஒருவர் நேரில் பார்ப்பதற்கும், இன்னொருவர் சொல்லக் கேட்பதற்கும் வித்தியாசமில்லையா? அவர்களை எப்படியாவது நான் பார்த்துத் தான் தீரவேண்டும் என்ற ஓர் ஆசை உண்டாகிறது அகையால், நானும் வருகிறேன். வந்து, அவர்கள் என்னைப் பார்க்காதபடி தூரத்தில் மறைவாக நிற்கிறேன். நீங்கள் அவர்களுக் காக ஒரு பெரிய மோட்டார் வண்டி பேசி வையுங்கள். தூரத்தில் இருந்தபடியே அவர்களைப் பார்த்துவிட்டு நான் நம்முடைய வண்டியில் ஏறிக்கொண்டு நம்முடைய பங்களாவிற்கு வந்து விடுகிறேன். அவர்கள் இங்கே வர இணங்கினாலும், அல்லது, கோமளேசுவரன் பேட்டைக்கே போனாலும், நீங்களும் அவர்க ளோடு கூடவே வாடகை வண்டியில் இங்கே வந்து விடுங்கள்; அல்லது அவர்களை கோமளேசுவரன் பேட்டையில் கொண்டு போய் விட்டுவிட்டு வந்துவிடுங்கள்" என்றாள்.

அதைக் கேட்ட பட்டாபிராம பிள்ளை சிறிது ஆழ்ந்து யோசனை செய்த பின் மனோன்மணியம்மாளின் விருப்பத்திற்கு இணங் கினார்.

மறுநாளாகிய புதன்கிழமை தந்தையும் புதல்வியும் அதிகாலை யில் எழுந்து தம்மை நன்றாக அலங்கரித்துக் கொண்டு தமது பெட்டி வண்டியில் ஏறி எழும்பூர் ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்த னர். தந்தை தமது பெரிய உத்தியோக பதவிக்குத் தகுந்தபடி விலை உயர்ந்த சட்டை, நிஜார், ஜரிகைத் தலைப்பாகை முதலிய உடைகளைத் தரித்து, வெள்ளைக்காரர் நாகரிகம், இந்திய நாகரிகம் ஆகிய இரண்டிலும் அதில் கொஞ்சம் இதில் கொஞ்சம் அனுசரித்து நடக்கும் பெரிய மனித தோரணையில் வந்திருந்தார். மனோன்

மணியம்மாள் தனது பழக்கத்தின்படி உயர்தர இங்கிலீஷ் சோப்பி னால் தனது முகத்தைப் பளிச்சென்று சுத்தம் செய்துகொண்டு, துல்லியமான வெள்ளை மஸ்லின் புடவை, வெள்ளை சில்கினா லான ஜாக்கெட் முதலிய ஆடைகளைத் தரித்து, தங்க விளிம் புள்ள மூக்குக் கண்ணாடி, தங்க ஒட்டியாணம், வேறு இரண் டொரு தங்க நகைகள் ஆகிய ஆபரணங்களை மாத்திரம் அணிந்து கொண்டு, காலில் பூட்ஸ் என்ற இங்கிலீஷ் பாதரக்ஷையைத் தரித்திருந்தாள். முகத்தில் மஞ்சள், குங்குமமும், அல்லது, சாந்துத் திலகம் முதலிய மங்களக்குறி எதுவும் காணப்படவில்லை. ஆயினும் அவள் அவ்வாறு சுத்தமாகவும் மிதமாகவும் ஆடையா பரணங்கள் தரித்து ஒரே வெண்மைத் தோற்றமாக இருந்த காட்சி குடமல்லிகை, அல்லது, வெண்தாமரை முதலிய புஷ்பங்கள் மலரும் போது தோற்றுவிக்கும் அழகு, புதுமை, நிர்மலம், மிருதுத் வம் முதலிய குணங்களை வெளிப்படுத்திய தன்றி, சகலமான கலைகளுக்கும் உற்பத்தி ஸ்தானமான சரஸ்வதியைப் பற்றிக் கூறப்பட்டுள்ள,

[வெண்பா]

வெள்ளைக் கலையுடுத்தி வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள் - வெள்ளை
அரியாசனத் திருத்தி யரசரோ டெம்மைச்
சரியாசனத்தில் வைத்த தாய்.

என்ற செய்யுளை நினைப்பூட்டக் கூடியதாக இருந்தது. இங்கிலீஷ் நாகரிகமே தோன்றாத பண்டைக் காலத்தில் நமது முன்னோர் கலை வாணியின் ஆடையாபரணங்கள் யாவும் வெண்மையாகவே இருக்கும் என்று கண்டு எழுதியிருக்க, தற்காலத்தில் இங்கிலீஷ் கல்வி கற்கும் மனோன்மணியம்மாளைப் போன்ற பெண் மக்கள் வெண்மைத் தோற்றத்தையே நாடுவது ஓர் அதிசயமன்று என்றே நாம் கொள்ள வேண்டும் அல்லவா.

அவ்வாறு ரயில்வே ஸ்டேஷனை அடைந்த தந்தையும் மகளும் உள்ளே போவதற்கு இரண்டு பிளாட்பாரம் டிக்கெட்டுகள் வாங்கிக் கொண்டு உட்புறம் சென்றனர்.

எழும்பூர் ரெயில்வே ஸ்டேஷன் பிரம்மாண்டமான கட்டிடம் என்பதை நாம் கூறுவது மிகையாகாது. அது முக்கியமாக இரண்டு

பெரிய பாகங்களாய்ப் பிரிக்கப்பட்டிருக்கிறது. முதலாவது, இரண்டாவது வகுப்புப் பிரயாணிகள் பிரத்தியேகமாக டிக்கெட்டு கள் வாங்கவும், உள்ளே போகவும், வெளியில் வரவும் ஒரு பாகம் உபயோகப்படுகிறது. மூன்றாவது வகுப்புப் பிரயாணிகள் தங்கவும், டிக்கெட்டுகள் வாங்கவும், உள்ளே போகவும், வெளியில் வரவும் இன்னொரு பாகம் உபயோகப்படுகிறது. அவை வெளிப்பக்கத்தில் ஒன்றிற்கொன்று சம்பந்தமில்லாமல் தூரமாக அமைந்திருக்கின்றன. உள்பக்கத்தில், அரை பர்லாங்கு நீளம், கருங்கல் பதிக்கப் பெற்ற பிளாட்பாரமும், கம்பங்கள் நிறைந்த தாழ்வாரமும், ஆங்காங்கு ஜனங்கள் உட்காருவதற்கு இரும்பு விசிப்பலகைகளும் இருக்கின்றன. நமது பட்டாபிராம பிள்ளையும், மனோன்மணியம்மாளும், முதல் இரண்டு வகுப்புப் பிரயாணிகள் உபயோகிக் கும் கட்டிடத்தின் வழியாக உள்ளே சென்றனர். தெற்கே இருந்து வண்டிகள் வந்து பிளாட்பாரத்தின் ஓரமாய் நிற்கும் காலத்தில், 3-வது வகுப்புப் பிரயாணிகள் உட்காரும் வண்டிகள் அந்த வகுப்புப் பிரயாணிகளுக்கு டிக் கெட்டு கொடுக்கப்படும் கட்டிடத் தண்டையிலும் முதல் இரண்டு வகுப்பு வண்டிகள் அந்த வகுப்புப் பிரயாணிகளுக்கு டிக்கெட்டு கொடுக்கப்படும் கட்டிடத்தண்டையிலும் நிற்பதற்குத் தோதாக அந்த இரண்டு கட்டிடங்களும் அமைந்திருக்கின்றன. நமது வேலாயுதம் பிள்ளை பெருத்த தனிகராதலால் அவரும் அவரைச் சேர்ந்தவர்களும் முதல் வகுப்பு வண்டியிலாவது, இரண்டாவது வகுப்பு வண்டியிலாவதுதான் உட்கார்ந்து வருவார்கள் என்று பட்டாபிராம பிள்ளை எண்ணினார் ஆதலாலும், உள்ளே நுழைந்த வழிக்கெதிரிலேயே மேற்படி வகுப்பு வண்டிகள் நிற்கும் ஆதலாலும், அவரும் மனோன்மணியம்மாளும் அதற்குப் பக்கத்தில் போடப்பட்டிருந்த இரண்டு நாற்காலிகளின் மேல் உட்கார்ந்து வண்டியின் வருகையை ஆவலோடு எதிர்பார்த் திருந்தனர். அவர்கள் உட்கார்ந் திருந்த இடத்தில் பெருத்த பெருத்த கம்பங்கள் இருந்தமையால், வண்டி வரும்போது மனோன்மணி யம்மாள் எழுந்து ஒரு கம்பத்திற்கு அப்பால் மறைந்து நின்று பார்ப்பதென்றும், வண்டியில் இருந்து நூற்றுக் கணக்கில் ஜனங் கள் இறங்கித் தாறுமாறாக அங்குமிங்கும் நிறைந்து போவார்கள்

ஆதலால், மனோன்மணியம்மாளை வேலாயுதம் பிள்ளை வீட்டார் கவனிக்க ஏதுவிராதென்றும், அவர்கள் இருவரும் தமக்குள் பேசி முடிவு கட்டிக் கொண்டனர். அதன் பிறகு கால் நாழிகை காலத்தில் தெற்குத் திக்கிலிருந்து வண்டி வந்து சேர்ந்தது. தங்களுடைய ஏற்பாட்டின் படி மனோன்மணியம்மாள் எழுந்து தூர விலகி நின்றாள். பட்டாபிராம பிள்ளை நாற்காலியை விட்டெழுந்து தமக் கெதிரில் வந்து நின்ற முதல் இரண்டாவது வகுப்பு வண்டிகளை ஆராய்ச்சி செய்து கொண்டே பின் பக்கத்திலிருந்து முன் பக்க மாகப் போனார். அந்த ஸ்டேஷனே அந்த வண்டி முடிவாய்ப் போய் நிற்கும் இடம் ஆதலால், வண்டியில் வந்த எல்லா ஜனங் களும் ஒருவர் பாக்கி இல்லாமல், மூட்டை முடிச்சுகளோடு அவ் விடத்தில் இறங்கி விட்டார்கள். அந்த ரயிலில் கோர்க்கப்பட்டி ருந்த முதல் இரண்டாவது வகுப்பு வண்டிகள் அனைத்தையும் அவரது மனிதர்களும் மேற்படி வண்டிகளில் இருந்து இறங்கின மனிதருள் காணப்படவில்லை. ஆகவே, அவர் இன்னம் முன்னாகச் சென்று மூன்றாவது வகுப்பு வண்டிகளில் இருந்து இறங்கிய ஜனக் கும்பலைக் கவனித்துப் பார்த்துக் கொண்டே செல்ல, மூன்றாவது வகுப்பு வண்டி ஒன்றில் இருந்து வேலாயுதம் பிள்ளை, அவரது மனைவி, கண்ணப்பா, வடிவாம்பாள், ஒரு வேலைக்காரன், ஒரு வேலைக்காரி ஆகிய அறுவரும் இறங்கியது தெரிந்தது. இடுப்பில் வசீகரமாக நீர்க்காவியேற்றப்பட்ட துல்லிய மான பட்டுக்கரை வேஷ்டிப் பஞ்ச கச்சம்; மேலே தும்பைப்பூவை ஒத்த உத்தரியம், விபூதி, உருத்திராக்ஷம் முதலிய அலங்காரங் களோடு காணப்பட்ட வேலாயுதம் பிள்ளையின் தேகம் பசுந் தங்கம் போலப் பழுத்து மினுமினுப்பாகக் காணப்பட்டது. அவரது முகத்தில் உருக்கமான தெய்வபக்தி, ஜீவகாருண்யம், தயாளம், நிஷ்கபடமான பரிசுத்தம், எப்போதும் ஜ்வலித்துக் கொண்டிருக்கும் மகா தீக்ஷண்யமான புத்திசாலித்தனம், மேலான ஞானம் முதலியவை நிறைந்த பிரம்ம தேஜஸ் வழிந்து கொண் டிருந்தது. சுருங்கச் சொல்லுமிடத்து தெய்வத்தின் கருணா கடாக்ஷம் அவரிடத்தில் பரிபூர்ணமாக சான்னித்தியம் செய்து கொண்டிருந்தது ஆகையால், எத்தகைய மூர்க்க குணமுள்ள துஷ்டனும், கொடிய கொலை பாதகனும், மகா கோபியும் அவரைக் கண்டு அவரது முகத்தை ஒருமுறை

பார்ப்பானாகில், அவரது முகத்திலிருந்து ஜ்வலித்துக் கொண்டிருந்த சாந்த குண மாகிய காந்த சக்தி உடனே அவனது மனத்தைக் கவர்ந்து விடும். அவன் அந்த ஒரு க்ஷண நேரமாவது சாத்வீக குணத்திற்கு அடிமையாய்ப் படிந்து தனது துஷ்ட குணத்தை அவரிடம் காட்டாமல் மறைத்து மிகுந்த பயபக்தி மரியாதையோடு அவரிடம் பேசிவிட்டு அப்பால் போவான். அதுவுமன்றி, அவரது சொல்லை மறுத்து அதற்கு மாறான அபிப்பிராயத்தைச் சொல் வதற்கு எவரது மனதும் துணியாது. அவரது உடம்பிலிருந்து ஏதேனும் வஸ்து தவறிக் கீழே விழுந்து விடுமானால், அவருக்குப் பக்கத்தில் மகாராஜனே உட்கார்ந்திருந்தாலும், அவன் சரேலென்று பாய்ந்து அந்த வஸ்துவை எடுத்து நிரம்பவும் மரியாதையோடும் பிரியத் தோடும் அவரிடம் கொடுப்பான். அத்தகைய உத்கிருஷ் டமான நற்குண சக்தி அவரிடத்தில் பூர்த்தியாகக் குடிகொண்டிருந்தது. அந்த உத்தம புருஷர் முதலில் வண்டியை விட்டுக் கீழே இறங் கினார். பரமசிவனுக்கு உகந்த பார்வதிதேவி போலவே காணப் பட்ட அவரது மனைவி அவருக்குப் பின்னால் இறங்கினாள். அந்த அம்மாளுக்குப் பிறகு தத்ரூபம் மன்மதனும் ரதிதேவியும் போலத் தோன்றிய கண்ணப்பாவும், வடிவாம்பாளும் இறங்கி னார்கள். அவர்களுக்குப் பின்னால் வேலைக்காரனும், வேலைக் காரியும் அவர்களது பெட்டி முதலிய சாமான்களையும் இரண்டு வெள்ளிக் கூஜாக்களையும் எடுத்துக் கொண்டு இறங்கினார்கள். அந்தச் சிறிய கும்பலின் தலைமை வகித்த வேலாயுதம் பிள்ளை யினது வடிவம், பணிவு, சாந்தம், அடக்க வொடுக்கம் முதலிய குணங்களின் அவதாரம் போலக் காணப்பட்டு, உலகத்தில் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட சகலமான ஆன்மாக்களுக்கும் தான் கீழ்ப்பட்ட தொண்டன் என்று பறைசாற்றுவது போலத் தோன்றி னாலும், அவரைத் தொடர்ந்து வந்த மற்றவர்கள் அவரை ஒரு சக்கரவர்த்தி, அல்லது, மண்டலேசுவரன், அல்லது, அவர்களிலும் மேம்பட்ட கடவுள் என்று நினைத்து மனமார்ந்த வாத்சல்யத்தோடு கலந்த பயபக்தி விசுவாசத்தை அவரிடம் தோற்றுவிப்பவராய்க் காணப்பட்டனர். பெரியவர்கள் தம்மினும் சிறியோரிடம் மட்டற்ற வாஞ்சையும் மதிப்பும் காட்டியதற் கிணங்க, சிறியோர் மூத்தோரை தெய்வம்

எனவே மதித்து மிகுந்த பணிவோடு நடந்து வந்தனர். ஆயினும், அந்தக் குடும்பத்தினர் எல்லோரும் பரஸ்பரம் கரை புரண்டு வழிந்த வாஞ்சையாகிய அற்புத சக்தியால் ஒன்றாகச் சேர்த்து ஒருவரோடு ஒருவர் பிணைக்கப்பட்டிருந்தனர் என்பது எவருக்கும் பளிச்சென்று தெரிவதாய் இருந்தது. எல்லோரும் கீழே இறங்க, பெண்பாலர் இருவரும் ஆண்பாலர் இருப்பதைக் கருதி சிறிது தூரம் விலகித் தலைகுனிந்து தனியாக நின்றனர். நாணம், மடம், அச்சம், பயிர்ப் பென்ற உத்தம லக்ஷணங்கள் அவர்களிடம் கோடி சூரியப்ரகாச மாய் ஜ்வலித்துக் கொண்டிருந்தன. அவர்களிடத்தில் இயற்கை அழகு சம்பூர்ணமாக அமைந்திருந்தன்றி, உயர்ந்த பட்டா டைகள், ஆபரணங்கள் முதலியவற்றாலான செயற்கை வசீகரமும் நிறைந்திருந்தது. அவ்வாறு செல்வம், செழுமை, உத்தம லக்ஷணங்கள், குடும்பத்தில் ஒருவரிடத்தொருவர் எப்படி ஒழுக வேண்டும் என்ற தருமம் முதலியவைகளுக்கு ஓர் உதாரணம் போல இருந்த அவர்களை, அந்த வண்டியில் இருந்து இறங்கிச் சென்ற மற்ற பிரயாணிகள் எல்லோரும் தம்மை மீறி உற்று நோக்கி மிகுந்த வியப்பும், மன மகிழ்ச்சியும் அடைந்தவராய்ச் சென்று கொண்டிருந்தனர். அப்போது அவர்களிடம் வந்து சேர்ந்த பட்டாபிராம பிள்ளை, "வாருங்கள் அண்ணா! வாருங்கள். நமஸ்காரம்" என்று மிகுந்த பயபக்தி விநயத்தோடு கூறித் தனது இருகைகளையும் குவித்து வணங்கினார்.

அவரைக் கண்ட வேலாயுதம் பிள்ளை முதலியோர் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தனர். கந்தசாமி காணாமல் போயிருந்ததைக் குறித்து அவர்கள் எல்லோரும் மிகுந்த கலக்கமும், கவலையும், துயரமும் கொண்டிருக்கிறார்கள் என்பதை அவர்களது முகங்கள் எளிதில் காட்டின ஆனாலும், தங்களது புதிய சம்பந்தி வந்திருக்கிறார் என்ற உணர்ச்சியினால் அவர்கள் எல்லோரும் அந்த ஒரு நிமிஷ நேரம் தமது துயரத்தை மறந்து ஒருவித மகிழ்ச்சியும், முக மலர்ச்சி யும் காண்பித்தனர்.

பெண்பாலார் முன்னிலும் பன்மடங்கு அதிகரித்த நாணமும் அடக்கமும் பணிவும் காட்டித் தலை குனிந்த வண்ணம் கண்ணப் பாவின் பின்னால் மறைந்து கொள்ள, அவ்விடத்திலும், வடி

வாம்பாள் சடக்கென்று பாய்ந்து தனது மாமிக்குப் பின்னால் சென்று ஒளிந்து கொண்டாள். வேலாயுதம் பிள்ளையும், கண்ணப்பாவும் ஏககாலத்தில் தமது கைகளைக் குவித்து, "நமஸ்காரம். நமஸ்காரம். வாருங்கள்" என்று நிரம்பவும் பணிவாகவும் மரியாதையாகவும் பட்டாபிராம பிள்ளைக்குப் பிரதி உபசாரம் செய்தனர்.

உடனே வேலாயுதம் பிள்ளை மிகுந்த ஆவலோடு பேசத் தொடங்கி, "பையன் சங்கதி அதற்குப் பிறகு ஏதாவது தெரிந்ததா?" என்று வினவினார். அந்தக் கேள்விக்குப் பட்டாபிராம பிள்ளை கொடுத்த விடையையும், அதற்கு மேல், அவர்களுக்குள் நடந்த சம்பாஷணையையும் நாம் விஸ்தரித்துக் கூறுமுன், முதலாவது இரண்டாவது வகுப்புப் பிரயாணிகள் வெளியில் போய்க் கொண் டிருந்த இடத்திற்கு அருகில் மறைவாக நின்று கொண்டிருந்த நமது மனோன்மணியம்மாளது நிலைமையை நாம் முதலில் கவனிப்பது அவசியம்.

தனது மாமனார் மாமியார் முதலியோர் எப்படி இருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலோடு அவள் வந்திருந் தாள் என்பது தெரிந்த விஷயம். அதுவுமன்றி, மகா உத்தமி என்று புகழப்படுபவளான வடிவாம்பாள் எப்படி இருக்கிறாள் என்பதையும், முக்கியமாக அவளது நடையுடை பாவனைகள் எப்படி இருக்கின்றன என்பதையும் அறிய வேண்டும் என்பது அவளது விருப்பம் ஆதலால், ரயில் வண்டி வந்து நின்றவுடன், எல்லாக் கதவுகளும், ஒரே காலத்தில் திறந்து விடப்படவே, மனோன்மணியம்மாள் தனது பார்வையை நெடுகச் செலுத்தி அப்புறமும் இப்புறமுமாகப் பார்த்ததன்றி, தனது தந்தை எந்தப் பக்கமாகப் போகிறார் என்பதையும் கூர்ந்து கவனித்த வண்ண மாய் இருந்தாள். முதல் வகுப்பிலாவது, இரண்டாவது வகுப்பி லாவது அவர்கள் இருக்க வேண்டும் என்று அவள் எண்ணிய தற்கு மாறாக அவர்கள் மூன்றாவது வகுப்பு வண்டியில் வந்ததைக் காணவே, மனோன்மணியம்மாளது மனத்திலிருந்த அருவருப்பு முன்னிலும் பன்மடங்கு அதிகரித்தது. அவர்கள் அபாரமான ஐசுவரியம் படைத்தவர்களாக இருந்தும், ஓரிரவு முழுதும் 3-வது வகுப்பு வண்டியில் ஆடுமாடுகள் அடைபடுவது போல ஏராள

மான இதர ஜனங்களோடு அடைபட்டு வந்திருக்கிறார்கள் ஆதலால், அவர்கள் பரமலோபிக் குணமுடையவர்களாக இருக்க வேண்டும் என்று மனோன்மணியம்மாள் தீர்மானித்துக் கொண் டாள். வேலாயுதம் பிள்ளையும், கண்ணப்பாவும் தனது தந்தையைப் போல நிஜார், சட்டை, தலைப்பாகை, பூட்ஸ் முதலிய அலங்காரங்களோடு வந்திருப்பார்கள் என்று அவள் எதிர்பார்த்ததற்கு முற்றிலும் ஏமாற்றமாக, அவர்கள் பட்டவர்த் தனமாகத் தமது உடம்மைத் திறந்து கொண்டு கோவிலில் சுவாமி தரிசனத்திற்குப் போவோர் போல வைதிகப் பழக்கமாய் வந் திருந்த காட்சி அவளுக்குப் பரம விகாரக் காட்சியாகத் தோன்றி யது. பெண்பாலார் டாம்பீகமான பட்டாடைகளையும் ஆபரணங் களையும் அணிந்திருந்தும், அவர்கள் ஆண்பாலாரைக் கண்டு காட்டு மாடுகள் மருளுவது போல மருண்டு ஒருவர் பின் ஒருவர் சென்று ஆடுகள் போல மறைந்து கொண்டதும், அவளால் சகிக்க இயலாத மகா அசங்கியக் காட்சியாக இருந்தது. ஆண் பெண் பாலார் ஆகிய அவர்கள் நால்வரும் கம்பீரமாக நிமிர்ந்து வராமல் ஏதோ பெருத்த குற்றம் செய்து விட்டவர்கள் உலகத்தைக் கண்டு அஞ்சி அடங்கி ஒடுங்கிக் கிடப்பதுபோல இருந்த தோற்றம், மனோன்மணியம்மாளது மனப்போக்கிற்குச் சிறிதும் ஒவ்வாத இழிந்த நடத்தையாகத் தென்பட்டது. இங்கிலீஷ் நாகரிகம் இருந்த ஊரையே மிதித்தறியாத பரம அநாகரிகர்கள் போல சுயமதிப் பென்பதே இல்லாமல் இருந்த அவர்கள் தனக்கு மாமன், மாமி, மைத்துனன், மைத்துனன் மனைவி என்று தன் மனதால் எண்ணுவதுகூட மனோன்மணி யம்மாளுக்குச் சகிக்க ஒண்ணாத சிறுமையாகத் தோன்றியது. அவர்களைப் பார்க்க அவளது கண் கூசியது; தேகம் குன்றியது; மனம் ஏமாற்றமும் சஞ்சலமும் அடைந்தது. அவர்கள் இயற்கையில் நல்ல அழகு வாய்ந்தவளாக இருக்கிறார்கள் என்ற ஓர் ஆறுதலைத் தவிர, மற்ற எவ்வித ஆறுதலும் உண்டாகாதபடி அவர்களது தோற்றமும், நடையுடை பாவனைகளும் மனோன் மணியம்மாளின் மனதிற்கு முற்றிலும் அருவருப்பாகத் தோன்றின. இங்கிலீஷ் பாஷை, இங்கிலீஷ் நாகரிகம் முதலியவற்றைக் கரை கண்டவரும், மேலான பதவியில் உள்ள வெள்ளைக்கார துரைக ளோடு அடிக்கடி பழகுகிறவரு

மான தனது தந்தை அத்தகைய சுத்த கர்னாடக மனிதரைக் கண்டு, தன்னைப் போல அருவருப்பும், அதிருப்தியும் கொள்ளா மல், அவர்களை நிரம்பவும் பணிந்து அவர்களைப் போலவே வணக்க வொடுக்கத்தோடு அவர்களிடம் நடந்து கொண்டது மனோன்மணியம்மாளுக்குப் பெருத்த அதிசயமாகவும் விந்தையாகவும் இருந்ததன்றி, அவர்களுக்குத் தனது தந்தையின் மீதும் ஒருவித ஆத்திரமும், அதிருப்தியும் உண்டாய்க் கொண் டிருந்தன. அவர்களது சம்பந்தம் தனக்கு உதவாது என்ற தீர்மானம் அவளது மனதில் உறுதியாக உண்டாகி விட்டது ஆகையால், தான் அவர்களை அதற்கு மேல் கவனிப்பது அநாவசியம் என்று அவள் எண்ணினாள் ஆனாலும், அவர்கள் வண்டியில் ஏறிப்போகும் வரையில் தான் அவ்விடத்திலேயே இருந்து அவர்களது நடவடிக்கைகள் முழுதையும் நன்றாகக் கவனித்துக் கொண்டு பங்களாவிற்குப் போனால், தான் தனது தந்தையோடு வாதாடுவதற்குத் தேவையான விஷயங்கள் கிடைக்கும் என்று தீர்மானித்துக் கொண்டவளாய் அவர்கள் மீது வைத்த விழியை வாங்காமல் கவனித்துக் கொண்டே நின்றாள். அந்தச் சமயத்தில் அவளுக்குப் பின் பக்கத்தில், "அம்மா! ஞானாம்பாளா அங்கே நிற்கிறது?" என்று ஒரு குரல் கேட்டது. ஜனக்கும்பலில் யாரோ தமது மனிதரை அழைக்கிறார் என்ற நினைவினால் மனோன்மணியம்மாள் பின்புறம் திரும்பிப் பாராமல் வேலாயுதம் பிள்ளை முதலியோரைப் பார்த்தபடியே நின்றாள்.

பின்புறத்தில் அதே குரல் முன்னிலும் அதிக சமீபத்தில் நெருங்கி, "அம்மா! ஞானாம்பாள்! உன்னைத் தான் கூப்பிடுகிறேன். அந்தப் பக்கத்தில் யாரைப் பார்க்கிறாய்?" என்று வினாவியது. தனக்கு மிகவும் பக்கத்தில் யார் வந்து நின்று அப்படிக் கூப்பிடுகிறார்கள் என்ற வியப்பினால் தூண்டப்பட்டவளாய் மனோன்மணி யம்மாள் பக்கத்தில் தனது பார்வையைத் திருப்ப முயன்ற சமயத்தில், தனது கையில் ஏதோ ஒரு மூட்டையோடு வந்த ஒரு வயோதிக ஸ்திரீ முன்பக்கமாய் வந்து மனோன்மணியம்மாளின் முகத்தைக் கூர்ந்து நோக்கினாள். அடுத்த நிமிஷத்தில் அந்த ஸ்திரீயின் முகம் விகாரப்பட்டுப் போயிற்று. அவள் மிகுந்த கிலேசமும் அவமானமும் அடைந்தவள் போலக் காணப்பட்ட

தன்றி, அவள் மனோன்மணியம்மாளை நோக்கி நிரம்பவும் பணிவாகவும், மரியாதையாகவும், நயமாகவும் பேசத் தொடங்கி, "அம்மா! கோபித்துக் கொள்ளாதே; பின்பக்கத்திலும் அசைப்பிலும் உன்னைப் பார்த்தவுடன், எங்கள் ஊரில் உள்ள ஒரு பெண் போல இருந்தது. உயரம், பருமன், நிறம், உடைகள் எல்லாம் தத்ரூபம் அப்படியே இருந்தன. அவளுடைய பெயர் ஞானாம்பாள் என்பது. ஆகையால் உன்னை ஞானாம்பாள் என்று கூப்பிட்டேன்; கோபித்துக் கொள்ளாதே தாயே!" என்று நிரம்பவும் கனிவாகவும், உருக்கமாகவும் கூறினாள்.

பெருத்த பணக்காரர் வீட்டு ஸ்திரீ போலக் காணப்பட்ட அந்த அம்மாளின் தோற்றத்தைக் கண்டு, அவள் கூறிய மரியாதையான வார்த்தைகளைக் கேட்கவே, மனோன்மணியம்மாள் கோபங் கொள்ளாதவளாய்த் தானும் மரியாதையாகப் பேசத் தொடங்கி, "பாதகமில்லை அம்மா! அடையாளம் தெரியாமையால், நீங்கள் என்னைக் கூப்பிட்டால், அது ஒரு பெரிய குற்றமா? அதற்காக நான் கோபித்துக் கொள்வேனா? பரவாயில்லை போங்கள்" என்றாள். அவள் கூறிய சொற்களைக் கேட்டு அதுபற்றி அவளிடம் நன்றி விசுவாவம் காட்டுகிறவள் போலத் தனது முகத்தைச் சந்தோஷமாக மலர்த்திப் புன்னகை செய்த வண்ணம் அந்த ஸ்திரீ அவ்விடத்தை விட்டுப் போக எத்தனித்து இரண்டோரடி அப்பால் எடுத்து வைத்த பின், எதையோ நினைத்துக் கொண்டவள் போலத் தயங்கி நின்று பின்புறம் திரும்பி மனோன்மணியம்மாளை மறுபடியும் பார்த்து, "அம்மா! குழந்தாய்! நீ இருப்பது இந்த ஊர்தானா?" என்று நயந்து வினவினாள்.

மனோன்மணியம்மாள், "ஆம்; இந்த ஊர் தான். உங்களுக்கு என்ன வேண்டும்?" என்றாள்.

வயோதிக ஸ்திரீ, "அம்மா! என் சொந்த ஊர் தெற்கே கரூர். இங்கே மயிலாப்பூரில் என் பெண் வாழ்க்கைப்பட்டிருக்கிறாள். என் மருமகப்பிள்ளை அந்த ஊரில் பிரபலமான ஒரு வக்கீல். ஆனால் அவருக்கும் எங்களுக்கும் மனஸ்தாபம் ஆகையால், நான் பக்கத்தில் எங்கேயாவது தங்கி இருந்து என் பெண்ணைப் பார்த்து விட்டுப் போகலாம் என்று வந்திருக்கிறேன். நான் நேற்று

காலையில் ஆகாரம் பார்த்தேன். இங்கே பக்கத்தில் நல்ல வசதியான சைவாள் சாப்பாட்டுக் கடை ஏதாவது இருக்கிறதா என்பது எனக்குத் தெரிய வேண்டும். ஆனால், நீ குழந்தை; அதிலும் பெண்பிள்ளை; உனக்கு அந்தத் தகவல் தெரிய நியாய மில்லை, உன்னைச் சேர்ந்த ஆண்பிள்ளை யாராவது இங்கே உன்னோடு கூட வந்திருந்தால், அவர்களிடம் கேட்டுச் சொல்ல முடியுமா? நீ இவ்விடத்தில் தனியாக நிற்கிறாயே! எங்கேயாவது போயிருக்கும் உங்கள் மனிதர் யாரையாவது பார்த்துக் கொண்டு நிற்கிறாயா?" என்று மிகமிகப் பணிவாகக் கேட்க, அந்த அம்மாள் கேட்ட இளக்கமான மாதிரியைக் கண்டு, இரக்கங் கொண்ட மனோன்மணியம்மாள், "அம்மா! என் தகப்பனார் அதோ சில மனிதர்களோடு பேசிக் கொண்டிருக்கிறார். அவர் அநேகமாய் அவர்களோடு போய்விடுவார். நான் இன்னம் இரண்டொரு நிமிஷம் இருந்துவிட்டுப் புறப்பட்டு வெளியில் போகப் போகி றேன். என்னோடு நீங்களும் வாருங்கள். வாசலில் எங்கள் வீட்டு வண்டிக்காரன் இருக்கிறான். அவனை விட்டு விசாரித்து, உங்களுக்குச் சரியான தகவல் தெரிவிக்கச் செய்கிறேன்" என்றாள்.

கரூரில் இருந்து வந்த ஸ்திரீ மனோன்மணியம்மாள் கூறிய வார்த்தைகளைக் கேட்டு பட்டாபிராம பிள்ளை முதலியோர் நின்ற திக்கில் உடனே முகத்தைத் திருப்பிப் பார்த்து முற்றிலும் பிரமிப் படைந்தவளாய் அப்படியே இரண்டொரு நிமிஷம் நின்று மறுபடி மனோன்மணியம்மாளை நோக்கி, "அம்மா! அதோ சட்டை நிஜார் முதலிய உடுப்புகளோடு நிற்கிறார்களே, அவர்கள் தான் உன் தகப்பனாரா?" என்றாள்.

***மனோன்மணியம்மாள்:-*** ஆம்; அவர்கள் தான்.

***கரூர் ஸ்திரீ:-*** (மிகுந்த வியப்போடு) அவர்களுக்குப் பக்கத்தில் நிற்கிறார்களே, அவர்கள் எல்லோரும் உங்களுடைய பந்துக்களா அம்மா!

***மனோன்மணியம்மாள்:-*** அவர்கள் எங்களுடைய பந்துக்கள் இல்லை. ஏன் அப்படிக் கேட்கிறீர்கள்? அவர்களுக்கும் உங்க ளுக்கும் இதற்கு முன் பழக்கம் உண்டா?

*கரூர் ஸ்திரீ:-* இல்லையம்மா! அவர்களை நான் பார்த்ததே இல்லை. ஆகா! இப்பேர்ப்பட்ட தெய்வாம்சம் பொருந்திய மனிதர்களும் இந்தக் கலிகாலத்தில் இருக்கிறார்களா? பெரியவர் கள் இருவரும் தத்ரூபம் பார்வதி, பரமசிவன் போலவே இருக்கிறார்களே! ஆகா! அவர்களோடு கூட இருக்கும் சிறியோர் இருவரும் சுப்ரமணியக் கடவுளும், வள்ளி நாயகியும் போல் அல்லவா காணப்படுகிறார்கள். இப்பேர்ப்பட்ட புண்ணியாத்மாக் களின் முகத்தைப் பார்த்தாலே, நம்மைப் பிடித்த கலியெல்லாம் நீங்கி விடும் போலிருக்கிறதே! ஆகா! நம்முடைய தேசம் தவம் செய்த தேசம் என்பதற்கு இப்பேர்ப்பட்ட உத்தம சிரேஷ்டர்கள் இன்னம் இருப்பதே தக்க சாட்சியல்லவா? இது நம்முடைய சிறுத் தொண்டரும், அப்பரும், சுந்தரரும், மற்றுமுள்ள யோகியரும், ஞானிகளும் இருந்த நாடென்பது இவர்களைப் பார்க்கும் போது தான் நினைவிற்கு வருகிறது. உன்னையும் உன்னுடைய வெள்ளை ஆடைகளையும் பார்த்த உடனே எனக்கு எப்படி எங்கள் ஊரில் உள்ள தாசிப் பெண்ணான ஞானாம்பாளின் ஞாபகம் வந்ததோ, அது போல, அதோ நிற்கிற புண்ணியாத்து மாக்களைப் பார்க்கும் போது, நம்முடைய பண்டைக்காலத்து நாயன்மார்களுடைய நினைவு தோன்றுகிறதோடு, என் மனமும் பரவசம் அடைகிறது. என் வயிற்றில் இருந்த பசியெல்லாம் இவர் களுடைய முகத்தைப் பார்க்க, இருந்த இடம் தெரியாதபடி பறந்து போய்விட்டது. சோற்றுக் கடைக்குப் போக வேண்டும் என்ற எண்ணமே இப்போது என் மனசில் உண்டாகவில்லை. நான் இந்தப் புண்ணிய மூர்த்திகளின் கிட்ட நெருங்கி அவர்களுடைய முகதரிசனம் செய்து விட்டுப் போனால் நான் இந்த ஊரில் இருந்து விட்டுத் திரும்பி என் சொந்த ஊருக்குப் போகும் வரையில் பசி என்பதே இல்லாமல் என் வயிறு ஆனந்தமயமாக நிறைந்திருக்கும் என்று நினைக்கிறேன்" என்று கூறிய வண்ணம், அதற்கு மேல் அவ்விடத்தில் நிற்காமலும், மனோன்மணியம்மாளின் பக்கம் திரும்பிப் பாராமலும், அவள் ஏதாவது மறுமொழி சொல்வாளோ என்பதை எதிர்பார்க்காமலும் விரைவாக அப்பால் சென்று விட்டாள். நூற்றுக் கணக்கில் ஜனங்கள் அங்குமிங்கும் தாறு மாறாகப் போய் வந்து கொண்டிருந்தார்கள் ஆதலால், அவர் களால்

மறைக்கப்பட்டுப் போன அந்தக் கரூர் ஸ்திரீயை மனோன்மணியம்மாள் பிறகு பார்க்க இயலாமல் போய்விட்டது. ஆயினும், அந்த ஸ்திரீ கடைசியாகக் கூறிய வார்த்தைகள் கூர்மையான ஈட்டிகள் கொண்டு குத்துவது போல மனோன்மணி யம்மாளின் செவிகளில் பாய்ந்து மனத்தைத் துளைத்துப் புண் படுத்தத் தொடங்கின. வேலாயுதம் பிள்ளை, அவரது மனைவி, கண்ணப்பா, வடிவாம்பாள் ஆகிய நால்வரது நடையுடை பாவனைகளைப் பற்றியும், குணவொழுக்கங்களைப் பற்றியும், தான் முற்றிலும் கேவலமாகவும், இழிவாகவும் நினைத்ததற்கு நேர் விரோதமாக அந்தக் கரூர் ஸ்திரீ அபிப்பிராயம் கொடுத்து, அவர்களை தெய்வங்களுக்கு உவமை கூறி, அபாரமான ஸ்தோத் திர மொழிகளை உபயோகித்ததைக் கேட்க, மனோன்மணியம் மாள் சகிக்க ஒண்ணாத மன எழுச்சியும், ஆத்திரமும் கொண் டவளானாள். அதுவுமன்றி, தான் வெள்ளை ஆடை அணிந்து கொண்டிருந்ததில் இருந்து, தன்னை அவள் கரூரில் உள்ள ஞானாம்பாள் என்ற ஒரு தாசிப் பெண் என்று எண்ணிக் கொண்டதாகக் கூறியது மற்றதைவிடப் பன்மடங்கு அதிகரித்த கோபத்தையும், துடிதுடிப்பையும் உண்டாக்கின. அவ்வாறு தன்னிடம் வந்து தாறுமாறாகப் பிதற்றிய ஸ்திரீ ஒருவேளை பைத்தியக்காரியாக இருப்பாளோ என்ற எண்ணம் அவளது மனதில் உண்டானது ஆனாலும் அவளை மறுபடியும் கண்டு, தகுந்த சொற்களால், அவளைக் கண்டிக்க வேண்டும் என்ற அவா எழுந்து மனத்தைத் தூண்டியது. அந்த ஸ்திரீ வேலாயுதம் பிள்ளை முதலியோர் இருந்த இடத்தை நோக்கிச் சென்று கும்பலில் புகுந்து காணாமல் போய்விட்டாள் என்பது தெரியவே தான் அவளைத் தொடர்ந்து சென்றால், வேலாயுதம் பிள்ளை வீட்டாரின் கண்ணில் பட நேரும் என்ற நினைவைக் கொண்டு, தனது கோபத்தை அடக்கிக் கொண்டு அவ்விடத்திலேயே சிறிது நேரம் நின்று விட்டாள். கரூர் ஸ்திரீ கூறிய சொற்களைக் கேட்டதனால், அவளது மனம் கட்டிலடங்காமல் துடித்து அவள் கூறிய சொற்களையே சிந்தனை செய்து கொண்டிருந்தது ஆதலால், அதன் பிறகு அவள் வேலாயுதம் பிள்ளை முதலி யோரைக் கவனிப்பதையே விட்டு விட்டாள். அந்தக் கரூர் ஸ்திரீயும் இங்கிலீஷ் படிக்காத கர்னாடக

ஸ்திரீயாய் இருக்க வேண்டும் என்றும், அது பற்றியே அவள் பழைய மூட நம்பிக்கைகளையும், மூட எண்ணங்களையும் கொண்டிருக்கிறாள் என்றும், ஆகவே, அவள் வெளியிட்ட அபிப்பிராயங்களைத் தான் சிறிதும் பொருட்படுத்தாமல் அலட்சியமாக விட்டுவிட வேண்டும் என்றும், அவள் பல தடவை நினைத்துத் தனது மனத்தை அடக்கி வசப்படுத்த எத்தனித்தாள் ஆனாலும், அது, அவளது கட்டிலடங்காமல் துடிதுடித்து வருத்தியது. "என்ன ஆச்சரியம் இது! இங்கிலீஷ் படிக்காத ஜனங்கள் எல்லோரும் இதே விதமான மூட எண்ணங்களைத் தான் வைத்திருப்பார்கள் போலிருக்கிறதே! அன்றைய தினம் வந்த கொடிமுல்லையம்மாள், தமிழ் நாட்டில் தாசிகளும், அமங் கலிகளுமே பெரும் பாலும் வெள்ளை ஆடைகள் கட்டுகிறது வழக்கம் என்று சொன்னாள். அவள் சொன்னதும் இவள் சொன்னதும் ஒத்திருப்பதைப் பார்த்தால், மன்னார்குடியார் வீட்டில், நான் இவ்விதமான ஆடைகள் கட்டுவதற்கு அவர்கள் இணங்கவே மாட்டார்கள் என்பது நிச்சயமாகத் தெரிகிறது. கொடிமுல்லையம் மாள் மன்னார் குடியாரைப் பற்றித் தெரிவித்ததெல்லாம் உண்மையான சங்கதியாகத் தான் இருக்க வேண்டும். இதை எல்லாம் அறிந் திருந்தும் என் தகப்பனார் இவர்களுடைய சம்பந்தத்தையே பிடிவாதமாக நாடுகிறாரே! என்ன ஆச்சரியம் இது! நான் எவ்வளவு தான் சொன்னாலும், என் தகப்பனார் என்னை அந்த வீட்டில் தான் கொடுக்க வேண்டும் என்று அடவாதம் செய்கிறார். என்னைக் கண்டு ஒருவேளை மன்னார் குடியார் திருந்தி தமது அஞ்ஞான இருளை விலக்கிக் கொள்வார்களோ என்று நான் பார்த்தால், ஆற்று மணலையும் சமுத்திரத்தின் துளிகளையும் எண்ணினாலும் எண்ணிவிடலாம் போலிருக்கிறது. இவர்களுடைய மனப்போக்கையும் கொள்கைகளையும் மாற்ற முடியா தென்பது பரிஷ்காரமாகத் தெரிகிறது" என்று மனோன்மணி யம்மாள் நினைத்துப் பலவாறு எண்ணமிட்டவளாய் அந்த நிலைமையில் தான் என்ன செய்வதென்பதையாவது, தான் தனது தந்தையின் மனதை எப்படி மாற்றுவது என்பதையாவது உணராதவளாய் நிலைகலங்கி அப்படியே சிறிது நேரம் நின்ற பின், தனது தந்தை முதலியோர்

என்ன செய்கிறார்கள் என்பதைக் கவனித்துப் பார்த்தாள். அவரும், வேலாயுதம் பிள்ளையும், மற்றவரும் மூன்றாவது வகுப்பு வாசற்படி வழியாய் வெளியில் போகாமல், தான் நின்ற இடத்திற்கு அருகில் இருந்த முதல் இரண்டு வகுப்புப் பிரயாணிகள் வெளியேறும் வழியை நோக்கி வந்து கொண்டிருந்தது அவளுக்குத் தெரிந்தது. தான் அதற்கு மேல் அவ்விடத்தில் நிற்பது உசிதமல்ல என்று தீர்மானித்துக் கொண்ட அந்த மடந்தை அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு விரைவாக நடந்து பக்கத்தில் இருந்த வாசலின் வழியாக வெளிப் பட்டுப் போய்த் தனது பெட்டி வண்டிக்குள் ஏறி உட்கார்ந்து பங்களாவிற்கு அவசரமாய் ஓட்டும் படி வண்டிக்காரனிடம் கூற, அவன் உடனே வண்டியை ஓட்டிக் கொண்டு போக, ஐந்து நிமிஷ நேரத்தில் அது மறைந்து போய்விட்டது.

*இரண்டாம் பாகம் நிறைவடைந்தது*

# ஆங்கிலத்தில் ஷெர்லாக்ஹோம்ஸ்
# நவீன காலத்தில் 007 ஜேம்ஸ்பாண்டு
# அன்றும் இன்றும் என்றும் தமிழகத்தில்

## திகம்பர சாமியார்




1. பூர்ண சந்திரோதயம் பாகம் - 1
2. பூர்ண சந்திரோதயம் பாகம் - 2
3. பூர்ண சந்திரோதயம் பாகம் - 3
4. பூர்ண சந்திரோதயம் பாகம் - 4
5. பூர்ண சந்திரோதயம் பாகம் - 5
6. கும்பகோணம் வக்கீல் பாகம் - 1
7. கும்பகோணம் வக்கீல் பாகம் - 2
8. மாயா விநோதப் பரதேசி பாகம் - 1
9. மாயா விநோதப் பரதேசி பாகம் - 2
10. மாயா விநோதப் பரதேசி பாகம் - 3
11. மேனகா பாகம் - 1
12. மேனகா பாகம் - 2
13. சௌந்திர கோகிலம் பாகம் - 1
14. சௌந்திர கோகிலம் பாகம் - 2
15. சௌந்திர கோகிலம் பாகம் - 3
16. சௌந்திர கோகிலம் பாகம் - 4
17. மதன கல்யாணி பாகம் - 1
18. மதன கல்யாணி பாகம் - 1
19. மதன கல்யாணி பாகம் - 2
20. வித்யாசாகரம்
21. வசந்த மல்லிகா




இதற்கு மேலும் வருவார் !